
கலைஞரின்
கடிதங்கள்



20

02.06.1991 - முதல்
10.10.1991 - வரை

சீதை பதிப்பகம்

கலைஞரின் கடிதங்கள்

தொகுதி - 20

02.06.1991 - 10.10.1991

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர்
ஆய்வக நூல்
நிலையம்
சென்னை-113
அண்ணா அறிவாலயம்

தலைவர் கலைஞர்

சீதை பதிப்பகம்,
சென்னை-05. ☎ 97907 06549/97907 06548

நூல் கிடைக்குமிடம் :

கௌரா புத்தக மையம்

9, செயின்ட் ஜான் சர்ச்சு வணிக
வளாகம், ராக்கின்ஸ் சாலை,
திருச்சி - 620 001.
9952034876 / 9943428994
04312419584.

GOWRA PUTHAGA MAIYAM

9, SAINT JOHN CHURCH COMPLEX,
ROCKINS ROAD, TRICHY - 620 001
99520 34876 / 04312419584.
gowraputhagamaiyam@gmail.com

AVAILABLE @ :

கௌரா ஏஜென்ஸீஸ்

எண்.1 சாமி தெரு,
(சாய் பாபா கோவில் பின்புறம்)
திருவல்லிக்கேணி, சென்னை - 05.
9790706548 / 9790706549
044 28443791.

GOWRA AGENCIES

NO : 1 SAMY STREET,
(SAI BABA TEMPLE BACK SIDE)
TRIPLICANE, CHENNAI - 05.
9790706548 / 044 28443791.
gowra09@gmail.com

கலைஞரின் கடிதங்கள்

KALAIGNARIN KADITHANGAL

விலை : ரூ.300.00 CODE :2300

எழுதியவர் : **கலைஞர்**
தொகுப்பாசிரியர்கள் :
கோ.சண்முகநாதன் M.com BGL
முனைவர் கி. இராஜமாணிக்கம் IAS ஓய்வு
(கலைஞரின் செயலாளர்கள்)
பொருள் : கடிதம்
© உரிமை :
பதிப்பாசிரியர் :
எஸ். கௌமாரீஸ்வரி M.A., M.L.I.S.,
பதிப்பு :
முதற் பதிப்பு – 2022
வெளியீடு :
சீதை பதிப்பகம்
6ஏ/4, பார்த்தசாரதி சாமி தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை – 600 005
பக்கம் : 400
ஒளி அச்சு : ஜெய் ஜீனா
அச்சிட்டோர் :
கிளாசிக் பிரிண்டர்ஸ், சென்னை–2.
ISBN :

AUTHOR : KALAIGNAR
EDITORS:
K. SHANMUGANATHAN M.COM BGL
DR K. RAJAMANIKAM IAS
SUBJECT : EPISTLE
© RIGHTS :
PUBLISHER :
S.GOWMAREESWARI M.A., M.L.I.S.,
EDITION :
1ST EDITION - 2022
PUBLISHED @ :
SEETHAI PATHIPPAGAM
6A/4, PARTHASARATHI SAMY STREET,
TRIPLICANE,
CHENNAI-600 005.
PAGES : 400
TYPESET BY : JAIJEENA
PRINTED @ :
CLASSIC PRINTERS, CHENNAI - 2.
ISBN :

தி.மு.க. அறக்கட்டளை
பொருளியல்
ஆய்வுத் துறை
திருவல்லிக்கேணி
சென்னை-600 005



அம்மாவுக்கு...

கௌரா பதிப்பகக் குழுமம்

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர் அன்பழகன் நூலகம்
தேனாம்பேட்டை
சென்னை-18

மு.க. ஸ்டாலின்
தமிழக முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

அணிந்துரை அல்ல இது; மிகவும் பணிந்துரை!

"கலைஞரின் கடிதங்கள்" அனைத்தையும் அச்சியற்றி, வெளியிடுவதென முடிவெடுத்து, அந்த முடிவு கனிந்து, இப்போது கடிதங்கள் அனைத்தும் 54 தொகுதிகளாக வெளிவருகின்றன.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மீது கொண்டிருக்கும் மாறாத பற்றாலும், மதிப்பாலும், மரியாதையினாலும், கழக வரலாற்றில் சிறப்பு வாய்ந்த இந்த அரிய - பெரிய பணிமுழுவதையும் ஆற்றிட முன்வந்திருக்கும் சென்னை - சீதை பதிப்பகத்தார்க்கும், அதன் உரிமையாளர் அருமை நண்பர் திரு. இராஜசேகரன் அவர்களுக்கும், நெஞ்சார்ந்த நன்றியையும், மகிழ்ச்சியையும், பாராட்டுதல்களையும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், இங்கே பதிவு செய்வது என்னுடைய முதல் கடமை ஆகும்.

இந்தத் தொகுதிகள் வெளிவருவதற்குப் பின்னணியில் இருந்து, பல்லாற்றானும் உதவிய, தலைவர் கலைஞர் அவர்களின் செயலாளர்கள் - பாசம் மிகுந்த எனது அண்ணன்மார், திரு. கோ.சண்முகநாதன், முனைவர் கி.இராஜமாணிக்கம் ஆகிய இருவர்க்கும் என்னுடைய நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. இராஜசேகரன் அவர்கள் என்னிடம், "கலைஞரின் கடிதங்கள்" தொகுதிகளுக்கு, அணிந்துரை வழங்கிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். தந்தைக்குத் தனயன் "அணி"யாகத் திகழ்ந்திட முடியுமே அன்றி; அணிந்துரை அளித்திடத் துணிவது, அதிகப்படியான செயலாக ஆகிவிடும்.

தலைவர் கலைஞர் அவர்களின் எழுத்துக்கு அணிந்துரை வழங்கிடும் உயரம் எனக்கு நிச்சயமாக இல்லை என்பதை நானறிவேன். அதனாலே அணிந்துரைக்குப் பதிலாக "பணிந்துரை" தருகிறேன் என்று சொன்னேன். அதன்படி, இது அணிந்துரை அல்ல; மிகவும் பணிந்துரை!

எழுதுவதை உயிர்மூச்சாகக் கொண்டு இயங்கிய தலைவர் கலைஞர் அவர்கள், வாழ்ந்த காலம் முழுவதும் எழுதி எழுதி இமயம்போல் குவித்தவர். அவர் எழுத்து வேந்தர்; சொல்லேருழவர்; கருத்துக் கருவூலம்; வண்ணமயமான எண்ணங்களின் வற்றாத ஊற்று!

தலைவர் கலைஞர், கழக உடன் பிறப்புகளுக்குக் கடிதம் எழுதத் தொடங்கி, மொத்தம் 4051 கடிதங்கள் எழுதியிருக்கிறார்.

ஏ அப்பா, கேட்கவே மலைப்பாக இருக்கிறது அல்லவா!

ஒரு நாளைக்கு ஒரு கடிதம் என்று வைத்துக் கொண்டாலும், தொடர்ந்து 11 ஆண்டுகள், 36 நாட்கள் கடிதம் எழுதியிருக்கிறார். இப்படி எழுதுவது தனியொரு மனிதருக்குச் சாத்தியப்படுமா என்றால்; சாத்தியப்படாத எதையும், எந்தத் துறையாக இருந்தாலும், அதை எடுத்துச் சாத்தியப்படுத்திச் சாதனை செய்து சரித்திரம் படைத்தவர் கலைஞர்!

முடியுமா, நேரம் கிடைக்குமா, உடல் நலனுக்கு ஒத்துவருமா - என்ற கேள்விகளின் முனைமுறித்துப் போட்டவர் கலைஞர். பெரும்பாலும், காலை எழுந்ததும் கடிதம் எழுதுவது, கலைஞர் தவறாது தொடர்ந்து இறுதிவரை ஆற்றிய கடமையாகவே இருந்தது. இந்த அளவுக்கு, நான்கு ஆயிரத்திற்கும் மேற்பட்ட கடிதங்கள் எழுதி வெளியிட்டிருக்கும், ஒரே அரசியல் தலைவர் அகில உலகத்திலும் அவர் ஒருவரேதான்!

கடிதம் எழுதுவது என்பது, கிரேக்கத்திலிருந்து தொடங்குகிறது. டையோஜெனீஸ் (கி.மு.412 - 323) என்ற கிரேக்க ஞானி, தன்னைக் காண அலெக்சாந்தர் விரும்பியதாக அவருடைய நண்பர் அரிஸ்ட்டிப்பஸ் எழுதிய கடிதத்திற்கு, அனுப்பிய பதில் கடிதம் பிரபலமானது.

கிரேக்க தத்துவ ஞானி சாக்ரட்டீஸின் 9 கடிதங்கள் வரலாற்றில் இடம்பெற்றிருப்பவை. இயேசுநாதரின் சீடர்கள்

எழுதிய கடிதங்கள், விவிலியத்தின் புதிய ஏற்பாட்டில் பொறிக்கப்பட்டுள்ளன. சிசரோ, ரோமாபுரியின் வரலாற்றை 835 கடிதங்களாக எழுதி வைத்திருக்கிறார்.

லியோ டால்ஸ்டாய், ஹோரஸ் வால்போல், மெக்காலே, கோல்ட் ஸ்மித், பைரன், கீட்ஸ், பெர்னாட்ஷா போன்ற அறிஞர்கள் பலரும் எழுதிய கடிதங்கள் கடித இலக்கியத்தில் முக்கியமான பங்கு வகிக்கின்றன.

கலையரசி மாதவி, கோவலனுக்கு இரண்டு கடிதங்கள் அனுப்பியதாகச் சொல்கிறது சிலப்பதிகாரம். விவேகானந்தர், அமெரிக்கா சென்றிருந்தபோது அவருடைய நண்பர்களுக்கு எழுதிய கடிதங்கள், அண்ணல் காந்தி அடிகள் பல்வேறு சூழ்நிலைகளில் எழுதிய எண்ணற்ற கடிதங்கள், பண்டித நேரு அவர்கள் சிறையில் இருந்தவாறே அவருடைய மகள் இந்திரா காந்தி அம்மையாருக்கு எழுதிய கடிதங்கள் (உலக வரலாறு) ஆகியவை கடித இலக்கியமாகப் பார்க்கப்படுகின்றன.

மறைமலை அடிகளாரின் நாவல் "கோகிலாம்பாள் கடிதங்கள்", இலக்கியச் சுவையும் தரமும் உடையது. கடிதக் இலக்கியத்தை கருத்துச்செறிவுடன் கையாண்டவர் டாக்டர் மு.வரதராசனார் அவர்கள் ஆவார்கள். அவருடைய "அன்னைக்கு', "தம்பிக்கு", "நண்பர்க்கு', "தங்கைக்கு" ஆகியவை

ஒருகட்டத்தில் மொத்தத் தமிழ் மக்களின் கவனத்தையும் கவர்ந்தவை.

அந்த வரிசையில் வைத்துப் போற்றிப் புகழத் தக்கவை, புகழ்ந்து நினைவிலே வைத்து எப்போதும் பாதுகாத்திடத் தக்கவை, பாதுகாத்துப் பாரம்பரியமாகப் படித்துப் பயன்பெறத் தக்கவை, பேரறிஞர் அண்ணா அவர்களின் "தம்பிக்கு" கடிதங்களும்; அண்ணா அவர்களைப் பின்பற்றி, தலைவர் கலைஞர் எழுதிய "உடன்பிறப்புக்கு" கடிதங்களும் ஆகும்.

தந்தை பெரியார் அவர்கள் எதிலும், எப்போதும் அறிவியல்பூர்வமான அணுகுமுறையைப் பின்பற்றியவர் என்றால்; பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அடிப்படையில் கலை உணர்வு மிக்கவர்கள் என்பதால், அறிவியல் உண்மைகளையே, கவித்துவ நடையில் எடுத்து இயம்பியவர்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அன்றாட அரசியல் பிரச்சினைகளையும், உலக நிகழ்வுகளையும், கட்சித் தோழர்களுக்கு எடுத்துச் செல்லவும், ஏற்றபடி தொகுத்துச் சொல்லவும், கடித வடிவத்தைக் கைக்கொண்டார்கள்; அந்தக் கடிதங்களை இலக்கியத் தேனில் தோய்த்து, திகட்டாத தெள்ளுதமிழில் வாரி வழங்கினார்கள். அவற்றைப் படித்துப் படித்து, தம்பிமார்களும், உடன்பிறப்புகளும், விவரங்களை அறிந்து, விழிப்புணர்ச்சி வளர்ந்திடப் பெற்றார்கள்.

அண்ணா - கலைஞர் கடிதங்கள், "வீழ்ச்சியுற்ற தமிழினத்தில் எழுச்சி வேண்டும்; விசை ஒடிந்த தேகத்தில் வன்மை வேண்டும்; சூழ்ச்சிதனை வஞ்சகத்தைப் பொறாமைதன்னைத் தொகையாக எதிர் நிறுத்தித் தூள்தூளாக்கும் காழ்ச்சிந்தை மறச்செயல்கள் மிகவும் வேண்டும்; கடல்போலச் செந்தமிழைப் பெருக்க வேண்டும்;" என்ற உயரிய, உன்னத நோக்கில் எழுதப் பட்டவை.

பேரறிஞர் அண்ணா அவர்களின் கடித இலக்கியத்தில், இல்லாததே இல்லை என உறுதியாகச் சொல்லலாம். உலக நாடுகளின் வரலாறு, இந்திய வரலாறு, சங்கத் தமிழ், இலக்கியங்கள், அரசியல் நிகழ்வுகள் என எல்லாவற்றையும்;

தமது தம்பிமார்கள் அறிந்திருக்க வேண்டும்; அறிந்திருப்பவற்றை அய்யம் திரிபறத் தெரிந்திருக்க வேண்டும்; தெரிந்து கொண்டவற்றைத் தெருக்கள்தோறும், திண்ணைகள்தோறும் கொண்டுசென்று விளக்கி உரைத்து, இன - மொழிப் பெருமையை மீட்டெடுக்க வேண்டும்; தமிழர்கள் மானமும் அறிவும் வளர்த்து மாமனிதர்களாக உயர்ந்திட வேண்டும்; என்ற பேரவாவுடன் எழுதப்பட்டவை அந்தக் கடிதங்கள்!

பேரறிஞர் அண்ணா அவர்களைப் போலவே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், உடன்பிறப்புகளுக்குக் கடிதம் எழுதும் முன்; அன்று தலையாயதான எந்தப் பிரச்சினையைப் பற்றி எழுத வேண்டும் என்பதைத் தீர்மானித்து, அந்தப் பிரச்சினையின் முழுப் பரிமாணங்களையும் அறிந்து, சிந்தித்து, சொல்ல வேண்டியவற்றை மன ஏட்டில் வரிசைப்படுத்தி; படிப்போர் வியக்கும்படி எழுதி முடிப்பதில், ஈடு இணை இல்லாதவர் என்பதை, ஒவ்வொரு கடிதத்திலும் நிரூபித்துக் காட்டி விடுவார்.

அதுமட்டுமல்ல; ஒரு கடிதத்தை எழுதியதற்குப் பிறகு, அவரே ஒரு முறை அதை நுட்பமாகப் படித்துப் பார்த்து விடுவார்; அத்துடன் விட்டு விடுவாரா? இல்லை; தமது செயலாளரைக் கூப்பிட்டுப் படிக்கச் சொல்வார்; ஏதாவது சந்தேகம் இருக்கிறதா என்று கேட்பார்; சந்தேகம் என்றால், அந்த இடத்தை எளிதில் புரிந்து கொள்ளும்படி மாற்றம் செய்வார்; அத்துடன் முடிந்ததா என்றால், இல்லை; கடிதம் அச்சியற்றப்பட்டு, "ப்ரூஃப்" வந்ததும், மீண்டும் ஒருமுறை அவரே படித்துப் பார்ப்பார் அல்லது தன்னுடைய செயலாளரை படிக்கச் சொல்லி ஊன்றிக் கேட்பார்; பின்னர் அன்றைய "முரசொலி" இதழ் முழுமையாகி வந்ததும், ஒரு முறை படிப்பார்; மாலையில் வெளியூர் - இதழ் கைக்குக் கிடைக்கும்போது, அண்ணன் ஆர்க்காட்டாரோ, அண்ணன் துரைமுருகனோ, முனைவர் பொன்முடியோ, அல்லது நானோ பக்கத்தில் இருந்தால், இதழைக் கொடுத்துப் படிக்கச் சொல்லிச் செவிமடுப்பார்.

மறுநாள், அறிவாலயத்திலோ, அல்லது இல்லத்திலோ, கழகத் தோழர்கள் யாரும் எதிர்ப்பட்டால், "கடிதம் படித்தாயா?" என்றுதான் முதலில் கேட்பார்.

இவை அனைத்தையும் அருகிருந்து நான் பார்த்திருக்கிறேன். ஒவ்வொரு முறையும் அவருடைய முகத்தில் அலுப்போ, சலிப்போ தோன்றாது. படிக்கப் படிக்க உற்சாகம் கொள்வார். கடிதத்தில் எழுதி இருப்பதை அப்படியே நினைவில் செதுக்கி வைத்திருப்பார்; எத்தனை மாதங்கள் ஆனாலும் கடிதத்தில் எழுதிய கருத்தை அப்படியே திருப்பிச் சொல்வார்; நாங்கள் அவருடைய கருத்தை, நினைவாற்றல் பிசகு காரணமாக, மாற்றிச் சொல்ல நேரிடும்போது, திருத்துவார்.

அப்பப்பா; அப்படி ஒரு தலைவரை, இன்னொரு முறை வாழ்நாளில் காண முடியுமோ? "இங்கிவரை யாம் பெறவே என்ன தவம் செய்து விட்டோம்!".

கலைஞர் ஒரு பன்முகங்கொண்ட பேராளுமை. கடித இலக்கியம், அவரது ஒரு முகம், ஒப்பிலாத் திருமுகம்!

1968-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 22-ஆம் நாள் முதல், 1977-ஆம் ஆண்டு பிப்ரவரி 13-ஆம் நாள் வரையில்

கலைஞரின் கடிதங்கள், பத்துத் தொகுதிகளாக 1986-ஆம் ஆண்டில் வெளிவந்தன; அதைத் தொடர்ந்து, 11 மற்றும் 12-ஆவது தொகுதிகள், 1993-ஆம் ஆண்டில் வெளிவந்தன.

22.10.1968-இல் தலைவர் கலைஞர் எழுதிய முதல் கடிதத்திலிருந்து, 15.11.2016 அன்று எழுதிய கடைசிக் கடிதம்வரை அனைத்துக் கடிதங்களையும் வெளியிட முடிவுசெய்து; இப்போது, சீதை பதிப்பகத்தார் வெளியிடுகிறார்கள்.

கலைஞர் கடிதங்கள் ஏற்கனவே 12 தொகுதிகளாக வெளியிடப்பட்டபோது, "என்னுரை" என்ற பகுதியில், தலைவர் கலைஞர் அவர்கள் எழுதி அளித்த முன்னுரை, அப்போதும் இப்போதும் முக்கியத்துவம் வாய்ந்தது மட்டுமல்லாமல்; வெளிவரவுள்ள "கலைஞரின் கடிதங்கள்" ... தொகுதிகள் அனைத்திற்கும் முன்னுரை - அறிமுக உரையாகக் கொள்ள வேண்டும்.

தலைவர் கலைஞரின் அந்த "என்னுரை"யில், "நண்பா" என விளித்துத் தொடங்கியும், "உடன்பிறப்பே" என விளித்துத் தொடங்கியும், இங்ஙனம் "மறவன்" என முடித்தும் "அன்புள்ள மு.க." என முடித்தும், "மறவன் மடல்" வார இதழிலும், "நம் நாடு" வார இதழிலும் மற்றும் பெரும்பாலும், நாள்தோறும் அல்லது வாரத்தில் நாலைந்து முறை "முரசொலி' நாளிதழிலும் நான் எழுதிய கட்டுரைகளின் வடிவமே "கலைஞர் கடிதம்" என்று தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டது, இப்போது வெளிவரும் "கலைஞரின் கடிதங்கள்" தொகுதிகளுக்கும் மெத்தப் பொருந்தும்.

மேலும் அந்த "என்னுரை"யில்: "என் கடிதங்கள் காலை ஏழு மணிக்குப் பிறப்பெடுக்கும்; ஒவ்வொரு நாளும்! பொதுவாழ்வில் இதுவரை; பாசறை - போர்க்களம் - பதவிப் பொறுப்பு - பணியாற்றும் வாய்ப்பு - இப்படி மாறி மாறி வரினும் சந்தித்த; இன்னமும் சந்தித்துக் கொண்டிருக்கிற சோதனைகள் எண்ணிலடங்கா!"

"குமுறல் - கொந்தளிப்பு - கவலை - கலக்கம் - ஏமாற்றம் - துரோகம் - இப்படி எத்தனையோ ஈட்டிகள் என் இதயத்தில் பாய்ந்து ரணமாக்கியுள்ளன". அந்த ரணம் ஆற்றிடும் மருந்தாகத்தான் எனது எழுத்துகள் எனக்குப் பயன்பட்டிருக்கின்றன!"

“எனது கடிதத் தொகுப்புகளில் பல செய்திகள், நிகழ்ச்சிகள், மதிப்புமிக்க தலைவர்கள், அன்புக்குரிய நண்பர்கள் விமர்சிக்கப்பட்டிருக்கலாம். அது; அந்தக் காலகட்டத்து அரசியல் தட்பவெப்பத்தைக் காட்டுவதாகவே எடுத்துக்கொள்ள வேண்டுமெனப் பணிவன்புடன் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்” என்று தலைவர் கலைஞர் அவர்கள் விளக்கிச் சொன்னதை, இந்தத் தொகுதிகளைப் படிக்கும்போது, கவனமாகக் கருத்தில் இருத்திக் கொள்ள வேண்டுமென்று விரும்பி வேண்டுகிறேன்.

தலைவர் கலைஞர், 22.10.1968 - அன்று, “அன்பு நண்பா !” என விளித்து, “ஜாக்குலின்கள்” என்று தலைப்பிட்டு எழுதிய முதல் கடிதம், அவர் எவ்வளவு

அதிசயிக்கத்தக்க நுட்பமான ஆற்றலாளர் என்பதை எடுத்துக் காட்டும்.

அமெரிக்க ஜனாதிபதி கென்னடியின் மனைவி ஜாக்குலின், தனது கணவர் கல் நெஞ்சன் ஒருவனின் துப்பாக்கிக்கு இரையானதற்குப் பின்னர், அய்ந்தாண்டுகள் பொறுத்திருந்து, தனது 39 வயதில், ஒனாசிஸ் என்ற 68 வயது கோடீஸ்வரனை, மறுமணம் செய்துகொண்டார்; இந்தத் திருமணத்தை அமெரிக்க நாட்டிலேயே பெரும்பாலானோர் விரும்பவில்லை; என்பது செய்தி.

இந்தச் செய்தியை கழகத் தோழர்கள் அறிந்துகொள்ள வேண்டும் என எண்ணிய தலைவர் கலைஞர், அந்தச் செய்தியை; கழகத்திலே இருந்த சிலர் - பாசத்தோடு பழகிய நண்பர்கள், சென்னை மாநகராட்சித் தேர்தலில் சுயேட்சை வேட்பாளர்களாக மாறிய நிகழ்வோடு ஒப்பிட்டு எழுதியிருக்கிறார்.

அங்கே, சொந்த நாட்டிலே பாராட்டப்படாத மறுமணம்; இங்கே பதவி வெறியைத் தணித்துக் கொள்ள, கழகத்தையே எதிர்த்து சுயேட்சைகளாகப் போட்டியிட்ட கழகத் தோழர்கள்.

எந்தச் செய்தியையும் மேலோட்டமாகப் பார்த்து, கடந்து செல்பவரல்ல கலைஞர். அந்தச் செய்தியை, கழகத்தை நிலைநிறுத்தவும், கழகத் தோழர்களுக்கு உணர்ச்சி ஊட்டவும், எப்படிப் பயன்படுத்தலாம் என்று நினைத்துக் காத்திருந்தவர் கலைஞர்.

15.11.2016 - அன்று தலைவர் கலைஞர், “மத்திய அரசின் அறிவிப்பும், சாதாரண மக்களின் அவதியும்” என்ற தலைப்பில் “முரசொலி”க்கு எழுதிய கடைசிக் கடிதம்; பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் பண மதிப்பிழப்பு அறிவிப்பைப் பற்றியது. ‘

அந்தக் கடிதத்தில், ஏடுகளில் வெளியான செய்திகளை எடுத்துக்காட்டி, பணமதிப்பிழப்பு நடவடிக்கையினால் நாட்டிலே ஏற்பட்ட விளைவுகளை விளக்கியிருக்கிறார்.

குபேரர்களைப் பற்றியோ, கோடி கோடியாய்ப் பணம் குவித்திருக்கும் செல்வந்தர்களைப் பற்றியோ, மேட்டுக்குடிகளைப் பற்றியோ எப்போதும் கவலைப்படாதவர் கலைஞர்.

நடுத்தர மக்கள், அடித்தள மக்கள், உழைத்து வாழும் பிரிவினர், அன்றாடங்காய்ச்சிகள் - ஆகியோரைப் பற்றியே சதாசர்வ நேரமும் நினைந்து நினைந்து கசிபவர் கலைஞர் என்பதை; பண மதிப்பிழப்பு நடவடிக்கையினால் அவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளை, அந்தக் கடைசிக் கடிதத்தில் பட்டியல் இட்டிருக்கிறார்.

அந்தப் பிரிவினர்தானே கழகத்தின் வேர்கள்! மண்ணுக்குள் மறைந்திருந்து மரத்தைத் தாங்கும் வேர்களைப் போல, கண்ணுக்கெட்டிய தூரம்வரை கழகத்தைக் காத்து நிற்பவர்கள் அவர்கள் அல்லவோ! அதனால்தான் தலைவர் கலைஞர் அவர்களுக்கு, கடைசிவரை, அவர்கள் மீது அவ்வளவு அக்கறை, ஆழ்ந்த பிடிப்பு!

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும் கடிதத்திற்குத் தலைப்பு சூட்டும்போது; சிற்பி செதுக்கியானதும் சிற்பத்திற்குக் கண் திறப்பு செய்வதைப் போல, ஒளி பொருந்திய - கருத்தாழம் மிகுந்த - நினைவில் நீடித்து நிற்கக்கூடிய, தலைப்புகளைத் தேர்ந்தெடுத்து அலங்கரிப்பார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள்:

“காகிதக் கப்பலில் கவனம் செலுத்தாதே தம்பி”
“மகுடி ஊதும் மகானுபாவர்கள்’’
“கிளிக்குப் பச்சை பூசுவதா?”
“கண்ணீரும் பன்னீரும்”

"படமும் பாடமும்"
"மூலவர் மூவர் முரசொலி"

போன்ற எண்ணற்ற தலைப்புகளை கடிதங்களுக்குச் சூட்டியிருக்கிறார். –

ஒவ்வொரு அங்குலமும் அண்ணாவின் அடியொற்றி வளர்ந்த கலைஞர்

அவர்கள்:

"நேர்மையும் பொறுப்பும், நீர்மேல் எழுத்தல்ல!"
"எருக்கம் பூவில், இனிய மணம் தேடுவதோ?"
"கண்ணுக்கு விருந்தானாய் – மனப் புண்ணுக்கு மருந்தானாய்!"
"அன்று எத்தனை பிரிவு? இன்று எத்துணைப் பரிவு?"
"இடர் எது வரினும், ஏற்பேன்"
"பறித்து வராத பாரிஜாதம்"

போன்ற நினைவில் நங்கூரம் போட்டு நிற்கும் தலைப்புகளையே சூட்டியிருக்கிறார்.

கலைஞரின் கடிதங்கள், காலத்தின் கண்ணாடி! கலைஞரின் கடிதங்கள், கற்கண்டுச் சொற்கோவை! கலைஞரின் கடிதங்கள், கருத்துச் சுரங்கம்! கலைஞரின் கடிதங்கள், வானவில்லைப் போல, வண்ணங்கள் நிறைந்த எண்ணங்களின் பசுஞ்சோலை! கலைஞரின் கடிதங்கள், கடலின் ஆழத்தைக் காட்டும், மலையின் உயரத்தை உரசும்! கலைஞரின் கடிதங்கள், நினைத்தாலே இனிக்கும், நெஞ்சமெல்லாம் மணக்கும்!

கலைஞரின் ஒவ்வொரு கடிதத்தையும் ஊன்றிப் படித்து, ஒப்பிலாப் பயன் பெறுக! "யாம் பெற்ற இன்பம், பெறுக தமிழ் வையகம்!"

அன்புடன்,

(மு.க. ஸ்டாலின்)
14.09.2021

பதிப்புரை

அரசியல் இலக்கியமான கலைஞரின் கடிதங்கள்

திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆறாவது முறையாக ஆட்சிக் கட்டிலில் அமர்த்தி, அதனை உங்களுக்குக் காணிக்கையாக்குவேன் என வங்கக் கடலோரம் பேரறிஞர் அண்ணா துயிலுமிடத்தை ஒட்டி, ஓய்வெடுக்கும் முத்தமிழறிஞர் கலைஞரின் நினைவிடத்தில் சூளுரைத்தவர் கழகத் தலைவர் தளபதி அவர்கள். தேர்தல் களத்தில் மகத்தான வெற்றி பெற்று, அந்த வெற்றியைக் கலைஞரின் ஓய்விடத்தில் காணிக்கையாக்கி, தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவர் மாண்புமிகு **முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்** அவர்கள்.

சொன்னதைச் செய்வோம் என்று சூளுரைத்து நிறைவேற்றியவர் முத்தமிழறிஞர் கலைஞர். சொல்லாமலே செய்து முடிப்பவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள். தலைவர் கலைஞரின் விருப்பப்படி, கடற்கரையில் இடம் ஒதுக்கப்படுமா என அவர் மறைந்தபோது தமிழ்நாட்டில் மட்டுமின்றி, உலகெங்கும் வாழும் தமிழர்களிடம் பதற்றம் கலந்த எதிர்பார்ப்பு மிகுந்திருந்தது. அப்போதைய ஆட்சியாளர்கள் காழ்ப்புணர்வுடன் மறுத்த நிலையில், நீதிமன்றத்தை நாடி, விடிய விடிய சட்டப் போராட்டம் நடத்தி, கடற்கரையில் தலைவர் கலைஞருக்கான இடத்தை உறுதி செய்து, உலகத் தமிழர்களின் நெஞ்சில் உயர்ந்து நின்றவர் நம் முதல்வர்.

தந்தைக்குத் தனயனாக, தலைவருக்குத் தொண்டனாக, இயக்கத்தின் தலைமையாக எல்லா நிலையிலும் தலைவர் கலைஞரின் பேராற்றலை மக்கள் நெஞ்சங்களில் நிலைத்திருக்கச் செய்யும் பெரும்பணியை முதல்வர் அவர்கள் மேற்கொண்டு வருகிறார். அத்தகைய பெரும்பணிகளில் ஒன்றைச் சீதை பதிப்பகத்திடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்தார். அதுதான், கலைஞர் கடிதங்கள் எனும் இந்த மாபெரும் தொகுப்பு. 4051 **கடிதங்களைக் கொண்ட54 பாகங்களாக** வெளியாகியுள்ள இந்தத் தொகுப்பிற்கு அணிந்துரையை மாண்புமிகு முதல்வர் அவர்களே வழங்கியிருப்பது, சீதை பதிப்பகத்தின் மீது அவர் வைத்திருக்கும் நம்பிக்கையின்

வெளிப்பாடு. அணிந்துரை என்ற சொல்லுக்குப் பதில் பணிந்துரை என அவர் பயன்படுத்தியிருப்பது தனது தந்தையும் தலைவருமான முத்தமிழறிஞர் கலைஞர் மீது எப்போதும் அவர் வைத்திருக்கும் பெருமதிப்பின் அடையாளம். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

'கலைஞரின் கவிதை மழை'யை வெளியிடும் முதல் வாய்ப்பைப் பெற்றுத் தந்த எங்கள் வழிகாட்டியான மூத்த பத்திரிகையாளர் **அய்யா சின்னகுத்தூசி**யை நினைவில் கொள்கிறோம். தலைவர் கலைஞர் அவர்களே அப்போது அதனை மெய்ப்புப் பார்த்து, முழு வடிவம் பெறச் செய்தார். ஒன்றிய அமைச்சர்கள், தோழமைக் கட்சித் தலைவர்கள், தமிழின் மிகப் பெரும் கவிஞர்கள், கழக நிர்வாகிகள் முன்னிலையில் அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் கவிதை மழை வெளியீட்டு விழா சிறப்பாக நடைபெற்றது.

அதுபோலவே, முத்தமிழறிஞர் கலைஞரின் சிறுகதை இலக்கியத்தை சிறுகதைப் பூங்கா எனும் தலைப்பில் சீதை பதிப்பகம் வெளியிட்ட போதும், மிகச் சிறப்பான விழா நடத்தப்பட்டு, அருமையான உரையை வழங்கினார் தலைவர் கலைஞர் அவர்கள். கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் அவர் ஆற்றிய உரைகளை 'கல்வி நிலையங்களில் கலைஞர்' எனக் கடலூர் இள. புகழேந்தி அவர்கள் தொகுத்திட, அதனைச் சிறப்பான முறையில் வெளியிட்டது சீதை பதிப்பகம்.

இன்றைய தகவல்-தொழில்நுட்பமும் சமூக வலைத்தளங்களும் இல்லாத காலத்தில், ஒவ்வொரு நாளும் தனது இயக்கத் தொண்டர்களுடன் உரையாடுவதற்கான ஊடகமாக உடன்பிறப்புக் கடிதங்களைத் தலைவர் கலைஞர் மிகச் சிறப்பாகக் கையாண்டார். அந்தக் கடிதங்களை முழுமையான தொகுப்பாகக் கொண்டு வரவேண்டும் என்ற எண்ணம் அவரிடம் இருந்தது. அந்த எண்ணத்தை முதல்வர் அவர்கள் நிறைவேற்றியுள்ளார்.

கடிதங்களின் முழுத் தொகுப்பு உருவாக்கப் பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர் தலைவர் கலைஞரின் நிழலாக, அவரது மனதின் குரலை அறிந்தவராக விளங்கிய உதவியாளர் **அய்யா கோ.சண்முகநாதன்** M.com BGL அவர்கள். கலைஞர் அந்தக் கடிதங்கள் பலவற்றையும் எழுதியபோதே

அருகிலிருந்து கவனித்தவர் என்பதாலும், அப்போதே மெய்ப்புப் பார்த்து அச்சுக்கு அனுப்பியவர் என்பதாலும், ஒவ்வொரு கடிதத்தின் காலகட்டத்தையும் அறிந்து முறையாகத் தொகுத்தளித்தார். தனது இறப்பிற்கு முன்பாக, கடிதத் தொகுப்புப் பணியை முழுமையாக நிறைவேற்றிவிட்டே நம்மிடமிருந்து பிரியாவிடை பெற்றிருக்கிறார் அய்யா சண்முகநாதன். எப்போதும் எங்கள் மீது அளப்பரிய அன்பைப் பொழிந்த அய்யாவை சீதை பதிப்பகம் எந்நாளும் நினைவில் கொண்டிருக்கும்.

மறவன் என்ற பெயரில் முதலில் கடிதங்களை எழுதிய தலைவர் அவர்கள் பின்னர் மு.கருணாநிதி, மு.க. என உடன்பிறப்புகளுக்குக் கடிதங்கள் எழுதியுள்ளார். பின்னர் மீண்டும் மு.கருணாநிதி என்ற பெயரிலேயே கடிதங்களைத் தொடர்ந்து எழுதியுள்ளார். தலைவர் கலைஞர் அவர்களின் கடிதங்களைக் காலவரிசைப்படுத்தி, தொகுப்பில் விடுபட்ட கடிதங்களையும் தேடி இணைப்பதில் முனைவர் **திரு கி. இராஜமாணிக்கம்** ஐ.ஏ.எஸ்.(ஓய்வு) அவர்களின் பணி அளப்பரியது. தலைவர் கலைஞரின் அருகிலிருந்து ஆட்சிப்பணியையும் இயக்கப் பணியையும் கவனித்த அவர், இந்தத் தொகுப்பு மிகச் சிறப்பான முறையில் வெளியாவதற்குத் துணை நின்றவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் படைப்புகளை வெளியிடும் ஒவ்வொரு வாய்ப்பும் சீதை பதிப்பகத்திற்குப் பெருமை தரக்கூடியதாகும்.

சீதை பதிப்பகத்தின் வெளியீடுகளைத் தலைவர் கலைஞர் அவர்களை நேரில் சந்தித்து வழங்கும் போது ஏற்பட்ட மகிழ்ச்சிக்கும் உணர்ச்சிக்கும் அளவில்லை. அதன் தொடர்ச்சியாக, கழகத் தொண்டர்களுக்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் அரசியல் இலக்கியமான முரசொலி உடன்பிறப்புக் கடிதங்கள் முழுத் தொகுப்பு எனும் இமாலயப் பணியை நிறைவேற்றியிருப்பதை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்குச் சீதை பதிப்பகத்தின் புகழ்வணக்கமாகக் கருதுகிறோம்.

இந்தப் பணியை எங்களிடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்குகிறோம்.

பதிப்பகத்தார்

உள்ளே...

தலைப்பு	ஆண்டு	பக்கம்
1736. பெரியோரை வணங்கி, இளையோரை வாழ்த்துகின்றேன்!	02-06-1991	23
1737. வெறியர் தட்டிப் பறிக்க முடியாத வெற்றி! வெற்றி! வெற்றி!	05-06-1991	28
1738. வெற்றி நமதே! வீறுகொண்டெழுக!	06-06-1991	33
1739. நெருக்கடி காலக் கடிதங்கள் - 1 : ஒரு தொண்டனின் வேண்டுகோள்!	26-06-1991	38
1740. நெருக்கடி காலக் கடிதங்கள் - 2 : தங்கம் எது? பித்தனை எது? வீரர்கள் பின் தொடரட்டும்!	27-06-1991	45
1741. நெருக்கடி காலக் கடிதங்கள் - 3 : ஒற்றர் பணி ஒப்பற்ற புனிதப்பணி!	28-06-1991	50
1742. நெருக்கடி காலக் கடிதங்கள் - 4 : வீராதி வீரனும் சூராதி சூரனும்!	29-06-1991	55
1743. நெருக்கடி காலக் கடிதங்கள் - 5 : உற்றாரைத் துறந்து ஓடுவர் யாரே!	30-06-1991	60
1744. நெருக்கடி காலக் கடிதங்கள் - 6 : இந்த உடலின் மதிப்பு எவ்வளவு?	01-07-1991	64
1745. நெருக்கடி காலக் கடிதங்கள் - 7 : எங்கே; பகுத்தறிவு பயன்படுத்தப்படுகிறதோ...!	02-07-1991	67

1746. நெருக்கடி காலக் கடிதங்கள் - 8 : தமிழ்ப் புலவர் காட்டும் தாய் யானை!	03-07-1991	73
1747. நெருக்கடி காலக் கடிதங்கள் - 9 : வன்முறையால் பெற்ற வெற்றி இது!	04-07-1991	77
1748. நெருக்கடி காலக் கடிதங்கள் - 10 : இனம் இனத்தைச் சேர்ந்த கதை!	05-07-1991	82
1749. நெருக்கடி காலக் கடிதங்கள் - 11 : அவன் விரும்பும் இடம் எது?	06-07-1991	86
1750. நெருக்கடி காலக் கடிதங்கள் - 12 : அந்த ஏடுகளுக்கு அப்படி ஓர் அலர்ஜி!	07-07-1991	90
1751. நெருக்கடி காலக் கடிதங்கள் - 13 : தொடங்கிய பயணம் தொடர்கிறது!	08-07-1991	94
1752. நெருக்கடி காலக் கடிதங்கள் - 14 : இதயத் தொடர்பு என்றும் இருக்கும்!	11-07-1991	98
1753. நெருக்கடி காலக் கடிதங்கள் - 15 : எருக்கம்பூவில் இனிய மணம் தேடுவதோ?	12-07-1991	103
1754. நெருக்கடி காலக் கடிதங்கள் - 16 : மலை தரும் சந்தனம்! கடல் தரும் முத்து!	13-07-1991	107
1755. நெருக்கடி காலக் கடிதங்கள் - 17 : காத்திருப்போம்; காலம் மாறும்!	14-07-1991	111
1756. நெருக்கடி காலக் கடிதங்கள் - 18 : வயிற்றுக்கு மேலே வைத்தது ஏன்இதயத்தை?	15-07-1991	115
1757. நெருக்கடி காலக் கடிதங்கள் - 19 : மங்கையும் மா(வு)வீரனும்!	16-07-1991	120
1758. நெருக்கடி காலக் கடிதங்கள் - 20 : உண்மை உறங்கி விடுவதில்லை!	17-07-1991	123

1759. நெருக்கடி காலக் கடிதங்கள் - 21 : குரங்குக்குட்டி; பசுவின் கன்றாகுமா?	18-07-1991	127
1760. நெருக்கடி காலக் கடிதங்கள் - 22 : நித்திய கலியாணியும் சில நினைவுகளும்!	19-07-1991	131
1761. நெருக்கடி காலக் கடிதங்கள் - 23 : கோயிலடி கூறுவதென்ன?	22-07-1991	135
1762. நெருக்கடி காலக் கடிதங்கள் - 24 : கதையும்; அது வழங்கும் கருத்தும்!	23-07-1991	139
1763. நெருக்கடி காலக் கடிதங்கள் - 25 : ஒரு பனை மரத்தின் சுயசரிதை!	24-07-1991	145
1764. நெருக்கடி காலக் கடிதங்கள் - 26 : காவிரி ஒப்பந்தம் ஒரு கண்ணோட்டம்!	25-07-1991	150
1765. நெருக்கடி காலக் கடிதங்கள் - 27 : தலை தாழாத் தத்துவ அறிஞர்!	26-07-1991	155
1766. நெருக்கடி காலக் கடிதங்கள் - 28 : சோமு ஜோசப் பாண்டியன்!	27-07-1991	160
1767. நெருக்கடி காலக் கடிதங்கள் - 29 : சோதிடங்கள் இன்னும் குறையவில்லை!	28-07-1991	165
1768. நெருக்கடி காலக் கடிதங்கள் - 30 : இளிவரின் வாழாத மானமனிதர்!	29-07-1991	169
1769. நெருக்கடி காலக் கடிதங்கள் - 31 : எதையும் தாங்கும் இதயம் என்றும் நமக்குத் துணை!	31-07-1991	173
1770. நெருக்கடி காலக் கடிதங்கள் - 32 : புதியதோர் எழுச்சி காண்போம்!	01-08-1991	176
1771. நெருக்கடி காலக் கடிதங்கள் - 33 : வெய்யிலில் கிடைக்கும் நிழல்!	02-08-1991	181

1772. நெருக்கடி காலக் கடிதங்கள் - 34 : கழக ஆட்சியில் அறநிலையப் பணிகள்!	03-08-1991	186
1773. நெருக்கடி காலக் கடிதங்கள் - 35 : எங்களுக்கும் காதல் வரும்!	04-08-1991	198
1774. நெருக்கடி காலக் கடிதங்கள் - 36 : இலக்கியம் காட்டும் இலட்சிய வீரன்!	05-08-1991	203
1775. நெருக்கடி காலக் கடிதங்கள் - 37 : இது விஞ்ஞான யுகம்; வீணர்கள் யுகமல்ல!	06-08-1991	207
1776. நெருக்கடி காலக் கடிதங்கள் - 38 : விதியே! விதியே! என் செய நினைத்தாய்?	07-08-1991	213
1777. நெருக்கடி காலக் கடிதங்கள் - 39 : செஞ்சீனம் கண்ட சிங்கம்!	08-08-1991	216
1778. நெருக்கடி காலக் கடிதங்கள் - 40 : வியட்நாமின் வீரவரலாறு!	09-08-1991	220
1779. இணைந்து! நனைந்து! துணிந்து!	03-09-1991	225
1780. உரிய வகை உகந்த முறை உயர்ந்த நிர்வாகம்!	04-09-1991	229
1781. காத்திருப்பது; காணவும், கண்டு மகிழவும்!	06-09-1991	238
1782. எனக்கும், உனக்கும், நாட்டுக்கும்!	07-09-1991	245
1783. திராவிட மறுமலர்ச்சி மாமன்றம்!	08-09-1991	252
1784. மருந்து குழைக்கும் மாதாவின் உணர்வு!	10-09-1991	259
1785. உன் சிரம் நிமிரட்டும்! கரம் உயரட்டும்!	11-09-1991	262
1786. அவர்கள் அறிந்து கொள்வது நல்லது!	12-09-1991	268

1787. என் அன்பகமே! அறிவகம் காண, வா!	13-09-1991	276
1788. நம்பிக்கை நட்சத்திரம் - கலங்கரை விளக்கம்!	14-09-1991	281
1789. என்னையே காணிக்கையாக்குகிறேன்!	15-09-1991	289
1790. உயிரனையோர் உணர்வை உரைத்திட வேண்டுமோ?	19-09-1991	293
1791. மகத்தான பரிசு; இந்த மாமன்றம்!	20-09-1991	298
1792. கலையுலக நன்மக்கள் காண!	22-09-1991	304
1793. திராவிட இயக்கப் பவளவிழா மாநாடு!	23-09-1991	314
1794. அறிந்து கொள்ள விரும்புவதில் தவறில்லை!	24-09-1991	318
1795. தடைக் கற்கள் உண்டென்றாலும்...!	25-09-1991	321
1796. காவல்துறை மானியமும் காட்சியாகும் உண்மைகளும்!	26-09-1991	328
1797. முல்லை இருக்க முள்ளைச் சூடுவதோ?	27-09-1991	335
1798. கருகவிடச் சம்மதமோ? சொல்!	28-09-1991	340
1799. அண்ணாவின் கேள்விக்கு என்ன பதில்?	29-09-1991	347
1800. தினமணி சித்திரம் தெரிவிக்கும் உண்மை!	30-09-1991	353
1801. இராவணன் என் பாட்டன்!	01-10-1991	358
1802. பொய், நிலாச் சோறு சாப்பிடுகிறது!	04-10-1991	364
1803. துரோகமும் பாபமும் செய்தது யார்?	05-10-1991	373

1804. சிலைப் பிரச்சினையும், சிக்கலாவதா?	07-10-1991	383
1805. காலத்தை முன்னோக்கிச் செலுத்தும் முயற்சி!	08-10-1991	386
1806. இந்திய அரசு வேடிக்கை பார்ப்பதா?	10-10-1991	394

1736. பெரியோரை வணங்கி, இளையோரை வாழ்த்துகின்றேன்!

உடன்பிறப்பே,

பிறந்த நாள் செய்தியாக, ஏற்கனவே நான் எழுதிய "நெஞ்சுக்கு நீதி"யை நினைவில் வைத்துக்கொண்டு சில வரிகள் :

"மனிதன், நூறாண்டுக்கு மேலும் வாழ்வது என்பது அதிசயச் செய்திகளில் ஒன்று. தொன்னூறு ஆண்டுகளைக் கடந்து வாழ்பவர்களே மிகச் சிலர்தான். அந்த அடிப்படையில் பார்த்தால் அறுபத்தேழு வயதைத் தாண்டிய நான், வாழ்க்கையில் முக்கால் பகுதிக்கு மேல் முடித்து விட்டேன் என்றுதான் கூறவேண்டும். இந்த முக்கால் பகுதி வாழ்க்கையில் ஏறத்தாழ ஐம்பத்தி மூன்று ஆண்டுகள் - மிகப் பெரும் பகுதி - பொது வாழ்வுக்கே செலவாகியிருக்கிறது என்பது, என் இதயத்துக்கு ஆறுதலைத் தரவல்லதாகும். எஞ்சியிருக்கும் நாட்களும் பொதுப்பணிக்கே பெரிதும் பயன்படவேண்டுமென்பது என் தனி யாத ஆசை.

நடந்து வந்த பாதையை ஒரு முறை திரும்பிப் பார்த்து விட்டு, "ஏ, அப்பா! இவ்வளவு தூரம் நடந்து விட்டோமா! இனிமேல் நடக்க முடியாது!" என்று அயர்ந்து போவதற்குப் பதிலாக "பரவா யில்லை! இவ்வளவு தூரம் நடந்து விட்டோம். இன்னும் சிறிது தூரம்தானே" என்ற புதிய விறுவிறுப்பைப் பெற்றாக வேண்டும்.

வாழ்க்கையை ஒரு போராட்டம் என வர் னிப்பார் உளர். எனக்கோ போராட்டமே வாழ்க்கையாகி விட்டது.

போர் வீரனுக்கு மகிழ்ச்சியே கிடையாதுதான் கிடையாது. கொட்டும் குளிரில், பனிப் பாறைகளில் ஊர்ந்து சென்று பகையைத் தாக்கும் பொழுது: சூடாக ஒரு கோப்பைத் தேநீர், அருந்துவது உண்டு! அதுவே அவனுக்குப் பெரிய இன்பம்!

மீனைச் சுவைத்துச் சாப்பிடும் பொழுது, அதன் முள் நாவிலே குத்திவிடுவதுண்டு. அதனால் சிறிது ரத்தமும் கசிவதுண்டு.

அதைப் பொருட்படுத்தாமல், தொடர்ந்து மீன் துண்டுகளைச் சுவைப்போரைப் பார்த்திருக்கிறோம்.

சிலபேருக்கு மீனின் முள், தொண்டையிலே அடைத்துக் கொண்டு, அவலதைப்படுவதும் உண்டு.

என் வாழ்வு, இதில் இரண்டாவது வகை! "உன்னை ஒருவன் இழித்துப் பேசினான்" என்று தன் நண்பனிடம் ஒரு நண்பன் கூறினான். அதைக் கேட்ட அந்த நண்பன் வியப்புற்று, "அப்படியா! இருக்காதே! என்னை அவன் இழித்துப் பேசியிருக்க மாட்டானே! நான் அவனுக்கு எந்த உதவியும் செய்ய வில்லையே! பிறகு எப்படி அவன் என்னை ஏசியிருக்க முடியும்?" என்று கேட்டான்.

இந்த உரையாடல் துணுக்கில் இந்த உலகத்தின் படமே தெரிகிறதல்லவா? இத்தகைய உலகில்தான் நமது வாழ்க்கைப் பந்து உருகுகிறது.

அந்தப் பந்தை நாம் தான் உதைத்து விளையாட வேண்டும். யாரோ உதைப்பார்கள் என்று சோம்பலாயிருந்தால், அவர்கள் நம்மையும் சேர்த்து 'உதைப்பார்கள்.

கல்லிலும், முள்ளிலும் கட்டாந் தரையிலும் அடித்து மோதி அவுட் ஆகாமல் பந்து, (Goal கோலுக்குள் நுழைந்திட வேண்டும். - (Goal) இல்லாமல் - பந்தாடுவதில் மட்டும் திறமையைக்காட்டிப் பலனில்லை. வெற்றி தோல்விகள் இயற்கைதான் எனினும் விடாமுயற்சியும் கொள்கை உறுதியும் ஓயாத உழைப்பும் தேவை; வெற்றி கிட்டிட!

"ஓய்வெடுத்துக் கொள்க" என்று சில எதிர்க் கட்சி நன்பர்கள் கேலியாகக் கூறினர். "ஓய்வெடுக்காமல் உழைத்தவன் இதோ ஓய்வு கொண்டிருக்கிறான்" என்று என் கல்லறையின் மீது தான் எழுதப்படும் எனப் பதில் சொன்னேன். பார் உடன்பிறப்பே, நெஞ்சுக்கு நீதியில் நான் எழுதிய முன்னுரையே இந்தப் பிறந்த நாள் செய்தியாக சிறு திருத்தமுடன் தரப்பட்டுள்ளது.

மாவீரன் லெனின் மறைந்த ஆண்டு என்பதாலும், மகாத்மா காந்தி அடிகளார்; காங்கிரஸ் பேரியக்கத்திற்கு அதிகாரபூர்வமாகத் தலைமையேற்ற ஆண்டு என்பதாலும், இன்று நடுவர் மன்றம் கண்டுள்ள காவிரிப் பிரச்சினைக்கு: தமிழ் நாட்டு விவசாயிகளுக்கு ஆறுதலாக ஒப்பந்தம் செய்யப்பட்ட ஆண்டு என்பதாலும், தந்தை

பெரியார் அவர்களை வைக்கம் வீரர் என நாடு போற்றுமளவுக்கு ஒரு போராட்டத் திட்டத்தை வகுத்திட்ட ஆண்டு என்பதாலும் பெருமை பெற்ற 1924-ஆம் ஆண்டில் நான் பிறந்து, அந்தப் பெருமையில் ஓர் அளவு பகிர்ந்து கொள்ளும் வாய்ப்பு பெற்றேன் போலும்!

பள்ளியில் படிக்கும் போதே கையெழுத்து ஏடு!

பதினாலாவது வயதில் 1939 ஜூன் திங்கள் மூன்றாம் நாள் சென்னையில் இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போர் தொடங்கிய போது, திருவாரூர் வீதியில் இந்தி எதிர்ப்பு ஊர்வலத் தலைமை யேற்றேன்! இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போராட்ட நாளும் பெரியார் தலைமையில் போர் அறிவிக்கப்பட்ட நாளும் ஆரூரில் நான் களம் புகுந்த நாளும் என் பிறந்த நாளில் தான் என்பது எனக்கு அப்போது தெரியாது.

என் பதினெட்டாவது வயதில்தான் பாவேந்தர் பாரதிதாசன்; திருவாரூரில் யாம் கண்ட தமிழ் மாணவர் மன்றத்திற்கு;

“தண்பொழிலில் குயில் பாடும் திருவாரூரில்
தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்றங்காண்”

எனத் தொடங்கி,

“கிளம்பிற்று காண் தமிழச் சிங்கக் கூட்டம்” எனும் எழுச்சி வரி அமைந்த வாழ்த்துப் பாடலை அனுப்பி வைத்தார்.

அந்தக் காலகட்டத்தில்தான் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்து மாணவர்களான பேராசிரியர் அவர்களையும் நாவலர் அவர்களையும் ஆரூருக்கு அழைத்து “முரசொலி” துண்டு வெளியீடுப் பத்திரிகையின் ஆண்டு விழாவை நடத்தினேன். அழைப்பு பெற்று வெளியூர் கூட்டத்திற்கு முதல் தடவையாக அவர்கள் வந்தது அந்த நிகழ்ச்சிக்குத்தான்!

1945- ஆம் ஆண்டு புதுவை மண்ணில் கயவர்கள் தாக்கிப் பிணமாகிவிட்டேன் என எண்ணிப் போட்டுவிட்டுப் போயினர். என் காயங்களுக்கு மருந்திட்டுப் பெரியார் அவர்கள் கண்கலங்கியதும்; “குடியரசு” ஏட்டுக்குத் துணையாசிரியராக என்னை நியமித்ததும் அப்போதுதான்!

1949- அண்ணா கண்ட தி.மு.கழகத்தின் பிரச்சாரக் குழு உறுப்பினர்களிலே ஒருவன்!

1959 - ஜூலை 15, கல்லக்குடி போராட்டத் தளபதி - தண்டவாளத்திலே தலைவைத்துப் படுத்த எங்கள் ஐவருக்கு ஆறுமாதக் கடுங் காவல்! அந்தத் தண்டனையை திருச்சி சிறையில் கழித்தோம்!

எண்ணிவைக்கவில்லை; எனினும் இருபது தடவையாவது இருக்கும் சிறைக் கோட்டம் சென்று வந்தது! "முன்னாள் முதல்வர்" என்ற நிலையிலும் கூட அந்த பாக்யம் எனக்கு மும்முறை கிட்டியது உண்டு! ஒரு முறை கைதி உடையுடன் கூட!

1957-ல் குளித்தலைத் தொகுதி சட்டமன்ற உறுப்பினராகிறேன் - பின்னர் தொடர் சட்டமன்ற பேரவைப் பணியும் அனுபவமும் முப்பத்தி மூன்று ஆண்டுகளுக்கு மேலாக இடையில் ஓரிரு ஆண்டுகள் மேலவைப் பணியில்

1967 தேர்தலின்போது சென்னை கோட்டூர்புரத்தில் கொலைவெறிக்கு ஆளாக இருந்து குடிசைவாசியினால் உயிர்பிழைத்தேன் அந்த குடிசைவாழ் சாரங்கபாணி தம்பதியரை தன்வீட்டுக்கு அழைத்து அண்ணா விருந்து வைத்துப் பரிசும் வழங்கினார்.

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக பேராசிரியருடன் இணைந்து எதிர்க்கட்சித் தலைவா மற்றும் சட்டமன்ற உறுப்பினர் பதவியைத் துறந்த * நிகழ்ச்சியும் உண்டு!

நினைத்தாலே நெஞ்சை இனிக்கவைக்கும் அண்ணாவின் வரிகள்:

'தண்டவாளத்தில் தலைவைத்துப் படு என்றாலும் அமைச்சர் பொறுப்பினை பற்றிடு என்றாலும் இரண்டையும் ஒன்று போலக் கருதுபவன் என் தம்பி கருணாநிதி:

"என் தம்பி கருணாநிதி அடைப்பட்டிருக்கும் பாளையங்கோட்டை தனிமைச் சிறை, எனக்கு யாத்திரை ஸ்தலமாகும். -

என்னை என் பயணத்தில் பக்குவப்படுத்திய மாமருந்தாகப் பெரியாரின் வாசகம் 1.2.1969 "விடுதலை"யில் ஒளிவிட்டது!

"தமிழர் நலனை, உரிமையை, எந்தநிலையிலும் கலைஞர் விட்டுக் கொடுக்கமாட்டார் எனத் தமிழர்களுக்கு உறுதி கூறுகிறேன்."

அய்யா அவர்களின் இந்த நம்பிக்கைக்கு மனம் ஒரு கடுகளவும் வினையாமல் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோதும் - இல்லாத நிலையிலும்; உடன்பிறப்பே! உன்னோடு சேர்ந்தும், ஈருடல் எனினும் ஓர் இதயமாய் இணைந்து செயலாற்றும் பேராசிரியருடனும்

தமிழர் நலன்

தமிழர் உரிமை

இவற்றை எந்த நிலையிலும் விட்டுக் கொடுக்காமஞல் தொண்டூழியம் புரிந்து வருகிறேன்

அஞ்சுகம் அன்னையும் முத்துவேலரும் என்னை வெறும் உலகிற்குத் தந்தனர்!

அய்யாவும் அண்ணாவும் அறிவுலகிற்கு எனக்கு வழி காட்டினர்!

இன்றோ; நான், உன் விழிபொழியும் வாழ்த்துக்களில் உற்சாகம் பெற்று உழைத்துக் கொண்டிருக்கிறேன்!

எல்லோர்க்கும் இந்தப் பிறந்த நாளில் நன்றி குவித்து;
வெறுப்பு உணர்வை வெறுக்கக் கற்போம்!
நட்பு உணர்வை நாளும் வளர்ப்போம்!
அமைதி காத்து அதன் நிழலில்,
ஆக்கப்பணி புரிவோம்! அனைத்துக்கும்
மேலாக; மனித நேயப் பண்பு ஒன்றே
நம்மை மனிதராக அடையாளம் காட்டும்
என்ற உண்மை உணர்ந்து
நடந்து கொள்வோம்!

எனக் கூறி; பெரியோரை வணங்கி, இளையோரை வாழ்த்துகின்றேன்!

அன்புள்ள

மு.க.

02-06-1991

1737. வெறியர் தட்டிப் பறிக்க முடியாத வெற்றி! வெற்றி! வெற்றி!

உடன்பிறப்பே,

கடந்த திங்கள் 26 ஆம் தேதி தேர்தலில் வெற்றி முகட்டின் இறுதிப்படி கடந்து வாகை சூடும் நிலையில் கழகம் இருந்தபோது, திடுக்கிடும் செய்தியாக - திகைத்திடும் செய்தியாக ராஜீவ் படுகொலைச் செய்தி இடியுடன் கலந்த பயங்கர மின்னலென வந்தது!

செய்தி கேட்டு சிந்தை கலங்கியது. நாடு எனினும், நாட்டிலும் காடு உண்டு; காட்டிலும் கடும் விஷப்பாம்புகள் பதுங்கியிருக்கும் புதர்கள் உண்டல்லவா? அந்தப் புதர்வாழ் ஜந்துக்கள் சில புன்னகையுடன் புறப்பட்டன; "ஆகா இது தான் நேரம்! தி.மு.க. மீது பழிசுமத்தி - தேர்தலில் தீர்த்துக் கட்டிவிடலாம்" எனத் திட்ட மிட்டுத் திசை திருப்பும் பிரச்சாரத்தில் இறங்கின.

தி.மு.க.வையும் அதன் தோழமைக் கட்சி களையும் தேர்தல் களத்தில் நிராயுதபாணிகளாக்கி விட்டால்; எளிதில் கெலித்துவிடலாம் என எண்ணமிட்டு, இரவோடு இரவாகத் திட்டம் வகுத்து; தொலைபேசிகளில் அலறி, சதியை நிறைவேற்றி, நமது வேட்பாளர்கள், நமது அணியைச் சார்ந்த நிர்வாகிகள், ஆதரவாளர்கள், வணிகர்கள், பொது மக்கள், இப்படி சகட்டு மேனிக்கு அனைவருக்கும் பல கோடி ரூபாய் சொத்துக்களுக்கு நாசம் விளைவித்து, நமது தேர்தல் பணிகளை முடக்கிப் போட்டு விட்ட தாகக் கனவு கண்டனர் -

ஆனால் காலை மிதித்தால் தலையை மிதிக்கக் கிளம்பிடும் வேங்கையெனக் கூட்டணியின் செயல்வீரர்கள் இளம் மீசை துடிக்கப் புறப்பட்டனர்! "அமைதி! அமைதி!" என நமது அணியினர் வேண்டினர்! கொந்தளிக்கும் வங்கக் கடலையே இதயத்துக்குள் அடக்கிக் கொண்டு; "குறிக்கோள் தேர்தல் வெற்றியே!" எனக்

கொண்டு சிங்கம் நிகர் நமது செயல்வீரர்கள் பொறுமை காத்துக் களத்தில் மீண்டும் இறங்கியுள்ளனர்!

மே 25-ல் காலையில் அண்ணா அறிவாலயத்தில் அனைத்துக் கட்சிக் கூட்டம் அன்று மாலையில் சென்னை நகர் குலுங்க, இரங்கல் தெரிவிக்கவும் - வன்முறையாளர்க்கு கண்டனம் தெரிவிக் கவும் மிகப் பெரும் பேரணி!

மே 26-ல் மாவட்ட கழகச் செயலாளர்கள் கூட்டம்!

மே 29-ல் மாநில முழுதும் ஆயிரம் இடங்களில் அ.தி.மு.க. - காங்கிரஸ் வன்முறை வெறிக் கூத்தைக் கண்டித்து அனைத்துக் கட்சியினர் உண்ணாநோன்பு!

ஜூன் முதல் நாள் எனது தேர்தல் பிரச்சாரப் பணி வேலூரிலும், செங்கற்பட்டிலும் தொடக்கம்.

ஜூன் 3- தமிழக முழுதுமுள்ள தொகுதிகளில் தேர்தல் பணிச் செலவுகளுக்கான உண்டியல் வசூல்!

மீண்டும் களத்தில் இறங்கிவிட்டனர் நமது அணியின் கண்மணிகள்! கடமை தவறாத செயல் வீரர்கள்!

இதுகண்டு மனம் தாங்காதோர்; "அடப்பாவிகளே! நீங்கள் அனுதாப அலையில் மிதந்து அழிவீர்கள் என்றல்லவோ எண்ணியிருந்தோம்! தலை தூக்கி, நெஞ்சு நிமிர்த்தி, கைவீசி, பட்டாளத்து நடைபோடத் தொடங்கிவிட்டீர்களே!" என்று பதைத்துப்போய் தங்களிடமுள்ள அஸ்திரங்களை எல்லாம் ஏவிடக் கிளம்பிவிட்டனர்!

உடன்பிறப்பே; புராண காலத்துப் போர்க்களத்தில் எதிரியை மயக்கமூட்டித் திகைக்க வைப்பதற்கென்று சில அஸ்திரங்கள் உண்டு! மோகனாஸ்திரம் என்று ஒரு அம்புக்கும், பிரம் மாஸ்திரம் என்று மற்றொரு அம்புக்கும் பெயர் கூறுவர்!

அத்தகைய அஸ்திரமொன்றினால் இராமனது படை வீரர்களை மயக்கமுறச் செய்தது இராவணன் படை யென்றும்; அந்த மயக்கம் தெளிவிக்க அனுமன் சஞ்சீவி மலையைத் தூக்கி வந்து அனைவரையும் துள்ளி எழச் செய்தான் என்றும் இராமாயணம் கூறுகிறது! அந்த மயக்க அஸ்திரங்கள் இப்போது "பத்திரிகாஸ்திரங்கள்" என்ற பெயருடன் ஏவப்படும் நிலை கானுகிறேன் நான்!

உடன்பிறப்பே, உன்னையும் உன் போலத் தேர்தல் பணியாற்றும் வீரர்களையும் - ஆதரவு அள்ளி வழங்கக் காத்திருக்கும் வாக்காளப் பெருமக்களையும் இராமாயணப் போர்க்களம் போல மயக்கத்தில் ஆழ்த்திட, அந்தப் பத்திரிகைக் கணைகள் சில பயன்படுத்தப்படுகின்றன!

அந்தக் கணை கக்கும் "மயக்க விஷம் உண்டு, நீ துவண்டு விடுவாயாம்! தோல்வி உணர்வினால் சோர்ந்து போவாயாம்!

என்னே திட்டமிட்ட சதி! நீயும் நானும் யார் தின்னும் சோற்றில் மண்ணை வாரிப் போட்டோம். எனினும் வரிந்து கட்டிக்கொண்டு நம் வீழ்ச்சிக்கு ஏதாவது ஒரு ஆயுதம் கிடைக்காதா எனத் தேடி அலைகிறார்களே, ஏன்

ஒரு பத்திரிகை தஞ்சை மாவட்டத்தில் தேர்தல் கருத்துக் கணிப்பு என்ற பேரால் - தஞ்சை மாவட்டத்தில் நமது அணி, ஒரு இடத்தில்கூட வெல்ல முடியாது என வியாசம் எழுதியுள்ளது! சில்லறை ஏடுகளின் வரிசையில் உள்ள ஏடு அல்ல! பெரிய ஆங்கில ஏடு! ஒருவேளை வியாபாரம் மந்தமோ என்னவோ; விஷம வியாபாரத்தில் குதித்துவிட்டது.

அதிலும் பொய்யிலும் பொய் பெரிய பொய்யாக தஞ்சைத் தரணியில் கோ.சி.மணியும், எல். கணேசனும், கோவேந்தனும் தேர்தலில் டெபாசிட் வாங்க மாட்டார்கள் என்று அந்த ஏடு வர்ணனை செய்துள்ளது!

"பொய்யைச் சொன்னாலும்
பொருத்தமாச் சொல்லுங்கடா - அட
போக்கற்ற பசங்களா!"

என்று உடுமலை நாராயணக்கவிராயர் எழுதிய பாடல்தான் நினைவுக்கு வருகிறது!

அன்னை இந்திராகாந்தி கொலை - அருமை நண்பர் எம்.ஜி.ஆர். உடல் நலிவு - இரண்டும் இணைந்த அனுதாப அலை வீசியபோதே தஞ்சைத் தரணியில் கழக வேட்பாளர்கள் யாரும் தேர்தலில் டெபாசிட் இழக்கவில்லை என்கிற போது; இன்று இவர்கள் ஆட்சிக்குத் தப்பித் தவறி வந்துவிட்டால் தமிழ்நாடு அராஜக பூமியாக மாறும் என்பதை மே 21,22,23 ஆகிய நாட்களில் ஆடிய வன்முறை தாண்டவத்திற்குப் பிறகு வாக்காளர்கள்

உணர்ந்திருக்கும் நிலையில் கழக முன்னணி வேட்பாளர்கள் மூவர் தருசையில் டெபாசிட் இழப்பர் என ஒரு ஏடு கணித்துக் கூறுகிறது எனில்; இது இராமாயணத்தில் மயக்க விலும் கலந்த கணை வீசியது போலத்தானே இருக்கிறது!

ராஜீவுக்குப் பிறகு நிலையான ஆட்சி அமைக்க வல்ல தலைவர் யார் என்று காங்கிரஸ் கட்சி காட்ட முடியாத சூழலில் - வாக்காளர்களை ஏமாற்ற "பத்திரிகாஸ்திரம்" பயன்படுத்தப்படு கிறது என்பதைத் தவிர வேறு என்ன கூற முடியும்?

உடன்பிறப்பே நமது களத்தில் வீரர்கள் எவரும் இந்த "தந்திரபானம்" தைத்து மயங்கியிருக்க மாட்டார்கள்!

ஒருவேளை, வாக்கால் பெருமக்கள் சிலகா திசை திருப்பிவிடவும், மயக்கமுறச் செய்யவும் இந்த மோகனாஸ்திரங்களும் - பிர்மாஸ்திரங்களும் பயன்படக்கூடும்!

அவர்கள் மயக்கம் தெளிய நம்மிடம் அனுமன் கொண்டுவந்த "சஞ்சீவி பர்வதம்" இல்லை யெனினும் அந்த சஞ்சீவி மலையின் மூலிகையினும் சக்தி வாய்ந்த மூலிகையை இதோ நமது அண்ணன் "திராவிட நாடு" இதழில் தம்பிக்கும் கடிதமாக தேர்தல் நேரத்தில் வழங்கியிருக்கிறார்!

"உழைத்து அலுத்த உத்தமனே!
உதிக்குது உனக்காகவே உதயசூரியன்!
இன்ப ஒளி பெற்றிட வாராய் என்று
அன்புடனே அழைத்திடுது தி.மு.கழகம்
விழி இழந்தும் வாழலாம்
மொழி அழிந்தால் வாழ்வில்லை
தட்டிக் கேட்க ஆள் வேண்டாமா?
நான் வேண்டாமா சதவுக்கு!
சங்கம் கண்டார் முன்னவர்; தென்னவர்
பங்கப்படுகிறோம், இன்று. அவர், வழிவழி!
இனத்துக்குள்ள இயல்பினை
எவரே அழிக்க வல்லவர்கள்,
பொல்லாங்கெல்லாம் அழிந்திடவே
புதுமை வாழ்வு செழித்திடவே
வழங்கிடுவீர் வாக்குகளை
உதயசூரியன் வாழவைப்பான"

அன்பு உடன்பிறப்பே, அண்ணன் தந்துள்ள இந்த சஞ்சீவியை: சங்கநாதமாக்கு! முரசாக முழங்கிடு! போர்வாளாகக் கொண்டு சுழற்றிடு!

உன்னைத் துவளச் செய்யத்
துடிப்போர்க்கு
ஒடியட்டும் இடுப்பு!

மீண்டும் நாம் ஏறிக் கொண்டிருப்பது வெற்றி முகடு நோக்கித்தான்!

மாயை கண்டு மருளத் தேவையில்லை! நமது அமைப்பு வலிவானது! அணிவகுப்பு திறமானது!

மயக்க மூட்டுவோர் கண்டு தயக்கம் துளியும் தேவையில்லை!

அண்ணா தரும் அருமருந்தாம் அரிய மூலிகையை உணர்ந்திடு அதற்கு வெற்றியுண்டு என சிலிர்த்தெழு! குதித்தெழு!

வெற்றி வெற்றி வெற்றிதான் இதனை
வெறியர் எவரும் தட்டிப் பறித்திட
இயலாது

வீரர் குலத் திருவிளக்கோ தொடரட்டும் உம் தொண்டு இடாட்டும் உன் காடிகள் இழிகை யோர் பொய்க கற்றுக்கலை வாழ வெல்க நீ!

அன்புள்ள

மு.க.

05-06-1991

1738. வெற்றி நமதே! வீறுகொண்டெழுக!

உடன்பிறப்பே,

பொய் ஒரு நொண்டிக் குதிரை - கொஞ்ச தூரம் ஓடி விழுந்து விடும்! -

அதிலும் வஞ்சக நெஞ்சிலிருந்து கிளம்புகிற பொய் இருக்கிறதே அது ஒரு பொய்க்கால் குதிரை!

பளபளவென ஜிகினா மின்னும்! வண்ணம் ஜொலிக்கும்! மேளதாளம் முழங்க மேடையில் குதிக்கும்! விழா முடிந்தபிறகு குதிரையைக் கழற்றி வைத்துவிட்டு; அதுவரை பொய்க்காலில் ஆடியவர்; களைப்பாறப் போய்விடுவார்!

தேர்தல் நேரத்தில் ஒரு துரும்பைப் பிடித்துக் கொண்டாவது ஆதாயம் தேடிட வேண்டுமென்று காத்துக்கிடந்த "இ.கா. - அ.தி.மு.க - அணிக்கு ஒரு இரும்புத் துண்டே கிடைத்தது போல ராஜீவின் படுகொலை கிடைத்தாலும் கிடைத்தது பாவம்: அவர்களின் ஒரு பொய்யை மறைக்க அவர்களுக்கே ஒன்பது பொய் தேவைப்படுகிறது.

இருந்தாலும் அவர்களின் பொய்க்கால் குதிரை ஆட்டத்தை, தேசிங்கு ராஜனின் பஞ்ச கல்யாணிக் குதிரையின் ஓட்டத்தோடு ஒப்பிட்டுப் பாராட்ட சில ஏடுகள் இருக்கின்றன என்ற நம்பிக்கை அவர்களுக்கு நிரம்ப!

பொய்க்கால் குதிரை ஆட்டம் ஒரு சிறந்த கலை கிராமியக்கலை! நாடு புகழும் நாட்டுப் புறக்கலைகளில் ஒன்று!

அதற்காகப் பொய்க்கால் குதிரைப் பொம்மையை போர் புரியும் புரவி என வர்ணித்துப் பொய்மையின் உச்சாணிக் கொப்பில் நிற்போரின் கூற்றை ஏற்றிட இயலுமா? ஏற்பதுதான் அறிவுடைமையாகுமா?

புளுகர்கள் பரப்பும் பொய்ச் சகதியில் மக்கள் சிக்கிக் கொள்ளக் கூடாதென்றுதான் ஜூன் 14-ஆம் நாள் காலை

சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற தி.மு.க. தோழமைக் கட்சிக் கூட்டத்தில் ஐந்தாவதாக ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

"ராஜீவ் படுகொலை குறித்து. காங்கிரசார் - தங்கள் அரசியல் ஆதாயத்திற்காக, ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள எதிர்க்கட்சிகள் மீது வீண்பழி - சுமத்தி பொதுமக்களை ஏமாற்றி, தேர்தலில் எப்படியும் வெற்றி பெறக் கனவு காண்பது போலவே தமிழ் நாட்டிலும் எதிர்க்கட்சி மீது வீண்பழி சுமத்திடும் காரியத்தில் ஈடுபட்டிருப்பது தேர்தல் கமிஷன் நெறிமுறைகளுக்கு மாறாகவும், வன்முறை செயல்களுக்கான தூண்டுதலை ஏற் படுத்தக்கூடியதாகவும் இருக்கின்றது என்பதை இக்கூட்டம் எடுத்துக்காட்டுவதுடன், உண்மையான குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதற்குப் பதிலாக திசைதிருப்பும் வீணான விஷமப் பிரச்சாரத்தினால் உரிய பயன் விளையாமல் போகும் என்பதையும் இக்கூட்டம் சுட்டிக் காட்டுகிறது."

இந்தத் தீர்மானத்தின் நோக்கம் - தேர்தல் கமிஷன் நெறிமுறைகளை மீறி நடப்போர் மீது நடவடிக்கை முறைப்படி மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதும்; தேவையற்ற வன்முறைக் குத் திருவிழா கொண்டாட திட்டமிடும் தீய சக்திகளைத் தடுத்திட வேண்டுமென்பதும்; இவற்றுக்கு மேலாக உண்மைக் குற்றவாளி யார் என்பது உலகுக்கு அறிவிக்கப்பட்டு உரிய முறைப்படி தண்டிக்கப்படக் கூடிய வாய்ப்பை; திசை திருப்பும் செயல்களால் கெடுத்து விடக் கூடாது என்பதுமேயாகும்!

திட்டமிட்டு தி.மு.கழகத்தின் மீது எப்படியெல்லாம் சேறுவாரி இறைக்கிறார்கள்!

தமிழ் ஈழமக்கள், தங்களின் உரிமைகளுக்காகவும் அமைதியான வாழ்வுக்காகவும் நீண்டகாலமாகக் கொடுத்து வருகிற குரலுக்கு நமது ஆதரவு உண்டு என்றாலும்; எந்தவொரு போராளிக் குழுவும் தமிழ் மண்ணை வன்முறைக் களமாக்குவதை தி.மு.கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் ஏற்றுக் கொண்டதில்லை என்பது பலமுறை தெளிவாக்கப்பட்ட ஒன்று!

விடுதலைப்புலிகள் உள்ளிட்ட எல்லாப் போராளிக் குழுக்கள் மீதும் கழக அரசினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

தேதிவாரியாகப் பட்டியலிட்டு நான்கு மாதங்களுக்கு முன்பே வெளியிடப்பட்டு எல்லா ஏடுகளுக்கும் வழங்கப் பட்டிருக்கின்றன.

1989-ல் தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு தான் துப்பாக்கிக் கலாச்சாரம், வெடிகுண்டு கலாச்சாரம் தமிழ் நாட்டுக்கு இறக்குமதி ஆயிற்று என ஒரு அண்டப் புளுகு! ஆகாசப் புளுகு!

தி.மு.க. ஆட்சிக்கு வருவதற்கு முன்பு இராமநாதபுரத்தில் உச்சிப்புளி என்னுமிடத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த நான்கு கோடி ரூபாய் மதிப்புள்ள ஆயுதங்களைத் தோண்டி எடுத்துப் பறிமுதல் செய்தது தி.மு.க. ஆட்சியில் தான் என்ற உண்மையைப் புளுகு மணிகள் அந்தத் தோண்டிய பள்ளத்திலேயே போட்டுப் புதைத்து விட எண்ணுவதுதான் விந்தை!

வெடி மருந்து கலாச்சாரமும், துப்பாக்கிக் கலாச்சாரமும் தி.மு.க. ஆட்சியில் தான் இரட்டைக் குழந்தைகளாகப் பிரசவிக்கப்பட்ட தாம்! எவ்வளவு வடிகட்டிய பொய்யென்று பார்!

1984 ஆகஸ்டு 2-ஆம் நாள் சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் பயங்கர குண்டு வெடித்து; கட்டிடம் சிதறி, பயணிகளும் சிப்பந்திகளுமாக நாற்பது பேர் தலை நொறுங்கியும் - விழி பிதுங்கியும் - குடல் கருகியும் - உடல் சுக்கு நூறாகியும் பிணமலையாய்க் குவிந்தனரே: அப்போது எந்த ஆட்சி, தி.மு.க. ஆட்சியா? மீனம்பாக்கத்தில் வெடித்தது குண்டா? அல்லது மலர்ச் செண்டா? வெடிகுண்டு கலாச்சாரம் நரசிம்மாவதாரத்தைப் போல விமான நிலையத்தில் நாற்பது பேர் உயிர் குடித்தன்றோ அவதரித்தது? அன்று நடந்தது தி.மு.க. ஆட்சி அல்லவே!

1985 டிசம்பர் 23-ஆம் நாள் சென்னை பெசண்ட் நகரில் அரசு ஆதரவுடன் தங்கியிருந்த விடுதலைப்புலி இயக்கத்தின் ஆலோசகர் பாலசிங்கம் அவர்கள் வீட்டில் குண்டு வீசப்பட்டு, அது வெடித்து இருநூறு அடி சுற்றுக்குப் பாதிக்கப்பட்டதே அப்போது நடந்த ஆட்சி தி.மு.க. ஆட்சியா? அந்த வெடிகுண்டு கலாச்சாரம் எப்படி முகிழ்த்தது? ஏன்? ஏன்? யாரால், எவரால்?

1986 ஜனவரி 20-ஆம் நாள் திருவையாறு அருகே குடமுருட்டி ஆற்றுப் பாலத்தில் ஒரு வெடிகுண்டு வெடித்ததே; அப்போது நடந்தது தி.மு.க. ஆட்சியா?

1986 ஜூன் 4 ஆம் நாள் சென்னை சீரணி அரங்கில் நானும் பேராசிரியரும் சாதிக்கும் நாஞ்சிலாரும் கழக முன்னணியினரும் கலந்து கொண்ட பொதுக் கூட்ட நிகழ்ச்சியில், மேடைக் கருகில் பயங்கர ஒலியுடன் வெடிகுண்டு வெடித்ததே: அப்போது நடந்தது தி.மு.க. ஆட்சியா?

1986 ஜூன் 17 ஆம் நாள் அதிகாலை 2.45 மணியளவில் சட்டமன்ற உறுப்பினர் தம்பி இரகுமான்கான் இல்லத்தை நோக்கி வெடிகுண்டு வீசப்பட்டு சிதறியதே: அப்போது நடந்தது எந்த ஆட்சி? தி.மு.க. ஆட்சியா?

1986 டிசம்பர் 11 ஆம் நாள் மதுரை தபால் நிலையத்தில் ஒரு குண்டு வெடித்து ஒருவர் உடல் பல துண்டுகளாகச் சிதறியதே! ஐவர் படுகாயமுற்றனரே! அப்போது தி. மு.க. ஆட்சியா நடைபெற்றது.

1987 ஜனவரி முதல் நாள் சென்னையில் கலைவாணர் அரங்கம் அருகில் சக்தி வாய்ந்த ஒரு குண்டு வெடித்ததில் பீவிஜான் என்ற பெண்மணி தலை துண்டாகி இறந்தபோதும், அவர் கணவர் கால் துண்டிக்கப்பட்ட போதும் நடந்தது எந்த ஆட்சி? தி.மு.க. ஆட்சியா?

அதற்கும் சில நாட்களுக்கு முன்பு இசை அமைப்பாளர் கனேவு வீட்டுக்கு வெடிகுண்டு பார்சலே வந்து, அதைப் பிரித்தபோது அவர் காயமுற்றாரே: அப்போது நடந்தது யாருடைய ஆட்சி? தி.மு.கழக ஆட்சியா?

1987 ஜனவரி 3 ஆம் நாள் எழும்பூர் ரயில் நிலையம் லோகோ வெட அருகே குண்டு வெடித்து சில பகுதிகள் சிதறியதே: அப்போது யார் நடத்தியது ஆட்சி தி.மு.க.வா?

1989 ஏப்ரல் 10 ஆம் நாள் சென்னை கத்திப்பாரா சந்திப்பு நேரு பெருமான் சிலையின் பீடம் சக்தி வாய்ந்த வெடிகுண்டு ஒன்றால் தகர்ந்து போனதே; அப்போது நடந்தது தி.மு-க. ஆட்சியா?

1968 ஏப்ரல் 11 ஆம் நாள் கொடைக்கானல் தொலைக்காட்சி நிலையத்தைத் தகர்க்க வெடிகுண்டு வைத்து, அதில் திருச்சி மாறன் என்பவர் அதே இடத்தில் மாண்டாரே: அன்று நடந்தது எந்த ஆட்சி தி.மு.க. ஆட்சியா?

துப்பாக்கிக் கலாச்சாரம், வெடிகுண்டுக் கலாச்சாரம் 1989க்கு பிறகுதான் வந்தது தமிழகத் திற்கு என்பவர்கள்; 1983ல் இலங்கைத் தமிழ்ப் போராளிகளுக்கு முப்பதுக்கு மேற்பட்ட ராணுவப் பயிற்சி முகாம்களை தமிழகத்தில் அமைத்துக் கொடுக்கவில்லையா? அவற்றில் ஒரு முகாம் திரு பெரும்புதூரிலேயே இருந்திடவில்லையா! கோடிக்கணக்கான ரூபாய் மத்திய அரசும் மாநில அரசும், போராளிகள் ஆயுதம் வாங்குவதற்காகக் கொட்டிக் கொடுக்கவில்லையா? இவற்றை நாம் அப்போது கூடாது எனக் கூறியதில்லை!

ஆனால் இவர்கள் எல்லாவற்றுக்கும் துணையிருந்து விட்டு - தொடக்க விழா நடத்திவிட்டு-1

ஜனவரி 30 ஆம் நாள் விடுதலைப் புலிகளின் பெயரைச் சொல்லியே கழக ஆட்சியைக் கலைத்து விட்டு - மார்ச் 5 ஆம் நாள் (அதாவது 35வது நாள்) அவர்களை டெல்லிக்கு வரச் சொல்லி அவர்களுடன் சுமுகமாகப் பேசி எதிர்காலத்திற்கான திட்டமும் தீட்டுகிறார்கள் என நால்: (இலங்கை தமிழர் வாழ்வில் அமைதி ஏற்பட எடுத்த முயற்சி மகிழ்ச்சிக்குரியது எனினும்) ரன்: இந்த இரட்டை நிலை? என்ற கேள்வி, இயல்பாகவே எழக்கூடிய ஒன்றல்லவா?

உடன்பிறப்பே; இந்த விபரங்களைச் சொல்லி -மக்களை மாற்றார் பரப்பியுள்ள பொய்மை - சேற்றிலே இருந்து கரையேற்றும் முயற்சிகளை மேற்கொள்க!

வீண்பழி சுமத்தி தேர்தல் ஆதாயம் தேட நினைப்போரின் தீய எண்ணம் நிச்சயம் பட்டுப் போகும். எனவே வீறு கொண்டெழுக! மகாளை, விவேகபுரிக்கு அழைத்துச் செல்க வெற்றி நமதே!

அன்புள்ள

மு.க.

06-06-1991

1739. நெருக்கடி காலக் கடிதங்கள் - 1 : ஒரு தொண்டனின் வேண்டுகோள்!

(1976இல் நெருக்கடி காலத்தின்போது கழக ஆட்சி கலைக்கப்படுவதற்கு சில நாட்களுக்கு முன்பும் - கலைக்கப்பட்ட பின்பும் - கலைஞர் அவர்கள் முரசொலியில் எழுதிய கடிதங்கள் நெருக்கடி காலக் கடிதங்கள் என்ற தலைப்பில் தொடர்ந்து வெளிவரும்.

இன்று வெளியிடப்படுவது 6.1.1976 அன்று முரசொலியில் வெளிவந்த கடிதம் ஆகும்.)

உடன்பிறப்பே!

கோவை மாநாட்டு முடிவுகளைச் செயல்படுத்திக் கொண்டிருப்பாய் என்ற நம்பிக்கையோடு இக்கடிதம் எழுதுகிறேன். மாநாடு முடிந்ததும், அதன் சிறப்புக்களை உண்மையாகவே மனப்பூர்வமாக உணர்ந்திருக்கிற சிலரும்கூட, அரசியல் காழ்ப்பின் காரணமாக வழக்கம் போல் நம் மீது பாய்ந்திருக்கிறார்கள். அவர்களது ஆத்திரத்தை மேடையில் கொட்டித் தீர்க்கிறார்கள். எழுத்தில் காட்டுகிறார்கள். கேலிச் சித்திரம் போட்டுத் தங்கள் சினத்தை வெளிப்படுத்துகிறார்கள். அறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கடி சொல்வதை இப்போது நான் மீண்டும் உனக்கு நினைவூட்ட விரும்புகிறேன். சிரங்கு பிடித்தவனுக்கு அரிப்பு எடுக்கும். அவன் கை சும்மா இருக்காது. சொறியத் தொடங்குவான். அதற்குப் பிறகு அந்த இடமெல்லாம் எரிச்சலும் சேர்ந்து எடுக்கும். அந்த நிலையில்தான் சில பேர் நம்மீது காய்ந்து விழுகிறார்கள்.

மாநில மாநாட்டில் மிகத் தெளிவாக நிலைமைகளை எடுத்துக்காட்டி நாடாளுமன்றத்திற்கும், சட்டப் பேரவைக்கும் ஒரே சமயத்தில் 1971-ல் நடந்தது போல தேர்தல் நடைபெற வேண்டுமென்றும், சுதந்திரம் அடைந்த பிறகு இதுவரையில் தமிழ்நாட்டில் குடியரசுத் தலைவர் ஆட்சி

ஏற்பட்டதில்லையென்றும், மக்களாட்சியின் மாண்பு கருதி குடியரசுத் தலைவர் ஆட்சியை நுழைக்க வேண்டாமென்றும் மத்தியில் உள்ளவர்களைக் கேட்டுக் கொண்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மத்தியில் உள்ளவர்கள் அந்தத் தீர்மானம் பற்றி எந்தவிதமான ஏடாகூடமான பதிலையும் சொல்லவில்லை. அவர்கள் எந்த இறுதியான முடிவையும் இன்னும் அறிவிக்கவில்லை. அதற்குள் தமிழ்நாட்டிலுள்ள ஜனநாயகவாதிகள் (?) குதிக்க ஆரம்பித்து விட்டார்கள். அல்ல; அல்ல! கொதிக்க ஆரம்பித்து விட்டார்கள்.

நாடாளுமன்றத்தை நீடிக்கலாம் - தமிழக சட்டப் பேரவையை நீடிக்கக் கூடாது! வேறு எந்த மாநிலத்திலே வேண்டுமானாலும் சட்டப் பேரவையை நீடிக்கலாம். தமிழ்நாட்டில் மட்டும் கூடவே கூடாது.

இப்படிச் சில தமிழ்நாட்டு அரசியல் விதூஷகர்கள் இப்போது முழங்குகிறார்கள். நமது கழகத்தின் முறையீடு; இப்போதே பொதுத் தேர்தல் வரவேண்டுமென்பதுதான்! தேர்தலைப் புறக்கணிக்க வேண்டுமென்பது நமது நோக்கமல்ல. இதைப் புரிந்து கொண்டும், புரியாதவர்களைப் போலப் பேசுகிறார்கள்; எழுதுகிறார்கள் என்றால் - எப்படியோ கழக ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்து விட வேண்டுமென்பதே அவர்களின் நோக்கம் - குறிக்கோள்!

மூன்றாண்டுகட்கு முன்பு, இன்னும் மூன்றே நாள் என்று ஆரூடம் கணித்தார்கள். பிறகு மூன்று வாரத்தில் முடிந்து விடும் என்று குட்டிச் சாத்தான் குரலிலும், பிறகு மூன்றே மாதங்கள் தான் என்று குடிலர்கள் பாணியிலும் கோஷமிட்டார்கள்.

கழக ஆட்சி, ஒன்பது ஆண்டுகள் நிலைத்து நீடித்துக் கொண்டிருக்கிறது. இந்த எளியவனும் ஏழாண்டுக் காலமாக முதலமைச்சர் பொறுப்பில், தமிழ்நாட்டு மக்களின் நல்வாழ்த்துக்களோடு இருந்து வருகிறேன். பதவிப் பொறுப்புக்களை, மக்களுக்குப் பணிபுரியும் வாய்ப்பாகத் தான் கருத வேண்டும் என்ற இலக்கணத்திற்கேற்பக் கழக ஆட்சி நடைபெற்று வருகிறது. 1967-ல் ஆட்சி அமையும் போது, தமிழ் மரபும், வரலாறும், இலக்கியமும், காப்பாற்றப்பட நாங்கள் ஆட்சி பீடம் ஏறுகிறோம் என்றும் சமதர்ம சமுதாயத்தை உருவாக்குவதே

எங்கள் நோக்கம் என்றும் அண்ணா அவர்கள் கூறியதையொட்டி நமது பணிகள், தமிழகத்தில் தொடர்ந்து நடந்து வருகின்றன.

பெரியதோர் அந்தஸ்து கிடைத்து விட்டதென்றோ, புதிய பவிசு வந்து விட்டதென்றோ; அய்யோ; இந்தக் கிரீடம் போய்விட்டால் நமது கழகத்தின் கீர்த்தியே போய் விடுமென்றோ - நாம் யாரும் அழுது புலம்பிக் கொண்டிருக்கவில்லை.

அண்ணா அவர்கள், கடைசியாக காஞ்சி இதழில் தம்பிக்கு எழுதிய கடிதத்தில்,முதலமைச்சர் பதவியென்பது சூழ்நிலையின் கைதி என்ற கருத்தை மிக்க மனவேதனையுடன் வெளியிட்டதை யார் மறந்திருந்தாலும் அந்தப் பொறுப்பிலே இப்போது இருக்கிற நான் மறந்து விடவில்லை. அனுபவ ரீதியாக ஆறு ஏழு ஆண்டுகட்கு மேலாக அண்ணா குறிப்பிட்ட அந்த உண்மையை உணர்ந்தும் வருகிறேன்.

உடன்பிறப்பே,

இந்த ஒன்பதாண்டு காலக் கழக ஆட்சியில், மாநில அரசின் சக்திக்கு அதிகமாகவே, மக்களுக்கான முற்போக்குத் திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறோம். புரட்சிகரமான சட்டங்களை உருவாக்கி, நடைமுறைப்படுத்தியிருக்கிறோம். சமூக நலப்பணிகள், தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர்க்கான மேம்பாட்டுச் செயல்கள், சாதனை வடிவங்களில் ஏராளம்! ஏராளம்! ஒன்றா - இரண்டா; சாதனைகள் - இந்த ஒரே கடிதத்தில் எழுதி முடித்து விட!

பிரதமரின் இருபது அம்சத் திட்டங்கள் தமிழகத்தில் எவ்வாறு எந்தக் காலத்திலிருந்து, எந்த வேகத்தில் நிறைவேறத் தொடங்கியுள்ளன என்ற விரிவான பட்டியலையே சட்டப் பேரவையில் நான் இரண்டு மணி நேரம் ஆற்றிய உரையில் வரிசைப்படுத்தி வழங்கியிருக்கிறேன்.

கழகம் வலியுறுத்தி வருகிற கொள்கை கோட்பாடுகள் மத்திய அரசுக்கு மாறுபட்டதாக இருப்பினும், மத்திய அரசின் தாக்கீதுகளை நிறைவேற்றுகிற நிர்வாகப் பொறுப்பில், மத்திய - மாநில உறவு கெடக்கூடிய எந்த நிகழ்ச்சியும் ஏற்பட்டது கிடையாது.

சட்டம், ஒழுங்கு, அமைதிக ஊறு நேரா வண்ணம் பாதுகாக்கும் மாநிலமாகவே தமிழகம் இருந்து வருகிறது.

காந்தியடிகளின் கொள்கைகளைச் செயல்படுத்துவதிலும் மாற்றுக் கட்சியினராயினும், மதிப்புமிக்க மக்கள் தலைவர்களைப் போற்றி மரியாதை செலுத்துவதிலும் தமிழகம் முன்னணியில்தான் நிற்கிறது.

பாகிஸ்தானை எதிர்த்து இந்தியா, போர்க்கோலம் பூண வேண்டிய சூழ்நிலை ஏற்பட்ட போது ஆறு கோடி ரூபாய் நிதி வசூலித்து பிரதமரை அழைத்து அவர் கையில் வழங்கிய மாநிலமும் தமிழ்நாடுதான்.

இவ்வளவுக்கும் பிறகு, இங்குள்ள சிலரால் நாம் தேச விரோத சக்திகள் என்று அழைக்கப்படுகிறோம். அந்நிய நாட்டுத் தொடர்பு கொண்டவர்கள் என்று அவதூறு செய்யப்படுகிறோம்.

ஏன்? எதற்காக? தமிழ்நாட்டில் உள்ள சில அரசியல்வாதிகள் எதையாவது ஒரு பழியை நம்மீது சுமத்தி, நமது ஆட்சிக்கு முடிவு கட்டப் பார்க்கிறார்கள்.

ஆட்சியிலிருந்தால்தான் - அல்லது ஆட்சி வரும்; ஆட்சி வரும்! என்று ஆசை காட்டினால்தான் கட்சியிருக்கும் என்ற நிலையிலே உள்ள சில கட்சிகள் தமிழ்நாட்டில் இருக்கின்றன. ஆனால் நமது கழகத்தின் நிலை அதுவல்ல; தியாகராயர் காலத்திலே உருவாக்கப்பட்ட உணர்வு இது! இந்த உணர்வுதான் நமது கழகத்தின் மூல பலம். அப்போதும் நீதிக்கட்சியின் கையிலே ஆட்சி வந்தது; பிறகு மாறியது. ஆனால், நம் இயக்கத்தின் இழையோடும் உணர்வை சிறிதும் சிந்தாமல் சிதறாமல் பெரியார் அவர்களும், அவரது பெரும் படைத் தளபதியாக விளங்கிய பேரறிஞர் அண்ணா அவர்களும், அவர்கள் வழி நின்று நாமும் காப்பாற்றியிருப்பதால்தான், தமிழ்நாட்டில் தமிழன் இன்று தலை நிமிர்ந்து பீடு நடை போடுகிறான்.

ஆகவே, அவசரக்காரர்கள் - ஆத்திரக்காரர்கள் விரும்புவது போல் கழகம், ஆட்சியில் பொறுப்பேற்றுப் பணிபுரிய முடியாவிட்டாலும் கழகத்தின் பணிகள் முடிந்துவிட்டதாகப் பொருள் அல்ல! இன்னும் சொல்லப்போனால் தம்மீது ஏற்றி வைக்கப்பட்டிருந்த சுமை, இறக்கப்பட்டு, மேலும் வேகமாகவும் விறுவிறுப்பாகவும் இலட்சியப் பயணத்தில் ஈடுபட முடியும்.

கர்மவீரர் காமராஜர் முதலமைச்சராக இருந்தார். பதவியை விட்டு விலகினார். விருதுநகர் தொகுதி தேர்தலில் தோற்றுக்கூடப்

போனார். அதற்காக அவர் தன் இலட்சியங்களை விட்டு விட்டு ஒதுங்கியா ஓடிவிட்டார்? அவருடைய செல்வாக்கோ, பெருமையோ குறைந்தா விட்டது? இல்லையே.

பெரியவர் பக்தவத்சலம் முதலமைச்சராக இரண்டு மூன்று ஆண்டுக் காலம் இருந்தவர்தானே - அமைச்சர் பதவியில் பல ஆண்டுக் காலம் இருந்தவர்தானே - இன்று பதவியில்லை என்பதால் அவர் என்ன சீந்துவார் அற்றா போய் விட்டார்!

தனிப்பட்டவர்களின் செல்வாக்கே பதவியிழப்பின் காரணமாகக் குறைவதில்லையென்றால்; ஏறத்தாழ அறுபதாண்டுக்கால உணர்வுகளை அடிப்படையாகக் கொண்ட மக்கள் இயக்கமாம், தி.மு.கழகத்தின் பெருமையும், அது தமிழகத்திற்கு எவ்வளவு தேவை என்பதும் குறைந்துவிடக் கூடியவைகளா என்பதை அரசியல் அறிவு படைத்தோர் உணர்ந்திடத் தவற மாட்டார்கள்.

உடன்பிறப்பே, உளக்கு நான் எழுதியுள்ள இந்தக் கடிதத்தைப் பற்றி மாற்றார் எப்படியெல்லாம் விமர்சிப்பார்கள் என்று எனக்கு நன்றாகத் தெரியும்.

கருணாநிதி, முடிவைத் தெரிந்து கொண்டார், கதை அளக்கிறார்.

தர்பாரில் இருந்து இறங்கத் தயாராகிறார்.

கழக ஆட்சியின் காலம் முடிகிறது. கருணாநிதியே அறிவிக்கிறார்.

இப்படியெல்லாம் பேசுவார்கள்; எழுதுவார்கள். ஆனால் ஒன்று உடன்பிறப்பே! நாம், நமது லட்சியங்களை நிறைவேற்றத்தான் வாழ்கிறோமேயல்லாமல்; வெறும் பதவிகளுக்காக அல்ல!

என்னைப் பொறுத்தவரையில், பதவி முடிவு மட்டுமல்ல; வாழ்வின் முடிவே ஏற்படப்போகிறது என்று தெரிந்தாலும் அப்போதும் என் நினைவு உள்ளவரையில், பெரியாரையும் அண்ணாவையும் அவர்கள் தந்த இலட்சியங்களையும் கொள்கையளையுந்தான் கூறிக் கொண்டிருப்பேன். மரணப் படுக்கையில் என் நாக்கு அசையும் சக்தியை இழந்துவிடுமானால், என் நெஞ்சத் துடிப்புக்கள், கழகத்தின் பெருமைக்குரிய கொள்கைகளையே ஒலித்துக் கொண்டிருக்கும்.

அம்மா! அப்பா! என்று சொல்லி உயிர் பிரியப் போவதில்லை. அண்ணா! அண்ணா! என்று சொல்லித்தான் இந்த உயிர்த் துடிப்புகள் இறுதியாக அடங்கும்.

அந்த மன உறுதியோடுதான் நானும், கழகத்தின் முன்னணித் தலைவர்களும், ஏன்; எங்களை விட மிக்க உறுதியுடன்; உடன்பிறப்பே! நீயும் சேர்ந்து இந்தக் கழகத்தை நடத்துகிறோம்!

இடையில் வந்துபோகும் பதவிகளுக்காக, இலட்சியத்தைக் கைவிடுபவன் சமுதாயத்தில் புரையோடிவிட்ட புண்ணாகத்தான் கருதப்படுவான்.

இங்கிலாந்தின் முன்னாள் பிரதமர் கிளாஸ்டன் என்பவரின் மகளுக்கு, லார்டு ஆக்டன் எழுதிய கடிதமொன்றில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்.

கட்சிக் கொள்கைகளின் ஒருங்கிணைப்பு என்று நான் கருதுவது, ஒரே கொள்கையைக் கடைப்பிடிக்கும் பலர் ஒன்று சேர்ந்திருப்பதால் அல்ல. ஒருவருக்கொருவர் செய்து கொள்ளும் உதவிகள், கடமைகள் பற்றி - இவைகளால்தான்! கட்சியின் நியாயமான கொள்கைகளில் இருந்து திசைமாறி கட்சியின் அமைப்பு முறைகள் எனக் கருதும் ஏற்பாடுகளைக் கடைப்பிடிக்கும் காலம் உள்ளது. ஒவ்வொரு தலைசிறந்த தலைவனும் தன் நண்பர்களையாவது, நட்பையாவது உயர்ந்த கொள்கைகளுக்காகத் தியாகம் செய்ய வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

கழகத்தின் தலைமைப் பொறுப்பில் இருக்கிற எனக்கும், நாவலருக்கும், பேராசிரியருக்கும் இதுபோன்ற கேள்விகட்கு விடைகாண வேண்டிய சூழ்நிலைகள் ஏற்படத்தான் செய்கின்றன. மூவரும் கூடிப் பேசுகிறோம்; ஜனநாயக ரீதியில் மற்றவர்களையும் கலந்து விவாதிக்கிறோம். கொள்கைதான் பெரிது என்ற முடிவுக்குத்தான் வருகிறோம். அதற்காக நண்பர்களையோ, அல்லது நட்பையோ நாங்கள் முதல் வரிசையில் வைத்துப் பார்க்காமல் கொள்கையைக் காப்பாற்ற, கொள்கைக்காக தியாக வரலாறு படைத்துள்ள கழகத்தைப் காப்பாற்ற அந்த நண்பர்களை இழந்திடவும் தயாராகிறோம் - ஆட்சியில் ஒரு கட்சி இருக்கும் போது இந்தச் சந்தர்ப்பங்கள் அடிக்கடி ஏற்படுவது வாடிக்கைதான்!

அந்தச் சங்கடத்திலிருந்தும் கட்சியை விடுவிக்க, தமிழ்நாட்டில் உள்ள மாற்றுக் கட்சியினர் பகீரத் பிரயத்தனங்களில் ஈடுபடுகின்றனர்.

அப்படியும் நடக்கலாம்; அல்லது தமிழ் மக்கள் விரும்புவது போலவும் நடக்கலாம். எந்த முடிவையும் எதிர்பார்த்து நான் உனக்கு இந்த மடலை எழுதவில்லை. எந்த முடிவானாலும், அண்ணா சொன்ன; எதையும் தாங்கும் இதயம் வேண்டும் என்பதை நினைவுபடுத்தத்தான் இதை எழுதுகிறேன். கடற்கரையில் அண்ணன் துயில் கொள்ளும் இடத்தில் பொறிக்கப்பட்டுள்ள எதையும் தாங்கும் இதயம் என்ற அந்த மணிவாசகங்களை; என் உடன்பிறப்பே! நீ மறந்துவிடாதே நினைவில் ஆழமாக பதிய வைத்துக் கொள்! ஒன்று சொல்வேன்;

அமைப்பு ரீதியான கழகம்;
ஆடை அணிந்துள்ள உடலைப்போல!
அதில் ஆவி நிகர்த்தது கொள்கை!
பதவி என்பது அணிகலன்!
அணிகலன் இன்றி வாழ முடியும்.
கொன்கையில்லையேல் ஆவி இல்லை;
ஆடையில்லையேல் மானம் போகும்!

இதனை உணர்ந்து தொண்டாற்றுமாறு, என் உடன்பிறப்பே! உன்னைப் போன்ற ஒரு தொண்டன் வேண்டுகிறேன்.

அன்புடன்,

6-1-76 மு. க.

26-06-1991

1740. நெருக்கடி காலக் கடிதங்கள் - 2 : தங்கம் எது? பித்தனை எது? வீரர்கள் பின் தொடரட்டும்!

(1976-ஆம் ஆண்டு நெருக்கடி நிலையை எதிர்த்தமைக்காக தி.மு.கழக ஆட்சி கலைக்கப்பட்டபோது - கலைப்பதற்கு முன்பும், கலைத்த பின்பும் முரசொலியில் கலைஞர் எழுதிய கடிதங்கள் நெருக்கடி காலக் கடிதங்கள் என்ற தலைப்பில் தொடர்ந்து வெளிவரும். ஆட்சி கலைப்பதற்கு ஒரு நாளைக்கு முன்பு 29-1-1976-ல் கலைஞர் எழுதிய கடிதம் இது)

உடன்பிறப்பே!

உங்கள் நாட்கள் எண்ணப்படுகின்றன என்று சட்டப்பேரவையிலே காங்கிரஸ் கட்சியின் கொறடாவாக இருந்த அருமை நண்பர் விநாயகம் அவர்கள் முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களைப் பார்த்துச் சொன்னபோது, உடனே அண்ணா அளித்த பதில் என்ன தெரியுமா? என் அடிகன் அளந்து வைக்கப்படுகின்றன என்பதுதான். இந்த வாக்கியங்களைப் பரிமாறிக் கொண்டவர்கள் இப்போது இல்லை. ஆனால் அந்த வாக்கியங்கள் நம் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. மறைந்தும் மறையாத மாமேதையாம் அறிஞர் அண்ணா அவர்கள், நண்பர் விநாயகம், நமது தி.மு.கழகத்தில் சேர்ந்தபோது நம்மிடையே இல்லை. இதை எதற்காகச் சொல்ல வருகிறேன் என்றால்; கழக ஆட்சி, நாட் கணக்கில் முடிந்துவிடும் என்று சீற்றத்தோடு கூறிய நண்பர் விநாயகமே, அதே தி.மு.கழகத்தின் உறுப்பினராகத் தன்னை ஆக்கிக்கொண்டு, கொள்கை முழக்கமிடத் தொடங்கினார்.

இப்போது, சில பத்திரிகைகளை எந்தப் பக்கம் புரட்டினாலும், தி.மு.க. ஆட்சி இன்னும் ஐம்பது நாள் - நாற்பது நாள் - முப்பது நாள் - என்று யாராவது ஒரு எதிர்க்கட்சித் தோழர் அல்லது தலைவர்

பேசியதாகக் கொட்டை எழுத்துச் செய்திகளைத்தான் காண முடிகிறது.

ஆட்சிக்கு யார் வேண்டுமானாலும் நாள் குறிக்கலாம். ஏன்; என்னருமைத் தோழர்கள் என் ஆயுளுக்கு வேண்டுமானாலும் நாள் குறிக்கலாம் - ஆனால் கட்சிக்கு நாள் குறிக்க, இதுவரை யாரும் பிறக்கவுமில்லை; இனிப் பிறக்கப் போவதுமில்லை.

உடன்பிறப்பே! நான் எழுதும் கடிதங்களில் கோடிட்டுக் காட்டப்படும் பொறுமை - அமைதி - இவைகளையெல்லாம் இனிமேல் ஏற்றுக் கொள்ள முடியாது என்று நீ எழுதும் கடிதங்கள் நாள்தோறும் என் எதிரில் குவிந்த வண்ணமிருக்கின்றன. என் செய்வது; என்னைப்பற்றிச் சில பெரிய மனிதர்கள் தரக்குறைவாகவாகப் பேசுவதை; நீ உன்னைப் பற்றிப் பேசுவதாகவே எடுத்துக் கொள்கிறாய். காரணம்; நீ - என்னோடு கலந்து விட்டிருக்கிறாய். என் உணர்வுகளோடு ஒன்றிப் போயிருக்கிறாய். என்னோடு சேர்ந்து வளர்ந்திருக்கிறாய். என் மீது தூசி பட்டாலும் பெரிய தூண்பட்டது போலத் துடிக்கின்ற என் தாயின் நெஞ்சத்தை நீயும் பெற்றிருக்கிறாய் - அதனால் குமுறுகிறாய்! கொந்தளிக்கும் கடலாகிறாய்! கோடையிடியெனப் பதில் முரசு கொட்டுவேன்; என்று கர்ச்சிக்கிறாய்! உன் அன்புக்குத் தலை தாழ்த்துகிறேன். உன் வீரத்துக்கு வாழ்த்துக்களைப் பொழிகிறேன். சந்தர்ப்பவாதமில்லாத - சபலம் தலை காட்டாத - சலனத்துக்கு ஆட்படாத - உன் கள்ளங் கபடமற்ற கட்சி வெறிக்கு, கோடானுகோடி வணக்கம் செலுத்துகிறேன்.

சாக்கடையோரத்திலே, நடக்கும்போது, அந்தத் துர்நாற்றத்தைச் சமாளிக்க, உன் கைக்குட்டையில் சாக்கடைத் தண்ணீரை ஊற்றி நனைத்து அதனை மூக்கிலே முகர்ந்து கொண்டா போவாய்? மாட்டாய்! மலர் ஒன்றை - அல்லது மணங்கமழ் பொருள் ஒன்றை - எதுவுமில்லையேல் கையொன்றை மூக்கருகில் வைத்துக் கொண்டு தானே அந்தச் சாக்கடை நாற்றத்தை சமாளிக்கிறாய்! அதுபோலத்தான்; நம்மை தாக்கப் புறப்பட்டிருக்கும் சந்துமுனைச் சிந்துபாடிகளை நாம் சமாளிக்க வேண்டுமேயல்லாமல் நாமும் போட்டிக்கு லாவணி பாடத் தொடங்கிவிட்டால், அரசியலுக்குரிய இலக்கணமே அழிந்துவிடும்.

யார் தாக்குகிறார்கள் நம்மை? நம்மால் பல்வேறு பயன்களைப் பெற்றவர்கள் தான் தாக்குகிறார்கள். நாட்டுக்குத் தெரியாதா என்ன? ஊர் அறியா ரகசியமா அது? வேங்கைகள் வேதாந்தம் பேசுகின்றன காட்டில்; என்றால் அது ஒரு அதிசயம்! ஆனால் நாட்டில் சில அரசியல்வாதிகள் நாணயம் பற்றிப் பேசப் புறப்பட்டிருக்கிறார்கள்; இது ஒன்றும் அதிசயமல்ல!

நாட்கள் எண்ணப்படட்டும். பரவாயில்லை. அப்படி எண்ணப்பட்டு முடிந்து போன பிறகு ஆட்கள் நம்மோடு எத்தனைபேர் இருக்கிறார்கள் என்பது தான் முக்கியம்! அதற்காகவாவது அப்படி ஒரு சோதனை வந்தால் அதனை நான் பெரிய பரிட்சையாகவே கருதுவேன். அந்தப் பரிட்சையில் தேறுகிறவர்கள்தான் பத்தரை மாற்றுத் தங்கங்கள்! மற்றவை பதவி, பெருமை, சலுகை, சந்தர்ப்பம் இவைகளுக்காக இருந்த பித்தளைகள்!

இந்த இரண்டில்; நீ பத்தரை மாற்றுத் தங்கம் என்பதால்தான், நான் எதையும் தாங்கத் தயாராக இருக்கிறேன்.

கோழைகள் விலகட்டும். வீரர்கள் என் பின் தொடரட்டும் என்னும் உணர்ச்சிமிகு வாசகத்தை அண்ணாவின் சந்திரமோகன் நாடகக் காவியத்திலே கேட்டிருப்பாயே, நினைவிருக்கிறதா? அதனை நெஞ்சில் பதிய வைத்துக்கொண்டு இலட்சியப் பயணத்தை மேற்கொண்டிருப்பவர்கள் தான் நாம். நம் பின்னால் நடந்து வருகிறவர்களில் பலவகையினர் உண்டு. காடுமேடுகளைத் தாண்டிடவும் அஞ்சாது நம்மோடு அணிவகுத்து வருவர். காட்டாறுகளைக் கடந்திடவும் துணிந்து நம்மோடு தொடர்வர்.

வழியில் சற்று களைப்பாற ஒரு மரநிழல் கிடைக்கக்கூடும்.

அந்த நிழலையே நிரந்தரம் என நினையாமல் நம் பயணத்தை மேலும் தொடரும்போது, நிழல் சுகத்தை விட்டுப் பிரியமுடியாதவர்கள், நீங்கள் செல்லுங்கள் நாங்கள் இங்கேயே இருக்கிறோம் என்று நம்மை வழியனுப்பி வைப்பார்கள்.

அவர்கள் ஒருவகையினர்.

இடையில் ஏற்பட்ட இன்ப சுகத்திற்காக இலட்சியப் பயணத்தைத் துண்டித்துக் கொள்பவர்கள் அவர்கள். தாங்கள் எடுத்த முடிவுக்குக் காரணமும் தேடுவார்கள். தங்கள்

இயலாமையை மறைக்க நமது இலட்சியத்தின் மீதே பழியையும் போடுவார்கள்.

இன்னும் ஒரு வகையினர் நம் தோள் மீதே ஏறிக்கொண்டு வந்து, நாம் கடந்து வந்த கடினமான பாதைகளையெல்லாம் அவர்களும் கடந்து வந்ததாகக் கூறிக் கொண்டு வழியில் அவர்களுக்குத் தேவையான இடத்தில் இறங்கிக் கொண்டு, அவர்களைச் சுமந்து வந்த நமது தோளையும் இழித்துப் பேசுவார்கள்.

தோளா அது! அந்தத் தோள் எழும்பு குத்தி என் தொடையெல்லாம் வலிக்கிறது

என்று தன்னைத் தூக்கிச் சுமந்த தோளைப் பற்றி ஒரு புகார்த் தொகையறாவே பாடி முடிப்பார்கள்.

இலட்சியத்தை அடைய இன்னும் எவ்வளவு தொலைவு செல்ல வேண்டும்? இப்போது நாம் ஏறியிருக்கிறோமே; படகு! - இதுவே நம் இலட்சியமல்லவா? என்று படகுச் சவாரியிலேயே திருப்தி அடைகிறவர்களும் உண்டு.

பைத்தியக்காரா! படகுப் பயணம் நமது இலட்சியமல்ல! பயங்கரமான ஆற்றைக் கடக்க இந்தப் பயணத்தை மேற்கொண்டிருக்கிறோம். படகு, கரையை அடைந்ததும், அதன் பிறகு அதோ தெரிகிறதே; அந்த உயர்ந்த மலை முகடு - அதன் மீது ஏறி அடுத்த பக்கத்தில் இறங்க வேண்டும். அந்தப் பக்கத்தில் அடர்ந்த காடு உண்டு. அங்கே கொடிய விலங்குகள் நம்மைச் சூழவும் கூடும். அவைகளைச் சமாளித்துச் சென்றால், பாழடைந்த இருட்குகையொன்று பாம்புபோல வளைந்து நெளிந்து கிடக்கும். அந்தக் குகையையும் கடந்து சென்ற பிறகே நமது இலட்சியத்தின் முகடு தென்படும். அதன் பிறகே நம் பயணம் முடிவடையும். அதற்கிடையே இந்தப் படகுப் பயணத்தையே நமது குறிக்கோள் என்று கருதி விடாதே!

என்று சொல்லத்தான் வேண்டியிருக்கிறது.

ஏ, அப்பா! அப்படியா? இன்னும் இவ்வளவு சிரமங்கள் இருக்கின்றனவா? எனக்கு வேண்டாம் வீண் தொல்லை!

என்று படகிலிருந்து ஆற்றில் குதித்து விடுகிறவர்களும் இருக்கிறார்கள்.

நீந்திச் சென்று வேறு கரை சேரலாம் என்று குதித்தவர்கள் கை, கால் அசந்து மூச்சற்று மிதந்து கொண்டிருப்பதையும் பார்க்கிறோம். குதித்த வேகத்தில் சேற்றில் அழுந்திப் போனவர்களுக்காகப் பரிதாபப்பட்டு விட்டு, நம் பயணத்தைத் தொடர்ந்து கொண்டு மிருக்கிறோம். நாம் ஏறியுள்ள படகு, எதிர் கரையை அடையும். அதன் பிறகு நாம் கடக்க வேண்டிய பாதைதான், இதுவரையில் கடந்து வந்த பாதையைவிடக் கடினமானது.

அதைக்கண்டு மலைத்திடுபவன் வீரனாகான். எந்த ஒரு இலட்சியத்தையும் அடைய புறப்பட்ட இடத்தில் எத்தனைபேர் இருந்தார்களோ; அத்தனைபேரும் இலட்சியப் பயணம் முழுவதும் இருந்தார்கள் என்று வரலாறு கிடையாது.

இயேசுவின் சீடர்களிலேயே எண்ணிக்கை குறைந்து விடவில்லையா? அவர் கையை முத்தமிடுவதுபோல் நடித்து அவரையே ஒரு சீடன் காட்டிக் கொடுத்து விடவில்லையா?

அவர் சிலுவையில் அறையப்பட்டபோது சிரித்து மகிழ்ந்த சிலரும் இருக்கத்தானே செய்தார்கள்.

அவருக்கே அந்த நிலை என்றால்; நாம் எம்மாத்திரம்!

அன்னமிட்ட கையை அறுத்தெறிகிறவர்கள் - மாலை போட்ட கரத்தை ஒடித்தெறிகிறவர்கள் - தூக்கிச் சுமந்த தோளை சம்மட்டியால் நொறுக்குகிறவர்கள் - வாழ்வளித்தவர்களை வசைபாடுகிறவர்கள் - அப்படிப்பட்டவர்களையெல்லாம் உலகத்தில் நீதி என்று ஒன்றிருந்தால் அது கேட்கட்டும்.

உடன்பிறப்பே,

நீ, வா! நம் பயணத்தை தொடருவோம். கோழைகள் விலகட்டும்! வீரர்கள் என் பின் தொடரட்டும்! என்று முழங்கியவாறு சென்றிடுவோம் இலட்சியபுரியை நோக்கி!

அன்புடன்,

29-1-76 **மு. க.**

27-06-1991

1741. நெருக்கடி காலக் கடிதங்கள் - 3 : ஒற்றர் பணி ஒப்பற்ற புனிதப்பணி!

(1976-ஆம் ஆண்டு நெருக்கடி நிலையை எதிர்த்தமைக்காகக் கழக அரசு கலைக்கப்பட்டு - கழகத்தினர் மிசா கைதிகளாக ஓராண்டு சிறையில் வைக்கப்பட்டு - அமைச்சர்களாயிருந்தோர் மீது விசாரணை கமிஷன் - பொய் வழக்குகள் - முரசொலி இதழுக்கு நாள் தோறும் தணிக்கை (சென்சார்) என்ற நிலையில் வேதனை சூழ்ந்திருந்தபோது 31-3-76 அன்று முரசொலியில் கலைஞர் எழுதிய கடிதம் இது)

உடன்பிறப்பே!

வள்ளுவர் வழங்கியுள்ள திருக்குறளில், அரசியல் அதிகாரத்தில் ஒற்றாடல் பற்றிய கருத்துக்கள், முடியாட்சியாயினும், குடியாட்சியாயினும் இரண்டுக்கும் பொருந்தக் கூடியவைகளாகும்.

அவர், குறளில்; அரசன், மன்னவன், இறைவன் என்று எப்படிக் குறிப் பிட்டிருந்தாலும் அவை அரசாங்கம் என்பதையே உணர்த்துவதாகும்.

ஒற்றும் உரைசான்ற நூலும் இவையிரண்டும்

தெற்றென்க மன்னவன் கண்.

நீதிநூல் அரசுக்கு எப்படி ஒரு கண்ணைப் போன்றதோ; அதைப்போலவே ஒற்றர் துறையும் மற்றொரு கண்ணைப் போன்றதாகும் என்று வள்ளுவர் சிறப்பித்துக் கூறுகிறார்.

நீதிநூல் என்று வள்ளுவர் காலத்தில் வழங்கப்பட்டதுதான் இன்றைக்கு, மக்களால் மக்களுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் ஆட்சியின் அரசியல் சட்டமாக அதன் அடிப்படையில் உருவாகியுள்ள பல்வேறு சட்டப் பிரிவுகளாக விளங்குகின்றன.

சட்டத்தின் ஒரு சாதாரண உட்பிரிவின் - கிளைப்பிரிவின் - துணைப் பிரிவாக இருந்தால்கூட, அதுவும் நீதியென்னும் அடித்தளத்தைத் தகர்க்காமல் அமைந்திட வேண்டும்.

அத்தகைய புனிதம் வாய்ந்த நீதி நூலையும், ஒற்றர் படையையும் முகத்திரண்டு கண்களுக்கு ஒப்பாகச் சொல்லுகிறார் என்றால்; வள்ளுவரின் அரசியல் நுண்ணறிவைப் புகழ்வதற்கு வார்த்தைகளே கிடைக்கவில்லை என்றுதான் கூறவேண்டும்.

நீதி; நிலைமைகளுக்கேற்ப நெகிழ்ந்தும் வளைந்தும் கொடுப்பதும் கூடாது. ஒற்றர் பணிகளும் அவ்வாறே இருக்க வேண்டும். அந்தப் பணிக்குத் தேவையான திறமை, தந்திரம், துணிவு இவைகளோடு மனச்சாட்சியும் இணைந்திட வேண்டும்.

மனச்சாட்சி என்பது, நீதி என்னும் நாணயத்தின் மறுபக்கமாகும். இரு விழிகளும் ஒன்றையே நோக்குவதுபோல நீதி நூலின் பிரிவுகளும், ஒற்றர் பணிகளும் மனச்சாட்சியுடன் அமைந்திட வேண்டுமென்பதற்காகத்தான், வள்ளுவர் அழுத்தம் திருத்தமாக ஒரு அரசின் கண்கள் அவையிரண்டும்! என விளக்குகிறார்.

ஒற்றருக்குப் பல்வேறு பணிகள் உண்டு. அனைத்தும் அரசையும் நாட்டையும் காப்பதற்காக வகுக்கப் பெற்ற பணிகளின் தொகுப்பேயாகும்.

பகை நாட்டார் எப்படிப்பட்ட சூழ்ச்சிகளைக் கையாண்டு வெற்றி கொள்ளப் பார்க்கிறார்கள் என்பதை அறிவது! பகை நாட்டு ஒற்றர்கள், தன்னுடைய நாட்டில் எங்கெங்கே நுழைந்து கேடு செய்ய முனைகிறார்கள் என்பதைக் கண்டுபிடித்து அந்தக் கேடு, களையப்பட முயற்சிகளை எடுப்பது! பகை நாட்டாரின் தந்திரங்களை, தரைமட்டமாக்குவது! பகைவருக்குத் துணைபுரியும் துரோகிகள் யாராவது தனது நாட்டில் இருக்கிறார்களா எனத் தேடி அலைந்து தெளிந்து அத்தகையோரை நசுக்குவது - அவர்கள் துரோகச் செயல்களைத் தூள் தூளாக நொறுக்குவது! இவைமட்டுமன்றி, உள்நாட்டில் அரசுக்கு விரோதமாக - நாட்டுக்கு விரோதமாக - சட்டங்களுக்கு விரோதமாக - எத்தனைய நடவடிக்கைகளில் யார் ஈடுபட்டாலும் அவைகளை ஆராய்ந்து, தேர்ந்து, உண்மையான குற்றவாளிகளை நீதியின் முன்னால் நிறுத்துவது! அவர்கள் மக்களுக்கும் சமுதாயத்திற்கும் தீமை

விளையக்கூடிய சட்ட விரோத காரியங்களைச் செய்யவொட்டாமல் தக்கநேரத்தில் தடுப்பது! என்பவைகளும் ஒற்றர்களின் பணியாகும்.

இந்தப் பணியில் அவர்கள் நீதியின் தராசு முனையை எள் அளவுகூடச் சாய விடாமல் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான், ஒற்றர் பணியை நீதி நூலின் பெருமையோடு, வள்ளுவர் ஒன்று சேர்த்துக் காட்டுகிறார்.

இருக்கிற குற்றங்களை, மறைந்தும் ஒளிந்தும் கிடக்கிற குற்றங்களை வெளிப்படுத்துவது ஒற்றர்கள் பணியாகும்.

ஏதாவது ஒரு குற்றத்தை உருவாக்கியே தீரவேண்டும் என்பதற்காக, இல்லாத குற்றத்தை எவன்மீதாவது சுமத்தி வஞ்சம் தீர்த்துக் கொள்ளத் தங்களுக்குக் கிடைத்த ஒற்றர் வேலையை யாரோ சிலர் வள்ளுவர் காலத்திலேயே பயன்படுத்தியிருக்கக் கூடும். அதனால்தான் திருவள்ளுவர், ஒற்றர் பணியின் சிறப்பையும், தூய்மையையும் எடுத்துக் காட்டுவதற்காக இதனை நீதி நூலுடன் ஒப்பிட்டார்.

இதிலிருந்து ஒற்றர்கள் எவ்வளவு தூய்மையானவர்களாக இருக்க வேண்டும் என்று புரிகிறதல்லவா?

யார் எந்தத் தகவலைச் சொன்னாலும் அதன் அடிப்படையில் சிந்திப்பதற்கும், சந்தேகப்பட்டவர்களை ஆராய்வதற்கும் உரிமை படைத்தவர்கள் ஒற்றர்கள்!

ஆனால், நாம் சந்தேகப்பட்டு விட்டோமே; அதனால் அவர்கள் குற்றவாளிகளாகத் தான் ஆக்கப்பட வேண்டும் என்று நீதிக்குப் புறம்பான காரியங்களில் ஈடுபட்டுவிடக் கூடாது என்பதை வலியுறுத்தவே, ஒற்றர் பணி நீதி நூலைப் போன்றது என மிக உருக்கமாக வள்ளுவர், குறள் வாயிலாகப் பேசுகிறார்.

வினைசெய்வார், தம் சுற்றம், வேண்டாதார் என்றாங்கு
அனைவரையும் ஆராய்வது ஒற்று.

சுற்றத்தாராயினும் பகைவராயினும் - அதாவது வேண்டியவர், வேண்டாதவர் என்று இல்லாமல் அனைவரையும் ஆராய்வதுதான் ஒற்றரின் தொழிலாக அமைய வேண்டும் என்று வள்ளுவர் கூறும்போது, அந்தக் குறளைப் படிக்கும் நமக்குச் சிந்தனைகள், எங்கெங்கே பறக்கின்றன பார்த்தாயா?

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தமிழகத்தில் அரசியல் நீதியாகப் போதித்த அந்த அறிவரசனுக்கு, ஒரு வள்ளுவர் கோட்டமென்ன - ஓராயிரம் வள்ளுவர் கோட்டங்கள் அமைத்தாலும் போதாதே!

வேண்டியவர் - வேண்டாதவர் - சுற்றத்தார் - பகைவர் - என்றெல்லாம் பார்க்காமல் அனைவரையும் ஆராய்வதுதான் ஒற்றருக்கு அழகு! இதிலிருந்து என்ன விளங்குகிறது? இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே, ஒற்றர் பணி - நீதி வழுவாமல், அனைவர்க்கும் சமமாக ஏற்றத்தாழ்வற்ற முறையில், கசப்பு காழ்ப்புக்கு உட்படாமல் நடைபெற்றாக வேண்டுமென்று வள்ளுவர் கூற வேண்டிய அவசியம் இருந்திருக்கிறது!

இன்னும் மேலாகத் தன்னுடைய அரசியல் திறமையை பொய்யாமொழிப் புலவர் வள்ளுவர் காட்டுகிறார் பார்!

அரசனைத் திருப்திப்படுத்த அல்லது தனக்கு மேலே உள்ளவர்களுக்குத் தன் திறமையை எடுத்துரைக்க - யாராவது ஒரு ஒற்றர் தவறான செய்தியைக் கூறிவிடக் கூடும். எனவே, அந்த ஒற்றர் அறியாமல் மற்றொரு ஒற்றர் அதே செய்தி பற்றிய உண்மையை அறிய முயன்றிட வேண்டும். பிறகு அந்த இரண்டு ஒற்றர்களுடைய கூற்றையும் ஒப்பிட்டுப் பார்த்து எது சரி என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும். இவ்வாறு அறிவுறுத்துகிறார் அவர்.

ஒற்றொற்றித் தந்த பொருளையும் மற்றுமோர்
ஒற்றினால் ஒற்றிக் கொளல்.

அதற்காகவே இந்தக் குறள் வரிகளைத் தீட்டியிருக்கிறார். அத்துடன் விடுகிறாரா? ஓர் ஒற்றரை மற்றோர் ஒற்றர் அறியாதபடி செய்ய வேண்டும். அவ்வாறு நியமிக்கப்பட்ட ஒற்றர்கள் மூவரின் சொல், ஒத்திருந்தால், அதனை உண்மையென்று தெளிய வேண்டும் என்பதற்காகவும் இதோ ஒரு குறளை வழங்குகிறார்.

ஒற்றொற் றுணரானமை ஆள்கஉடன் மூவர்
சொல்தொக்க தேறப் படும்.

ஒற்றர்களே அறிந்து சொல்கிற தகவல்களாக இருப்பினும், அவைகளை உண்மையென்று எடுத்துக்கொள்வதற்கு எத்தனை படிக்கட்டுகளை அமைத்திருக்கிறார் பார்த்தாயா; வள்ளுவர்!

அந்தத் தகவலின் இறுதி வடிவத்தைக்கூட நீதியின் முன்னால் நிறுத்தி உரைத்துப் பார்க்க வேண்டுமல்லவா? அதனால்தானே நீதி நூலும் ஒற்றர் தொழிலும் இரண்டு கண்கள் என்கிறார்.

இப்படிப்பட்ட ஒப்பற்ற தொழிலுக்கு மாசு வந்திடக்கூடாது. கடுகளவு களங்கமும் சேர்ந்திடக் கூடாது, அவர் சொன்னார்! இவர் சொன்னார் என்று எவர் குரலுக்கும் செவி சாய்த்தல் கூடாது - நீதி, தாழக் கூடாது என்ற கவலையோடுதான் இந்த குறட்பாக்கள் வெளிப்பட்டிருக்கின்றன.

வாழ்க வள்ளுவரின் பெருமை! எனக்கூறி இன்றைய கடிதத்தை முடிக்கிறேன்.

அன்புடன்,

29-1-76 மு. க.

28-06-1991

1742. நெருக்கடி காலக் கடிதங்கள் - 4 : வீராதி வீரனும் சூராதி சூரனும்!

(1976-ல் ஜனநாயகம் காத்திட நெருக்கடி நிலையை எதிர்த்த காரணத்திற்காகக் கழக ஆட்சி கலைக்கப்பட்டு - அடக்குமுறைகள், மிசா சட்டங்கள், பொய் வழக்குகள், கழகத்தினர் மீது ஏவப்பட்ட நேரத்தில் முரசொலிக்கும் நாள்தோறும் தணிக்கை (சென்சார்) செய்து வெளியிட வேண்டுமென உத்திரவு - அத்துடன் கழகத்திலிருந்து சிலரை மிரட்டியும் விலை கொடுத்தும் வாங்கி அவர்களை விட்டுத் தலைமையின்மீது அவதூறு அறிக்கைகளும் விடுமாறு பணிக்கப்பட்ட சோதனை மிகுந்த கால கட்டத்தில் முரசொலியில் 30-3-1976 அன்று கலைஞர் எழுதிய கடிதம் இது)

உடன்பிறப்பே!

ஒரு பழைய காலத்துப் பாசறைக் காட்சி இது!

அமைதியின் கரங்களால் தடவிக் கொடுக்கப் பெற்று இயற்கை தூங்க முயலுகிறது. அதோ - தீப்பந்தங்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக நின்றுகொண்டு ஒளியை இயன்றவரையில் பரப்பிக் கொண்டிருக்கின்றன.

குறைவான அந்த வெளிச்சத்திலும் கடலைப் பொட்டலங்களைப் போன்ற வடிவமைந்த கூடாரங்கள் கண்ணுக்குத் தெரிகின்றன. நான்கைந்து காவல்வீரர்கள் கையில் ஆயுதங்கள் ஏந்தியவாறு எதிரிகளின் ஊடுருவல் ஏதாவது நடைபெற்று விடக்கூடாது என்பதிலே மிக்க கவனமாக அங்குமிங்கும் விழிகளைச் சுழல விட்டவாறு கூடாரங்களைச் சுற்றி நடந்து கொண்டிருக்கின்றனர்.

ஒன்றிரண்டு கூடாரங்களில் முனகல் ஒலி கேட்கிறது. அது, அன்றைக்கு ஏற்பட்ட காயங்களின் விளைவுதான்! வேறு ஒன்றுமில்லை.

ஒரு கூடாரத்தில் தளபதி உறக்கம் கொள்ளாமல் உலவிக் கொண்டிருக்கிறான். மறுநாள் நடக்க வேண்டிய காரியங்களுக்கான திட்டங்கள் அவன் மூளையென்னும் உலைக்களத்தில் உருவாகிக் கொண்டிருக்கின்றன. இரவு உணவு படைக்கப்பட்டிருந்த வட்டில்கூட அவனுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறது. அந்த நினைவேயின்றி - பசியென்னும் உணர்வே யற்றுப்போன நிலையில் அவனது சிந்தனைகள் அவனை ஆட்கொண்டிருக்கின்றன.

அதற்கடுத்த கூடாரத்தில் வீரர்கள் இரண்டொருவர் உரையாடுவது புரிகிறது. விழுப்புண் படாத நாள், வாழ்நாளில் வீணான நாளே! என்று ஒரு வீரன் கம்பீரமாகக் கூறுகிறான்.

ஆமாம்! இன்றைய பொழுது நம்மை உயிரோடு வைத்திருக்கிறது. நாளைய பொழுது நம்மில் யார் மிஞ்சுகிறோமோ? நீயோ? அல்லது நானோ? எனக்கே அந்தக் களச்சாவு எனும் பரிசு கிடைக்க வேண்டுமென்றும், என் உடல் மீது என் தலைவன் உகுக்கும் கண்ணீர் படவேண்டுமென்றும் யாசிக்கிறேன்

இந்தக் குரலில் அழுத்தம் தொனிக்கிறது. அந்த வீரர்கள் கட்டித் தழுவிக் கொள்கிறார்கள். அவர்கள் விழியில் பெருகிடும் நீர்த் துளிகளில் வீரத்தின் சூடு நிறைந்திருக்கிறது.

நமது கல்லறையின்மீது என்ன எழுதப்படும்?
தழுவியவாறே ஒரு வீரன், வினா எழுப்புகிறான்.

உலகில் எத்தனையோ கல்லறைகள் இருக்கின்றன. சலவைக் கல்லாலும் தங்கம் வெள்ளி போன்றவைகளாலும் அழகு செய்யப்பட்ட கல்லறைகள் பல இருக்கின்றன. பெரிய பெரிய மனிதர்களையெல்லாம் புதைத்திருக்கின்ற கல்லறைகள் இருக்கின்றன. காதலர்களின் கல்லறைகள் இருக்கின்றன. மக்களால் மறந்து போனவர்களின் கல்லறைகள் பலப்பல இருக்கின்றன. எழில்சேர் கவிதைகள் எழுதப்பட்ட கல்லறைகள், பெயர் தவிர வேறு எதுவும் எழுதப்படாத கல்லறைகள் - இப்படி எத்தனையோ இருக்கின்றன. நண்பா! கூட்டமாக அணிவகுத்து நிற்கும் நமது கல்லறைகள் அனைத்துக்கும் சேர்ந்தாற்போல இவர்கள் நாட்டையும் மக்களையும் நேசித்தார்கள் என்று எழுதப்படும் என்பது மட்டும் உறுதி! என்கிறான் மற்றொரு வீரன்.

அதற்குச் சற்று தொலைவிலே ஒரு கூடாரம். வெளியிலிருந்து படுகிற ஒளியைத் தவிர, உள்ளே எந்தவிதமான சிறு வெளிச்சமும் கிடையாது.

இரண்டு தாழம்பாய்களில் இரு வீரர்கள் படுத்திருக்கின்றனர். அவர்கள், தூங்குவது போலக் காலை நீட்டிக்கொண்டு தலையை முழங்கையில் சாய்த்துக்கொண்டு படுத்திருந்தாலும் இருவரும் உண்மையில் தூங்கவில்லை. இமைகளைச் சிறிது சிறிதாகத் திறப்பதும் பிறகு மூடிக்கொள்வதுமாக இருக்கின்றனர்.

கொஞ்ச நேரத்திற்குப் பிறகு, அநேகமாக எல்லாக் கூடாரங்களிலுமுள்ள விளக்குகள் அணைக்கப்படுகின்றன. வெளியில் மட்டும் தீப்பந்தங்கள் எரிந்து கொண்டிருக்கின்றன.

தூங்குவதுபோலப் பாசாங்கு செய்யும் வீரர்களிலே ஒருவன் பூனைபோல மெதுவாக எழுந்து கூடாரத்தின் ஓரத்துக்குச் செல்கிறான். அப்போது வெளியில் காவல் புரியும் வீரன் அந்தக் கூடாரத்தைக் கடந்து அடுத்த பக்கம் செல்கிறான். இவன் பெருமூச்சு விட்டுக் கொள்கிறான்.

ஓசைப்படாமல் கூடாரத்துத் துணியை விலக்குகிறான். யாரும் வெளியே இல்லை. அவனுக்குத் துணிவு வந்து விட்டது. ஆண்டவா! என்று மெல்லிய குரலில் கூறிக் கொள்கிறான். இதுதான் சமயம்! ஓடிப்போய் உயிர் பிழைக்க! ஒரு காலை எடுத்து கூடாரத்திற்கு வெளியே வைக்கிறான். அப்போது, கூடாரத்துக்குள்ளிருந்து ஒரு கை அவனைப் பிடித்துக் கொள்கிறது. மெல்லிய சிரிப்பு! ஆம்; மற்றொரு வீரனின் சிரிப்புத்தான்!

எங்கே ஓடுகிறாய்? உயிர் பிழைக்க ஓடுகிறேன்! வினாவும் விடையும் நடுக்கத்தோடு வெளிப்படுகின்றன.

ஓ! நீ எனக்கு சரியான இணைதான்! எனக்கும் ஓடிவிட்டால் நல்லது என்றே தொன்றுகிறது!

பிறகேன் தயக்கம்? வா, போய்விடுவோம்!
ஓடிவிட்டால், ஊரார் கோழை என்பார்களே!
ஊரார் என்ன, நம் உயிருக்குப் பொறுப்பாளிகளா!

அவர்களுக்கு நேராக நான் பேசிய வீரம் நம் தளபதிகூடப் பேசியது கிடையாதே!

அதனால் என்ன? நான்கூடத்தான் பேசினேன். அதெல்லாம் இப்போது யார் நினைவில் வைத்திருக்கப் போகிறார்கள்! வா! வா! ஓடி உயிர் பிழைப்போம்!

சொல்வதைக் கேள்! நாம் உயிர் பிழைத்து வாழவும் வேண்டும். அதே நேரம் கோழைகள் என்று பெயர் எடுக்கவும் கூடாது. அப்படியொரு திட்டம் தயாரிக்க வேண்டும்!

என்ன திட்டம்? சீக்கிரம் சொல்! முடியா விட்டால் ஓடிவிடலாம் வா!

அவசரப்படாதே! நாம் பாசறையில் இருக்க வேண்டும் - ஆனால் களத்திற்குச் செல்லக்கூடாது!

அது எப்படி முடியும்?

கேள், காதைத் தீட்டிக்கொண்டு! நாளை காலையில் நமது அணிவகுப்பை நமது தளபதி பார்வையிடுவான்; இல்லையா?

ஆமாம்!
அந்த அணிவகுப்பில் நாமும் நிற்கத்தானே வேண்டும்!
அய்யோ! அதற்குள்தான் ஓடிவிடலாம் என்கிறேன்!
கேளப்பா, கவனமாக!
சொல்லித் தொலையப்பா சுருக்கமாக!

அணிவகுப்பில் நாம் நிற்கும்போதே, தளபதியின் போக்கு சரியில்லை - அவன் வகுத்த திட்டங்கள் சரியில்லையென்று உரக்கக் கூவுவது...

அய்யோ! அது நமது கட்டுப்பாட்டை மீறும் செயலாயிற்றே!

உஸ்! சும்மாயிரு! நாமும் தப்பிக்க வேண்டும். நமக்குக் கோழை என்ற பெயரும் வரக்கூடாது. அதற்கு இதுதான் வழி. கட்டுப்பாட்டை மீறி தளபதியின் மீது களங்கம் சுமத்தினால், அவன் நம்மை நம்பாமல் நம்மை நமது தலைநகருக்கே திருப்பி அனுப்பி விடுவான்!

தலைநகர மக்கள், நம்மை வரவேற்க மறுத்தால்...
இருக்கவே இருக்கிறது எதிரியின் பாசறை!
அருமையான திட்டம்! வா, இன்றிரவு அயர்ந்து
தூங்குவோம்!

சில நொடிகளுக்குப் பிறகு, அந்தக் கூடாரத்தில் எழுந்த அவர்கள் இருவரின் குறட்டைச் சத்தம், இயற்கையின் அமைதியான உறக்கத்தைக்கூட குலைத்தது என்று கூறலாம்.

உடன்பிறப்பே,

பழைய காலத்துப் பாசறையொன்றில் நிகழ்ந்த சம்பவத்தைப் பற்றி உனக்கு எழுதினேன். வீரர்களுக்கிடையிலேயும் இத்தகைய விஷவித்துகள், அந்தக் காலத்திலேயே இருந்திருக்கின்றன பார்த்தாயா?

அன்புடன்,

30-3-76

மு. க.

29-06-1991

1743. நெருக்கடி காலக் கடிதங்கள் - 5 : உற்றாரைத் துறந்து ஓடுவர் யாரே!

(1976ல் கழகம் நெருக்கடி நிலையை எதிர்த்தமைக்காக ஆட்சி கலைக்கப்பட்டு - கழகத்தினர் மிசா கைதிகளாக ஓராண்டு சிறை வைக்கப்பட்டு - அமைச்சர்களாயிருந்தோர் மீது விசாரணைக் கமிஷனும் அமைக்கப்பட்டு - முரசொலி இதழும் நாள்தோறும் தணிக்கைக்கு (சென்சார்) உட்படுத்தப்பட்ட கொடுமை சூழ்ந்த நிலையில் 23-2-1976 அன்று கலைஞர் எழுதிய கடிதம் இது)

உடன்பிறப்பே!

கணியன் பூங்குன்றனார் சங்ககாலத் தமிழ் புலவர். இன்றைய இராமநாதபுரம் கோட்டத்து எல்லைக்குள் இருந்த பூங்குன்றம் என்னும் ஊரில் பிறந்தவர். அவர் எழுதி புறநானூறு பாடல்களில் இடம் பெற்றுள்ள யாதும் ஊரே; யாவரும் கேளிர் என்ற புகழ்மிக்க பாடலை, சில மாதங்களுக்கு முன்பு, அவர் வாழ்ந்த ஊரில் கல்லிலே செதுக்கி என்றும் அழியாதவாறு நிலைநிறுத்திய நிகழ்ச்சியை, நீ மறந்திருக்க மாட்டாய். தமிழ்ப் பெரும் புலவர்களும், சான்றோர்களும் அந்த விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர். கணியன்பூங்குன்றனார் எழுதிய பாடல்களிலேயே மிகச் சிறந்தது இதுவெனலாம். எவ்வளவு பரந்த உள்ளம்! எத்துணை விரிவான எண்ணம்!

யாதும் ஊரே! யாவரும் கேளிர்!

எவ்வூராயினும் அஃது எமது ஊரேயாகும்! யாராயினும் அவர் எம் உறவினரே! மக்கள் இனம் முழுமைக்குமே சொந்தம் கொண்டாடுகிறார்.

உலகப் பரப்பு முழுமையும் மனிதனுக்கே உரியது என எண்ணிடும்போது வேற்றுமைகளுக்கு இடமில்லை அல்லவா? எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன்பு ஒரு தமிழ்ப் புலவனின்

இதயம் ஒலித்த உலகம் ஒன்று! அனைவரும் உறவினர்! என்ற கொள்கை முழக்கமல்லவோ இது?

குடும்பங்களுக்கு வீடுகள்
வீடுகளுக்கு ஊர்கள்
ஊர்களுக்கு நாடுகள்
நாடுகளுக்கு உலகம்

- என்றிருந்தாலும் - என்றிருப்பதைத் தவிர்க்க முடியாவிட்டாலும், குடும்பத்துக் கண்களால் உலகத்தைப் பார்க்காமல் உலகக் கண்ணோட்டத்தில் அனைத்தையும் பார்க்க வேண்டுமென்பதுதானே பூங்குன்றனாரின் பொன்மொழி.

பல குடும்பத்தினர் சேர்ந்து ஊரார்.
பல ஊரார் சேர்ந்து ஒரு நாட்டார்.
பல நாட்டார் சேர்ந்து உலகத்தார்

என்றுள்ளதையும் தவிர்க்க முடியாதெனினும், ஊராருக்குள்ளே உலகத்தார் இருக்கிறார்கள் என்று வாதிடாமல், உலகத்தாருக்குள்ளேதான் ஊரார் இருக்கிறார்கள் என்ற உள்ளத்தெளிவைப் பெற்றிட வேண்டும். அதை விளக்கும் பாடலே;

யாதும் ஊரே, யாவரும் கேளிர்
என்பதாகும்.
அதே பாடலின் அடுத்த வரிகள் என்ன
சொல்லுகின்றன?
தீதும் நன்றும் பிறர்தர வாரா;
நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன

தீமையாயினும் நன்மையாயினும் துன்பமாயினும் அதனைத் தணித்தலாயினும் பிறர் அளித்து வருவதல்ல, நம்மாலேயே விளைவதாகும்; என்று பொருள்!

நமக்கு யாரும் கேடு செய்திட முடியாது. நமக்கு நாமே துன்பத்தை தேடிக் கொண்டால் தவிர, பிறர் எவரும் நமக்கு கேடு விளைவித்திட மாட்டார்கள். நமக்கு வரும் துன்பத்தை நாமேதான் துடைத்துக் கொள்ளவேண்டும் என்று நமது அண்ணன் பலமுறை

கூறியிருப்பதை இந்தப் புறநானூற்றுப் பாடலுடன் இணைத்துப் பார்க்கிறேன்.

பூங்குன்றனாரின் தமிழையல்லவா அண்ணா அன்றைக்கே பொழிந்திருக்கிறார்!

புலவர் பெருமான் வாழ்வு - சாவு என்பதற்கு வடித்துத் தரும் கவிதை வரியைப் படித்துப் பார்.

சாதலும் புதுவது அன்றே; வாழ்தல்
இனிது என மகிழ்ந்தன்றும் இலமே; முனிவின்
இன்னாது என்றலும் இலமே

சாவது என்பது இவ்வுலகில் புதிய செய்தியன்று. வாழ்வதுதான் இனிமையானது என மகிழ்ச்சியில் திளைத்துக் கிடப்பதும், வாழ்வை வெறுத்து அதனைத் துன்பம் நிறைந்தது என்று ஒதுக்குதலும் நன்றல்ல என்பது இதற்குப் பொருளாகும்.

வாழ்வை வெறுப்பதும் கூடாது. அதே நேரத்தில் சாவு என்னும் ஒரு நிகழ்ச்சி நம் வாழ்வில் நுழையும் போது அதனை ஏதோ புதுமையானதாகக் கருதி அஞ்சி நடுங்கவும் கூடாது.

இருப்பது ஒரு உயிர்தான்! அது போகப் போவதும் ஒரு தடவைதான்!

இந்த வீர மொழிகளை, நமது அண்ணன் எத்தனை முறை அழுத்தம் திருத்தமாகக் கூறியிருக்கிறார்.

உடல் நலிவோடு வாடிக் கொண்டிருந்த போது, மருத்துவர் தடுத்தும் கேளாமல் தமிழ்நாடு பெயர்சூட்டு விழாவுக்கு அவர் வந்தபோது அதைத்தானே சொன்னார்.

இருப்பது ஒரு உயிர்தான்! அது போகப் போவதும் ஒரு தடவைதான்! அது நல்ல காரியத்திற்காகப் போகட்டும்!

- இந்த மணிவாசகத்தைத்தானே அன்றைக்கு அந்த விழா மண்டபத்தில் நம் இதயத்தில் ஆழப் பதிய வைத்தார்.

இலக்கியங்களில் ஊறித் திளைத்த காரணத்தினால்தான், நமது அண்ணனின் சொற்பொழிவாயினும், எழுத்தாயினும், உரையாடலாயினும் - அங்கெல்லாம் விரிந்து பரந்த கருத்துக்கள் கோலோச்சியதை நம்மால் உணர முடிந்தது. அந்த அமைதி

உள்ளத்தில் யாராலும் அசைக்க முடியாத உறுதி இருந்ததை அறிய முடிந்தது.

புடைத்து வைத்த தோல்போல் காட்சி தரும் களர் நிலத்தில் அலைக்கழிக்கும் வேடனிடமிருந்தும் தப்பித்தோம் பிழைத்தோம் என்று ஓடிவிடும் மானைப்போல ஓடிவிடலாமா என்று ஒருவன் எண்ணுகிறானாம். ஆனால் பலரோடு கூடி வாழும் வாழ்க்கை அவன் காலைத் தளையிட்டுத் தடுத்து விடுகிறதாம். ஆம்; அவன் - அவனுக்காக வாழவில்லை. அவனுடன் கூடியிருப்போர்க்காக வாழ்கிறான்! தன்னல வாழ்க்கை எனில் அந்தப் புள்ளி மானைப் போல துள்ளியோடியிருப்பான். பொதுநல வாழ்க்கையன்றோ; அவன் வாழ்வது!

இந்தக் கருத்தையும் ஒரேருழவர் என்ற புறநானூற்று புலவர் ஒரு அழகிய பாடல் வாயிலாக நமக்கு வழங்குகிறார்.

அதளெறிந்தன்ன நெடுவண்களரின்
ஒருவனாட்டும் புல்வாய் போல
ஓடி உய்தலுங் கூடுமன்;
ஒக்கல் வாழ்க்கை தட்குமா காலே.

(புல்வாய் = மான்; ஒக்கல் வாழ்க்கை = கூடி வாழ்தல்; தட்கும் = தளைபோலத் தடுக்கும்)

ஒக்கல் வாழ்க்கை எனும் ஒளிவிளக்கைத் தந்தவர் நமது ஒப்பற்ற தலைவர் பேரறிஞர் அண்ணா!

வேடனுக்குத் தப்பும் மானைக் காட்டுகிறார் ஒரு புலவர். அவரே ஒக்கல் வாழ்வின்; அதாவது கூடி வார்வதன் சிறப்பையும் செப்புகிறார்.

மற்றொரு புலவரோ; சாவது என்பது வியப்புக்குரிய புதுமையல்ல - என்று விளக்கி நெஞ்சின் அச்சத்தைப் போக்குகிறார்.

இந்த இரு புலவர் வடிவில் நம் அண்ணனைக் காணுகிறேன். கரம்கூப்பித் தொழுகிறேன். புறநானூற்றுப் பாடல் வரிகளை என் இதழ்கள் முத்தமிடுகின்றன.

அன்புடன்,
மு. க.

23-2-76

(30-06-1991)

1744. நெருக்கடி காலக் கடிதங்கள் - 6 : இந்த உடலின் மதிப்பு எவ்வளவு?

(நெருக்கடி நிலையின்போது முரசொலி தணிக்கைக்கு உட்படுத்தப்பட்டு நாள்தோறும் தணிக்கை அதிகாரியின் கத்திரிக்கோலுக்குத் தப்புவது பெரும்பாடாக இருந்தது. அப்போது கலைஞர் அவர்கள், இலக்கியம், விஞ்ஞானம் போன்ற பல்வேறு துறைகளைப் பயன்படுத்தி, உடன்பிறப்புக் கடிதங்களை 1976-ஆம் ஆண்டு முரசொலியில் எழுதி வந்தார். அவற்றில் ஒன்று இது)

உடன்பிறப்பே!

ஊத்தைக் குழியிலே மண் எடுத்து
உதிரப்புனலிலே உருண்டை சேர்த்து
வாய்த்த குயவனார் பண்ணு பாண்டம்
வரகோட்டுக்கும் ஆகாதென்று ஆடு பாம்பே!

எனச் சித்தர்களும் சீவன் முக்தர்களும் மனித உடலைப் பழித்துப் பாடியுள்ள பாடல்கள் ஏராளம் உண்டு.

நந்தவனத்தில் ஓர் ஆண்டி - அவன்
நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டி
கொண்டு வந்தான் ஒரு தோண்டி - அதைக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி!

பத்து மாதம் கருவிலே உருவாகி குழந்தையாய்ப் பிறந்து மனிதனாக நடமாடி இறுதி மூச்சை வெளிப்படுத்தி, இனி விழிப்பதில்லை என்ற உறுதியோடு இறுகக் கண்களை மூடிக் கொண்டவுடன் அந்த உடல், வரகோட்டுக்கும் ஆகாத ஒன்றாகவும் - கூத்தாடிக் கூத்தாடிப் போட்டு உடைத்த மண் குடமாகவும் ஆகிவிடுகின்றதென்றுதான் நமது முன்னோர்கள் எழுதி வைத்தார்கள்.

காயமே இது பொய்யடா
காற்றடைத்த பையடா

எனக் காரி உமிழப்பட்ட இந்தச் சரீரத்தின் மொத்த மதிப்பு ஐந்து கோடி ரூபாய் என்று இப்போது கணக்கிடப்பட்டிருக்கிறது.

சுவிட்சர்லாந்து நாட்டைச் சேர்ந்த பீட்டர் ஈட்டன் என்ற விஞ்ஞானியொருவர் பின்கண்டவாறு மனித உடலுக்கு மதிப்பை நிர்ணயித்து இருக்கிறார். ஒரு ஆணை உருவாக்குவதற்கு ஆறு மில்லியன் டாலர் அதாவது ஐந்து கோடி ரூபாய் ஆகிறதாம். பெண்ணின் உடலை உருவாக்குவதற்கு அதைவிட அதிகம் செலவாகுமாம்.

ஒரு மனிதனின் உடலில் உள்ள எல்லாப் பொருட்களின் மதிப்பையும் அவற்றின் ரசாயன மதிப்புகளுக்கு ஏற்ப அவர் கணக்கிட்டுப் பார்த்து, அதன்படி அத்தகைய ரசாயனப் பொருட்களைக் கொண்டு ஒரு மனிதனை உருவாக்க அந்தத் தொகை தேவைப்படும் என்று கூறியிருக்கிறார்.

அவர் குறிப்பிடுகிற மனித உடலில் உள்ள ரசாயனப் பொருட்களின் மதிப்பே தவிர, அந்தப் பொருட்களை வாங்கி ஒரு மனிதனை உருவாக்க முடியும் என்று அல்ல!

பெண்களின் உடலில் உள்ள கருப்பை சுரப்பிகள், தாய்ப்பால் உற்பத்தி செய்யும் சுரப்பிகள் - ஆகியவற்றைச் சிறப்பு அம்சங்களாகத் தயாரிக்க தேவைப்படும் ரசாயன பொருட்களின் மதிப்பு, ஆண்களுக்குத் தேவைப்படுவதைவிட அதிகம் என்றும் அவர் ஆராய்ந்து கண்டறிந்துள்ளார்.

நாற்ற உடல் - காற்றுப்பை - பிடி சாம்பல் - நீர்க்குமிழி - என்றெல்லாம் அலட்சியமாகச் சித்தரிக்கப்பட்ட மனித உடலுக்குத் திடீரென ஏற்பட்டுவிட்ட மதிப்பைப் பார்த்தாயா?

இவ்வளவு விலை உயர்ந்த உடல், தேர்தல் நேரங்களில் ஒரு ரூபாய் இரண்டு ரூபாய் என்ற வகையில் வாக்குச் சீட்டுகளாக விலை போய்விடுகிறதே!

பஞ்சாயத்து யூனியன் தேர்தல் என்றால் பத்தாயிர ரூபாய்க்கும், முனிசிபல் தலைவர் தேர்தல் என்றால் முப்பதாயிர ரூபாய்க்கும் கட்சி மாறுவது என்றால் லட்ச ரூபாய்க்கும் எவ்வளவு சர்வ சாதாரணமாக விலை போய்க் கொண்டிருக்கிறது.

ஒரு மனித உடல் ஐந்து கோடி ரூபாய் - அப்படியானால் நம் வீட்டில் ஏழுட்டு மனித உடல்கள் உற்பத்தி செய்யப்படுமானால் நம்மையும் சேர்த்து மொத்தம் பத்து உடல்கள் - அவைகளின் கூடுதல் மதிப்பு ஐம்பது கோடி ரூபாய் - அப்போது நம்மைவிடப் பெரும் சீமானோ கோமானோ நாட்டில் இருக்க முடியாது எனக் கணக்கிட்டு குடும்ப நலத் திட்டத்தை யாராவது மீறத் தொடங்குவார்களேயானால் - நாட்டின் பொருளாதார மதிப்பு எங்கேயோ ஒரு கோடிக்குப் போய்விடக்கூடும்.

மனித உடலிக் மதிப்பையும், மாண்பையும் அந்த விஞ்ஞானி வெளியிட்டிருப்பதற்குக் காரணமே, நான் அறிந்த மட்டில்; இவ்வளவு மதிப்பு வாய்ந்த உடலை வெறும் சோம்பல் காரணமாக வளர்க்காமல், சோற்றுத் துருத்தியாக ஆக்கி விடாமல், மாமிசப் பிண்டமாக உலவ விடாமல் - புகழ்க் கோபுரத்தின் கலசமாக ஆக்கிக் கொள்ள வேண்டும் என்ற கருத்தாகத்தான் இருக்க முடியும்.

ஆகா! ஐந்து கோடி ரூபாய் மதிப்பு நமது உடல் என்றதும் பண்பையும், கொள்கையையும் விற்று வாழும் பெண்ணோ, ஆணோ அதற்கான விலையை உயர்த்திக்கொள்ள வேண்டும் என்று சிந்திக்காமல், இவ்வளவு மதிப்பு வாய்ந்த உடலை மாண்பும் மரபும் மானமும் கெடாமல் காப்பாற்ற வேண்டும் என்ற முறையில் சிந்தித்துச் செயல்பட வேண்டும்.

விஞ்ஞானி வெளியிட்டுள்ள கணக்கு; விவேகபுரியினர்க்கே தவிர - விலை பேசிகளுக்கு அல்ல!

சமுதாயம் முழுமையும் விவேகபுரியாக விளங்கிட, இந்த விஞ்ஞானக் கண்டுபிடிப்பு உதவட்டும்.

அன்புடன்,

21-11-76

மு. க.

01-07-1991

1745. நெருக்கடி காலக் கடிதங்கள் - 7 : எங்கே; பகுத்தறிவு பயன்படுத்தப்படுகிறதோ...!

(பழமை லோகத்தையும் - பகுத்தறிவு இயக்கத்தையும் மாறி மாறி ஏமாற்றுகிறவர்கள் எப்போதும் உண்டு. அந்த எண்ணிக்கை நம்மவர்கள் எனப்படுவோர் சிலரிலேயே எமர்ஜன்சி காலத்தில் சிறிது உயர்ந்தது கண்டு கலைஞர் மனம் வெதும்பினார். அந்த மனப்புண்ணுடன் நெருக்கடி நிலையின் போது 1976-ஆம் ஆண்டு கலைஞர் எழுதிய கடிதம் இது)

உடன்பிறப்பே!

எங்கே மனத்தில் அச்சம் இல்லையோ, எங்கே தலையானது, நிமிர்ந்து நின்றிடுமோ, எங்கே அறிவு முடக்கப்பட்டு இல்லையோ, எங்கே குறுகிய மதில்கள் எழுப்பப்பெற்று இந்த உலகம் சீர் குலையவில்லையோ, எங்கே உண்மையின் ஆழத்திலிருந்து தூய சொற்கள் பீறிட்டுக் கிளம்பிடுமோ, எங்கே பகுத்தறிவு என்னும் பேரருவி; காய்ந்து சருகான பழக்கமென்னும் கடும் வெப்பப் பாலை நிலத்தில் மண்ணுக்குள் மறையாமல் பாய்ந்திடுமோ, எங்கே உன் துணை வலிமையால் பரந்த சிந்தனை, செயல்களை நாடி இந்த நெஞ்சம் முன்னேறிச் சென்றிடுமோ, அந்த இனிய சொர்க்க வாழ்வு கண்டிட அருமைமிகு எந்நாடு விழித்தெழ தந்தையே! அருள் பொழிந்திடுவாயாக!

இவ்வாறு கவியரசர் தாகூர், பாடிய முறையீட்டுக் கவிதை கீதாஞ்சலியில் இடம் பெற்றுள்ளது. பகுத்தறிவுப் பேரருவி, பழக்க வழக்கமெனும் பாலைவனத்தில் பாய்ந்தோடிட வேண்டுமாம். அப்படிப் பெருகியோடும்போது அந்தத் தெளிந்த நீரை பாலைவனத்து மணல் உறிஞ்சி விடக் கூடாதாம். எனவே, மண்ணுக்குள் மறையாமல் அந்த நீர் பழமைப் பாலையைப் பகுத்தறிவுச் சோலையாக்க வேண்டுமாம். பகுத்தறிவுப் பிரச்சாரம்,

காட்டில் எரிந்த நிலவாக ஆகி விடக் கூடாது என்பதிலே தாகூர் கொண்டுள்ள அக்கறையைத்தான் இந்த வரிகள் தெளிவாக்குகின்றன. பாலைவனத்தில் ஓடுகின்ற தெண்ணீரின் கதியும் அப்படித்தானே ஆகிவிடும். அதனால்தான் கவிஞர், மிக்க கவனத்தோடு கூறுகிறார். மண்ணுக்குள் தண்ணீர் மறைந்து விடக்கூடாதென்று!

இங்கே பாலைவன மணல் என்பது எதைக் குறிப்பிடுகிறது? மக்கள் சமுதாயத்தைத்தான்! அந்தச் சமுதாயத்தை வளமாக்கப் பாய்ந்து வரும் பகுத்தறிவு வெள்ளத்தை அந்தச் சமுதாயமே, தனக்கெனப் பயன்படுத்திக் கொள்ளாமல் வீணாக்கி விடக் கூடாதல்லவா? அதனால்தான் ரவீந்திரர்:

எங்கே பகுத்தறிவு என்னும் பேரருவி,
காய்ந்து சருகான பழக்க மெனும்
கடும் வெப்பப் பாலை நிலத்தில்
மண்ணுக்குள் மறையாமல் பாய்ந்திடுமோ,

என்று உருக்கமும் உணர்ச்சியும் இழையோடிட மிகுந்த முன் எச்சரிக்கையுடன் பாடுகிறார்.

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு
எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு

எனும் குறப்பாட்கள் வழிநின்று சிந்தித்துச் செயல்படுவதே பகுத்தறிவின் பயனாகும். விஞ்ஞானத்தின் விரிவாக்கமும், அதன் விளைவாக மனிதன் வெண்ணிலாவுக்குப் பயணம் சென்று திரும்பியதுமான நிகழ்ச்சிகளை நடத்திக் கொண்டிருக்கிற உலகத்தில், இந்தச் சாதனைச் சரித்திரங்கள், எப்படிப் படைக்கப் படுகின்றன என்பது பற்றியே கவலைப்படாமல்; அந்த விஞ்ஞானக் கருவிகளுக்குப் பொட்டிட்டு, பூ சூட்டி, சாம்பிராணி தூபம் காட்டிக் கொண்டிருக்கிற வேலையில் அல்லவா சிலர் வேகமாக ஈடுபட்டிருக்கின்றனர்.

ஆரியபட்டா விண்வெளியில் பயணம் நடத்திக் கொண்டிருக்கிறது. இந்திய நாடு, விஞ்ஞானத் துறையில்

முன்னேறுகிறது எனக் கண்டு மகிழ்கிறோம். அதே நேரத்தில் கையை மூடித் திறந்தால் சிறியதோர் சிவலிங்கம் வருகிறது, அல்லது சிங்கப்பூர் கடிகாரம் வருகிறது. குறைந்த பட்சம் குங்குமம் விபூதியாவது வருகிறது என்று மந்திர தந்திர மாயாவிகளின் காலில் விழுந்து கிடக்கிற மக்கள் கணக்கற்றோர் இருக்கிறார்களே! புதிய பக்தர்கள் புறப்படுகிறார்களே!

வறுமைக்கும் வாட்டத்திற்கும் காரணம் என்ன? விதி!

ஒருவன் வாழவும் ஒருவன் வாடவுமான நிலை இருப்பானேன்? அது தலையெழுத்து!

உயர் சாதிக்காரன் - தாழ்ந்த சாதிக்காரன் என்ற கேடு உலவிடுவானேன்? அதுவா? அது போன ஜன்மத்துப் பலன்!

இப்படிப்பட்ட ஆணவம் நிறைந்த பதில்கள், அறியாத மக்களின் உடலிலே, உள்ளத்திலே சவுக்கடிகளாக விழுந்து கொண்டிருந்தன. அதைத் தடுத்து நிறுத்தியது தான் பகுத்தறிவு! சாதி, மதமென்னும் சமூக அமைப்புக்களால் ஏற்பட்ட பேதங்களை அகற்றுவதற்கு மட்டுமல்ல, உழைக்க ஓர் பிரிவு - உண்டு கொழுக்க ஓர் பிரிவு - என்ற பொருளாதார பேதத்தையும் சுட்டிக் காட்டி ஏற்றத்தாழ்வற்ற சமதர்ம சமுதாயம் அமைத்திடவும் பகுத்தறிவு மன்றமே தீர்ப்பு எழுதியது.

அதைத்தான் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்,
பகுத்தறிவு மன்றத்தில் உலகம் என்ற
பழைய முதலாளியினை நிற்க வைத்து

விசாரணை நடத்தித் தீர்ப்பு வழங்குவதுபோல் கவிதையொன்று தீட்டுகிறார்.

கைத்திறனும் வாய்த்திறனும் கொண்ட பேர்கள்
கண் மூடி மக்களது நிலத்தையெல்லாம்
கொத்திக் கொண்டேப்ப மிட்டு வந்ததாலே

கூலிமக்கள் அதிகரித்தார் என்ன செய்வேன்?

என்று உலகப்பன் கைபிசைந்து நிற்கிறான் அந்த மன்றத்தில்! பாரதிதாசனின் பகுத்தறிவு மன்றம், என்ன கட்டளையிடுகிறது தெரியுமா?

இந்நிலையில் இருப்பதனால் உலகப்பா நீ!

புதுக் கணக்குப் போட்டுவிடு. பொருளை எல்லாம்
பொதுவாக எல்லார்க்கும் நீ குத்தகை செய்

இதுவே, பகுத்தறிவு மன்றத்தின் ஆணை! எனவே சமுதாயத்துறை, பொருளாதாரத்துறை, அரசியல்துறை அனைத்திலுமே பகுத்தறிவு நீரோடை தங்குதடையின்றிப் பாய்ந்தோடிட வேண்டும். அப்போதுதான் நாடு வாழும்! நலிவு தீரும்! பண்பு சிறக்கும்! பளிங்கெனத் தெளிவு பிறக்கும்!

பாலை நிலத்தில் பகுத்தறிவுப் பேரருவி
எங்கே பாய்ந்திடுமோ,
எனக் குறிக்கும் வங்கத்துக் தங்கக் கவிஞர்,
எங்கே மனத்தில் அச்சமில்லையோ
எங்கே தலையானது நிமிர்ந்து நின்றிடுமோ,

எனச் சுட்டிக் காட்டுவதின் சரியான பொருள் உனக்கு புரிகிறதல்லவா? தலையானது நிமிர்ந்து நிற்க வேண்டும் - அதுதானே உடன்பிறப்பே! தன்மானம் சுயமரியாதை என்ற சொற்கனால் சுட்டிக் காட்டப்படுகிறது! தலை நிமிர்ந்து நிற்க வேண்டும் - மனத்தில் அச்சம் கூடாது என்றால்; அடக்கமின்றி வணங்காமுடியாக வாழ வேண்டும் என்றோ - அஞ்சுவது அஞ்சாமை பேதமை என்ற குறளை மறந்து விட வேண்டும் என்றோ - யாரும் கூற மாட்டார்கள்! பண்டித நேரு அவர்களின் பொன்மொழி யொன்று; சோதனைதான் வாழ்வுக்குச் சுவையளிப்பதென்று, அந்த நிலையில் - தலையானது நிமிர்ந்து நிற்க வேண்டும், மனதில் அச்சம் அகன்றிட வேண்டும்.

அச்சமும், தலையிறக்கமும் கொண்ட சமுதாயம் அடிமைப்படுகுழியில்தானே கிடக்க நேரிட்டது! ஏன்? என்று கேட்க அச்சம்! எப்படி என்று கேட்பதற்குத் தலைநிமிர முடியாத கொடுமை! ஆண்டை, ஆண்டவனின் படைப்பு! அடிமைகளோ, புழுக்களின் மறுபதிப்பு! இந்த நிலை, உலக முழுவதும் இருந்ததே - இன்று பெரும்பாலும் மாறிவிட்டதே! எவ்வாறு?

தாகூர் சொல்கிறாரே, தலை நிமிர்ந்து நில் என்று - அந்தத் தைரியம் பிறந்ததாலே!

மனிதரில் நீயுமோர் மனிதன்
மண் அன்று! இமை திற!
இவ்வாறு மனத்தின் அச்சம் போக்கப்பட்டதாலே!

பகுத்தறிவு அருவியாகப் பாய்கிறது! ஏன் என்ற தெம்பான கேள்வி எழுகிறது! அச்சம் தொலைகிறது! தலை நிமிர்கிறது! அதன்பிறகு உலகைச் சீர்குலைக்கும் குறுகிய மதில்கள் எழுப்பப்படுவதில்லை! தாகூரின் அந்தப் பரந்த உள்ளத்தைத்தான் பாரதிதாசனாரும் தனக்கே உரிய நடையில் நமக்குத் தெளிவாக்குகிறார்.

தூய உள்ளம் அன்புள்ளம் பெரிய உள்ளம்
தொல்லுலக மக்களெலாம் ஒன்றே என்னும்
தாயுள்ளம் தனிலன்றோ இன்பம்! ஆங்கே
சண்டையில்லை தன்னலந்தான் தீர்த்த தாலே

தன்னலம், முனை முறிந்து தேய்ந்து போவதாலே சண்டை சச்சரவே இல்லை என்று புரட்சிக் கவிஞர் புன்னகை பூக்கிறார்.

தன்பெண்டு தன் பிள்ளை சோறு வீடு
சம்பாத்தியம் இவை உண்டு தானுண்டென்பான்
சின்னதொரு கடுகுபோல் உள்ளங் கொண்டோன்
தெருவார்க்கும் பயனற்ற சிறிய வீணன்
என்றல்லவா தன்னலக்காரனுக்கு கவிஞர் பட்டம்
சூட்டுகிறார்.

எங்கே பரந்த சிந்தனை செயல்களை நாடி
உன் துணை வலிமையால்
இந்த நெஞ்சம் முன்னேறிச் சென்றிடுமோ,

என்று தங்கக் கவிஞர் தாகூர், பிரார்த்தனை செய்வது, தந்தையே! என்று இறைவனை நோக்கி!

உன் துணை வலிமை என்ற சொற்றொடருக்கு நான் பொருள் கொள்வது, உடன்பிறப்பாகிய உன் துணை வலிமையைத்தான்!

நானிருக்க பயமேன் என்று என் நாக்கு முழங்கியதில்லை. நீ இருக்க பயமேன் என்றுதான் என் இதயம் நிம்மதியாகத் துடித்துக் கொண்டிருக்கிறது.

எங்கே அச்சமற்றதும்
தலை நிமிர்ந்ததுமான
நிலையிருக்கிறதோ –

அங்கே நீ இருக்கிறாய்;
உன் துணையுடன் பரந்த சிந்தனை
செயல்களை நாடி
இந்த நெஞ்சம் முன்னேறிச் சென்றிடும்!

அன்புடன்,

29-5-76 **மு. க.**

02-07-1991

1746. நெருக்கடி காலக் கடிதங்கள் - 8 : தமிழ்ப் புலவர் காட்டும் தாய் யானை!

(எமர்ஜன்சி காலத்தில் ஜனநாயகக் குரல் கொடுத்த கழகத்தின் ஆட்சியைக் கலைத்து, கழகத்தினரை மிசா சிறைவாசம் போன்ற அடக்குமுறைக் கொடுமைகளுக்கு ஆளாக்கி, கழக ஏடுகளின் எழுத்து சுதந்திரத்தை தணிக்கை (சென்சார்) வாயிலாகப் பறித்து, கழகத்தையே உருத் தெரியாமல் ஆக்கிவிட நடைபெற்ற நாசச் செயல்களில் இருந்து கழகத்தைக் காத்திட 1976-ஆம் ஆண்டு முரசொலியில் கலைஞர் எழுதிய கடிதங்களில் இதுவும் ஒன்று)

உடன்பிறப்பே!

பழங்காலத் தமிழர்கள், தங்கள் ஊர்களுக்குச் சூட்டிய பெயர்கள், இருவேல் பட்டு, எப்போதும் வென்றான் என வீரத்தை விளக்கிடும் வண்ணமும் அமைந்தன.

பழமுதிர்சோலை, முதுகுன்றம், பூவிருந்தவல்லி என வளத்தைக் குறிப்பிடும் வண்ணமும் திகழ்ந்தன.

மங்கலம், நல்விளக்கு, என்ற பெயர்களையும் தமிழ்ர்கள் பெற்றிருந்தன.

அந்த நல்விளக்கில் பிறந்தவர்தான் நல்விளக்கனார் எனும் புலவர், நற்றிணையில் குறிஞ்சித்திணை - எண்பத்து ஐந்தாம் பாடலை இயற்றியவர்.

ஆய்மலர் மழைக் கண் படைத்த பாவையொருத்தி தன் காதலன் வரவுக்காக ஏங்கித் தவிக்கிறாள். காதலன், எப்படிப்பட்டவனாம்? அவன் எங்கிருந்து வருகிறானாம்?

மலைச் சாரலிலே கானவன் எய்து கொணர்ந்த முட்பன்றியின் தசைத் துண்டத்தை, தேன் மணங்கமழும் கூந்தலையுடைவள் -

சிறு குடியிலுள்ளோர் பலருக்கும் பகுத்துக் கொடுக்கின்ற உயர்ந்த மலைநாட்டையுடையவனாம் அவளுடைய காதலன்.

அவன் வருகைக்காகத்தான், தன் விழிகளை அந்த மலைப்பரப்பு முழுதும் துரத்துகிறாள்; தனக்கு முன் ஓடி, அவன் வருகிறானா என்று பாருங்கள் என்று கெஞ்சிக் கேட்டு! அவன் வந்த பாடில்லை.

மூங்கிலையொத்த அவள் தோளில் அணிந்த கலன்களை வெற்றி கொள்ளத்தக்க அவளது கைவளை நெகிழ்ந்து விழுகிறதாம். காதலனைக் காணாத ஏக்கத்தால் அவ்வளவு இளைத்து விடுகிறாளாம் அந்த ஏந்திழையாள்.

இந்த நிகழ்ச்சியையே விவரித்துக் கொண்டு போக விரும்பவில்லை நான். புலவர் அதுபற்றி தீட்டியுள்ள விரகதாப வரிகளை எழுத்துக்கு எழுத்து நான் மெருகேற்றித் தர முயன்றால், உனக்கு என் மீது சீற்றம்தான் பிறக்கும். நேரம் தெரியாதவனாக இருக்கிறானே; நிலைமை தெரியாதவனாக இருக்கிறானே - என்று என்னை மனத்துக்குள் நிந்திக்கவும் தொடங்குவாய். அதனால் நிறுத்தி விடுகிறேன், இத்துடன்!

பாடலில் என்னைக் கவர்ந்தது இந்தப் பகுதியல்ல! பாவையின் வேதனையும், அவளைப் பார்க்கத் துடித்து நிற்கும் காளையின் மனோநிலையையும், இருள் அடர்ந்துள்ள நேரத்தில் அவன் அஞ்சாமல் வரலாகாது என்று மற்றவர் தடுப்பதும் என் நெஞ்சைக் கவர்ந்த வரிகள் அல்ல!

எப்படிப்பட்ட இருள்? எத்தகைய காடு? அதைக் கூறும்போதுதானே புலவர் பெருமான் என் உள்ளத்தில் எத்தனையோ சிந்தனைகளைக் கிளறுகிறார். அடர்ந்த காடு எனலாம். இருள் மண்டிய வனம் எனக் கூறலாம்.

மரக்கிளைகளில் மலைப்பாம்புகள் விழுதுகள் போல் தொங்கிடும் - மந்திகள் கொஞ்சிடும் - வேங்கைகள் வாய் பிளந்து நின்றிடும் - கோட்டான் சப்தம் - கொடிய ஓநாய்களின் கூக்குரல் - நரிகளின் ஊளை - என்றெல்லாம் காடு பற்றி ஏடு கொள்ளாமல் எழுதலாம். ஆனால் புலவர், அந்தக் காட்சிகளில் கருத்தைச் செலுத்திடவில்லை.

பெண் யானையொன்று தன் குட்டியுடன் நடந்து வருவதை அவர் காண்கிறார். தாய் நடக்கும் அளவுக்கு வேகமாகக் குட்டி

யானையினால் நடக்க முடியவில்லை. அதனைப் புலவர் காணுகிறாரோ இல்லையோ, அவருக்கு முன்பாக அந்தத் தாய் யானை உணர்ந்து கொள்கிறது. அது உணர்ந்து கொண்டதைப் புலவரும் புரிந்து கொள்கிறார்.

கரிய இருள்! அடர்ந்த காடு! கரடுமுரடான பாதை! காட்டில் கண்ணாடித் தரையா போடப்பட்டிருக்கும்! சர விளக்குகளா இருமருங்கிலும் தொங்கிக் கொண்டு இருக்கும்!

தாய், வேகமாகச் செல்ல எண்ணுகிறது. ஆனால் தயங்கித் தயங்கி மெதுவாக நடக்கும் குட்டியானையின் சிரமத்தை அது தெளிவாக உணர்ந்து கொள்கிறது.

தாய், வேகமாக நடக்க வேண்டுமென்பதற்கு என்ன காரணம்? புலிகள் வரக்கூடும் - அவைகளின் கண்ணில் படாமல் பாதுகாப்பாகப் போக வேண்டுமென்று தான்; தாய் வேழம், வேக நடை போட எண்ணுகிறது. அதற்காகக் தன் குட்டியை விட்டுவிட்டுத் தான் மட்டும் போய்விட முடியுமா?

அதோ! அது எதிர்பார்த்தவாறு புலி உறுமிக் கொண்டு வருகிற ஒலியும் கேட்கிறது.

வேகமாகச் சென்றால், தான் தப்பி விட முடியும்; ஆனால் அந்தக் குட்டி? ஆம்! அதன் அருமைக் கன்று யானையின் கதி என்னாவது?

தன் பெரிய உடலால் மறைத்துக் கொண்டு நின்றால், குட்டி யானையைக் காப்பாற்றி விடலாம் அல்லவா? தன் உருவம் மட்டும் புலிக்குத் தெரிந்தால் பரவாயில்லை! தான் மட்டும் புலிக்கு இரையாகி, தன் குட்டியைப் பாதுகாத்து விடலாம் என்றுகூட அது கருதியிருக்கும் போலும்!

புலி, அருகே வருவது போன்ற ஒலி. ஆம், மேகங்கள் மெதுவாக உராய்ந்து முழங்குகிற இடிச்சப்தம் போன்ற உறுமல்.

தாய் யானைக்கு வேறு வழியில்லை! தன் நடையை நிறுத்திக் கொண்டது. தன் குட்டி யானையைப் பாதுகாத்தவாறு ஒரு மறைவில் நின்று கொண்டது.

அந்தப் பெரும் உருவம் தெரிந்து விட்டால் புலிக்கு வேட்டைதான். எனினும், அது பாதுகாக்க விரும்புவது தன் ஆசைக் கன்றை அல்லவா? அதைத்தான் அழகுறத் தீட்டுகிறார் புலவர்!

குறிவரி இரும்புலி அஞ்சிக் குறுநடைக்

கன்றுடை வேழம் நின்று காத்து அல்கும்

குறுகிய வரிகளையுடைய கரிய புலிக்கு இரையாகாமல் தப்ப வேண்டுமென்ற அச்சத்தால் - விரைவாகச் செல்ல முடியாத தனது கன்று யானையை அங்கேயே நின்று காத்துக் கொண்டிருக்கும் - என்பதுதான் இந்தப் பாடல் வரியின் கருத்து.

நல்விளக்கு என்னும் ஊரில் பிறந்த நல்விளக்கனார் எத்துணை நல் விளக்கத்தை இந்த நற்றிணைப் பாடலின் மூலம் நானும் நீயும் உணருமாறு வழங்கியிருக்கிறார் என்பதை நினைக்கிறேன்.

நெஞ்சமெல்லாம் இனிக்கிறது.

அன்புடன்,

7-4-76 **மு. க.**

03-07-1991

1747. நெருக்கடி காலக் கடிதங்கள் - 9 : வன்முறையால் பெற்ற வெற்றி இது!

(பிரச்சார சாதனங்கள் அனைத்தையும் கையகப்படுத்திக் கொண்டு - தி.மு.கழகத்தின் மீது எமர்ஜன்சியை பயன்படுத்தி அவதூறுகளை அள்ளிப் பொழிந்து; மக்களிடம் கழகத்தின் மீது அதிருப்தியை விளைவித்து - முறையற்ற போக்குகளால் தங்களின் விஷமப் பிரச்சாரத்திற்கு வெற்றி தேடிக் கொண்ட மத்திய அரசை மறுத்து விளக்கமளிக்க முடியாத நெருக்கடி நிலையின் போது 1976-ஆம் ஆண்டு கலைஞர் அவர்கள் முரசொலியில் எழுதிய கடிதங்களில் இதுவும் ஒன்று)

உடன்பிறப்பே!

இந்தியாவுக்கும், மேற்கிந்திய தீவுகளுக்கும் நடைபெற்ற நாலாவது இறுதி கிரிக்கெட் போட்டியில் இந்தியா தோல்வி அடைந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது! முதலில் நடைபெற்ற மூன்று போட்டிகளில் இந்தியா ஒரு போட்டியிலும், மேற்கிந்திய தீவுகள் ஒரு போட்டியிலும் வெற்றி பெற்றிருந்தன. மற்றொரு போட்டியில் யாருக்கும் வெற்றி தோல்வியின்றி சமநிலையில் முடிவு ஏற்பட்டது. எனவே இறுதி வெற்றியை நிர்ணயிக்கும் போட்டியாக, கிங்ஸ்டன் நகரத்தில் நாலாவது டெஸ்ட் போட்டி அமைந்தது. இதில் இந்தியாவின் வெற்றியை மிகுந்த ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தவர்களில் நானும் ஒருவன்!

வானொலியில் நான் வேறு எந்த நிகழ்ச்சியையும் கேட்காவிட்டாலும், இந்த கிரிக்கெட் போட்டியின் முடிவை அறிவதற்காகப் பெரிதும் ஆர்வம் காட்டிக் கொண்டிருந்தேன்.

எனக்குக் கிரிக்கெட் ஆடத் தெரியாது என்றாலும், சென்னையில் நடைபெற்ற டெஸ்ட் போட்டிகளைக் கண்ட பிறகு அந்த விளையாட்டில் ஒரு புது அக்கறையே பிறந்தது! சென்ற தடவை சென்னையில் நடந்த போட்டியில் மேற்கிந்திய

தீவுக் குழுவினரை எதிர்த்து இந்தியா வெற்றி பெற்ற போது இரு குழுவினருக்கும் இராஜாஜி மண்டபத்தில் தமிழக அரசின் சார்பில் ஒரு பாராட்டும் வரவேற்பும் அளித்து விருந்து வழங்கி மகிழ்ச்சியுற்றேன்.

விளையாட்டுக் கலையில் நமது நாடு உலகப் புகழ்பெற வேண்டுமென்பதில் நமக்கெல்லாம் இயல்பாகவே ஆசை எழத்தான் செய்யும். அதற்காக, மற்ற நாட்டு விளையாட்டு வீரர்களின் ஆற்றலை நாம் குறைத்து மதிப்பிட்டது கிடையாது.

உலகில் விளையாட்டுக் கலைகள் பல இருந்த போதிலும், கிரிக்கெட் விளையாட்டுப் போட்டிகள்தான் தலையாய இடத்தைப் பெற்று உலகத்தினர் பெரும்பான்மையோரின் கவனத்தைக் கவருவதாயிருக்கிறது. அத்தகைய சிறப்புடைய அந்த விளையாட்டுக் கலையில் இந்திய நாடு பெறுகின்ற வெற்றிகள், நம்மைப் பூரிப்படையச் செய்யும் என்பதில் வியப்பில்லையல்லவா?

சந்திரசேகர், பேடி, வெங்கட்ராகவன் போன்றவர்களின் பந்து வீச்சும், விசுவநாத், கெயிக்வாட், கவாஸ்கர் போன்றவர்கள் பந்தை அடித்து ஓட்டங்களின் எண்ணிக்கையைப் பெருக்கும் பாங்கும் மெத்தவும் நம்மைக் கவர்ந்த கலையாகும்!

இந்திய கிரிக்கெட் வீரர்கள் நளினமாக இந்த விளையாட்டை ஆடக் கூடியவர்கள்.

முரட்டுத்தனமான மட்டையடியும், ஆவேசமான பந்து வீச்சும் இந்திய வீரர்களின் பாணியல்ல! அந்த அழகிய பாணியைக் கொண்டே, அவர்கள் முரட்டு விளையாட்டுக்காரர்களான மேற்கிந்தியக் குழுவினரைத் திணற அடித்திருக்கிறார்கள். அதனால் தான் ஒரு போட்டியின் முடிவு சமநிலையாக ஆகியிருக்கிறது.

மற்ற மூன்றில் இரண்டு மேற்கிந்திய தீவினருக்கும் ஒன்று இந்தியாவுக்கும் கிடைத்துள்ளது. இறுதிப் போட்டியின் தொடக்கம் இந்திய வீரர்களைப் பொறுத்து மிகுந்த எழுச்சி நிறைந்ததாக இருந்தது.

ஆம்! முதல் இன்னிங்ஸ் ஆட்டத்தில் 306 ரன்கள் (ஓட்டங்கள்) எடுத்தோம். ஆறு விக்கெட்டுகள் இழப்புக்கு! நமது நளினமான பாணிக்குக் கிடைத்த வெற்றியாகும் அது! அடுத்து,

மட்டை பிடித்த மேற்கிந்திய தீவுகளின் குழுவினர் 391 ரன்கள் (ஓட்டங்கள்) எடுத்தனர்? இது ஒன்றும் பெரிய வித்தியாசமல்ல!

இந்தியா இரண்டாவது இன்னிங்ஸ் ஆட்டத்தில் 85 ரன்கள் எடுத்து அந்த வித்தியாசத்தை ஈடுகட்டிவிட்டு முதல் இன்னிங்ஸைப் போலவே ரன்களை குவித்திருந்தால், மேற்கிந்தியத் தீவுக் குழுவுக்கு வெற்றி கிட்டாமலே போயிருக்கக் கூடும். இப்போது அந்தக் குழு, பெற்றிருக்கிற வெற்றியும் முறையான வெற்றியென எடுத்துக் கொள்ள இயலாது!

இந்தியக் குழுவின் தலைவர் பேடி அவர்கள் விடுத்துள்ள விளக்கத்தில், இந்திய வீரர்கள் ஐந்து பேர் பாட் செய்ய முடியாத நிலையில் இருந்தனர்! எனவே இரண்டாவது இன்னிங்ஸை முடித்துக் கொள்வதாக இந்தியா அறிவிக்கவில்லை. முதல் இன்னிங்ஸ் ஆடும்போதே கெயிக்வாட், விசுவநாத், படேல் ஆகியோர் காயமடைந்தனர். மேற்கிந்திய குழுவினரின் பந்து வீச்சால் இந்த காயங்கள் ஏற்பட்டன. விசுவநாத்தின் வலது கையில் ஒரு விரல், முறிவு ஏற்பட்டுள்ளது. கெயிக்வாட்டுக்கு காதின் அருகே அடிபட்டுக் காயம் ஏற்பட்டுள்ளது. படேல், வாயில் காயம்பட்டு மூன்று தையல்கள் போடப்பட்டுள்ளன. எனது இடது கையிலும், சந்திரசேகரின் விரல்களிலும் காயம்! எங்களில் பலர் இப்படிக் காயம் அடைந்ததால் போட்டியில் ஆட முடியாத நிலை ஏற்பட்டது என்று இந்தியக் குழுவின் தலைவர் குறிப்பிட்டிருக்கிறார்.

நாம் முறையோடு ஆடியிருக்கிறோம்! அவர்களோ முரட்டுத்தனமாக மோதியிருக்கிறார்கள்! நம்மவர்களை காயப்படுத்தி ஆட முடியாமல் செய்து விட்டு காதைப் பார்த்தும், வாயைப் பார்த்தும் பந்து வீச்சு நடத்திவிட்டு, வெற்றிக் கொண்டாட்டம் நடத்துவதில் அர்த்தமென்ன இருக்கிறது!

கிரிக்கெட் விளையாட்டில் காயம் ஏற்படுவதுண்டு! இல்லையென்று சொல்லவில்லை! அதற்காக, உடல் வலிவு இருக்கிறது, அத்துடன் முரட்டு சுபாவமும் இருக்கிறது, என்பதைப் பயன்படுத்தி, வேண்டுமென்றே காயப்படுத்துவதில் நியாயம் எப்படியிருக்க முடியும்? ஆட்டத்தைக் காணும் மக்கள்தான் அதனை எப்படி ரசிக்க முடியும்? கிரிக்கெட்விதிமுறைகளின்படி அது ஒன்றுத் தவறில்லை என்றுகூட வாதாடலாம்! ஆனால்

வெளிப்படையாக அனைவருக்கும் புரிகிற உண்மையை மறைத்துவிட முடியாதல்லவா!

இரண்டு பெண்கள் பரதநாட்டியப் போட்டிக்கு அரங்கில் ஏறினார்களாம்! ஒருத்தி கொடியிடையாள்! கயல் விழியாள்! அவள் ஆட்டமும், அபிநயமும், பாவமும், லயமும், அனைத்தும் பரத நாட்டியத்திற்குரிய இலக்கணத்தோடு இருந்தன!

அவள் ஆடி முடிந்தபிறகு இன்னொருத்தி அதே அரங்கில் ஏறிக் குதித்தாள்! கண்ணன், பாலோடு சேர்ந்து உயிரையும் உறிஞ்சிய பிறகு கீழே விழுந்த பூதகி போல இருந்தாள் அவள். நாலு குதி குதித்து அந்த மேடையை எட்டுத் துண்டாக உடைத்துப் போட்டாள்!... ஆகா! இவள்தான் மேடையை உடைத்த பரதநாட்டிய மேதை என்று அங்கிருந்தோர் அவளுக்குப் பரிசு வழங்கினர்!

அந்த நிகழ்ச்சியைப் போலத்தான் இருந்திருக்கிறது, மேற்கிந்தியத் தீவுகளின் குழுவினர் ஆடிய ஆட்டம்!

இந்திய அணியினர் சோடைகள் அல்லர் என்பதற்கு எடுத்துக்காட்டுத்தான் நாலாவது போட்டியில் முதல் இன்னிங்சில் 306 ரன்கள் எடுத்த சாதனை!

அந்த ஆற்றலின் வேகம் எங்கு போய் நிற்குமோ, என்று ஏங்கிப் புகைந்த ஆத்திரத்தின் விளைவாகத்தான் நம்மவர் மீது மூர்க்கத்தனமாக பாய்ச்சலை நடத்தியிருக்கின்றனர் மேற்கிந்தியத் தீவினர்!

விக்கெட்டை வீழ்த்துவதற்குப் பதில் விளையாடியவர்களை அடித்தனர்! பந்து வீச்சைக் குண்டுவீச்சு போல நடத்தினர்! எப்படியும் வெற்றி பெற வேண்டும் என்ற நினைவில், திறமையான ஆட்டக்காரர்களைக் குறி வைத்துத் தாக்கினர்.

இத்தனைக்கும் பிறகு தங்களை வெற்றிக்குச் சொந்தக்காரர்கள் என்று அவர்கள் கூறிக் கொள்வதில் இம்மியளவுப் பொருத்தமும் இருப்பதாகத் தெரியவில்லை.

நம்மவர்களும், இதுபோன்ற நிலைமைகளுக்கு இனியாகிலும் ஆளாகாதவாறு முன்கூட்டி எச்சரிக்கையாக இருந்திட வேண்டும் என்பதையும் சுட்டிக் காட்டாமல் இருக்க முடியவில்லை.

இதை ஒரு பாடமாக எடுத்துக்கொண்டு எதிர்கால வெற்றிகளுக்கு வழி காண வேண்டும்.

நம்மைப் பொறுத்தவரையில் இந்தப் போட்டியை ஒரு தோல்வியாகக் கருதத் தேவையில்லை!

முறை தவறிய முரட்டுத்தனத்தால் அவர்கள் வலுவில் பறித்துக் கொண்ட வெற்றி! அவ்வளவுதான்!

அன்புடன்,

27-4-76

மு. க.

04-07-1991

1748. நெருக்கடி காலக் கடிதங்கள் - 10 : இனம் இனத்தைச் சேர்ந்த கதை!

(எமர்ஜன்சி காலத்தில் ஜனநாயகக் குரல் கொடுத்த கழகத்தின் ஆட்சியைக் கலைத்து, கழகத்தினரை மிசா சிறைவாசம் போன்ற அடக்குமுறைக் கொடுமைகளுக்கு ஆளாக்கி, பொய் வழக்குகள் தொடர்ந்து, கழக ஏடுகளின் எழுத்து சுதந்திரத்தை தணிக்கை (சென்சார்) வாயிலாகப் பறித்து, கழகத்தையே உருத்தெரியாமல் ஆக்கிவிட நடைபெற்ற நாசச் செயல்களில் இருந்து கழகத்தைக் காத்திட 1976-ஆம் ஆண்டு முரசொலியில் கலைஞர் எழுதிய கடிதங்களில் இதுவும் ஒன்று)

உடன்பிறப்பே!

நமது அண்ணன் ஒரு கதை சொல்வார். அதை நான் கோவை மாநாட்டிலேகூட குறிப்பிட்டேன்.

எலியொன்று தன் மகளுக்கு மிக உயர்ந்த இடத்தில் சம்பந்தம் செய்ய வேண்டுமென்று விரும்பியதாம். மிக உயர்ந்த இடத்து மாப்பிள்ளையாக யார் கிடைப்பார் என்று ஆகாயத்தை அண்ணாந்து நோக்கிச் சிந்தித்தது.

அதன் கண்களில் சூரியன் தெரிந்தான். உடனே சூரியனைப் பார்த்து கதிரவனே! கதிரவனே! என் மகள் ஒருத்தி கட்டழகி இருக்கின்றாள்; உலகத்தில் நீதான் பெரியவன். அவளை நீ எப்படியாவது மணந்து கொள்! என்று வேண்டியது.

சூரியன் சொன்னான், என்னைவிடப் பலசாலியாக மேகம் இருக்கிறது. அது, சமயத்தில் என்னையே மறைத்து விடுகிறது. ஆகவே; நீ உன் மகளை மேகத்திற்குத் துணைவியாக்கு! என்று!

எலி, மேகத்திடம் தன் விழைவினை வெளிப்படுத்தியது. மேகம் எலியாரின் கோரிக்கையை மறுத்துவிட்டது. என்னை வலிவுடையவன் என்று கருதாதே! என்னை இங்குமங்கும்

துரத்தியடிக்கக் கூடிய காற்றுதான் என்னைவிட பலசாலி என மேகம் உரைத்தது.

எலி காற்றை அணுகித் தன் மகளின் கழுத்தில் தாலியைக் கட்டுக என வேண்டியது. பெருமூச்சு விட்டவாறே காற்று தன் பலஹீனத்தை விளக்கியது:

எழில்மிகு எலியே! என்னையா வீரன், தீரன் உலகிலேயே பெரியவன் என்று எண்ணுகிறாய்? தவறு தவறு! அதோ நிற்கிறது பார் நெடுஞ்சுவர்! அதனைத் தள்ளுவதற்கு மூன்று நாட்களாக நான் முயன்று பார்த்துத் தோற்று விட்டேன். ஆகவே என்னைவிடச் சுவர்தான் பெரியவன். அங்கே சென்று பேசிப் பார் என்ற காற்று தட்டிக் கழித்ததும், எலி, சுவரிடம் ஓடிப்போய் நீதான் எல்லோரையும்விடப் பெரியவன். என் மகளைத் திருமணம் புரிந்து கொள் என்று விண்ணப்பம் செய்தது.

சுவர், கலகலவெனச் சிரித்தது. எலியாரே! என்னைக் கிண்டலா செய்கிறீர்? என்னைவிடப் பெரியவன் யாருமில்லை என்று உனக்கு யார் சொன்னது? உன்னைப் போன்ற ஒரு எலி, என் உடம்பு முழுவதும் துளை போட்டிருப்பதைப் பார்! நான் என்னதான் காற்றைத் தடுக்குமளவுக்குக் கம்பீரமாக வளர்ந்து, உயர்ந்து நின்றாலும் உன் இனத்தைச் சேர்ந்த ஒரு எலிக்கு பதில் சொல்ல முடியவில்லையே! எனவே என்னை விடப் பலசாலி எலிதான். நீ உன் பெண்ணுக்கு எலி வீட்டிலேயே மாப்பிள்ளை பார்ப்பது நல்லது என்று விரிவுரையொன்றை நிகழ்த்தியது நெடுஞ்சுவர்.

எலி, சிந்திக்கத் தொடங்கியது. நம்மை விடப் பெரியது பூனை! அதுவோ நமக்கு பகை! ஆகவே எலிகளுக்குள்ளேயே சம்பந்தம் செய்து கொள்வதே சரியான முடிவு எனத் தனக்குள்ளே கூறிக்கொண்டது. எலிக்கும் எலிக்கும் திருமணம் நடந்தது. இதுதான் கதை.

எங்கெங்கே யார் யார் உயர்ந்தோர் - சிறந்தோர் - சீமான்கள் பூமான்கள் இருந்தாலும் எலிக்குக் கிடைத்த சம்பந்தம் எலிதான் என்பதைப் போல் எங்களுக்கு நீங்கள்தான் கிடைத்தீர்கள். உங்களுக்கு நாங்கள்தான் கிடைத்திருக்கிறோம்.

எலியும் எலியும்தான் சொந்தக்காரர்களாக இருக்க முடியுமே தவிர, எலியும் புலியும் இருக்க முடியாது. அய்யோ! புலியுடன் சொந்தம் கொண்டாட முடியவில்லையே என்று எலி ஏங்கிப் பயன்

இல்லை. ஏங்கிடவும் கூடாது. அது இயலாத ஒன்று.

சில நேரங்களில் எலி போலவே தோற்றமளிக்கும் பெருச்சாளிகள் எலிகளிடம் சொந்தம் கொண்டாடி வரும். நூறு எலிகள் பகிர்ந்து உண்ண வேண்டியதை தான் மட்டும் தின்று கொழுத்துவிட்டு அந்தப் பெருச்சாளி ஓடிவிடும்.

உழைக்கும் வர்க்கம் - உறிஞ்சும் வர்க்கம் இரண்டுக்குமுள்ள பேதத்தை எடுத்துரைத்து உலகிற்குப் புதிய வேதத்தை வகுத்தவன்தான் மார்க்ஸ். அவன் சிந்தனைகளைச் செயல்படுத்தியவன்தான் லெனின்.

உழைத்தவர்கள் எலியாக முயலாக வாழுகின்றார்

ஏமாந்த காலத்தில் ஏற்றங் கொண்டோன்

புலிவேஷம் போடுகின்றான்

என்ற கருத்தைப் புரட்சிக் கவிஞர் அவர்கள், பொதுவுடமைப் பூங்காவில் பறித்த மலர்களால்தானே தொகுத்தளித்தார்.

அப்படி எலியாக முயலாக வாழுவோர்க்கு ஏற்றமளிக்கத் தமிழகத்தில் எழுந்ததுதான் திராவிடர் இயக்கம். அந்த இயக்கத்தின் அறுபதாண்டு கால வளர்ச்சியின் முதிர்ச்சிதான் தி.மு.கழகம்.

அடக்கப்பட்டோர்,
ஆண்டவன் பேரால் முடக்கப்பட்டோர்,
மனிதன் என்று சொல்லும் உரிமை அழிக்கப்பட்டோர்,
சமுதாயத்தில் புழுக்களாக மிதிக்கப்பட்டோர்,
மான உணர்வு கொள்வது பாபம் என
தண்டிக்கப்பட்டோர்,
சாக்கடைப் பன்றியினும் கேவலமாக மதிக்கப்பட்டோர்,
படிப்பா? பள்ளத்தில் கிடப்பவனுக்கா?

கல்வியா? கஞ்சி குடித்துக் கழனியில் உழல வேண்டியவனுக்கா?

உத்தியோகமா? ஊர்க்கோடியில்
குடியிருக்கும் உதவாக்கரைகளுக்கா?
என எள்ளி நடையாடப்பட்டோர்,

தகுதியுண்டா? திறமையுண்டா?
கைகட்டிக் கிடந்ததுகளுக்குக் கல்லூரி வாசனையா?
எனக் காரி உமிழப்பட்டோர்

என இந்த எலிகளுக்காக ஆரம்பிக்கப்பட்டதே தென்னிந்திய நல உரிமைச் சங்கம்; அறுபது ஆண்டுகட்கு முன்பு!

இந்த எலிகள் கூடி உருவாக்கிய உணர்வுதான்; வர்க்கபேதமாயினும், வகுப்பு வாதமாயினும் அவைகள் மதத்தின் பெயரால் சொல்லப்பட்டாலும் தகர்த்தெறிந்து இன்றைய திராவிட முன்னேற்றக் கழகமெனும் அரசியல் உயிர்த் துடிப்பாக இயங்கிக் கொண்டிருக்கிறது.

இந்தப் பயிரை வளர்க்க வியர்வை கொட்டியவர்கள், கண்ணீர் பொழிந்தவர்கள், செந்நீர் பாய்ச்சியவர்கள் ஆயிரம் ஆயிரம் வீரத் தொண்டர்களாவார்கள்.

அவர்களின் வாரிசுகள்தான் நாம்!

அவர்கள் நெருப்பிலே நின்று இந்தக் கழகத்தைக் காத்தார்கள். தணலிலே வீழ்ந்து இந்தக் கழகத்தைத் தங்கமாக்கினார்கள்.

தரக்குறைவான பேச்சு - தாக்குதல் - தடியடி - அனைத்தையும் தாங்கிக் கொண்டு இந்தக் கழகத்துக்கு ஆணிவேராக அமைந்தார்கள்.

அவர்களில் பலர் இன்று மண்ணுக்குள் உறங்கிக் கொண்டிருக்கிறார்கள். கால் நீட்டிப் படுத்திருக்கும் அந்தக் கர்மவீரர்களின் பாதார விந்தங்களை நோக்கி நன்றியுடன் வணக்கம் தெரிவிப்போம்.

கடற்கரையில் துயில் கொள்ளும் நம் மூத்த கண்மணியின் கல்லறையில் கை அடித்துச் சத்தியம் செய்வோம்.

கழகம் காப்போம்!

கடமை செய்வோம்!

அன்புடன்,

மு. க.

18-3-76

05-07-1991

1749. நெருக்கடி காலக் கடிதங்கள் - 11 : அவன் விரும்பும் இடம் எது?

(இலக்கியம், விஞ்ஞானம், வரலாறு, காவியங்கள் ஆகியவற்றை துணைகொண்டு - எமர்ஜன்சி காலத்தில் கலைஞர் அவர்கள் பல அரசியல் கருத்துக்களை முரசொலி கடிதங்கள் வாயிலாக வெளிப்படுத்தினார். அதனை மிசா சிறையிலிருந்த உடன்பிறப்புகளும் வெளியில் வேதனைக் கொடுமைகளைத் தாங்கிக்கொண்ட உடன்பிறப்புகளும் படித்து உள்ள உறுதி கொண்டனர். அவ்வாறு 1976-ல் எழுதப்பட்ட கலைஞர் கடிதங்களில் இதுவும் ஒன்று)

உடன்பிறப்பே!

இன்றைய கடிதம்; அகமா? புறமா? கலித்தொகையா? என நீ கேட்பதற்கு முன்பே சொல்லி விடுகிறேன். தமிழ்நாட்டுப் பழம்பெரும் புலவர்களையெல்லாம் விட்டு விட்டு - உன்னை உலகமகாக் கவிஞன் ஹோமரிடம் அழைத்துச் செல்லப் போகிறேன். கிரேக்கத்து மண்ணின் அந்தக் கீர்த்தி மிகுந்த கவிஞன், இலியத் ஒதஸ்ஸே என்ற இணையற்ற இரு காவியங்களை இலக்கியப் பெண்ணின் கண்கள் எனப் படைத்தவன் எனினும், அவனோ இரு கண்களுமற்ற குருடனாக - இளைஞன் ஒருவனின் துணையோடு நாட்டின் வீதிதோறும் தனது பாடல்களை இசைத்துக் கொண்டே போவானாம்.

இலியத் - ஒதஸ்ஸே - என்ற இரு காவியங்களும் ஏறத்தாழ 2500 ஆண்டுகளுக்கு முன்பு இயற்றப் பெற்றன, அந்தக் கற்பனைக் கவியின் பேராற்றலின் மொத்த உருவங்களாக!

திடீர் தேவதைகள் - அக்கினித் தெய்வங்கள் - கடலைக் கலக்கும் பூதங்கள் - புயலைப் பெருமூச்சாக விடும் பயங்கரக் கடவுள்கள் - இவைகள் எல்லாம் அவன் காவியங்களில் நடமாடும் பாத்திரங்கள் என்றாலும், உவமைகள் - அலங்கரித்துக் கொண்டு ஆட்டம் பழகும் சொற்கள் - கதையோட்டத்தின் மின்னல்

திருப்பங்கள் - குறைவில்லாமல் கிடைக்கும்; கடற்கரையில் தானே வந்து ஒதுங்கிக் கிடக்கும் ஒளி முத்துக்களைப்போல!

அவனது முதற் படைப்பான இலியத் கிரேக்க மாவீரர்கள் டிராய் எனும் நகரை, பத்தாண்டுக் காலம் முற்றுகையிட்டு இறுதியில் அந்நகரை, மண் மேடாக்கி வெற்றி பெற்ற நிகழ்ச்சியை வீரம் சொட்டச் சொட்ட எடுத்துக்காட்டும் காவியமாகும்.

லெசிடமோன் நாட்டு மன்னன் மெனிலசின் அழகிற் சிறந்த மனைவியின் மீது மையல் கொண்டு, பிரியாம் அரசின் மைந்தன் பாரிஸ் என்பவன், அவனைத் தூக்கிக் கொண்டு போய் விடுகிறான். மெனிலஸ் பெரும் படை திரட்டிக்கொண்டு போருக்குப் புறப்படுகிறான். டிராய் நகரம் முற்றுகையிடப்படுகிறது. ஒன்பதாண்டுக் காலத்திற்கு மேலாக முற்றுகை தொடர்ந்து பின்னர், போரில் வெற்றி வாகை சூடி, இழந்த மனைவியை அழைத்துக் கொண்டு மெனிலஸ் திரும்புகிறான். இந்த நீண்ட போருக்கிடையே எத்தனையோ சுவைமிகு நிகழ்ச்சிகள், களியாட்டங்கள், காதல் விளையாட்டுகள், வீரங்கொப்பளிக்கும் கட்டங்கள்.

இந்த இலியத் காவியத்தின் தொடர்ச்சிதான், ஒதஸ்ஸே என்ற ஹோமரின் மற்றொரு பெருங்காவியமாகும். டிராய் நகரை முற்றுகையிட்ட கிரேக்க மாவீரர்களில் ஒருவன் ஒதிசியஸ் - அஞ்சா நெஞ்சு கொண்டவன். இதாக்கா என்ற பகுதியின் மன்னவன் அவன். அந்தப் பகுதி ஒரு தீவாகும். பத்தாண்டுக்காலப் போரை முடித்து விட்டுத் தன்னுடைய தாயகம் திரும்பி, அன்பு மனைவியையும் ஆசை மகனையும் காண வேண்டுமென்ற துடிப்புடன் கடற் பயணம் மேற்கொள்கிறான்.

அந்தக் கடற்பயணமும் அவனுக்கு போராட்டமாகவே ஆகிவிடுகிறது. ஓராண்டு, ஈராண்டு அல்ல - பத்து ஆண்டுக் காலப் போராட்டம் - கடல் அலைகளோடு கொடிய புயல்களோடு! முரட்டுத் தேவதைகளோடு! அதுவும் தன்னந்தனியாகத் தொல்லைகள் ஏற்கிறான். நிம்மதி மூச்சுக்கே வழியில்லாமல் திண்டாடுகிறான்.

டிராய் நகரில் போர் செய்து களைத்துப் போனவன், மீண்டும் பத்தாண்டுகள் கடற்பயணத்தையே ஒரு போராட்டமாக மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. அதற்கிடையே இதாக்கா தீவில் அவனது மாளிகையைச் சூழ்ந்துகொண்டு பிரபுக்கள்

கும்மாளமடிக்கிறார்கள். அந்தப் பிரபுக்களில் ஒருவனை, ஒதீசியசின் மனைவி, திருமணம் செய்து கொள்ள வேண்டுமென்று தினந்தோறும் வற்புறுத்தப்படுகிறாள்.

அந்தக் கயவர்களை எதிர்த்துத் தனது கற்பைக் காப்பாற்றிக்கொள்ள அந்த மங்கை நல்லாள் பெரும் பாடுபடுகிறாள். கணவன் கடல் பயணத்திலே - கடும் சோதனைகளுக் கிடையிலே! காரிகையோ காமுகர்களின் குடிவெறிக் கூத்துக்கிடையிலே!

பயங்கரப் பயணத்தின் ஒரு கட்டமாக ஒதீசியஸ், கலிப்சா என்ற தெய்வப் பெண்ணுக்குரிய அழகிய தீவு ஒன்றுக்குப் போய்ச் சேர நேரிடுகிறது. அங்கே அவனுக்கு சுகவாசம்தான். கொடிய கோடை போன்ற துன்பத்திற்கு மத்தியில் குளிர்ந்த தென்றல் வீசுவது போலத்தான் அந்தத் தீவு அவனுக்கு இருந்தது. நல்ல உள்ளம் படைத்த அந்தத் தெய்வப் பெண்ணும், அவனை மீண்டும் கடற்பயணம் மேற்கொள்ள வேண்டாமென்றும், அந்தத் தீவிலேயே தங்கி உயிரைக் காப்பாற்றிக் கொள்வது நல்லதென்றும், அவனுக்குத் தேவையானது அனைத்தையும் வழங்குவதாகவும் கூறுகிறாள்.

எதை வேண்டுமானாலும் அந்தத் தூய இதயம் படைத்த தோகையாள் வழங்கிட முடிவும்; ஆனால் அவனது இதாக்கா தீவையும், இனிமை வாய்ந்த இல்லத்தையும் வழங்க இயலுமா?

இந்தப் பிரச்சினையைக் கேள்விக்குறியாக ஆக்கி, ஹோமர் எவ்வளவு அற்புதமான கட்டத்தை உருவாக்கித் தருகிறார் பார்!

அன்பும் ஆற்றலும் வாய்ந்த ஒதீசியஸ்! நீ, மனமார நேசிக்கும் இதாக்காவுக்கு எப்படியும் திரும்பிப் போய், உன் இல்லத்தாரையும் உன் மக்களையும் பார்த்தே தீர வேண்டுமென்று அவா மிகுதியால் கவலை கொண்டிருக்கிறாய். ஆனால் ஒன்று - நீ உன் தாய்நாடு திரும்பக் கூடுமானால் எனக்கு மகிழ்ச்சியே! இடையில் உன்னைத் தொடர்ந்து எதிர்க்கும் கடல் கடவுள்கள் சிலவற்றின் கடுமையான சோதனைகளை உன்னால் சமாளிக்க முடியாது என்றே கருதுகிறேன். எனவே, நீ விரும்பினால் இந்த மாளிகையில் என்றும் மாறாக வாலிப வனப்புடன் என்னுடன் சிரஞ்சீவியாக வாழலாம். என்ன சொல்கிறாய்? ஒரு தேவ கன்னிகையின் அழைப்பைப் புறக்கணித்து மானிடப் பிறவியான உன் மனைவியிடமே சென்றிட முடிவு கட்டி விட்டாயா?

கலிப்சா என்ற கடற்கன்னியின் கேள்வி இது! ஆம்; கனியிதழ்கள் மட்டுமல்ல - அவள் கடை விழியும் கேட்கிறது இந்தக் கவர்ச்சி மிக்கக் கேள்வியை!

அதற்கு ஒதீசியஸ் சொல்லும் பதிலை, ஹோமர் விவரிக்கிற அருமையே அருமை!

தேவமாதே! என் சினத் தீயை மூட்டி விடாதே! கடவுள் தன்மை வாய்ந்த உன் கட்டழகுடன் ஒப்பிடும்போது மானிட ஜாதியில் தோன்றிய என் மனைவி அழகு குறைந்தவள்தான். மாறாத இளமையும் - மங்காத வாழ்வும் உன்னைப் போலவே எனக்கும் கிடைக்குமென்று நீ கூறிய போதிலும், என் மனம் என் வீட்டையும் என் மக்களையும் காண்பதற்கே முந்துகிறது. நீ அச்சுறுத்துகிறபடி இதுவரை நான் அனுபவித்ததைப் போலவே இனியும் நான் மேற்கொள்கிற கடற்பயணத்தில் பூகம்ப தேவனான பொசிதன் எவ்வளவு தொல்லை கொடுத்தாலும் ஏற்றுக் கொள்வதென்ற முடிவுடன் புறப்பட்டு விட்டேன்

ஒதீசியசின் பதில், அவளுக்கு மகிழ்ச்சியே அளித்தது. அவனுக்கு வேண்டிய உதவிகளை செய்து அந்த நல்ல பெண்மணி, அவனை மீண்டும் கடலில் வழி அனுப்பிவைக்கிறாள்.

கடலின் நடுவே, பூகம்ப தேவன், அவனைப் பார்த்துவிட்டான். அவ்வளவுதான். மேகங்களையெல்லாம் கருமையாக்கி ஒரு அணியில் திரட்டி நிறுத்தி, தன் கையிலுள்ள வேலாயுதத்தால் ஆழ்கடலைக் குத்துகிறான். உடனே புயல் - சூறாவளி -கொந்தளிப்பு - ஒதீசியசைச் சுருட்டிக் கொள்ள அலைகளின் நீண்ட நாக்குகள் நீளுகின்றன.

அதிலிருந்து எப்படித் தப்புகிறான்? எப்படித் தன் அன்புக்குரிய இதாக்காவுக்கு செல்கிறான்?

இவைகளைத் திரையில் காண்க என்று கூற மாட்டேன்.

ஓய்விருக்கும்போது ஹோமரின் ஒதஸ்ஸேயைப் படித்துப் பார்! உணர்ச்சிக் காவியம் அது! எடுத்தால் படித்து முடிக்காமல் கீழே வைக்க மனம் வராது.

அன்புடன்,

7-11-76 மு. க.

06-07-1991

1750. நெருக்கடி காலக் கடிதங்கள் - 12 : அந்த ஏடுகளுக்கு அப்படி ஓர் அலர்ஜி!

(எக்ஸ்பிரஸ் ஏடு பேட்டிகள் என்ற பெயரால் (ஜூலை 6) சிலரது படங்களுடன் ஒரு செய்தி வெளியிட்டு கழகத்திற்கு எதிர்காலமில்லை என்ற தனது ஆசையை அவர்களில் பெரும்பாலோர் கருத்தாக வெளியிட்டுள்ளது. கழகம் சோதனைக்கு ஆளான எமர்ஜன்சி காலத்திலும் இப்படித்தான் சில ஏடுகள் நாடி ஜோசியம் கூறின! அப்போது (1976) கலைஞர் அவர்கள் அந்த ஏடுகள் குறித்து முரசொலியில் எழுதிய கடிதம் இது)

உடன்பிறப்பே!

ஆங்கில இதழ் ஒன்று - அதற்கு நமது கழகம் என்றாலே நீண்டகாலமாக ஒரு அலர்ஜி!

அலர்ஜி என்பது தீதானவற்றைத் தொடுவதாலோ, உண்பதாலோ மட்டும் ஏற்படுகிற ஒன்றல்ல!

சில குழந்தைகளுக்கு மல்லிகைப்பூ வைத்தாலே அந்த அலர்ஜி நோய் ஏற்பட்டுவிடும். இன்னும் சில குழந்தைகளைப் பொருத்தமட்டில் வீட்டில் உள்ளவர்கள் யாராவது மல்லிகையோ, முல்லையோ தலையில் சூடிக் கொண்டிருந்து அந்த வாசம் பட்டாலே அலர்ஜி ஏற்பட்டுத் தொல்லை கொடுக்கும்.

சில திருமண விழா ஊர்வலங்களில் மணப்பெண் மயக்கமுற்று விழுவதற்குக் காரணம்; அவர்கள் தலையில் வைத்துப் பின்னியுள்ள தாழம்பூவினால் ஏற்படுகிற அலர்ஜி என்று கூறுகிறார்கள்.

குளிருக்கு மெத்தவும் பயன்படுகிற அழகான கம்பெளிப் போர்வையைத் தொட்டவுடனே திடகாத்திரமுள்ள சில வாலிபர்கள் அலர்ஜியால் துன்பமுறுவதை நான் நேரிலேயே கண்டிருக்கிறேன்.

மல்லிகை, முல்லை, தாழம்பூ, கம்பளி போன்றவை மட்டுமல்ல; உணவுக்குப் பயன்படுகிற கத்திரிக்காய் சில பேருக்கு அலர்ஜி! வெண்டைக்காய் சிலருக்கு அலர்ஜி!

இப்படி நல்லவைகள் கூட சிலருடைய உடலுக்கு ஒத்துக்கொள்ளாமல் அவர்கள் அலர்ஜிக்கு ஆளாவதுண்டு.

பெரும்பாலும் அலர்ஜி சிறு சிறு மாத்திரை மருந்துகளால் குணமாகி விடக்கூடும்.

ஓரிரு சமயங்களில் இந்த அலர்ஜி மாற்று ஊசிகள் போடுகிற அளவுக்கு மிகுந்தத் தொல்லையைக் கொடுத்துப் பரபரப்பையும் ஏற்படுத்தி விடக்கூடும்.

இந்த வகையான அலர்ஜியால் பாதிக்கப்பட்டுள்ள சில ஏடுகள், மல்லிகையைக் கண்டால் - முல்லையை முகர்ந்தால் - தாழம்பூவைத் தொட்டால் - தொல்லைக்கு ஆளாகிறவர்களைப் போல தி.மு.க. என்ற சொல்லைக் கேட்டாலே எரிச்சலுக்குத் தன்னை ஆளாக்கிக் கொள்கின்றன.

சிரங்கு பிடித்தவன் தன் உடம்பை ஆசை தீரச் சொறிந்து கொள்வான். சொறியும்போது ஏதோ ஒருவகையான இன்பம் இருக்கும். அரிப்பும் அடங்கினாற்போலத் தெரியும். சொறிந்து முடிந்து கை அலுத்துப்போன பிறகுதான் அவன் உடம்பு முழுவதும் ரத்தினக்கல் பதித்தது போல சிரங்கின் புண்கள் பளபளக்கும். சீழ் பிடித்த முத்துக்களைச் சொறிந்து சிதைந்ததால் உருவான ரத்தினங்கள் அவை!

அவைகளை ரசிக்க முடியுமா என்ன? அடடா! எரிச்சலோ எரிச்சல்!

உடன்பிறப்பே, அந்த எரிச்சல்தான் நான் குறிப்பிடும் இதழுக்கு எப்போதுமே நம்மீது!

கட்டுரையாயினும், கேலிச் சித்திரமாயினும், துண்டு துணுக்குகளாயினும், பேட்டிகளாயினும், நமது கழகத்தை நாராச முறையில் சித்தரித்துக் காட்டுவதைத் தனது வாடிக்கையாகக் கொண்டிருக்கிறது.

நாடி பார்க்கத் தெரியாதவன் நான்தான் நாடு போற்றும் மருத்துவ மேதையென்று தன்னைப் பற்றிச் சொல்லிக்

கொண்டானாம். அதைப் போல அந்த ஏடு நமது நாடியைப் பிடித்துப் பார்த்ததாகக் கூறி, சே! சே! இது பிழைக்காது என்று உதட்டைப் பிதுக்குகிறது! பாவம்; அது பிடித்துப் பார்த்தது நாடியை அல்ல - தாடியை என்று விரைவில் புரிந்து கொள்ளத்தான் போகிறது. அதன் விழிக்கு ஒளியை எதிர்காலத்தில் மக்கள் வழங்கிடுவர். அதுவரையில் அந்த ஏடு தனது கண்மூடி வைத்தியத்தை நிறுத்தி வைப்பது நல்லது.

கண்ணொளியற்றவர்களிலேகூட சில பேர் தலைசிறந்த மருத்துவ நிபுணர்களாகத் திகழ்ந்து நோயின் தன்மையையும் அதன் விளைவையும் முன்கூட்டி அறிவிக்கிற ஆற்றல் படைத்தவர்களாக இருந்திருக்கிறார்கள். இப்போதும் கூட இருக்கிறார்கள். விழியில் ஒளியில்லா விட்டாலும் அவர்களுக்கு அறிவு ஒளி துணை நிற்கிறது. இந்த இரு ஒளியுமற்றவர்களின் பட்டியலிலே சிலர் இடம் பெற்று, தங்களைப் பதினெட்டுச் சித்தர்களின் பரம்பரையில் வந்தவர்கள் என்று கூறிக்கொண்டு திரிந்தால்; அது எவ்வளவு வேடிக்கையோ - அவ்வளவு வேடிக்கை, அந்த ஏடு - நமது நாடியைப் பார்த்ததாகச் சொல்லி நாம் எதிர்காலத்தில் இல்லாமலே போய்விடுவோம் என்று குறிப்பிடுகிற கேலிக்கூத்து!

இராமாயணத்தில் இலங்கைப் போரில் இந்திரஜித்தின் மாயக்கணையினால் மயங்கி விழுந்த இராம இலக்குமணர் படை வீரர்கள் இனி எழமாட்டார் என்று முடிவு கட்டியபோதுதான் சஞ்சீவி பர்வதத்தின் மூலிகை மகிமையினால் மீண்டும் உயிர் பெற்றெழுந்தனர் என்பதைக் கம்பர் அழகாகப் பாடுகிறார்.

ஏற்றமும் பெருவலி அழகோ டெய்தினர்

கூற்றினை வென்று தம்உருவுங் கூடினார்

இந்தக் கவிதை வரிகளுக்கு ஒப்ப, நமது கழகத்திற்கு ஏற்பட்ட சோதனை, சஞ்சீவி மலையின் மூலிகை எனப்படும் உனது திறத்தால் விலகி, கழகம்; ஏற்றமும் பெருவலிமையும் எழிலும் எய்தி கூற்றினை வென்று நடைபொடுகிற காட்சியினைக் காணத்தான் போகிறோம்!

எரிச்சல் ஏட்டாளர் எண்ணுவது போல என்றைக்கும் கழகம் விழப்போவதில்லை.

அன்பு உடன்பிறப்பே, வாதத்திற்காகச் சொல்கிறேன் - அப்படிக் கழகம் விழுந்து விடுவதாக இருந்தாலும் -

விழுந்தாலும் விதை போல விழுவோம்! என்று கவிஞர் அப்துல் ரகுமான் பாடினாரே; அதைப் போல விழுவோமே தவிர, முளைப்பதற்காக விழுவோமே தவிர, ஆல்போல் தழைப்பதற்காக விழுவோமே தவிர - அழிவதற்காக விழ மாட்டோம்!

நாம் எதற்காக அழிய வேண்டும்? நாம் என்ன வன்முறையாளர்களா? சட்டம் ஒழுங்கு அமைதிக்கு மதிப்புத் தராத கூட்டமா? நாட்டுப் பற்றும் மொழிப் பற்றும் நமதிரு விழிகள் எனக் கருதி அண்ணா வழியில் அமைதி காக்கும் நமக்கு அழிவை அணைத்துக் கொள்ள வேண்டிய அவசியமென்ன வந்தது?

அசூயை - ஆத்திரம் - எரிச்சல் - இன்னும் வளர்கிறார்களே என்ற மனப் புழுக்கம் - இவைகளின் காரணமாக மக்களைக் குழப்புவதற்காக வரிந்து கட்டிக் கொண்டு பணியாற்றுகிற அந்த ஏட்டாளர்களின் எண்ணம் கனவிலே கூட பலிக்காது என்பதை, உடன்பிறப்பே! உனக்கு நான் உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சஞ்சீவியாக நீ யிருக்கும்போது
சாவு நெருங்குமோ நமது கழகத்தை!
இல்லை - ஒருக்காலும் இல்லை!

அன்புடன்,

30-10-76

மு. க.

07-07-1991

1751. நெருக்கடி காலக் கடிதங்கள் - 13 : தொடங்கிய பயணம் தொடர்கிறது!

(தத்துவமேதை டி.கே. சீனிவாசன் குடும்ப நிதி திரட்டுவதற்காக தஞ்சையில் 1976 நவம்பர் 20-ஆம் நாள் கலைஞர் கலந்து கொண்ட ஒரு சிறப்புக் கூட்டம் நடைபெற்றது. எமர்ஜன்சி காலத்திலும் அந்தக் கூட்டத்திற்குக் கட்டணம் செலுத்தி ஆயிரக்கணக்கானோர் வந்தனர். பொதுக்கூட்டம் பேச முடியாத அந்த நெருக்கடி காலத்தில் மணவிழா நிகழ்ச்சிகள், மண்டபங்களில் சிறப்புக் கூட்டங்கள், மூலமே கலைஞர், கருத்துக்களை எடுத்து வைத்தார். அந்தக் கூட்டத்தின் தொடர்பாக 22-11-76 அன்று கலைஞர் முரசொலியில் எழுதிய கடிதம் இது)

உடன்பிறப்பே!

நவம்பர் இருபதாம் நாளன்று தஞ்சை நகரில் தத்துவமேதை டி.கே. சீனிவாசன் அவர்கள் எழுதிய மலர்ச்சியும் வளர்ச்சியும் என்ற நூல் வெளியீட்டு விழா ஒரு சிறப்புக் கூட்டமாக ஏற்பாடு செய்யப் பெற்று நுழைவுக் கட்டணம் செலுத்தி ஆயிரக் கணக்கானவர்கள் கலந்து கொண்டு ஏற்றமிகு நிகழ்ச்சியாக நடைபெற்றது.

மலர்ச்சியும் வளர்ச்சியும் என்பது ஒரு அருமையான கதைப் புத்தகம் என்றாலும் - அந்தப் புத்தகம் வெளியிடப்பட்ட நவம்பர் இருபதாம் நாள் என்பது; என்னைப் பொறுத்தவரையில் சிறப்புக் கூட்டத்துப் பேச்சுக்கு ஏற்ற தலைப்பாக அமைந்தது என்றால் அது மிகாயாகாது.

இன்று திராவிட முன்னேற்றக் கழகமாக மணம் வீசி வளர்ச்சி பெற்றிருக்கும் இந்த இயக்கத்திற்கான மலர்ச்சி 1916-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் இருபதாம் நாளன்றுதான் ஏற்பட்டிருக்கிறது. தஞ்சையில் 1976-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 20-ஆம் நாள் மலர்ச்சியும் வளர்ச்சியும் என்ற தலைப்பில் உரையாற்றும்போது - இந்த இயக்கத்திற்கு அறுபது ஆண்டு மணி விழா ஆண்டாகவன்றோ திகழ்கிறது என்பதனை எடுத்துக் கூறினேன்.

அறுபது ஆண்டுகளுக்கு முன்புதான் சென்னையில் டாக்டர் நடேசனார் எனும் அறிஞர் பெருமகன் திருவல்லிக்கேணியில் திராவிடர் சங்கம் என்ற ஒரு அமைப்பை உருவாக்கினார்.

பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உரிய நியாயங்கள் எல்லா துறைகளிலும் கிடைத்தாக வேண்டும் என்ற குறிக்கோளுடன் நடேசனார் உழைத்தார். இந்திய தேசிய காங்கிரசில் இணைந்து உழைத்துப் பிறகு விலகிக் கொண்ட தியாகராயரின் உள்ளத்தை டாக்டர் நடேசனார் கொண்டிருந்த இலட்சியங்கள் ஈர்த்திடத் தொடங்கின.

சமுதாயப் பணியொன்றினால் மட்டும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் - குறிப்பாக பிராமணரல்லாத மக்களுக்கும் - நன்மைகளைச் செய்துவிட முடியாது என்றும் அரசியலிலும் அந்த மக்களைப் பங்குபெறச் செய்ய வேண்டுமென்றும் அந்த இருபெரும் மேதைகளும் முடிவு செய்தனர்.

காங்கிரஸ் கட்சியில் இருந்த டாக்டர் நாயர் அவர்களும் அந்தக் கட்சியிலிருந்து விலகி இவர்களோடு இணைந்தார்.

மூவரின் சிந்தனையிலே விளைந்திட்ட முத்தாகத்தான் 1916 நவம்பர் இருபதாம் நாள் சென்னையில் கூட்டப்பெற்ற மாநாட்டில் தென்னிந்திய நல உரிமைச் சங்கம் தோன்றியது.

அந்த அமைப்பின் கொள்கைப் பிரச்சாரத்திற்காகத் தமிழிலே திராவிடன் என்ற ஏடும், தெலுங்கிலே ஆந்திர பிரகாசினி என்ற ஏடும், ஆங்கிலத்திலே ஜஸ்டிஸ் என்ற ஏடும் நாளேடுகளாகத் தொடங்கப் பெற்றன.

திராவிடன்என்ற ஏட்டின் பெயரால் திராவிடர் கட்சி என்றும் ஜஸ்டிஸ் என்ற ஏட்டின் பெயரால் ஜஸ்டிஸ் கட்சி அல்லது நீதிக்கட்சி என்றும் அமைப்பின் பெயர் விளங்கலாயிற்று.

நடேசனாரின் உணர்விலே எழுந்து, நாயரின் துணையுடன் தியாகராயரின் பேராற்றலினால் மலர்ச்சி பெற்ற மாபெரும் இயக்கத்தின் வளர்ச்சிதான் இன்றைய தி.மு.கழகம் என எண்ணிடும்போது அறுபதாண்டு கால வரலாற்றின் கடந்தகால நிகழ்ச்சி ஏடுகள் அகக்கண் முன்னே எத்துணை கம்பீரமாகப் புரள்கின்றன தெரியுமா?

வெள்ளுடை வேந்தர் தியாகராயர், வெள்ளையருக்குத் தாசர் என்று இகழப்பட்ட காலமெல்லாம் இருந்ததுண்டு. ஆனால் அவர் தலைதாழாச் சிங்கமாகத் தன்மானச் சுடரொளியாக உலவினார் என்பதற்கு எத்தனையோ எடுத்துக்காட்டுக்கள் உண்டு.

சென்னை மாநகராட்சியின் தலைவர் பொறுப்பைத் தியாகராயர் ஏற்றிருந்த காலம் - அப்போது சென்னைக்கு வருகை தந்த கன்னாட் பிரபு என்ற ஆங்கிலேயருக்கு மாநகராட்சியில் வரவேற்பு வழங்கிட முடிவு செய்யப்பட்டிருந்தது. ஆங்கிலேயர் ஆட்சியில் உள்ள பெரும் அதிகாரிகளையோ, தலைவர்களையோ வரவேற்பது என்றால் சில முறைகள் கட்டாயமாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டும். தலைப்பாகை அணிந்து கொள்ள வேண்டும். நீளமான கறுப்புக் கோட்டும், வெண்மையான கால் சட்டையும் போட்டுக் கொள்ள வேண்டும். இந்த சம்பிரதாயத்தைத் தியாகராயர் ஏற்றுக்கொள்ளவில்லை. வழக்கமாகத் தான் அணியும் தூய்மையான வெள்ளுடையைத்தான் அணிந்து கொள்ள முடியும் என்று கூறிவிட்டு, வரவேற்புக்குத் தான் வர இயலாதென்றும் நகராட்சியின் துணைத் தலைவர் வருவார் என்றும் செய்தி அனுப்பிவிட்டார். அப்போது சென்னை கவர்னராக இருந்த வெல்லிங்டன் பிரபு, இந்தச் செய்தியைக் கேள்வியுற்று உடனே தியாகராயருக்கு வேண்டுகோள் விடுத்தார். கன்னாட் பிரபுவை வரவேற்க, தியாகராயர் வழக்கமான வெள்ளுடையிலேயே வரலாம் - வரவேண்டும் என்பதுதான் வேண்டுகோள்.

தொடக்கத்திலேயே இந்தியர்களுக்கு உத்தியோகச் சலுகைகள், உத்தியோக உயர்வுகள் போன்ற கோரிக்கைகளின் அடிப்படையிலே உருவான காங்கிரஸ் இயக்கம், காலகட்டத்திலே இந்திய நாட்டு விடுதலை இயக்கமாக வளர்ச்சி பெற்றது.

அதைப்போலவே தென்னிந்தியாவில் பெரும்பான்மையான மக்களுக்கு உத்தியோகங்களில் உரிய நியமனங்கள் கிடைக்கவில்லையென்று அதிக இடங்களைப் பெற்றிட வேண்டுமென்று தொடங்கிய திராவிடர் சங்கம், நீதிக் கட்சியாக வளர்ந்து ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட மக்களின் குரலாக ஒலித்து ஆட்சிப் பொறுப்பையும் ஏற்று நடத்தி - இடையிலே நடை தளர்ந்து, பிறகு பெரியாரும் அண்ணாவும் அந்த இயக்கத்தின் சேவை, நமது மக்களுக்கு எந்த அளவுக்குத் தேவை என்பதை எடுத்துக்கூறி - பங்களாக்களிலும், தோட்டங்களிலும், அரண்மனைகளிலும்,

ஆடம்பர விழாக்களிலும் சுருங்கிவிட்ட அந்த இயக்கத்தை மக்களின் இயக்கமாக மாற்றித் திராவிடர் கழகமெனும் பெயர்சூட்டி வளர்த்தனர்.

சமுதாயத் துறையிலே தனிக் கவனம் செலுத்திய பெரியார், திராவிடர் கழகத்தை நடத்திடவும் - அரசியல் ரீதியாகவும் நமது மக்களுக்கு தொண்டாற்ற வேண்டுமென்று விரும்பிய அண்ணா அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தை நடத்திடவும் தலைமையேற்றனர்.

பெரியாரின் சமுதாய சீர்திருத்தக் கொள்கைகளை இதயத்தில் ஏந்தி, அண்ணாவின் பண்பாடு மிகுந்த அரசியல் கருத்துக்களை - கொள்கைகளை - குறிக்கோள்களை - உயிர் மூச்செனக் கொண்டு இன்று பணியாற்றுகிற திராவிட முன்னேற்றக் கழகம், தனது அறுபதாண்டு கால இலட்சியப் பயணத்தைத் திரும்பிப் பார்த்து - அந்தப் பயணத்தில் ஈடுபட்டு கொள்கை மாறாது குன்றென நிமிர்ந்து நின்று - மறைந்துவிட்ட மாவீரர்களுக்கெல்லாம் வணக்கமும் நன்றியும் தெரிவித்து - மேலும் தொடர்ந்த நடத்திட, உறுதியுடன் திகழ்கிறது என்பதைத் தஞ்சை விழாவிலே நான் விரிவாக எடுத்துச் சொன்னேன்.

இந்த மாபெரும் இயக்கத்தை அறுபதாண்டு காலமாகக் கட்டிக் காத்த இலட்சியவாதிகளையெல்லாம் அந்தப் பெருவிழாவிலே நினைவு கூர்ந்தேன்.

தொடங்கிய பயணம், தொடருகிறது - இடையிலே சிலர் வருவார் - போவார்! அந்தச் சிலரை நினைத்துக்கொண்டு - பலருக்காக நாம் நடத்துகிற பயணத்தை நிறுத்திவிட முடியாதல்லவா?

எனவே, என் அன்பு உடன்பிறப்பே, நீ என் அருகிலே இருந்தாலும் - அல்லது எவ்வளவு தொலைவிலே இருந்தாலும் - நம் இதயங்கள், இந்த இலட்சியப் பயணத்திற்காக எப்போதோ பிணைக்கப்பட்டு விட்டவை என்பதை உணர்ந்து நடந்துகொண்டே இருப்போமாக!

அன்புடன்,

மு. க.

22-11-76

08-07-1991

1752. நெருக்கடி காலக் கடிதங்கள் - 14 : இதயத் தொடர்பு என்றும் இருக்கும்!

(ஆட்சி மன்றம், பொதுமன்றம் எனப்படும் எம்மன்றமாயினும் நம்மீது எரிச்சல் கக்குவோர் என்றைக்கும் இருந்திடத்தான் செய்கின்றனர். அதிலும் எமர்ஜன்சி காலத்தில் நம்மைக் கொடுக்கு கொண்டு கொட்டியோர் ஏராளம்! ஏளனம், ஏகடியம், ஏச்சு, இழிதகைத் தாக்குதலோ தாராளம்! அந்த நெருக்கடிக் காலத்தில் கழக உடன்பிறப்புகளை அடிக்கடி சந்திக்க இயலாத சூழலில் தணிக்கைக்குத் தப்பி முரசொலியில் 1976-ஆம் ஆண்டு கலைஞர் எழுதிய கடிதங்களில் இதுவும் ஒன்று)

உடன்பிறப்பே!

இடையிலே இரண்டு மூன்று நாட்கள் கடிதத் தொடர்பு கொள்ளமுடியாமைக்கு வழக்கம்போல் என்னை மன்னித்துவிடு!

எழுத்துக்களின் வாயிலாக நம் இதயங்கள் சங்கமமாகின்றன! நான் உன்னை நேரிலே காணுகிற உணர்வையும், நீ என்னை நேரிலே காணுகிற உணர்வையும், முறையே கடிதம் எழுதும்போதும் நீ கடிதத்தைப் படிக்கும்போதும் பெறுகிறோம்.

இடையிடையே தொய்வு ஏற்படக்கூடிய சூழ்நிலை! நீ என் மீது கோபித்துக் கொள்ள மாட்டாய் என்பது எனக்கு நன்றாகத் தெரியும்.

ஏனெனில், எவ்வளவு துன்பச் சுமைகளை என் தோளும் தலையும் தாங்கிக் கொண்டிருந்தாலும்; இதயம் வலியெடுக்கிற அளவுக்கு இடுக்கண்கள் நச்சுக் கணைகளாகத் தாக்கினாலும்; நான் நெருப்பில் நிற்க வைக்கப்பட்டாலும்; நீர்ச் சுழலில் கையும் காலும் கட்டப்பட்ட நிலையில் தூக்கி எறியப்பட்டாலும், உன்னுடைய அன்பு முகத்தை நினைத்துக் கொண்டு, அய்யோ! நமது உடன்பிறப்புக்காகவாவது நாம் தொல்லைகளை எதிர்த்துச்

சமாளித்து வெற்றிவாகை சூடி வெளிவர வேண்டுமே என்ற துடிப்பில் எல்லா வேதனைகளையும் மறந்து விடுகிறேன்.

நேரில் பார்க்க முடியவில்லை. நானும் வருவதற்கான வாய்ப்புகள் கிட்டவில்லை. நீ வந்து வந்து போகிறாய் என்றாலும், எல்லா உடன்பிறப்புகளும் சென்னைக்கு வந்து விட்டுப்போவது என்பது முடிகிற காரியமும் அல்ல! இந்த நிலையில் நித்ய கண்டம் பூரண ஆயுள்! என்பார்களே, அதுபோல இந்த கடித தொடர்பு அமைந்திருக்கிறது!

உனக்கு நான் கடிதம் எழுதிக் கொண்டேயிருக்கலாம்! என்னால் எழுத முடியாமலும் போகலாம்! எழுதினாலும் உனக்கு அது கிடைக்காமலே கூடப் போய் விடலாம்! எனவேதான் உனக்கு ஆயிரம் முறை சொல்லுகிறேன், அழுத்தம் திருத்தமாகச் சொல்லுகிறேன், எந்தத் தொடர்புகள் நம்மிடையே அறுந்து போனாலுங்கூட, அதற்காகக் கவலை கொள்ளாமல் - நம் இதயத் தொடர்பினை உறுதிப் படுத்திக்கொள்ள வேண்டும். அந்தத் தொடர்பைத்தான் யாராலும் அசைக்க முடியாது! அழிக்க முடியாது!

அதிலும் அது உறுதிபட்டு விடுமேயானால் இடையிலே பகையும் புகமுடியாது! பச்சைச் சிரிப்புடன் பசப்பு மொழியுடன் இச்சகம் பேசிடும் வஞ்சகப் போக்கும் நுழைந்திட இயலாது!

கப்பலுக்குப் போனபிள்ளை நாலைந்து ஆண்டு காலம் கடிதம் கூடப் போடாமல் இருந்து, திடீரென்று ஒரு நாள் இளம் மீசையை மெல்லத் தடவியவாறு தாயகம் திரும்பி, தாயின் எதிரிலே நின்றால், அந்தத் தாயின் அகத்தில் இத்தனை நாள் ஏண்டா கடிதம் எழுதவில்லை? என்ற கோபம் முதலில் கிளம்புமா? வந்தாயடா என் ராஜா! என் கண்ணே! என் கற்கண்டே! என்ற பாசம் பீறிட்டு எழுமா? பாசந்தானே வெள்ளமெனப் பாயும்!

அதுபோலத் தொலை தூரமோ, கடிதத் தொடர்பற்ற நிலையோ, இடையில் உள்ள பேராறுகளோ - பெருஞ்சுவர்களோ - நெடிய கதவுகளோ, நீண்டிருக்கும் காடுகளோ, என்றைக்கோ ஒரு நாள் விலகிக்கொண்டு பிரிந்தவர்களைக் கூடத்தான் செய்திடும்.

பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ என்ற நிலையை ஏற்படுத்தத்தான் செய்திடும்! எந்தச் சூழ்நிலையிலும் நீ கழகத்தோடுதான் இருக்கிறாய் என்பதை நானறிந்து புளகாங்கிதம் கொள்கிறேன்!

செந்நீர் சிந்திக் கழகத்தை வளர்த்த நீ என்னைச் சந்திக்கும் போதெல்லாம் கண்ணீரால் பேசுகிறாய்! உன் இதயச் சுவர்களில் எழுதப்பட்டிருக்கும் வாசகங்களை என்னால் படிக்க முடிகிறது!

தலைமை எங்களுக்கு என்ன தாக்கீது தருகிறது எனக் கேட்டாய்! அமைதியாக, உறுதியாக, கழக ஆக்கப் பணிகளைச் செய்திடுக என்று தலைமை கூறிற்று! உறுப்பினர்களைச் சேர்த்திடு என அறிக்கை தந்தார் பொதுச்செயலாளர்!

உறுப்பினர்கள் சேருவரோ? என மாற்றார் கேலி பேசினர்! ஆமாம், சேர மாட்டார்கள் என அவர்கள் நம்பினார்கள்! அளவோடு சேர்ந்தால் போதும்; அதுவும் அழுத்தம் திருத்தமானவர்களாக இருந்தால் போதும் என்றுதான் நாங்கள் கூட கருதினோம்! ஆனால் ஆரம்பமே ஆர்வப் பெருங்கடலாக அமைந்திருப்பதைக் காணுகிறோம். உறுப்பினர் சேர்க்கும் விண்ணப்பத் தாட்கள் தீர்ந்து விட்டன. மேலும் அச்சாகிறது. சற்றுப் பொறுத்துக் கொள்ளுங்கள் என்று அமைப்பு நிர்வாகிகளுக்குச் சமாதானம் கூறவேண்டிய நிலைமையல்லவா இப்போது ஏற்பட்டிருக்கிறது! இப்போது என்ற வார்த்தைக்கு நான் ஏன் அவ்வளவு முக்கியத்துவம் கொடுத்துச் சுட்டிக் காட்டுகிறேன் என்று உனக்குப் புரியாமலா போய்விடும்!

உடன்பிறப்பே, சேறும் சகதியும் வாரி வாரி, வீசுகிறார்கள் சிலர்! இழிமொழியும் பழிச்சொல்லும் இல்லாததும் பொல்லாததும் அம்புகளாகப் பாய்கின்றன! சிலர் கனல் கக்குகின்றனர்!

ஏடுகள் சில, எடுத்தேன் கவிழ்த்தேன் என்று ஆர்ப்பரிக்கின்றன! எட்டப்பர்கள் எக்காளமிடுகின்றனர்!

எதிர்க்கட்சியினரில் சிலர் எப்போதுமே எதிர்க்கட்சியாக இருந்தவர்கள், அவர்கள் தாக்குவதில் கூட பொருள் உண்டு! அவர்களையும் மிஞ்சுகிற அளவுக்கு, ஏன் அவர்களே கூட கையாள விரும்பாத சொற்களைக்கொண்டு பழி தீர்க்கும் மனப் போக்குடன் அல்லவா நம்முடன் இருந்து பிரிந்து போனவர்கள் பேசுகிறார்கள்! எழுதுகிறார்கள்! தாக்குகிறார்கள்!

ஆனால் இது; நம் கழகத்துக்குப் புதிய அனுபவமல்ல!

1972-லும் சரி, இப்போதும் சரி, பிளந்துபோன சிலர் தாக்குவதைப் போலத்தான், 1961-ஆம் ஆண்டில் நம்மிடமிருந்து

த 894.8116
திரு.க. அறக்கட்டளை

பிரிந்து போனவர்கள் நம்மைத் தாக்கினார்கள். அவர்களும் கொஞ்ச நாள் தனிக்கட்சி நடத்தினார்கள். பின்னர் சேரவேண்டிய இடத்தில்சேர்ந்து விட்டனர், தனிக் கட்சியைக் கலைத்து விட்டு!

அப்போது அவர்களைப் பற்றி அறிஞர் அண்ணா எபதிய கடிதத்தில் ஒரு பகுதியைப் படித்துப் பார்த்தேன். என்னை நானே தேற்றிக் கொண்டேன்.

தம்பீ! மன முறிவுகள் ஏற்பட்டதுண்டு - பிளவுகள் காணப்பட்டதுண்டு - புகார்கள் வெளியிடப்பட்டதுண்டு - ஆனால், அப்பப்பா! பகை, இந்த அளவுக்குக் கக்கப்பட்டதுண்டா? எப்போதாகிலும்? எந்தக் கட்சியிலாகிலும்?

அதை எண்ணும்போதுதான் தம்பீ, இவர்கள் நெடுங்காலமாகவே, இவ்வளவு பகை உணர்ச்சியை மனதிலே குவித்து வைத்துக் கொண்டிருந்தார்கள்; சமயம் வரட்டும், வரட்டும் என்று பார்த்துக் கொண்டிருந்தார்கள் என்பது புரிகிறது! நானோர் ஏமாளி - துளியும் இப்படி இருக்கக்கூடும் என்ற ஐயப்பாடு எனக்கு எழவே இல்லை! கடைசி விநாடி வரையில் கழகத்தின் கட்டுக்கோப்புக்காக வாதாடுகிறார்கள் - விதிமுறைகளில் மாற்றம் காண விழைகிறார்கள் என்றுதான் எண்ணிக் கொண்டிருந்தேன். சிறிதளவுகூட என்னைப் பற்றியோ, அவர்கள் ஏற்றுக் கொண்டிருந்த ஏற்புடைய கொள்கை பற்றியோ, இத்தனை பகை அவர்கள் உள்ளத்திலே புற்றரவு போல இருக்கிறதென்று நான் நினைக்க வேயில்லை.

1961-ஆம் ஆண்டு தம்பிக்கு எழுதிய மடலில் அண்ணன் கொட்டிய குமுறல் இது! அதனைவிடப் பன்மடங்கு பயங்கரமான பண்பற்ற தாக்குதலைத் தான் நடத்துகின்றனர் இன்று, நம்மோடு பழகியவர்கள்! நலன் பல பெற்றவர்கள்!

அண்ணனை நினைத்து இதனைத் தாங்கிக் கொள்ள வேண்டியதுதான்!

அவர் வடித்துத் தந்த கருத்துக்கள் துணையாக இருக்கின்றன! அவர் வகைப்படுத்திய குடும்ப பாச உணர்வு உறுதி பெற்றுத் திகழ்கிறது! எனவேதான் என்னைச் சந்திப்பவர்களுக்கு நான் கூறுகிறேன்; பெரியார் தந்த துணிவும் - அண்ணா தந்த கனிவும் - அனுபவத்தின் காரணமாக நாம் பெற்றுள்ள தெளிவும் - நமக்கு ஒளி காட்டும் விளக்குகளாகட்டும் என்று!

அமைதியான சிந்தனை - உறுதியான உள்ளம்!

ஆர்வங் குன்றாத ஆக்கப் பணிகள்! எந்தத் தொடர்பு இடையிலே அறுந்தாலும் இதயத் தொடர்பு அறுந்திடாத உறவு! இவைகளால் நமது கழகம் காலா காலத்துக்கும் வாழும்!

அன்புடன்,

9-5-76

மு. க.

11-07-1991

1753. நெருக்கடி காலக் கடிதங்கள் - 15 : எருக்கம்பூவில் இனிய மணம் தேடுவதோ?

(நடந்து முடிந்த தேர்தல் முடிவுக்குப் பிறகு தி.மு.க. தீர்ந்து விட்டது எனக் கூறிடுவோரும் - திரும்பத்திரும்ப தி.மு.க.வையே வசைபாடிக் கொண்டிருக்கிறார்களே; இது போல எமர்ஜன்சியின் போதும் தி.மு.க. தீர்ந்து விட்டது என எழுதிய ஏடுகள் - பேசிய பிரமுகர்கள் உண்டு. அந்த ஏசலாளர்களையும், ஏடுகளையும் பற்றி 1976-ஆம் ஆண்டு முரசொலியில் கலைஞர் எழுதிய கடிதங்களில் இதுவும் ஒன்று)

உடன்பிறப்பே!

கொம்பேறி மூக்கன் என்று ஒரு பயங்கரமான பாம்பு! அதைப்பற்றி கிராமங்களிலே கதை போலச் சொல்வார்கள். அது யாரையாவது கடித்து விட்டால், உடனே அது மரக்கொம்பின் உச்சியிலே ஏறி அந்த ஊர் சுடுகாட்டைப் பார்க்குமாம்! ஏன் தெரியுமா? தான் கடித்த ஆள் செத்துவிட்டானா என்று தெரிந்து கொள்வதற்காக! அதனால்தான் அதற்கு கொம்பேறி மூக்கன் என்று பெயராம். சுடுகாட்டில் பிணம் எரியத் தொடங்கினால், அது கொம்பைவிட்டுக் கீழே இறங்குமாம்! அதனுடைய நாச எண்ணத்தைப் புரிந்துகொண்டுள்ள கிராம மக்கள் அந்தப் பாம்பை ஏமாற்ற ஒரு தந்திரம் செய்வார்களாம்.

அது ஒருவனைக் கடிப்பதாக வைத்துக் கொள்வோம். உடனே ஊரார், அவனுக்கு வேண்டிய சிகிச்சைகளை அளிப்பார்கள்! அதற்குள் சில பேர், வைக்கோலைக் கொண்டு போய் சுடலையில் போட்டுக் கொளுத்துவார்கள்! அந்த நெருப்பை பார்த்துவிட்டு கொம்பேறி மூக்கள், கொம்பிலிருந்து கீழே இறங்குமாம். அந்த நச்சரவம் கீழே இறங்க, இறங்க, அதனால் கடிக்கப்பட்ட மனிதனின் உடலில் ஏறிய விஷமும் இறங்கிவிடுமாம்! அவன் உயிர்பெற்று எழுவானாம்!

அந்தக் கொம்பேறி மூக்கனைப் போல குணம் படைத்த ஏடுகள் சில இருக்கின்றன. கழகத்தைக் கடிக்கின்றன. கழகம் அழிந்துபோய் விட்டதா? என்று அவலோடு கொம்பில் ஏறி உற்றுப் பார்க்கின்றன. சுடலையில் எரிகிற எந்த நெருப்பையோ கண்டுவிட்டு, கழகம் சாம்பலாகி விட்டது என்ற களிப்புடன் கீழே இறங்குகின்றன. அந்த நச்சுப் பாம்பின் பல்லுக்கும் ஈடுகொடுக்கக்கூடிய வல்லமை வாய்ந்த ரத்தம், கழகத்திற்கு உண்டு என்பதை அவை உணராத காரணத்தால் மரக்கொம்பைவிட்டுக் கீழே இறங்கி வந்ததும், கழகம் கம்பீரமாக உலவிக் கொண்டிருப்பதைப் பார்த்துத் திகைக்கின்றன. மீண்டும் மீண்டும் தீண்டுகின்றன. மீண்டும் மீண்டும் மரக்கிளையில் ஏறிப் பார்க்கின்றன.

மாண்டுவிட்டது என்று மகிழ்ந்தோமே, அதற்கு மாறாகக் கழகம் மகத்தான சக்தியாகவன்றோ வடிவெடுத்து நிற்கிறது என மருள்கின்றன!

உடன்பிறப்பே, நடுநிலை - நாகரீகப் பண்பாடு - பத்திரிகை நெறி - இவைகளுக்கு மதிப்பளித்து பாவேந்தர் கூறியது போல் காரிருள் அகத்தில் நல்ல கதிரொளியாகவும், பேரறிவாளர் நெஞ்சில் பிறந்த கருத்தோவியங்களாகவும், எத்தனையோ ஏடுகள், நாட்டில் நடமாடுகின்றன.

கட்சிச் சார்புடைய ஏடுகளும் இருக்கின்றன; அவைகள் தங்கள் கட்சிக் கருத்துக்களை மென்மையாகவோ, அல்லது கடுமையாகவோ கூறத்தக்க அளவுக்கு இருந்திடினும், இழிநிலை ஏடுகளாக இயங்குவதில்லை.

இவைகளுக்கு அப்பாற்பட்டு இருட்டடிப்பு மூலம் நமது கழகத்தை வலிவிழக்கச் செய்யலாம் என சில ஏடுகள் உள!

கடைநிலை ஏடுகளாக உள்ள சில கட்சிச் சார்புடைய ஏடுகள்! அல்லது கழக எதிர்ப்பு ஏடுகள்! இந்த ஏடுகள்தான் கொம்பேறி மூக்கள் குணங்கொண்டவைகளாகத் திரிகின்றன.

சுட்டெரித்துப் பிடிச்சாம்பலாக்கி விட்டோம் கழகத்தை, என்று கர்ச்சிப்பது! மறுநாள், கழகத்தின் பேருருவினைக் கண்டு சேறு சகதியை அள்ளி வீசுவது!

இப்படி எழுதுகின்றனவே ஏடுகள் - இது நியாயமா? என்று நீ என்னைக் கேட்டுத் துளைக்கிறாய்! உன் மனத்தைப் புண்படுத்த

வேண்டுமென்பதுதான் அவைகளின் நோக்கம். உன்னால் வளர்க்கப்பட்ட கழகத்தைச் சீர்குலைக்க வேண்டுமென்பதுதான் அவைகளின் குறிக்கோள். ஆந்தையிடம்போய் கிளியின் அழகை எதிர் பார்க்கிறாயே, அது ஆந்தையின் குற்றமா? உன் குற்றமா?

குயில் போல ஏன் நீ கூவவில்லை? என்று கோட்டானிடம் கேட்டால், கோளாறு; கேட்டவன் மூளையில்தான் என்பதுதானே பதிலாக இருக்கும்!

மல்லிகை போல, மருக்கொழுந்து மணக்காமலிருக்கலாம்! அதனால் அதற்கு மணமில்லை என்று கூறிடார் எவரும்! மணத்தின் வகை வேறு!

ஆனால் மல்லிகை போலவோ, அல்லது மருக்கொழுந்து போலவோ, எருக்கம்பூ ஏன் மணம் தரவில்லை என்று கோபிக்க முடியுமா?

எனவே, நீ ஏடுகளைத் தேர்ந்தெடுத்து வாங்கிட வேண்டும்.

குயிலின் கீதமிருக்க கோட்டானிடம் ஓடாதே! கிளியின் அழகிருக்க, ஆந்தையைத் துரத்திக் கொண்டு அலையாதே!

அவதூறு செய்திகள்!
ஆபாச அர்ச்சனைகள்!
புளுகு மூட்டைகள்!
பொய்த் தகவல்கள்!

இவற்றையே மூலதனமாகக் கொண்டு, கையொன்று செய்ய, விழியொன்று நாட, கருத்தொன்று எண்ண, பொய்யொன்றை வஞ்சக நாவொன்று பேச, நடமாடும் சில நாளேடுகள், தாங்கள் தேர்ந்தெடுத்துள்ள இந்தப் போர் முறையால் கழகத்தைச் சாய்த்து விடலாம் எனக் கருதுகின்றன!

பலபேர் முயன்ற தோற்றுப் போன முறை அது!

உடன்பிறப்பே, நீ பிடிவாதமாக இருந்து - எத்தனை கவர்ச்சிகரமான திடுக்கிடும் பொய்களால் உன்னை ஈர்க்க முனைந்தாலும் அந்த ஏடுகளை வாங்குவதில்லை என்று சபதம் செய்து கொள்!

கழகத்தை அழிக்க முனையும் ஏடுகளை - கழகம் வாழக் கூடாது எனக் கருதும் ஏடுகளை - கழக எதிர்ப்புக்கே முதலிடம்

தரும் ஏடுகளை - நீ வாங்குவதில்லை, படிப்பதில்லை என்று முடிவெடுத்துவிட்டால் பிறகு அவைகள் மூட்டிவிடும் எரிச்சல் உன் நெஞ்சை நெருங்காது!

அன்புடன்,

23-5-76 மு. க.

12-07-1991

1754. நெருக்கடி காலக் கடிதங்கள் - 16 : மலை தரும் சந்தனம்! கடல் தரும் முத்து!

(வீழ்வது நாமாக இருப்பினும் - வாழ்வது தமிழாக இருக்கட்டும் என்பது கலைஞரின் பொன்மொழி!

வீழ்வது தமிழாக இருந்தால் என்ன? தமிழராக இருந்தால் என்ன? வாழ்வது நாமாக இருப்போம்! என்று பிழைக்கும் வழி அமைத்துக் கொண்டோரும் உலவுவதுண்டு சமுதாயத்தில்!

இளைஞர் சமுதாயம் அந்தச் சுயநலச் சூதர்களின் பாதையினைப் பின்பற்றாமல் பொதுநலத்திற்குத் தம்மை வழங்கிட வேண்டும் என்ற சிந்தனையுடன்; சோதனைக்கு உள்ளாகியிருந்த 1976-ஆம் ஆண்டு எமர்ஜன்சி நேரத்தில் கலைஞர் எழுதிய இலக்கியக் கடிதங்களில் இதுவும் ஒன்று)

உடன்பிறப்பே!

குடும்பத்தைப் பற்றிக் கவலைப்படாமல் கொள்கை - கொள்கை என்று அலைகிறானே!

பெற்ற தாயை மறந்துவிட்டுப் பிறந்த பொன்னாடே சிறந்தது எனத் திரிகிறானே!

வீடு, வாசல், பிள்ளை, தாய், தந்தை, மனைவி அனைத்தையும் இரண்டாம் இடத்திற்குத் தள்ளிவிட்டுப் பொதுத் தொண்டினை முதல் இடத்தில் வைத்துப் பூஜை செய்கிறானே!

இவனைத் திருத்தி, குடும்பத்தைக் கவனிக்குமாறு யாராவது அறிவுரை கூறக் கூடாதா?

இப்படிப்பட்ட ஏக்கம் நிறைந்த கேள்விகள் எத்தனையோ இல்லங்களிலே எழக் கேட்டிருக்கிறோம். இன்று நேற்றல்ல எத்தனையோ ஆண்டுக்காலமாக!

கட்சியால் தனக்கு என்ன லாபம் என்று கணக்கிடாமல் தன்னால் கட்சிக்கு என்ன லாபம் என்று கணக்கிடுகிற தூய்மை உள்ளம் படைத்தவர்கள் தான் ஒரு கட்சியின் உயிரோட்டமுள்ள நாடி நரம்புகளாவார்கள்.

அப்படிப்பட்டவர்கள் இருக்கிற எந்தக் கட்சியும் இடையிடையே தோன்றுகிற இடுக்கண்களைத் தாங்கிக்கொண்டு தனது இலட்சியப் பயணத்தைத் தொடர்ந்து நடத்திக்கொண்டே தானிருக்கும்.

அந்தப் பயணத்திற்குத் துணையாகவும் -அற்ற குளத்து அறுநீர்ப் பறவைகள் போல் இல்லாது அக்குளத்துக் கொட்டியும் ஆம்பலும் போலவும் சந்தர்ப்பவாதம் - சபலம் - சலனம் - எதற்கும் இடம் தராமலும் - விளங்குகின்ற வீரமணிகள் தான் நெடும் புகழுக்குரியவர்கள்.

அவர்களைப் பற்றி சிந்தித்துக் கொண்டே கலித்தொகை நூலினைப் புரட்டிக் கொண்டிருந்தேன். ஒரு பக்கத்தில் என் பார்வை நிலைத்து நின்றது.

காட்டுப் பாதையில் தாய் ஒருத்தி வேகமாக ஓடுகிறாள். அந்தப் பாதையில் நடந்து கொண்டிருக்கும் சில பெரியவர்களைப் பார்த்து; அய்யா! என் மகள் ஒருத்தி இளம் பெண் - காதல் வயப்பட்டு காளையொருவனுடன் என்னைப் பிரிந்து சென்று விட்டாள். அவர்களிருவரையும் நீங்கள் இந்த வழியில் கண்டீர்களா? எனத் துடிப்போடு கேட்கிறாள்.

பார்த்தோம் அம்மா! என்று அவர்கள் பதில் சொல்கிறார்கள். அத்துடன் நிறுத்தவில்லை. அந்தத் தாய்க்கு ஆறுதலும் கூறி அழகான விளக்கமும் தருகிறார்கள்.

பலவுறு நறும்சாந்தம் படுப்பவர்க்கு அல்லதை
மலையுளே பிறப்பினும், மலைக்கு அவைதாம்
என்செய்யும்?

நினையுங்கால் நும்மகள், நுமக்கும் ஆங்கு அனையளே;
சீர்கெழு வெண்முத்தம் அணிபவர்க்கு அல்லதை

நீருளே பிறப்பினும் நீர்க்கு அவைதாம் என்செய்யும்?
தேருங்கால், நும்மகள், நுமக்கும் ஆங்கு அனயளே;
ஏழ்புணர் இன்னிசை முரல்பவர்க்கு அல்லதை
யாழுளே பிறப்பினும் யாழ்க்கு அவைதாம் என்செய்யும்?
சூழுங்கால்; நும்மகள் நுமக்கும் ஆங்கு அனையளே

தாயே! நறுமணம் மிக்க சந்தனக்கட்டை மலையில்தான் வளர்கிறது. ஆனால் அது தன்னை அரைத்துப் பூசிக்கொள்பவர்க்குப் பயன்படுவதல்லாமல் தான் பிறந்த மலைக்கு எந்த விதத்திலும் பயன்படுவதில்லை. கடலில் பிறந்த முத்துக்கள், தன்னை அணிபவர்க்கு அழகு தருகின்றனவே அல்லாமல் உற்பத்தியான கடலுக்கு ஒரு வகையிலும் பயன்பட்டது கிடையாது. ஏழுவகை இன்னிசை, யாழில்தான் தோன்றுகிறது. எனினும் கேட்போர் செவிக்கும் சிந்தைக்கும் இன்பம் வழங்குகிறதேயன்றி அந்த இசை, யாழுக்கு இன்பம் அளிப்பதில்லை. அதைப் போலத்தான் உன் மகளுக்கும் உனக்கும் உள்ள உறவு ஆகும்.

உடன்பிறப்பே, இந்தப் பாடலையும் இதற்குரிய பொருளையும் படிக்கப் படிக்க, எனக்கு உன்னைப் போன்ற உடன்பிறப்புகளின் நினைவே நெஞ்சில் அலைமோதியது.

எந்தவொரு இயக்கத்திலும் தூய தொண்டுள்ளம் கொண்ட தியாக மலர்கள் பலர் இருக்கவே செய்கிறார்கள். அவர்கள் வீட்டுக்கு தாங்கள் சொந்தமல்ல - நாட்டுக்கே சொந்தமென எண்ணி வாழ்கிறார்கள்.

மலை தரும் சந்தனம் -

அதன் மணம், மற்றவர்க்கு உரியது - மலைக்குப் பெருமைதான் உரியது!

கடல் தரும் முத்து -

அதன் ஒளி, அணிவோர்க்கு உரியது - அது பிறந்ததால் ஆழ் கடலுக்குப் பெருமைதான் உரியது.

அதுபோலவே தன்னலமற்ற தொண்டர்கள் எந்த இயக்கத்தில் இருந்தாலும் - அவர்கள் அந்த இயக்கத்துக்கு - நாட்டுக்கு - உரியவர்கள்! அவர்களை ஈன்றளித்த வீட்டுக்குப் பெருமை மட்டுமே உரியது!

கலித்தொகையில் நான் கண்ட காட்சி, காதலைப் பற்றியது என்றாலும்; என் உள்ளம், அந்த விளக்கத்தை உனக்கும் உன்னைப் போன்ற உண்மைத் தொண்டர்களுக்கும் பொருத்திப் பார்த்துப் பூரிப்பு அடைகிறது.

அன்புடன்,

17-11-76

மு. க.

13-07-1991

1755. நெருக்கடி காலக் கடிதங்கள் - 17 : காத்திருப்போம்; காலம் மாறும்!

(காத்திருந்தால் - காத்திருக்கும்போது கடமையைச் செய்து கொண்டே இருந்தால்; காலம் மாறும் களிப்பு பிறக்கும் - என்ற நம்பிக்கையினை கழகக் கண்மணிகளுக்கு; நெருக்கடி காலக் கொடுமைகளின் போது ஏற்படுத்திட 1976-ஆம் ஆண்டு முரசொலியில் கலைஞர் அவர்கள் எத்தனையோ நாட்டு வரலாறுகளையெல்லாம் சுருக்கமாகவும் சுவையாகவும் கடிதங்களாக எழுதினார். அவற்றில் ஒரு கடிதமே அங்கோலா நாடு பற்றிய இந்தக் கடிதம்)

உடன்பிறப்பே!

அடிமை விலங்கொடித்த நாடுகளின் வரிசையில் இடம்பெற்ற அங்கோலா, ஐ.நா.வில் இடம் பெறத் தகுதியுடையதென்று இந்தியா உள்ளிட்ட பதின்மூன்று நாடுகள் கூறியுள்ளன. வாக்கெடுப்பில் கலந்து கொள்ளும் தகுதிபெற்ற நாடுகள் பதினைந்து! அதில் 13 நாடுகள் அங்கோலாவை ஆதரித்துள்ளன. பந்தோபஸ்து சபையில் அமெரிக்கா, தனது வீட்டோ என்னும் ரத்து அதிகாரத்தைப் பிரயோகித்து ஐ.நா.வில் சேர வேண்டுமென்ற அங்கோலாவின் மனுவை நிராகரித்திருப்பது உரிமைக் குரலைப் புறக்கணிக்கும் போக்கையே எடுத்துக் காட்டுகிறது.

அங்கோலா - ஆப்பிரிக்க மக்கள் வாழுகின்ற நாடு! பல்லாண்டுக் காலமாக அவர்கள் போர்ச்சுக்கீசியர்களின் ஆதிக்கத்தில் அவதிப்பட்டவர்கள் மட்டுமல்ல; அடிமை வியாபாரப் பொருள்களாக ஆக்கப்பட்டிருந்தார்கள்.

பதினாறாம் நூற்றாண்டில், போர்ச்சுக்கீசியரின் முரட்டுத்தனமான காலடியின் கீழ் நசுக்குண்டு கிடந்த அங்கோலாவின் மக்கள் ஆப்பிரிக்கா, அங்கோலா, காங்கோ

ஆகியவற்றின் துறைமுகமான லூவாண்டா வாயிலாக அடிமைப் பொருளாக ஏற்றுமதி செய்யப்பட்டனர். வெள்ளை நிறத்தார் சிறுபான்மையோராகவும், கறுப்பு நிற ஆப்பிரிக்கர் மிகப் பெரும்பான்மையோராகவும் வாழும் அந்தப் பூமியை ஆதிக்கச் சக்தி காரணமான வெள்ளை நிறத்தவரான போர்ச்சுக்கீசியர் தங்கள் கைக்குள் வைத்துக் கொண்டனர்.

இரும்பு, எண்ணெய், வைரம், காபி, பருத்தி, பாக்சைட் போன்றவைகளை தன்னகத்தே கொண்ட அங்கோலா, தன் மண்ணுக்குரிய மக்கள் அவைகளை அனுபவிக்கிற உரிமையினின்றும் தடுக்கப்பட்டு, தடி தூக்கியவர்கள் தண்டல்காரர்களாகி விட்ட அநியாயத்தைத் தாங்கிட முடியாமல் தவித்தது.

மிகச் சிறிய போர்ச்சுக்கீசியக் கப்பல்களில் அவற்றின் சக்திக்கு அதிகமாக அடிமைகளைக் குவித்து வைத்து கற்களை அடுக்குவதுபோல அடுக்கி, அவர்களைக் கொண்டுபோய் துறைமுகங்களில் இறக்கிடும்போது பெரும் பகுதியினர் பிணங்களாகவே ஆகிவிடுவார்களாம். கறுப்பர் இனத்து அடிமைகளில் பெண்கள் பலர் போகக் கருவிகளாகவும் ஆக்கப்பட்டனர். இந்தப் பகிரங்கமான வாணிபம் கொஞ்சம் வெட்கமின்றி, மனிதாபிமான உணர்ச்சியின்றி மூன்று நூற்றாண்டுக் காலத்திற்கு மேலாக நடைபெற்றிருக்கிறது. ஆப்பிரிக்க அடிமைகள், விலங்குகளைவிட மட்டமாக நடத்தப்பட்டிருக்கிறார்கள்.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில், ஹென்றி நெவின்சன் என்ற பிரிட்டிஷ் பத்திரிகை ஆசிரியர் ஒருவர் அங்கோலாவுக்குச் சென்று திரும்பி, ஒரு நூல் எழுதி வெளியிட்டார். அதில், காலனி ஆதிக்கத்தின் கீழ் ஆப்பிரிக்க அடிமைகளின் பரிதாபகரமான நிலைமையை கண்ணீர் மல்க விவரிக்கிறார்.

அடிமைத் தொழிலாளிகளின் உள் பகுதிக் கடற்கரைச் சாலையொன்றினை அமைக்கப் பயன்படுத்தப்பட்டார்கள். அந்தச் சாலையைப் பார்த்தால் செத்துப்போன மனிதர்களின் எலும்புகளை ஏராளமாகக் காணலாம். நம் காலடியில் ஒரு மனிதனின் தொடை எலும்பைக் கண்டால், அடுத்த பக்கத்தில் கபால எலும்புகளைக் காணலாம். இவைகள் எல்லாம், அந்தச்

சாலையில் நடக்க முடியாமல் மாண்டு போனவர்கள்; அல்லது கொல்லப்பட்டவர்களின் எலும்புக் கூடுகளேயாகும்!

இவ்வாறு பொட்டுப் பூச்சிகளாய், புன்மைத் தேரைகளாய், தொங்கும் நரம்பின் தூள்களாய்க் கிடந்தவர்கள்தான் தங்கள் கொடுமைக்கு ஒரு முடிவு வேண்டுமென ஆர்த்தெழுந்தனர். விடுதலைப் போர்க்கொடியை விண்முட்ட உயர்த்தினர்.

என் தாயே!
என்னை நம்பிக்கையோடு
காத்திருக்கக் கற்பித்தாய்!
அந்த நம்பிக்கையை என் வாழ்க்கை
இழந்துவிட்டது!
நான் யாருக்காகவும் காத்திருக்கவில்லை
காத்திருக்குமாறு ஆக்கப்பட்டேன்.
இப்போது நாங்கள் நம்புகிறோம்;
எங்களுக்கு நாங்களே நம்பிக்கை!
உன்னுடைய மக்கள் வாழ்வைத் தேடி
அலைகிறார்கள்!

என்று அகஸ்டின்கோ நெட்டோ என்ற விடுதலைக் கவிஞனின் கவிதை வரிகள், அங்கோலாவில் அடிமைப்பட்டுக் கிடந்தவர்களை உசுப்பிவிட்டு எழு வைத்தது. அந்தக் கவிஞன் தான் இன்றைய அங்கோலாவின் அதிபர்.

1948-ஆம் ஆண்டு அங்கோலாவில் விடுதலை ஆர்வங்கொண்ட படித்த இளைஞர்கள், ஒரு கலாச்சாரப் பத்திரிகையைத் தொடங்கினர். அதன் படிப்படியான வேகமான வளர்ச்சிதான் அங்கோலா மக்களின் விடுதலை இயக்கமாகும். எம்.பி.எல்.ஏ. என்ற அந்த இயக்கத்தின் போர்க் குரல் போர்ச்சுக்கீசிய ஆதிக்கத்துக்கு எதிராக எழுந்தது. தொடர்ந்த, இடைவிடாத, சலிப்படையாத, போராட்டத்தின் முடிவாக 1975 நவம்பர் திங்களில் அங்கோலா மக்கள் சுதந்திரப் பள்ளு பாடினர்.

அமெரிக்கா போன்ற சில நாடுகள், அங்கோலாவின் விடுதலைக் கிளர்ச்சிக்கு எதிராகச் செயல்பட்ட போதிலும், அங்கோலா மக்களின் உரிமைக் குரலை, இந்திய நாடு அங்கீகாரம் செய்தது!

சோவியத் யூனியன் அங்கோலாவின் விடுதலைப் போரை ஆதரித்துத் துணை நின்றது.

அமெரிக்கா தலையிட்டதற்கும், சோவியத் யூனியன் துணை நின்றதற்கும் - காரணங்கள் அல்லது நோக்கங்கள் எத்தனை கூறப்பட்டாலும் அங்கோலா, ஆண்டாண்டுக் காலமாக அனுபவித்தக் கொடுமைகளில் இருந்து விடுபட்டதை, யாரும் வாழ்த்தி பாராட்டாமல் இருக்க முடியாது.

விடுதலை பெற்ற அந்த நாடு, ஐ.நா. சபையில் இடம்பெற முறையீடு செய்து கொண்டதை, பரந்த மனப்பான்மையுடன் அமெரிக்காவும் ஆதரிக்க முன்வருமானால், அனைவரின் பாராட்டுதலை அது பெற்றிருக்க முடியும்.

அமெரிக்காவில் ஏற்பட்டுள்ள தேர்தல் தட்ப வெட்பச் சூழ்நிலைகளை யொட்டி, அது தனது ரத்து அதிகாரத்தை வீசி, நிராகரித்திருப்பது ஏற்றுக் கொள்ளக் கூடிய போக்கு எனக்கொள்ள முடியாது.

காலனி ஆதிக்கத்திலிருந்து விடுபடுகிற அங்கோலா போன்ற நாடுகளைத் தடுப்பதும், அல்லது மறைமுகமாகத் தங்கள் ஆதிக்கத்தில் வைத்துக்கொள்ள நினைப்பதும் கூடாது என்பதே நமது கருத்தாகும்!

அந்த நல்லெண்ணத்துடன்தான் இந்தியா, அங்கோலாவின் உரிமைப் போரையும் ஆதரித்தது. இப்போது ஐ.நா. சபையில் அது உறுப்பினராக வேண்டுமென்பதையும் ஆதரித்தது!

ஐ.நா. சபையில் அங்கத்தினராகும் உரிமையை இப்போது அங்கோலா பெறவில்லை என்றாலும் ஒருமுறை மறுக்கப்படுகிற உரிமைகள்; மறுமுறையோ, அல்லது அதற்கடுத்த முறையோ, நிச்சயம் கிடைத்தே தீரும் என்ற நம்பிக்கையை அனுபவ ரீதியாகப் பெற்றுள்ள அந்நாடு இந்த முடிவுக்காக அதிர்ச்சியடையாது! அதிர்ச்சி அடையத் தேவையில்லை!

அன்புடன்,

27-6-76

மு. க.

14-07-1991

1756. நெருக்கடி காலக் கடிதங்கள் - 18 : வயிற்றுக்கு மேலே வைத்தது ஏன்இதயத்தை?

(அடக்குமுறைக்குப் பயந்தும் - பதவிக்கும் பணத்துக்கும் பல் இளித்தும் - நெருக்கடிக் காலத்தில் கொள்கையை விலை கூறிடச் சிலர் கிளம்பினர் வீதிக்கு! அப்போது ஏற்பட்ட கலைஞரின் மன உளைச்சலின் வடிவமாக 1976-ல் இந்தக் கடிதம் முரசொலியில் வெளிவந்தது)

உடன்பிறப்பே!

வயிறு தனக்காக அழுகிறது; இதயம் மற்றவர்களுக்காக உருகுகிறது. இந்தக் கருத்தை மையமாக வைத்து இந்தக் கடிதத்தை எழுதுகிறேன்.

வயிற்றுக்கு மேலே வைத்ததேன் இதயத்தை?
வயிற்றை விட இதயம் மேலான தென்பதனால்!
வயிற்றுக்கும் நெஞ்சுக்கும் நடக்கின்ற போரில்
வயிறேன் வெல்கிறது? இதயமேன் தோற்கிறது?
படைப்பின் மகத்துவத்தைப் பகுத்தெண்ணிப் பாராமல்
வயிறே பெரிதென்று வாழ்கின்றோர் பெருகியதால்!

இந்தக் கவிதை எழுதியவர் ஒரு இளைஞர்தான்! வாரிச் சீவிய முடியும், வசீகர விழியும், வரைந்த நேர்கோடு போல் புது மீசையும் கொண்டவர்! குருவிக் கரம்பை சண்முகம் என்பது இந்தக் கவிஞரின் பெயர். பாரதியார், பாரதிதாசனுக்குப் பிறகு வளர்ந்துவரும் கவிஞர் பரம்பரையில் இவருக்கோர் சிறப்பான இடமுண்டு. இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டில் கவிதைப் போட்டியில் முதற் பரிசு பெற்றவர். இவரை அதிகம் பாராட்டப் பயமாக இருக்கிறது! எனக்காக அல்ல! அவருக்காகத்தான்!

அவரை விட்டுவிட்டு அவரது கவிதை வரிகளைப் பார்ப்போம்.

வயிறேன் வெல்கிறது?

இதயமேன் தோற்கிறது?

இப்படிக் கேள்வி எழுப்புகிற நண்பர், வயிறே பெரிதென்று வாழ்கின்றோர் பெருகியதால்! என்று விடையையும் அளித்துக் கவிதையை முடிக்கிறார். வயிறே பெரிதென்று வாழ்கின்றவர்கள், படைப்பின் மகத்துவத்தைப் பகுதெண்ணிப் பார்க்கவில்லை என்பது அவரது குற்றச்சாட்டு! படைப்பின் மகத்துவம் என்ன? வயிறு கீழே இருக்கிறது! வயிற்றைவிட இதயம் மேலானது என்பதை இந்தப் படைப்பின் மகத்துவம் விளக்குகிறது என்பது கவிதையின் தொடக்கம்.

பசித் தீயினால் பற்றியெரிந்த வயிறுகளுக்கும்; பளிங்கு மாளிகையில் பாவையர் சுகங்கண்ட மன்னர்களின் இதயங்களுக்கும் நடைபெற்ற போராட்டங்களில், இறுதியில் வயிற்றுப் பட்டானங்கள்தான் வெற்றி பெற்றிருக்கின்றன.

பிரஞ்சு நாட்டு லூயி மன்னன் பாஸ்டிலி சிறைக் கொடுமைகளையும், ரஷ்ய நாட்டு ஜார் மன்னனின் உம் என்றால் சிறைவாசம் - ஏன்? என்றால் வனவாசம்! என்ற வெறியாட்டங்களையும் புறங்கண்டு புதிய வரலாறுகளைப் படைத்த தொழிலாளர்களை உசுப்பிவிட்டது; வறுமை! வறுமை! வேதனை! பசி! பசி!!

அதாவது ஆணவங்கொண்ட இதயத்துக்கும், அல்லற்பட்டு ஆற்றாத அளவுக்கு மூண்ட, பசிக் கொடுமைக்கும் இடையில் எழுந்த போராட்டத்தில் வயிறு வென்றது! அதுதான் நியாயமும் கூட!

கவிஞர் குறிப்பிடுவது அந்தப் போராட்டத்தையல்ல! பல மனிதர்களுடைய வயிற்றுக்கும் சில மனிதர்களுடைய இதயத்துக்கும் நடக்கிற போராட்டத்தில் நல்லோர் அனுதாபம் வயிற்றின் பக்கம்தான்!

ஆனால், ஒவ்வொரு தனி மனிதனின் வாழ்க்கையிலும் இதயம் வெல்வது சரியா? அல்லது வயிறு வெல்வது சரியா? என்பதுதான் பிரச்சினை!

வயிறா? இதயமா? என்ற கேள்விகளைக் கேட்டு வரலாற்று ஏடுகளைப் புரட்டும்போது, சோவியத் ரஷ்யா, பிரான்சு போன்ற நாடுகள் வயிற்றின் வெற்றியை வெளிப்படுத்துகின்றன.

ஆனால்! அந்த நாடுகளை உள்ளிட்ட அனைத்து நாடுகளும் அடங்கிய இந்த உலகில், ஒவ்வொரு தனிமனிதனும் தனது இதயத்துக்கு முக்கியம் கொடுக்கிறானா? அல்லது வயிற்றுக்கா?

இரண்டில் எதற்கு மிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்?

வயிறா? இதயமா? என்ற கேள்வி, தனி மனிதனின் வாழ்வில் எழும்போது இரண்டில் எந்த ஒன்றை அவர் தேர்ந்தெடுக்க வேண்டும்?

நீ யாரை இதுவரை நேசித்து வந்தாயோ, அவனைக் காட்டிக் கொடு! அதற்குப் பரிசு இதோ பார்! இப்படி ஒரு கவர்ச்சியான ஆசை காட்டப்படும்போது தனிமனிதனுடைய வாழ்வில் பிரச்சினை உருவாகிறது!

வயிறா? இதயமா?

இந்தக் கேள்விக்கு அவன் விடை காண வேண்டியவனாகிறான்.

நீ, அவனை இனியும் நேசித்தால், அவனுடைய அன்புக்குரிய தோழனாக இருந்தால் ஏன்; அவனைப் பற்றி பேசினால் கூட! இல்லை! இல்லை! நினைத்தால்கூட! உனக்கு கேடு வரும்! வாழ்வு கெடும்! வளம் இழப்பாய்!

இப்படி ஒரு அச்சுறுத்தல் கிளம்புகிறதோ இல்லையோ - அவனே இதுபோல ஒரு கனவு காணுகிறான் என்று வைத்துக் கொள்வோம் அப்போதும் இதே பிரச்சினைதான்!

வயிறா? இதயமா?

இங்கிலாந்து மன்னரைப் பற்றிப் புகழ்ந்து பேசு! இங்கிருக்கும் காந்தியடிகளைப் பற்றி வாய் திறக்காதே! திறந்தால், சிறைக்கதவு திறக்கும்!

வெள்ளையர் விடுத்த ஆணைகள் இடியென முழங்கியபோது; இந்திய விடுதலை வீரர்களின், இதயங்களும் வயிறுகளும் வாதிட்டுக் கொண்டன! வயிறுகள் பின்வாங்கின! இதயங்கள் வென்றன!

உலகம் தோன்றி, மனிதன் தோன்றிய காலத்திலிருந்து வயிற்றுக்கும் இதயத்துக்கும் போராட்டம் நடந்து கொண்டுதானிருக்கிறது.

மீண்டும் சொல்கிறேன்; வயிறுகள் பல, ஒரு அணியிலும்; இதயங்கள் சில, ஒரு அணியிலும் நின்று நடைபெறுகிற வர்க்கப் போராட்டங்களை நான் விவரிக்க இந்தக் கடிதம் எழுதவில்லை.

இந்திய நாட்டைப் பொறுத்த வரையில் அந்த வர்க்கப் போராட்டத்தை, முற்போக்கான திட்டங்கள் மூலம் தவிர்த்து - நிலத் திமிங்கலங்கள், பூர்ஷுவாக்கள், ஆலை அரசர்கள் - முதலியவர்களிடமிருந்து பாட்டாளிச் சமுதாயத்தைக் காப்பாற்றி விடுவிக்கவும், அவர்தம் வாழ்வில் ஒளியேற்றவும், ஏற்றத்தாழ்வற்ற சமதர்ம சமுதாயத்தை நிறுவிடவும் கழகம், தன் பயணத்தில் என்றுமே சுணங்காது!

எனவே, வர்க்கப் போராட்டத்தில் வயிற்றின் போர்க்கொடியை அலட்சியப் படுத்துகிற இதயங்களுக்கு நமது ஆதரவு இல்லை.

இங்கே, கவிஞரும் நானும் வாதாடுவது அந்த இதயத்தைப் பற்றியல்ல!

தனி மனிதனின் வாழ்வில் பிரச்சினை உருவாகிறது! வயிறும் இதயமும் விவாதிக்கின்றன!

வயிறு :- ஏ, இதயமே; ஏன் வீணாக அலட்டிக் கொள்கிறாய்? நீ எடுக்கும் அவசர முடிவுகளால் நம்மைச் சுமக்கும் இந்த மனிதனின் கதி என்ன ஆகும் என்று யோசித்துப் பார்!

இதயம் :- வயிறே! எந்த முடிவையும் நான் அவசரமாக எடுக்க மாட்டேன்! நம்மைத் தூக்கிச் சுமக்கிற மனிதனின் வாழ்க்கையில் எனக்கு மிகுந்த அக்கறையுண்டு. ஒன்றை மறந்து விடாதே! என்றைக்கோ ஒருநாள் இந்த மனிதன் சாகப் போகிறான். அவனோடு சேர்ந்து நாமும் மண்ணாகவோ, சாம்பலாகவோ ஆகப் போகிறோம்! அப்படிச் சாகிறவனை அவன் செத்த பிறகும் சரித்திரத்தில் வாழ வைக்கவேண்டுமென்று நான் விரும்புகிறேன். ஆனால் நீயோ, அவன் சாகிற வரையில் சந்தோஷமாக வாழ்ந்தால் போதுமென்கிறாய்!

வயிறு :- இதயமே! மனித வாழ்க்கை என்பது ஒரு முறை முடிந்துவிட்டால் மறுபடியும் கிடைக்கக் கூடியதா! கார் டயரில் காற்றுப் போய் விட்டால், மறுபடியும் அடித்துக் கொள்வது போல; செத்துவிட்ட மனிதனுக்கு மூச்சைத் திணித்து எழுப்பி உலவ விட முடியாது! எனவே கிடைத்த வாழ்வை சுகமாக அனுபவிக்க

வேண்டும். அவன் மட்டுமல்ல, அவன் பெண்டு பிள்ளைகள், பேரன் பேத்தி, வரப்போகிற சந்ததி அனைத்துக்கும் சேர்த்து வைத்துவிட்டுப் போக வேண்டிய கடமை அவனுக்கு இருக்கிறது! அதனால் அவனை எந்தத் தொல்லையிலும் இழுத்து விடாதே!

இதயம் :- அவன் சந்ததியை எல்லோரும் வாழ்த்த வேண்டாமா? புகழ வேண்டாமா?

வயிறு :- அதை, அவனிருந்து பார்த்துக் கொண்டாயிருக்கப் போகிறான்?

இதயம் :- இப்படி எண்ணியிருந்தால் திலகர், காந்தி, நேரு, பெரியார், அண்ணா முதல் திருப்பூர் குமரன் வரையில் நிலைத்துவிட்ட பெயர்கள் நாட்டில் இருக்க முடியாதே!

வயிறு :- பைத்தியக்கார இதயமே! பெயரும் புகழும் சாப்பாடு போடுமா? சந்தோஷம் கொடுக்குமா? தேனாபிஷேகத்தை விட்டு விட்டு எவனாவது தீ மிதிக்கப் போவானா?

இதயம் :- அப்படியானால், மனிதனை ஒரு யந்திரம் போல் இயங்கச் சொல்கிறாய்; யாருக்காகவும் உருக வேண்டாம் என்கிறாய், எதற்காகவும் கவலைப்பட வேண்டாம் என்கிறாய் இல்லையா?

வயிறு :- இருக்கும் வரையில் இன்பமாக வாழச் சொல்கிறேன். மனிதன் தனக்காகவே கவலைப்பட வேண்டுமென்கிறேன்.

உடன்பிறப்பே,

இந்த விவாதத்தில் வயிறுகள் ஜெயிப்பதும் உண்டு! இதயங்கள் ஜெயிப்பதும் உண்டு! அதிகமாக வயிறுகள்தான் ஜெயிக்கின்றன என்பது கவிஞரின் கவலை. நான்கூட இந்தக் கவிஞரோடு சேர்ந்து இதயத்துக்கு மாலை சூட்டவே விரும்புகிறேன். என்னைக் கவர்ந்த இன்னொரு கவிஞன் இருக்கிறான்! பொன்னாம் தமிழ் எடுத்து வளமான கருத்துக்களைத் தொகுத்தளிப்பவன். அவன் இதயம் வெல்லும் என்பதைப் பலமுறை செயலில் காட்டி, என் இதயத்தில் இடம் பிடித்துக் கொண்டவன். எல்லோரும் அவனாக முடியுமா? அவனாகிவிட்டால், பிறகு இதயமேன் தோற்கப் போகிறது? அவன் இப்போது சிறையில் அல்லவா இருக்கிறான்!

அன்புடன்,

14-5-76

மு. க.

15-07-1991

1757. நெருக்கடி காலக் கடிதங்கள் - 19 : மங்கையும் மா(வு)வீரனும்!

(1976-ஆம் ஆண்டு நெருக்கடி காலத்தின் போது முரசொலி ஏட்டுக்கான தணிக்கையை எதிர்த்து நீதிமன்றத்தில் இடைக்காலத் தடை பெற்று கலைஞர் அவர்கள் சில கடிதங்கள் எழுதியதுண்டு. அந்த இடைக்காலத் தடை நீக்கப்பட்டு - தணிக்கை மிகக் கடுமையாக ஆக்கப்பட்டதும் உண்டு. அந்த நேரத்தில் கலைஞர் எழுதிய இலக்கியக் கடிதங்களில் இது ஒன்று)

உடன்பிறப்பே!

கொல்லேற்றுக் கோடஞ்சு வானை மறுமையும்

புல்லாளே ஆயமகள்

என்ற கலித்தொகை வரிகளில்தான் எத்துணை வீரம் கொப்பளிக்கிறது!

பழங்காலத் தமிழகத்தில் ஏறு தழுவுதல் எனும் ஒரு வீரவிளையாட்டு சிறப்புடையதாக அமைந்திருந்தது.

காளையை எதிர்த்து நின்று, அதன் கொம்புகளைப் பிடித்து நிறுத்தி வெற்றிவாகை சூடுவதை வலிமை படைத்த தோள்கொண்ட வாலிபர்கள் மிகப் பெருமையாகக் கருதினர்.

அந்த மாவீரர்களின் புண்பட்ட மார்பகத்தின் மீது திங்கள் முகம் சாய்த்துக் கனியிதழால் மருந்து தடவி காதலனின் தீரத்திற்கான பரிசுப் பொருளாக ஆகிவிடுகிற தமிழ்க்குலப் பாவையரின் பெருமிதத்தை இலக்கியங்கள், ஓவியங்களாகத் தீட்டிக் களிக்கின்றன.

காளை மாட்டின் கொம்பினைப் பிடித்து அடக்குகிறவனே தனக்கு கொழுநனாக வரத் தகுதி படைத்தவன் என அறைகூவல் விடுவர் அரிவையர்.

தான் கணவனாக அடைய வேண்டுமென்று விரும்புகிற ஒருவன், காளையை அடக்குதற்குப் புறப்பட்டு அந்தக் காளையின் கொம்புகளைக் கண்டு அஞ்சி ஓடுவானேயானால் அவனை, இப்பிறப்பில் மட்டுமல்ல - அடுத்த பிறப்பிலுங்கூடத் தன் கணவனாக ஏற்றுக்கொள்ள மாட்டாள், ஆயர் குலப்பெண்!

இதைத்தான் கலித்தொகை முழங்குகிறது ஆகா! ஊஹூ! என்னைப் போல் வீரனுண்டா? எனக் கூச்சலிட்டு மீசையை முறுக்கி, தோளைக் குலுக்கி, தொடையைத் தட்டி, கச்சையை இறுக்கிக் கட்டி; கொண்டு வா! கொஞ்சம் தேறல்! அதனைக் குடித்துவிட்டுப் புறப்படுகிறேன், காளையை அடக்க! தூக்கு பல்லக்கை - அதில் நான் ஏறிக் கொள்கிறேன். போர்த்து பொன்னாடையை இப்போதே எனக்கு! மலர் மாலை போதாது - மரகதமணி அணிவித்திடு! என்றெல்லாம் ஆர்ப்பாட்டம் செய்து ஊரதிரக் கத்தி - உயர எழும்பிக் குதித்து - என் அறிவென்ன? ஆற்றலென்ன? திறன் என்ன? திண்தோள் வலிமை என்ன? ஒரு காளையல்ல; ஓராயிரம் காளைகள் வரினும் அவைகளின் கொம்பொடித்துப் போடுவேன் என எக்காளமிட்டு, ஏடி! பெண்பாவாய்! என் வீரத்திலா சந்தேகம்? தீரத்திலா அவநம்பிக்கை? பொங்கி வரும் காளைதனை அடக்குவேன். புலிப்பல் தாலியோடு வருவேன். காத்திருக்கட்டும் உன் கழுத்து. பூத்திருக்கட்டும் உன் உதட்டில் சிரிப்பு! இன்றிரவே நம் கூத்திருக்கட்டும் ஆற்றங்கரை நிலவொளியில்! உன் தந்தையிடம் கூறி வை; அவர் இதுவரையில் எனக்கு வழங்கியுள்ள சொத்து சுகம் போதாது என்று! அவையெல்லாம் உனை மணக்க அச்சாரம்தான். காளையை அடக்கிய பின், நான் உன் கைப்பிடிக்குமுன், ஆயிரம் கழஞ்சு பொன் என் காலடியில் விழவேண்டும்.

என உரைத்துப் புறப்பட்டான் விடைபெற்று! ஏறு தழுவுமிடம் வந்து நின்றான். ஏ, அப்பா! இவன் வீரம் மிகப் பெரிது என்று உருண்டு திரண்டிருந்த அவன் உடற்கட்டைப் பார்த்து மலைத்தனர் ஊர் மக்கள்.

எங்கே அந்தக் காளை என உலுக்கினான் தோளை. வந்தது காளை. புதுவேகம் புயல்வேகம் காட்டி வந்த அந்த காளையை ஒருக்கணம் நோக்கினான். அதன் கூரான கொம்புகளைப் பார்த்துதான் தாமதம். பாய்ந்தான்! பாய்ந்தான்! பாய்ந்து

கொண்டேயிருந்தான்! காளையின் மீதா? அதுதான் இல்லை. வந்த பாதையை நோக்கிப் பாய்ந்தான். மூச்சு வாங்க ஓடினான்.

வென்றீரா? வென்றீரா? எனக்கேட்டு ஆயமகள் மாலையுடன் எதிரே ஓடி வந்தாள். வெட்கம் அவன் தலையில் சம்மட்டி அடிகொடுத்தது. வீதியில் உள்ளோர் கூடிவிட்டனர். தொங்கிய தலையுடன் நின்றவன் விழிகளைத் தூக்கி வீதியில் நின்றோரைப் பார்த்தான். எங்கும் சிரிப்பொலி! கேலிச் சிரிப்பொலி!

செய்தி உணர்ந்த சேல்விழியாள் சே! உன்னை இப்பிறவியில் மட்டுமல்ல; மறுபிறப்பென ஒன்றிருந்தால் அப்பிறப்பிலும் மணக்க மாட்டேன்! என்று கூறிவிட்டு இல்லம் திரும்பினாள்.

மங்கையே! மன்னித்துக் கொள்! இனியொரு வாய்ப்பு எனக்குக் கொடு!

என்று வேண்டியிருக்கலாம் அவன். அதற்குப் பதிலாக தன் வெட்கத்தை மறைக்க வீரனைப் போலப் பேசலானான்;

இந்தக் காளையை அடக்குவதா எனக்குப் பெரிய காரியம்? அதை ஒரு நொடியில் செய்து வாகை சூடமுடியும் என்னால்!

எனக்கு இந்தப் பெண்ணே பிடிக்கவில்லை என்கிறபோது; எதற்காக நான் ஏறு தழுவிட வேண்டும்? இந்தப் பெண்ணுக்கு அழகுமில்லை, அறிவுமில்லை, பண்புமில்லை. அதனால் எனக்குத் தேவையுமில்லை.

என்று ஓங்கிக் குரலெழுப்பினான். அவன் எண்ணம், அவனது கூற்றை அனைவரும் ஏற்றுக் கொள்கிறார்கள் என்று!

அவர்கள் ஏளனமாகச் சிரித்ததை; பாவம் - அவன் உணரமாட்டான்.

இப்படிப்பட்ட வீரர்களை சங்க காலத்தில் பெண்கள், எவ்வளவு அலட்சியப்படுத்திப் புறக்கணித்தார்கள் என்பதற்காகத்தான் கலித்தொகைப் பாடலை உனக்கு நினைவூட்டினேன்.

அன்புடன்,

17-3-76

மு. க.

16-07-1991

1758. நெருக்கடி காலக் கடிதங்கள் - 20 : உண்மை உறங்கி விடுவதில்லை!

(கழக ஆட்சியில் மற்ற மாநிலங்களை விட தமிழ்நாடு பின்தங்கி விட்டது என்றும் 20 அம்ச திட்டத்தை நிறைவேற்றவில்லை என்றும் எமர்ஜன்சி பிரகடனப்படுத்தப்பட்ட காலத்தில் காங்கிரசாரும், அ.தி.மு.க.வினரும் பிரச்சாரம் செய்தனர். அதனை மறுக்கும் வகையில் கலைஞர் அவர்கள் மிசா கொடுமை காலத்தில் முரசொலியில் கழக அரசின் குறிப்பிட்ட சில சாதனைகளை மட்டும் எடுத்துக்காட்டி 1976-ல் எழுதிய கடிதங்களில் இதுவும் ஒன்று)

உடன்பிறப்பே!

BUSINESS STANDARD (பிசினஸ் ஸ்டாண்டர்டு) என்று ஒரு ஆங்கில நாளேடு கல்கத்தாவிலிருந்து வெளிவருகிறது. இந்தியாவில் இருபது அம்ச திட்டம் அறிவிக்கப்பட்ட பிறகு பல்வேறு மாநிலங்களில் எத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதனை ஆய்ந்து புள்ளி விபரங்களோடு அறிவிக்கும் பணியினை அது செய்து வருகிறது. எமர்ஜன்சியை நாம் ஏற்காவிடினும் இருபது அம்ச திட்டம் என்பது வரவேற்கத்தக்க ஒன்று என்று அந்தத் திட்டத்தை இந்தியப் பிரதமர் அவர்கள், வானொலியில் அறிவித்தபோதே நாம் குறிப்பிட்டிருக்கிறோம்! அவைகளில் பெரும்பான்மையானவற்றை இயன்றவரையில் கழக அரசு, நிறைவேற்றத் தொடங்கியிருக்கிறது என்றும் மகிழ்ச்சியுடன் அறிவித்தோம். இருபது அம்சத் திட்டத்தில் மைய இழையாக ஓடிக் கொண்டிருக்கிற ஒன்று வேலைவாய்ப்பு என்பதை யாரும் மறுக்க முடியாது. அந்த வேலை வாய்ப்பு அளிக்கும் பணியில் கழக அரசு, தன் கடமையைத் தொடர்ந்து - தன்னால் முடிந்த அளவு செய்தது என்பது மட்டுமல்ல, 1975-ஆம் ஆண்டு, இருபது அம்சத் திட்ட அறிவிப்புக்குப்

பிறகு வேலை வாய்ப்புக்களை வழங்குவதில் தமிழகம் முதல் வரிசையில் நிற்கக்கூடிய தகுதியையும் உருவாக்கிக் காட்டியிருக்கிறது. இதனை நாம் சொன்னால், இங்கேயிருப்பவர்கள் ஒத்துக் கொள்ள மாட்டார்கள். கழக அரசு, இருபது அம்சத் திட்டத்தை செயல்படுத்தவேயில்லை என்று கண்டனம் செய்து கொண்டிருந்தன இங்குள்ள சில கட்சிகள்!

அந்தக் கண்டனம் தவறானது என்பதைச் சுட்டிக்காட்டவும், வேண்டுமென்றே கழக அரசின் மீது இங்குள்ளவர்கள் செய்த பிரச்சாரம் என்பதை விளக்கிடவும் ஏற்ற வகையில் இதோ, கல்கத்தா ஏட்டில் வந்துள்ள ஒரு புள்ளி விபரத்தை உன் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

1976 ஏப்ரல் 19-ஆம் நான் அந்த இதழில் வெளிவந்துள்ள புள்ளி விபரக் குறிப்புப் படங்கள்தான் இவை.

முதல் படம் 1975 - ஜூலை முதல் தேதியிலிருந்து டிசம்பர் 31-ந்தேதி வரையில் ஆறுமாத காலத்தில் இந்தியாவில் வேலைவாய்ப்பு அளிக்கப்பட்ட விபரங்களை வெளிப்படுத்துவதாகும். படத்தில் உயர்ந்து நிற்கிற கட்டைகள் மாநிலங்களின் வேலை வாய்ப்பு நிலையைக் குறிப்பிடுகின்றன.

இருபது அம்சத் திட்டம் பிரகடனப்படுத்தப்பட்ட பிறகு - (நெருக்கடி காலத்தில்) ஆறு மாதங்களில் தமிழ்நாட்டில் வேலை வாய்ப்புப் பெற்றோர் 21,680 பேர்! தமிழ்நாட்டின் மக்கள் தொகை சுமார் 4 கோடி! உத்திரபிரதேச மக்கள் தொகை சுமார் எட்டு கோடியைத் தாண்டுகிறது. அங்கே அந்த ஆறு மாதங்களில் வேலை வாய்ப்பு பெற்றோர் தமிழ்நாட்டை விடக் குறைவு - 21,549 பேர்! ஆந்திரத்தில் 19,436 பேர்! மராட்டியம் 17,498 பேர்! மத்தியப் பிரதேசம் 17,732 பேர்! பஞ்சாப் 14,445 பேர்! முழுமையான விபரம் படத்திலேயே இருப்பதால் நீயே மற்ற மாநிலங்களைப் பற்றித் தெரிந்து கொள்ளலாம்.

1976 - ஏப்ரல் 18-ஆம் நாளன்று அந்தக் கல்கத்தா ஏடு மற்றொரு படத்தை வெளியிட்டுள்ளது. 1976-ஆம் ஆண்டு ஜனவரி 31-ஆம் நாளன்று இந்தியா முழுமையும் மின்வசதி செய்யப்பட்ட கிராமங்களைப் பற்றிய தகவல் தரும் புள்ளி விவரப்படம் அது!

இந்த வரிசையில் அரியானா மாநிலம் முதல் இடத்தைப் பெற்றுள்ளது! இரண்டாவது இடத்தை தமிழ்நாடு பெற்றுள்ளது! உனக்கு முன்பே நான் நினைவூட்டி யிருக்கிறேன், அரியானாவின் மக்கள் தொகை சுமார் ஒரு கோடி! தமிழ்நாட்டின் மக்கள் தொகை அரியானா மாநிலத்தைவிட நான்கு பங்கு அதிகம்! அரியானாவில் சட்டமன்ற தொகுதிகள் 81 தான்! தமிழ்நாட்டில் 234 தொகுதிகள்!

இந்தக் கணக்கின்படி பார்த்தால் இந்திய மாநிலங்களிலேயே கிராமங்களுக்கு மின்வசதி செய்து கொடுத்ததில் தமிழ்நாடுதான் முதலிடம் வகிப்பதாகச் சொல்ல வேண்டும். அரியானா 100 சதவிகிதம்! தமிழ்நாடு 98 சதவிகிதம்! கேரளா 94 சதவிகிதம்! மற்ற மாநிலங்கள் பற்றிய சதவிகித குறிப்புகளை, இத்துடன் நான் இணைத்துள்ள படம், செம்மையாக விளக்கிடும். அகில இந்திய சராசரி 30 சதவிகிதம் என்பதற்கும் குறைவாக எத்தனை மாநிலங்கள் இருக்கின்றன என்பதையும் உன்னிப்பாகக் கவனி!

1970-ஆம் ஆண்டில், தமிழ்நாடு முழுவதும் எல்லா கிராமங்களுக்கும் மின்வசதி செய்து தருவது என்ற தீவிரத் திட்டத்தின் வாயிலாகத்தான் கழக அரசு, இந்த மகத்தான சாதனையைச் செய்ய முடிந்திருக்கிறது.

இந்த இரண்டு புள்ளி விவரத் தொகுப்புகளின் மூலம் கல்கத்தா ஏடு வரிசைப் படுத்தியுள்ள மாநிலங்களின் புள்ளி விபரங்களை நீ பார்த்தால் மட்டும் போதாது.

எனக்குக் கிடைத்துள்ள மாநிலங்களின் மக்கள் தொகைக் கணக்கையும் மறந்துவிடக் கூடாது. நான் சேகரித்த அளவில் சில மாநிலங்களைப் பற்றி மக்கள் தொகையை மட்டும் தருகிறேன்.

தமிழ்நாடு - 41199168 பேர்!

ஆந்திரா - 43162708 பேர்!

அரியானா - 9971165 பேர்!

கர்நாடகம் - 29299014 பேர்!

உத்திரப்பிரதேசம் - 88341144 பேர்!

மக்கள் தொகையையும் மனத்தில் வைத்துக் கொண்டு புள்ளி விபர ஆதாரங்களையும் ஒப்பிட்டுப் பார்த்தால் தமிழ்நாடு - கழக ஆட்சியில் பின்தங்கி விடவில்லை என்பது மட்டுமல்ல;

முதல் வரிசையில் நிற்கும் தகுதியையும் பெற்றிருக்கிறது என்பது விளங்கும்.

இருபது அம்சத் திட்டத்துக்கு ஏற்ப தொழில் பயிற்சியாளர் திட்டத்தில் நமது மாநிலம் நூறு சதவிகிதத்தைத் தாண்டி விட்டது என்று கடந்த நவம்பர் மாதமே அறிவிக்கப்பட்டது.

நிலச்சீர்திருத்தம், உபரி நிலங்களை நிலமற்றோருக்கு வழங்குதல் ஆகிய திட்டத்திலும் நமது மாநிலம் முன்னணியில் நிற்பதாக அகில இந்திய காங்கிரஸ் கட்சி நியமித்த ஆய்வுக்குழு, கடந்த நவம்பர் மாத வாக்கில் அறிவித்ததையும் அதற்குள்ளாக நாடு மறந்துவிடவில்லை.

காங்கிரஸ் ஆட்சியில் முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலிருந்து 1967-வரையில் பாசன வசதி பெற்ற பரப்பு 6 லட்சம் ஏக்கர்தான்!

பசுமைப் புரட்சி திட்டத்தில் நமது தீவிரப் பணிகளுக்கு அடையாளமாகக் கழக அரசின் காலத்தில் புதிய நீர்ப்பாசனத் திட்டங்களால் பயன் பெற்ற பரப்பு 16 லட்சம் ஏக்கர்.

குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்திலும் இந்தியாவில் தமிழ்நாடு இரண்டாவது இடத்தைப் பெற்றுத் திகழ்கிறது.

கழக உடன்பிறப்பே! கல்கத்தா ஏட்டினைக் கண்டேன்; அதனை உன் பார்வைக்கு அனுப்ப வேண்டுமென்று விரும்பினேன். அதன் விளைவு தான் இந்தக் கடிதம்.

உண்மை உறங்கிவிடுவதில்லை என்பதற்கு இவை உதாரணங்கள்!

அன்புடன்,

22-4-76 மு. க.

17-07-1991

(குறிப்பு :- 76-ல் எழுதிய கடிதத்தில் புள்ளி விபரப் படங்களும் இணைக்கப்பட்டிருந்தன.)

1759. நெருக்கடி காலக் கடிதங்கள் - 21 : குரங்குக்குட்டி; பசுவின் கன்றாகுமா?

(ஆட்சியை அநியாயமாகக் கலைத்து ஐநூறு பேரை மிசா கைதிகளாக சிறைப்படுத்திய எமர்ஜன்சி சர்க்காரில்; கலைஞர் அவர்களைப் பேசக்கூடாது என்றனர் கூட்டங்களில்! அவரோ, திருமண விழாக்களில் ஒலிபெருக்கியின்றி மெகபோன் கருவியை கையில் பிடித்துக் கொண்டு பேசினார். முரசொலியில் எழுதுவதற்கு நாள்தோறும் தணிக்கை என்றார்கள். அரசியல் எழுதத் தடை விதிக்கப்பட்ட போதெல்லாம் கலைஞர் அவர்கள் இலக்கியத்தை, விஞ்ஞானத்தை, சரித்திரத்தை துணைகொண்டு தனது எண்ணங்களை கடிதம் வாயிலாக 1976-ல் வெளியிட்டார். அவற்றில் ஒரு கடிதம் இது)

உடன்பிறப்பே!

பசுவுக்குக் குரங்குக்குட்டி கன்றாக முடியுமா? அப்படிப் பசுவின் கன்றாக முயன்ற ஒரு குரங்கைப் பற்றிச் சொன்னால்; நீ நம்பமாட்டாய் அல்லவா? மலையில் ஏறியவனெல்லாம் மலையமான் ஆக மாட்டான்! மயில் தோகையை இடுப்பில் கட்டிக் கொண்டால் மயிலாகிவிட முடியாது! அதுபோலப் பசுவின் பாலைக் குடித்ததாலேயே குரங்குக்குட்டியும் கன்றாகி விட முடியாது. குரங்குக் குட்டியொன்றைக் கன்றாக்கிக் காட்டும் கற்பனைக் காட்சியொன்றை நற்றிணையில் காணுகின்றேன்.

நற்றிணையில் பெரும் பகுதி காதல் தலைவியின் பிரிவாற்றாமை குறித்தும் அகத்துறையின் சிறப்பு குறித்துமே பேசுகின்றது! ஒவ்வொரு பாடலிலும் தலைவனையோ, தலைவியையோ குறித்திடும்போது அவர்கள் வாழுகின்ற பகுதியின் வளத்தை எழிலார் உவமைகளுடன் விளக்குகின்ற

பாங்கினை நற்றிணைப் பாடல்களில் கண்டு மகிழலாம். வளரும் கொடிகள், மலரும் பூக்கள், ஆடும்புள்ளினம், ஓடும் அருவிகள், இப்படிப் படிக்கப் படிக்கத் தெவிட்டாத இயற்கை ஓவியங்களைக் காவியமாக்கித் தருகின்ற விந்தையினை நற்றிணைப் புலவர்கள் எங்ஙனம் கற்றாரோ?

“வெறிகொண்டு நிற்கும் வேங்கைகள் ஓர்புறம்!
விளையாடித் துள்ளி மகிழும் மானினம் மறுபுறம்!
சிங்கங்கள் ஒருபுறம்! சிறு நரிகள் மறுபுறம்!”

இவ்வாறு குன்றங்களையும், காடு சேர் பகுதிகளையும் குளிர் தமிழ்ச் சொல் எடுத்துக் கொய்யாக் கனியாம் பாடல்களை வழங்குகின்ற நற்றிணை நானூறில் - குரங்கினைக் கன்றாக்கிக் காட்டி; பிறகு குரங்கு, குரங்கேதான் - கன்று, கன்றேதான் என்பதைக் கூறாமல் கூறுகிறார் புலவர் பெருமான்! பொதும்பில் கிழார் என்பது அவர் பெயர்.

“தடங்கோட்டு ஆமான், மடங்கல் மாநிரைக்
குன்ற வேங்கைக் கன்றொடு வதிந்தெனத்”

சிங்கம் போன்ற விலங்குகளின் கூட்டம் நிறைந்த மலையின் மீதுள்ள வேங்கை மரத்தின் கீழே, வளைந்த கொம்புகளையுடைய காட்டுப் பசு ஒன்று தன் கன்றுடன் வந்து தங்குகிறது.

கொடிய மிருகங்களுக்கிடையே பசு, தன் கன்றுடன் வந்த மரத்தடியில் தங்குவதே எண்ணி மகிழத்தக்க நிகழ்ச்சியல்லவா?

வந்து தங்கிய பசுவும், அதன் கன்றும் என்ன செய்கின்றன? பலம் வாய்ந்த பயங்கர விலங்குகள் இருக்கின்றனவே என்பதற்காக அவைகள் அஞ்சிடவில்லை! பிறகென்ன செய்கின்றன?

“துஞ்சு பதம் பெற்ற துய்த்தலை மந்தி
கல்லென் சுற்றம் கை கவியாக் குறுகி”

இரண்டும் உறங்கத் தொடங்கி விடுகின்றன. சிங்கமோ, சிறுத்தையோ, வேங்கைப் புலியோகூட அந்தப் பசுவையும் கன்றையும் நெருங்கிடவில்லை, அல்லது நெருங்க எண்ணிடவில்லை. ஆனால் சில குரங்குகள் ஒலியெழுப்பியவாறு அங்கே ஓடி வருகின்றன. அவைகளை ஒலியெழுப்ப

வேண்டாமென்று, பஞ்சு போன்ற தலையுடைய ஒரு மந்தி கையமர்த்துகிறது.

கல்லென ஒலிக்கும் தன் கூட்டத்தை அவ்வாறு ஒலிக்காதவாறு சாடை புரிந்து விட்டு பசுவின் அருகிலே அந்த மந்தி செல்கிறது.

பசுவும் தூங்குகிறது! கன்றும் தூங்குகிறது! இதுதான் சமயமென்று மந்தி என்ன செய்கிறது பார்த்தாயா!

பால் நிறைந்து பருத்திருந்த பசுவின் மடிக் காம்பினைப் பற்றியிழுத்து இனிமையான அந்தப் பாலை தன் குட்டியின் கை நிறையப் பிழிந்து கொடுக்கிறது.

“வீங்கு சுரை ஞமுங்க வாங்கித் தீம்பால்
கல்லா வன்பறழ்க் கைந்நிறை பிழியும்”

பசுவின் பால் நிறைந்த மடியைப் பற்றி இழுத்துப் பாலைக் கறந்து, தன் தொழிலையும் கல்லாத வலிய குட்டியின் கையில் நிறையப் பிழிந்துகொடுத்தது என்பது இதற்குப் பொருள்.

அதுகண்டு பசு என்ன செய்தது? கன்று என்ன செய்தது? இந்தக் கேள்விகளுக்கெல்லாம் புலவர் போகவுமில்லை! போகவேண்டிய தேவையுமில்லை! கன்றுக்கென உள்ள பாலைக் கடுமந்தியொன்று கறந்து தன் குட்டிக்குக் கொடுப்பதை எந்தத் தாய்ப்பசுதான் தாங்கிக் கொள்ளும்?

பசுவும் அப்படியே உறங்கிக் கிடந்திருக்காது! குரங்குக் குட்டியும் கன்றாகி யிருக்காது! அதனால்தான் புலவர் அதனை நம் முடிவுக்கே விட்டுவிட்டு, அத்தகைய மாமலை பொருந்திய நாட்டுக்குரியவனே என்று தலைவனைப் புகழத் துவங்குகிறார்.

*** கொடுவிலங்கு சூழ் குன்றம்.**

*** கொம்புடைய பசுவும் கன்றும்.**

*** கூட்டமாகச் சில குரங்குகள்.**

அந்த இடத்தையும் அந்தக் கதாபாத்திரங்களையும் வைத்துக் கொண்டே அற்புதமான இயற்கைக் காட்சியை இலக்கியக் காட்சியாகச் சித்தரிக்கும் கவிஞரின் கற்பனைத் திறனே, திறன்!

அன்புடன்,

9-7-76 மு. க.

(18-07-1991)

(குறிப்பு :- திராவிட இயக்கத்தின் பரிணாம வளர்ச்சியின் தோற்றமே நான்தான் என்று யார் கூறப் போகிறார் என்பதை 15 ஆண்டுகளுக்கு முன்பே; முன்கூட்டி உணர்ந்து இந்தக் கடிதத்தை கலைஞர் எழுதியது போல் இருக்கிறதல்லவா?)

1760. நெருக்கடி காலக் கடிதங்கள் - 22 : நித்திய கலியாணியும் சில நினைவுகளும்!

(ஒரு நாள் - ஆம்; நெருக்கடி காலப் பிரகடனத்தின்போது முரசொலிக்காக கலைஞர் வரிசையாக எழுதி அனுப்பிய அரசியல் கடிதங்கள் மூன்றை; தணிக்கை அதிகாரி படித்துப் பார்த்து வெளியிடுவதற்கு அனுமதி தர மறுத்து விட்டார். எழுத்துரிமை எப்படியெல்லாம் பறிக்கப்படுகிறது என எண்ணி மனம் நொந்த கலைஞர் அவர்கள்; கடைசியாக சித்த வைத்தியம் பற்றி இந்தக் கடிதத்தை எழுதி சென்சாருக்கு அனுப்பினார். இந்தக் கடிதம் தடையேதுமின்றி அங்கீகரிக்கப்பட்டது. இதிலுள்ள செய்திகள் எப்போதும் பயன்படும் என்பதால் 1976-ல் எழுதிய இக்கடிதம் இப்போது வெளியிடப்படுகிறது)

உடன்பிறப்பே!

நித்திய கலியாணியைப் பற்றி ஏடுகளில் படித்திருப்பாய். பயங்கரமும் ஆபத்தும் நிறைந்த நோய் ஒன்றினைத் தீர்க்கும் அற்புத மூலிகை அதுவென்று மேல் நாட்டினர் ஆராய்ச்சி செய்து முடிவினை அறிவித்திருக்கின்றனர். இரத்தத்தின் அணுக்களை மாறச் செய்து நொடிப் பொழுதில் உடலெங்கும் பரவிக் கேடு பயக்கும் இரத்தப் புற்று நோய்க்கு நித்திய கலியாணிச் செடியின் வேர் அருமையான மருந்தாம். இரத்தக் கொதிப்பு, இரத்த அழுத்தம் போன்ற நோய்களுக்கும் இந்தச் செடியின் வேரை மருந்தாகப் பயன்படுத்த முடியுமாம்.

மேல்நாட்டு மருத்துவ முறைகள் வந்த பிறகு நமது நாட்டு சித்த மருத்துவம், யுனானி, ஆயுர்வேதம் போன்ற முறைகளில் நாம் நம்பிக்கையிழந்துவிட்டோம். மேல் நாட்டு மருத்துவ முறைகளின் வளர்ச்சியைக் குறைத்து மதிப்பிடவும் முடியாது. அலட்சியப்படுத்தி ஒதுக்கிவிடவும் இயலாது. எனினும், நமது நாட்டில் கிடைக்கிற மூலிகைகள், கீரைகள், கிழங்குகள், காய்கறிகள், பழங்கள்

இவைகளைப் பயன்படுத்துவதின் வாயிலாகப் பல நோய்களை தடுத்து நிறுத்துகிற வலிவினைப் பெற்றிட முடியும்.

இன்றைக்கு நித்திய கலியாணியைப் பற்றிய அரிய செய்தி, நமக்குக் கிடைத்திருக்கிறது. அந்தச் செடி, இதுவரையில் நமது கிராமங்களில் கேட்பாரற்றுக் காலில் மிதிபட்டுக் கொண்டிருந்தது. இப்போது அதற்கு ஓர் சிறப்பு ஏற்பட்டுள்ளது. மிக உன்னதமான மருந்தாகப் பயன்பட இருக்கிறது.

இந்த ஒரு செடி மட்டுமல்ல; செடியோ கொடியோ அல்லது மரமோ - ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையான நோய்களைத் தீர்க்கப் பயன்படுகின்றன என்பதை சித்தர்கள் காலம் தொட்டு எடுத்துச் சொல்லி வருகிறார்கள்.

எடுத்துக்காட்டாக சிலவற்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.

வாத நோய்களைப் போக்குவதற்குச் சூரியகாந்தி.

கபம், மேல்மூச்சு, கொட்டும் இருமல் ஆகியவற்றுக்கு ஆடாதோடை, கண்டங்கத்திரி இவைகளின் சாற்றுடன் சர்க்கரையும் மிளகுத் தூளும் கலந்து காலை மாலை அருந்தினால் விரைவில் குணம் தெரியும்.

வெதுப்படக்கி அல்லது பேய் மிரட்டி என அழைக்கப்படும் செடியில் தயாரிக்கப்படும் மருந்து கடுமையான காய்ச்சலை அகற்றும்.

பல்லிப் பூண்டினையும் மிளகையும் சேர்த்து அரைத்துக் கொடுத்தால் பாம்பு தீண்டியதால் ஏற்பட்ட விஷம் இறங்குமென்கிறார்கள்.

காமாலை நோய்க்கு, கீழ்க்காய் நெல்லியைச் சீரகத்துடன் அரைத்துப் பசும் பாலில் கலந்து கொடுத்தால் அந்த நோய் பறந்தோடும் என்பது கண்ணால் கண்ட உண்மை.

ஓரிலைத் தாமரையை அரைத்து அளவாகப் பசும் பாலுடன் கலந்து நாற்பத்தெட்டு நாட்கள் அருந்தினால் தாய்ப்பால் சுரக்கும். அமுலுக்கு அலைந்திடத் தேவையில்லை.

மருக்கொழுந்து மணந் தருவதற்கு மட்டுமே என்று கருதுகிறோம். அந்தக் கொழுந்தைத் தவறாமல் உட்கொண்டால் பசியேற்படும். உடல் வலிவும் உண்டாகும்.

ஆகாயத் தாமரை, மூல நோயைக் கரைக்கும்.

ஓரிலைத் தாமரை - மலைப் பகுதிகளில் கிடைக்கக்கூடிய இதனைப் பக்குவப்படுத்தி முறைப்படி சாப்பிட்டு வந்தால் வீரியம் பெருகுவதோடு, விந்துவும் கட்டப்பெற்று பல நோய்களும் தீருமென்று அறுதியிட்டுக் கூறுகிறார்கள்.

கீல் பிடிப்பு, வாதங்களுக்கு - முடக்கத்தான் என்பதைத் துவையல் செய்து சாப்பிட்டால், வாதம் போன்றவைகளை வராமலே தடுக்கலாம்.

தூதுளைச் செடியின் வேர், கபத்தைப் போக்கும். இதன் பூவை, நெய்யில் வதக்கித் தயிர்ப்பச்சடியில் சேர்த்து சாப்பிட்டால் அறிவு வளர்ச்சி ஏற்படுமாம்.

கோவை - இது ஒரு நகரத்தின் பெயரல்ல!ஒரு செடியின் பெயர்தான். இதன் இலையைக் கசக்கி நாய் கடியில் வைத்துக் கட்டினால் நஞ்சு இறங்கிவிடுமாம்.

வல்லாரையை வாடிக்கையாக உண்டு வந்தால் ஆயுசு நீடிக்குமென்கிறார்கள்.

முள்ளங்கிக்கிழங்கு ஒரு உயர்தரமான மூலிகை என்கிறார்கள். வாதம், கரப்பான், வயிற்று எரிச்சல், சூலை, குடல் வாதம், காசம், பல்நோய், குன்மம், மூலக்கடுப்பு இவைகளையெல்லாம் தீர்த்திடக்கூடிய அரிய கிழங்காகும் இது!

மாமரத்தின் வேர், சீதபேதியையும் வாந்தியையும் நீக்க வல்லது.

வில்வ மரத்தின் வேர், பல நோய்களைத் தீர்ப்பதோடு அழகையும் கொடுக்குமாம்.

புங்க மரத்தின் வேர், ரணங்களையும் புண்களையும் உடனடியாக ஆற்றக்கூடியது.

உடன்பிறப்பே, மரம், கிழங்கு, வேர், செடி, கொடிகள் எந்த அளவுக்கு நோய்களைத் தடுக்கவும், குணப்படுத்தவும் பயன்படுகின்றன என்பதற்குச் சிலவற்றையே தொகுத்து அளித்துள்ளேன்.

சித்த மருத்துவத்தில் ஆர்வங்கொண்டு அதன் முன்னேற்றத்துக்குப் பாடுபட்ட கழக அரசின் ஆதரவோடு

விளக்க நூல்கள் பல வெளியிடப் பெற்றுள்ளன. அவைகளை வாங்கிப் படிப்பதின் வாயிலாக நோய்க்கு இடங்கொடாமல் கூடுமானவரையில் தடுத்துக் கொள்ளலாம்.

உடல் உறுதியாக இருந்தால்தான் - உள்ளம் உறுதியாக இருக்க முடியும்! உடனே உன் சேதி என்ன? என்று என்னைப் பார்த்துக் கேட்டுவிடாதே! விதிவிலக்குப் பட்டியலில் நான் ஒருவன்!

நித்திய கலியாணி பற்றிய செய்தி படித்தேன். நினைவுக்கு வந்தவற்றை உனக்கு எழுதினேன். முடிந்தவரை பயன்படுத்திக்கொள்ள முயற்சி செய்!

அன்புடன்,

1-10-76

மு. க.

(19-07-1991)

1761. நெருக்கடி காலக் கடிதங்கள் - 23 : கோயிலடி கூறுவதென்ன?

(தமிழர்களிடையே ஒற்றுமை வேண்டும் என்று எழுதக்கூட எமர்ஜன்சி காலத்தில் சென்சார் தடை விதித்ததுண்டு! அந்தக் கொடுமை நிறைந்த 1976-ஆம் ஆண்டில்தான் தமிழ்க்குலத்தினர் தங்களுக்குள் மோதிக் கொள்ளல் கூடாது எனக் கருத்தமைந்த இலக்கியக் கடிதங்களை கலைஞர் முரசொலியில் எழுதினார். அவற்றில் இது ஒன்று)

உடன்பிறப்பே!

இன்று கோயிலடிக்குச் சென்று திரும்பலாம்; என்னுடன் வா! கோயிலடி என்பது தஞ்சை மாவட்டத்தில் உள்ள ஒரு ஊர்! பழங்காலத்தில் அதற்குத் திருப்போர்புறம் என்று பெயர். அந்தக் கோயிலடியில் இரண்டு தமிழ் மன்னர்களின் படைகள் மோதிக் கொண்டன! சேரன் படையும் சோழன் படையும்!

சோழன் வேற்பஃறடக்கைப் பெருவிறற் கிள்ளியும், சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதனும் பெரும் பகை கொண்டு களத்தினில் சந்தித்தனர்.

அக்காலத்தில் ஒருவர் அரண்மனையை மற்றொருவர் முற்றுகையிட்டு நிற்கும் போதும் புலவர் பெருமக்கள் சிலர் குறுக்கிட்டு இருவரிடையே பகையொழித்து அமைதியை நிலைநாட்டும் பொறுப்பினை ஏற்றுக் கொண்டமைக்குச் சான்றுகள் பல உண்டு.

ஆனால், கோயிலடிப் போரில் அத்தகைய முயற்சிகள் எதுவும் நடைபெறவில்லை. எனவே வெற்றிபெறும் வேந்தரிடம் சென்று பரிசினைப் பெறலாமென்று புலவர் குழுவும் பாணர் கூட்டமும் புறப்பட்டது.

பண்டைநாள் போர்க்களங்களில் வெற்றிபெற்றுத் திரும்புகிற மன்னர்கள், பகைவரிடமிருந்து கைப்பற்றிய யானைகளையும் தேர்களையும் அணிகலன்களையும் புலவர்களுக்கும் பாணர்களுக்கும் வழங்குவது வாடிக்கை.

ஆனால் கோயிலடியில் நடந்த போரில் சேர மன்னன், சோழ மன்னன் இருவருமே வீழ்ந்து விட்டனர். கழாத் தலையார் எனும் புறநானூற்றுப் புலவர் ஒருவர், வெற்றிபெற்ற வேந்தனைக் கண்டு புகழ்க் கவிதை இயற்றிட கோயிலடிக்குச் செல்கிறார். ஆங்கே இருதரப்புப் படையினரும் நிலைகுலைந்து வீழ்ந்து கிடக்கின்றனர்.

சோழ மன்னன் புண்பட்டுச் சாய்ந்து விட்டான். சேர மன்னனோ குற்றுயிராய்க் களத்தில் கிடக்கிறான். கழாத்தலையார் கண்கலங்க அவனருகே செல்கிறார். இரண்டு மன்னர்களுமே வீழ்ந்துவிட்ட பிறகு தமிழ்ப் புலவர் யாரிடத்தில் எதைப் பாடி எதைப் பரிசாகப் பெற முடியும்?

“களிறு முகந்து பெயர் குவ மெனினே
ஒளிறு மழை தவிர்க்கும் குன்றம் போலக்
கைம்மா வெல்லாம் கணையிடத் தொலைந்தன”

யானைகளைப் பரிசாகப் பெற்றுச் செல்வோமென்று வந்தேன். மழைமுகிலைத் தடுக்கின்ற குன்றுகளைப்போல அவைகள் கணைகள்பட்டு மாய்ந்துவிட்டன; என்று களக் காட்சியை வர்ணிக்கிறார் புலவர்!

“கொடுஞ்சி நெடுந்தேர் முக்குவ மெனினே
கடும்பரி நன்மான் வாங்குவலி னொல்கி
நெடும் பீடழிந்து நிலஞ் சேர்ந்தனவே”

கொடுஞ்சியோடு கூடிய நெடிய தேர்களைப் பெற்றுச் செல்வதற்கும் வழியில்லை. போர்க்களத்தே ஏற்பட்ட விளைவுகளால் குதிரைகள் அங்குமிங்கும் தவித்தோடி தேர்கள் அனைத்தும் நொறுங்கிச் சீரழிந்து விட்டன.

குதிரைகளைப் பரிசாகப் பெறலாம் என எண்ணினாலோ; அவைகள்

“வளி வழக் கறுத்த வங்கம் போலக்
குருதியம் பெரும்புனல் கூர்ந்தொழிந்தனவே”

காற்றின் அசைவில்லாமல் நிற்கின்ற மரக் கலங்களைப் போல் அந்தக் குதிரைகள் குருதி வெள்ளத்தில் உயிரற்று மிதந்து கொண்டிருக்கின்றன.

இருதரப்பிலும் ஏற்பட்டுள்ள அழிவை எடுத்துக் கூறுகிற கழாத்தலையார், பரிசு வேண்டி வருகின்றவர்களுக்கு இரு மன்னரும் கொடுப்பதற்கு என்ன இருக்கிறது என்று உருக்கமாகக் கேட்கிறார்.

குற்றுயிராகக் கிடந்த சேரமானோ தன் கழுத்தில் கிடக்கும் ஆரத்தைக் காட்டி அதைப் பரிசிலாக எடுத்துக் கொள்ளுமாறு தன்னைப் பாடிவந்தவர்களுக்குக் கூறுகிறான்.

“பாடிவந்த தெல்லாங் கோடியர்
முழுவு மரு டிருமணி மிடைந்த தோள்
அரவுற ழார முகக்குவ மெனவே”

முழவு போன்ற அழகிய மணியாற் செய்யப்பட்டு தோளில் அணிந்துள்ள பாம்பு போன்ற ஆரத்தை மட்டுமே, பாடி வந்த கூத்தர்கள் பெறலாம் போலும் என்று கழாத்தலையார் பாடியது, சேரமானின் கொடைத் தன்மையைக் காட்டிட மட்டுமல்ல; இரு தமிழ் வேந்தர்கள் மோதிக் கொள்வதால் ஒருவர்க்கு வெற்றி கிடைக்கும், பரிசில் பெறலாம் என எண்ணுவதும் தவறு - இருசாராருமே களம்பட்டு அழிந்து விட்டால், இரு மன்னர்களையுமே பாடிப் பரிசில் பெற வந்திடுவோர் ஏமாற்றமே அடைவர்! பெருவதற்கு எதுவுமின்றி அனைத்துமே அழிந்துவிடும்! என்பதைச் சுட்டிக் காட்டவுமே இந்தப் பாடலை அவர் இயற்றியுள்ளார் என்ற கருத்தும் மிகப் பொருத்தமுடையதாகும்.

சங்க காலப் புலவர் பெருமக்கள் போர் ஒழிந்த அமைதி நிலை நிலவிட வேண்டும் என்பதில் மிக்க அக்கறை காட்டினர் என்பதற்குப் பல சான்றுகள் உண்டு.

அதன் காரணமாகத்தான், போரின் அழிவு பேரழிவாக இருக்குமென்பதைப் போர்க்களக் காட்சியின் வாயிலாகவும், மணிமுடி கொண்ட அரசர் பெரு மக்கள் இருவருமே போரில் அழிந்துபட்ட வேதனையை வெளிப்படுத்தும் வகையிலும், புலவர் பெருமகனார் போர் கூடாது என்பதனை மறைமுகமாக விளக்கியுள்ளார் என்றே கொள்ள வேண்டும்.

உடன்பிறப்பே, முத்தமிழ் வளர்த்த மூவேந்தர்களிடையே அடிக்கடி மூண்டெழுந்த போர்களைத் தவிர்க்க நேரடியாகவே முன்வந்த புலவர்கள் பற்றிய செய்திகளையும் நமது இலக்கியங்கள் உரைக்கின்றன. அவற்றையெல்லாம் வேளை வாய்க்கும்போது இடையிடையே உனக்கு நினைவூட்டுகின்றேன்.

அன்புடன்,

1-7-76 மு. க.

(22-07-1991)

1762. நெருக்கடி காலக் கடிதங்கள் - 24 : கதையும்; அது வழங்கும் கருத்தும்!

(எமர்ஜன்சிக் காலத்தில் கழகத்தை அழிக்க மிசாச் சட்டத்தின் கீழ் கைது, பொய் வழக்குகள் - வானொலி, டி.வி., மூலம் அவதூறுகள் என்று பல்வேறு அடக்குமுறைகளை ஏவி விட்டார்கள். அப்போது - கழகத்தை அழிக்க ஒவ்வொரு காலகட்டத்திலும் எதிரிகள் செய்த பொய்ப் பிரச்சாரங்களை நினைவுபடுத்தி அவை எப்படி முனைமுறிந்து வீழ்ந்துபட்டன என்பதையும் விளக்கி 1976-ல் கலைஞர் எழுதிய கடிதம் இது)

உடன்பிறப்பே!

ஒரு கதை சொல்லுகிறேன்; கேட்கிறாயா? ஊர்க் கோடியில் உள்ள பிள்ளையார் கோயில் மண்டபத்தில் நின்றுகொண்டு ஒருவன் முழங்கினான்.

“என் எதிரி ஒழிந்து விட்டான்.
அவனை நான் ஒழித்து விட்டேன்.
செத்தான்! செத்தான்! செத்தே
போய்விட்டான்! ஜெயித்துவிட்டேன்
நான்! ஜெயபேரிகை கொட்டுகிறேன்
நான் - ஒழிந்தான் என் பகைவன்”

அவனது ஆவேச முழக்கத்தைக் கேட்க ஊர் மக்கள் திரண்டார்கள். அடடா! அசகாய சூரன் இவன்! எனப் பாராட்டினார்கள்.

மறுநாள் காலை, அதே ஊரில் உள்ள ஒரு குன்றின் பக்கமிருந்து ஒலி கேட்டது. ஊரார் அந்தக் குன்றினருகே குழுமினர்.

பிள்ளையார் கோயில் மண்டபத்தில் பேசிய அதே ஆள்தான் குன்றின்மீது நின்று கொக்கரித்துக் கொண்டிருந்தான்.

“வீழ்ந்தான் என் விரோதி!
செய்தி தெரியுமா உங்களுக்கு?
என் பகைவனைத் தீர்த்துக்கட்டி
விட்டேன். முடிந்தது அவன் கதை!
முழுவெற்றி எனக்கு! அதனால்தான்
முழங்குகிறேன் வெற்றி முரசு!”

கூடியிருந்த மக்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். பிறகு ஒவ்வாருவராகக் கலைந்து சென்றனர்.

அதே நாள் இரவு அந்த ஊர்ப் பொது மண்டபத்தில் விளக்குகள் வரிசை வரிசையாக ஏற்றி வைக்கப்பட்டிருந்தன. கோயிலிலும், குன்றிலும் ஏறி நின்று கூவியவன், இப்போது பொது மண்டபத்தில் நின்றுகொண்டு கரலெழுப்பினான்.

“என் ஆற்றலைக் கண்டீரோ
அவையோரே! அரை நொடியில்
அழித்து போட்டுவிட்டேன் ஆணவங்
கொண்ட பகைவனை!
அவன் புதையுண்ட இடத்தில் இனிப்
புல் கூட முளைக்காது! வீசினேன்
வாளை! வீழ்த்தினேன் தலையை!
வீணன் கல்லறையாகி விட்டான்.
அடடாவோ! என் அற்புத வீரத்தைக்
காண்மின்! காண்மின்! ஒழிந்தான்
என் எதிரி! முடிந்தது அவன் வரலாறு!”

பொதுமண்டபத்தில் ஓய்வுக்காக வந்து உட்கார்ந்திருந்த சிலரும் ஒருவரையொருவர் அந்த விளக்கொளியிலே நோக்கியவாறு மெல்லச் சிரித்துக்கொண்டே மண்டபத்தைவிட்டு அகன்றனர்.

மறுநாள் நடுப்பகலில் அந்த ஊர்ச் சந்தை கூடுமிடத்தில் அதே கோயிலடி வீரன் வந்து நின்று கொண்டான்.

“ஊராரே! உத்தமரே! அறிவீரோ
செய்தி? ஒருவனிருந்தானே என்
எதிரி! அவன் செத்த பாம்பாகி

விட்டான்! கொடுக்கறுத்து, குடலும்
அறுந்து, குழியில் போடப்பட்ட தேளாகி
விட்டான். சாய்ந்தான் என் பகைவன்.
சாய்ந்தான்! சாய்ந்தான்! அதனால்தான்
நான் சந்தோஷப் பள்ளுப் பாடுகிறேன்.
இனி அவனை நீங்கள் காணமுடியாது.

சந்தைக்கு வந்தோர் அவனை கவனிக்காமலேயே தங்கள் தங்கள் காரியங்களைப் பார்த்துக் கொண்டிருந்தனர். அவனும் அந்த இடத்தை விட்டுப் போகாமலே இருட்டும் வரையில் கத்திக் கொண்டிருந்தான்.

அதற்கு அடுத்த நாள் அந்த ஊர்த் திருவிழாவினையொட்டி தெருக்கூத்து நடைபெற இருந்தது. ஊர் மக்கள் கூத்து மேடைக்கெதிரே கூடியிருந்தனர். கோயிலில் முழங்கி, குன்றேறி கர்ச்சித்து, மண்டபத்தில் மார்தட்டி, சந்தையிலும் சங்கநாதம் செய்த அந்த வீராதி வீரன், கூத்து ஆரம்பிப்பதற்கு முன்பாக, தன் உடைவாளை உருவிக் கொண்டு கூத்து மேடையில் குதித்தோடி நின்று கொண்டு கூச்சலிடத் தொடங்கினான்.

"தொலைந்தான் என் எதிரி!
தொல்லை ஒழிந்தது - வீழ்ந்தான்
பகைவன்! அழித்துவிட்டேன்.
அணு அணுவாகச் சித்திரவதை செய்து
அழித்து விட்டேன்!"

கூட்டத்திருந்து பத்து பேர் எழுந்தார்கள். தெருக்கூத்து மேடைக்குச் சென்றார்கள். அவனைச் சூழ்ந்து கொண்டார்கள்.

"ஏனப்பா! தினந்தோறும் காலை மாலை
உனக்கு இதே வேலையா? கோயிலுக்குப்
போனால் அங்கே வந்து கத்துகிறாய்?
குன்றின் மீது ஏறிக்கொண்டு
எங்கள் காதைக் குடைகிறாய்!
சந்தைக்குப் போனாலும், உன் சனியன்தான்!
சந்தோஷமாகக் கூத்து பார்க்க
வந்த இடத்திலும், உன் சங்கடமா?

உன் எதிரி ஒழிந்தான்! ஒழிந்தான்!
என்று எத்தனை தடவை - எத்தனை
நாளைக்குச் சொல்லிக் கொண்டேயிருப்பாய்?
அவன் தான் ஒழிந்து விட்டான்
என்கிறாயே; பிறகேன் எங்கள்
உயிரை வாங்குகிறாய்?''

பத்து பேரும் மாறி மாறி இந்தக் கேள்வியைக் கேட்டதும், அந்த சூராதி சூரன், தான் சுழற்றிக் கொண்டிருந்த வாளை உறையில் போட்டுவிட்டு அவர்களைப் பார்த்து நிதானமாகப் பதில் சொன்னான்.

''அய்யா! என் எதிரி ஒழிந்திருந்தால் ஒரே
தடவை சொன்னதோடு நிறுத்தியிருப்பேன்.
அவன் இன்னும் ஒழியாத காரணத்தால்தான்
ஒவ்வொரு நாளும் சொல்லிக் கொண்டிருக்கிறேன்.''

இந்தப் பதிலைக் கேட்டு அந்தக் கூட்டமே கொல்லென்று சிரித்தது. இதுதானப்பா அருமையான தெருக்கூத்து! முதல் தரமான நகைச்சுவை! இப்படி ஒரு விதூஷகனை எந்தக் கூத்து மேடையிலும் காணமுடியாது! பேசாமல் இவனையே ஒப்பனை அறைக்குள் இழுத்துக் கொண்டு போய் அரிதாரம் பூசி கோணங்கி உடையும் மாட்டி விடுங்கள்! சரியான கோமாளி கிடைத்தான் இந்தக் கூத்தரங்கத்திற்கு! இப்படி ஒவ்வொரு கருத்தை அங்கு கூடியிருந்த ஒவ்வொருவரும் சொல்லிச் சிரித்தார்கள்.

உடன்பிறப்பே, கதை பிறகு எப்படி முடிகிறது என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா? எப்படி முடிந்திருக்கும். கூத்து மேடையை விட்டு அந்த மனிதன் ஓடியிருப்பான். அவன் யாரை எதிரி என்று வர்ணித்தானோ; அவனுக்கு இந்தச் செய்திகள் எல்லாம் கிடைத்து அய்யோ பாவம்! என்றைய தினம் முதல் இப்படி ஆகிவிட்டது! ஆள், நன்றாகத்தானே இருந்தான் என்று அனுதாபப்பட்டிருப்பான்.

கழகம் அழிந்து விட்டது என்று, இன்றைக்கு நேற்றைக்கு அல்ல பதினைந்து ஆண்டுக் காலமாகத்தான் பேசப்படுகிறது, எழுதப்படுகிறது - முறையே மாற்றுக் கட்சி நண்பர்களால்! மாற்றுக் கட்சி எடுகளால்!

ஆனால் ஒவ்வொரு நாளும் கடைகளின் முகப்பில் தொங்குகிற நாளிதழ்களின் சுவரொட்டிகளானாலும், நாளிதழ்களானாலும் கழகத்தைப் பற்றிக் கொட்டை எழுத்துச் செய்திகளை வெளியிடத் தவறுவதில்லை.

அதே ஏடுகளில் பல, பதினைந்து ஆண்டுகட்கு முன்பு கழகம் ஒழிந்து விட்டது என்று தலைப்புச் செய்தி வெளியிட்டவைதான்!

பத்து ஆண்டுகளுக்கு முன்பும் அப்படி செய்தி வெளியிட்ட ஏடுகள்தான்!

நாலைந்து ஆண்டுகளாக நாள்தோறும் கழகம் ஒழிந்தது! செத்தது! அழிந்தது! இனி தலைதூக்காது! என்கிற அமங்கலச் சொற்களை அள்ளி அள்ளி அச்சுக் கோத்து வெளியிட்டவைதான்!

நெடுநாட்களாக மாற்று முகாமில் இருந்தவர்கள் மட்டுமல்ல; ஒன்றாக உண்டு, ஒன்றாக உறங்கி, உயிருக்குயிராகப் பழகியவர்கள் என்று வெளி உலகு எண்ணுகிற அளவுக்கு இருந்தவர்களில் சிலர் கூட,

ஒழிந்தது கழகம்

என்று ஒவ்வொரு நாளும் எடுப்பெடுத்துப் பாடி பின்னர் தொடுப்பெடுத்து தொகை தொகையாக இழிமொழி வீசி இறுதியாக இவர்களை வெளியே விட்டு வைக்கக் கூடாது என்று முடிவெடுத்து வசை பாடும் நிகழ்ச்சியைத் தங்களுக்கேயுரிய இசைபாடும் நிகழ்ச்சியாக அமைத்துக் கொண்டல்லவா இருக்கிறார்கள்!

என் இனிய உடன்பிறப்பே, இவைகள் சுட்டிக் காட்டும் உண்மை என்ன? உன் ஆற்றலால், உன் இடைவிடாத தொண்டினால், உன் ஓய்வற்ற உழைப்பினால், உன் உறுதி மாயாத கொள்கைப் பற்றினால் இந்தக் கழகத்தை எஃகுக் கோட்டையாக்கி வைத்திருக்கிறாய் என்பதுதானே!

நீ உருவாக்கியுள்ள இந்தக் கழகத்தைச் சுற்றித்தான் தமிழ்நாட்டு அரசியல் சுழலுகிறது என்பதற்கு அடையாளந்தானே; எவர் பேசிடினும், எழுதிடினும் நம்மை மறவாமல் தொடர்ந்து குறிப்பிட்டுக் கொண்டேயிருப்பது!

“கோயிலிக் கூச்சல்!
குன்றின் மீதிருந்து கூக்குரல்!

சந்தையில்,
தெருக்கூத்தில்,
மண்டபத்தில் சவால்கள்!

இவைகளுக்கும், நம்மை எதிர்த்து அழுகல் நடையில் எழுதிப் பேசிடும் போக்கிற்கும் துளியும் வேறுபாடில்லை என்பதை எடுத்துக் காட்டவே, கதை கூறினேன்!

கதை கூறி விளக்குவது -

உருவகம் கூறி ஒப்பிடுவது -

இவைகளில் அரைகுறைப் பயிற்சி பெற்றுள்ளவர்கள் சிலர், நம்மை மோதுகிறார்கள்.

பாவம்; எழுதவும் பேசவும் கற்றுக் கொள்கிறார்கள் என எண்ணி, அவர்களைப் பொறுத்துக் கொள்வோம்.

அன்புடன்,

14-7-76

மு. க.

(23-07-1991)

1763. நெருக்கடி காலக் கடிதங்கள் - 25 : ஒரு பனை மரத்தின் சுயசரிதை!

(கவிதைகள், இலக்கியங்கள், வரலாற்று நிகழ்ச்சிகள், விஞ்ஞானச் செய்திகள், கதைகள் என்ற பல பின்னணிகளில் எமர்ஜன்சி காலத்தில் கலைஞர் அவர்கள் அரசியல் கருத்துக்களைத் தனது உடன்பிறப்புகளுக்கும் ஏனைய முரசொலி வாசகர்களுக்கும் புரியும் வகையில் 1976-ஆம் ஆண்டு கலைஞர் கடிதமாக எழுதி வந்தார். அவற்றில் ஓர் உருக்கமான கடிதம் இது)

உடன்பிறப்பே!

இன்று ஒரு மரம், தன் கதையைச் சொல்கிறது. சோகமாக இருந்தாலும் சுவையாக இருக்கும், பாவம்; போனால் போகிறது - மரம்தானே என்று அலட்சியப் படுத்தாமல் மனம் திறந்து பேசும் அதன் கதையைச் செவி திறந்து கேட்போம் வா!

என் பெயர் பனைமரம் பனையும் அதன் பயனும் என்ற தலைப்பில் ஈழத்து அடிகள் என்பவர் திராவிட நாடு இதழில் பல வாரங்கள் தொடர்ந்து எழுதியிருக்கிறார். அந்த அடிகள் அண்ணாவின் நிழலில் இருந்தவர். அவரது கடைசிக் காலத்தில் கூட அவர் பட்ட கடன்களைத் தீர்ப்பதற்கு அண்ணா அவர்கள் பெருமுயற்சி எடுத்து நிதி திரட்டிக் கொடுத்தார். நிதியையும் பெற்றுக்கொண்டு அண்ணாவையும் நிந்தனை செய்து அடிகள் ஒரு அறிக்கையும் வெளியிட்டார். அண்ணாவின் ஜாதகமும் அப்படித்தான். சரி! சரி! என் கதையைச் சொல்ல வந்து நான் வேறு எங்கேயோ போகிறேனே!

நான் வளமான இடம் தேடி வளர்வதில்லை. வறண்டு கிடக்கும் பகுதிகளிலும் நான் முளைக்கிறேன், எழுகிறேன், வளர்கிறேன். முடிந்த அளவு பயன்படுகிறேன்.

நான் உற்பத்தியான இடத்தைப் பொறுத்து எனக்கு பெருமையில்லை. பொன்னையும், மண்ணையும் சுமந்து

செல்லும் ஆற்றுப் பெருக்கின் அருகாமையில் மணம் பரப்பி வரும் தென்றல் காற்றை அனுபவித்தவாறு செழிப்பும் சிரிப்பும் குலுங்க எத்தனையோ குளிர் தருக்கள் வாழுகின்றன. சீமானும் சீமாட்டியும் சிருங்கார கீதமிசைக்கின்ற சித்திரகூட மாளிகையின் மீது ஒருவரையொருவர் இப்படித்தான் தழுவ வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாகக் கொம்புகளைத் தழுவிடும் கொடிகளும், பூஞ்செடிகளும் போல் நான் பெரிய இடத்துச் செல்லப் பிள்ளையல்ல!

குரோட்டன்ஸ் சட்டிகளில் உள்ள வண்ண வண்ணச் செடிகளின் இலைகளை ரசித்து மகிழும் குபேர புரியினர் என்னைக் கண்டால் வெறுப்புடன் தான் நோக்குவர்! அவர்களுக்கு மின்சார விசிறி தெரியாத காலத்தில் குரோட்டன்ஸ் இலையிலா விசிறி தயாரித்தார்கள்? இல்லை! இல்லை! இந்தப் பனை ஓலை விசிறிதான் அவர்கள் புழுக்கத்தைப் போக்கிக் கொண்டிருந்தது. இப்போதும் மின்சாரம் தடைப்படும் போதெல்லாம் என் உதவிதான் தேவைப்படும். அதாவது நான் வழங்கிய ஓலையில் தயாரிக்கப்பட்ட விசிறி!

என்னைப் பயன்படுத்திக் கொண்டேயிருப்பார்கள். திடீரென மின்விசிறி சுழலும், மின் விளக்கு எரியும். ஆ! கரண்ட் வந்து விட்டது என்று என்னை ஒரு மூலையில் தூக்கி எறிந்து விடுவார்கள். என் செய்வது; வள்ளுவர் திருக்குறள் எழுதுவதற்கே நான்தான் ஓலை வழங்கினேன். அந்த ஓலைகளை எங்கேயோ சுவடி என்று கட்டிப் போட்டுவிட்டு இன்று புதிய புதிய நூல்கள் அல்லவா புகழ்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

யாரும் எனக்குத் தண்ணீர் ஊற்றவில்லை. எருப்போடவில்லை. என்னைப் போலிருந்த என் சக மரங்களின் தோழமையொன்றினால் மட்டுமே என் மனதுக்கு ஆறுதல்.

நான் வளர்ந்த ஊரில் என்னை முழுமையாகப் பயன்படுத்திக்கொண்ட சிலருடைய பெயர்களை நீங்கள் அறிய மாட்டீர்கள்! அந்த நன்றியுள்ள மனிதர்களின் பெயர்களை அறிந்து கொள்ளாமலிருப்பதே நல்லது!

அவர்கள் ஒவ்வொரு நாளும் அரிவாளுடன் என்னை அணுகுவார்கள்.

மட்டை வேண்டுமென்பார்கள். நான் மறுத்ததில்லை. மறுத்தால் அட்டைபோல் ஒட்டிக் கொள்வார்களே; அதற்காக! மட்டைகளை வெட்டிக் கொள்வார்கள். அவர்களின் மன நிம்மதி கண்டு நான் மகிழ்வேன். என் மட்டைகள் விசிறிகளாக, கூடைகளாக, பாய்களாக, விளையாட்டுப் பொம்மைகளாக மாறிவிடும். அதனைச் சந்தைகளில் விற்றிடுவர், நல்ல வருவாய் பெற்றிடுவர்.

சில நேரங்களில் பதமாகப் பேசிக் கொண்டு வருவார்கள்! ஓகோ! பதநீர் தேவையோ? என்று பரிவுடன் கேட்பேன்.

ஆமாம்! என்று சொல்லிக்கொண்டே என் உதட்டில் சுண்ணாம்பைத் தடவிவிட்டுச் செல்வார்கள். என் நாவும், வாயும் வெந்து போனாலுங்கூட, கவலைப்படாமல், உமிழ்நீரைச் சுவை நீராக்கித் தருவேன் அவர்களுக்கு! என் உதிரத்தின் ஒரு பகுதியையே அப்படிக் கொடுத்தேன் என்று அவர்கள் உணர மாட்டார்கள். அவர்களுக்குத் தேவை, பயன்தானே! அதனால் வேறு எதையும் பற்றி அவர்கள் வேதனைப்பட்டுக் கொண்டதில்லை.

அவர்களில் ஒருவர் பெண்ணுக்குத் திருமணமாம்! நானில்லாவிட்டால் நிச்சயமே நடக்காது என்று பெண்ணின் அப்பா என்னிடம் வந்தார். எப்படி என்று கேட்டேன். மாப்பிள்ளை வீட்டார் பிடிவாதக்காரர்கள். நிச்சயதார்த்த ஒப்பந்தம் பேப்பரில் எழுதக் கூடாது என்கிறார்கள். பனைஓலையில்தான் மஞ்சள் தடவி எழுத வேண்டுமென்கிறார்கள். ஆகவே, பனைமரமே! நீ இல்லையேல் என் பெண்ணின் மணவிழாவே நடக்காது. உடனே கொடுத்திடுக ஓலை! என்றார். அட்டியில்லை, எனக்கு அதுதானே வேலை! என்று கொடுத்தனுப்பினேன்.

பையன்கள் எல்லாம் கார்த்திகைப் பொறி சுற்ற வேண்டுமென்கிறார்கள். அதற்குப் பனம்பூ தந்திடுக எனக் கேட்டு அந்தச் சிலரில் ஓரிருவர் வந்தனர். இல்லையென்று என்றைக்குச் சொன்னேன்! பூக்களையும் வெட்டிச் சென்றனர்.

குலைகுலையாய்க் காய்த்திருந்த பனங்காய்களை பிளந்து நுங்குகளை எடுத்துக் கொண்டனர். கடுங்கோடை காலம் ஆனதாலே நுங்கு வியாபாரத்தில் நல்ல இலாபம் கிட்டி, பட்டிருந்த

கடனையெல்லாம் தீர்த்துவிட்டோம் என்று அவர்கள் என் வேரடியிலேயே உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தபோது, எனக்கு ஆனந்தக் கண்ணீர் பெருகிற்று.

அப்போது, திடீரென்று பெருங்காற்று - மழை - இடி - மின்னல்! அடைமழை பொழியத் தொடங்கி விட்டது. அவர்கள் இரண்டொரு நாட்கள் என் பக்கம் வரவே இல்லை. ஊரெல்லாம் வெள்ளக் காடாக இருப்பதாகக் கேள்விப்பட்டேன். வறண்டு கிடக்கிற பூமி, இந்தப் பெருமழையால் குளிர்ந்தது என்றாலும் ஆறுகளிலும் வாய்க்கால்களிலும் வெள்ளம் கரை புரண்டு ஓடிற்று!

நானிருந்த ஊரின் எல்லையில் ஒரு வாய்க்கால் உண்டு. அந்த வாய்க்கால் கரை தெரியாமல் பெருகி ஓடுகிறதென்று செய்தி வந்தது. செய்தியைத் தொடர்ந்து அந்தச் சில மனிதர்களும் வந்தார்கள். அவர்கள் கையில், கோடரி, ரம்பம் எல்லாம் இருந்தன. வந்தவர்கள் என்னை அண்ணாந்துகூடப் பார்க்கவில்லை. அவசர அவசரமாக வெட்டினார்கள். நான் அந்த வலியைப் பொருட்படுத்தவில்லை. வேறொரு நல்ல காரியத்துக்குத்தான் பயன்படப் போகிறோம் என்ற உறுதியோடு இருந்தேன்.

விழுந்த என்னைக் கொண்டுபோய் வெள்ளம் பெருக்கெடுத்தோடும் வாய்க்காலின் குறுக்கே போட்டார்கள். அவர்கள்தான் என்ன செய்வார்கள்! வாய்க்காலை நீந்திக் கடக்கத் தெரியாதவர்கள்! அதனால் என் மீது காலூன்றி வாய்க்காலைக் கடந்து கொண்டிருந்தார்கள். சில நாட்களுக்கெல்லாம் அந்த இடத்துக்கே பனைமரப் பாலத்தடி என்று பெயர் வந்து விட்டது. இரண்டொரு வாரங்களில் வெள்ளம் குறைந்து வாய்க்கால் பழையபடி ஆகிவிட்டது. அந்தச் சிலர் வாய்க்கால் கரைக்கு வந்தார்கள். கூடி பேசினார்கள்.

"வாய்க்காலை தாண்டுவதற்கு நமக்குப் பயன்பட்ட இந்த பனைமரத்தை இரண்டாகப் பிளந்தால், ஒரு நல்ல ஏணி செய்யலாம்."

- இப்படி ஒருவன்

"ஓ! அப்படியே பிளந்து விடலாம்!"

- இது இன்னொருவன்

அப்போது அந்தச் சிலரை நோக்கி ஊர் மக்கள் பலரும் வந்து விட்டார்கள்! ஊர் மக்கள் அந்தச் சிலரைப் பார்த்துச் சினந்து பேசினர்.

ஏனய்யா, சிறிதாவது உங்களுக்கு இதயமிருக்கிறதா? பயன் கொடுத்துக் கொண்டிருந்த அந்தப் பனைமரத்தை உங்கள் தேவைக்காக வெட்டினீர்கள்! ஏதோ தீமையிலும் ஒரு நன்மை என்பதுபோல், அந்த மரம் பாலமாக இருந்து ஊராருக்குப் பயன்படுகிறது! அதையும் போய் இரண்டாகப் பிளந்து உங்கள் வீட்டுக்கு ஏணி செய்கிறேன் என்கிறீர்களே; இது நியாயமா? போங்களய்யா போங்கள்!

என்று ஊரார் உறுமியதுதான் தாமதம், அந்தச் சிலர் அங்கிருந்து நழுவி விட்டனர். இப்போது பலருக்குப் பயனளிக்கும் பாலமாக, ஊரார் பாதம் படுவதையே பெரும் பாக்கியமாகக் கருதிக் கொண்டு என் பணியைச் செய்து வருகிறேன். இதுதான் என் கதை.

அன்புடன்,

10-7-76 மு. க.

(24-07-1991)

1764. நெருக்கடி காலக் கடிதங்கள் - 26 : காவிரி ஒப்பந்தம் ஒரு கண்ணோட்டம்!

(காவிரிப் பிரச்சினை குறித்து இன்று கவலை தெரிவிக்கும் சிலர்; அன்று காங்கிரசில் இருந்த காலத்திலேயே - வேறு சிலர், அரசியலுக்கே வராமல் வெளி மாநிலத்தில் வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்த காலத்திலேயே 1968 முதல் அதற்கென அபாயக் குரல் எழுப்பிக் கடுமையாக வாதாடத் தொடங்கிய கலைஞர் அவர்கள்; எமர்ஜன்சி காலத்தில் எழுத்துரிமை பறிக்கப்பட்டிருந்த சென்சார் கெடுபிடிக்கிடையிலேயும் கூட; தண்புனல் காவிரியின் தமிழக உரிமைக்காக முரசொலியில் 1976-ல் எழுதிய கடிதம் இது! தொடர்ந்து 1989-ல் கலைஞர் எடுத்த இடைவிடாத முயற்சியாலும், தேசிய முன்னணிப் பிரதமர் வி.பி.சிங் அவர்கள் நியாயம் வழங்கும் நோக்குடன் நடுவர் மன்றம் அமைந்திட வழிவகுத்த காரணத்தாலும் அந்த மன்றம் அமைந்து, கலைஞரின் அரசு தஞ்சை விவசாயிகள் தொடர்ந்த வழக்குடன் இணைந்து வழக்காடியதோடு - நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பும் கிடைத்திட ஆவன செய்து முடித்த நிலையில் - அந்தத் தீர்ப்பை செயல்படுத்திட மத்திய காங்கிரஸ் அரசு தயங்கும் நிலையில்; அந்தத் தயக்கம் தகர்த்திடத் தமிழகமே ஒன்றுபட்டு நிற்கும் இந்த வேளையில் காவிரிப் பாசனம் பற்றிய இந்த விளக்கம் கலைஞரின் பழைய கடித வாயிலாக மீண்டும் நினைவூட்டப்படுகிறது.)

உடன்பிறப்பே!

இன்னும் தீராமல் இருக்கிற காவிரி நீர்ப்பங்கீட்டுப் பிரச்சினையின் காரணமாக தமிழகத்து விவசாயிகள், குறிப்பாக காவிரி நதி தீரத்து விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கர்நாடகத்திலும் சரி, தமிழ்நாட்டிலும் சரி மக்களின் நலன்கள் கேடுறக்கூடாது என்ற நல்லெண்ணத்துடன் இந்தப் பிரச்சினையை அணுகுகிற அதே நேரத்தில், ஏற்கனவே பாசன உரிமை பெற்றுள்ள

பழைய ஆயக்கட்டு நிலங்கள் தரிசுகளாக மாறிவிடக் கூடாது என்பதிலும் அக்கறை காட்டியாக வேண்டும்.

கர்நாடகம், மைசூர் ராஜ்யம் என்ற பெயருடனும் தமிழ்நாடு, சென்னை ராஜ்யம் என்ற பெயருடனும் இருந்த அந்தக் காலத்திலிருந்தே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாணப் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. சென்னை ராஜ்யம் கேரளத்தின் பகுதிகளையும் ஆந்திரத்தின் பகுதிகளையும் உள்ளடக்கியிருந்த அந்தக் காலத்தில் காவிரிப் பிரச்சினையில் மைசூருடன் பல ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டன.

பத்தொன்பதாவது நூற்றாண்டில் திப்புவின் ஆட்சி முடிக்கப் பெற்று, மைசூர் அரசை வெள்ளைக்காரர்கள், உடையார் மரபினரிடம் ஒப்படைத்தனர். பல்லாண்டுக் காலமாகப் போராட்டங்களினால் சீரழிந்து வளமிழந்து கிடந்த மைசூர் மாநிலத்தை வளமாக்க உடையார் மரபினர், பல்வேறு நீர்ப்பாசனத் திட்டங்களைத் தீட்டினார்கள்.

மைசூர் மாநிலம் மேட்டு நிலப்பரப்பில் அமைந்துள்ளது. அங்கு உருவாகும் ஆறுகள் நான்கு திசைகளிலும் கீழிறங்கி இறுதியாகக் கடலில் கலக்கின்றன. மேற்குத் திசை நோக்கிச் செல்லும் ஆறுகள் அரபிக்கடலில் விழுகின்றன. பிற திசைகளில் செல்லும் ஆறுகள் வளைந்தோடி கிழக்கே வங்கக் கடலில் கலக்கின்றன.

அவை செல்லும் வழியில் பாசனப் பயன் பெற்றுக்கொண்டிருந்த சென்னை மாநிலம் ராயலசீமா போன்ற பகுதிகளுக்கு வறட்சி ஏற்படத்தக்க வகையில் மைசூர் அரசு காவிரி போன்ற நதிகளின் ஓட்டத்தைத் தடுக்கத் தொடங்கியது. அப்போதிருந்த ஆங்கிலேய ஆட்சியாளர்கள் சென்னை மாநிலம் அனுபவித்து வருகிற பரம்பரை உரிமையைகளை இழந்து வறண்டு போய்விடக் கூடாது என்பதற்காக உடனடியாகப் பேச்சு வார்த்தைகளைத் தொடங்கினர்.

சென்னை அரசும், மைசூர் அரசும் நடத்திய பேச்சு வார்த்தையின் காரணமாக 1892-ஆம் ஆண்டு, ஓர் ஒப்பந்தம் உருவாயிற்று. அதன்படி மைசூரில் எந்தப் புதுப்பாசனம் தொடங்க வேண்டுமென்றாலும், அந்தத் திட்டத்திற்குச் சென்னையின் ஒப்புதலைப் பெற வேண்டும். சென்னையும் தன்னுடைய அனுபோக பாத்தியதைக்கு பாதிப்பு ஏற்படும் என்ற நிலைமை

இருந்தாலொழிய மைசூரின் புதிய திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்க மறுக்கக்கூடாது.

இந்த ஒப்பந்தம் சென்னை மாநிலத்துக்கு முழுமையாகச் சாதகமானது என்று கூற முடியாது. பாலாறு மணலாறாகப் போனதைக்கூட நாம் பொறுத்துக் கொள்ள வேண்டியதாயிற்று. எனவே மைசூரின் பாசனத் திட்டங்களை நாம் அறவே மறுத்துவிட உரிமை அளிக்கவில்லை அந்த ஒப்பந்தம்! இருந்த போதிலும் அவைகளைக் கட்டுப்படுத்த, வரையறுக்க அந்த ஒப்பந்தம் உதவிற்று எனக் கொள்ளலாம்.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் மைசூர், கிருஷ்ணராஜ சாகர் நீர்த்தேக்கத்தை அமைக்க முயன்றது. 1892-ஆம் ஆண்டு ஒப்பந்தப்படி சென்னையின் ஒப்புதல் கோரப்பட்டது. பேச்சு வார்த்தைகள் தொடர்ந்து நடைபெற்றும் முடிவு எதுவும் ஏற்படவில்லை. சர். ஹென்றி கிரிப் என்ற ஆங்கிலேயர் நடுவராக இருந்து தீர்ப்பு வழங்கினார். அந்தத் தீர்ப்புத் தனக்குப் பாதகமெனக் கூறி, அன்றைய சென்னை அரசாங்கம் இந்திய அரசாங்கத்துக்கு மேல் முறையீடு செய்து கொண்டது. அதிலும் பலனில்லை. உடனே சென்னை அரசு, ஆங்கிலேய அரசில் உள்ள இந்தியா பற்றி கவனிக்கும் அமைச்சருக்கு முறையீடு செய்து இங்கிலாந்தின் முடிவை ஆவலுடன் எதிர்பார்த்தது. அதன்படி மைசூருக்கு மூன்று வழிமுறைகளை எடுத்துக்கூறி அவற்றில் ஒன்றைப் பின்பற்றுமாறு ஆங்கிலேய அரசு ஆணை பிறப்பித்தது.

அதன்படி புதிய நடுவர் குழு ஒன்று அமைக்க வேண்டும் அல்லது சிக்கலான இந்தப் பிரச்சினையை இந்திய அமைச்சரின் தீர்ப்புக்கு விட வேண்டும். அல்லது சென்னையுடன் மைசூர் மீண்டும் பேச்சு வார்த்தை நடத்த வேண்டும். இந்த மூன்று யோசனைகளில் மூன்றாவது யோசனையை மைசூர் ஏற்றுக்கொண்டு சென்னை அரசுடன் பேச்சு நடத்த சம்மதித்தது.

1921 முதல் பேச்சு நடத்தி 1924-ஆம் ஆண்டு ஒரு ஒப்பந்தம் கையெழுத்தானது.

1892-ஆம் ஆண்டு ஒப்பந்தம் அடிப்படையிலேயே 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தமும் உருவாயிற்று. அந்த ஒப்பந்தப்படி முதல் கட்டமாக பழைய பாசன ஆதாரங்கள் உறுதிப்படுத்தப்பட்டன.

அதையடுத்து மேலும் இருப்பதாகக் கருதப்படும் உபரித் தண்ணீரில் ஒரு பங்கை உடனடியாகவும், பிறிதொரு பங்கை ஒரு குறிப்பிட்ட வகையிலும் பகிர்ந்திட வழி வகுக்கப்பட்டது. இதற்கு மேலும் உபரித்தண்ணீர் இருந்தால் அதுபற்றி ஐம்பது ஆண்டுகளுக்குப் பிறகு (1974) மறு ஆய்வு செய்வதற்கும் ஒப்பந்தத்தில் வகை செய்யப்பட்டிருக்கிறது.

மைசூரில் கிருஷ்ணராஜ சாகர் நீர்த்தேக்கம் அமைக்க சென்னை ஒப்புக் கொண்டது. அந்த நீர்த்தேக்கத்தின் கீழ்ப் பாசனப் பரப்பு ஒரு லட்சத்து பத்தாயிரம் ஏக்கர் என்றும் கட்டுப்படுத்தப்பட்டது.

தமிழ்நாட்டுக்கு வரம்பு அளவுத் தண்ணீரை (லிமிட் ப்ளோ) தவறாது அனுப்புவதற்கும் அந்த ஒப்பந்தப்படி விதிமுறைகள் அமைக்கப்பட்டன. கிருஷ்ராஜ சாகருக்கு ஈடாக மேட்டூர் நீர்த்தேக்கம் அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டது. மேட்டூர் அணையால் பயன் பெறக்கூடிய புதிய பாசனம் மூன்று லட்சத்து பத்தாயிரம் ஏக்கர் என்றும் கட்டுப்படுத்தப்பட்டது.

மைசூரும் சென்னையும் ஒரு ஏற்பாட்டுக்கு அடுத்த ஏற்பாடு என்ற அளவில் ஈடுசெய்து கொள்ளும் நிலையில் பாசனம் வளம் பெருக்க அந்த 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தம் துணை புரிந்தது என்று கூறலாம்.

கிருஷ்ணராஜ சாகரிலிருந்து தமிழ்நாட்டுக்குரிய வரம்பு அளவைத் தவறாது அனுப்ப வேண்டும் என்ற விதிமுறை உள்ளதல்லவா?

அந்த வரம்பு அளவு (லிமிட் ப்ளோ) என்றால் என்ன? 1924 ஒப்பந்தம் ஏற்பட்ட காலத்தில் காவிரிக்குக் குறுக்கே எங்கும் நீர்த்தேக்கங்கள் இல்லை. எனவே திருச்சி, தஞ்சைக்கு வரும் தண்ணீர் கட்டுப்படுத்தப்படாமல் வந்து கொண்டிருந்தது. அப்படி மாதந்தோறும் சராசரியாக வரும் நீரின் அளவும், தஞ்சை டெல்டா பகுதி பாசனத்துக்கு வேண்டிய மட்ட அளவும் அனுபவ ரீதியாகக் கணக்கிடப்படும்.

குறிப்பிடப்பட்ட வரம்புக்குக் குறைந்து தண்ணீர் வரும் நாட்களில் வரும் தண்ணீர் முழுவதையும் மைசூர், சென்னை மாநிலத்துக்கு அனுப்பிவிட வேண்டும்.

எங்கும் தேக்கிடக்கூடாது. வரம்புக்குக் கூடுதலாக வரும் நாட்களில் மைசூர், அந்தக் கூடுதல் அளவுத் தண்ணீரை மட்டும் தேக்கி வைத்துக் கொள்ளலாம். இதுதான் 1924 ஒப்பந்தத்தின் முக்கிய அடிப்படை. இதன் வாயிலாக மைசூரின் பழைய காவிரிப் பாசனம் ஒரு லட்சம் ஏக்கருக்கும், தமிழ்நாட்டின் பழமையான காவிரிப் பாசனத்திற்கும்தான், முதல் தண்ணீர் என்று உறுதி செய்யப்பட்டு, இந்த உறுதி அந்த ஒப்பந்தத்தில் மையக்கோடாக விளங்குகிறது.

இதன்படி, வரம்புக்குக் குறைந்து வரும் நீர்வரும் நாட்களில் தமிழகத்திற்குத் தண்ணீர் தரப்பட்டிருக்க வேண்டும்.

கர்நாடக மக்களுக்குப் பாதகமான எந்த முடிவும் ஏற்பட வேண்டுமென்று நாம் கூறவில்லை.

ஆங்கிலோ ஆட்சியின்போதே மைசூர் - சென்னை ஆகிய இரு மாநில அரசுகளும் நல்ல முடிவுகளை மேற்கொண்டிருக்கிறபோது - இப்போது தமிழ்நாட்டில் காவிரி டெல்டா பகுதியில் விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள தொல்லையை நீக்க விரைந்து செயலாற்ற வேண்டுமென்று மத்திய அரசை வற்புறுத்துவது நமது தலையாய கடமையன்றோ!

அன்புடன்,

6-8-76

மு. க.

(25-07-1991)

1765. நெருக்கடி காலக் கடிதங்கள் - 27 : தலை தாழாத் தத்துவ அறிஞர்!

(பதவிகள், அதற்கான தேர்தல்கள், போட்டிகள் என்று ஜனநாயக அரசியல் வளையத்திற்குள் மட்டுமே சுழன்று கொண்டிராமல் நமது இளைஞர்கள், உலகிற் சிறந்த உத்தமர்தம் உறுதி வாய்ந்த வாழ்க்கை வரலாறுகளையும் அறிந்து வைத்திருக்க வேண்டும் என்ற திராவிட இயக்க முனைப்பான கருத்துக்கு மெருகூட்டும் வண்ணம் கலைஞர் எழுதிய கடிதங்களில் இதுவும் ஒன்று! அதுவும் 1976 நெருக்கடி காலத்தில்!)

உடன்பிறப்பே!

இன்றைய கடிதம், ஒரு தத்துவ அறிஞனைப் பற்றியதாகும். உலகில் தத்துவப் பேரறிஞர்கள் பலர் தோன்றியிருக்கிறார்கள். அவர்கள் எந்தக் காரணத்திற்காகவும் அல்லது எந்தச் சூழ்நிலைக்காகவும் தாங்கள் சரியென்று ஏற்றுக் கொண்ட தத்துவ உண்மைகளை விட்டுக் கொடுக்கத் தயாராக இருந்ததில்லை.

மேல்நாட்டில் தோன்றிய தத்துவ அறிஞர்களில் புகழ்பெற்ற ஒருவரின் பெயர் ஸ்பினோசா என்பதாகும்.

மறுமலர்ச்சி யுகத்தைத் தொடர்ந்து கம்பீரமாகத் தனது தத்துவக் கருத்துக்களை வெளியிட்ட சிறப்புக்குரியவர் அவர்.

அறிவியல் குறிக்கோளும், விஞ்ஞான நோக்கமும் கொண்டு அவரது தத்துவக் கருத்துக்கள் வெளியிடப்பட்டன.

கடவுளைப் பற்றியும், சமயங்களைப் பற்றியும் அவர் அறிவித்த தத்துவங்கள், பெரும் எதிர்ப்புக்கு உள்ளாக நேர்ந்தது.

யூதக் குடும்பத்திலே பிறந்த அவர், யூதர்களாலேயே வெறுத்து ஒதுக்கப்பட்டார். அவர் ஒரு அறிவு முதற் கொள்கையாளர் என்று யூதர்களால் விமர்சிக்கப்பட்டு தனிமையாக்கப்பட்டார்.

அப்படி அவர் தனிமையில் விடப்பட்ட காரணத்தாலேதான் அவருடைய உயர்ந்த தத்துவ விளக்கங்கள் உலகிற்குக் கிடைத்தன என்று, தத்துவ அறிஞர்களின் வாழ்க்கை வரலாறு பற்றி எழுதிய மேதைகள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

தான் கொண்ட கொள்கைகளுக்காக அந்த ஸ்பினோசா எனும் மேதை எவ்வளவு இன்னல்களுக்கு ஆளாக நேர்ந்தது என்பதை; உடன்பிறப்பே! உனக்குச் சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன்.

போர்த்துக்கீசிய நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்டு ஆம்ஸ்டர்டாம் என்னுமிடத்தில் வாழத் தொடங்கிய யூதக் குடும்பம் ஒன்றில் தத்துவ அறிஞர் ஸ்பினோசா தோன்றிப் புகழ்க்கொடி நாட்டினார். அவர் பிறந்த ஆண்டு கி.பி.1632. நாற்பத்தி ஐந்து ஆண்டுகள்தான் அவர் வாழ்ந்தார், செல்வாக்கும் வளமும் வாய்ந்த குடும்பத்திலே பிறந்திருந்தபோதிலும், மிகவும் எளிய வாழ்க்கையைத்தான் அவர் மேற்கொண்டார். இளம் பருவத்தில் கல்விப் பயிற்சி முடிந்ததும் தத்துவ ஆராய்ச்சியில் அவர் சிந்தனை சென்றது. அவரது போக்கும், கொள்கைகளும், எடுத்து வைக்கும் தத்துவ விளக்கங்களும் யூதர்களின் சமயக் குழுவிலே இருந்த முதியவர்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தின.

அந்த இளைஞரை அழைத்து அம்முதியோர் குழுவினர், வினாக்களை அடுக்கி, விளக்கங்களைக் கேட்டனர்.

அவைகளுக்கு இளைஞர் அளித்த பதிலிலேயிருந்து அவருடைய கொள்கைகள் முரட்டுத்தனமும் தீமையும் வாய்ந்தவை என்று குறை கூறி, உடனே அவைகளைக் கைவிட்டு மரபு வழி வந்த பழைய கொள்கைகளை ஏற்றுக்கொண்டு நடக்குமாறு வற்புறுத்தினர்.

அதை ஸ்பினோசா, மறுத்தார். முதியோர் வேறு ஒரு யோசனையைக் கூறினர். உள்ளத்தில் வேறு கொள்கைகள் இருந்தாலும் அவைகளை வெளிப்படையாகச் சொல்லாமல் வெளித் தோற்றத்திற்கு பழைய கொள்கைகளை ஏற்றுக் கொள்வது போல நடித்தால் மட்டும் போதும்; ஆண்டு தோறும் ஒரு கணிசமான தொகையை அவருக்கு வழங்குவதாக உறுதி அளித்தனர்.

என் தத்துவங்கள், கொள்கைகள், விலை பொருள் அல்ல என்று ஸ்பினோசா ஆணித்தரமாக பதில் அளித்தார். உடனடியாக

அவர், யூதர்கள் குழுவிலேயிருந்து விலக்கப்பட்டார். யாரும் அவருடன் உரையாடவோ, அவருக்கு உதவி அளிக்கவோ கூடாது. அவரிடம் செல்வதோ, அவரால் எழுதப்பட்டதைப் படிப்பதோ, அவர் சொல்வதைக் கேட்பதோ கூடாது. இப்படி ஒரு கடுமையான ஆணையை யூதர் சமயக் குழுவினர் பிறப்பித்தனர். இப்படியொரு தண்டனைக்கு ஸ்பினோசா, ஆனாக நேரிட்டபோது அவருக்கு வயது இருபத்தி நான்கு!

அந்த வாலிப வயதினர், தனக்கேற்பட்ட எதிர்ப்பை வசந்த காலமாகக் கருதி மகிழ்ந்தாரே தவிர, வாடிப் போய்விடவில்லை. மத வெறி கொண்ட ஒருவன் அவரை உலகிலேயிருந்து தீர்த்துக்கட்டிவிடவும் முயற்சி செய்தான். அந்தக் கொள்கை வீரர், அதிலிருந்து தப்பி விட்டார்.

யூதர்களின் குழு மட்டுமல்ல; அவர் குடும்பத்தினரே அவரை வெறுத்தனர். அவரைப் பெற்ற தந்தை அவரைத் தன் மகனாக ஒப்புக்கொள்ள முடியாது என்று விரட்டியடித்தார். அந்தத் தந்தையின் மறைவுக்குப் பிறகு ஸ்பினோசாவுக்கு சேர வேண்டிய சொத்துக்களை அவரது அக்காள் தானே கவர்ந்து கொண்டாள். அதை எதிர்த்து ஸ்பினோசா, வழக்குத் தொடுத்தார். அந்த வழக்கில் சொத்துக்கள் அனைத்தும் அவருக்கே சேர வேண்டுமென்று தீர்ப்புக் கிடைத்தது. ஆனால், அவர் அந்தச் சொத்துக்கள் முழுவதையும் தன் அக்காளிடமே திருப்பிக் கொடுத்து விட்டு ஆம்ஸ்டர்டாமிலிருந்து வெளியேறி தனிமையான வாழ்க்கையைத் தொடங்கினார்.

கண்ணாடி வில்லைகளை மெருகேற்றித் தரும் தொழிலை நடத்திக் கொண்டு, வாழ்க்கையின் குறிக்கோளான தத்துவ ஆராய்ச்சியில் தொடர்ந்து ஈடுபட்டார்.

என்புருக்கி நோய் அவரைப் பற்றிக் கொண்டு உடல் நலத்தைத் தேய்க்கத் தொடங்கியது. அவர் நல்ல உடைகளை அணிவதைக் கூட வெறுத்து ஒதுக்கினார். வசதி படைத்த பலரும் அவரது வாழ்க்கையை மேம்படுத்த முனைந்தனர். அவற்றை ஏற்றுக் கொள்ளவில்லை. நல்ல உடைகளை, ஆடம்பர உடைகளை அளித்தனர். மட்டமான பொருளுக்கு உயர்ந்த உறைகள் தேவையில்லை என்று அவர் கூறி, அந்த உடைகளைத் திருப்பித் தந்து விட்டார். மிகப் பெரிய வணிகர் சைமண்டி விரிஸ் என்பவர், ஸ்பினோசாவின் அறிவுத் திறனில் உள்ளத்தைப்

பறிகொடுத்துத் தன் சொத்துக்கள் முழுவதையும் அவருக்கு எழுதி வைக்க முன் வந்தார். ஸ்பினோசா, அதை மறுத்து விட்டு அந்தச் சொத்துக்களை முறையாக உரிமை உடையவர்களுக்கு எழுதி வைக்குமாறு கூறிவிட்டார்.

பிரெஞ்சு நாட்டு மன்னன் பதினான்காம் லூயி, அவரை அழைத்து ஒரு வேண்டுகோள் விடுத்தான்.

"உமது அடுத்த நூலை எனக்கு காணிக்கை என்று குறிப்பிட்டு வெளியிட்டால், நீர் விரும்புகிற அளவுக்கு சன்மானம் வழங்குகிறேன்"

லூயி மன்னனின் இந்த வேண்டுகோளுக்கு ஸ்பினோசா அளித்த பதில் என்ன தெரியுமா?

"நான் உண்மையாகப் பாராட்ட முடியாத ஒருவரை ஒப்புக்காகப் புகழ்ந்து பரிசு பெற விரும்பவில்லை"

தன்மானமுள்ள அந்தத் தத்துவ அறிஞனின் பதிலைக் கேட்டு பிரஞ்சு மன்னன் லூயி, தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டான்.

1673-ஆம் ஆண்டு ஹைடல்பர்க் பல்கலைக் கழகம் அவரை அழைத்தது. வழி வழி வந்த சமயக் கோட்பாடுகளைப் பழிக்காமல் இருந்தால் தத்துவ சாத்திரப் பேராசிரியராக அந்தப் பல்கலைக் கழகத்தில் பதவி ஏற்கலாம் என்று ஆசை காட்டப்பட்டது.

"நான் கண்ட உண்மைகளைக் கூறுவதற்குப் பட்டினி கிடப்பதைப் பற்றி நான் கவலைப்படவில்லை."

என்று திட்டவட்டமாகக் கூறிவிட்டு, கண்ணாடி வில்லைகளைச் சாணைபிடித்து மெருகேற்றும் தொழிலுக்கே சென்றுவிட்டார்.

அறிவியல், அறிவு வளர்ச்சி, அரசியல், எபிரேய மொழி இலக்கணம் போன்ற பல நூல்களை எழுதிய அந்த அறிஞர் கண்ணாடிக்கு சாணை பிடித்து, அதிலே எழுந்த தூசிகள் மூச்சுக் காற்றுடன் உட்கலந்து என்புருக்கி நோயை வளர்த்தபோதிலும், கொண்ட கொள்கையை விட்டுச் சிறிதும் வழுவாமல் தன்மான வீராகத் தலைதாழா மனிதராக விளங்கினார்.

நாற்பத்தி ஐந்து ஆண்டுகால வாழ்க்கைதான்!

யூதர்களின் குழுவே விரட்டியபோதும் அவர் கலங்கவில்லை.

தந்தையே வெறுத்தபோதும் கொள்கைத் தாகம் தணியவில்லை.

சமூகத்திலிருந்து விலக்கப்பட்ட தனி மனிதராக ஆக்கப்பட்டபோதும் நம்பிக்கை தளரவில்லை.

பின்னர், பிரஞ்சு நாட்டு அரண்மனையின் வேண்டுகோளுக்கும் மயங்கவில்லை.

ஹைடல் பர்க் பல்கலைக் கழகத்தின் பெரும் பதவிக்கும் தன் இலட்சியத்தை விட்டுக் கொடுக்கவில்லை.

கண்ணாடிக்கு சாணை பிடித்தே வாழ்க்கை நடத்தினார். காலக் கண்ணாடியென கருத்துக்களை உலகிற்கு வழங்கினார்.

வாலிப வயதிலேயே சாவைத் தழுவினார் எனினும்; சாகாத மனிதர்களில் ஒருவராக நிலைத்துவிட்டார்.

அன்புடன்,

21-12-76

மு. க.

(26-07-1991)

1766. நெருக்கடி காலக் கடிதங்கள் - 28 : சோமு ஜோசப் பாண்டியன்!

(கலைஞர் மீதும் சில கழகத் தலைவர்கள் மீதும் எமர்ஜன்சி காலத்தில் விசாரணைக் கமிஷன் அமைக்கப்பட்டது. அந்த விசாரணைக் கமிஷனை சந்திக்க, தேவைப்பட்ட நிதியை கழக உடன்பிறப்புகள் நாள்தோறும் தனிப்பேருந்துகளிலும், லாரிகளிலும் நூற்றுக்கணக்கான மைல்களைக் கடந்து வந்து கலைஞர் இல்லத்திலும், அன்பகத்திலும் வழங்கினர். அப்படி சேர்ந்த நிதி ஆறு லட்ச ரூபாயைத் தாண்டியது. அவ்வாறு கழகக் கண்மணிகள் வருவதையும்; வழியில் காவல் துறையினர் தடுத்து நிறுத்தினர். அதையும் தாண்டி, உடன்பிறப்புகள் கலைஞரை சந்தித்து நிதி வழங்கினர். அந்தத் தூயதொண்டர்கள் குறித்து 1976-ஆம் ஆண்டு முரசொலியில் கலைஞர் பல கடிதங்கள் எழுதினார். அவற்றில் ஒரு கடிதம் இது.)

உடன்பிறப்பே!

ஒரு இயக்கத்துக்குத் தொல்லைகள் வருவதும் அவற்றை அமைதியுடன் தாங்கிக்கொண்டு இயக்கத்தை வளர்ப்பதற்கான ஆக்கப்பணிகளில் ஈடுபடுவதும்தான் இயக்கத்தைக் கட்டிக்காக்கும் பொறுப்பில் இருக்கும் தலைவர்களுக்கும் செயல் வீரர்களுக்கும் உரிய கடமையாகும்.

ஒரு இயக்கத்தில் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்பதைவிட எப்படிப் பட்டவர்கள் இருக்கிறார்கள் என்ற கணக்குத்தான் மிக முக்கியமானதாகும்.

வீடு நிறைந்த பொருளை வைக்க வேண்டுமென்று வைக்கோலை வைத்து நிரப்பியவன் கதையையும் தாழ்வாரத்திலும் கூடத்திலும் அடுக்களையிலும், அறையிலும் ஐந்தாறு மெழுகு வர்த்திகளைக் கொளுத்தி வைத்து ஒளியால் நிரப்பியவனுடைய கதையையும் நாம் படித்திருக்கிறோமல்லவா? இந்த

எடுத்துக்காட்டுகளைக் குறிப்பிடுவதால் கழகம் என்னவோ தேய்ந்து மெலிந்து விட்டது போலவும் அதனால் இப்படிச் சுற்றி வளைத்து எழுதுகிறேன் என்பதைப் போலவும் சிலர், பேசி - எழுதி, மகிழவும் கூடும்.

நமக்குத் தெரியும் நமது கழகத்தின் வலிவு. அமைப்பு ரீதியாகப் பல்லாயிரக் கணக்கான கிளைகளையும், அவைகளை இணைத்துச் செயல்புரிய ஆங்காங்கு ஒன்றியக் கழகங்களையும், ஒன்றியங்களுடன் தொடர்பு கொண்டு பணியாற்ற மாவட்ட அமைப்புகளையும் பெற்றுத் தொய்வோ, தடங்கலோ, தயக்கமோ இன்றித் தலைமைக் கழகத்தின் அன்றாட ஆக்கப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

கழகத்திற்கென சட்ட திட்டங்களை வகுத்துக் கொண்டு அதன்படி முறையாகச் செயல்பட்டு வருகிறோம். உறுப்பினர்களைச் சேர்க்கிறோம். அதற்கென ஒரு காலகட்டத்தைக் குறிப்பிடுகிறோம். உறுப்பினர்கள் சேர்க்கும் பணி முடிவுற்றதும் கிளைக் கழக நிர்வாகிகள் தேர்தலிலேயிருந்து படிப்படியாகத் தலைமைக் கழக நிர்வாகிகள் தேர்தல் வரையில் ஜனநாயகச் செறிவுடன் நடத்தி முடிக்கிறோம்.

எனவே சங்கிலித் தொடர் போன்ற ஒரு பெரிய அமைப்பு, லட்சக்கணக்கான உறுப்பினர்களைக் கொண்டு இயங்குகிற மகத்தான அமைப்புத்தான் தி.மு.கழகம்.

அமைப்பு முறை, சட்டதிட்டம், கட்டுப்பாடு, இவைகளே மட்டுமன்றி லட்சோப லட்சம் கழகக் கண்மணிகளுக்கிடையே, மைய இழையாக இருக்கின்ற குடும்பப் பாச உணர்வும், நமது கழகத்தின் தனித் தன்மை வாய்ந்த சிறப்பாகும்.

அந்தக் காரணத்தினால்தான் நம்மில் ஒருவருக்கு ஏற்படும் சிறு துன்பமாயினும் அதிலே பங்கு பெறுகிற உணர்வு நமக்கு இயற்கையாகவே அமைந்துவிட்டது.

சுயமரியாதை இயக்கத்தைப் பெரியார் வளர்த்த அந்தக் காலத்தில் ஊருக்குப் பத்துபேர்தான் அந்த இயக்கத்தின் செயல்வீரர்களாகத் திகழ்ந்தார்கள்.

இன்றைக்கோ, பெரியாரின் பெருமையை உணர்ந்தவர்கள் அண்ணாவின் அருமையை உணர்ந்தவர்கள் - அவர்களது

சமதர்ம, சமத்துவக் கொள்கைகள் ஈடேற வேண்டுமென ஆர்வங் கொண்டிருப்பவர்களின் தொகை எண்ணிலடங்காது!

இப்படி ஒரு வளர்ச்சி நமது கருத்துக்களுக்கு ஏற்பட்டிருக்கிறபோது அதற்கேற்பக் கஷ்டங்களும் வரத்தான் செய்யும்.

அழகான குழந்தை! மாதுளை முத்துப்போல் இதழ்கள்! நீலக் குறு நயனம்! நெற்றியோ பிறைநிலா! மேனியோ மாம்பழம்! அந்த எழிலார் இன்ப மழலைக்குத் திடீரெனக் காய்ச்சல் வருகிறது. அது கடுங்காய்ச்சலாக மாறுகிறது. அருகிலிருப்ப வருக்கும் கூட ஒட்டிக் கொள்ளக்கூடிய விஷக் காய்ச்சல் அது என்கின்றனர் மருத்துவர்கள். அதற்காக அந்தக் குழந்தையைப் பெற்ற தாயார்; தொலைவில் ஓடிவிடுவாளா? தன் மடியிலே வைத்துக் கொண்டுதான் மருந்து தருவாள். தன் தோளிலே போட்டுக் கொண்டுதான் தூங்க வைப்பாள்! வியாதி விலகி, குழந்தை இளஞ் சிரிப்பு காட்டும் வரையில் விழித்த கண் மூடாமல் அருகிலேயே தானிருப்பாள்!

அதுபோலத்தான் ஒரு கட்சிக்குத் தொல்லைகள், துயரங்கள் வருகிற தென்றால் குழந்தையை விட்டு விலகாத தாயைப்போல்; கொள்கையை விட்டு விலகாத தொண்டர்கள் அந்தக் கட்சியைக் காக்கும் பணியில் தங்களையே ஒப்படைத்துக் கொள்வார்கள்.

உடன்பிறப்பே, இந்த நேரத்தில் நமது அண்ணன் எழுதிய சில வரிகளை உனக்கு நினைவூட்ட விரும்புகிறேன். தெம்பான தமிழ் எடுத்து அன்பான தம்பிக்கு அவர் எழுதிய கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

என்றாவது ஒருநாள் நமது இயக்கத்துக்குச் சங்கடங்கள் வரும் என்று எதிர் பார்க்காமல் இருப்பவன் ஏமானி! ஆனால், சதா அதனையே எதிர்பார்த்துக் குழம்பிக் கிடப்பவன் கோழை! நாம், நாமாக ஏற்றுக் கொண்ட லட்சியத்திற்காக கஷ்ட நஷ்டங்களை ஏற்க உறுதிகொண்டால்தான், ஊரிலே பெரிய புள்ளிகள் என்றும், அரசியலிலே ஜாம்பவான்கள் என்றும், அகிலம் சுற்றிய அறிவாளர் என்றும், ஆட்டிப் படைத்திடும் ஆற்றல் மிக்கோன் என்றும் விருதுகள் பல பெற்றவர்கள், நம்முடன் இல்லை, நம் பிரச்சினையை ஆதரிக்க முன்வரவில்லை என்று மிக நன்றாகத் தெரிந்திருந்தும், உள்ள ஏடுகள் அவ்வளவும், நம்மைக் கண்டிப்பதை கடமையாகவும், தூற்றுவதை தொண்டு ஆகவும்,

கேலி செய்வதைக் கலையாகவும் கொண்டு இயங்கி வருகின்றன என்பதை அறிந்திருந்தும், இவர்கள் முன்வருவார்களா என்பது பற்றிய கவலையும் மற்றும் நாம் ஏற்றுக் கொண்டிருக்கிற இலட்சியத்தின் பளுவை நாம்தான் தாங்கியாக வேண்டும்; ஏற்படக்கூடிய விளைவுகளுக்கு நாம்தான் ஈடுகொடுத்தாக வேண்டும். இலட்சக்கணக்கானவர்களோ, ஆயிரக்கணக்கிலோ அல்லது நூற்றுக்கணக்கிலோ, எந்த அளவில் நம்முடன் பயணம் நடாத்துபவர் கிடைக்கின்றனரோ அது பற்றியும் கவலை கொள்ளாமல், நம்மை நாம் ஒரு இலட்சியத்துக்கு ஒப்படைத்து விட்டோம் என்ற உணர்வுடன் பணியாற்றி வருகிறோம்.

அண்ணனின் இந்தப் பொன்மொழிகளை இதயத்தில் பதித்துக் கொண்டுள்ள உன்னைப் போன்ற உடன்பிறப்புக்களை நாள்தோறும் சந்திக்கிறேன் நான்!

இல்லம் நாடி வருகிறார்கள். வெல்லம் நிகர் அன்பினைப் பொழிகிறார்கள். கையில் கிடைத்த ஒரு ரூபாயோ, ஐந்து ரூபாயோ தருகிறார்கள். விசாரணைக் கமிஷன் செலவு நிதிக்காக!

அப்போது எண்ணி மகிழ்கிறேன், எப்படிப்பட்ட அமைப்பு! எவ்வளவு பாசமிக்க பெருங் குடும்பம்! இந்தக் குடும்பத்தில் நாம் இணைந்திருக்கிறோம்! இதைவிட வாழ்வில் என்ன பெருமை வேண்டியிருக்கிறது!

ஏடுகள் ஏசுகின்றன! நாராச நடை எழுத்துக்களை வீசுகின்றன! இவர்களின் முகம் காணும்போது அந்தக் கர்ண கடூரச் சொற்கள் எல்லாம் எங்கேயோ மறைந்து போகின்றன.

நேற்று ஆகஸ்டு இரண்டாம் நாள் மாலை விசாரணைக் கமிஷன் நிதியளிக்க வந்தவர்களில் சென்னை 63-வது வட்டத்தைச் சேர்ந்த உடன்பிறப்புக்களும் இருந்தார்கள்.

அதில் ஒருவருக்கு ஒரு கையே இல்லை! அவர் பெயர் பாண்டியன்.

இன்னொருவருக்கு ஒரு கால் இல்லை! அவர் பெயர் ஜோசப்.

மற்றொருவர் பெயர் சோமசுந்தரம் - அவருக்கு இரண்டு கண்களுமே இல்லை.

அந்தக் கண்ணில்லாத உடன்பிறப்பு, கழகத்திற்கு ஒளி கொடுக்க வருகிறார்.

கையில்லாத கண்மணி கழகத் தலைமையின் கரத்தை பலப்படுத்துவோம் என்கிறார்.

ஒரு காலற்றவர், தன்னுடைய மற்றொரு காலை கழகத்தின் இலட்சியப் பயணத்துக்குப் பயன்படுத்துவேன் என்கிறார்!

இப்படிப்பட்டவர்களின் உடலுறுப்புகளைவிட, உள்ள உறுதியும் ஊக்கம் குறையாத ஆர்வமும்தானே இந்தக் கழகத்தைக் கட்டிக் காக்கின்றன.

சோமுவும், ஜோசப்பும், பாண்டியனும் போன்ற உடன்பிறப்புக்கள் உள்ள வரையில் நாம் சோர்வடையத் தேவையில்லை அல்லவா?

இவர்கள் கழகத்தில் சுகம் தேடி வந்தவர்களுமல்ல! சுகம் அனுபவித்தவர்களு மல்ல! கழகம் சுகமாக இருக்க வேண்டுமென கருதும் தாயுள்ளம் கொண்ட தங்கங்கள்!

இவர்களைப் போன்றவர்கள் இருக்கும்வரை இந்தக் கழகத்திற்கு ஒரு ஊனமும் இல்லை! இது உறுதி!

அன்புடன்,

3-8-76

மு. க.

(27-07-1991)

1767. நெருக்கடி காலக் கடிதங்கள் - 29 : சோதிடங்கள் இன்னும் குறையவில்லை!

(முன்னேறிக் கொண்டிருக்கும் விஞ்ஞான உலகில் இன்னமும் சோதிடத்தை நம்பிப் பொருளையும் அறிவையும் இழக்கிற மக்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆரூடக்காரர்களுக்கு இப்போது அரசியல்வாதிகளிடம் நல்ல வேட்டை. இளைஞர் உலகமாவது பகுத்தறிவு பெற்று வளரவேண்டுமென்பதற்காக சமுதாய முனையில் பணியாற்றும் கழகம்; வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம் மூடநம்பிக்கை ஒழிப்புப் பணியை ஆற்றி வருகிறது. அப்பணியை எமர்ஜன்சி காலத்திலும் முரசொலி கடித வாயிலாகவும் கலைஞர் ஆற்றினார் என்பதற்கு சான்றே இக்கடிதம்.)

உடன்பிறப்பே!

இன்று உனக்கு ஒரு சிறுகதை; ஆம் உருவகக் கதை எழுதுகிறேன். தெளிவு படைத்த நீ புரிந்து கொள்வாய் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. இதோ; அந்தக் கதை!

மலையூர் ஒரு சிறு கிராமம். அங்கு ஒரு சோதிடர் இருந்தார். பொய்யைத் தவிர எதுவும் சொல்ல மாட்டார். அவரைப்பற்றி மலையூர்க்காரர்களுக்கு நன்கு புரியும். தொலையட்டும்; ஏதோ இந்தத் தொழிலில் பிழைத்துப் போகட்டும் என்று ஊர் மக்கள் அவரைத் தொல்லைப்படுத்தாமல் விட்டு விட்டார்கள்.

காலம் சுழன்றது. அந்த ஊர் விவசாயிகளின் பிள்ளைகள் சில பேர் நகர்ப்புறங்களுக்குச் சென்று படித்து வந்தார்கள். அவர்கள், பெரியார், அண்ணா சொற்பொழிவுகளைக் கேட்டு சோதிடம் என்பது பொய் மூட்டை எனத் தெளிவடைந்தார்கள். பண்டித நேருவின் அறிவுரைகளிலும் அவர் சோதிடத்தை நம்பவில்லை என்பதைப் படித்தார்கள்.

படித்த பிள்ளைகளின் பேச்சை மலையூரில் உள்ள வாலிப விவசாயிகள் காது கொடுத்துக் கேட்கத் தொடங்கினார்கள்.

சோதிடருக்கும் அந்த ஊரில் உள்ள இளைஞர்களுக்கும் தகராறு பேச்சளவில் முற்றியது. பிறகு அது கலவரமாக ஆகிவிட்டது.

படித்த வாலிபர்கள் குறுக்கிட்டு சோதிடரிடம் யாரும் வம்பு செய்யக் கூடாது என தடுத்து விட்டனர். கலவரம் நின்றது என்றாலும் சோதிடரின் பிழைப்பு குறைந்தது.

சோதிடர் மலையூரை விட்டுக் கிளம்பி, பக்கத்திலுள்ள சிறிய நகரமான அலையூருக்குச் சென்றார். அங்கு பெரிய மரத்தடியில் தன் சோதிடக் கடையை ஆரம்பித்தார். குருவி சோதிடம், ரேகை பார்த்தல், கிளி சோதிடம் இப்படிப் பலவகையான ஏமாற்று வேலைகளுடன் சோதிடத் தொழிலை நடத்தினார்.

அவரிடம் சோதிடம் கேட்க, அந்தப் பகுதியில் உள்ள வேலையற்றவர்கள் எல்லாம் வருவது வழக்கமாயிற்று. வருமானம் பெருகிற்று சோதிடருக்கு! விளம்பரத்திற்காகப் பல சிறுவர்கள், சிறுமிகள் வேலைக்கு அமர்த்தப்பட்டார்கள். அவர்கள் ஊரெல்லாம் போய் சோதிடரின் மகிமையைச் சொல்லி ஆட்களைச் சேர்த்தார்கள்.

இந்தப் பித்தலாட்டத்தை அட்பலப்படுத்த ஒரு கிழவர் கிளம்பினார். அவருக்கு வயது தொண்ணூற்றி ஐந்து! ஆனாலும் வாலிபரைப் போல கம்பீரமாக இருப்பார். பந்தயக் குதிரை போல நடப்பார். அவர் சோதிடரின் புளுகுகளை நம்ப வேண்டாமென்று மக்களைக் கேட்டுக் கொண்டார். அந்தக் கிழவர், சோதிடர் உட்கார்ந்து தொழில் நடத்தும் மரத்துக்கு அருகாமையிலேயே ஒரு மேடை போட்டுக்கொண்டு சோதிட எதிர்ப்புப் பிரச்சாரம் செய்தார். பொய்களை நம்பாதீர்! சோதிடர் ஜாக்கிரதை என்று முழங்கினார்.

சோதிடருக்குக் கோபம் வந்தது. பகுத்தறிவுக் கிழவரைப் பார்த்து நீ சீக்கிரம் சாகப் போகிறாய் என்று என் குருவி சொல்கிறது! என்றார்.

கிழவர் சிரித்துக் கொண்டே எனக்கு தொண்ணூற்றி ஐந்து வயதாகிறது. நான் நூறு வயது வரை வாழ்வேன். இன்னும் ஐந்தாண்டு எனக்கு அழிவில்லை என்று பதில் சொன்னார்.

ஓகோ! நூறாண்டு வாழ விரும்புகிறாயா? அதுதான் முடியாது. என் சோதிடப்படி இன்னும் ஐந்தே மாதங்களில் செத்து விடுவாய் என்றார் சோதிடர்.

சோதிடர் சொல்வது பலிக்கும் என்று அவரது சீடகோடிகள் நம்பினார்கள். ஆனால் அந்தக் கிழவர் உடம்போ, மேலும் மேலும் உறுதியாக ஆயிற்று. ஐந்து மாதங்கள் ஓடின. ஐம்பது மாதங்கள் ஓடின. ஏன்? ஐந்து வருடங்களும் அநேகமாக ஓடிவிட்டன. நூறாண்டு முடிய கிழவருக்கு இன்னும் ஐந்தாறு வாரங்கள்தான் பாக்கி! அந்த ஐந்தாறு வாரங்களும் முடிந்தால் அவர் நூறு வயதுக் கிழவராவார்.

சோதிடர், இப்போது கிழவரைப் பற்றிப் பேசுவதேயில்லை. அவர் சோதிடம் பலிக்கிறதா என்று ஒரு வருடம் வரையில் பார்த்தவர்கள், பிறகு கிழவரின் பக்கம் சேர்ந்துகொண்டு சோதிடரைக் கேலி பேசத் தொடங்கி விட்டார்கள். சோதிடரிடம், இப்போது அவரது சீடர்களைத் தவிர, வேறு யாரும் மக்கள் கூட்டம் கிடையாது.

ஒருநாள் கிழவர் மேடையில் நின்று அறிவுப் பிரச்சாரம் செய்து கொண்டிருந்த போது, வேகமாக வந்த லாரி மேடை மீது மோதிக் கிழவரைத் தூக்கி எறிந்தது.

கீழே விழுந்த கிழவர், எழுந்த தள்ளாடி நடக்க முயன்றார். அப்போது, சோதிடர் அமர்ந்திருந்த மரத்தின் பெரிய வேர் ஒன்று அவர் காலில் தடுக்கியது. மீண்டும் கீழே விழுந்தார். தலையில் அடிபட்டு அந்த இடத்திலேயே கிழவரின் உயிர் பிரிந்தது. செய்தி கேட்ட கிழவரின் மகன் ஓடோடி வந்து, அவரைத் தூக்கிச் சென்றான் - அழுது புலம்பியவாறு!

பார்! பார்! நான் சொன்னது பலித்து விட்டது. கிழவர் நூறு வயது வரை வாழ மாட்டார் என்று சொன்னேன் அல்லவா? இப்படி ஆர்ப்பரித்தார் சோதிடர்.

கிழவர் மகனுக்கு சீற்றம் பிறந்தது.

ஓய்! சோதிடரே! என் தந்தை 95-வது வயதிலேயே சாவார் என்று நாள் குறித்தாய். கிட்டத்தட்ட நூறு வயதுக்கு சில நாட்கள் குறைவாக, அவர் வாழ வேண்டிய வயது முழுமையாக வாழ்ந்து முடித்து விட்டார்! இதில் உன் சாமர்த்தியம் என்ன இருக்கிறது?

என்று பொறி பறக்கக் கேட்டுவிட்டுத் தந்தையைத் தூக்கிக்கொண்டு சென்றான்.

என் தந்தையின் பணி, என் தந்தையோடு முடிந்து விடாது! அதை நான் தொடருவேன் என்று கிழவரின் மகன் சபதம் எடுத்துக் கொண்டான்.

சோதிடர், கலகலவெனச் சிரித்தார்.

முட்டான்கள்! நான் சொன்னபடி, கிழவர் என்றோ ஒருநாள் செத்தாரல்லவா? ஆகா! நான் அமர்ந்திருக்கும் இந்த மரத்தடியின் வேரல்லவா அந்தக் கிழவரைக் கீழே வீழ்த்திக் கொன்றது! என்று கேலியாகக் கத்தினார்.

அவரது சீடகோடிகள் சோதிடருக்கு ஜே! என்று கோஷம் போட்டுக்கொண்டு மரக் கிளையில் ஏறி நடனமாடினார்கள். வானரங்களைப் போலக் குதித்தார்கள். தாவினார்கள். சோதிடரும் சிரித்துக் கொண்டே இருந்தார்.

அவர்கள் ஆடிய ஆட்டத்தில் மரக்கிளையொன்று முறிந்து விழுந்தது.

கிழவர், லாரியால் மோதப்பட்டு வேர் தடுக்கி விழுந்து மடிந்தார். சோதிடர் தலையிலோ கிளையே விழுந்து மாண்டார்.

கிழவர் பணியைத் தொடர அவர் மகன் இருக்கிறான்.

சோதிடர் உடலை, மரத்தடியில் அனாதையாக விட்டு விட்டு, சீடகோடிகள் ஓடி விட்டார்கள் அகப்பட்டதைச் சுருட்டிக் கொண்டு!

இதுதான் சோதிடரின் கதை!

அன்புடன்,

30-1-77

மு. க.

(28-07-1991)

1768. நெருக்கடி காலக் கடிதங்கள் - 30 : இளிவரின் வாழாத மானமனிதர்!

(நெருக்கடிக் காலத்தில் கலைஞர் அவர்கள் முரசொலியில் எழுதிய இலக்கியக் கடிதங்களில் இதுவும் ஒன்று.)

உடன்பிறப்பே!

மானம் எனும் அதிகாரத்தில் வள்ளுவர் தனக்கேயுரிய கம்பீரத்தோடு நின்றுகொண்டு வழங்குகிற கருத்துக் குவியல்களை ஆழ்ந்து படித்திருக்கிறாய் அல்லவா?

குடிசெயல் வகை எனும் அதிகாரத்தில் தன் சமுதாயத்தை உயர்த்துவதற்காகத் தொண்டாற்றுகின்ற ஒருவன், மானம் பற்றிக் கவலைப்படாமலும், காலம் பற்றிக் கருதிப் பார்க்காமலும் தன் பணியினைத் தொடர வேண்டுமெனக் குறிப்பிடுகிறார்.

“குடிசெய்வோர்க்கு இல்லை பருவம் மடிசெய்து
மானம் கருதக் கெடும்”

இந்தக் குறள்தான் நமது தந்தை பெரியாருக்கு மிகவும் பிடித்தமான குறள்.

மானம், அவமானம் சம்பந்தமாக ஏதாவது இழிவு, பொதுத் தொண்டனுக்கு ஏற்பட்டால் அதை அவன், கடுகளவுகூடச் சிந்திக்கக்கூடாது. அதை அவன் கருதினால் அவனது லட்சியம், மலையளவுக்குக் கெட்டுப் போகும் என்று அவர் அடிக்கடி கூறுவார்.

ஆனால் அதே நேரத்தில் மனிதன் தன்னுடைய சுயமரியாதையை உயிருக்குச் சமமாகக் கொள்ள வேண்டும் என்பதையும் பெரியார் அவர்கள் வலியுறுத்தத் தவறவில்லை.

வள்ளுவர் மானம் பற்றிக் கூறியுள்ள குறட்பாக்களின் இலக்கணத்திற்கேற்ப நமது மூவேந்தர்கள் பலர் நடந்து காட்டியுள்ள வீர வரலாற்றுக் குறிப்புக்களைத் தமிழ் இலக்கியங்கள் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன.

தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியப் பாண்டியனைப் பகையரசர்கள் எதிர்த்து வந்தபோது அவன் தனது வீரர்களுக்கு முன்னும், நாட்டு மக்களுக்கு முன்னும் அளித்த சூளுரை என்ன தெரியுமா?

இளையவன் நான் என்று கருதி எனை எதிர்க்கப் பகை வேந்தர் போர் முரசு கொட்டிச் சூழ்கின்றனர். நான் அவர்களை களத்தில் சந்திக்க விரும்புகிறேன். என்னைப் பற்றிப் பழித்துரைத்துப் புல்லிய வார்த்தைகளைக் கூறிய அவர்களை வென்று திரும்புவேன். அப்படி வெற்றிபெற முடியாமல் போனால்;

"..... பொருந்திய
என்னிழல் வாழ்நர் சென்னிழற் காணாது
கொடியன் எம் இறையெனக் கண்ணீர் பரப்பி
குடிபழி தூற்றும் கோலே னாகுக
ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவனாக
உலகமொடு நிலைய இய பலர் புகழ் சிறப்பிற்
புலவர் பாடாது வரைக ....."

என் குடை நிழலில் வாழ்கின்றவர்கள், தங்கள் தலைவன் கொடுமையானவன் எனக் கண்ணீர் பொழிந்து அந்தக் குடிமக்கள் தூற்றுகின்ற கொடுங்கோலை யுடையவனாகக் கருதப்படுவேன். உயர்ந்த தலைமையிடத்துப் புலவராயிருக்கும் மாங்குடி மருதனார் என்னைப் பற்றிப் பாடாது போய்விடுவாராக! தமிழ்ப் புலவரின் அன்பும், தன் மக்களின் அன்பும் தனக்குக் கிட்டாமல் போகட்டும் என்று வஞ்சினம் கூறுகிறான் என்றால் போரில் ஏற்படும் தோல்வியால் தன்னுடைய மானம் எவ்வாறு சீர்குலையும் என்று அந்தத் தார்வேந்தன் தலையாலங்கானத்தான் கருதுகிறான் என்பதற்கு இந்தப் பாடலை விட வேறு எடுத்துக்காட்டும் வேண்டுமோ?

சேரமான் கணைக்காலிரும்பொறை என்னும் மன்னன், ஒரு போரில் கையகப்பட்டு பகை மன்னனின் சிறையில் அடைக்கப்படுகிறான்.

சிறைக் கோட்டத்தில் ஒருநாள் அவன் தண்ணீர் கேட்க, காவலர்கள் அலட்சியம் காட்டிச் சற்றுத் தாமதமாகக் கொண்டுவந்து

கொடுத்தனர். அந்த மானம் பொறாத மன்னன் உயிர் துறந்துவிடுகிறான். தன்னிடம் தரப்பட்ட நீரை வீசியெறிந்துவிட்டு வீரம் செறிந்த ஒரு பாடலை எழுதி வைத்துவிட்டு உயிர் விடுகிறான்.

இறந்துபோய்ப் பிறக்கிற குழந்தையாக இருந்தால்கூட அதன் மார்பை வாள் முனையால் கீறிப் புதைப்பதுதான் வீரமென்று கொண்டுள்ள குலத்தில் பிறந்தவன் நான். அத்தகைய மறக்குடியில் பிறந்த என் பெற்றோர் பகைவர் பால் உணவை யாசித்து உண்டு உயிர்வாழுமாறு என்னைப்பெற்றிருக்க மாட்டார்கள்!

என்ற கருத்தமைந்த புறநானூற்றுப் பாடலைத் தான் அவன் எழுதி வைத்துவிட்டுச் செத்து விடுகிறான். இல்லை, சாகாத மனிதனாகி விட்டான்!

பாண்டியன், சேரன் பற்றிச் சொன்னேன், கோப்பெருஞ்சோழன் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறாய் அல்லவா? நட்புக்கு அவனோர் இலக்கணம். இலக்கியப் புலமை மிக்கவன். உறையூரிலிருந்து ஆட்சி புரிந்த வேந்தன். அவனக்கேற்பட்ட இன்னலின் காரணமாக மானம் பொறாது வடக்கிருந்து உயிர் துறந்தான்.

வடக்கிருத்தல் என்றால் தலைநகரை விட்டுப் பிரிந்து வடதிசையமர்ந்து உண்ணா நோன்பிருந்து உயிர் விடுவதைக் குறிக்கும்.

அவன்பால் பெருநட்புக் கொண்டிருந்த புலவர் பிசிராந்தையாரும் அந்த மன்னனின் நடுகல்லுக்கருகே அமர்ந்து உண்ணா நோன்பு கொண்டு உயிர் நீத்தார் என்பது இலக்கிய வரலாற்றுச் செய்தி.

நமது மூதாதையர் மானம் பொறாது உயிர் நீத்திடவும் தயாராயிருந்தனர் என்பதற்கே தமிழ் வேந்தர்களைப் பற்றிச் சொன்னேன்.

“மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்”

உடலில் உள்ள மயிர் நீங்கினால் உயிர் வாழாத கவரிமானைப்போல, மானம் அழிய நேர்ந்தால் உயிரையே விட்டு விடுவார்கள் என்றல்லவா வள்ளுவர் அறிவிக்கிறார்!

"இனிவரின் வாழாத மானம் உடையார்
ஒளி தொழுது ஏத்தும் உலகு"

தனக்கு யாதேனும் இழிவு நேர்ந்தால் உயிர் வாழாத மானம் உடையவரின் புகழை, உலகத்தார் தொழுது, ஏற்றிப் பாராட்டுவார்கள் என்று உறுதியும் அளிக்கிறார் வள்ளுவர் பெருந்தகை!

மானத்தின் பெருமையை உணர்த்தும் மாமன்னர்கள் மூ வரைத்தான் உனக்கு காட்டினேன் இக்கடிதத்தில்!

பொதுத் தொண்டன் மானம் பார்க்கக்கூடாது என்பதால், மானத்தை மதிக்கக் கூடாது என்பதல்ல பொருள்! பொதுத்தொண்டுக்கு அழுத்தம் கொடுக்கவே அவ்வாறு கூறப்பட்டது.

எனவே மானங்காப்பது என்பது வெறும் சொல் அலங்காரம் அல்ல; இலக்கியத்திலே அதற்கு எடுத்துக்காட்டாகப் பலர் இருந்திருக்கிறார்கள் என்பதைக் குறிப்பிடவே இதனை எழுதினேன்.

அன்புடன்,

1-8-76

மு. க.

(29-07-1991)

1769. நெருக்கடி காலக் கடிதங்கள் - 31 : எதையும் தாங்கும் இதயம் என்றும் நமக்குத் துணை!

உடன்பிறப்பே!

தனக்கென்று ஒரு இலட்சியம் கொண்டோர் எவரும் அதற்கான பணியாற்றுகையில், குறுக்குப் பாதைகள் கண்டால் அதிலே நுழைந்து, இலட்சியத்தை இழந்துவிடச் சம்மதிக்க மாட்டார்கள். இலட்சியத்தை நோக்கி செல்வோருக்கு அதற்கான ஆக்கமும் ஊக்கமும் அளிப்போரே தலைவர்கள், நண்பர்கள், வழிகாட்டிகள், ஞானாசிரியர்கள்.

இடையில் இளநீர் கொடுப்போர் நன்றிக்குரியோர். இதயம் நோகப் பேசுவோர் பரிதாபத்திற்குரியோர். உடனிருந்து கெடுப்போர் கண்டத்துக்குரியோர். பாதையில், பயணத்தின் கடுமை தாங்க மாட்டாமல் பட்டுப்போவோர் அனுதாபத்துக்குரியோர்

தம்பிக்கு அண்ணா எழுதிய கடிதமொன்றில் காணப்படும் வைர வரிகள்தான் மேலே காணப்படுபவை.

திரும்பத் திரும்ப படித்துப்பார். எவ்வளவு தொலைநோக்குடன் அண்ணா அவர்கள் இந்த வாசகங்களை வடித்தெடுத்திருக்கிறார் என்பது புரியும்.

குறுக்குப் பாதை கண்ட அதிலே நுழைந்து இலட்சியத்தை இழந்துவிடச் சம்மதித்தால் மலைபோல வந்த துயரங்கள் பனிபோல விலகும் என்று தெரிந்தாலுங்கூட, இலட்சியத்தைக் கைவிட எண்ணிடாதவன்தான் இறந்தும் இறவாமல் மறைந்தும் மறவாமல் வாழக்கூடியவன்.

வயிற்றுப் பிரச்சினையை மட்டும் கவனித்துக் கொண்டால் போதும் எனக் கருதுவது வாழ்வாகாது! அதற்குப் பெயர் பிழைப்பு! வாழ்க்கை என்பது இதயத்தோடு, அறிவோடு, பொதுப்பணியோடு,

ஒரு இலட்சியத்தோடு தொடர்புடையதாகும்.

பிழைப்புக்கு ஏதாவது வழியிருக்கிறதா? என்று கேட்டால் அந்தக் கேள்வி அவன் வாயிலிருந்து எழுவதாகப் பொருள் இல்லை. வயிற்றிலிருந்து கிளம்புவதாகக் கொள்ள வேண்டும்.

வாழ்க்கையில் இன்பம் துன்பம் - இருவேறு கட்டங்கள். இகழ்ச்சி - புகழ்ச்சி இவையும் மாறி மாறி வரும்; போகும். உயர்வு, தாழ்வு இவைகளையும் சந்திக்கத்தான் வேண்டும். தவழுகின்ற தென்றலானாலும், சுழன்றடிக்கும் சூறாவளியானாலும் இரண்டையும் ஒன்றுபோலக் கருதி இலட்சியத்திலே விடாப்பிடியாக இருப்பவனே வாழ்க்கைக்கு முழுமையான எடுத்துக்காட்டாக விளங்க முடியும்.

அண்ணா குறிப்பிட்டதைப் போல குறுக்குப் பாதைகள் வாழ்க்கைப் பயணத்தில் சுலபமானவைகளாகக்கூடத் தெரியும். ஆனால் இலட்சியத்தை உதறிவிட்டு குறுக்குவழி நடந்தவர்கள் எவருமே, வரலாற்றில் ஒளிவிட்டதாகவோ, அந்த ஒளி நிரந்தரமாக நின்று எரிந்ததாகவோ கூற முடியாது. ஆயுள் காலத்தில் தற்காலிக மகிழ்ச்சியை, வளத்தை வழங்கியிருக்கலாம் அந்த குறுக்குப் பாதை! ஆனால் ஒருமுறை குறுக்குப் பாதையில் போய்விட்டால், மேலும் மேலும் குறுக்குப் பாதைகளைத்தான் அந்த மனம் நாடும்.

அண்ணா காலத்தில் அவர் அணியில் நடந்து வந்தவர்கள், இலட்சியத்தை மறந்து குறுக்குப் பாதையில் இறங்கிய பிறகு மீண்டும் மீண்டும் குறுக்குப் பாதைகளைத் தேடியலைந்து நிலை தடுமாறி, நின்றார்களே தவிர, இலட்சிய மனிதர்கள் என்று நிமிர்ந்து நடந்திட இயலவில்லை.

அலெக்சாண்டரை எதிர்த்த போரஸ் மன்னன் தோல்வி அடைந்தான். அவனைப் பார்த்து உமக்கு என்ன வேண்டும்? என்று மாவீரன் அலெக்சாண்டர் கேட்டபோது; என்னை மரியாதையுடன் நடத்த வேண்டும் என்று மார்பை புடைத்துக் கொண்டு போரஸ் மன்னன் பதில் அளித்தான் என்று படித்திருக்கிறோம்.

போரஸ் மன்னன், குறுக்கு வழியை நாடியிருந்தால் - குனிந்து கொடுத்திருந்தால் - வரலாற்று ஏடுகளில் முக்கியமான இடத்தைப் பெற்றிருக்க மாட்டான்.

எனவேதான் இலட்சியப்பாதை இடையூறு நிறைந்ததாக

இருந்திடினும் அதனைக் கடப்பதில் உயிரே போயினும் கூட, காலம் அந்த மனிதனை மறந்து விடுவதில்லை.

குறுக்குப் பாதையில் குளிர் தருக்கள் - கோலமிகு அருவிகள் - வா வா என அழைத்திடக்கூடும்.

ஆனால் அவைகளைவிட இலட்சியப் பாதையில் ஒரு மனிதனை வரவேற்கும் கல்லறைகள் காலத்தால் அழியாமல் நிற்கும்.

உடன்பிறப்பே, அந்த ஈடு, இணையற்ற இலட்சியப் பாதையிலேதான் நாம் நமது பயணத்தைத் தொடருகிறோம். இடையில் இளநீர் கொடுப்போர் இல்லாமல் இல்லை. இளநீர் என்று விஷநீர் மொண்டு தருவோரும் இருக்கத்தான் செய்கிறார்கள். இருவருக்குமே நன்றி தெரிவித்து விட்டுத்தான் நாம் நடந்து கொண்டிருக்கிறோம்.

பயணத்தின் கடுமையைத் தாங்க வேண்டும் என்று பலமுறை சொல்லியிருக்கிறார் அண்ணன்.

அந்தக் கடுமையின் உச்சத்தைக் காணுகிறோம். களைத்துப் போய்விடவில்லை. கண் கலங்கவில்லை. கால்கள் சோர்ந்துவிடவில்லை.

நடந்து கொண்டேயிருக்கிறோம்.
நடந்து கொண்டேயிருப்போம்.

நம்மை அழித்துவிட்டதாக எண்ணிக் கொண்டிருப்போர் இன்ப கீதம் பாடட்டும்! ஏடு கொள்ளாமல் எழுதி தீர்க்கட்டும்!

நமது கொள்கைக்கு அழிவில்லை.
நமது இலட்சியத்துக்கு அழிவில்லை.

நமது அமைதியும் பொறுமையும் எதையும் தாங்கிடும் உள்ளமும் என்றைக்கும் நமக்கும் துணைநிற்கும். இந்த உறுதியுடன்; உடன்பிறப்பே! நமது பணிகள் மலரட்டும்!

அன்புடன்,

26-9-76 **மு. க.**

(31-07-1991)

1770. நெருக்கடி காலக் கடிதங்கள் - 32 : புதியதோர் எழுச்சி காண்போம்!

உடன்பிறப்பே!

முன்பொரு முறை உன் வினாவுக்கு ஒரு விளக்கம் தரும் போது நான் குறிப்பிட்டிருந்ததை மறந்திருக்கமாட்டாய் என்று நம்புகிறேன்.

நமது முன்னோர்கள் விண்வெளிக் கிரகங்கள் எனப்படும் கோள்கள் பற்றி அறிந்திருந்தது மட்டுமல்ல; அவற்றின் அசைவுகளையும் ஆராய்ந்து, அதற்கேற்ப வான நூல்களையும் இயற்றியிருந்தனர். அதன் ஒரு கூறுதான் பஞ்சாங்கம்!

பஞ்சாங்கம், பழைய பஞ்சாங்கம் என்ற சொற்கள் கேலிக்குரியவைகளாகி விட்டன என்ற போதிலும் அவைகள் உணர்த்துகின்ற பருவகாலங்கள், கோள்களின் இடப் பெயர்ப்புக்கள் - இவையனைத்தும் நமது முன்னோரின் வானவெளி அறிவை புலப்படுத்துவனவாகும்.

இன்றைக்கும் கிராமங்களில் கடிகாரத்தின் உதவியில்லாமல் பகல் நேரத்தில் நமது நிழலின் நீளத்தை அளந்து கணக்கிட்டும், இரவு நேரங்களில் விண்மீன்களின் நிலையை நோக்கிக் கணக்கிட்டும் சரியான நேரத்தைச் சொல்லுகிற வயதான பெரியவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள்.

திருக்குவளை கிராமத்தில் நான் மிகச் சிறுவனாக வளர்ந்த அந்தக் காலத்தில் இரவு நேரத்தில் திடீரென ஒருநாள் கதவைத்தட்டி என் தந்தையை எழுப்புவார்கள். காரணம் என்ன தெரியுமா? யார் வீட்டிலாவது குழந்தை பிறந்திருக்கும்! அந்தக் குழந்தை பிறந்த சரியான நேரத்தை நாழிகைக் கணக்கில் அறிந்துகொள்ள என் தந்தையிடம் ஓடிவருவார்கள். அவரும் ஆகாயத்தை அண்ணாந்து பார்த்து நட்சத்திரங்களைக் கணக்கிட்டுச் சரியான நாழிகையை அவர்களுக்குச் சொல்லுவார்.

பழங்காலத்திலேயே விண்வெளிக் கோள்களைப் பற்றிய ஆழ்ந்த அறிவினை ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நமது மூதாதையர் பெற்றிருந்தார்கள். எனினும், காலகட்டத்தில் அது பற்றிய ஆராய்ச்சிகளை விரிவாக்குவதில் அக்கறை கொள்ளாமல், அந்தக் கோள்களை வைத்து ஆரூடம், ஜாதகம், சுவடி எடுத்தல், இன்னோரன்ன வழிகளில் மக்களை ஏமாற்றுவதற்குச் சில கூட்டத்தார் புறப்பட்டுவிட்டனர். அதனால் நமது நாட்டில் தொடங்கிய விண்வெளி அறிவு, தொடர் பயணத்தை நடத்தாமல் இடையிலே தடைப்பட்டு நின்றுவிட்டது.

சந்திரன், சூரிய ஒளியைப் பெற்றுத்தான் பிரகாசிக்கிறது என்ற ஆராய்ச்சியை ஏதோ ஒரு கதைபோல நாம் நிறுத்திவிட்டு; அந்தச் சந்திரனை ஒரு முனிவரிடத்திலே மாணவனாக்கி, அவன் குரு பத்தினியான தாரையிடம் சரசமாடினான் என்று புராணம் எழுதி, தாராசசாங்கம் நாடகம் என விளம்பரப்படுத்தி, தாரை, சந்திரனுக்கு நிர்வாணமாக எண்ணெய் தேய்த்து விடும் காட்சி பார்க்கத்தக்கது என்கிற அளவுக்குக் கொண்டு வந்து நிறுத்தி விட்டோம்!

ஆனால் விண்வெளி ஆராய்ச்சி அமெரிக்காவிலும் ரஷ்யாவிலும் தொடர்ந்து நடந்து, சந்திரனில் மனிதன் கால் வைத்து விட்டுத் திரும்பி வந்து, சந்திர மண்டலத்தின் புகைப்படங்களையும் காணுகிற வாய்ப்பை உலக மக்கள் பெற்றிருக்கிறார்கள்.

செவ்வாய் கிரகத்தைப் பற்றிய நமது ஆராய்ச்சி அது சிவந்த நிறமுடையது என்பதோடு நின்று - அது விண்வெளியில் எப்படி எந்தத் திசையில் நகருகிறது என்ற அளவோடு நின்றது! அதன்பிறகு திருமணத்திற்குப் பெண் பார்க்கும்போது செவ்வாய் தோஷம் இருக்கிற பெண்ணா? என்கிற ஜாதக ஆராய்ச்சியோடு முடிவுற்றது. ஆனால் இன்று அமெரிக்க நாடு இரண்டு விண்கலங்களை செவ்வாய் கிரகத்துக்கு அனுப்பி வைத்திருக்கிறது. முதல் விண்கலத்தின் சேய்க்கலம், செவ்வாயில் இறங்கி, மண்ணை சேகரிக்கும் வேலையில் ஈடுபட்டிருக்கிறது. அந்தச் சேய்கலத்துக்கு ஏற்படும் சிறு அளவு கோளாறுகளைக்கூட பல கோடி மைல்களுக்கு அப்பால் இந்த உலகில் உள்ள விஞ்ஞானிகள், அமெரிக்காவின் ஒரு விஞ்ஞானக் கூட அறைக்குள்ளேயிருந்து கொண்டு, இங்கிருந்தவாறே பழுது பார்த்துச் சரி செய்கிறார்கள்.

நாமோ, துளிர்த்து வளர்ந்த விண்வெளி அறிவை எங்கேயோ ஒரு கூட்டத்தில் முடக்கிப்போட்டு விட்டு, விபூதி பாபாக்கள், விநோத புருஷர்கள், அற்புத சித்துக்கள், அபூர்வ ஜோதிடங்கள் என மூட நம்பிக்கைச் சகதியில் ஆழ்ந்து கிடக்கிறோம்.

"விஞ்ஞானத்துறை விரைந்து முன்னேறி வருகிறது. இது, உலகை எங்கே கொண்டு செல்லும் என்று யாரும் கூற இயலாது! ஆனால் அதற்குச் சோதிடர் பதில் சொல்வார்கள் என்று சிலர் கூறுவர்.

சோதிடர் என்போர் மிகவும் அபாயகரமானவர்கள், அவர்களிடம் சோதிடம் கேட்கச் செல்லுவோர் அவர்களைவிட மிகவும் அபாகரமானவர்கள்.

உடன்பிறப்பே, இந்த வாசகத்தைப் பெரியார் பொன்மொழியிலிருந்து நான் எடுத்து வழங்குகிறேன் என்றுதானே நீ கருதுகிறாய்? அதுதான் இல்லை. பௌதீகக் கழகத் திறப்பு விழா ஒன்றில் 1956-ஆம் ஆண்டு பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள் ஆற்றிய அரிய உரையாகும் இது!

தன் மரணத்துக்குப் பிறகு, தன் உடலுக்கு எந்தவிதமான மதச் சடங்குகளும் செய்திடக்கூடாது என உயில் எழுதி வைத்த பகுத்தறிவுவாதி யன்றோ அவர்!

இந்தச் சோதிடர்கள், எதையோ சொல்லிச் சுருட்டும் போர்வழிகள், எப்படி வளர முடிந்தது?

தொன்மைக் காலத்தில் நமது நாட்டில் விஞ்ஞான அறிவு முகிழ்ந்திருந்த போதிலும் அதனைச் செழித்தோங்க விடாமல் இடையிலே புகுந்த கருத்துக்கள் அழித்தொழித்துவிட்டன.

நமது தமிழ் இலக்கியங்களைப் புரட்டினால் கூட, பண்டைத் தமிழர்கள் எத்தனைய விண்வெளி அறிவு பெற்றிருந்தார்கள் என்பது தெளிவாகும்.

சோழன் நலங்கிள்ளியைப் பற்றி உறையூர் முதுகண்ணன் சாத்தனார் என்னும் புலவர் (புறநானூற்றில்) பாடியுள்ள இரண்டு பாடல்களில் அக்காலத் தமிழ் மக்களின் விண்வெளி அறிவு கொடி கட்டிப் பறக்கிறது.

"அரசே! சூரியனுடைய வீதியையும், சூரியனின் இயக்கத்தையும், அந்த இயங்கும் தன்மையால்

சூழப்பட்ட வட்டத்தையும், காற்று இயங்கும் திக்கையும், ஓராதாரமும் இன்றி தானே நிற்கின்ற ஆகாயத்தையும் அளந்தறிந்து கூறக்கூடிய மேதைகளும்கூட இருக்கின்றனர். ஆனால் அவர்களாலேகூட உனது வலிமையையும் பெருமையையும் கண்டறிந்து கூற இயலாது."

இப்படிப் புகழுகிறார் புலவர். உடன்பிறப்பே, இதில் வேந்தன் புகழை விட்டு விடுவோம். அக்கால விண்வெளி அறிவு தென்படுகிறதே; அதனைக் கண்டாயா? கவித்திறம் மட்டுமல்ல - தமிழ்ப் புவித்திறமும் விளங்குகின்றதன்றோ!

"செஞ்ஞாயிற்றுச் செலவு மஞ்ஞாயிற்றுப்
பரிப்பும் பரிப்புச் சூழ்ந்த மண்டிலமும்
வளி திரி தரு திசையும்
வறிது நிலை இய காயமு மென்றிவை ..."

இப்படிப் பெருக்கெடுக்கிறது விண்வெளி அறிவு மிளிரும் அந்தக் கவிதை!

இன்னொரு பாடலில், அதே கவிஞர் விண்வெளிக் கலமே ஓட்டிக் காட்டுகிறார். செவ்வாய் மண்டிலம் சென்றிருக்கும் விண்வெளிக் கலத்திற்கு விமானி யாரும் இல்லையல்லவா?

அதேபோல் ஒரு விமானி இல்லாத விண்கலம்; இதோ புறநானூற்றில் வானில் வட்ட மிடுகிறது பார்!

"நலங்கிள்ளிச் சோழனே! புலவர்களால் பாடப்படும்
புகழையுடையவர்கள், வலவன் ஓட்டாத வானவூர்தியில்
ஏறி விண்ணில் வலம் வருவர்"

வலவன் என்பதற்கு விமானி என்றும், வானவூர்த்தியென்றற்கு விமானம் அல்லது விண்கலமென்றும் உனக்கே பொருள் புரியுமல்லவா?

"புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின்
வலவன் ஏவா வான வூர்தியெய்துப"

விண்ணுலகு சேர்வர் என்றும் பொருள் கூறுவர். விண்வீதியில் வலம் வருவர் என்றும் பொருள் கூறலாம். அந்த ஆராய்ச்சியல்ல இப்போது முக்கியம்!

வான ஊர்தி - வலவன்! இவை தமிழ் இலக்கியத்திலே காணப்படும் சொற்கள். அதிலும் வலவன் இல்லா வானவூர்தி - இதுவும் அன்றிருந்ததோ இல்லையோ; புலவர் அவ்வாறு விஞ்ஞான ரீதியாகக் கற்பனை செய்கிறார்.

என் செய்வது; கதைகளோடும், கற்பனைக் கவிதைகளோடும் நமது விஞ்ஞான ரீதியாகக் கற்பனை செய்கிறார்.

என் செய்வது; கதைகளோடும், கற்பனைக் கவிதைகளோடும் நமது விஞ்ஞான அறிவு, நின்று விட்டது!

இனியாவது அந்த அறிவு, விரிவடைய புதியதோர் எழுச்சியைத் தோற்றுவிப்போம்! புத்துலகின் சாதனைப் பட்டியல்களில் நமது நாட்டுச் சாதனைகளையும் இணைத்து மகிழ்வோம்!

அன்புடன்,

14-8-76 மு. க.

(01-08-1991)

1771. நெருக்கடி காலக் கடிதங்கள் - 33 : வெய்யிலில் கிடைக்கும் நிழல்!

உடன்பிறப்பே!

வைகறைப் பொழுது வந்தது என்பதை அறிவிக்கக் கோழி கூவிற்று. திருக்குளத்துத் தாமரை; இதழ் இமைகளைத் திறந்து கதிரவனைக் காணத் துடித்தது.

மேழிச் செல்வர்கள், அன்றைக்குக் கழனிக்குத் தேவையான கருவிகளுடன் வீதிகளில் நடக்கத் தொடங்கினர்.

விரிந்து பரந்து விண்வெளியில் சிறகடித்துப் பறக்கும் தங்கள் அன்றாட அலுவல்களில் ஈடுபடப் புள்ளினங்கள் புறப்பட்டன.

எழில் வானில் மிதந்து செல்லும் அந்தப் பறவைகளின் உற்சாகம் கண்டு மாட கூடங்களின் மணிக் கூண்டுகளில் அடைபட்டிருக்கும் நீலப் புறாக்களும், பச்சைக் கிளிகளும், ஒன்றையொன்று பார்த்து உற்சாகம் பெற்றுக் கொண்டன.

நல்ல காலம் பிறக்குது! நல்ல காலம் பிறக்குது! என்ற குடுகுடுப்பைக் காரனின் ஒலியும் வைகறையின் அமைதியைக் கிழித்துக் கொண்டு கிளம்பியது.

மூங்கில் இலைமேல் தூங்கிய பனி நீர்த்துளிகள் காலை இளங்காற்றின் கரத்தைப் பிடித்துக் கொண்டு பூமியில் குதித்தன.

தொழுவங்களில் அடைபட்டிருந்த நன்றி மிகுந்த வீட்டு விலங்குகள் தங்களை அவிழ்த்து விட்டுச் சற்றுக் காலாறச் செய்வதற்கு உழவர் பெருமகன் இன்னும் ஏன் வரவில்லையென்பதைத் தங்கள் அம்மா எனும் அன்பு ஒலியால் கேட்டுக் கொண்டிருந்தன.

வைகறையில் இத்தனை நிகழ்ச்சிகளுக்கும் தொடக்கமாக அந்தக் கோழியின் முழக்கமன்றோ அமைகிறது. அது கூவியதைத்

தொடர்ந்துதானே கோயில் மணி கூட ஒலிக்கிறது! குளத்துத் தாமரை இமை விரிக்கிறது! பழுதுண்டு வேறோர் பணிக்கு என உழுதுண்டு வாழ்கின்ற மக்கள் பணியும் ஆரம்பமாகிறது!

இத்துணை சிறப்புக்கும் காரணமான அந்தக் கோழி கூவுவதைக் கேட்டுத் திடுக்கிடுகிறாள் ஒருத்தி! ஏன்? எதற்காகத் திடுக்கிட வேண்டும்? காலையில் கடினமான வேலை ஏதாவது காத்திருக்கிறதா அவளுக்கு? இல்லை! வீட்டு வேலை செய்யும் போது நீட்டி முழக்கி வசைபாடும் மாமியாராவது உண்டா? இல்லை; துரும்பும் தன் மருமகன் மீது படக்கூடாது எனப் பாதுகாக்கும் கரும்பு மொழியுடையாள்தான் அவளுக்கு வாய்த்த மாமியார்! பிறகேன் கோழி கூவியது கேட்டு அவள் திடுக்கிடுகிறாள்?

அதற்கான விளக்கத்தைக் குறுந்தொகையில் அள்ளூர் நன்முல்லையார் எனும் புலவர் அளிக்கின்றார்.

“குக்கூ வென்றது கோழி அதன் எதிர்
துட்கென் றன்றென் தூய நெஞ்சம் ...”

கோழி குக்கூ என்று கூறியது. அக்குரல் கேட்டவுடனே என் தூய நெஞ்சம் திடுக்கிட்டது. இப்படிப் புலம்புகிற அந்தப் பூங்கொடி, காதலன் தோளைத் தழுவிக் கொண்டு கிடக்கிறாள். இருவரும் அந்த இரவை இன்ப இரவாக்கிக் கொண்டனர். கொஞ்சி மகிழ்ந்தனர். கூடிக் குலாவினர், வஞ்சியே என்றான், என் வாழ்வே என்றாள், உயிரே என்றான், என் உணர்வே என்றாள்.

உள்ளங்காலைப் பஞ்சென உரைத்தும், மேவிய கணைக்கால் துள்ளும் விரால் எனச் சொல்லித் துதித்தும், அங்கையைச் சுவைத்துக் காந்தள் என்றும், கழுத்தின் எழிலைக் கழுகு எனப் பகர்ந்தும், இன்பம் மேவிய இதழ்கள் தூய் மலர் என்றும், கூந்தல் அழகைத் திரள் முகில் எனவும், கூரிய மூக்கினைக் குமிழ் எனப் புகழ்ந்தும், கண்களை சேலின் வடிவெனக் கூறியும், ஒருவரோடொருவர் உயிர் இணைந்து அணைந்தனர். அந்த இரவுப் பொழுதில் இம்மியும் வீணாக்காமல்!

இந்த நேரம் பார்த்துக் கூவியது கோழி என்றால் அவளுக்கு எப்படியிருக்கும்? அந்தக் கோழி என்ன சொல்லுகிறதாம்!

“தோடாய் காதலர்ப் பிரிக்கும்
வாள்போல் வைகறை வந்ததன்றால் எனவே –”

தோள் தோய்ந்து கிடக்கின்ற காதலர்களைப் பிரிக்கின்ற வாள் போல, கொடிய வைகறைப் பொழுது வந்துவிட்டது என்பதையல்லவா அந்தக் கோழி அவளுக்கு அறிவிக்கின்றது!

எவ்வளவு எளிமையும் எழிலும் கொண்ட ஏற்றமிகு பாடல் இது!

“குக்கூ வென்றது கோழி அதன் எதிர்
துட்கென் றன்றென் தூய நெஞ்சம்
தோடோய் காதலர்ப் பிரிக்கும்
வாள்போல் வைகறை வந்தன்றால் எனவே”

தமிழ் இலக்கிய பேழையில் மாமணிகளில் ஒன்றாகத் திகழும் குறுந்தொகை, இன்பப் பெருக்கம் ஒன்றே இம்மை இன்பத்தையும் வீட்டின்பத்தையும் ஒருங்கே அளிக்கும் சிறப்புடையது என்னும் கொள்கையுடையோர் பண்டைத் தமிழகத்தில் பெருமையுற்றிருந்தனர் என்பதை விளக்குகிற நூல்களில் ஒன்றாகும்.

குறுந்தொகைக்கு உரையெழுதியவர்களில் ஒருவரான பெருமழைப் புலவர் பொ.வெ. சோமசுந்தரனார் அவர்கள் தீட்டியுள்ள அணிந்துரையில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

> வடமொழி முதலிய பிறமொழிவாணர்கள் தங்கள் இலக்கியங்களை ஆக்குவதற்குப் பெரும்பாலும் அறிவோடு பொருந்தாத கற்பனைகளையே பயில வழங்குவராயினர்.
>
> பாற்கடலும், கருப்பஞ்சாற்றுக் கடலும், மேலுலகங்களும், கீழுலகங்களும், அரக்கர்களும், தேவர்களும், பிசாசர்களும், இன்னோரன்ன பொருந்தாப் புனைவுகளை அவர்கள் இலக்கியங்களில் யாண்டுங் காணலாம்.
>
> பல்லாயிரம் ஆண்டு உயிர் வாழ்ந்திருப்போரையும், பதினாயிரம் மகளிரை மணந்தோர்களையும் அவர்கள் இலக்கியங்களில் காண்கின்றோம்.

இப்புனைவுகளை ஆராய்ச்சி அறிவிற்குச் சிறிதும் பொருந்தாத பொய்ப் புனைவுகளே யாகும் அன்றோ?

நந்தமிழ் நாட்டுப் பிற்றைநாட் புலவர்களும் இனத்ததாகும் அறிவு என்றபடி அக்கூட்டுறவானே நல்லறிவிழந்து அவர் நெறியே பற்றிப் பிற்றை நான் வீண்படும் இலக்கியங்கள் பலவற்றை யாத்து அவம் போயினர்.

நம் சங்க காலத்து இலக்கியங்களிலே, இத்தகைய பொருந்தாப் புனைவுகளை யாண்டும் காண்டல் அரிது.

ஒரோவழி யாண்டேனும் காணப்படுவனவும் அக்காலத்தே ஏற்பட்ட கேண்மை யானே வந்த சிறிய இழுக்குகளாகவே காணப்படுகின்றன.

நம் பழம் புலவர்கள் உலகியற் பொருள்களின் இயல்பினை யாண்டும் தன்மை நவிற்சியானே விளக்குவதைக் காணலாம். தாங்கூறும் பொருள் புலப்பாட்டின் பொருட்டு, உவமையணியை அவர்கள் வழங்குகின்றனர்.

இக்காரணத்தானே இக் குறுந்தொகை முதலிய இலக்கியங்கள் இயற்கையை நன்கு பொருந்தத் தழுவிச் செல்வதைக் காணலாம்.

உடன்பிறப்பே, இத்தகைய ஆழமான கருத்துக்கள் எல்லாம் இலக்கியத் தமிழ்வழி பகுத்தறிவுக் கொள்கைகளைப் பரப்புவதற்குப் பயன்படுமன்றோ?

வாழ்வாவது மாயம் - மண்ணாவது திண்ணம் - என முணுமுணுத்துக் கொண்டிருக்கும் பயங் கொண்ட சமுதாயத்திற்கு அச்சம் போக்கும் வகையில், பண்டைத் தமிழ் மக்கள் வாழ்க்கையை மிகவும் சுவைத்து வாழ்ந்தனர் என்பதை அகநூல்களிலும், வாழ்வை ஒரு பொருட்டாக மதிக்காமல் வீரம் விளைவித்ததையும் - நாற்றிசையும் நற்புகழ் நாட்டியதையும் - மொழி காத்ததையும் - மொழி காத்தவரைக் காத்ததையும் - புறநூல்களிலும் காணுகிறோம்.

இடையில் கிடைத்துள்ள இந்த ஓய்வை இதுபோன்ற இலக்கியங்களைப் படிப்பதில் செலவிடும்போது - வளரும்

பயிருக்கு நல்ல அறுவடையை வழங்கிடும் உரம்போல; எதிர்காலத்திற்கேற்ற கருத்துக் குவியல்கள் கிடைக்கின்றன. அவைகளைப் படிக்கும்போது ஏற்படும் ஆறுதலை, உன்னோடு பங்கிட்டுக் கொள்ளத்தான் அந்தக் கருத்துக்களுக்குக் கடிதவடிவம் தருகிறேன்.

அன்புடன்,

30-7-76

மு. க.

(02-08-1991)

1772. நெருக்கடி காலக் கடிதங்கள் - 34 : கழக ஆட்சியில் அறநிலையப் பணிகள்!

(1976 வரையில் நடைபெற்ற கழக ஆட்சியிலும் - மீண்டும் 1989 முதல் இரண்டாண்டு கால கழக ஆட்சியிலும் அறநிலையத்துறைப் பணிகள் எவ்வளவு செம்மையாக நடைபெற்றன என்பதை நடுநிலையாளர் நன்குணர்வர். 1989க்குப் பிறகு கழக ஆட்சியில் ஆலயங்களின் நிலங்கள் யார் யாரிடமிருந்து எவ்வளவு மீட்கப்பட்டன என்ற விபரங்கள் சட்டப் பேரவையில் கூறப்பட்டுள்ளன. இந்தக் கடிதம் 1976 வரையில் கழக ஆட்சியில் அறநிலையப் பணிகள் என்பதை விளக்குவதாகும்.)

உடன்பிறப்பே!

எல்லோரும் ஏதேதோ யாத்திரை போகிறார்களே, நாமும் ஒரு யாத்திரை புறப்படுவோமே என்று நினைத்து உன்னையும் என்னோடு அழைக்கிறேன். யாத்திரை ஸ்தலம் என்று அண்ணா ஒருமுறை ஒரு இடத்தைப் பற்றி குறிப்பிட்டாரே; அதை மறந்துவிடவில்லை நானும் நீயும்! நான் இப்போது உன்னை விரும்பி அழைப்பது திருத்தல யாத்திரைக்கு! நான் பிறந்த ஊரே ஒரு திருத்தலம்தான்! நால்வரால் பாடப் பெற்ற திருக்கோளிலியம் பதியென்னும் திருக்குவளையில்தான் பழுத்த ஆத்தீகரான முத்து வேலருக்கு மகனாகப் பிறந்தேன். சின்னஞ்சிறு வயதிலேயே அந்தச் சிற்றூர்க் கோயிலை நம்பி வாழுகின்ற கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தை நான் உணருவேன்.

சுயமரியாதைக் கருத்துக்களால் நான் ஈர்க்கப்பட்டு இளம் வயதிலேயே துடிப்புடன் அவைகளைப் பரப்புகிற நேரத்திலும் ஆலயங்களை நம்பி வாழுகிற கிராமாந்தர ஊழியர்கள், உழவர்கள், பற்றிய அனுதாப உணர்ச்சி என் உள்ளத்தில் இடம் பெற்றே இருந்தது.

அந்தக் காலத்தில் கோயில்களை ஏராளமாகக் கட்டியது பக்தியின் அடிப்படையில் மாத்திரமின்றி, சிற்பிகள், கொத்தர்கள்,

கருமான்கள் போன்ற தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புக்களை வழங்கவும் - கட்டி முடிந்த பிறகு வேலை வாய்ப்புக்களை நிரந்தரமாக்கவும் என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது!

கடவுள் கொள்கையில் தந்தை பெரியார் மிகவும் தீவிரவாதி! கடவுளே இல்லையென்று மறுப்பவர்!

உண்டென்பார் சிலர், இல்லையென்பார் சிலர், எனக்கில்லை கடவுள் கவலை! என்றவர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்!

ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற திருமூலர் கொள்கையே தி.மு.கழகத்தின் கடவுட் கொள்கை என்று அறிவித்தவர் அண்ணா!

கோவில் கூடாது என்பதல்ல? கோயில் கொடியவர்களின் கூடாரமாக இருக்கக்கூடாது என்பதுதான் என் கொள்கை! என்ற வாசகத்தை நான் எழுதி அதை யார் எப்போது முழங்கினார்கள் என்பதெல்லாம் உனக்கும் நாட்டுக்கும் தெரியும்!

ஆத்தீகப் பெரியோர்கள் கூடியதோர் அவையில் என்னைப் பற்றிக் குறிப்பிட்ட பண்டார சந்நதிகள் ஒருவர், கருணாநிதி அவர்கள் கடவுளை ஏற்றுக்கொள்ள மாட்டார் என்றாலும் கடவுள் காரியங்களுக்கு அவர் ஆட்சி குறுக்கே நிற்கவில்லை! என்றார். அதற்கு விடையளித்த நான், கடவுளை நாம் ஏற்றுக் கொள்வது பெரிதல்ல; கடவுள் நம்மை ஏற்றுக் கொள்கிற அளவுக்கு நாம் நடக்கிறோமா என்பதுதான் முக்கியம்! என்று சுட்டிக் காட்டினேன்.

ஒருவனே தேவன் என்று கூறிய அறிஞர் பெருமக்கள் அந்தத் தேவன் எங்கேயிருப்பதாகச் சொன்னார்கள்? சொலுகிறார்கள்? நல்ல உள்ளத்தில் இருப்பதாகத் தானே!

ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்ற கவி தாகூரின் தத்துவத்தைத்தானே அறிஞர் அண்ணாவும், கழக அரசும் செயல்படுத்தினோம்!

வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன் என்ற வடலூர் வள்ளலாரின் கருத்தாழமிக்க வரிகளை மறவாமல் கடவுட் பணியென்பது என்னவென்று தெளிவாக உணர்ந்து காரியமாற்றியதுதான் கழக அரசு!

1967-ஆம் ஆண்டு கழகம் தேர்தல் களத்தில் நின்ற போது, தி.மு.க. வெற்றி பெற்றால் தேவாலயங்கள் இடிக்கப்படும்! தேர்த் திருவிழா நின்று விடும்! தெப்போற்சவம் தடுக்கப்படும்! மதவாதிகள் மனம் புண்படுத்தப்படும்! ஆண்டவன் திருவுலா இருக்காது! ஆறு கால பூஜை நடக்காது! ஆடிக்கிருத்திகை இல்லை! ஆனித் திருமஞ்சனம் இல்லை! மாசி மகமில்லை! பங்குனி உத்திரமில்லை! கார்த்திகை தீபமில்லை! கருமாரியம்மன் விழா இல்லை! என்றெல்லாம் எதிர்க்கட்சியினர் எழுதினர், பேசினர்! ஒன்பதாண்டுக் கால கழக ஆட்சியில் ஒரு குறைவும் ஏற்படாமல் அறநிலையப் பணிகள் நடந்திருக்கின்றன.

ஆட்சி ஜனவரி இறுதிநாள் அகற்றப்பட்டதிலேயிருந்து நானும் பார்க்கிறேன். நாலா திக்கிலிருந்தும் நமக்கு லட்சார்ச்சனைகள் சகஸ்ரநாம அர்ச்சனைகள் நடந்து கொண்டிருக்கின்றன. என்ன காரணம் சொல்லி?

ஆலயங்களில் தி.மு.க. ஆட்சிக் காலத்தில் ஊழல்கள் பெருகிவிட்டன. இது பொதுப்படையான குற்றச்சாட்டு! இதன் கிளைகளாகப் பல குற்றச்சாட்டுக்கள்! அவைகளை நான் ஒவ்வொன்றாக குறிப்பிட்டு விளக்கமளிக்க விரும்புகிறேன்.

சுவாமி காரியங்கள், திருப்பணிகள் எதுவும் சரியாக நடைபெறவில்லை இது ஒரு குற்றச்சாட்டு!

இந்தக் கடிதத்தில் இணைத்திருக்கிறேனே; படங்கள் அவைகளைப் பார். திருநெல்வேலியில் உள்ள நெல்லையப்பர் கோயில்! எழுநூறு ஆண்டுகளுக்கு முன்பு மன்னர்கள் காலத்தில் எழுப்பப் பெற்ற ஆலயம்! எழுநூறு ஆண்டுகளுக்குப் பிறகு இப்போதுதான் அந்த ஆலயத்தின் பல கோபுரங்கள் பழுது பார்க்கப்பட்டு, புதுப்பிக்கப்பட்டு திருப்பணி நிறைவேறி குடமுழுக்கும் நடத்தப்பட்டிருக்கிறது! எப்போது? நமது கழக ஆட்சியில்!

படத்தில் இடிந்து பாழான பழைய கோபுரத்தையும் காணலாம். திருப்பணி நடந்து முடிந்த புதிய கோபுரத்தையும் காணலாம். இதற்கான செலவு ஏழு லட்ச ரூபாய்! இன்னும் தருகிறேன் பட்டியல்!

சென்னை திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயில் திருப்பணி நடந்து 1975 மார்ச் திங்களில் குடமுழுக்கு நடைபெற்றது!

பேரூர் பட்டிப் பெருமாள் கோயில் 1976 பிப்ரவரியில் குடமுழுக்கு!

சென்னை வடபழனி ஆண்டவர் கோயில் குடமுழுக்கு சென்ற ஆண்டு நடந்தது.

பழனி, தண்டாயுதபாணி கோயில் விமானத்துக்குத் தங்கத் தகடுகள் போட்டு (நாற்பது லட்ச ரூபாய் செலவில்) அதன் குடமுழுக்கு சென்ற ஆண்டு நடந்தது.

தஞ்சை மாவட்டம் சுவாமி மலை கோயில் குடமுழுக்கு!

கொடுமுடி, மகுடேசுவரசாமி கோயில் குடமுழுக்கு!

திருவண்ணாமலை அருணாசலசாமி கோயில் குடமுழுக்கு!

இராமேஸ்வரம் ராமனாதஸ்வாமி கோயில் குடமுழுக்கு!

திருவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயில் திருப்பணி நடந்து கொண்டிருக்கிறது.

பழனி கோவில் மலையினை விரிவுபடுத்தும் திருப்பணி வேலைகள் 105 லட்ச ரூபாய் செலவில் நடைபெற்று வருகிறது.

கிருஷ்ணாபுரம் (நெல்லை) கிருஷ்ணன் கோயில் திருப்பணி நடைபெற்று வருகிறது.

திருநெல்வேலியில் நெல்லையப்பர் கோயிலில் கலைக்கூடம் அமைக்கும் வேலையை நானும் நமது நண்பர் கண்ணப்பன் அவர்களும் கலந்து கொண்டு தொடங்கி வைத்தோம்.

சங்கரன்கோயில் ஆலயத் திருப்பணி நடைபெற்று வருகிறது.

திருவைகுண்டம் கள்ளபிரான் கோயில் திருப்பணி நடைபெற்று வருகிறது.

ஆழ்வார் திருநகரில் வடுவூர் கோதண்டராமசாமி கோயில், திண்டுக்கல் காலகத்தீஸ்வரர் கோயில், தஞ்சைமாவட்டம் பகுதியப்பர் கோயில், பத்தணை நல்லூர் திருமுல்லைவாயில் கோயில்கள் –

மதுரை கூடலழகர் கோயில், சோளிங்கர், விருத்தாசலம் கொளஞ்சியப்பர் கோயில்கள், விருத்தாசலம் விருத்தகிரீஸ்வரர் கோயில், சிதம்பரம் நடராசர் கோயில், திருமுஷ்ணம் கோயில்,

திருச்செங்கோடு அர்த்தநாரீஸ்வரர் கோயில், வடசென்னிமலை, பாலசுப்பிரமணியர் கோயில், இடும்பாவனம் தாராபுரம் மூலனூர் வஞ்சியம்மன் கோயில், அவிநாசி கோயில், காரமடை ரங்கநாதர் கோயில், அய்யம்பாளையம் வாழைத் தோட்டத்து அய்யன் கோயில் முதலியவற்றில் திருப்பணிகள் முடிந்து குடமுழுக்கு நடைபெற்றதும், சிலவற்றில் திருப்பணிகள் நடைபெற்றுக் கொண்டும் இருக்கின்றன! இத்தனையும் கழக ஆட்சியில்தானே! இதை மறுக்கிறார்களே, மறைக்கிறார்களே - ஏன்?

ஒருவேளை திருப்பணி, குடமுழுக்கு என்று தமிழில் கூறுவதால் புரியவில்லையோ? ஜீரணோத்தாரன அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம், சம்ரோக்ஷணம் என்ற சொற்களை பயன்படுத்தியிருந்தால் புரிந்திருக்குமோ, என்னவோ!

இடிந்த கோபுரங்கள் எழில் பெற்றன! இருண்ட கோயில்கள் ஒளி பெற்றன! ஆமாம்! நமது கழக ஆட்சியில்! அதற்குத்தான் இத்தனை பெரிய பட்டியலை உனக்குத் தந்தேன்!

இன்னும் ஐயாயிரம் கோயில்களில் திருப்பணி முடிந்து குடமுழுக்கு நடந்ததற்கான பெரிய பட்டியலே இருக்கிறது.

திருத்தணி, பழமுதிர்சோலை, சென்னிமலை ஆகிய மலைக்கோயில்களுக்குச் சிரமமின்றி செல்வதற்கு ஒழுங்கான சாலைகள் அமைக்கப்பட்டதும் கழக ஆட்சியில்தான்!

பழனியில் திருப்பணி தொடக்க விழாவும், அந்த ஆலயத்தின் சார்பில் அமைக்கப்பட்ட செவிடர், ஊமையர் பள்ளிகள் தொடக்க விழாவும் நடைபெற்ற போது நானும் நண்பர்கள் அன்பில், கண்ணப்பன், ஓ.பி. இராமன் ஆகியோரும் கலந்து கொண்டோம்.

இதயத்தில் பதிந்திருக்கிற கொள்கைக்கும், ஏற்றுக் கொண்டிருக்கிற பொறுப்புக்கும் மாசு வராமல் காப்பாற்றுகிற கடமையைக் கழக அரசு தவறாமல் செம்மையாகச் செய்துள்ளது என்பதற்கு இவையெல்லாம் எடுத்துக்காட்டுகள்! இவைகளைப் பாராட்ட முடியாதவர்கள் பழி கூறியல்லவா தி.மு.கழகத்தைக் களங்கப்படுத்தப் பார்க்கிறார்கள்! அதற்காக அவர்கள் அடுக்கிக் காட்டும் குற்றச்சாட்டுகள் யாவை?

நிதி மாற்றங்கள் செய்து வேறு காரியங்களுக்குச் செலவழித்தது ஒரு குற்றம்! வேறு காரியங்கள் என்றால் என்ன?

ஊனமுற்றோர் நல்வாழ்வுக்கு நிதி வழங்கியது - கண்ணொளி வழங்கும் திட்டத்துக்கு நிதி வழங்கியது - கருணை இல்லங்கள் அமைத்து அதற்குக் கோயில் நிதியில் ஒரு பங்கு வழங்கி அனாதைச் சிறுவர்களுக்கு கல்வி வழங்குவது - தொழு நோயாளிகளின் மறு வாழ்வு இல்லங்களுக்கு உதவி அளித்தது -

இவைகள் எல்லாம் வேறு காரியங்களுக்குச் செலவழித்தது என்ற குற்றத்தின் பாற்பட்டவைகளாம்!

முன்னாள் முதல்வராகவும் அறநிலைய அமைச்சராகவும் இருந்த பெரியவர் பக்தவத்சலம் அவர்கள், இந்த வார தினமணி கதிர் இதழில் பின்வருமாறு எழுதுகிறார்:

கோயில் வருமானம், மக்களின் அறிவு வளர்ச்சிக்கும் ஏழைகளுக்கும் பயன்பட வேண்டும். நூலகங்கள் ஏற்படுத்த வேண்டும். திருமண மண்டபங்கள் கட்ட வேண்டும்.

இது அவரது சீரிய கருத்து! சிறந்த கருத்தும் கூட!

அதுமட்டுமல்ல; 1959-ஆண்டு இந்து சமய அறநிலையத்துறை சட்டம் 66-ன் படியும், 1960-ஆண்டு நவம்பர் 5-ந்தேதிய அரசின் ஆணைப்படியும், கோயில்களின் உபரி நிதி, எந்தக் காரியங்களுக்கு வழங்கப்படலாமென்று நிர்ணயிக்கப்பட்டிருப்பதில்,

1. வறுமை நிலையிலிருக்கிற அல்லது உதவி தேவைப் படுகிற மத சம்பந்தமான இதர நிலையங்களுக்கு,
2. மத கோட்பாடுகளைப் பிரச்சாரம் செய்ய,
3. இந்துக் குழந்தைகட்கு அனாதை இல்லங்கள் ஏற்படுத்தி பராமரிக்க,
4. தொழு நோயாளிகளுக்கான இல்லங்களை ஏற்படுத்த,
5. ஏழைகள், ஆதரவற்றவர், தேக திடமற்றவர்களுக்கு விடுதிகள் ஏற்படுத்த என்பவைகளும் அடங்கியிருக்கின்றன.

உடன்பிறப்பே,

ஏழை எளியோர்க்கான திட்டங்களுக்கு ஆலயங்களின் நிதியை ஓரளவு அரசுக்கு வழங்கியதில் தவறு கண்டுபிடிக்கிறார்களே;

ஆந்திர மாநிலத்தில் உள்ள திருப்பதி கோயில் வருமானத்தில் பெரும்பகுதி இப்படிப்பட்ட செலவுகளுக்காக அமெரிக்கா வரையிலே சென்றிருக்கிறது என்ற செய்தியை அவர்கள் படிக்கவில்லை போலும்!

1959-ஆம் ஆண்டின் சட்டத்திற்குப் புறம்பாக ஆலய நிதி செலவழிக்கப்பட வில்லையென்பது தெரிந்திருந்தும் மண்ணை வாரி வீசுகிறார்களே, காரணம் புரிகிறதா, உனக்கு?

நாம் செய்யாத நல்ல காரியங்களை இவர்கள் செய்து விட்டார்களே! என்ற கோபம்தான்!

கருணை இல்லங்கள், கழகத்தினருக்கே பயன்படுகிறதாம்!

இந்த இல்லங்களில் ஒன்றை கிருபானந்த வாரியார், கபாலி கோயிலில் திறந்து வைத்து வாயார மனமாரப் புகழ்ந்து பேசினார்! இதோ; கேட்கிறாயா அவர் பேச்சை!

இறைவன் கருணையே வடிவானவன். இறைவன் வேறு கருணை வேறு அல்ல; இறைவனே அம்மா அப்பா இல்லாத அனாதைதான்!

அந்த அனாதைகளுக்கு முன்பு பெரியவர்கள் கோயில் வைத்தார்கள். இப்போது அம்மா, அப்பா இல்லாத அனாதைச் சிறுவர்களுக்கு இவர்கள் கோயில் வைக்கிறார்கள்.

அந்த அடிப்படையில் இரண்டும் ஒரே வேலைதான்.

கருணை கொஞ்சமாக இருப்பவர்களால் எதுவும் செய்ய முடியாது. கருணை நிதியாக இருந்தால் தான் - கருணாநிதியாக இருந்தால் தான் இதையெல்லாம் செய்ய முடியும். நாடு இனி நன்றாக இருக்கும்.

முதல்வரின் மற்ற திட்டங்களைப் போலவே இத்திட்டமும் மிகச் சிறந்ததாக இருக்கிறது.

முதல்வர் செய்யும் இது போன்ற நல்ல காரியங்களைப் பார்த்து, நல்ல காரியம் செய்தாரப்பா முதல்வர் என்று எம்பெருமானே மகிழ்வார்.

இது வாரியார் அவர்களின் பேச்சு.

1929-ஆம் ஆண்டு பெரியார் அவர்கள் சுயமரியாதை மாநாட்டிலே கொண்டு வந்த தீர்மானம் ஆலய நிதியை அனாதைக்

குழந்தைகளை வளர்த்துக் கல்வி அளிக்கப் பயன்படுத்த வேண்டுமென்பது! அது 1965-ல் சட்டமாகிறது! நமது ஆட்சிக் காலத்தில் விரிவாகச் செயல்படத் தொடங்குகிறது! அதாவது காமராஜர் காலத்தில் சட்டமாகி, கழக ஆட்சிக் காலத்தில் பரவலாக நடைமுறைப்படுத்தப்படுகிறது! இருவரையும் பெரியார் ஆதரித்த ரகசியம் இப்போது புரிகிறதா?

அனாதைக் குழந்தைகளை ஆதரித்தால்கூட அதுவும் கழகப் பிரச்சாரமா? அதோ கருணை இல்லத்து வாயிலில் நிற்கிற அந்தக் குழந்தைகளின் நெற்றியைப் பார், திருநீற்றுப் பூச்சை?

தெய்வீகப் பேரவையை தி.மு.க. ஆட்சிதான் தொடங்கியதாம்!

1966 ஜூன் திங்கள் 23-ஆம் நாள் தெய்வீகப் பேரவை, பக்தவத்சலனார் காலத்தில் பதிவு செய்யப்பட்டது. இந்து சமய அறக்கட்டளைகள் சட்டம் 66ன்படி இந்தப் பேரவைக்கு நிதி ஒதுக்கம் செய்யப்பட்டு வந்தது. இந்து சமயத்தின் பெருமையை உணரவும், சமய நம்பிக்கையை மென்மேலும் உறுதிப்படுத்தவும் இந்தப் பேரவை அமைக்கப்பட்டது. பெரியவர் பக்தவத்சலம் அவர்கள் முதல்வராக இருந்தபோது! அதை ஒரு தி.மு.க. ஸ்தாபனம் என்று கூறி, விளக்கம் தந்து விட்டார்கள்! பதில் தர வேண்டியவர்கள் நாமல்ல! நம் காலத்தில் இது தொடங்கவில்லை என்பதற்கே இந்த விபரங்கள்!

திருப்பணிகள், குடமுழுக்குகள் மட்டுமின்றி ஏழை மக்கள் குறைந்த செலவில் திருமணங்களைச் செய்துகொள்ள 80 திருமண மண்டபங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன; 128 மண்டபங்கள் முடியுந் தருவாயில் இருக்கின்றன!

எல்லாக் கோயில்களிலும் தமிழில் அர்ச்சனைகள்!

இது சற்று எரிச்சலை அளிக்கக் கூடியதுதான்!

தகுதிபடைத்த அனைத்து வகுப்பாரும் அர்ச்சகராக வர வேண்டுமென்று சட்டம்! ஆத்திரத்துக்கு இதுவும் ஒரு காரணம்!

கோயில் அறங்காவல் குழுவில் கட்டாயம் ஒரு தாழ்த்தப்பட்ட வகுப்பினர் இடம் பெற வேண்டுமென்று சட்டத்தில் வகை செய்து இதுவரை இரண்டாயிரம் அரிஜனங்கள் அறங்காவல் குழுவில் இடம் பெற்றுள்ளார்கள்.

சட்டமன்ற மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரையை ஏற்று கோவில்களில் மிக முக்கியமானவர்களுக்கு (ஏ.ஐ.ரூ.ள) தரப்படும் பரிவட்டம், பூரணகும்பம் ஆகிய தனி மரியாதைகளை நிறுத்தினோம்.

காழ்ப்பு ஏற்படாதா கனதனவான்களுக்கு? போதாதா காரணம் ஆங்காரத்துக்கு?

ஆலயப் பணிபுரியும் ஐம்பதாயிரம் ஊழியர்களுக்கு வேலையில் நிரந்தரம் - கோயில் வருவாய்க்கேற்ற ஊதிய உயர்வு - குடும்பப் பாதுகாப்புத் திட்டம்! ஆலய ஊழியர்க்குத் திருமணக் கடன் 25-45 என்று வயது வரம்பு நிர்ணயம்! இத்தனை சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன.

காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் அறநிலையத்துறை மானியம் பல்வகை (Miscellaneous) என்ற அளவில்தான் சீந்துவாரற்றுக் கிடந்தது! 1970-ஆம் ஆண்டு நமது ஆட்சியில்தான் தனி அமைச்சர், தனி வரவு செலவுத் திட்டம், பேரவையில் தனி விவாதம் என்ற நிலை உருவாக்கப்பட்டது.

1967-ஆம் ஆண்டு 9600 அறநிலையங்கள் மட்டுமே இந்தத் துறையின் பொறுப்பிலே இருந்தது. துறைக்குக் கட்டுப்படாமல் பல்லாயிரக்கணக்கான கோயில்களும் அவற்றுக்குச் சொந்தமான லட்சக்கணக்கான ஏக்கர் நிலங்களும் தனியார் ஆதிக்கத்தில் இருப்பது தெரிந்து அவைகளைக் கண்டுபிடிக்க கழக ஆட்சியில் அலுவலர் நியமிக்கப்பட்டார்.

கடந்த ஐந்தாண்டுகளில் நடைபெற்ற ஆய்வில் 41,306 அறநிலையங்களும் அவைகளுக்குச் சொந்தமான 201,343 ஏக்கர் நிலமும் தனியாரின் ஆதிக்கத்திலிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது! சீற்றம் பிறக்காதா அந்தச் சீமான்களுக்கு? பதறமாட்டார்களா அந்த பக்த சீரோன் மணிகள்?

அவைகளில் சுமார் 25,000 அறநிலையங்களும் சுமார் 65,000 ஏக்கர் நிலமும் அறநிலையத் துறையின் கீழ்கொண்டு வரப்பட்டுள்ளன.

1967-ல் தமிழ் நாட்டுக் கோயில்களின் மொத்த வருமானம் ஆண்டுக்கு மூன்று கோடி ரூபாய்!

இப்போது (1975-ல்) ஆண்டுக்குப் பனிரெண்டு கோடி ரூபாய்!

கோயில்களின் வருமானத்தைப் பெருக்குவதற்கு ஏராளமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அவைகளில் குறிப்பிடத்தக்க சிலவற்றைக் கூறுகிறேன்.

கோயில்களுக்குச் சொந்தமான நகர்ப்புறங்களில் உள்ள காலி இடங்களில் வீடுகள், கடைகள் கட்டி வாடகைக்கு விடப்பட்டுள்ளன.

கோயில்களில் உண்டியல் மற்றும் இதர வகையான வருமானங்கள் முறையாக கணக்குகள் வைக்கப்படுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

குறிப்பாக உண்டியல்கள் பராமரிப்பு எந்தெந்த வகையில் இருக்க வேண்டும் என்பதற்கான சட்டமே கழக ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்டது.

திருப்போரூர் சுப்பிரமணியர் கோயில் பரம்பரை அறங்காவலராக இருந்த ஒரு மடாதிபதி உண்டியலை உடைத்துத் திருடியது, சுவாமி நகைகள் களவாடப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு அவர் நீக்கப்பட்டார். முறையாக அறங்காவலர் நியமிக்கப்பட்டபின் கோயிலுக்கு திரளான மக்கள் வருவதால் வருமானமும் பெருகியுள்ளது.

செங்கற்பட்டு மாவட்டம் பாடி கைலாசநாதர் கோயில் மற்றும் திருவல்லீசுவரர் கோயிலுக்குச் சொந்தமான சுமார் 50 லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள காலியிடம் கண்டுபிடிக்கப்பட்டு அதை அனுபவித்து வந்த பரம்பரை அறங்காவலர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு, அந்தச் சொத்துக்கள் மூலம் வருகின்ற வருமானம் கோயிலுக்கு வரும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தஞ்சை மாவட்டம் திருச்சிற்றம்பலம் திருக்கோயிலிலுள்ள சுவாமியின் பெயரை தன்னுடைய குழந்தைக்கு வைத்து ஆண்டவனின் பெயரால் இருந்த சொத்துக்களை தன் குடும்பத்துக்கு சொந்தமாக்கி கொண்டார் ஒரு பரம்பரை அறங்காவலர்! கழக ஆட்சியில் கண்டுபிடிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டது. நீதிமன்றத்தில் வழக்கு இருக்கிறது!

சென்னை கபாலீசுவரர் கோயிலுக்குச் சொந்தமான மயிலை பல்லக்கு மான்யம் என்னுமிடத்தில் ஏழை மக்கள் குடிசைபோட்டு வாழ்ந்து வந்தனர். அதற்காக அவர்களிடமிருந்து வாடகையாக ஆண்டுக்கு ரூ.1500 அளவில் வசூலிக்கப்பட வேண்டும். ஆனால் இக்குறைந்த தொகை கூட பல ஆண்டுகாலமாக சரியானபடி வசூலிக்கப்படாமல் இருந்தது. குடிசை மாற்று வாரியத்திற்கு அந்த நிலத்தை விற்ற தொகைக்கு ஆண்டுக்கு சுமார் 50 ஆயிரம் ரூபாய் வட்டி மூலம் வருமானம் வருகிறது.

நீண்டகால குத்தகைக்கு கோயில் நிலங்களை சிலர் எடுத்துக் கொண்டு நிலையான கட்டிடங்களைக் கட்டி விடுகின்றனர். அதனால் குத்தகைக் கெடு முடிந்ததற்குப் பிறகு கட்டிடம் யாருக்குச் சொந்தம் என்ற பிரச்சினை எழுகிறது.

சாத்தூரில் கோயிலுக்குச் சொந்தமான நிலத்தை நீண்டகாலக் குத்தகைக்கு ஒருவர் பெற்று நிரந்தரமான சினிமா கொட்டகையைக் கட்டினார். இதே போல் குன்னூரிலும் கோவில் நிலத்தை வாடகைக்குப் பெற்று நிரந்தரமான சினிமா கொட்டகையைக் கட்டினார்.

கடந்த நான்காண்டுகளுக்கு முன்பு நிலத்தினுடைய குத்தகைக் கெடு முடிந்து விட்டது.

கட்டியுள்ள கட்டிடம் யாருக்குச் சொந்தம் என்ற பிரச்சினை எழுந்து நீதிமன்றம் வரை செல்லும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இதேபோன்று பல குடியிருப்பு மனைகள்; தொழிற்சாலைகள், தனியார்களால் கடந்த காலத்தில் கட்டப்பட்டு குத்தகைக் கெடு முடிந்த பிறகு மேற்கண்ட நிலைகளே உருவாகியுள்ளது. இவைகள் அரசின் கவனத்திற்கு வந்தவுடன் 1972-ஆம் ஆண்டு குத்தகைக்கு கொடுக்கும் நிலங்களில் நிலையான கட்டிடங்கள் கட்டக் கூடாதெனவும்; நீண்டகால குத்தகைக்கு கொடுப்பதில்லை எனவும் முடிவெடுக்கப்பட்டது.

கோவை மாவட்டத்திலிருக்கும் சிவன்மலை கோயிலுக்குச் சொந்தமான நூற்றுக்கணக்கான ஏக்கரா நிலம் பினாமி பெயரால் சில பெரிய மனிதர்கள் அனுபவிப்பது கண்டுபிடிக்கப்பட்டு அவைகளை கோயிலுக்கே மீட்பதற்கு நீதிமன்றம் சென்று வழக்கு தொடுத்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தஞ்சை மாவட்டம் வலிவலம் இருதயநாத சுவாமி கோயிலுக்குச் சொந்தமான நஞ்சை நிலங்களை அக்கோயிலின் பரம்பரை அறங்காவலர் பினாமி பெயர்களால் அனுபவித்து வந்தார். அந்நிலத்தில் பாடுபடக்கூடிய விவசாயத் தொழிலாளர்கள் - சர்வோதய இயக்கத் தொண்டர்கள் குத்தகைதாரருக்கே நிலத்தை அனுபவிக்கச் செய்ய வேண்டினர். அந்த நடவடிக்கைகளும் நீதிமன்றத்தில் இருக்கின்றன.

கோவில் நகைகள் பரிசோதனை செய்யப்பட்டு கண்காணிக்கப்படுவதற்கு 2-7-2000-ஆம் ஆண்டில்தான் பரிசோதனை அலுவலர் ஒருவர்; அவருக்கு உதவியாளர்கள் ஆகியோர் நியமிக்கப்பட்டனர். அவர்கள் பெரிய கோவில்களிலுள்ள நகைகளை மட்டுமே பரிசோதனை செய்ய முடிந்தது.

கழக ஆட்சிக் காலத்தில்தான் மேலும் மூன்று பரிசோதனை அலுவலர் நியமிக்கப்பட்டு முறையாக பரிசோதனைகள் நடப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

நகைகளை அழித்தோ, மாற்றியோ அல்லது பழுது பார்த்திட வேண்டுமானால் கூட ஆணையரின் முன் அனுமதி பெற்றுத்தான் செய்தாக வேண்டும்.

உடன்பிறப்பே, உன்னை அழைத்துக் கொண்டு ஒரு பெரிய தேவாலயச் சுற்றுலாவே நடத்தி விட்டேன்! இவ்வளவு விபரங்களை உன் வாயிலாக நான் அறிவித்த பிறகு ஊரார் உண்மையை உணர இது பயண்படுமல்லவா? அது போதும் எனக்கு!

அன்புடன்,

6-5-76 மு. க.

(03-08-1991)

1773. நெருக்கடி காலக் கடிதங்கள் - 35 : எங்களுக்கும் காதல் வரும்!

உடன்பிறப்பே!

காதல் காட்சியென்றாலோ, காதல் பற்றிய கவிதை என்றாலோ, அச்சடித்த பதுமை போன்ற அழகி ஒருத்தி கதாநாயகியாகவும் அரும்பு மீசை வாலிபன் ஒருவன் கதாநாயகனாகவும் அமைவது தான் வழக்கம்.

நாடகம், திரைப்படம் போன்ற காட்சிகளிலே கூட கதாநாயகர்களும், கதாநாயகிகளும் ஒப்பனைகளின் வாயிலாகத் தங்களை இளவெட்டுக்களாகவும் எழில் உருவங்களாகவும் மாற்றிக் கொண்டு நடப்பதைக் காண்கிறோம். அதனைத் தவறு என்று கூற முடியாது.

தாங்கள் இளமைச் செழிப்புடன் இருக்கிறார்களோ இல்லையோ - அழகு மிளிர்ந்திடத் தோன்றுகிறார்களோ இல்லையோ - காட்சிகளை சுவைப்பவர்க்கு எதிரில் அவ்வாறு தோற்றமளிப்பதே ஏற்புடையதாகும்.

கவிதையிலோ, கதையிலோ காதலர்களைச் சந்திக்க வைக்கும் எழுத்தாளன் அல்லது கவிஞன் எத்துணை அற்புத வர்ணனைகளை அள்ளிக் கொட்டுகிறான்.

பொன்னைப் போல் ஒளிரும் மேனியென்றும் மின்னலைப் போல் இடையாள் என்றும் காதலிக்குப் புகழ் பாடி, விண்ணைப் போல் விரிந்த மார்பன் வீரம் விளைக்கும் காளை என்றும் காதலனைப் போற்றிக் கூறி இருவரையும் இச்சைக்கினிய பச்சைக் கிளிகளாய் இன்ப வாளில் பறக்க விடுவதில் அவனுக்கோர் மகிழ்ச்சி.

“அலை அலையாய்ச் சுருண்டு கிடக்கும் கரிய
கூந்தல், அழகேறி நிற்கும் அரும்புப்
புருவங்கள், அம்பினும் கூர்மையான விழிகள்,

ரத்தத்தைவிடச் சிகப்பான ரத்தின
அதரங்கள், மாம்பழ மேனி

இவை பெண்ணுக்குரிய வர்ணனையாகும்.

தேர்ந்தெடுத்துக் கடைந்தெடுத்த தேக்குமரத் தேகம். தேளின் கொடுக்கெடுத்து இருபுறமும் வைத்ததுபோல் மீசை. தோளின் அழகும், கைவாளினை ஏந்திடும் அழகும், நடையின் அழகும், நகை சிந்திடும் அழகும் - அடடா! நாடு போற்றும் வீரன்.

இவை ஆணுக்குரிய வர்ணனையாக அமையும்.

இப்படி அழகானவர்களை, காதல் காட்சியில் நடமாடவிடும் வழக்கிற்கு மாறாகக் கலித்தொகையில் மருதன் இள நாகனார் எனும் புலவர், மருதக் கலியில் காதல் களத்தில் இரண்டு உருவங்களைச் சந்திக்க விடுகிறார்.

கலித் தொகையின் காலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு எனக் கணக்கிடு கின்றனர். அந்தக் காலத்திலேயே புலவர்களின் தமிழ்ச் சொல்லால் எத்தகைய நகைச் சுவை அமிழ்மாக விளங்குகிறது என்பதற்கு இந்தக் காட்சி ஒரு எடுத்துக்காட்டு.

பெரும் செல்வந்தர் வீட்டில் ஒரு கூனி பணிபுரிகிறாள், அங்கே ஒரு குறளனும் (குள்ளனும்) பணிபுரிகிறான். குள்ளன் என்றால் சாதாரணக் குள்ளன் அல்ல. சித்திரக்குள்ளன். குள்ளனுக்கு உள்ளமிருக்காதா என்ன? அதே போலக் கூனியும் காதல் தீனி தேடமாட்டானா என்ன? இருவரையும் இளநாகனார் காதலிக்க விடுகிறார்.

அன்பே! அமுதே! கனியே! ரசமே! என்றா காதல் உரையாடல் தொடங்குகிறது? இல்லை!

"மாசறு போன்னே! வலம்புரி முத்தே!
காசறு விரையே! கரும்பே! தேனே!"

என்றுதான் காதல் மொழி ஆரம்பமாகிறதா? அதுவுமில்லை!

பிறகு எவ்வாறு காதல் பேச்சு முகிழ்க்கிறது?

முதலில் குள்ளன் பேசுகிறான்.

"நீருள் நிழல்போல் நுடங்கிய மென்சாயல்
ஈங்கு உருச் சுருங்கி இயலுவாய்!"

நீரில் நெளியும் நிழல்போல் உடல் நெளிந்து கூனிக் குறுகிச் செல்பவளே! சற்றே நின்று நான் சொல்வதைக் கேள். ஆகா! என்ன அருமை! கூன் விழுந்து மேனி அசைவது நீரில் விழுந்த நிழல், அலைகளில் நெளிவதைப் போல இருக்கிறதாம். கவிஞனின் கற்பனையே கற்பனை!

உடனே கூனி, குலவுகிறாள் பார்!

"வல்லுப் பலகை எடுத்து நிறுத்தன்ன
கல்லாக் குறள்!"

என்று கொஞ்சிடுகிறாள் அந்த கூன் விழுந்த பெண்!

அதாவது;

சூதாட்டப் பலகையை எடுத்து நேராக நிறுத்தியது போன்ற உயரம் படைத்த குள்ளனே! என்று அழைக்கிறாள்.

அரசர்கள் ஆடும் சதுரங்கப் பலகை எவ்வளவு சிறியது! அதனை எடுத்து நிறுத்தினால் எவ்வளவு உயரமோ, அவ்வளவு உயரமாம் அவன்! என்ன உவமை! என்ன உவமை!

குள்ளன் விடுவானா? அவன் மேலும் வர்ணிக்கிறான் காதலியை!

"கொக்கு உரித்தன்ன கொடுமடாய்! நின்னை, யான்
புக்கு அகலம் புல்லின் நெஞ்சு ஊன்றும்
..... அருளீமோ!
பக்கத்துப் புல்லச் சிறிது!"

கொக்கை உரித்தாற்போல் கூன் கொண்டவளே! உன்னை நான் மார்போடு அணைத்துக் கொண்டால் உன் கூன் என் நெஞ்சைக் குத்தும். எனவே உன்னைப் பக்கமிருந்து தழுவ அருள்புரிவாயாக!

இதைக் கேட்டதும் கூனிக்குக் கோபம் வந்து விடுகிறது.

சீ! போ! வளைந்திருக்கும் மரத்தைக் கொடி தழுவுவது போல என்னைத் தழுவிடவும் பலர் முன்வருவார்கள். உளுந்து

பணியாரத்தைக் காட்டிலும் உண்ண இனிக்கும் நான் உன்னை விட இழிந்தவன் அல்ல!

இப்படிச் சீறிச் சிணுங்குகிறாள். அதைத்தான் புலவர் கவிதையாக வடிக்கிறார். அவள் கோபம் அடங்கவில்லை. தன்னைக் கொக்கு என்று சொன்னவனைச் சும்மா விடுவாளா?

“யாமை எடுத்து நிறுத்தற்றால்; தோள் இரண்டும் வீசி,
யாம் வேண்டோம் என்று விலக்கவும், எம்வீழும்
காமர் நடக்கும் நடை காண்”

ஆமையைத் தூக்கி நிறுத்தியதுபோல் தோள் இரண்டையும் வீசிக் கொண்டு, நான் வெறுத்தாலும் விடாமல் என்னைத் தொடரும் இந்த அழகன் நடக்கும் நடையைப் பார் என்பது இதற்குப் பொருள்.

குள்ளன் - கூனி பேச்சுக்கு ஒரு முடிவு ஏற்படுகிறது. சரி! நாம் இருவரும் ஒருவரையொருவர் கேலி செய்து கொள்ளக்கூடாது எனக் கூறிக் கொள்கின்றனர். அவ்வாறு இருவரும் சபதம் செய்கின்றனர். இருவரும் நாவை அடக்கிக் கொள்கின்றனர். தாங்கள் பணிபுரியும் அரண்மனைக்குள்ளேயே காதல் இன்பம் தேடுவது உசிதமல்ல என்ற முடிவுக்கு வருகின்றனர். ஏன் தெரியுமா?

“பேயும் பேயும் துள்ளல் உறும் எனக்
கோயிலுள் கண்டார் நகாமை வேண்டுவல்!”

இந்த அரண்மணையில் வாழ்பவர், நம்மைப் பார்த்துப் பேயும் பேயும் களியாட்டம் நடத்துகின்றன என்று நகைக்காமல் இருக்க வேண்டுமல்லவா; அதற்காக! என்று கூறிக் கொள்கின்றனர்.

மாளிகைக்கு அருகேயுள்ள பூங்காவுக்குச் சென்று இருவரும் கூடி மகிழ்வோம் என முடிவு எடுக்கின்றனர். அங்கு சென்று அவர்கள் தழுவுவது எப்படியிருக்க வேண்டுமாம்?

“.....காவின் கீழ்ப்
போதர் அகடு ஆரப் புல்லி முயங்குவோம்
துகள் தடி காட்சி அவையத்தார் ஓலை
முகடு காப்பு யாத்து விட்டாங்கு”

அறிவு சார்ந்த ஆன்றோர் ஓலைச்சுவடியைக் கட்டி அதன் மேல் முத்திரை யிட்டதுபோல குறையற்ற உடல்கள் நிறைவு பெறுமளவுக்கு இறுகத் தழுவிடுவோம்

என்று கூறி பூங்கா நோக்கி விரைகின்றனர்.

கூனியையும் குள்ளனையும் தான் காதல் வீதியில் பவனிவரச் செய்கிறார் புலவர் பெருமகனார்.

அதிலும் எவ்வளவு அழகு! எத்தனை உவமை! கற்பனைத் திறன் கொடி கட்டியன்றோ பறக்கிறது.

கூனாகவும், குறளனாகவும் இருந்தாலும் எங்களுக்கும் காதல் வரும் என்ற உரிமை முழக்கத்தை அல்லவா - அந்தக் காதலர்கள், கலித்தொகை வாயிலாக வெளியிடுகிறார்கள்.

இனிய உடன்பிறப்பே! இடை இடையே இலக்கிய விருந்தினை நீ சுவைப்பது சோர்வகற்றும் மாமருந்தாக அமையுமென நம்பியே எழுதிக் கொண்டிருக்கிறேன்.

அன்புடன்,

7-8-76

மு. க.

(04-08-1991)

1774. நெருக்கடி காலக் கடிதங்கள் - 36 : இலக்கியம் காட்டும் இலட்சிய வீரன்!

உடன்பிறப்பே!

இந்தக் கழகம் உன்னைப் போன்ற லட்சோபலட்சம் உடன்பிறப்புக்களின் எழில் வடிவமல்லவா? இன்றும் இதன் இளமைப் பொலிவுக்கு நீ தரும் வலிவன்றோ காரணம்?

எத்தனை எத்தனை சோதனைகளை நீ தாங்கித் தாங்கி, எதிர்ப்புக்களைப் புறங்காணச் செய்திருக்கிறாய்!

நீயே கழகம்! கழகமே நீ! நீ சிந்திய வியர்வைத் துளிகளின் விளைவே கழகம் ஈட்டிய வெற்றிகள்! கழகம் பெற்ற பெருமைகள்! கடந்திடும் சோதனைகள்! எனவே, கழகத்தை நான்; உன் அசைவிலே, நடையிலே, பேச்சிலே, மூச்சிலே காணுகிறேன்.

அப்பப்பா! குலைந்தது கட்சி! தொலைந்தது இனிமேல்! சீந்துவார் யாருமின்றி சீராட்டும் பாராட்டும் பெறாமல் - சீ என்றிகழப்பட்டுத் தெருப்புழுதியிலே சேர்க்கப்பட்டு விடும்! என்றெல்லாம் மாட கூடங்களில் இருந்து மமதையை மலையென மனத்தில் வளர்த்துக் கொண்டோர் ஆரூடம் கணித்த நேரத்தில்; என் ஆருயிர் உடன்பிறப்பே! நீயல்லவோ நிமிர்ந்து நின்று சுடர் முகம் தூக்கி கோடிக் கதிரவன்கள் கூடிவந்தது போல் ஒளிபரப்பி எட்டுத் திசையும் முரசு கொட்டுக என்று முழக்கமிடுகிறாய்; கோடையிடிகளென! குன்றங்கள் ஒன்றோடொன்று மோதியெழுப்பிய ஒலியென!

எரிச்சல் காண - ஏசல் பயணம் - கண்டனச் சொற்கள் - கடுமொழி - சுடும் பார்வை - இத்தனையும் கொண்ட தீயசக்திகள், பிற்போக்குப் பிறவிகள், கழகம் பிறந்த காலந்தொட்டு அதனை அழிப்பதற்கு நேரம் பார்த்துக் கொண்டுதானிருக்கின்றன, துரோகச் சிந்தனையினர் தம் சுகவாழ்வு ஒன்றை மட்டும் முன்னுக்கு நிறுத்தி

தூய நற்கழகத்தை அழித்திடத் தங்கள் கரங்களில் சதிக்கருவி ஏந்திடவும் தயங்கவில்லை. நம்மிடமிருந்து பிரிந்து சென்றவர்களே அதற்கு வழியும் வகுத்துக் கொடுத்தனர். கழகமே நீயாக; நீயே கழகமாக ஆகிவிட்ட என் இதயமலரே! அந்த மலர் தரும் மணமே! அந்த மணம் தரும் சுகமே! உயிரினுமினிய உடன்பிறப்பே! துரோகத்தைத் தூள் செய்து பகையைப் புறங்கண்டு நீ தூக்கி உயர்த்தியிருக்கிற இருவண்ணக் கொடியைக் காணும்பொழுதும், ஓரம்போகியார் எனும் ஒரு பெருங் கவிஞர் எழுதிய புறப்பாடல் ஒன்றை நான் நினைவுபடுத்திக் கொள்கிறேன். கவிஞர் எழுதிய போர்ப்பாடலில் இரண்டு நாட்டு மன்னர்கள் போரிடுகிறார்கள். ஆனால் நம் நிலையோ அப்படியல்ல, நம்மிடமிருந்து பிரிந்து சென்றவர்களே நமக்கு எதிரியாகி தாக்கும் நிலை.

“வருகதில் வல்லே வருகதில் வல்லென
வேந்துவிடு விழுத்தூ தாங்காங் கிசைப்ப
நூலரி மாலை சூடிக் காலின்
தமியன் வந்து முதி லாளன்
அருஞ்சமந் தாங்கி முன்னின் றெறிந்த
ஒருகை யிரும்பினைத் தெயிறு மிறையாகத்
திரிந்த வாய்வா டிருந்தாத்
தனக்கிரிந் தானைப் பெயர்புற நகுமே!”

போர் மூண்டுவிட்ட சமயத்தில் மன்னன் ஒருவன் உடனே களம் புகுமாறு வீரர்களுக்கெல்லாம் செய்தி அனுப்புகிறான். பகை சாய்க்கும் குறியுடன் பல பகுதிகளிலிருந்தும் வீரர்கள் வந்து கூடுகின்றனர். போர் தொடங்கி விடுகிறது.

அந்தப் போரில் கலந்துகொள்ள ஓடோடி வரும் ஒரு வீரனை மட்டும் புலவர் ஓரம்போகியாரின் விழிகள் வட்டமிடுகின்றன. அவன் யானையில் அமர்ந்தோ, புரவியில் ஏறியோ அல்லது தேர் செலுத்தியோ அந்தக் களத்திற்கு வரவில்லை.

தன்னந்தனியாக, நூலரி மாலையை அணிந்துகொண்டு, கையில் ஒரு வாளுடன் காலாட்படை வீரனாக களத்தில் நுழைகிறான். கடும் போரிடுகிறான்.

மானங்காக்கப் போரிடும் அந்தத் தமிழ் மறவர் குல திலகத்தையே ஓரம்போகியார் உற்றுப் பார்த்துக்கொண்டு

நிற்கிறார் உயர்ந்ததோர் குன்றின் உச்சி மீது ஏறி! புலவரல்லவா? எனவே குன்றேறி நின்று போர்க்களக் காட்சி காணுகிறார்! அந்த மாட்சியைக் கவிதையாக வடிக்கிறார்!

அவர் உள்ளங்கவர்ந்த வீரன், எதிரிப்படை வீரனை நோக்கிப் பாய்கிறான். பகைவனோ யானை மீது இருந்து போரிடுபவன்! இவனோ பூமியின் தோளைத்தான் குதிரையின் முதுகெனக் கருதிக் கொண்டு வாள் சுழற்றுகிறான்.

அந்த வாள் வீச்சு! மாரிக்கால மின்வெட்டின் வீச்சு! யானை கீழே விழுகிறது. யானையை வீழ்த்திய அவன் வாளும் வளைந்து கோணி விடுகிறது.

யானையின் மீதிருந்து விழுந்த வீரன், எழுந்து வந்து அவனைத் தாக்கி அழிப்பதற்குள் வாளை நிமிர்த்தியாக வேண்டும். என்ன செய்தான் தெரியுமா? ஓரம்போகியார் உரைக்கிறார் கேள்! அந்தப் போர்க்களத்தில் அவன் வாளை நிமிர்த்திக் கொள்ள உடனடியாக எந்த வசதியும் கிட்டவில்லை.

எதிரியோ எழுந்து விட்டான்! விரைவில் அருகே நெருங்கி விடுவான்! பளிச் செனத் தோன்றியது ஓர் அரிய யோசனை! கோணிய வாளை எடுத்து அங்கே தன்னால் வீழ்த்தப்பட்டுக் கிடக்கிற யானையின் மத்தகத்தில் அழுத்தி நிமிர்த்திக் கொள்கிறான்.

அவனது வளைந்துபோன வாளை நிமிர்த்துக் கொண்டான் என்பதைக் கண்டதும் எதிரிப் படையின் வீரன் எடுக்கிறான் ஓட்டம்! புறங்காட்டி ஓடுகிற அவனைப் பார்த்து அந்த வீரன் நாணி, நகைக்கத் தொடங்குகிறான்.

உடன்பிறப்பே, ஓரம்போகியார் சித்தரிக்கும் அந்தத் திறன்மிகு தீரனாகத்தான்; உன்னை - ஆம் - கழகத்தை; நான் கருதுகிறேன். கொல்ல வரும் பகையை அவன் விரட்டியதுபோல், தொல்லை தரும் துரோகத்தை நமது கழகம் வெற்றி கண்டு இளநகை புரிகிறதல்லவா?

இந்த இளநகை, கையில் வேலோ வாளோ ஏந்திப் பெற்றதல்ல! இதயத்தில் கொள்கையும், உறுதியும் ஏந்திப் பெற்றதாகும்! புறநானூற்று வீரன், தன்னந்தனியனாகக் களத்திற்கு வருகிறான் என்கிறார் புலவர்!

கழகமோ, கடமையெனும் கட்கமேந்தி, கண்ணியமெனும் கவசம் பூண்டு, கட்டுப் பாடெனும் கேடயங்கொண்டு, தனிமையில் விடப்பட்ட போதிலும் தளரா உறுதியுடனும் ஊக்கத்துடனும் எதிர்ப்புகளைப் புறங்கண்டு வெற்றிப் புன்னகை கொட்டுகிறது.

இடையிலுள்ள ஒரு எழுத்து அகன்றால் வெற்றி; வெறி ஆகிவிடும்! அதற்கு என்றுமே இடம் தராது அரசியல் பெருந்தன்மை போற்றிட வேண்டும்.

இந்தப் பண்பாட்டை நமக்கு உணர்த்தியவர் தான் நமது தலைவர் அண்ணா!

அந்தத் தலைவருக்குத் தலைவர்தான் பெரியார்!

அன்புடன்,

29-8-76 **மு. க.**

(05-08-1991)

1775. நெருக்கடி காலக் கடிதங்கள் - 37 : இது விஞ்ஞான யுகம்; வீணர்கள் யுகமல்ல!

(அண்மையில் ஒரு மௌன சாமியார் ஊரை ஏமாற்றிக் கொண்டு திரிந்து மாணவிகளைக் கற்பழித்தார் என்ற செய்தி வந்தது. இதுபோன்ற கொடுமைகள் மக்களின் மூடநம்பிக்கையால் நாளும் வளர்ந்து கொண்டே யிருக்கின்றன. கடவுள் பெயரைச் சொல்லி மக்களை மாக்களாக்கும் இத்தகைய மனிதர்களை அடையாளம் கண்டு கொண்டு சமுதாயத்தை திருத்திட இளைஞர்கள் முன்வரவேண்டும் என்பதற்காக 1976-ல் எமர்ஜன்சி நேரத்தில் கலைஞர் எழுதிய கடிதம் இன்றைக்கும் பொருத்தமாகவே இருக்கிறது.)

உடன்பிறப்பே!

நமது கழகத்தின் தலையாய கொள்கைகளில் ஒன்று மூட நம்பிக்கைகளை வேரறுத்து மக்களைப் பகுத்தறிவு புரியை நோக்கிப் பயணம் நடத்துவதற்குத் துணைபுரிவதாகும்.

நமது அரசியல் பொருளாதாரத் துறைப் பணிகளுக்கிடையே சமுதாய சீர்திருத்தப் பணியையும் தொடர்ந்து நிறைவேற்றி வருகிறோம்.

மூட நம்பிக்கைகளை வைத்துப் பிழைப்பு நடத்துகிறவர்களுக்கு சமுதாயத் துறையில் நாம் எடுத்துச் சொல்லுகிற புரட்சிகரமான கருத்துக்கள் எட்டிக்காய்களாகத் தெரிகின்றன. எனவே அவர்கள் நமக்குப் பகைவர்களாவதில் வியப்பில்லை. சில வேண்டாத நம்பிக்கைகளுக்குத் தங்களை ஆளாக்கிக் கொண்டவர்களுக்கு நாம் விளக்கமளிக்கிறோம். அதற்காக அவர்களை நாம் வெறுப்பதில்லை. ஆனால் அந்த மூட நம்பிக்கைகளைத் தாங்கள் வாழ்வதற்கேற்ற மூல தனமாக்கிக் கொண்டு மற்றவர்களை மடமையில் ஆழ்த்தித் தொடர்ச்சி கெடாத

சுகபோகங்களை அனுபவிக்கிறவர்களை சமுதாயத்தின் முன்னே அடையாளங் காட்டுவது இன்றியமையாத கடமையாகிறது.

ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்று தொடங்கி, அத்துடன் நில்லாமல் ஆயிரம் சாதிகள், ஆயிரம் கடவுள்கள் என்று விரிவடைந்த காரணத்தினால்தான் ஆயிரம் தெய்வங்கள் உண்டென்று தேடி அலையும் அறிவிலிகாள்! என்று சுப்பிரமணிய பாரதியார் வேதனைக் கவிதையொன்றை இயற்றினார்.

“எங்கள் தேவர் உங்கள் தேவர் என்றிரண்டு தேவரோ
இங்குமங்குமாய் இரண்டு தேவரோ இருப்பரோ
அங்கும் இங்கும் ஆகிநின்ற ஆதிமூர்த்தி ஒன்றலோ”

என்று சிவவாக்கியார் ஆணித்தரமாகக் கேட்டு மதப்பூசல்களை மறுத்ததும் மூட நம்பிக்கையின் வேகமான வளர்ச்சியைத் தடுத்து நிறுத்திடத்தான்!

ஆண்டவன்கன்!

ஆலயங்கள்!

தீர்த்தங்கள்!

திருவிழாக்கள்!

இப்படி வளர்ந்ததோடு நிற்காமல், அற்புதங்களைச் செய்து காட்டும் அவதாரப் புருடர்கள் அடிக்கடி தோன்ற ஆரம்பித்து விட்டார்கள். அந்த அவதாரப் புருடர்களுக்கு அவரவர்களின் அந்தஸ்து, அவரவர்கள் தேடிக்கொண்ட வசதி, இவைகளுக்கு ஏற்ப விளம்பரங்கள்!

அந்த விளம்பரங்களில் மயங்கி அவர்களைத் தேடிச் செல்ல மக்கள் கூட்டம்!

அப்படிப்பட்டவர்கள் தங்கம் கடத்துகிறார்கள், அல்லது தங்கப் பாளங்களைப் புதைத்து வைத்திருக்கிறார்கள், அல்லது கள்ளக் கடத்தலில் ஈடுபடுகிறார்கள், கற்பழிக்கிறார்கள் என்ற செய்திகள் வருகிறபோது தீவிர நடவடிக்கை எடுக்கிற அரசு, அந்த அவதார புருடர்கள் அற்புதங்கள் செய்வதாக மக்களை ஏமாற்றுவதும் கள்ளக் கடத்தல் போன்ற பெரிய மோசடிதான் என்று அதனையும் பெருங் குற்றப்பட்டியலிலே சேர்த்து நடவடிக்கை எடுத்திட முன்வருமேயானால், இந்த மாய மனிதர்கள் தங்கள்

போலி வேடத்தைக் கலைத்துத் திருந்தி விடுவார்கள் என்பதில் ஐயமில்லை.

பெரிய அளவில் நடைபெறுகிற அற்புதத் திருவிளையாடல்களில் ஐயாயிரம் பத்தாயிரம் எனக் கொடுத்து ஏமாறுகிற வசதி படைத்தவர்களைப்போலவே; சிறிய அளவில் நடைபெறுகிற சிலுவைக் குழந்தை - செவி வழியாகத் தேனும் திருநீறும் வரவழைக்கும் சிறுவன் என்ற அற்புதங்களில் ஆயிரக்கணக்கான ஏழை மக்கள் காசையும் தொலைத்து அறிவையும் இழந்து திண்டாடுகிறார்கள்.

உடன்பிறப்பே,

இந்த ஏமாற்று வேலைகளைப் பற்றி நான் ஏற்கனவே பலமுறை கடிதங்களின் வாயிலாகத் தெளிவுபடுத்தியிருக்கிறேன். இப்போது பெங்களூரில் வித்தைக் காட்டிக் கொண்டிருந்த சிறுவனைப் பற்றிய மோசடிகள் அம்பலமாகியுள்ளன.

அற்புதங்கள், மூட நம்பிக்கைகள் பற்றி விஞ்ஞான ரீதியாக ஆராய்ந்து உண்மையைக் கண்டுபிடிப்பதற்காக பெங்களூர் பல்கலைக் கழகம் அமைத்துள்ள குழுவைச் சார்ந்தவர்கள், சாதாரண பக்தர்களைப் போல் உடையணிந்து கொண்டு அந்தச் சிறுவனை வைத்து அற்புதங்கள் நடத்தும் இடத்துக்குப்போய் பல கேள்விகளைக் கேட்டு அவனைத் திணற அடித்திருக்கிறார்கள்.

அவன் சொன்ன பதில் முழுதும் தவறாக இருந்திருக்கிறது. பிறகு அவன் காதிலிருந்து விபூதி கொட்டப் போவதை அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கிறார்கள். அந்த விஞ்ஞானக் குழு உறுப்பினர்களில் ஒருவரான திருமதி வினோதா மூர்த்தி அந்தச் சிறுவனின் பனியன் மடிப்புக்குள் விபூதிப் பை மறைக்கப்பட்டிருப்பதை கண்டுபிடித்து விட்டார். மோசடி அம்பலமாகி விட்டது. அந்த விஞ்ஞானக் குழுவில் சென்ற ஏழு பேரும் இந்த மூட நம்பிக்கையை மக்களுக்கு அம்பலப்படுத்தும் வகையில் அறிக்கை விடுத்திருக்கிறார்கள்.

அத்துடன் அவர்கள், புட்டபர்த்தி சாயி பாபாவுக்கும் ஒரு அறைகூவல் கடிதம் எழுதி அவரிடமிருந்து பதில் வராததால் அந்த விபரங்களையும் பெங்களூர் பல்கலைக் கழக மூடநம்பிக்கை ஆய்வு விஞ்ஞானக் குழுவினர் ஏடுகளுக்கு விளக்கமாகத் தந்துள்ளனர்.

புட்டபர்த்தியில் சாயிபாபா நடத்துவதாகச் சொல்லப்படும் அற்புதங்களைப் பற்றி ஆய்வு நடத்த மூடநம்பிக்கை ஆய்வுக் குழுவின் சார்பில் எங்களைச் சந்திக்க ஜூன், ஜூலை மாதங்களில் ஒரு நாளைக் குறிப்பிட்டுத் தருமாறு புட்டபர்த்தி சாயிபாபாவுக்கு நாங்கள் மூன்று கடிதங்களை எழுதினோம். ஆனால் ஒரு கடிதத்துக்குக் கூட பாபாவிடமிருந்து பதில் வரவில்லை. அந்த மூன்று கடிதத்துக்கும் பாபாவிடமிருந்து பதில் வராததால் நாங்கள் கடைசி கடிதத்தில் பாபாவுக்கு குறிப்பிட்டிருந்ததைப் போல் அதைச் செய்தியாளர்களிடம் வெளியிட வேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டது.

ஜூன் 2-ம் தேதி பாபாவுக்கு குழு சார்பாக எழுதிய முதல் கடிதத்தில் நாங்கள் குறிப்பிட்டிருந்ததாவது:

நாட்டு மக்கள் நலனையும், நாட்டு நலனையும் கருதி, மகான் என்று சொல்லப்படும் உங்கள் ஒத்துழைப்பை நாடுகிறோம். உங்களை கடவுள் என்றும் அவதார புருஷர் என்றும், ஒன்றுமே இல்லாமல் எதையாவது வரவழைத்துக் கொடுக்கும் சக்தி உள்ளவர் என்றும் கூறப்படுகிறது. அதுபற்றி நாங்கள் ஆராய்ச்சிபூர்வமாக உண்மையைக் கண்டறியவும் தங்களோடு கலந்து பேசவும் தாங்கள் ஒத்துழைத்து தேதி, நேரம் ஆகியவற்றை அறிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். இந்த முதல் கடிதத்துக்கு பாபாவிடமிருந்து எந்த பதிலும் வரவில்லை.

ஜூன் 16-ம் தேதி எழுதப்பட்ட இரண்டாவது கடிதத்தில் குறிப்பிட்டதாவது:-

முதல் கடிதம் கிடைத்திருக்கும் என்று நினைக்கிறோம். தயவுசெய்து தேதியை உடன் அறிவிக்கவும். இதற்கும் பாபாவிடமிருந்து பதில் இல்லை.

ஜூலை 5-ம் தேதி அன்று குழு சார்பாக பாபாவுக்கு எழுதப்பட்ட கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது:-

நாங்கள் எழுதிய கடிதத்திற்கு தங்களிடமிருந்து பதில் வராதது வருந்தத்தக்கது. கடவுள் அவதாரம் என்று சொல்லப்படும் நீங்கள், உங்கள் அற்புதத்தை நாங்கள் அம்பலமாக்கிய அடுத்த ஐந்தாவது நிமிடமே சாதாரண சராசரி மனிதராகி விடுவீர்கள் என்று அஞ்சுகிறீர்கள் போலும்.

நாங்கள் சாதாரண மனிதர்கள் என்றும், எங்களை ஒரு கடவுள் அவதாரம் எப்படி சந்திப்பது என்றும் நீங்கள் சொன்னதாகக் கேள்விப்பட்டோம், அந்த வாதம் கோழைத்தனமாகும்.

தான் யார், என்ன செய்கிறோம் என்பதை ரகசியமாக வைக்காமல் ஊருக்கு வெளிப்படுத்துவதுதான் யோக்கியமான மனிதனின் கடமை. ஊரை சுலபமாக ஏமாற்றலாம்; ஆனால் மனசாட்சியை ஏமாற்றிவிட முடியாது. புத்தரும், காந்தியும், விவேகானந்தரும் தங்களைப்போல் எதையும் மூடி மறைக்காமல் தங்கள் வாழ்க்கையைத் திறந்த புத்தகமாக வைத்திருந்தார்கள்.

தங்களுடைய வாழ்க்கை மர்மங்கள் நிறைந்ததாக இருக்கிறது. உங்களைப்போன்ற மோசடிப் பேர்வழிகளின் வலையிலே சிக்கித் தவிக்கும் பாமர மக்கள் ஏராளம் உண்டு. உண்மைதான் கடவுள் என்ற ரகசியம் பாவம் என்றும் மகான்கள் சொல்லியிருக்கிறார்கள். எனவே உண்மையை நாங்கள் ஊருக்கு உணர்த்த எங்களைச் சந்திக்க உடன் தேதி அறிவியுங்கள். இதற்கும் பதில் இல்லையேல் கடிதங்களை பொது மக்களுக்கு அம்பலமாக்குவோம்! இந்த மூன்று கடிதங்களுக்கும் பாபா பதில் எழுதாததால் நாங்கள் இதை வெளியிடவேண்டிய நிலை ஏற்பட்டு விட்டது.

இந்த விளக்க அறிக்கையின் தொடர்பாகப் பெங்களூர் பல்கலைக் கழக துணைவேந்தர், சாயிபாபா அவர்களின் அற்புதங்களின் மீதுள்ள நம்பிக்கையைத் தெரிவித்துத் தனது கருத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்.

பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும் சுயமரியாதை இயக்கமும் நீண்ட பல ஆண்டுகளாகச் செய்து வந்த மூடநம்பிக்கை ஒழிப்புப் பிரச்சாரத்துக்குக் கிடைத்துள்ள மாபெரும் வெற்றியாகும் இந்தச் செய்தி!

அதை வரவழைக்கிறேன், இதை வரவழைக்கிறேன், ஒருவளை ஊமையாக்குகிறேன், ஒரு ஊமையைப் பேச வைக்கிறேன், நினைத்ததை நடக்க வைக்கிறேன் என்றெல்லாம் சொல்வது உண்மையானால், அரசாங்கம் பல கோடி ரூபாய் செலவழித்து மக்களுக்குத் திட்டங்கள் தீட்ட வேண்டியதில்லையே! நாட்டுப் பாதுகாப்புக்காக ராணுவம் தேவையில்லை! நாலு அற்புதவாதிகளைப் பிடித்து எல்லையில் நிறுத்தினால் போதுமானது - எதிரிகளே வராமல் தடுத்து விடலாம்.

இப்படி ஆழமாகச் சிந்திப்பதை விட்டு, மக்கள் தங்களுக்கு ஏற்படும் துன்பங்களை சுலபமாகப் போக்கிக் கொள்ள இப்படிப்பட்டவர்களிடம் ஏமாறுகிறார்கள்.

இந்த ஏமாற்றத்திலிருந்து மக்களைக் காத்திடவும், மோசடிக்காரர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் அரசு முன் வர வேண்டுமென்பதே நமது ஆசையாகும்.

முற்றும் துறந்தவர்களாக முகமூடி தரித்துக் கொண்டு மோசடியில் ஈடுபடுபவர்களை மக்கள் முன் நிறுத்தினால் தான் பகுத்தறிவுள்ள சமுதாயம் மலரும்!

இது, 40 கோடி மைல்களுக்கு அப்பால் இருக்கும் செவ்வாய் கிரகத்தில் மண் தோண்டியெடுத்து பூமிக்குக் கொண்டுவர முயற்சி நடைபெறுகிற விஞ்ஞான யுகம்! இந்த யுகத்தில் நாம் வீணர்களை வளர்த்து மக்களின் அறிவு வளர்ச்சியை வீழ்த்திவிடக் கூடாது!

அன்புடன்,

24-7-76

மு. க.

(06-08-1991)

1776. நெருக்கடி காலக் கடிதங்கள் - 38 : விதியே! விதியே! என் செய நினைத்தாய்?

உடன்பிறப்பே!

பாரதியார் பாட்டுக்கள் சிலவற்றை நினைவுக்குக் கொண்டு வந்தேன். விதி எனப்படும் ஒன்றை அழைத்து அவர் வேதனையுடன் வினவுகிறார். நெஞ்சை உருக்கச் செய்யும் கவிதை, எட்டயபுரத்துச் சிறு வீட்டில் எழுதியதோ? எழிலார் புதுவையின் கடற்கரையில் அமர்ந்து கர்ச்சனை புரிந்ததோ? எனக்குத் தெரியாது! ஆனால் எழுச்சியும் ஏக்கமும் பின்னிப் பிணைந்த பாடல் அது. எட்டயபுரத்தில் பாரதி பிறந்த வீட்டைத் தமிழக அரசின் சார்பில் தேசிய நினைவுச் சின்னமாக ஆக்குகிற விழாவுக்கு இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு சென்றிருந்தேன். ஆலயத்துச் சுற்றுச் சுவருக்குப் பக்கத்தில் அழகியதோர் அக்கிரகாரத்தில் அந்தச் சிறு வீடு அமைந்திருக்கிறது. அதனை நமது அரசு விலைக்கு வாங்கி நினைவுச் சின்னமாக ஆக்கியுள்ளது. பாரதியின் கையெழுத்துப் பிரதிகளை அங்கு கண்டேன். மணி மணியான எழுத்துக்கள், அவர் பயன்படுத்திய பொருட்களும் அங்கு சேகரித்து வைக்கப் பெற்றுள்ளது. உள்ளே நுழைந்ததும் கண்ணில் படுவது ஈட்டி போன்ற ஒரு கருவி, பாரதியார் உலவச் செல்லும்போது கையில் எடுத்துக் கொண்டுதான் போவாராம். அவர் வெறும் வீராப்புக் கவியல்ல! உணர்ச்சிகளை எழுத்தில் கொட்டுகிறவர் மட்டுமல்ல; உணர்ச்சியுள்ள உள்ளமும் படைத்தவர்.

சில கவிஞர்கள், எழுத்தாளர்கள் இருக்கிறார்கள்; ஏன் பேச்சாளர்கள்கூட இருக்கிறார்கள்; வாய் வீரம்தான்! வார்த்தை வீரம்தான்! வந்தது எதிர்ப்பு என்றால் வளை தேடும் மனிதர்கள்தான்.

அப்படிப்பட்டவரல்ல பாரதி - ஆண்மையாளர்! ஆற்றலாளர்! வீர நெஞ்சுக்குச் சொந்தக்காரர்! அந்த நெஞ்சத்திலும்கூட சில நேரங்களில் சோகம் பெருக்கெடுத்திடக் காண்கிறோம். தன் எதிரேயுள்ள நிலைமைகளை எண்ணுகிறார். கொதிப்படைகிறார்.

பாரத சமுதாயம் வாழ்கவே! எனப் பாடிய பாரதி - மனிதர் உணவை மனிதர் பறிக்கும் வழக்கம் இனியுண்டோ? மனிதர் நோக, மனிதர் பார்க்கும் வாழ்க்கை இனியுண்டோ? என்று கோபம் கொப்பளிக்கக் கேட்ட பாரதி, தாயின் மணிக்கொடி பாரீர் - அதைத் தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட வாரீர் என நாட்டுக் கொடி வாழ்த்துரைத்த பாரதி - உலகெங்கும் பற்பல இடங்களில் பரவிக் கிடக்கும் தமிழ்ச் சமுதாயத்திற்காகவும் பெருமூச்சுக் கவி பாடுகிறார்.

அப்போதுதான் நான் தொடக்கத்தில் குறிப்பிட்டவாறு விதியே! என அழைக்கிறார்.

“விதியே! விதியே! தமிழ்ச் சாதியை
என்செய நினைத்தாய் எனக் குரையாயோ
சார்வினுக் கெல்லாம் தகத் தக மாறித்
தன்மையும் தனது தர்மமும் மாயாது
என்றுமோர் நிலையா யிருந்து நின்அருளால்
வாழ்ந்திடும் பொருளோடு வகுத்திடுவாயோ?
தோற்றமும் புறத்துத் தொழிலுமே காத்து மற்று
உள்ளுறு தருமமும் உண்மையும் மாறிச்
சிறைவுற் றழியும் பொருள்களில் சேர்ப்பையோ?
அழியாக் கடலோ? அணிமலர்த் தடமோ?
வானுறு மீனோ? மானிகை விளக்கோ?
கற்பகத் தருவோ? காட்டிடை மரமோ?
விதியே! தமிழ்ச் சாதியை எவ்வகை
விதித்தாய் என்பதன் மெய்யெனக் குணர்த்துவாய்”

உடன்பிறப்பே! விதியைப் பார்த்து எத்துணை வேகத்தோடு வினவுகிறார் பார்த்தாயா வேதனையை அடக்கிக் கொண்டு! பெரிய பாடல் அது! தமிழ்ச் சமுதாயம் தனக்குரிய அடிப்படை உணர்வுகளை இழந்துவிடக் கூடாது என்பதை வலியுறுத்தவும், போலிச் சாத்திரங்களுக்கு அடிமைகளாகி விடக்கூடாது என்பதை வற்புறுத்தவும், எழுதப்பட்ட பாடல் அது!

விதி எனப்படும் ஊழ்வினை பற்றி கருத்து மாறுபாடுகள் இருப்பினும்; பாரதி பாடுகின்ற முறையில் எவ்வளவு உருக்கம் மேலிடுகிறது.

"விதியே! விதியே! தமிழ்ச் சாதியை
என்செய நினைத்தாய் எனக்குரை யாயோ"

அடடா! அப்படியே நெஞ்சில் பதிந்து நிலைபெற்ற கேள்விக் குறியாக நிற்கிறதே - இந்த வரிகள்! எத்தனை ஆண்டுகளுக்கு முன்பு அந்தக் கவிச் சக்கரவர்த்தி கண்ணீர் மல்கிடக் கேட்டிருக்கிறார்.

பாரதி போன்ற கவிஞர்களின் எழுத்துக்கள் சாகா வரம் பெற்றவைதான்; சந்தேகமில்லை. அதற்காக நிலைமைகளும் சாகாவரம் பெற்றவைகளாக இருந்திடலாமோ? பாரதியின் கனவை நிறைவேற்றிட வேண்டாமோ?

"சேமமுற வேண்டுமெனில்
தெருவெல்லாம் தமிழ்முழக்கம் செழிக்கச் செய்வீர்!"

இந்தக் கனவு நிறைவேற வேண்டுமென்பதற்காகத்தானே விதியை நொந்து கொண்டார் பாரதி!

அதனை நீ உணர்ந்து கொண்டால் போதுமானது.

அன்புடன்,

19-3-76 **மு. க.**

(07-08-1991)

1777. நெருக்கடி காலக் கடிதங்கள் - 39 : செஞ்சீனம் கண்ட சிங்கம்!

(மாசேதுங்கின் தியாகம் - சொல்லாற்றல் - கவிதையுள்ளம் - இவற்றில் கலைஞருக்கு என்றுமே தணியாத மோகம் உண்டு! இளம் பிராயத்தில் இயக்க மேடைகளில் பேசும்போதே மாசேதுங்கின் தியாக உணர்வினையும் போர்க்குண வாழ்வையும் கலைஞர் குறிப்பிடத் தவறுவதில்லை. அந்த மாவீரன் மறைந்ததையொட்டி எமர்ஜன்சி நேரத்தில் தணிக்கைக்கு உட்பட்டு 1976-ல் கலைஞர் முரசொலியில் எழுதிய கடிதம் இது.)

உடன்பிறப்பே!

கூரிய முட்கள் கைகளைக் கீறிடினும் மலர் கொய்யத் தாவும் குமரியின் கரங்கள்.

மூச்சை நிறுத்திவிடும் பயங்கர அலைகள் இருப்பினும் முத்தெடுக்க முனையும் மனித முயற்சி.

பாறைகள் இடிந்து உடலை நசுக்கிவிடும் என்பதறிந்தும் பொன் எடுக்கச் சுரங்கம் தோண்டும் மானிட சாதி.

மலரும், முத்தும், பொன்னும் இலட்சியங்களாகின்றன. முள்ளும், கடலும், பாறையும் இலட்சியத்தை அடையும் முயற்சியில் குறுக்கிடும் இன்னல்களாகின்றன.

இன்னல்களுக்கு அஞ்சாத பண்பு பெற்றவன் இலட்சியப் பாதையில் நடந்து கொண்டேயிருக்கிறான்.

அப்படி நடந்து சென்ற உலகத்துப் பெரும் தலைவர்களில் ஒருவர்தான் மா சே துங்.

கொடுமைகள், கோர நர்த்தனம் செய்த போதும் அவர், குதூகலமாகத்தான் தன் பயணத்தை நடத்தினார்.

அவருக்குத் தெரியும், தான் ஏற்றுக்கொண்ட வேலை - சருக்கு மரம் ஏறும் கதையென்று! குமுறிவரும் வெள்ளப் பெருக்கில் எதிர்நீச்சல் போடும் செயல் என்று!

எனினும் பாசி பிடித்த குருதிக்குட்டைகளாக - உளுத்துப்போன எலும்புக் கூடுகளாக - செல் மொய்த்த நரம்புக் கூண்டுகளாக - மக்கள் வாழ்வதை அவரால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

சீன நாட்டில் சாவ்சன் என்ற சிற்றூரில் ஏழை விவசாயக் குடும்பமொன்றில் பிறந்த மா சே துங், இளமைப் பருவத்திலேயே இலட்சியச் சுடராக ஒளிவிட்டு மாணவர்களையும் தொழிலாளர்களையும் ஒன்று சேர்த்து அரசியல் விழிப்புக்குக் குரல் கொடுத்த சேவலாக விளங்கினார்.

பொங்கிவரும் எதிர்ப்புக்களைப் புன்னகையால் சந்திப்பதும், தடைகளை, படைகளை, தாக்கிடும் கணைகளைத் தாங்கிடத் தன் இதயத்தைத் தயார் நிலையில் வைத்திருப்பதும், அந்தத் தியாகத் திருமகனாம் மா சே துங்கிற்குக் கூடப் பிறந்த குணங்களாகி விட்டிருந்தன.

அவரது தளராத உறுதிக்கும், தயங்கிடாத நெஞ்சுக்கும், தன்னலமற்ற சேவைக்கும் தலையாய எடுத்துக்காட்டாக வரலாற்று வரிகளில் வைர மணி எழுத்துக்களில் மின்னிக் கொண்டிருப்பதுதான் அவர் நடத்திக் காட்டிய நீண்ட பயணம் எனப்படும் புரட்சி அணி வகுப்பாகும்.

அந்தப் பயணத்தின்போதுதான் அவர் துணைவி, ஒரு பெண் குழந்தையை ஈன்றெடுத்தார். அதனையும் தூக்கிக்கொண்டு பயணத்தைத் தொடருவது இயலாதெனக் கருதி அந்தச் சிசுவை ஒரு விவசாயி வீட்டில் விட்டுச்சென்றனர். ஆனால் அவர் சீனத்தின் அதிபரான பிறகு கூட அந்தப் பெண்குழந்தை கிடைத்திடவில்லை என்று கூறுவர்.

அவரது நெஞ்சுறுதிக்கும் அஞ்சாத தன்மைக்கும் அண்மையில் பீகிங் நகரை உலுக்கிய பூகம்ப நிகழ்ச்சியின்போது அவர் காட்டிய வீரமே சான்றாகும்.

இலட்சக்கணக்கான மக்களை அந்தப் பூகம்பம் பலி கொண்டது. வெளிநாட்டுக் கார்கள் தலைநகரிலிருந்து வெளியேறினார்கள். அந்தப் பயங்கரம் மிகுந்த நேரத்திலே கூட

மா சே துங், தலைநகரைவிட்டு வேறெங்கும் சென்று தங்கிட விரும்பவில்லை.

பாட்டாளி வர்க்கத்தை வாழவைக்க மார்க்ஸ் படைத்திட்ட தத்துவங்களை சீன நாட்டுக்கு ஏற்ற வகையில் கையாள்வதாக அவர் முழக்கம் செய்தார்.

சியாங்கே ஷேக்கிற்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்தி, சீனத்தைச் செஞ்சீனமாக்கி, தனது எண்பத்து மூன்றாவது வயது வரையில் எவராலும் அசைக்க முடியாத தலைவராகவும், சீனத்தின் அதிபராகவும் விளங்கிய அந்த அரிமா, மறைந்து விட்டது.

அவர் மறைந்துவிட்டதாக எத்தனையோ முறை வதந்திகள் பரவின. அதனால், இப்போது அவர் உண்மையாகவே மறைந்தபோது மக்களால் நம்ப முடியவில்லையாம். செய்தி உறுதியான பிறகு சீன மக்கள் கண்ணீர் உகுத்தனராம். சிவப்பு நிறக் கொடியை செவ்வானத்து முகட்டில் ஓங்கிப் பிடித்த தங்கள் தலைவரது பிரிவை அவர்களால் தாங்கிக் கொள்ள முடியாதுதான்!

சூ என் லாய் - சூடே - இருவரது பேரிழப்பைத் தொடர்ந்து மிகப்பெரும் இழப்பாக மா சே துங்கின் இழப்பு அமைந்து விட்டது, சீன நாட்டுக்கு.

பாட்டாளிகளின் சர்வாதிகாரம் என்ற தலைப்பில் அரசியல் அமைப்புகள் உருவாகியுள்ள சீனா போன்ற நாடுகளின் மக்கள் வாழ்வு, ஆவர் தம் உரிமைகள், இவைகளைப் பற்றி நமக்கு முழு விபரங்கள் கிடைத்திடவில்லையென்றாலும் மக்களின் மனங்கவர்ந்த மாபெருந்தலைவராக மா சே துங் விளங்கினார் என்பதையும், அனைத்துலக நாடுகளின் கவனத்தை ஈர்க்கும் சில பெரிய நாடுகளில் ஒன்றாக சீனத்தை உயர்த்திய பெருமைக்குரியவர் என்பதையும் - யாரும் மறந்திட முடியாது.

தீராத பிரச்சினைகள் - தினம் ஒரு கருத்து வேறுபாடு - இவைகளுக் கிடையிலேயும் அனைத்தும் கடந்து நிற்கும் மா சே துங் போன்ற தலைவர்களின் தியாக வாழ்வு - வீர வரலாறு - ஆகியவை என்றென்றும் மறையாத உணர்ச்சிக் காவியங்களாகி விடுகின்றன. கொள்கை வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு; குன்றென நிமிர்ந்து நிற்கும் தீரத் திருஉருவங்களைப் புகழ்வதும் - போற்றுவதும் - அரசியல் பண்பாட்டுக்குரிய ஒன்றாக இருக்கும்போது, அடித்தளத்து மக்களைக் கைதூக்கிவிடவும்

- தொழிலாளி வர்க்கத்திற்குத் துணை புரியவும் - தன்னையே அர்ப்பணித்துக் கொள்ளக்கூடிய - வீரமிக்கப் பொதுவாழ்வைத் தொடங்கி, அதனைத் தொடர்ந்து இறுதியில் வெற்றியும் பெற்ற மா சே துங்கின் மறைவு, நமக்கு அதிர்ச்சியூட்டக்கூடிய ஒன்றாக இருப்பதில் வியப்பென்ன?

நூறு மலர்கள் பூக்கட்டும் என்று சீனப் பொதுவுடைமைப் பூங்காவில் கூறிய தாய்மலராக அவர் விளங்கினார். அந்த மலர் வாடி விழுந்து விட்டது இன்று! ஆனால் அது பரப்பிய மணம் மாறாது - மறையாது!

அன்புடன்,

10-9-76

மு. க.

(08-08-1991)

1778. நெருக்கடி காலக் கடிதங்கள் - 40 : வியட்நாமின் வீரவரலாறு!

(தணிக்கை அதிகாரிகளின் தர்பார் - நெருக்கடி சட்டங்களின் உறுமல் - அடக்குமுறை - இன்னோரன்ன கொடுமையான சோதனைகளுக் கிடையே கலைஞர் அவர்கள் முரசொலியில் நாள்தோறும் கடிதங்கள் எழுதினார். அவை நூற்றுக்கணக்கில் இருக்கும். இன்று வெளியிடப்படுவது 40-வது கடிதம். கலைஞர் கடிதங்கள் பத்து தொகுப்புகளாக புத்தக வடிவில் வெளிவந்துள்ளன. இன்னும் வெளிவர இருக்கின்றன. எனவே இந்த 40-வது கடிதத்துடன் நெருக்கடி காலக் கடிதங்கள் என்ற இந்த வரிசையை இத்துடன் நிறுத்துகிறோம்.

- ஆசிரியர், முரசொலி.)

உடன்பிறப்பே!

(VIETNAM - HISTORICAL SKETCH) வியட்நாம் - ஒரு வரலாற்று வரைவு என்ற நூலைப்படிக்கும் வாய்ப்பு கிட்டியது எனக்கு! ஆண்டுக் கணக்கில் அமெரிக்கப் போர்த்தளவாடங்களின் எதிர்ப்பைச் சமாளித்து கோசிமின் தலைமையிலே திரண்டெழுந்த மக்கள் சக்தி இறுதியாகச் செங்குருதியில் தோய்ந்த வெற்றி மணிக்கொடியை, தன் வீறு கொண்ட கரங்களிலே தூக்கிப் பிடித்த நிகழ்ச்சி என்றாவது ஒரு நாள் ஆதிக்கக்காரர்களுக்குப் பாடம் கிடைத்தே தீரும் என்பதற்கான சான்றாக அமைந்ததை உலகம் அறியும்.

வானை வளைத்துக்கொண்டு அமெரிக்க விமானங்கள் குண்டுமாரி பொழிந்த காட்சிகளும்; வயல் வெளிகளில் நின்றவாறு தங்கள் திண் தோள்களை உயர்த்தி வியட்நாம் மக்கள் அவைகளை சமாளித்த வீரகாவியங்களும் அந்நாட்டு வரலாற்றில் வைர எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய நிகழ்ச்சிகளாகும்.

வியட்நாமியர்கள், இன்று நேற்றல்ல - ஏறத்தாழ நாலாயிரம் ஆண்டுக்காலமாக ஏதோ ஒரு போராட்டத்தில் ஈடுபட்டே தீரவேண்டியவர்களாகி விட்டார்கள்.

நூலாசிரியர் ஒரு இடத்திலே அழகாகக் குறிப்பிடுகிறார்; கூந ஏநைவயேஅநளந டயனே ளை டி கசநநபகைவ கசடிஅ சூயவரசந அதாவது வியட்நாம் மக்களின் நிலம், இயற்கையின் மூலம் அந்த மக்களுக்கு வழங்கப்பட்ட வெகுமதி அல்ல! என்று உருக்கம் மேலிட உணர்ச்சி பொங்கிடக் கூறுகிறார்.

அங்குலம் அங்குலமாக அந்த மண்ணை வளப்படுத்தும் முயற்சியில் மக்கள் தொடர்ந்து பாடுபட்டார்கள். ஆண்டுக்கு ஆண்டு நூற்றாண்டுக்கு நூற்றாண்டு வியட்நாம் மக்கள் வெள்ளப் பெருக்கினோடும்; வறட்சி, புயல் போன்ற இயற்கைக் கொடுமைகளோடும் விடாது போர் நடத்த வேண்டியிருந்தது. ரத்தம், வியர்வை ஆகியவற்றைப் பாய்ச்சி அயராமல் உழைத்ததின் விளைவாகத்தான் அந்த மண்ணை செழுமை மிக்கதாகச் செய்திட முடிந்தது. இப்படியெல்லாம் வியட்நாம் மக்களின் கடும் போராட்டத்தையும், கடின உழைப்பையும் சித்தரிக்கிற நூலாசிரியர், டீநே நயளடைல ரனேநசளவயனேள றால ந ளை ளடி னநநயீடல யவவயஉநன வடி ளை டயனே என்று முடிப்பது இதய நாளங்களின் எழுச்சித் துடிப்பை எதிரொலிப்பதாய் அமைகிறது. ஒரு வியட்நாமியன் ஏன், தன்னுடைய நாட்டை இவ்வளவு ஆழமாக நேசிக்கிறான் என்பதை இந்த காரணங்களின் வாயிலாக, எளிதாகப் புரிந்து கொள்ள முடியும் என்பதே ஆசிரியரின் கருத்தாகும்.

இயற்கைச் சேட்டைகளை எதிர்த்து மட்டுமல்ல; பகைவர்களின் படையெடுப்புக்கள் பலவற்றையும் பல நூற்றாண்டுக் காலமாக சந்தித்து வாகை சூடிட வேண்டிய இக்கட்டான சூழ்நிலைகள் அந்த நாட்டுக்கு இடைவிடாது முளைத்துக் கொண்டேயிருந்தன. கணவன் மனைவிக்கிடையே உள்ள அன்பு எனினும், தாய் மகனுக்கிடையே எழுந்திடும் பாசமெனினும் - யாரோ ஒருவருக்கு அபாயம் ஏற்பட்டு அதிலிருந்து அவர்கள் மீண்டும் எழுகிறபோது முன்னைக் காட்டிலும் அதிகமாகி விடுகிறதல்லவா; அன்பும், பாசமும்!

சோதனைகளையும் வேதனைகளையும் தாங்கிக் கொண்டு தளராது பீடுநடை போட்ட வியட்நாம் மக்கள் தங்கள் திருநாட்டின் மீது அளவற்ற பாசத்தை பொழிந்தனர்.

சீனப் பேரரசர்களின் படையெடுப்புகளுக்கு ஆனாள நாடு கொள்ளைக் காரர்களின் கொடுமைக்கும், அடிமைப்படுத்தும் ஆதிக்கக்காரர்களுக்கும் ஈடு கொடுத்து நொந்து போன நிலைக்கு ஆளான நாடு!

அந்த நாட்டின் வீரக்கனலை அணைந்து விடாமல் காப்பாற்றிய பெருமை, ஆங்கு தோன்றிய இலக்கியங்களுக்கு உண்டு! கவிதை ஆர்த்த பாவலர் பெருமக்களுக்கு உண்டு!

தீரம் செறிந்த அந்த இலக்கியப் படைக்கலன்களை அந்நாட்டு மக்கள், தங்கள் இதயங்களில் ஏந்தியிருந்த காரணத்தால்தான், துப்பாக்கிக் குண்டுகள் வெடித்துக் கொண்டிருந்த சமயத்திலும், அமெரிக்கப் படைகளின் ஆரசாரம் மிகுந்திருந்த நேரத்திலும், விமானங்கள் மூலம் மனித வேட்டை நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையிலும், வியட்நாமில் உள்ள அகழ்வாராய்ச்சியாளர்கள் பூமியைத் தோண்டி பழங்கால வரலாற்று மனிதர்களைப் பற்றி ஆராய்ந்து கொண்டிருந்தார்கள். விஞ்ஞானிகள் அறிவுக் கூடங்களில் அமர்ந்து விஞ்ஞான ரகசியங்களைக் கண்டுபிடிப்பதில் முனைந்திருந்தனர். தலைவர்கள், எதிர்கால இருபதாண்டுக்கான ஆக்கப்பூர்வமான வளர்ச்சித் திட்டங்களுக்கான புதிய கண்ணோட்டத்தைச் செலுத்தினர் என்று வரலாறு செய்திகளைச் செதுக்கி காட்டுகிறது.

உடன்பிறப்பே, வியட்நாம் பற்றிய சில வரலாற்றுக் குறிப்புகளை நான் சுட்டிக் காட்டுவது வேறு எதற்காகவுமல்ல! மிக்க சிரமப்பட்டு, கஷ்ட நஷ்டங்களை அனுபவித்து, வியர்வையும், குருதியும் கொட்டி தொடர்ந்து சோதனைகளோடு போராடிய மக்கள், தங்களின் தேசத்தை எல்லாவற்றுக்கும் மேலாக மதிப்பார்கள் என்பதற்கு வியட்நாம் ஒரு எடுத்துக்காட்டு!

இந்த இலக்கணம், வியட்நாம் போன்ற நாடுகளுக்கு மட்டுமே பொருந்தக் கூடியவை அல்ல!

சற்று சிந்தித்துப் பார்! பல ஆண்டுக்காலமாகப் பல முனைகளிலே எதிர்ப்பைச் சந்தித்து, சுயமரியாதை இயக்கமாக, நீதிக்கட்சியாக, திராவிடர் இயக்கமாக, திராவிட முன்னேற்றக்

கழகமாக இயங்குகிற நமக்கும் நமது இயக்கத்தின் மீது அத்தகைய பற்றும் பாசமும் எழுகிறதல்லவா?

அவரவர் சார்ந்திருக்கிற ஒவ்வொரு இயக்கமும் அல்லது கட்சியும் எத்தனையோ சோதனைகளுக்கும், தியாகத்திற்கும் தன்னை ஆளாக்கிக் கொண்டிருக்கக்கூடும்.

அப்படிப்பட்ட கட்சிகளில் ஒன்றாக தி.மு.க. திகழ்கிறது! வேதனை நெருப்பில் சோதனைப் புயலில் நமது கழகம் தள்ளப்பட்ட போதெல்லாம் - வியட்நாம் மக்கள் சோர்வடையாமல் - தங்கள் சுகம் மறந்து, கழகத்தைக் காப்பாற்றியிருக்கிறார்கள்.

நமது தானைத்தலைவர் அண்ணாவை, அறுபதாம் ஆண்டு கூட அவருக்கு நிறைவடைவதற்கு முன்பு இழந்தோமே - அதைவிடப் பெரிய சோதனையா, இனிமேல் நமக்கு வரப்போகிறது!

வியட்நாமில் பழங்காலத்துப் போர் ஒன்றுக்கான வீரக்கவிதைகளைப் பாடுகிறார் ஒரு கவிஞர் பெருமகன். (Nguye Tra) கியென் இத்ரே என்பது அவர் பெயர்! மிங் என்றும் அயல் நாட்டு வம்சத்தினரின் ஆட்சியை அகற்றுகிற அந்நாளைய போர் ஒன்றில் மா என்ற ஆற்றங்கரையில் வியட்நாம் வீரர்கள் பெற்ற வெற்றியைக் குறிக்கும் கவிதை வரிகள் அவை!

அதில் ஒரு இடத்தில் கூறுகிறார்;

O ourcarot, the best seat was left empty, waitng for a talented General நமது ரதத்தின் உன்னதமான பீடம் ஆற்றல்மிக்க தளபதிக்காக வெற்றிடமாக விடப்பட்டுக் காத்திருக்கிறது என்று சோகத்தை வெளிப்படுத்துகிறார்.

உடன்பிறப்பே, நமது அண்ணன் மறைந்தபோது - நமது கழக ரதத்திலும் அதே நிலைதானே ஏற்பட்டது!

இன்றைக்கும் அந்த வெற்றிடம் நிரப்பப்பட்டு விட்டதாக நான் கூறவும் தயாராக இல்லை, நம்பவும் தயாராக இல்லை. அவ்வாறு நம்பி, என்னையே நான் ஏமாற்றிக் கொள்ளவும் தயாராக இல்லை.

எனினும், ரதம் ஓடிக் கொண்டிருக்கிறது! வெற்றிடத்தில் என்னைத் தூக்கி உட்கார வைத்திருக்கிறாய்! நாம் அனைவருமே அண்ணாவின் ஒவ்வொரு கூறாக இருக்கின்ற காரணத்தால் அந்த வெற்றிடம் நிரப்பப்பட்டது போல் கழகப் பணிகள் தொய்வின்றி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

தேர் ஓடுகிறது என்றால், தேர், தானாக ஓடுகிறது என்று பொருள் அல்ல! தேரை இழுக்கிறார்கள் அல்லது இயந்திரம் வைத்துத் தள்ளுகிறார்கள் என்று பொருள்!

அதுபோலத் தலைமையில் இருக்கிற நாங்கள், உன்னால் இழுக்கப்படுகிறோம் - எங்களை நீதான் செயல்பட வைக்கிறாய்! உன் ஆர்வமும், கொள்கைப் பற்றும்தான் கழகத்தைக் காத்திடுகிறது! அதைத்தான் நாள்தோறும் காண்கிறேன்!

வியட்நாம் மண் மீது, அந்த மக்களுக்கு ஏற்பட்ட பாசம், அவர்கள் உழைப்பாலே உயர்ந்த மண் என்பதால்!

உனக்கு கழகத்தின் மீதுள்ள பாசம், இது உன் உழைப்பாலே உயர்ந்தது என்பதால்! அல்லவா உடன்பிறப்பே!

அன்புடன்,

31-5-76

மு. க.

(09-08-1991)

1779. இணைந்து! நனைந்து! துணிந்து!

உடன்பிறப்பே!

உனக்கும் எனக்குமிடையில் நீண்ட நாட்கள் கடிதத் தொடர்பு இல்லையெனினும், நீ என் நெஞ்சிலும், நான் உன் நெஞ்சிலும் எவராலும் அகற்ற முடியாத இடத்தைப் பெற்றிருக்கிறோம் என்பது நூற்றுக்கு நூறு உண்மையல்லவா?

தாமதம் ஏற்பட்டு இந்தக் கடிதம் இத்தனை நாள் கழித்து உனக்குக் கிடைப்பதாகக் கருதத் தேவையில்லை. எனக்கோர் தயக்கம் ஏற்பட்டதே இதற்குக் காரணம்.

என்ன தயக்கம் எனக்கு? என்னைப் புரிந்து கொண்டுள்ள உனக்கு இது புரியாமல் இருக்காது! இருந்தாலும் எழுதி விடுகிறேனே! எழுதிவிட்டால் என் இதயச் சுமை பெரிதும் குறையும்!

உன்னிடம் எவ்வளவு வேலை வாங்கியிருக்கிறேன் நான்! என்னைத் தலைவனாக ஏற்றுக் கொண்ட ஒரே காரணத்திற்காக நீ சந்தித்துள்ள அடக்குமுறைகள்! சிறைவாசங்கள்! சித்ரவதைகள்!

1976 தொடங்கி 1989 வரையில் 13 ஆண்டுக் காலம் முள்ளின் மீது நடந்தும், நெருப்பாற்றைக் கடந்தும், இந்தக் கழகத்தைக் காப்பாற்றுவதற்கும், வலிவும் பொலிவும் சேர்ப்பதற்கும் நீ தந்த உழைப்பை, புரிந்த தியாகத்தை, எதிர்கொண்ட சோதனையை வேதனையை எண்ணிப் பார்க்கிறேன். இன்னுமா என் உடன்பிறப்புகளுக்கு உழைப்பு! உழைப்பு! ஓய்வற்ற உழைப்பு! தேவைதானா? சற்று ஓய்வு கொள்ளட்டுமே! என்று என் கடின இதயத்தில் தோன்றிய கனிவுதான், கடிதத் தொடர்பை இடையில் நிறுத்தியதற்குக் காரணம்!

இப்போது எழுதத் தொடங்கி விட்டேன். இனி என்ன ஆகும்? இருக்கின்ற பணிகளையெல்லாம் வரிசைப்படுத்தி உனக்குக் காட்டுவேன்.

பணி முடிக்க எழுக என் கண்மணியே என்பேன்! இது ஒரு தலைவனின் ஆணையாக மட்டுமிருந்தால், எள் முனையளவு தயக்கம்கூட உனக்கு இருக்கும் - ஆனால், இது ஒரு தாயின் நெஞ்சில் சுரக்கும் அன்பு வேண்டுகோள் என்கிற உணர்வு உனக்கு ஏற்பட்டு விடுகிறபோது, உண்ண - உறங்க - ஓய்வுகொள்ள என்றைக்காவது நீ எண்ணியதுண்டா? இல்லை! இல்லவே இல்லை!

அத்தகைய உன் உழைப்பால் உருவான இயக்கம்தானே இது! அதனால்தான் பூகம்ப நர்த்தனத்திற்கு மத்தியிலும் புழுதி மேடாகாத எஃகுக் கோட்டையாக எழுந்து நிற்கிறது!

தேர்தல் நிதி என்றேன். இன்று நமது இனமானப் பேராசிரியர் பொதுச் செயலாளராக இருக்கும் காலத்தில் மட்டுமல்ல, பேரறிஞர் அண்ணா பொதுச் செயலாளராக இருந்த அந்தக் கால கட்டம் முதல் என் வேண்டுகோளை நீ நிராகரித்ததில்லை.

கட்டிட நிதியா? களிப்புடன் திரட்டி அளித்தாய்!

கழக வளர்ச்சி நிதியா? கவலைப்படாதே இதோ தருகிறேன் என்றாய்!

விசாரணைக் கமிஷன் கொண்டு நம்மை துளைத்தபோது, நெருக்கடி காலம் - அந்த நேரத்திலும் பல நூறு கல் தொலைவிலிருந்து, பேருந்துகளில் சென்னைக்கு வீடு தேடி வந்து, என் கையில் நிதி வழங்கிச் சென்றாய்!

போராட்டம் எனிலோ, ஐம்பதாயிரம் பேர், இலட்சம் பேர் என சிறைக் கோட்டங்களில் உன்போன்ற உடன்பிறப்புகள் என்னுடன் இருக்கக் கண்டு என் இரு விழி மழை பொழிய இதயம் மகிழ்ந்து, இதுவன்றோ உயிருள்ள இயக்கம் எனப் பெருமிதம் கொண்டேன்.

இத்துணை உழைப்பையும், ஆற்றலையும் தந்து இந்த இயக்கத்தைக் கட்டிக் காப்பது எதற்காக?

இந்த மண்ணில் விளைந்துள்ள தமிழ்ச் சமுதாயம், தலை நிமிர்ந்து நின்று இந்த மண்ணின் மணத்தை, மன்பதையெங்கும் பரப்பிட வேண்டும் என்பதற்காகத்தானே!

என்னையும் உன்னையும் உணராதது மட்டுமல்ல. இந்தச் சமுதாயம் தன்னையும் மறந்து விட்டதே - இந்தச் சமுதாயத்திற்கு

உன்னை இன்னமும் உழைக்கச் சொல்வதோ என்ற பெருமூச்சுடன் கலந்த கேள்விதான் தயக்கத்திற்குக் காரணம்!

நோய் தீரவில்லையெனில், நோயாளியின் மீது குறைகண்டு, கோபங் கொண்டு என்ன பயன்?

நோய் தீர்க்கும் மருந்து கண்டு, அதனை அளித்து, அவன் நலம் பெறும் வரையில் சிகிச்சை வழங்குவதுதானே சிறந்த மருத்துவனின் கடமையாக இருக்க முடியும்!

உழைத்திடுக! தொண்டினைத் தொடர்ந்திடுக! என உத்தரவோ அல்லது தாய்மை உணர்வுடன் உருக்கமிகு வேண்டுகோளோ, எது என்னிடமிருந்து வரினும் நீ அதற்குத் தயார் என்று நான் அறிந்து வைத்திருந்த போதிலும்,

உத்தரவோ,

வேண்டுகோளோ

இவற்றில் எதனை நான் பிறப்பிப்பதற்கும் நீதான் எனக்கு உத்தரவிட வேண்டுமென்று காத்திருந்தேன்!

அதற்குள்ளாகவே நீ தயாராகி என்னைத் துளைத்தெடுக்க ஆரம்பித்து விட்டாய்!

உன்னை மட்டும் உழைக்கச் சொல்லிவிட்டு, என்றைக்காவது நான் ஒதுங்கியிருந்து வேடிக்கை பார்த்த நிகழ்ச்சி உண்டா?

“இணைந்து உழைப்போம்!
அன்பு மழையில்
நனைந்து உழைப்போம்!
தமிழ்ச் சமுதாயம் தலைநிமிரும் எனத்
துணிந்து உழைப்போம்!”

உடன்பிறப்பே, தொண்டு புரிவோர்க்கான அறிவுரையொன்று நமது அண்ணன் வழங்கியது நினைவுக்கு வருகிறது.

“திரட்டிக் காட்டக்கூடிய வேகம் அவ்வளவையும் துவக்கத்திலேயே கொட்டிக் காட்டிவிட்டு, நின்று - நிதானமாக - நீண்டகாலம் நெருக்கடிகளையேற்றுத் தொண்டாற்ற வேண்டிய நிலைமை ஏற்படும்போது, வேகம் குன்றிப்போய், சோர்வு தட்டிப் போகும் நிலையை

அடைவார்களானால் அவர்களால் இயக்கத்துக்குப் பலனில்லை. காகிதக் கப்பல் நொடியில் தயாராகி விடுகிறது. கொளுத்தி வைக்கப்படும் மத்தாப்பு, பளிச்சிட்டுக் காட்டுகிறது. ஒரு இயக்கத்தில் தொண்டாற்ற வேகம், வெடித்துக் கொண்டு வருவது மட்டும் போதாது! காட்டுத் தீ போலன்றி, வீட்டு விளக்கு நிதானமாக - சீராக - ஒளிவிட்டு இருளை அகற்றுவது போலத் தொண்டு புரிதல் வேண்டும்."

இந்த அறிவுரையை அகத்தில் பதித்து, ஜனநாயக இயக்கமான இந்தக் கழகத்தின் அமைப்புகளுக்கான தேர்தலில் ஈடுபடுவோம்! அண்ணா காட்டியுள்ள நெறியில் தொண்டு புரிவோர் அமைப்புகளில் இடம்பெற இந்தத் தேர்தல் பயன்படட்டும்!

கிளைக் கழகம்தானே என அலட்சியமாக இராமல், அந்த வேர்களும் பலமாக இருந்தால் தான், கழகத் தரு, வலிவோடு நிற்கும் என்பதை எண்ணிப் பார்த்துத் தொண்டு புரிதல் வேண்டும்!

பணியின் முதற்கட்டத்தை ஒரு புதிய அத்தியாயமாகவே தொடங்குவோம்!

முதல் பாகம் - இரண்டாம் பாகம் - மூன்றாம் பாகம் - எனப் பெரிய வரலாறுகளுக்குப் பல பாகங்கள் உண்டல்லவா?

அவற்றில் ஒரு பாகத்தில் அடங்குவதே இந்தப் புதிய அத்தியாயம்!

அன்புடன்,

மு. க.

03-09-1991

1780. உரிய வகை உகந்த முறை உயர்ந்த நிர்வாகம்!

உடன்பிறப்பே!

செப்டம்பர் 4-ஆம் நாள் தமிழக சட்டப் பேரவையில் நிதி நிலை அறிக்கை (பட்ஜெட்) வெளியிடப்பட இருக்கிறது.

பட்ஜெட் இரகசியம் வெளியிடப்படக் கூடாது என்பதும் - அது அவையில் மட்டும்தான் உறுப்பினர்களுக்கு முன்வைக்கப்பட்டு, பிறகு நாட்டுக்குத் தெரிய வேண்டும் என்பதும் மரபு!

ஆனால் நிதி அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள், பட்ஜெட்டின் மிக முக்கிய அம்சமான துண்டுவிழும் தொகையை கூட்டத்திற்குக் கூட்டம் - மேடைக்கு மேடை - நாள்தோறும் தெரிவித்து வருகிறார்.

குறிப்பாக செப்டம்பர் முதல் நாள் வெளிவந்துள்ள பைனான்சியல் எக்ஸ்பிரஸ் (Financial Express) என்ற பிரபலமான ஆங்கில ஏட்டில் நாவலரது, அதாவது தமிழக நிதியமைச்சரது - அறிவிப்பு, அச்சிட்டு அம்பலமாக்கப்பட்டுள்ளது.

Tamil Nadu deficit to be Rs. 1,222 cr.

The Budjet deficit of Tamil Nadu for the current year is likely to be around Rs. 1,222 crores as the previous D.M.K.Government had left a deficit of Rs. 900 crores, according to the State Finance Minister Mr. V.R. Nedunchezhian. (Financial Express)

அதாவது இந்த ஆண்டு தமிழக அரசின் பட்ஜெட்டில் துண்டு விழும் தொகை 1,222 கோடி ரூபாயாக ஏறத்தாழ இருக்குமென்றும் முந்தைய தி.மு.க. ஆட்சியில் பட்ஜெட்டில் துண்டு விழுந்த தொகை ரூ. 900 கோடியென்றும் தமிழ்நாடு அரசின் நிதியமைச்சர் திரு. நெடுஞ்செழியன் அறிவித்துள்ளார்.

பட்ஜெட் படிக்கும் நாள் செப்டம்பர் நாலு! ஆனால் பட்ஜெட்டில் துண்டு விழும் தொகை ஏறத்தாழ 1,222 கோடி

ரூபாய் என்று நிதியமைச்சரே செப்டம்பர் முதல் தேதியன்று ஒரு பொது நிகழ்ச்சியில் கூறியுள்ளார்.

ஏறத்தாழ என்ற சொல்லை எப்போது பயன்படுத்துவது?

1000 கோடி ரூபாய் என்றாலோ அல்லது 1200 கோடி ரூபாய் என்றாலோ, ஏறத்தாழ என்று அந்தத் தொகையைக் குறிப்பிடலாம்.

ஆனால் நாவலர் நெடுஞ்செழியன் அவர்களோ, ஏறத்தாழ எனக் குறிப்பிட்டு விட்டு, மிகக் கறாராக 1,222 கோடி ரூபாய் துண்டு விழும் என்று அறுதியிட்டுக் கூறியிருக்கிறார்.

சரி, அது போகட்டும்! ஏற்கெனவே தி.மு.க. ஆட்சியில் 900 கோடி ரூபாய் துண்டு விழுந்துள்ளது என்று அவர் அந்தக் கூட்டத்தில் கூறியதாக பைனான்சியல் எக்ஸ்பிரஸ் (Financial Express) என்ற அந்த ஆங்கில ஏடு செய்தி வெளியிட்டுள்ளதே! வேறு பல ஏடுகளும் செய்தி வெளியிட்டுள்ளனவே! அவ்வாறு நிதியமைச்சர் நெடுஞ்செழியனார் கூறியுள்ள புள்ளி விபரம் சரியானதுதானா? அல்லது உண்மைக்கு மாறானதா? என்பதை உனக்கும், நாட்டுக்கும் விளக்க வேண்டியது எனது கடமையும், பொறுப்பும் அல்லவா?

அதனால்தான் இந்தக் கடிதத்தில் கடந்த பிப்ரவரி இரண்டாம் தேதி நான் படிக்க இருந்த பட்ஜெட் தடுக்கப்பட்டு, அதற்கு மூன்று நாட்களுக்கு முன்பே ஆட்சி கலைக்கப்பட்டதல்லவா? அந்த பட்ஜெட்டில் நான் படிக்க வேண்டுமென்பதற்காக தயாரித்து வைத்திருந்த சில குறிப்புகள், திட்டங்கள், புள்ளி விபரங்களை, என் நினைவில் இருப்பவைகளை மட்டும் உன் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். நினைவில் வைத்து எழுதுவதால் புள்ளி விபரங்கள் ஏறத்தாழ தோராயமாக இருக்கும். கறாராக இராது! ஆனால், நிச்சயமாக வித்தியாசங்கள் ஓரிரு இலட்சங்கள் அல்லது ஆயிரங்கள் மட்டுமே, கூடக் குறைய இருக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

1991-92-ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் ஒவ்வொரு துறை வாரியாக அறிவிக்க இருந்த முக்கியமான திட்டப் பணிகள் எவை எவை என்பதை நினைவில் வந்த அளவுக்கு இதோ இந்தக் கடிதத்தில் விவரிக்கிறேன்.

* பாசன வசதியைப் பெருக்கும் வகையில் - திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தில் செண்பகத் தோப்பு நீர்த் தேக்கத் திட்டம்.

* வடஆற்காடு அம்பேத்கர் மாவட்டத்தில் ஆண்டியப்பனூர் ஓடை நீர்த் தேக்கத் திட்டம்.

* தர்மபுரியில் தோட்டகல்லா நீர்த்தேக்கத் திட்டம்.

* குமரி மாவட்டத்தில் மாம்பழத் துறையாறு நீர்த்தேக்கத் திட்டம்.

* நெல்லை கட்டபொம்மன் மாவட்டத்தில் உள்ளார் நீர்த்தேக்கத் திட்டம்.

* கோவை மாவட்டத்தில் சோழஜலஹள்ளி நீர்த்தேக்கத் திட்டம்.

அடுத்து

* வேளாண்மைத் துறையில் - டேனிடா உதவியுடன் வேளாண்மைப் பணியில் மகளிருக்கு உதவியளிக்கும் திட்டம்.

* ஆறு மாவட்டங்களில் உணவு தானிய உற்பத்தி சிறப்புத் திட்டம்.

* தரிசாக உள்ள நிலம் சுமார் இரண்டு லட்சம் ஏக்கரைச் சீர்படுத்தும் திட்டம்.

* உலக வங்கியின் உதவியுடன் உதவி பெற்று சுமார் 300 கோடி ரூபாய் செலவில் வேளாண்மை வளர்ச்சிக்கான புதிய திட்டம்.

* காட்டு வளத்தைப் பொறுத்த வரையில் - ஸ்வீடன் நாட்டு நிறுவனத்தின் உதவியுடன் இருபது கோடி ரூபாய் அளவுக்கான செலவில் சமூகக் காடு வளர்ப்புத் தொடர் திட்டம்.

* மீனவர்களின் கடன்கள் அவைகளுக்கான வட்டித் தொகையுட்பட சுமார் ஏழு கோடி ரூபாய் அளவுக்கு, கணக்கிலிருந்து தள்ளுபடி செய்தல்.

* ஊரக வளர்ச்சித் துறையில் - புதிதாக ஆயிரம் பள்ளிக் கட்டிடங்கள் கட்டுதல்.

* 2000 கிலோ மீட்டர் தூரம் சாலைகள் அமைத்துத் தருதல்.
* ஆயிரத்து ஐநூறு சிறுபாசன ஏரிகள் அமைத்தளித்தல்.
* 1000 ஊராட்சி மன்றக் கட்டிடங்கள் கட்டித் தருதல்.
* 100 சுகாதார நிலையங்களை அமைத்திடல்.
* குடிநீர் வழங்கும் பணியில் - குடிநீர் வசதியே இல்லாத 6000 குடியிருப்புப் பகுதிகளுக்கு 13 கோடி ரூபாய் செலவில் குடிநீர் வழங்குதல்.
* 300 குடியிருப்புகளுக்கு 15 கோடி ரூபாய் செலவில் மேல்நிலைத் தொட்டிகள் கட்டுதல்.
* காஞ்சிபுரம், திருவண்ணாமலை, பொள்ளாச்சி, மணப்பாறை, சங்கரன்கோயில், புதுக்கோட்டை ஆகிய ஊர்களில் குடிநீர் வழங்கும் திட்டம் தொடங்குதல்.
* சத்தியமங்கலம், பழனி, தென்காசி, குளச்சல், குழித்துறை, குடந்தை ஆகிய நகரங்களில் 6 கோடி ரூபாய் செலவில் குடிநீர் திட்டத்தைச் சீரமைத்தல்.
* அடிப்படைக் குடிநீர் வசதி செய்திட சுமார் 50 பேரூராட்சிகளுக்கு ரூபாய் 75 கோடி திட்டத்துக்கான தொடக்கம்.

உடன்பிறப்பே, இவை மட்டுமல்ல - எல்லா வகை வளர்ச்சிக்கும் அவசியமான மின்சக்திக்காக 1990-91-ஆம் ஆண்டு மொத்த முதலீடு ரூபாய் 450 கோடி அளவுக்கு செய்திருக்க, 1991-92-ஆம் ஆண்டுக்கு மின்சக்திக்கான ஒதுக்கீடு ரூபாய் 520 கோடியாகும். 220 மெகாவாட் திறனுள்ள மின் உற்பத்தி நிலையம் இயங்குவதற்கான திட்டம் நிறைவேற்றப்படும். எட்டாவது திட்டகாலத்தில் சுமார் 1600 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்ய வேண்டுமென்பதே கழக அரசின் குறிக்கோள்! வடசென்னையில் 700 கோடி செலவில் பல இடையூறுகளுக்கிடையே கழக அரசு தொடங்கிய மின் நிலையத்தில் 400 மெகாவாட் மின் உற்பத்தியளிக்கும் பிரிவுகளை

நிறுவும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு விட்டன. அம்மோதன்னியில் எரிவாயு மின் உற்பத்தி நிறுவனம் ஒன்றும் வரும் ஆண்டில் புதிதாக அமைத்திட 400 கோடி ரூபாய் செலவில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1990-91-ல் தொடங்கப்பட்டு 1991-92-ல் செயல்படவுள்ள புதிதான தொழில் திட்டங்கள் :-

* 40 கோடி ரூபாயில் ராணிப்பேட்டையில் சாப்ட்வெர்ரைட் திட்டம்.
* 12 கோடி ரூபாயில் சென்னையில் பிரிண்டட்சர்க்யூட் போர்டு திட்டம்.
* விளக்கு மற்றும் விளக்குப் பாகம் தயாரிக்கும் திட்டம் 43 கோடி ரூபாயில் கும்மிடிப்பூண்டியில்!
* 90 கோடி ரூபாயில் பென்சிலின் தயாரிப்புத் திட்டம்.
* 90 கோடி ரூபாய் முதலீட்டில் வேதாரண்யத்தில் காஸ்டிக் சோடா தயாரிப்புத் திட்டம்.
* 100 கோடி ரூபாய் செலவில் சேலத்தில் மாக்னசைட் இரசாயனப் பொருள் தயாரிக்கும் திட்டம்.
* மணலியில் 1300 கோடி ரூபாய் முதலீட்டில் அரோமாடிக் தொழிற்சாலையை எம்.ஆர்.எல். மற்றும் ஸ்பிக் நிறுவனங்களின் கூட்டுத் துறையில் நடத்திட மத்திய அரசிடம் (வி.பி.சிங் ஆட்சியில்) அனுமதி பெறப்பட்டு, அது தொடங்கும் கட்டத்தில் தயக்கம். (சந்திரசேகர் ஆட்சியில்)

கழக அரசில் தொழில் வளர்ச்சி எனப் பார்த்தால் ஒரே ஒரு உதாரணம் போதுமானது. இந்திய தொழில் வளர்ச்சி வங்கியின் 1989-ஆம் ஆண்டுக்கான அறிக்கை என்ன சொல்லுகிறது? 1989-90-ஆம் ஆண்டுக்கு தமிழகத் தொழில் வளர்ச்சிக்காக, நிதியுதவி நிறுவனங்கள் அனைத்தும் வழங்கியுள்ள தொகை 1250 கோடி ரூபாய் ஆகுமென்று குறிப்பிடுகிறது! எனவே இந்த நிலை, மகாராஷ்டிரம், குஜராத் ஆகிய மாநிலங்களுக்கு அடுத்ததாக இந்தியாவில் நமது தமிழகம் மூன்றாவது இடத்தைப் பெறுகிறது.

உடன்பிறப்பே, பாசனம், வேளாண்மை, தொழில், குடிநீர் எனப் பல்வகை துறைகளுடன் மேலும் பல இன்றியமையாத

துறைகள், கல்வி, மருத்துவத் துறைகள், சமூக நலத்துறையில் மக்கள் நல்வாழ்வுத் திட்டங்கள் இத்தனைக்கும் உரிய நிதி ஒதுக்கீடுகளைச் செய்ததுமட்டுமல்லாமல் - சீரான நிர்வாகத்துடன் - செம்மையான முறையில் வருமானத்தையும் பெருக்கிட கழக அரசு நடைபெற்ற காரணத்தினால்தான்,

கஜானாவும் காலி!

களஞ்சியமும் காலி!

என்ற நிலையில் 1989-ல் நம்மிடம் விடப்பட்ட ஆட்சிப் பொறுப்பை ஒரு அறை கூவலாக ஏற்று இரண்டாண்டு காலத்தில் ஒரு சாதனைச் சரித்திரத்தையே படைக்க முடிந்தது.

தமிழ்நாடு செய்தித்தாள் நிறுவனம்; (புகளூர்) 1990-91-ல் அதுவரையில் இருந்த நஷ்டத்தை சரிக்கட்டி, மேலும் 30 கோடி ரூபாய் இலாபத்தை ஈட்டியுள்ளது, கழக ஆட்சியில்தான்!

தமிழ்நாடு கனிமவள நிறுவனம், 1989-90-ல் 5 கோடி ரூபாய் இலாபம் தந்தது. 1990-91-ல் 7 கோடி ரூபாய் இலாபம் தந்தது. மேலும் 1991-ல் 5 கோடி ரூபாய் செலவில் ஒரு கிரானைட் தயாரிப்புத் தொழிற்சாலை, புதிதாகத் தொடங்கப்பட இருக்கிறது எனவும் நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்க இருந்தேன். கடந்த பிப்ரவரி இரண்டாம் தேதியில்!

அதற்குள் இந்த திட்டங்கள் எதனையும் அறிவிக்க வொட்டாமல் ஆட்சிக் கலைப்பு செய்தனர். சிவகங்கையில் தாமதப்பட்டுக் கிடந்த கிரானைட் உற்பத்திக்கும் 15 கோடி ரூபாய் செலவில் திட்டம் இறுதியாக்கப்பட்டுவிட்டது கழக ஆட்சியில்!

1990-ஆம் ஆண்டில் மட்டும் 1300 ஏக்கர் அரசு நிலங்களை முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மூலம் குத்தகைக்கு விட்டதில், கிரானைட் மூலமாக அரசுக்கு 20 கோடி ரூபாய் அளவுக்கு வருமானம் கிடைத்துள்ளது.

* ஆயத்தீர்வை (மது) வருவாயில் - ஏற்பட்டிருந்த சந்து பொந்துகளை அடைத்ததன் காரணமாக, 1988-89-ல் சுமார் 145 கோடி ரூபாய் அரசுக்கு வருமானம் வந்ததற்கு மாறாக, 1991-92-ஆம் ஆண்டில் 600 கோடி ரூபாய் அளவுக்கு வருமானம் வருமென்று மதிப்பீடு செய்யப்பட்டது.

ஏழை, எளியோர், வணிகர், தொழிலாளர், நடுத்தர வர்க்கத்தினர் தொல்லைகளுக்கு ஆளாகாமல் - எளிய வகையில் அரசின் வருவாயைப் பெருக்கி, எந்தவொரு வளர்ச்சித் திட்டத்தையும் குறைக்காமல் - நலிந்தோர் நல்வாழ்வுத் திட்டங்களையும் அமல்படுத்தி - இன்னும் பல புதிய சாதனைகளை அறிவிக்க நிதி நிலை அறிக்கை தயாரித்தபோதுதான் கழக ஆட்சியைக் கலைத்தனர்.

இவ்வளவு திட்டங்கள்! நான் சொன்னவை போக - இன்னும் பற்பல திட்டங்கள்! ஆதி திராவிட பழங்குடி மக்களுக்காக! பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப் பட்டோருக்காக! மாணவர், மகளிர் குலத்திற்காக!

இத்தனைக்கும் பிறகும் நிதியமைச்சர் நாவலர் கூறுவதுபோல கழக ஆட்சியில் 900 கோடி ரூபாய் துண்டு விழவில்லை!

1990-91-ஆம் ஆண்டு, இறுதிப் பற்றாக்குறை நிதிநிலை அறிக்கையின் மதிப்பீடுகளின்படி ரூ.510 கோடி அளவுக்கு இருக்குமென்று குறிப்பிட்டு, மதுவிலக்குக் கொள்கையில் அறிவிக்கப்பட்ட மாற்றங்களினால் அந்த ஆண்டுக்கு மட்டும் ரூபாய் 180 கோடி அதிகமாகக் கிடைத்து, புதிய வரி மாற்றங்களினால் 62 கோடி ரூபாய் அதிகமாகக் கிடைத்து, 1990-91-ஆம் ஆண்டு, பற்றாக்குறை சுமார் 270 கோடி ரூபாயாகத்தான் இருக்குமென்று பேரவையில் சுட்டிக்காட்டப் பட்டிருக்கிறது.

அந்தப் பற்றாக்குறையைச் சரிக்கட்ட, மத்திய அரசு உதவிகளை வற்புறுத்தியும் - சிக்கன நடவடிக்கைகளை மேற்கொண்டும் - பணி தொடர வேண்டுமென 1990-91 நிதிநிலை அறிக்கை படிக்கும்போது குறிப்பிட்டுள்ளேன்.

ஆனால் நாவலர் அவர்கள், 1990-91 பற்றாக்குறை 270 கோடி என்பதை 900 கோடி என்றும், அவர்களது 91-92-ஆம் ஆண்டு பட்ஜெட்டில் 1,222 கோடி ரூபாய் பற்றாக்குறை ஏற்படுமென்றும் கூறியுள்ளது, என்ன காரணம் பற்றியோ! விளங்கவில்லை!

இரண்டு ஆண்டுகால கழக ஆட்சியில் ஒன்பதாம் நிதிக்குழுவின் பரிந்துரைகளால் தமிழகத்திற்கு விளைந்துள்ள கேடுகளை எடுத்துரைத்து வாதாடி, நியாயத்தை மத்திய அரசின் முன் நிலைநாட்டினோம்.

எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும், நமக்கு பாதகம் விளைவிக்கப் பட்டுள்ளதைச் சுட்டிக்காட்டி, வி.பி.சிங் அரசிடம் நிவாரணம் அளிக்கப்படும் என்ற உறுதிமொழியைப் பெற்றோம்.

தமிழகத்தில்தான் கழக ஆட்சியில் இந்தியாவிலேயே முதன் முறையாக மாநிலத் திட்டக்குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழு எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை பத்தாயிரம் கோடி ரூபாய் அளவுக்குத் தீட்டியது.

அதன் அடிப்படையில், மத்தியத் திட்டக்குழுவுடன் விவாதித்து, 1989-90-ஆம் ஆண்டுக்கு 1450 கோடி ரூபாய் என நிர்ணயிக்கப்பட்ட நிலைக்கு மாறாக, 1991-92-ஆம் ஆண்டுக்கான திட்டத்திற்கு 1700 கோடி ரூபாய் ஒதுக்கீடு என ஒப்புதலைப் பெற்றோம்.

உடன்பிறப்பே, கஜானாவும், களஞ்சியமும் காலி என்ற நிலையில் - வருமானத்தைச் சீராகப் பெருக்கி, கவர்னர் ஆட்சியில் ஒரு லட்சம் டன் அரிசி மாதந்தோறும் என வழங்கியதை, மத்திய காங்கிரஸ் அரசு நாற்பதாயிரம் எனக் குறைத்ததையும் சமாளித்துக் கொண்டு - மத்திய காங்கிரஸ் ஆட்சியின் ஒன்பதாவது நிதிக் குழுவினால் தமிழகத்திற்கு விளைந்த பாதகங்களுக்கிடையே,

நிலையானதும் -
நிர்வாகத் திறன் மிக்கதும் -
நேர்மையானதுமான -

அரசை நடத்தினோம். அதன் வரவு செலவுத் திட்டத்தை 1991 பிப்ரவரி 2-ஆம் நாள் பேரவையில் வைக்க இருந்தோம்.

நமது திறனுக்குத் தமிழ்மக்கள் பாராட்டு தெரிவிக்கும் வாய்ப்பையும் தடுத்து - நம் மீதும் வீண்பழி சுமத்தி - வீழ்த்தி விட்டனர்! விழுந்தோம்! விழுந்தாலும் விதைபோல விழுவோம் - எனும் கவிக்கோவின் கவிதைமொழியை நினைத்து, விளைந்திடுவோம்! வளமார் தமிழகம் கண்டிட வலிமை பெற்றிடுவோம்!

உடன்பிறப்பே, இக்கடிதத்தில் குறிப்பிடப்பட்ட வைகளேயன்னியில் பல்வேறு மக்கள் நல அறிவிப்புகள், திட்டங்கள், கழக அரசின் நிதிநிலை அறிக்கையில் வெளியிடப்பட

இருந்தவைகள், 1991 தி.மு.க. பொதுத் தேர்தல் அறிக்கையில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளதை நீ மறந்திருக்க மாட்டாய்! அந்தத் தேர்தல் அறிக்கை கைவசமில்லையெனில், தேடியெடுத்தாவது படித்துப் பார்!

உரிய வகையில் வருவாயைப் பெருக்கிட வழிகண்டு - அதனை உகந்த முறையில் செலவிட்டு - உயர்ந்த நிர்வாகம் நடத்தியது கழக ஆட்சி என்பதை எடுத்துக் காட்டவே இதனை எழுதினேன்.

அன்புடன்,

மு. க.

04-09-1991

1781. காத்திருப்பது; காணவும், கண்டு மகிழவும்!

உடன்பிறப்பே!

தற்காலிகமாக ஆண்டு ஒன்றுக்கு 140 கோடி ரூபாய் என்ற அளவில் வரி போட்டும், 10 கோடி அளவுக்கு வரி விலக்கு வழங்கியும் இன்றுள்ள அரசு, மக்கள் முன் வைத்துள்ள நிதிநிலை அறிக்கை மன்றத்தில் வைக்கப்படுவதற்கு முன்பே முரசொலியில் செப்டம்பர் 4-ஆம் நாள் நான் எழுதியுள்ள நீண்ட கடிதத்தில், கழக அரசு கடந்த பிப்ரவரி 2-ஆம் நாள் பேரவையில் படிக்க இருந்த 1991-92-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை குறித்த விபரங்களை நினைவுக்கு வந்த வரையில் விபரமாக எழுதியிருந்தேன். அந்த முழுமையான கடிதத்தை நீ தினகரன் இதழிலும் செப்டம்பர் 5-ஆம் நாள் மீண்டும் ஒருமுறை படித்திருக்கக்கூடும்.

அ.தி.மு.க. ஆட்சியை ஏற்பதற்கு முன்பு 1991-92-ஆம் ஆண்டுக்கான பற்றாக்குறை சுமார் 900 கோடி ரூபாய் என்பதை, நிதி அமைச்சர் நாவலர் கடலூர் நிகழ்ச்சியொன்றில் இரண்டு நாட்களுக்கு முன்பு பேசும்போது, அது, தி.மு.க. ஆட்சியில் ஏற்பட்ட பற்றாக்குறை எனக் குறிப்பிட்டு - அச்செய்தி எல்லா ஏடுகளிலும் வெளி வந்தது.

தி.மு.க. ஆட்சி என்பது 1991 ஜனவரி மாதம் 30-ந் தேதி வரையில்தான்!

அதற்குப் பிறகு, பிப்ரவரி, மார்ச், ஏப்ரல், மே, முடியவும் ஜூன் திங்களில் மூன்று வாரங்களும், ஆக - சுமார் ஐந்து மாதங்கள் நடைபெற்றது. குடியரசுத் தலைவர் ஆட்சி என்ற பெயருடன், ஆளுநர் அதிகாரமேற்று நடத்தப்பட்ட ஆட்சி.

எனவே, 1991-92-ஆம் ஆண்டு என்பது நிதியாண்டு என்ற கணக்கில் மார்ச் மாதத்திலிருந்து தொடங்குவதை நினைவில் கொண்டால், நாவலர் நெடுஞ்செழியன் அவர்களே

வெளியிட்டுள்ள நிதிநிலை அறிக்கை புத்தகத்தில் 81-வது பக்கத்தில் 1990-91-ஆம் ஆண்டுக்கான மொத்தப் பற்றாக்குறை ரூபாய் 510.10 கோடியாகும் என மதிப்பிடப்பட்டது. எடுக்கப்பட்ட நடவடிக்கைகளினால் இந்தப் பற்றாக்குறை ரூபாய் 268.10 கோடியாகக் குறையும் என எதிர்பார்க்கப்பட்டது என்றும், அவரே அடுத்த பாராவில், 1990-91-ஆம் ஆண்டின் இறுதியில் ஏற்பட்ட மொத்தப் பற்றாக்குறை ரூபாய் 207.94 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது என்றும் முடிவாகக் கூறியுள்ளார்.

ஆனால் பைனான்சியல் எக்ஸ்பிரஸ், எக்கானமிக் டைம்ஸ் போன்ற ஆங்கில ஏடுகளிலும், வேறு சில நாளேடுகளிலும் -

"The previous D.M.K. Government had left a deficit of Rs. 900 crores according to the State Finance Minister V.R. Nedunchezhiyan"

முன்னாலிருந்த தி.மு.க. ஆட்சி 900 கோடி ரூபாய் பற்றாக்குறையுடன் விட்டுச் சென்றது என நிதியமைச்சர் நெடுஞ்செழியன் தெரிவித்தார்

என்றே செய்திகள் வந்துள்ளன. 1991-92-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை - வரவு செலவு - பற்றாக்குறை - ஆகியவற்றை 1990-91-ஆம் ஆண்டு நிதிநிலை - வரவு செலவு - பற்றாக்குறை இவற்றுடன் வேறுபாடு அறியாது குழப்பிக் கொண்டதன் விளைவே இந்தச் செய்தி என்பது இப்போது தெளிவாகவே விளங்கும்.

தி.மு.க. ஆட்சி 1990-91-ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தையும், அதற்கு முன்பு 1989-90-ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தையும்தான் கடந்த இரண்டு ஆண்டு கால ஆட்சியில் தயாரித்து - அதற்கேற்ப மக்கள் நலத் திட்டங்கள், மற்றும் வளர்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தியது என்பதை முதலில் நினைவுபடுத்திக் கொண்டு, இந்த அரசு தயாரித்து அளித்துள்ள 1991-92-ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தை நோக்கிட வேண்டும்.

நிதி அமைச்சரின் கூற்றுப்படி 1990-91 திருத்த மதிப்பீட்டின்படி முடிவான பற்றாக்குறை ரூபாய் 207.94 கோடியுடன் 1991-92ல் மொத்த பற்றாக்குறை ரூபாய் 785.35 கோடியாக இருக்கும். (பட்ஜெட் புத்தகம் பக்கம் 82)

மற்றும் அதே புத்தகம் 102-வது பக்கத்தில் சுட்டிக்காட்டப்படுவது சிக்கன நடவடிக்கைகள் மூலமாக 786 கோடி என்பதை 645 கோடி பற்றாக்குறையாகக் குறைக்க முடியும் என்பதாகும்!

சிக்கனம் என்ற பெயரால் நிதித்துறை, திட்டங்களை வெட்டி விடலாம்! அல்லது திட்டங்களின் செலவுக்கு பணம் ஒதுக்கீடு செய்யாமல் இருக்கலாம். அதுவும் ஒருவகை சிக்கனமே! ஆனால் வளர்ச்சிக்கு வழி வகுக்காது!

இந்த இரண்டு மாத கால ஆட்சியில் வானொலியில், தொலைக்காட்சியில் பேசுவதற்குக்கூட எல்லா ஏடுகளிலும் விளம்பரங்கள்! பக்கம் பக்கமாக - டெல்லியில் மீண்டும் ஒரு பிரதிநிதி அமைச்சர் அந்தஸ்தில் - மற்றும் நாள்தோறும் நடைபெறும் உண்மையிலேயே தேவைப்படுகிற பாதுகாப்பு தவிர, தேவையற்ற பந்தாக்கள் - இவைகளைக் காணும்பொழுது சிக்கனத்தில் 140 கோடி ரூபாய் மிச்சப்படுத்த இயலுமா என்பது ஐயப்பாடே!

பற்றாக்குறையை ஈடுகட்ட விதிக்கப்பட்டுள்ள வரிகள் 70 கோடி ரூபாய்க்கு என்றாலும், இது, நிதிநிலை அறிக்கையின் முதல் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதுபோல, எஞ்சிய ஆறுமாத காலத்திற்கான வரி விதிப்பு மூலம் கிட்டும் தொகைதான்! உண்மை என்னவெனில், ஆண்டு ஒன்றுக்கு இந்த வரிவிதிப்பு மூலம் மக்கள் செலுத்த வேண்டிய தொகை 140 கோடி ரூபாயாகும்!

இந்த விபரங்களையும், நிதி நிலை அறிக்கையில் உள்ள சாதக பாதகங்களையும், அரசிடமிருந்து பெற்றிடவேண்டிய விளக்கங்களையும் தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சி உறுப்பினர்கள், தலைவர்கள் அவையில் நடைபெறும் விவாதத்தின் போது எடுத்துரைப்பார்கள் என்பதால், மேலும் இந்த அறிக்கைக்குள்ளான ஆழமான விபரங்களுக்கு இப்போது நான் சென்றிட விரும்பவில்லை!

ஆனால், ஒன்றை மட்டும் நான் குறிப்பிடாமல் இருக்க இயலவில்லை!

நாவலர் அவர்கள், அண்ணாவின் அமைச்சரவையிலும், என் தலைமையிலான அமைச்சரவையிலும், அடுத்து அருமை

நண்பர் எம்.ஜி.ஆர். தலைமையிலான அமைச்சரவையிலும் இருந்திருக்கிறார்.

அந்தக் கால கட்டங்களில் அவர் பேரவையில், மாநில சுயாட்சி அல்லது தன்னாட்சி குறித்தும், மத்தியில் உண்மையான கூட்டாட்சி குறித்தும் - எவ்வளவு விரிவாக, அழுத்தம் திருத்தமாக உரையாற்றியிருக்கிறார் என்பதை, சட்டப் பேரவை நூலகத்திலேயுள்ள அவை நடவடிக்கை புத்தகங்களில் இன்றைக்கும் படித்து மகிழலாம்!

அவர் நிதியமைச்சராக எழுந்து பட்ஜெட் உரை நிகழ்த்திய 1980-81, 1981-82, 1982-83 ஆகிய ஆண்டுகளில் மாநில உரிமைகள் - மாநில சுயாட்சி இவை குறித்து அவர் திட்டவட்டமாக - சுற்றிவளைக்காமல் எதையும் கூறவில்லை என்பது உண்மையெனினும் - 1983-84-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை 7-ஆம் பக்கத்தில் மாநிலங்கள் தன்னாட்சி உரிமை பெற வேண்டும் (State Autonomy) என்றும், 1984-85-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 7-ஆம் பக்கத்தில் உண்மையான மையக் கூட்டாட்சியும், மாநிலத் தன்னாட்சியும் அமைய வழி வகுத்துத் தர வேண்டும் என்றும், 1985-86-ஆம் ஆண்டு அறிக்கையில் 3-ஆம் பக்கத்தில் இந்தியாவின் ஒருமைப்பாட்டுத் தன்மைக்கு உடன்பட்டதான மாநிலத் தன்னாட்சிக் கொள்கையை இந்த அரசு வலியுறுத்துகிறது என்றும், இதே மாநில சுயாட்சிக் கொள்கையை 1986-87, 1987-88-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கைகளிலும் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் திட்டவட்டமாகக் குறிப்பிட்டுள்ளார்.

நான்கூட எதிர்க்கட்சி வரிசையிலிருந்து பேசும்போது பரவாயில்லை! நாவலர் அங்கு சென்றதால் - மக்கள் சுயாட்சிதான் தேவை! மாநில சுயாட்சி தேவையில்லை! என்று கூறும் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களையும் மாற்றி, நிதிநிலை அறிக்கையில் மாநில சுயாட்சிக் கொள்கையை வலியுறுத்தியுள்ளதை பாராட்டுகிறேன் எனக் குறிப்பிட்டேன். மேலவையில் என்று நினைவு!

அதற்கு விளக்கமளித்த நாவலர், மாநில சுயாட்சி என்றால் தனிச்சுதந்திர ஆட்சி என்று முதல்வர் எம்.ஜி.ஆர். தவறாக எண்ணிக் கொண்டிருந்தார். நான் விளக்கமளித்து தன்னாட்சி

வேறு, தனியாட்சி வேறு என்று புரிய வைத்த பிறகு ஒப்புக் கொண்டார். அதற்குப் பிறகுதான் மாநில சுயாட்சிக் கொள்கை நிதிநிலை அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளது என்று கூறினார்.

அதன்பிறகு சில நாட்களில் மேலவை கலைக்கப்பட்டு விட்டது என்பதுதான் உனக்குத் தெரியுமே உடன்பிறப்பே!

1974-ல் பேரவையில் கழக அரசின் சார்பாக மாநில சுயாட்சித் தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றினோம்! ஆம். இந்தியாவிலேயே முதன் முறையாக!

அப்போதும் சரி, அதற்குப் பிறகும் சரி - மாநில சுயாட்சி அல்லது மாநிலத் தன்னாட்சி (State Autonomy) என்ற சொற்றொடரை - அதாவது மக்களுக்குப் புரியும்படியான - எளிதில் புரிந்து கொள்ளக்கூடிய சொற்றொடரை - பயன்படுத்தி வந்த நாவலர், திடீரென இந்த நிதிநிலை அறிக்கையில் மாநில சுயாட்சி அல்லது தன்னாட்சி என்ற பேச்சுக்கே போகாமல் கரடு முரடாகவும் - சுற்றி வளைக்கும் நிலையிலும் - ஒன்றுக்கொன்று முரண்பாடோ எனக் குழப்புகிற முறையிலும் - கட்டுண்டு வாழோம், பிரிவினை நாடோம், சமநிலையில் இணைவோம் என்பதே இந்த ஆட்சியின் குறிக்கோள் என்ற வாசகத்தைப் பயன்படுத்துவானேன்?

இந்த வாசகத்திற்கு மாநில சுயாட்சி என்பதுதான் அர்த்தம் என்று சொல்வாரேயானால் - அந்த மாநில சுயாட்சி என்ற சொல்லையே பயன்படுத்தியிருக்கலாமே!

"திருமாலின் வயிற்றில் பூத்த மலரில் அமர்ந்து
நாலுதலையுடன் படைப்புத் தொழில் நடத்தும் கடவுள்"

என்பதற்குப் பதிலாக பிர்மா என சுருக்கமாகச் சொல்லிவிட்டுப் போகலாமே!

எம்.ஜி.ஆர். முதலமைச்சராக வீற்றிருந்தபோது, இதே நிதியமைச்சர் நிதிநிலை அறிக்கையில் படித்தாரே! அந்த மாநில சுயாட்சி (State Autonomy) இப்போது மாறுவேடம் போட்டுக் கொண்டு - இந்த நிதிநிலை அறிக்கையில், படிப்போரை மயக்கத்தில் ஆழ்த்துவானேன்!

மாநில சுயாட்சி - மாநில தன்னாட்சி - மத்தியில் உண்மையான கூட்டாட்சி என்ற சொற்றொடர்கள் தி.மு.கழகம் அதிகமாகப்

பயன்படுத்தி, மக்களிடையே பழக்கத்திற்கு வந்து விட்டவை என்பதற்காக அதனை மாற்றுவதா?

அப்படியென்றால் எம்.ஜி.ஆர். அவர்களே அவரது ஆட்சிக்கால நிதிநிலை அறிக்கையில் அந்தச் சொற்றொடரை ஏற்றுக் கொண்டிருக்கிறாரே!

தி.மு.கழகம் பயன்படுத்தியதற்காக மாற்றுவதெனில், மாநில சுயாட்சி மட்டுமல்ல! மாண்புமிகு என்பது கூட கனம் என மாற்றப்படலாம்! இரண்டுக்கும் பொருள் ஒன்றுதான்! வாய்மையே வெல்லும்! என்பதுகூட கழகம் கண்ட சொற்றொடர்தான்! சத்யமேவ ஜெயதே! என்பதுதான் முன்பு இருந்தது!

அபேட்சகர் - வேட்பாளர் ஆனது கழகம் தேர்தல் களத்தில் இறங்கிய பிறகுதான்! சபாநாயகர், அவைத்தலைவரானதும் கழகம் ஆட்சி மன்றம் நுழைந்த பிறகே!

எனவே கழக முயற்சியினால் பரப்பப்பட்ட சொற்றொடர்கள், கொள்கை முழக்கங்கள், மக்களுக்குப் புரிய முடியாத அளவுக்கு - அல்லது இதற்கென்ன விளக்கம் என்று விழித்து, பின்னர் கேட்டுத் தெரிந்து கொள்ளும் அளவுக்கு,

மாநிலத் தன்னாட்சி
State Autonomy

என்பதை,

கட்டுண்டு வாழோம்
பிரிவினை நாடோம்
சமநிலையில் இணைவோம்

என நீட்டி, விரிவாக்கி, மக்களைத் திணறடிக்க வேண்டுமோ?

நமது கழகத்தின் ஐம்பெரும் முழக்கங்கள், நான் தலைவராகவும், நாவலர் பொதுச்செயலாளராகவும், எம்.ஜி.ஆர். பொருளாளராகவும் கழகப் பொறுப்பேற்றிருந்த போது திருச்சியில் நடந்த மாநாட்டில்தானே உருவாக்கப்பட்டு ஒலிக்கத் தொடங்கின!

* **அண்ணா வழியில் அயராது உழைப்போம்**
* **ஆதிக்கமற்ற சமுதாயம் அமைத்தே தீருவோம்**
* **இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம்**

* **வன்முறை தவிர்த்து வறுமையை வெல்வோம்**

* **மாநிலத்தில் சுயாட்சி - மத்தியிலே கூட்டாட்சி**

அந்த முழக்கங்களில் ஒன்றுதானே மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி!

உடன்பிறப்பே, இவற்றை நாம் ஆட்சிப் பொறுப்பில் இருந்தாலும் - இல்லா விட்டாலும், மத்தியிலே யார் ஆட்சியில் இருந்தாலும் - கிஞ்சிற்றும் தயக்கமின்றி ஓங்கி ஒலித்து வருகிறோம்!

இந்த ஐம்பெரும் முழக்கங்களுக்குள்ளே நமது கழகத்தின் கொள்கை கோட்பாடுகள் ஒளிவிட்டுக் கொண்டிருக்கின்றன!

மேலும் இவை ஒளிபெறத்தான், இந்த ஆண்டும் வழக்கம்போல், சென்னையில் செப்டம்பர் 15 முப்பெரும் விழாவில் தமிழக முழுதும் இருந்து வர இருக்கிற என் தங்கம் நிகர் உடன்பிறப்புகளாம் உன் போன்றோரைக் காணவும் - கண்டு மகிழவும் - காத்திருக்கிறேன் நான்!

அன்புடன்,

மு. க.

06-09-1991

1782. எனக்கும், உனக்கும், நாட்டுக்கும்!

உடன்பிறப்பே!

சோவியத் யூனியனில் ஏற்பட்டுவரும் மாற்றங்களை நாள்தோறும் ஏடுகளில் கண்டு வருகிறோம். தொழிலாளர் வர்க்கத்தின் குரலுக்கு எதிராக - முதலாளித்துவ ஆதிக்கத்திற்கு ஆதரவாக அந்த மாற்றங்கள் அமையும் அல்லது அமைய வேண்டும் என்ற நம்பிக்கையில் ஆதிக்க சக்திகள் தலைதுள்ளி ஆடிப்பாடி மகிழ்கிறார்கள் என்பது ஒருபுறமிருக்க, நமது கழகத்தைப் பொறுத்தவரையில் சோவியத் யூனியனில் கூட்டாட்சி தத்துவத்திற்கு வழி திறக்கப்பட்டு, அந்த யூனியனில் இருந்த மாநிலங்கள் கூட்டாட்சி அமைப்புக்குள் சுதந்திரக் குடியரசுகளாக விளங்கக் கூடிய உரிமைகளைப் பெற்றுள்ளதை வரவேற்று மகிழ்கிறோம்.

இந்தியாவில் மாநிலங்கள் அதிக உரிமைகளைப் பெற்று - சுயாட்சித் தன்மையுடன் விளங்கி, அந்தத் தன்னாட்சி (தனி ஆட்சி அல்ல) மாநிலங்களைக் கொண்ட உண்மையான கூட்டாட்சி அமைப்பாக (கூட்டணி ஆட்சி அல்ல) மத்திய அரசு இருந்திட வேண்டும் என்பது, தி.மு.கழகத்தின் நீண்ட நாள் கோரிக்கை! கொள்கை!

தேசிய உணர்வு என்பது, மாநிலங்களவையில் அண்மையில் பேசிய - தம்பி முரசொலி மாறன் குறிப்பிட்டிருப்பதுபோல, தாய்ப்பாலோடு சேர்ந்து ஊட்டப்படுவது! அந்த உணர்வு எப்போதும் மறக்க முடியாதது - அதுதான் இப்போது சோவியத் நாட்டில் நடைபெறுகிறது என்றும் மாறன் மாநிலங்களவையில் கழகக் கருத்தை வெளியிட்டுள்ளதை நீ படித்திருப்பாய்!

Nationality என்பது ஒரு தேசிய இனம் - ஒரு குழு உணர்வு! Nationality என்பது வேறு; Nationalism என்பது வேறு! ஒன்றுக்கொன்று தொடர்பு இருந்தாலுங்கூட Nationality என்பது தேசிய இனத்தைக் குறிக்கும். அந்தத் தேசிய இனம் தனக்காக

ஒரு நாடு வேண்டும் என்று கேட்கிற போதுதான் Nationalism என்ற சொல்லே வருகிறது! இந்தியாவில் இருக்கிற பல்வேறு தேசிய இனங்களில் (Nationality) தமிழ் தேசிய இனம் ஒன்று எனக் கூறுகிற நாம், ஒரு தனி நாட்டை, தனி ஆட்சியைக் கேட்கவில்லை. தன்னாட்சி உரிமைகளைக் கேட்கிறோம்.

தேசிய இனம் (Nationality) என்று கூறுகிற காரணத்தினாலேயே, (Nationalism) சுதந்திர தனி நாடு கோரிக்கை எழத் தேவையில்லை.

என்ற கருத்தை 1945-ஆம் ஆண்டு எழுதிய புத்தகத்தில் டாக்டர் அம்பேத்கர் அவர்கள் தெளிவாக்கியுள்ளார்.

அதே நேரத்தில், ஒற்றையாட்சி முறையால், தேசிய இனங்கள் உரிமையிழந்து ஒடுக்கப்படுவதைத் தடுத்து, இந்திய ஒற்றுமை வலுப்படுத்தப்படும் வகையில் மாநிலங்கள் சுயாட்சித் தன்மையுடன், மத்தியில் உண்மையான கூட்டாட்சி அமைப்பு உருவாகிட வேண்டும் என்பதில் திட்டவட்டமாக தி.மு.கழகம், தனது கருத்தைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

மாநில சுயாட்சியை வலியுறுத்தி முதலமைச்சர் பொறுப்பிலே இருந்தபோது அண்ணா அவர்கள், ஆற்றிய உரை நமது தலைமைக் கழகத்தின் சார்பில் இலட்சக் கணக்கில் புத்தகமாக அச்சிடப்பட்டு மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

அண்ணா மறைவுக்குப் பின் நான் முதல்வர் பொறுப்பினை ஏற்றவுடன், மத்திய மாநில உறவுகள் குறித்து அறிக்கை தர ராஜமன்னார், ஏ.எல். முதலியார், சந்திரா ரெட்டி ஆகியோரைக் கொண்ட குழு அமைத்து - அந்த அறிக்கையை மாறன், செழியன் குழுவினர் ஆராய்ந்து, அக்குழுக்கள் அளித்த பரிந்துரைகளின் அடிப்படையில், 1974-ஆம் ஆண்டு தமிழக சட்டப் பேரவையில் கழக அரசின் சார்பில் மாநில சுயாட்சி தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டது மட்டுமல்ல. அந்தத் தீர்மான விபரங்களையும், அதனையொட்டி நிகழ்த்தப் பெற்ற உரைகளையும் தமிழிலே மட்டுமன்றி, ஆங்கிலத்திலும் பல்லாயிரக்கணக்கில் அச்சியற்றி நாடு முழுதும் வழங்கியுள்ளோம்.

இந்திய நாட்டுத் தலைவர்கள் பலரும் பங்கேற்றதும், நமது கழக சார்பில் நண்பர் சாதிக்பாட்சா அவர்கள் கலந்து

கொண்டதுமான - காஷ்மீர் கருத்தரங்க மாநாட்டில் அந்த மாநாட்டை முன்னின்று நடத்திய பரூக் அப்துல்லா அவர்கள், 1974-ஆம் ஆண்டில் சட்டப் பேரவையில் நாம் நிறைவேற்றிய தீர்மானத்தையும், மாநில சுயாட்சி பற்றிய தமது கருத்துகளையும் இணைத்த ஆங்கில நூல் ஒன்றை தயாரித்து - அந்த நூலை அதன்பிறகு கல்கத்தாவில் ஜோதிபாசு முன்னின்று நடத்திய மாநில உரிமைகள் குறித்த கருத்தரங்கில் என்னிடமும், மாநாட்டுக்கு வந்திருந்த மற்ற தலைவர்கள், பிரதிநிதிகளிடமும் வழங்கினார்.

நாம் கோரும் மாநில சுயாட்சி மிகத் தெளிவானது! இந்திய ஒருமைப்பாட்டுக்கு ஊறு நேரா வண்ணம், மாநிலங்கள் தன்னாட்சி பெறுவது! மத்தியில் கூட்டாட்சி இருப்பது! இதுவே நாட்டின் வலிமையையும், ஒற்றுமையையும் உறுதிப்படுத்தும்!

சோவியத் யூனியனில் ஏற்கெனவே பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய சுயாட்சிக்கு அரசியல் அமைப்பில் வழி செய்யப்பட்டுள்ளது. ஆனால் அந்த உரிமை அளிக்கப்படாமல், இருந்த நிலை இன்று மாறும் கட்டாயம் ஏற்பட்டுள்ளது. எனவே, அந்த யூனியனில் உள்ள ஒவ்வொரு குடியரசும், தங்கள் அதிகாரங்களைப் பொறுத்த வரையில் புதிய ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டு, கூட்டாட்சி முறையில் புதிய சகாப்தத்தை ஏற்படுத்தியுள்ளன.

இதற்கு லெனினோ, கார்ல் மார்க்சோ எதிரானவர்கள் என எண்ணிக்கொண்டு அந்த மாவீரர்கள் - மாமேதைகளின் சிலைகளை உடைப்பதும், சின்னாபின்னப் படுத்துவதும் ஏனோ என்பதுதான் எனக்குப் புரியவில்லை!

அதேபோல லெனின் பெயரையும், மார்க்ஸ் பெயரையும் பயன்படுத்தி, சோவியத் யூனியனில் கூட்டாட்சி முறையில் அமைந்திடும் புதிய சகாப்தத்தை எதிர்ப்பதையும் ஏற்பதற்கில்லை!

அல்லற்படும் பாட்டாளி வர்க்கத்திற்கு ஆதரவாகவும், ஆதிக்கம் செலுத்தும் சுகபோக வர்க்கத்திற்கு எதிராகவும், அன்றும், இன்றும் என்றும் குரல் கொடுப்பவர்கள் நாம்!

எத்தனை நாளைக்கு ஏழை பாழைகள் ஆண்டவன் விட்டவழியென்று ஆயுளை நகர்த்திக் கொண்டிருப்பார்கள்? ஏன்? என்ற கேள்வி கருவிலே வந்துவிட்டால், அந்தப் புரட்சிக் குழந்தை உதயமாகப் பத்து மாதம் கூடத் தேவையில்லையே! புராணக்

கற்பனையிலே கூறுவார்களே, ரிஷிப் பிண்டம் இராத் தங்காது என்று! அதுபோல உடனடியாகக் கூட உதயமாகி விடலாமே! தூரப் போடா ஜாதி கெட்டவனே! பெரிய ஜாதிக்காரன் வருவது கண் தெரியவில்லை. கபோதிப் பயலே என்று பூசணிக்காய் வயிறு படைத்தோன் கேட்கிறானே! புழுதி படிந்த மேனியனைப் பார்த்து! அப்போது தோன்றுகிறதே அந்த ஏன் என்ற எக்காளக் கேள்வி! பொன் மலையும், பூரிப்பான வாழ்வும் எங்களுக்குத் தானடா சொந்தம் - மண்மேடும், மங்கிய வாழ்வும் உங்கள் கர்ம வினையடா! என்று கர்ஜிக்கிறானே! கனம், தனம் இரண்டும் படைத்தோன், கண்களிலே குளம் கொண்டவனைப் பார்த்து! அப்போது கொக்கரித்துக் கிளம்புகிறது கோமான்களே! உமது குரல்வளையை நெரிக்கும் அந்த ஏன் என்ற கேள்வி! சீமான்களே! பூமான்களே! அந்தக் கேள்வியினூடே பொங்கியெழும் புரட்சிக்கு முன்னே நீவிர் என்ன ஆவீர்? ஆகாகா! அகப்பட்டுக் கொண்டீரா ஆடம்பரப் பிரபுவே! பன்னீர்க் குவியலும், பழரச பானமும், கன்னியர்சூழ் கட்டிலறையும் இல்லாவிட்டால் உமக்குத் தூக்கம் வராதாமே! இதோ நீர் விழுந்து புரண்டு தூங்குவதற்கு அருமையான இடமென்று சாக்கடைச் சகதியிலே தூக்கி எறிவார்கள். இதுவரையில் சாக்கடை ஓரத்திலே வாழ்ந்து கொண்டிருப்பவர்கள்!

இப்படி மணிமகுடம் நாடகத்தில், திரைப்படத்தில் எழுதிய இந்தப் பேனா முனையின் கூர்மை மழுங்கி விடவில்லை! எழுதி எழுதி, மேலும், ஏழை எளிய பாட்டாளி வர்க்கத்திற்காகப் போராடும் கருவியாகவே உரம் பெற்று நிற்கிறது!

எனவே தத்துவரீதியாக மார்க்சும், செயல்ரீதியாக லெனினும் ஆற்றிய அரும்பணியின் அடிப்படை பெயர்த்தெறியப்படத் தக்கது என எவரும் கூறிடார்! கூறிடவும் கூடாது! ஆதிக்கக்காரர்கள் எதையோ நினைத்துக் கொண்டு ஆனந்தப் பள்ளு பாடலாம்!

இன்று சோவியத்தில் உருவாகியுள்ள உரிமை முழக்கத்திற்கு மார்க்சோ, லெனினோ எதிரானவர்கள் என எப்படிக் கூற முடியும்?

அயர்லாந்தின் விடுதலைக் கிளர்ச்சி பற்றி அன்றைக்கு மார்க்ஸ் கூறியது என்ன?

ஐரிஷ் இனத்தின் பிரச்சினை ஒரு தேசிய இனப் பிரச்சினை! அவர்களுக்குத் தனி நாட்டைப் பிரித்துத்

தர ஆங்கிலேயர் ஒப்புக் கொள்ள வேண்டும்.

இப்படி மார்க்ஸ் கூறினார் - 1867 டிசம்பர் 16-ஆம் நாள் லண்டன் மாநகரில்! ஒரு கூட்டத்தில்!

சோவியத்தில் பொதுவுடைமைப் பூங்காவை நிர்மாணித்த மாவீரன் லெனின் எழுதிய புத்தகமொன்று - பெயர் "The Right of Nations of Self determination" என்பதாகும்.

அந்தப் புத்தகத்தில் லெனின் குறிப்பிடும் கருத்து பின்வருமாறு:-

"The Recognition of the right of all nations to self determination implies the maximum of Democracy"

அதாவது, எல்லா தேசிய இனங்களின் சுய நிர்ணய உரிமையையும் ஏற்றுக் கொள்வது உயர்ந்த பட்ச அளவு ஜனநாயகத்தைக் குறிக்கிறது என்பது லெனின் கருத்தாகும். மேலும் அந்த நூலில்...

"To accuse those who support Freedom of self determination that is Freedom to secede of encouraging separatism is as foolish and hypocritical as accusing those who advocate freedom of divorce are encouraging the destruction of family ties."

> சுயநிர்ணய உரிமைச் சுதந்திரத்தை - அதாவது பிரிந்துபோகும் சுதந்திர உரிமையை ஆதரிப்பவர்கள் தனிப் பிரிவு வாதத்தை தூண்டி விடுகிறார்கள் என்று குற்றம் சாட்டுவதானது, விவாகரத்து சுதந்திர உரிமையை ஆதரிப்பவர்கள், குடும்ப உறவுகளைக் கெடுப்பவர்கள் என்று குற்றம் சாட்டுவது எவ்வளவு முட்டாள்தனமானதோ, அதைப் போன்ற முட்டாள்தனமானது.

இவ்வாறு கூறும் லெனின், அதே நூலில் மார்க்சீய தத்துவத்தின் முன்னோடி எனக் கூறப்படும் பிளாகா நோவ் என்ற மேதையின் கருத்தையும் மேற்கோள் காட்டுகிறார்.

> நமது சொந்த பெரிய ரஷ்ய இனத்தைச் சேர்ந்த நம்மவர்களின் தேசிய உணர்வுகளை எங்கே நாம் புண்படுத்தி விடுவோமோ என்ற பயத்தினால் சுயநிர்ணய உரிமையை நாம் மறந்துவிட்டாலோ, அல்லது

தயங்கினாலோ உலகத் தொழிலாளர்களே, ஒன்று சேருங்கள்! என்ற அறைகூவல், நமது வாயிலிருந்து வரும் வெட்கக்கேடான பொய்யுரையாகவே போய் விடும்.

இந்த மேற்கோளை எடுத்து எழுதியுள்ள லெனின், அதே நூலில் நார்வே 1905-ல் ஸ்வீடனில் இருந்து அறவே பிரிந்தது குறித்து கூறியதும் முக்கியமானதாகும்.

> பொதுமக்கள் வாக்கெடுப்பில் மிகப்பெருவாரியான நார்வே மக்கள், ஸ்வீடனிலிருந்து அறவே பிரிந்து போவதற்கு வாக்களித்தார்கள். இதை மறுக்கும் ஒரு சோஷியல் டெமாக்ரட் (Social-Democrat) என்பவர், அரசியல் சுதந்திரம், ஜனநாயகம் ஆகிய பிரச்சினைகள் பற்றி அக்கறையில்லாதவராக இருக்க வேண்டும்.

அரசியல் சுதந்திரம், ஜனநாயகம் ஆகியவற்றில் இந்த அளவு பரந்த கொள்கையுள்ளம் கொண்டவராக இருந்த லெனின் சிலை, எதற்காகத் தகர்க்கப்பட வேண்டும் என்பதுதான் விளங்கவில்லை!

அரசியல் அமைப்புச் சட்டத்திலேயே பிரிந்து போகும் உரிமைக்கு உத்திரவாதம் அளித்தது யார்? கம்யூனிஸ்ட் கட்சிதானே! இன்று அனைத்து குடியரசுகளும் பிரிந்து, தன்னாட்சி பெறும் இந்தக் கால கட்டத்தில் கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஏன் தடைவிதிக்கப்பட வேண்டும்? இதுவும் புரியாத புதிராக - அல்லது விரும்பத்தகாத முரண்பாடாகவே காட்சியளிக்கிறது. அரசியல் சுதந்திர உரிமை கேட்கும் ஒரு புதிய சகாப்தத்தில் ஒரு கட்சியின் கருத்து சுதந்திரத்தைத் தடுப்பது என்ன நியாயமோ?

உடன்பிறப்பே,

மார்க்ஸ் தத்துவத்தின் அடிப்படை நோக்கத்திலும் - லெனின் கொள்கையின் அடிப்படை அம்சத்திலும் மாறுபடாமல், நமது கழகத்திற்கென உள்ள கொள்கை, கோட்பாடுகளை நிறைவேற்றும் திட்டங்களை, அண்ணா வழியில் நின்று செயல்படுத்த அவர்கள் உருவாக்கிய கழகத்தைக் கட்டிக் காப்போம் எனும் உறுதியை மேலும் வலுப்படுத்திக் கொள்ளவே ஆண்டுதோறும் முப்பெரும் விழா கொண்டாடுகிறோம்!

பெரியார் பிறந்த நாளும்
அண்ணா பிறந்த நாளும்

கழகம் பிறந்த நாளும்

இணைந்தே வருவது ஆண்டுதோறும் நமது உணர்வுகளுக்கு உரம் வழங்கும் நிகழ்ச்சியன்றோ?

அதிலும் இந்த ஆண்டு, சிலிர்த்தெழுந்த சிங்கங்களாக சென்னைத் தலை நகரில் உன்போன்ற உடன்பிறப்புகள் பட்டாளத்து நடை போடுவதை நான் பார்ப்பது தானே, எனக்கும், உனக்கும், நம்மை எதிர்பார்த்திருக்கும் நாட்டுக்கும் ஆறுதல்!

எனவே, வந்து குவிந்திடு செப்டம்பர் 15 சென்னையில் என்ற அழைப்புடன், சோவியத் குறித்தும் சில சொல்லி வைத்தேன் இந்தக் கடிதத்தில்!

அன்புடன்,

மு. க.

07-09-1991

1783. திராவிட மறுமலர்ச்சி மாமன்றம்!

உடன்பிறப்பே!

ஆண்டில் இரண்டு நாட்கள் நமது கழகத்திற்கென சிறப்பான நாட்கள்! செப்டம்பர் 15-ஆம் நாள், அறிவியக்கச் சுடரொளி - அரசியல் ஞானமேதை - மறப்போம் மன்னிப்போம் என்ற மணிமொழிக்குச் சொந்தம் கொண்டாடி அதனைச் செயலில் காட்டிய மாணிக்க ஞாயிறு - பேரறிஞர் பெருந்தகை அண்ணா பிறந்த நாள்!

செப்டம்பர் 17-ஆம் நாள் அந்த இனிய அண்ணனை நமக்குத் தலைவராகத் தந்த, அந்தத் தலைவருக்குத் தலைவர் - இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற சிந்தனையாளர் - சாதிமதக் கொடுமையின் இடுப்பொடிக்க எழுந்திட்ட ஏந்தல் - கடவுள் பெயரால் நடக்கும் கூட்டுக் கொள்ளையை, ஏமாற்றுப் பிழைப்பை கருவறுக்கக் கிளம்பிய பகுத்தறிவுக் கதிரவன் - சுயமரியாதைச் சிங்கம் தந்தை பெரியார் பிறந்த நாள்!

ஆம்! அந்நாளே - தி.மு.கழகம் சென்னை ராபின்சன் பூங்காவில் அரசியல் சமுதாய இயக்கமாக பூத்து மணம் பரப்பத் தொடங்கிய நாள் 1949-ல்!

மாநில முழுதும் தி.மு.கழகத்தின் தொடக்க விழாவை நடத்தச் சொல்லி, அதில் கலந்து கொண்டு விளக்கவுரையாற்றுமாறு கழக முன்னணியினர்க்கு 1949-ல் அண்ணா கட்டளையிட்டபோது, நான் கலந்து கொண்டு கழகத்தைத் தொடங்கி வைத்த இடங்கள், முதல் நாள் தூத்துக்குடி! மறுநாள் கோயில்பட்டி!

செப்டம்பர் 15-க்கும் 17-க்கும் இடையிலே செப்டம்பர் 16 - என்றும் பதினாறாகத் திகழ்ந்து, விறுவிறுப்புடன் பணியாற்றக்கூடிய - பணியாற்ற வேண்டிய சிங்கக் குட்டி போன்றது இந்தக் கழகம் என்பதால் 15 - 16 - 17 ஆகிய மூன்று நாட்களையும் இணைத்து, ஆண்டுதோறும் முப்பெரும் விழா கொண்டாடுகிறோம்.

அண்ணா மறைவுக்குப் பிறகு நான் ஆட்சிப் பொறுப்பு ஏற்ற போதே, ஒவ்வொரு ஆண்டும் அண்ணா பிறந்த நாளாம் செப்டம்பர் 15 அன்று, காவல்துறையினர்க்கு அண்ணாவின் பெயரால் முதலமைச்சர் பதக்கம், விருது, பணமுடிப்பு, பரிசு இவற்றினை வழங்குதல் வேண்டுமென ஆணை பிறப்பித்து, 1976-க்குப் பிறகு இடையில் சில பல ஆண்டுகள் விடுபட்டுப் போயினும், மீண்டும் 1989-ல் அந்த நிகழ்ச்சி தொடரத் தொடங்கி விட்டது என்பதையும் நீ அறிவாய்!

இவ்வாறு அரசின் சார்பில் அண்ணா நினைவுபோற்றும் காரியங்கள் பலவற்றைச் செய்தது மட்டுமல்ல. அரசின் சார்பிலும், நமது கழகத்தின் சார்பிலும் - அண்ணாவின் கொள்கைகளை நிறைவேற்றுவதிலும் முனைப்பாகவே விளங்கியுள்ளோம்! இப்போதும் விளங்குகிறோம்!

பெரியாரையோ, அண்ணாவையோ அவர்களது பெயர்களை உச்சரிப்பதால் மட்டுமே அவர்கள் வழியில் நடைபோடுகிறோம் என நாட்டையும், மக்களையும் நம்ப வைத்து, சமுதாயத்திற்குப் பெருந்துரோகம் இழைத்திடல் நாம் விரும்பாதது மட்டுமல்ல! வெறுத்து ஒதுக்கும் முறையும்கூட!

அண்ணாவும், பெரியாரும், ஏன் அவர்களுக்கு முன்னால் திராவிட இயக்கம் கண்டோரும் - அந்த இயக்கம் வளர்த்தோரும் -இன்னும் சொல்லப் போனால் திராவிட இன உணர்வை, திராவிட இலக்கியங்களை, திராவிடப் பண்பாட்டை, நாகரிகத்தை, வரலாற்றை, தமது ஆர்வம் - ஆழ்ந்த ஆய்வறிவு - ஆற்றல் இவற்றின் மூலம் பல வழிதுறைகளில் வழங்கியோரும் - பகுத்தறிவுச் சுடர், விஞ்ஞான ஒளி - அளித்திடப் பல இன்னல் ஏற்றோரும் - சமத்துவ, சமதர்ம சமுதாயம் கண்டு ஆதிக்க சுக போகிகளை ஓரம் கட்ட வேண்டுமென்று ஓயாமல் உழைத்தவர்களும் - அவர்களது பெயர்களை நினைவு கூர்வதால் மட்டுமே, எதிர்காலச் சந்ததியை நினைத்து மகிழ்ச்சி அடைவோம் என எண்ணியவர்களுமல்ல! அப்படி எதிர்பார்த்தவர்களுமல்ல!

பேர்களை மட்டும் வைத்துக் கொண்டு, அவர்கள் எதற்காகப் பாடுபட்டார்களோ அந்த லட்சியங்களை மறந்துவிடுவோம் அல்லது துறந்து விடுவோம் என்பது, கிரீடத்தை மட்டும் கையில் ஏந்திக்கொண்டு தலையை இழந்து விடும் செயலுக்கு ஒப்பானது!

இப்போது கிரீடம் இல்லாமல் போயினும், திராவிட இயக்கக் கொள்கை, குறிக்கோள் எனும் உயிரை, மாயவிடாமல் காப்பாற்ற வேண்டிய பொறுப்பும், கடமையும் நமக்கு இருக்கிறது. அதனைக் காத்திடப் பணியேற்பதே அய்யாவுக்கும், அண்ணாவுக்கும் நாம் செலுத்தும் நன்றிக் காணிக்கை! மூத்த பெரும் சான்றோர்க்கும், வழிகாட்டிய பெருமக்களுக்கும் நாம் காட்டும் கடமையுணர்வு!

மலர்ச்சியுற்றிருந்த அந்த உணர்வுகள், திராவிட இயக்கம் என்ற பெயராலேயே அழிக்கப்படுவதற்கான அறிகுறிகள் அழுத்தம் திருத்தமாகத் தோன்றியுள்ள இந்தக் காலகட்டத்தில், கருகிப்போகும் காட்சியைக் காணுகிறோம்.

மலர்ச்சியுற்றிருந்தது - கருகிப்போய் - மீண்டும் மலர்ச்சியுறும்போது, அதனை மறுமலர்ச்சி என்கிறோம்!

இந்த வாரம் சாவி இதழில் தலையங்கத்தில் ஒரு செய்தி படித்தேன்.

ரஷ்யாவில் எரிவான் என்று ஓர் ஊர். அங்கே ஒரு வீட்டு மரம் இருபதாண்டுகளுக்கு முன்பு பட்டுப் போயிற்று. மிஞ்சி நின்ற அடிமரத்தின் வழியாகத் துளை போட்டு, குழாய் செலுத்தி, அதை ஒரு நீர்ச்சுனையாக மாற்றினார் வீட்டின் சொந்தக்காரர். அடுத்து நிகழ்ந்தது அற்புதம். பட்டமரம் உயிர் பெற்று இப்போது வருடா வருடம் பத்தாயிரம் பழங்களைத் தந்து கொண்டிருக்கிறது என்று சோவியத் நாடு என்ற இதழில் செய்தி வந்துள்ளது.

இந்த நம்பிக்கையை நண்பர் சாவி அவர்கள், தி.மு.கழகத்தின் எதிர்காலத்தைக் குறிப்பிட்டு அந்தத் தலையங்கத்தில் தெரிவிக்கிறார்.

ஆனால் நாம் விரும்புவது, தி.மு.கழகம் எனும் ஒரு அமைப்பின் எதிர்காலத்தை ஒளிமயமாக ஆக்குவது மட்டுமல்ல. மொத்தமாக திராவிட மறுமலர்ச்சிக்கான நல்லதோர் எதிர்காலத்தையே நாம் உருவாக்கிட முயற்சி மேற்கொள்ள வேண்டும்.

இந்த மறுமலர்ச்சி பற்றி சற்று விரிவாக, உடன்பிறப்பே! உனக்கு நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

ஒரு காலத்தில் கலை, இலக்கியம், ஓவியம், பண்பாடு, ஆகியவற்றில் சீரும் சிறப்பும் பெற்றிருந்து பின்னர், சீரழிந்தது

சீன நாடு! ஏன்? கலை, மக்களுக்காக - சமுதாயத்தின் நிலையை பிரதிபலிப்பதற்காக ஆக்கப்படாமல், மகுடமேந்திகளுக்கான கேளிக்கைப் பொருளாக ஆக்கப்பட்டது.

சமுதாயக் குதிரையின் கடிவாளத்தைப் பிடித்துக் கொண்டிருந்த அந்நாள் நாட்டுக் காவலர்கள், ஆடம்பர போதையில் மயங்கி ஆட்டம் போட்டனர். பிறகு எப்படி நீண்ட பயணத்தை நடத்த முடியும்? பந்தயம் வைத்தால் ரோமாபுரியின் பள்ளியறைகளைத் தோற்கடிக்கும் திறமையுடையனவாக இருந்தன சீன நாட்டுச் சிற்றின்பக் கூடங்கள்! ஒரு காலத்தில்! வீ என்று ஒரு அரசி இருந்தாளாம். செல்வாக்கு பெற்ற அரசி! அவள் தனது மன்னனிடம் ஒரு வரம் கேட்டாளாம்! அவனும் அட்டியில்லை கண்ணே! என்ன வேண்டும்? தருகிறேன்! என்றானாம். நமது ஆட்சியில் உள்ள ஆணழகர்களையெல்லாம் அழைத்து, அவர்கள் எல்லோரிலும் சிறந்தவனை என் அந்தப்புரத்திற்கு அனுப்பி வைத்திடுக! என்றாளாம். மன்னனும் மறுக்கவில்லையாம்! இன்னொருவன் இருந்தான் சீனத்து அரசனாக! ஷிங் என்று பெயர்! கன்பூஷியஸ் காலத்திலே வாழ்ந்தவன். அவன் தனது பஞ்சணையில் வாசனைத் தூளைப் பரப்பச் செய்வான். ஊரிலேயுள்ள வேசிகளை யெல்லாம் அழைத்து, பஞ்சணைமீது நடக்கச் செய்வான். அவர்களும் நடப்பார்கள். எவளுடைய காலடி அந்த வாசனைத் தூளின் மீது லேசாகப் பதிந்திருக்கிறதோ, அவளுக்கு முத்து மாலைகளைப் பரிசளிப்பான்! (முத்த மாலையும் கூடத்தான்) கனமாகக் கால்படிந்த பெண்களுக்கு, பட்டினிபோட்டு அவர்கள் உடல் கனத்தைக் குறைப்பான். ஆகா! என்ன கவலை நிறைந்த கலா உணர்ச்சி! சீனப் பெண்களுக்கு பாதங்கள் மெல்லியதாக இருக்க வேண்டுமென்று பாதங்களைக் கட்டிப் பண்படுத்தும் பழக்கமும் சீனாவில் பரவியது அதனால்தான் போலும்! சீன சமுதாயத்தை அழிக்கும் கண்மூடி வழக்கங்களை மண்மூடச் செய்திட கன்பூஷியஸ் என்ற பெரியோன் முயன்றான். அவனுடைய முயற்சி - நம் நாட்டுப் பட்டினத்தார், தாயுமானவர், சித்தர்கள், இராமலிங்கர் ஆகியோரின் முயற்சி போலத்தான் முடிந்தது! கருகிப் போய்க் கிடந்த அந்தச் சமுதாயம் சன்யாட்சன் காலத்திலே அரும்பு விடத் தொடங்கியது. ஆனால் பூரணத்துவம் பெறவில்லை. மீண்டும் அடித்த புயலில் அரும்பு உதிர்ந்து விடாமல் காத்து மறுமலர்ச்சிக்கு வாசல் திறந்தது மா சே துங்!

இங்கே, திராவிடப் பண்பாடு, வரலாறு, இலக்கியம், இனஉணர்வு, மொழி முதலியவற்றுக்குச் சொந்தக்காரராகிய நாம், நமது திராவிட மறுமலர்ச்சியையும் - அது கருகிடும் கட்டத்தில் தேவைப்படும் திராவிட மறுமலர்ச்சியையும் எண்ணிடவும், செயல்படவும் வேண்டிய நேரம் இது!

இங்கிலாந்து நாடு அதன் சில அரசர்களாலும், அரசிகளாலும் பெருமை பெற்றிருக்கலாம். ஆனால், ஷேக்ஸ்பியர் ஏற்றி வைத்த புகழ் தீபம் என்றும் அணையாத சுடர் கொண்டது.

பிரான்ஸ் என்றால் நெப்போலியனின் நினைவு வருவது போலவே, நாடக ஆசிரியர் மோலியோரின் நினைவும் வரத்தான் செய்யும்! ஹாலந்து வரலாற்றைக் காணும்போது ஆரஞ்சு வில்லியம் எதிரே நிற்கிறான். ஹாலந்தின் ஓவிய நிபுணன் ராம் ராண்ட்டும் நிழல்போல ஹாலந்தின் புகழைத் தொடருகிறான்.

இப்படி ஒவ்வொரு நாட்டிலும், இலக்கியமும், கலையும், ஓவியமும், சிற்பமும், பண்பாடும் ஆட்சியோடு போட்டி போட்டு அந்நாட்டுக்குப் பசுமை குலையாத சிறப்பையும் பெற்றுத் தந்துள்ளன. ஆட்சியோடு சேர்ந்து அந்நாடுகளைப் பாலைவனத் தரையாகவும் ஆக்கியிருக்கின்றன. அதே நிலையை நாம் இங்கும் காண முடிகிறது.

பாயும் அருவி - பறக்கும் கிள்ளை - அழகு துள்ளும் மான். ஆவேசம் அள்ளும் வேங்கை - இவைகளை ஓவியத்திலே சித்தரிப்பது மாறி,

பாயும் அருவியிலே ஒரு தாமரை - தாமரை இதழிலே லட்சுமி - பறக்கும் கிள்ளையிலே மன்மதன் - மானைத் துரத்தும் இராமன் - அவனுக்கோர் புராணம் என்று ஆகிவிட்டதைப் போல -

“திங்களைப் போற்றுதும் - திங்களைப்
போற்றுதும்
ஞாயிறு போற்றுதும் - ஞாயிறு
போற்றுதும்“

என்று தொடங்கிய தமிழ் ஒலி, பிறை சூடும் பித்தனைப் போற்றுதும் எனக் கால மாற்றம் பெற்றது போல -

திராவிட இன உணர்வு, இலக்கியம், கலை, காவியம், ஓவியம், வரலாறு, மொழி, அறிவியல், பண்பாடு அனைத்துக்குமே, மெல்ல மெல்ல மெத்த சாகசமுடன் பச்சைக் கொடிகளினூடே பச்சைப் பாம்பு ஊசலாடுவது போல் ஓர் ஆபத்து உருவாகி, நாம் போற்றிக் காத்திட வேண்டிய இந்த உணர்வுகள் என்ன ஆகுமோ என்ற கவலை, திராவிட இயக்க முன்னோடிகள், திராவிட இயக்கப் பற்றாளர்கள் அனைவரது உள்ளத்தையும் துளைத்தெடுத்துக் கொண்டுள்ளது.

அவசரமும், அவசியமுமாக ஆனால் திட்டவட்டமாக, இதற்கோர் செம்மையானதும், உறுதியானதும், நம்பிக்கையானதுமான வழிகாண வேண்டுமென்ற விழைவுடன், திராவிட முன்னேற்றக் கழக அறக்கட்டளையின் அறங்காவலர்கள் குழுக் கூட்டம், கடந்த ஆகஸ்டு திங்களில் நடைபெற்றபோது ஒரு அரிய முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

தி.மு.க. அறக்கட்டளையின் குறிக்கோளுக்கேற்ப, திராவிட மறுமலர்ச்சி மாமன்றம் (Acadamy of Dravidian Renaissance) என்ற அமைப்பினை ஒரு கல்வி நிறுவனமாக உருவாக்கி, முதல் கட்டமாக அஞ்சல் வழிக் கல்லூரியினைத் தொடங்கி நடத்துவது என்பதே அந்த முடிவாகும். எதிர்கால இளைய தலைமுறை திராவிட மறுமலர்ச்சி ஜோதியைத் தூக்கிப் பிடித்திட இஃதோர் வழியாகும்.

முப்பெரும் விழாவில் 15-ந்தேதியன்று திராவிட மறுமலர்ச்சி மாமன்றம் குறித்த விபரங்களும் - அதனை இயக்கி நடத்துவோர் - பொறுப்பேற்போர் குறித்தும் - சுட்டிக் காட்டப்படும்.

செப்டம்பர் 16 முதல் திராவிட மறுமலர்ச்சி மாமன்றத்தின் அலுவலகம், அண்ணா அறிவாலயத்தில் பணியினை ஆரம்பிக்கும்.

இனி ஒவ்வொர் ஆண்டும் - செப்டம்பர் 15 அண்ணா பிறந்த நாள் - செப்டம்பர் 16 திராவிட மறுமலர்ச்சி மாமன்றம் தொடங்கிய நாள் - செப்டம்பர் 17 பெரியாரும், நமது கழகமும் பிறந்த நாள் என, மூன்று நாட்களும் இணைந்து முப்பெரும் விழா நாளாக அமைந்திடும் அல்லவா?

என்ன? உடன்பிறப்பே! நீ சென்னைப் பயணத்துக்குத் தயாராகி விட்டாயா? இதுவரையில் அதற்கான ஏற்பாடுகளைச்

செய்யாமலா இருப்பாய்? குடும்பத்துடன் புறப்படு! குழந்தைச் செல்வங்களுடன் கிளம்பிடு!

திராவிட மறுமலர்ச்சிக்கு மாமன்றம் காணுகிற நாளும் இணைந்து வரும் முப்பெரும் விழா இந்த ஆண்டில் மிக முக்கியமான விழா!

அன்புடன்,

மு. க.

08-09-1991

1784. மருந்து குழைக்கும் மாதாவின் உணர்வு!

உடன்பிறப்பே!

ஆட்சிக்கு வந்துவிட்டால் நூறு நாட்களுக்குள் விலைவாசியை ஒரேயடியாகக் குறைத்து விடுவோம் என்று மத்தியிலே ஆட்சி நடத்துகிற காங்கிரசார் தேர்தல் நேரத்தில் முழக்கமிட்டு வாக்குகளைப் பெற்றார்கள். நாள் கணக்கெல்லாம் நாங்கள் சொல்ல மாட்டோம். நாங்கள் அரியாசனம் ஏறி அமர்ந்தவுடன் விலைகள் தலைகீழாக வீழும் - மலிவு! மலிவு! எல்லாப் பொருள்களின் விலையும் மலிவு! என்று அ.தி.மு.க. வீர சபதம் செய்து மாநில ஆட்சியில் மிகப் பெரும்பான்மை பலத்துடன் உட்கார்ந்தது!

விளைவு என்ன? விலைவாசி குறையாதது மட்டுமல்ல. குறைவதற்கு மாறாகப் பலமடங்கு ஏறிக்கொண்டே இருக்கிறது. மாநில ஆட்சியை விழுந்து விழுந்து ஆதரிக்கும் பத்திரிகைகள் கூட, மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் இருக்கிற உண்மையை மக்களிடம் திரை போட்டு மறைக்கவும் முடியாமல் திணறுகின்றன. ஏனெனில் அன்றாடம் அனுபவ ரீதியாக, மக்கள் அனுபவிக்கும் தொல்லையல்லவா அது?

> "ரேஷன் கடைகளில் பாமாயில் இல்லை. மண்ணெண்ணெய் பொது மக்களுக்குத் தாராளமாகக் கிடைக்கவில்லை. தெருவில் தள்ளுவண்டியில் மண்ணெண்ணெய் கொண்டு வந்து விற்கும் வியாபாரியையும் காணவில்லை. வெளிச் சந்தையில் ஐ.ஆர்.50 அரிசி விலை ஒரு கிலோ 6 ரூபாய் என்றும், பொன்னி விலை ஒரு கிலோ அரிசி ரூ.7.50 என்றும் விற்கப்படுகிறது. ஓட்டல்களில் சாப்பாட்டு விலையோ மிக உயர்வு! வெளியூரிலிருந்து சென்னைக்கு வருபவர்கள் சிற்றுண்டி முதல் சாப்பாடு வரையில் ஒரு

நாளைக்கு 17 ரூபாய் செலவு செய்தவர்கள், இப்போது 25 ரூபாய் செலவு செய்ய வேண்டியுள்ளது. அரிசி விலையை ஏற்றி உடனடியாக அந்த விலையைக் குறைத்ததாக அரசு அறிவித்த போதிலும், நியாய விலைக் கடைகளில் 20 கிலோ அரிசி வழங்குவதில்லை."

இப்படி அழுது புலம்பியுள்ளன அரசின் ஆதரவு ஏடுகள்!

உடன்பிறப்பே, சென்னையில் உள்ள பிரபலமான வியாபார கேந்திரங்களில் விசாரித்தறிந்து, அவர்கள் கொடுத்த புள்ளி விபரங்களின்படி சில பொருள்களின் விலை, கழக ஆட்சி நடைபெற்ற போது எப்படி இருந்தது என்பதையும், இப்போது எந்த அளவு உயர்ந்துள்ளது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நமது ஆட்சி கலைக்கப்பட்டது கடந்த ஜனவரி மாதம் முப்பதாம் தேதியல்லவா? அன்றைய தினம், துவரம் பருப்பு ஒரு கிலோ விலை ரூ.16.50 - ஆனால் இன்று ரூ.22.50 - அன்று உளுத்தம் பருப்பு ரூ.12.00 - இன்று ரூ.15.50 - அன்று கடலை எண்ணெய் ரூ.35 - இன்று ரூ.45 - அன்று நல்லெண்ணெய் ரூ.34 - இன்று ரூ.43 - அன்று புளி ரூ.7.50 - இன்று ரூ.15.00 - அன்று சாதாப்பூண்டு ரூ.6.50 - இன்று ரூ.20 - அன்று மிளகாய் ரூ.10.50 - இன்று ரூ.55 - அன்று தேங்காய் எண்ணெய் ரூ.44 - இன்று ரூ.60.

சில வற்றின் விலையேற்றம் குறித்து மட்டுமே சுட்டிக்காட்டியுள்ளேன்.

மத்திய அரசின் நிதிநிலை அறிக்கையால் மட்டுமன்றி, மாநில அரசின் நிதிநிலை அறிக்கையில் ஏழை நடுத்தர மக்களைப் பாதிக்கும் வரிகள் ஆண்டுக்கு 140 கோடி ரூபாய் என்ற அளவுக்கு விதிக்கப்பட்டுள்ளதால் - இன்னும் விலைவாசிகள் உயரத்தான் போகின்றன.

தங்களுக்கென்று ஓர் அரசைத் தேர்ந்தெடுத்துக் கொண்ட மக்கள், இந்த விலைவாசி உயர்வை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்ளத்தானே வேண்டும் என வாதத்திற்காக கூறினாலும் கூட, நமது கூட்டணிக்கு வாக்களித்த 75 லட்சம் வாக்காளப் பெருமக்களை நாம் மறந்துவிட முடியாதல்லவா? அதேபோல வாக்களிக்காத மக்கள், தேர்தல் வாக்குறுதிகளை நம்பி ஏமாந்துள்ள மக்கள், அதாவது இன்றைய ஆளுங்கட்சியை ஆதரித்து நின்ற

மக்கள் - நாம் போற்றும் ஜனநாயகக் கடமை உணர்வின் அடிப்படையில் புறக்கணிக்கப்படக் கூடியவர்கள் அல்லவே!

அந்தச் சந்துப் பக்கம் போகாதே! மாடு முட்டும்! என மழலைக்குச் சொல்லியும், அது கேட்காமல் போய் - மாடு முட்டிய காயத்துடன் வந்தால் உனக்கு நன்றாக வேண்டும்! சொன்ன பேச்சை கேட்டாயா? என்று திட்டிக் கொண்டே மருந்து குழைத்துக் கொண்டு ஓடிவருவதுதானே தாயின் உணர்வாக இருக்க முடியும்!

விலைவாசி உயர்வு மட்டுமா? நிலை குலைந்து தடுமாறுகிறது சட்டமும் ஒழுங்கும்! வேண்டாதவர்கள் மீது வெறுப்பு கக்கப்படுகிறது! வேண்டியவர்கள் சாராயக் கோடீஸ்வரர்கள் என்றால், அவர்களைப் பிடித்த போலீஸ் அதிகாரி உடனே பந்தாடப்படுகிறார்! பழிவாங்கும் செயல், எல்லை கடந்து போய்க் கொண்டிருக்கிறது! எரிமலை பொங்குவதையும் அதன் பயங்கர ஒலியையும் மகுடி ஊதிடுவதின் மூலம் மக்கள் காதில் விழாமல் செய்து விடலாமென எண்ணும் மதியிலிபோல, நாளும் தொடர்ந்து எழும் அடக்குமுறைகளை, பிரவாகமாகப் பெருகிடும் லஞ்ச லாவண்ய ஊழல்களை - கவர்ச்சிகரமான அதிரடி அன்பளிப்புச் செய்திகளையும், படங்களையும் கொண்டு மறைத்து விடலாமென மனப்பால் குடிக்கின்றனர்!

இனி, இந்த விவகாரங்கள் மக்கள் மன்றத்தை எட்டிடுமாறு செய்திடல் வேண்டும்! இப்பொழுதே மக்கள் உணரத் தொடங்கியுள்ளனர்! ஏடுகளின் இருட்டடிப்பால் அநியாயங்களை நிரந்தரமாக நியாயப்படுத்தி விடமுடியாது.

எனவே மேலும், நம் பணி தொடர, நமது கழக அமைப்புகள், வலிவுடன் ஆங்காங்கு அமைந்து இயங்கிட வேண்டும். நமது கழகத் தேர்தல் அதற்கேற்ப நடைபெற வேண்டும்.

அதற்கான ஆக்கமும், ஊக்கமும் பெற்றிடத்தான் செப்டம்பர் 15 சென்னையில் அணிவகுக்கிறோம்!

அன்புடன்,

மு. க.

10-09-1991

1785. உன் சிரம் நிமிரட்டும்! கரம் உயரட்டும்!

உடன்பிறப்பே!

தங்களின் சொந்த சுகபோகங்களுக்காக - சோபித வாழ்வுக்காக - சொர்க்கத்தைப் பதவி நாற்காலியில் காண வேண்டுமென்பதற்காக, கொள்கை, கோட்பாடு, மானம், மரியாதை இவைகளையெல்லாம் விட்டுவிடவோ, விற்று விடவோ துணிந்தவர்கள் இவையனைத்தையும் போலவே மனச்சாட்சியையும் வெகுதொலைவில் தூக்கி எறிந்துவிடக் கூடியவர்களே ஆவார்கள்!

அப்படிப்பட்டவர்கள்தான் ராஜீவ்காந்தியின் கொலையையொட்டி, நம்மீது வீண் பழி சுமத்தி, அதனை மக்கள் மத்தியில் பரப்புதற்கு அரசுப் பிரச்சார யந்திரங்கள், ஏனைய பிரச்சார சாதனங்கள் அனைத்தையும் பயன்படுத்திக் கொண்டு வெளுத்ததெல்லாம் பால் என எண்ணுகிற கள்ளமிலா உள்ளத்துப் பாமர மக்களை ஏமாற்றிப் பதவிகளில் இன்றைக்கு அமர்ந்துகொண்டு தி.மு.க. வீழ்ந்துவிட்டது என்று அவர்கள் சொல்வதை, அவர்களே நம்ப முடியாமல் - தி.மு.க.வை வீழ்த்த முடியாது என உறுதியாகத் தெரிந்த பின்னரும் - அதே பழைய பல்லவியைப் பாடிக் கொண்டு திரிகிறார்கள்.

ஓரிரு நாட்களுக்கு முன்பு சட்டப்பேரவையில் ஒரு காங்கிரஸ் உறுப்பினர் பேசினார். தி.மு.க. ஆட்சிதான் ராஜீவ்காந்தி கொலைக்குக் காரணம் என்று பேசினார். உடனே கழக உறுப்பினர்கள் செல்வராசனும், இளம்வழுதியும் அந்தக் கூற்றை மறுத்திட எழுந்துள்ளனர்.

நீங்கள் பேசுகிறபோது பதில் அளிக்கலாம். இப்போது குறுக்கிட வேண்டாம் என அவைத்தலைவர் கூறியிருக்கிறார்.

பரிதி இளம்வழுதிக்குப் பேசும் வாய்ப்பு திங்கட்கிழமை கிடைத்தபோது, தனக்குக் கிடைத்த நேரத்தில் நிதிநிலை அறிக்கை பற்றி பேசிவிட்டு, இறுதியாக ராஜீவ் கொலைக்கு

தி.மு.க. ஆட்சி காரணம் என்று கூறப்பட்ட கருத்தை மறுத்து, 1983 முதல் விடுதலைப் புலிகளுக்கு தமிழ்நாட்டில் முகாம் அமைத்துக் கொடுத்தது எந்த ஆட்சி? ஆயுதங்கள் வழங்கியது எந்த ஆட்சி? இராணுவப் பயிற்சி கொடுத்தது எந்த ஆட்சி? கோடிக்கணக்கில் அவர்களுக்குப் பணம் கொடுத்தது எந்த ஆட்சி? என்ற வினாக்களைத் தொடுத்து - இந்திரா காங்கிரஸ் ஆட்சியும், அ.தி.மு.க. ஆட்சியும் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவளித்த செய்திகளடங்கியக் கருத்தினை தெரிவித்துள்ளார். காங்கிரஸ் உறுப்பினர்கள் மிக வேகமாக - ஆவேசமாக... குறுக்கிட்டு, நிலைமை உச்சகட்டத்தை அடைந்து, பரிதி இளம்வழுதி தாக்குண்டு, தரக்குறைவாக ஏசப்பட்டு, பிறகு அவைத்தலைவரால் அவையை விட்டு வெளியேற்ற ஆணை பிறப்பிக்கப்பட்டு, இளம்வழுதியின் வேட்டி அவிழ்க்கப்பட்டு, அவைக்காவலர் இளம்வழுதியைத் தூக்கி வெளியே போட்டிருக்கிறார்கள். அந்த நிலையைக் கண்டித்து செல்வராசன் வெளிநடப்புச் செய்திருக்கிறார்.

அது போகட்டும்! இளம்வழுதி பேசும் போது குறுக்கிட்ட நிதி அமைச்சரும் மற்றும் சில மதி அமைச்சர்களும் இந்திரா காங்கிரசும், அ.தி.மு.க.வும் விடுதலைப் புலிகள் இந்தியாவுக்கு விசுவாசமாகவும், உறவுடனும் இருந்தவரையில்தான் அவர்களை ஆதரித்தன. பிறகு ஆதரவு தரவில்லை என்ற ஒரு கருத்தை வெளியிட்டுள்ளார்கள்.

அமைச்சர்கள் கூற்றுப்படி, விடுதலைப் புலிகளுக்கும் இந்தியாவுக்குமுள்ள உறவுக்கு என ஒரு கோடு கிழித்து ஆண்டுக் கணக்கீடு செய்தால் அது 1987க்கு முன்னுள்ள காலகட்டமாகத்தான் இருக்க முடியும்.

நிச்சயமாக 1987க்குப் பிறகுள்ள காலகட்டமாக இருக்க முடியாது. இதனை அவையில் நிதி அமைச்சரே குறிப்பிட்டிருக்கிறார்.

எனவே, அந்தக் காலகட்டத்துடன் விடுதலைப் புலிகளின் உறவை முறித்துக் கொண்டோம் என்று முதலமைச்சர் ஜெயலலிதா தலைமையில் அவையில் வீற்றிருக்கும் அமைச்சர்கள், அதிலும் குறிப்பாக நிதி அமைச்சர் தெரிவித்து, அந்தக் கால கட்டத்திற்குப் பிறகு விடுதலைப் புலிகளை தி.மு.க ஆதரித்தது என்ற கருத்துப்படப் பேசியுள்ளார். குற்றம் சாட்டியுள்ளார்.

நிதி அமைச்சர் நாவலர் போன்றவர்கள் சில முக்கியமான விஷயங்களை மறந்து விடுகிறார்கள். அதுதான் நமக்குப் பெரிய சங்கடம்.

1988 பிப்ரவரி 22-ஆம் நாள், அதாவது நிதி அமைச்சர் பிரஸ்தாபித்தவாறு - விடுதலைப் புலிகளுடன் இவர்கள், அதாவது அ.தி.மு.க. காங்கிரஸ் கூட்டணியினர் உறவை முறித்துக் கொண்ட 1987க்குப் பிறகு, இவர்களது தலைவியார் அவர்கள், பத்திரிகைகளுக்கு ஒரு பேட்டி கொடுத்திருக்கிறார். அந்தப் பேட்டியில் விடுதலைப் புலிகளின் ஒத்துழைப்பு இல்லாமல் இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு சுமுகமான தீர்வு காண முடியும் என்று கருதுவது விவேகமற்றது எனத் திட்டவட்டமாகக் கூறுகிறார்.

அதுமட்டுமல்ல! அதே பேட்டியில் தான் அண்மையில் எல்.டி.டி.இ. பிரதிநிதிகளுடன் பேசியதாகவும், தனது பேச்சு முக்கிய கட்டத்தில் இருப்பதாகவும் ஜெயலலிதா ஒப்புக் கொண்டார் என்றும், சில காலமாகத் தனக்கும் போராளிகளுக்கும் தொடர்பு இருப்பதாகவும் அவர் ஒப்புக் கொண்டார் என்றும் பத்திரிகைகள் அப்போது செய்தி வெளியிட்டன.

அதன்பிறகு 1988 மார்ச் முதல் தேதி ஜெயலலிதா ஏடுகளுக்கு அளித்த பேட்டியில், இலங்கைத் தமிழர்கள் மானத்துடன் வாழ்ந்திட இந்திய அரசும், விடுதலைப்புலிகளும் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்றார்.

விடுதலைப் புலிகள் இளைஞர்கள், இலட்சியவாதிகள். பிரச்சினைக்கு தீர்வு காண அவர்களின் உணர்வுகளை மதிக்க வேண்டும் என்று, அந்த பேட்டியில் வற்புறுத்திக் கூறினார்.

1988 மார்ச் 21-ந் தேதி நடந்த நிருபர்கள் கூட்டத்தில் ஜெயலலிதா பேசும்போது, இந்திய அரசு, விடுதலைப் புலிகளுக்கு எதிரான ராணுவ நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும். பிரபாகரனுக்கு ஏதாவது தீங்கு இழைக்கப்பட்டால், தமிழ்நாட்டில் விபரீத விளைவுகள் ஏற்படும் என்று எச்சரித்தார்.

நாவலருக்கும் அவருடன் நடமாடிக் கொண்டிருக்கும் அமைச்சர்களுக்கும், தங்கள் தலைவியார் ஜெயலலிதா தந்த பேட்டிகள் - இந்தியாவுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் நல்லுறவு

இல்லாத நேரத்தில்தான் என்பது நினைவுக்கு வரவில்லையோ? அல்லது வந்த நினைவுகளுக்கு வாய் வாசல் கதவுதான் திறக்கவில்லையோ?

அதுமட்டுமல்ல உடன்பிறப்பே! 1990-ஆம் ஆண்டு ஜூன் மாதம் பத்மநாபாவும், அவரது நண்பர்களும் விடுதலைப் புலிகளால் சென்னையில் கொலை செய்யப்பட்டவுடன், குறிப்பாக விடுதலைப் புலிகள் - மற்றும் இலங்கைப் போராளிகளின் வன்முறைகளைத் தடுத்திடவும், நடமாட்டங்களைக் கட்டுப்படுத்தவும் கழக அரசு பல நடவடிக்கைகளை எடுத்தது. விடுதலைப் புலிகள் 30 பேர் தேசிய பாதுகாப்புச் சட்டப்படி சிறையில் வைக்கப்பட்டனர். அவர்களது வாகனங்கள், வயர்லஸ் கருவிகள் பறிமுதல் செய்யப்பட்டன. நூற்றுக்கணக்கான புலிகள் மீதும் மற்றும் ஏனைய போராளிகள் மீதும் என்னென்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன என்ற விபரமான வெள்ளை அறிக்கையொன்றே தயார் செய்யப்பட்டு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கெல்லாம் வழங்கப்பட்டது. பத்திரிகைகளுக்கும் அந்த விபரம் தரப்பட்டது.

அத்தகைய நேரத்தில்தான், அதாவது பத்மநாபா படுகொலைக்குப் பிறகு - அக்டோபர் 3-ம் தேதி (1990) இந்தியன் எக்ஸ்பிரஸ் ஏட்டுக்கு ஜெயலலிதா அளித்த பேட்டியில் பின்வருமாறு கூறுகிறார்.

* கடந்த இரண்டு மாதங்களாகப் புகார் சொல்லக்கூடிய அளவுக்கு விடுதலைப் புலிகள் தமிழ்நாட்டில் எந்த நடவடிக்கைகளிலும் ஈடுபடவில்லை. ஓர் அரசாங்கத்திற்கு எதிராகப் போர் நடத்துகிறார்கள். இது ஒரு மகத்தான செயலாகும். எல்.டி.டி.இ. ஒழிக்கப் பட்டால் இலங்கையில் தமிழ் இனம் ஒழிந்துவிடும். விடுதலைப் புலிகள் வெற்றி தமிழர்களின் வெற்றி.

* முதலமைச்சர் கருணாநிதி, தனது அதிகாரத்திற் குட்பட்ட எல்லா உதவிகளையும் விடுதலைப் புலிகளுக்கு அளிக்க வேண்டும். மத்திய அரசு இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் தீர்வு காண வேண்டும். அல்லது விடுதலைப் புலிகளை இந்திய அரசு நூறு சதவிகிதம் ஆதரிக்க வேண்டும்.

* விடுதலைப் புலிகள் கடந்த காலத்தில் தவறு செய்திருக்கிறார்கள் என்பதற்காக, நாம் அவர்களை

ஆதரிக்காவிட்டால், இலங்கையில் தமிழினம் அழிந்துவிடும்.

இத்தனை கருத்துகளும் நாவலர் அவர்களின் தலைவியார் உதிர்த்த முத்துக்கள்தான்! அதாவது 1987-க்குப் பிறகு, இந்தியாவுடன் விடுதலைப் புலிகள் உறவு முறிந்தபிறகும்! 1990 - ல் பத்மநாபாவின் கொலைக்குப் பிறகும்!

அந்த பேட்டியில் எக்ஸ்பிரஸ் நிருபரிடம் இன்னும்கூட ஒன்று சொல்லுகிறார்! எம்.ஜி.ஆர். செய்த அளவு இல்லாவிடினும், விடுதலைப் புலிகளுக்கு முதலமைச்சர் கருணாநிதி ஏதாவது உதவி செய்கிறாரா? என்று கேட்டதற்கு, ஜெயலலிதா கருணாநிதி உதவி செய்ததற்கு எந்த ஆதாரமும் இல்லை என்று மறுத்தும் இருக்கிறார்.

இது அக்டோபர்! அடுத்து 1991 ஏப்ரல் 29-ந் தேதி இந்து இதழுக்கு ஜெயலலிதா அளித்த பேட்டி வருமாறு :-

சிங்கள ராணுவத்தினர் நடத்தும் இனப் படுகொலை இலங்கையில் தொடர்ந்தால், பங்களாதேஷ் பிரச்சினையில் இந்தியா, ராணுவ நடவடிக்கை எடுத்தது போல் இலங்கைத் தமிழர் பிரச்சினையிலும் அத்தகைய நடவடிக்கை எடுத்திட யோசிப்பது தவறல்ல!

பரிதி இளம்வழுதி பேச்சில் குறுக்கிட்டு, தி.மு.க. ஆட்சியின் காரணமாகத்தான் ராஜீவ்காந்தி கொலை நடந்தது என்ற காங்கிரஸ் உறுப்பினரின் குற்றச்சாட்டுக்கு வக்காலத்து வாங்கிய நாவலர் அவர்கள், அவரது தலைவியார் ஜெயலலிதா எந்தக் கால கட்டத்தில் இந்தக் கருத்துகளை எல்லாம் விடுதலைப் புலிகள் பற்றி சொன்னார் என்பதை, இனிமேலாவது அந்தப் பத்திரிகையைப் பார்த்து தெளிவு பெறுவாரா என்பதே என் கேள்வி!

நாவலரிடம் வேறு எதை நாம் எதிர்பார்க்க முடியும்?

இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போரில் ஈடுபட்டதற்காக பேராசிரியர் உள்ளிட்ட பத்து கழக சட்டமன்ற உறுப்பினர்களின் பதவியைப் பறித்திட, எம்.ஜி.ஆர். இட்ட ஆணையை அவையில் படித்து நிறைவேற்றிய கொள்கை வேங்கை (?) ஆயிற்றே அவர்!

காங்கிரஸ் உறுப்பினர், ராஜீவ் கொலைக்கு தி.மு.க. ஆட்சிதான் காரணம் என்றதும், உடனே நாவலர் எழுந்து, குறுக்கிட்டு, தனது தோள்களைக் குலுக்கி -

"உறுப்பினரின் கருத்து சரியல்ல! மிகத் தவறு! தி.மு.க. ஆட்சி நடந்த இரண்டு ஆண்டுகளில் ராஜீவ் காந்தி தமிழ்நாட்டுக்கு எட்டு முறை வந்து, எட்டு முறையும் பத்திரமாகவே திரும்பிச் சென்றார்! ஆனால் கவர்னர் பீஷ்ம நாராயண சிங் ஆட்சியிலேதான், ஜனாதிபதி ஆட்சியிலேதான் அவர் திரும்பிச் செல்ல முடியாமல் கொலை செய்யப்பட்டார்! என்று பதில் அளித்திருக்க வேண்டுமென நாம் எதிர்பார்க்க முடியுமா?"

அந்த மனச்சாட்சியுள்ள நாவலர் என்ற மனிதர், பெரியாரும், அண்ணாவும் தொடங்கிய இந்தி எதிர்ப்புப் போராட்ட வரலாற்றையே மறந்துவிட்டு, பேராசிரியரையும், கழக சட்டமன்ற உறுப்பினர்களையும் பதவியிழப்பதாக அறிவித்தாரே! அன்றைக்கே மாயமாய் மறைந்து விட்டாரே!

இவர் நாவலரல்ல, காவலர்! தமிழ் இனப் பூங்காவுக்கல்ல - பூங்காவில் நுழைந்திடும் புற்றரவங்களுக்கு!

உடன்பிறப்பே,

எதிரிகள், எதிரிகளுக்கு துணை போவோர் இந்தக் கழகத்தின் வீழ்ச்சியிலே தான் தமது சுகபோகம் இருக்கிறதெனத் திட்டமிட்டு, இன்னமும் பாமர மக்களிடத்திலே பச்சைப் பொய் கொண்டு வலைபின்னி விரிக்கப் பார்க்கிறார்கள்.

அந்த வலையறுத்துத் தள்ளி வரும் அடலேறுகளாக, உன்போன்ற உடன்பிறப்புகள் இலட்சோப லட்சம் பேர் இதோ பாரீர் கடலென ஆர்ப்பரிப்பதை! ஆயிரம் முரசங்களென முழங்குவதை! என்று நான் அவர்கட்குக் காட்டிட, சென்னையில் 15-ஆம் நாள் உன் சிரம் நிமிரட்டும்! கரம் உயரட்டும்!

அன்புடன்,

மு. க.

11-09-1991

1786. அவர்கள் அறிந்து கொள்வது நல்லது!

உடன்பிறப்பே!

குழலும், யாழும் குழந்தையின் மழலை இனிமைக்கு ஈடாகா என்று கூறியவர் வள்ளுவர். அடா! அடா! காது குடைகிறது, ஏன்தான் இதுகள் கழுதை போலக் கத்துகின்றன, கோட்டான் போலக் கூவுகின்றன என்று - குழந்தைகளைப் பேணி வளர்ப்பதில் பொறுமையும், திறமையும் இல்லாதவர்கள் அலறக் கேட்கிறோம். கவலையா கொள்கிறோம் - இல்லை! இல்லை! கை கொட்டிச் சிரிக்கிறோம்! முரசொலி, வீரர்களுக்கு மகிழ்ச்சி அளிக்கிறது. வீணில் உண்டு கொழுத்து இருப்போருக்கோ? ஐயோ! முரசு அறைகிறார்களே! என்று திகில் பிறக்கிறது.

1956-ஆம் ஆண்டு அறிஞர் அண்ணா தம்பிக்கு எழுதிய கடிதங்களில் ஒன்றில் இவ்வாறு குறிப்பிடுகிறார். அதைப் படித்தபோதும், அந்த முரசின் ஒலி கேட்டு குத்துதே! குடையுதே! என செவிபொத்தி சிரமசைத்து சீற்றங்கொள்வோர் கிளம்பியுள்ளதைக் காணும் பொழுதும் முரசொலி குறித்து அண்ணா எழுதிய வரிகள் எனக்கும், உனக்கும் உற்சாகமூட்டும் என்பதில் ஐயமில்லை.

துள்ளி வரும் வேலாக, ஆவேசத்தை அள்ளி வரும் வாளாக, திராவிட இயக்கத்தின் இளைய தலைமுறை அணிவகுத்த நேரத்தில், 1942-ல் அதாவது ஏறத்தாழ ஐம்பதாண்டுகளுக்கு முன்பு ஆரூரில் ஆர்த்தெழுந்ததுதான் முரசொலி!

அன்று ஒலிக்கத் தொடங்கிய முரசொலி, கண்ட களங்கள் எத்தனை! சந்தித்த அடக்குமுறைகள் எத்தனை! எத்தனை!

செய்திகளைத் திரித்து வெளியிடுதல்
இருட்டடிப்புச் செய்தல்

விஷமமூட்டல்
விஷம் கக்குதல்
வெறுப்பைத் தூண்டுதல்
வெகுண்டு எதிர்த்தல்

எனும் விதத்தில் எல்லாம் இந்த இயக்கத்திற்கு எதிராகப் பல ஏடுகள் நாலாதிசைகளிலும், நாள்தோறும் படை நடத்தியபோது, அன்று முதல் இன்று வரையில் இன்னல் கண்டு இடறி விழாமல் - மிரட்டல் கண்டு மெலிந்து நலிந்திடாமல் - ஆணவம், அச்சுறுத்தல், இவற்றுக்கு அடங்கி ஒடுங்காமல் - வஞ்சகத்திற்கு வளைந்து கொடுக்காமல் - ஏறு நடைபோடுவதுதான் முரசொலி!

கயவர்களின் கண்மூடித்தனமானத் தாக்குதல்களையும் கலவரங்களையும் சந்தித்து மீண்டது முரசொலி!

தொடங்கிய காலம் முதற்கொண்டு, சில திங்களுக்கு முன்பு பல லட்ச ரூபாய் சேதம் விளைவிக்கிற அளவுக்கு மாற்றார் நடத்திய வன்முறை வெறியாட்டங்களைக் கண்டு சிரித்தது - சிலிர்த்தெழுந்தது முரசொலி!

ஆம்! வேலும், வாளும் உண்டாக்கிய ரத்தக் கடலில், பயங்கர மூச்சுவிட்டுக் கொண்டு மிதந்து செல்லும் வீரர்களின் மண்டையோடுகளை முத்தமிட்டபடி பயணம் நடத்தும், முறிந்த எலும்புத் துண்டங்களையும், அறுந்த நரம்புத் துகள்களையும் கண்டு முகாரி பாடாமல் - முதுகு காட்டாமல் - முகம் சுளிக்காமல் - முன்னேறு நீ! முன்னேறு நீ என்று முரசொலிக்கும் புறநானூற்றுத் தமிழர் காலத்து முரசொலியாக ஒலித்துக் கொண்டிருப்பதே நமது முன்னேற்றக் கழகத்தின் முரசொலி!

இந்த முரசொலியின் முழக்கத்தால் இன்று காதைப் பொத்திக் கொள்வோர், அன்று இதன் நிழலில் நின்று வளர்ந்தோர்! தமிழகத்தில் பெரியதோர் எழுத்தாளர் பட்டியலை உருவாக்கிய பெருமையில் முரசொலிக்கும் பங்கு உண்டு!

இன்று பெரும் பொறுப்புகளில் இருப்போர் பலர், அன்று முரசொலி அலுவலகத்தில் பணியாற்றியவர்கள்.

முரசொலியை எதிர்த்து எழுத்துப் படைக்கலன்களை ஏவுவோர் பலரும்கூட, அந்தப் பயிற்சியை முரசொலிப் பாசறையில் பெற்றவர்கள்தான்.

பொது வாழ்வில் ஈடுபட்டுள்ள பேச்சாளர், எழுத்தாளர் என எத்தனையோ பேர் இந்தப் பட்டறையில் தயாரான ஈட்டிமுனைகள்தான்.

முரசொலிக்கென ஒரு நீண்ட நெடிய வரலாறு உண்டு!

ஐம்பதாண்டு கால அதன் வரலாற்றுப் பாதையில் அவாள் ஏடுகளுக்கு ஒரு சவால் என விளம்பரம் தந்து விகடனைப்போல், கல்கியைப் போல - பொங்கல் மலர்களையும், அண்ணா பிறந்த நாள் மலர்களையும் வெளியிட்டு, முதன்முதலாக அந்தப் புதிய சரித்திரத்தைப் படைத்தது முரசொலிதான்!

1942-ல் துண்டுத்தாள்! அந்தத் தாள் ஆயிரம் பத்தாயிரமென அச்சியற்றப்பட்டு, திருவாரூரில் இருந்து திருவிடமெங்கும் திங்கள் தோறும்! பின்னர் திங்கள் இருமுறை! பிறகு வார இதழாக! அடுத்து நாள் ஏடாக! ஆம்! கழகத்தின் போர் வாள் ஏடாக!

வார இதழாக நடந்தபோது அச்சகக் கணக்குகளைத் தீர்ப்பதற்கு அன்னையார், தமக்கையார், மனைவியின் நகைகளை அடகுவைத்த அந்த நிகழ்ச்சிகள் எல்லாம் என் நெஞ்சில் நிழலாடுகின்றன!

"பரணி பல பாடிப் பாங்குடன் வாழ்ந்த பைந்தமிழ் நாட்டில்
சொரணை சிறிது மிலாச் சுயநலத்துச் சோதாக்கள்
சிலர் கூடி
வருணத்தை நிலைநாட்ட வகையின்றிக் கரணங்கள்
போட்டாலும் -
மரணத்தின் உச்சியிலும் மானம் காக்க; மறத்தமிழா,
போராடு!"

1944-ஆம் ஆண்டு இப்படியொரு கவிதை வரியை முகப்பாகக் கொண்டு முரசொலி வந்தது. ஏன் தெரியுமா?

சிதம்பரத்தில் வர்ணாஸ்ரம மாநாடு நடத்தினார்கள். அதனைக் கண்டித்து வெளிவந்த முரசொலி அது! அதனால் என்னைச் சிதம்பரத்திற்குள்ளேயே நுழையவிடாமல் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டது. ஆனால், அந்த முரசொலி சிதம்பரம் வீதிகளில், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் எல்லோருடைய கரங்களிலும் தவழ்ந்தது. நண்பர் மதி, நண்பர் இளம்வழுதி, நண்பர் வில்லாளன் முயற்சியால்!

முரசொலியைத் தாக்குவதற்கென்றே காங்கிரசார் அந்தக் காலத்தில் ஊர்வலங்கள் நடத்தியதுண்டு!

1967-ல் கழகம் ஆளுங்கட்சியாகி, அண்ணா தலைமையில் அரசு நடந்தபோது - ஆகஸ்டு 15-ஆம் நாளன்று காங்கிரசார் நடத்திய சுதந்திரதின ஊர்வலம், முரசொலியைக் குறிவைத்து உள்ளே நுழைந்து, உடைத்து நொறுக்கிய நிகழ்ச்சியெல்லாம் வரலாறு!

அண்ணா இருந்தபோது, அவரது விழாக் கட்டுரையில்லாமல் முரசொலி பொங்கல் விழா மலர் வெளிவந்ததே இல்லை! எத்தனை எத்தனை எண்ணங்குலுங்கும் வண்ணத் தமிழ் ஓவியங்களை, நமது அண்ணனின் பேனாமுனை முரசொலி வாயிலாகத் தமிழ் நிலத்துக்கு வடித்தளித்திருக்கிறது என்பதை அறியாதோர் இந்த இயக்கத்தை அறியாதோரே ஆவர்.

எமர்ஜன்சி அறிவிக்கப்பட்டவுடன், முரசொலியில் இட்லராகிறார் இந்திரா என்று தீட்டப்பட்ட கேலிச் சித்திரத்தை வெளிநாட்டு ஏடுகள் பல வெளியிட்ட செய்திகள் எல்லாம் உண்டு.

1965 இந்தி எதிர்ப்புப் போரில், முரசொலியின் பங்கு எத்தகையது என்பதை அந்தப் போர்க்களத்துச் சிப்பாய்களாக அன்றிருந்த மாணவர்கள், இன்று முதிர்ந்தவர்களாகியும் மறந்திருக்க மாட்டார்கள்.

போலீசார் புடை சூழ, ஒரு போர்க்களமாகவே முரசொலி அலுவலகம் அப்போது காட்சி அளித்தது

இந்தி எதிர்ப்புப் புரட்சிக்கு முரசொலி அலுவலகம் பாசறைக் கூடமாக, பாடிவீடாக இருந்தது என்று குற்றம் சாட்டி, ஆசிரியரான என்னையும், வெளியீட்டாளர் தம்பி முரசொலி மாறனையும் பக்தவத்சலம் அரசு தேசியப் பாதுகாப்புச் சட்டப்படி கைது செய்து, என்னைப் பாளைச் சிறையிலும், மாறனை சென்னைச் சிறையிலும் வைத்தது. எனினும் முரசொலி, முடங்கி ஒடுங்கவில்லை.

எமர்ஜன்சி நேரத்தில் இந்தியாவிலே எந்தப் பத்திரிகைக்குமில்லாத அளவுக்கு முரசொலிக்குத் தணிக்கை! செய்திகளுக்குத் தணிக்கை! மறைந்துவிட்ட காமராஜர், அண்ணா பற்றிக்கூட புகழ்ந்து எழுத முடியாது! அதற்கும் மூர்க்கத்தனமானத்

தணிக்கை, முரசொலிக்கு மட்டும்! மற்ற ஏடுகளில் தணிக்கை அதிகாரி பக்கம் பக்கமாக வரி வரியாகப் பார்த்து தணிக்கை செய்தார் எனில் முரசொலியிலோ, எழுத்துகளைப் பிளந்து பார்த்து தணிக்கை செய்தனர்! அந்த தணிக்கையை எதிர்த்து அண்ணா சாலையில், அண்ணா சிலை முன் நின்று தனிநபர் அறப்போர் நடத்தி நான் சிறை புகுந்தேன்!

தணிக்கையுடன் நின்றதா? முரசொலி அலுவலகத்திற்கு யார் வரினும் மறுநாள் அவர்களை மிசா சட்டம் தீண்டும்! சிறைவாசம் தொடங்கும்!

எமர்ஜன்சி என்பதால் இஷ்டத்துக்கு அதிகாரிகளின் படையெடுப்பு - சோதனை! பகல் இரவு என பல மணி நேரம், பல நாட்கள் சோதனை!

இத்தனைக்கும் ஈடு கொடுத்து வீர முழக்கமிடும் முரசொலிதான் உடன்பிறப்பே, உன் கையில் இருப்பது!

திருவாரூரில் முரசொலியை துண்டுத்தாள் வடிவில், தொய்வின்றி ஓராண்டு நடத்தியதற்கே, எங்களுக்கே ஏற்பட்ட ஆச்சரியத்தில் அதன் ஆண்டு விழாவைக் கொண்டாடினோம் - அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலிருந்து பேராசிரியரையும், நாவலரையும் அழைத்து! அப்போது அவர்கள் மாணவர்கள்! இராமய்யா, நாராயணசாமி என்று அவர்களுக்கு இயற்பெயர்! அன்பழகன், நெடுஞ்செழியன் என்ற பெயருடன் முரசொலி ஆண்டு விழாவில் கலந்து கொண்டனர்.

அன்று முதலாண்டு விழா! இப்போது முரசொலி ஐம்பதாவது பொன்விழா ஆண்டினை நோக்கி நடைபோட்டுக் கொண்டிருக்கிறது!

இயந்திரக் கோளாறு காரணமாக (1960-61-ல்) ஒரு பத்து நாள் முரசொலி நாளிதழை நிறுத்தும் நிலை ஏற்பட்டது. அப்போதுதான் சம்பத் குழுவினர் அண்ணாவுக்கு எதிராகப் போர்க் கொடி தூக்கி கழகத்தில் கலாம் விளைத்த நேரம். இந்த நேரம் முரசொலி நடந்தே ஆக வேண்டும். நிறுத்தாதே! எனக் கட்டளையிட்டார் அண்ணா என்றால், அன்று முரசொலியின் தேவையை எந்த அளவுக்கு அண்ணா உணர்ந்திருந்தார் என்பது விளங்கும்.

இன்று தினகரன் நாளேடு நமது கழகச் செய்திகளுக்கு முக்கியத்துவம் தருகிறது. வரவேற்று மகிழ்கிறோம். ஆனால் அன்று தேடித் தேடிப் பார்த்தாலும், கழகச் செய்திகளை கடுகத்தனை அளவு கூடப் போடுவதற்கு ஏடில்லை! தப்பித் தவறி செய்தி வெளியிடும் தினத் தந்தி தி.மு.க.வை பருவ மங்கை எனச் சித்தரித்து அண்ணாவை கேலி செய்து கொண்டிருக்கும். செய்தி வெளியிடும் நோக்கம் தீதானதாகவே இருக்கும்! பெரும்பாலும் நம்மை இழித்துப் பழிக்கும் செய்திகளையே அந்த ஏடு அப்போது பிரசுரித்து மகிழும்.

அந்தக் காலகட்டத்தில் ஒரு நம்நாடு - மாலை மணி என நாளிதழ்கள் நமக்கென இருந்தாலும், தனது பயணத்தைக் கடுமையான சூறாவளிக்கு மத்தியில் தடைப்படாமல் நடத்தி, இன்றும் கழகத்தின் கேடயமாகவும், போர்வாளாகவும் விளங்குவது முரசொலிதானே!

அதனால்தான் உனக்கும், எனக்கும் முரசொலியின் மீதுள்ள அன்பினையும், பற்றுதலையும் விட ஆயிரம் மடங்கு எரிச்சலும், ஆத்திரமும் நமது எதிரிகளுக்கு முரசொலியின் மீது இருக்கிறது.

குறிப்பாகக் காங்கிரஸ்காரர்களுக்கு முரசொலி கேட்டாலே மூளை கொதிக்கும்!

இப்போது சொல்லவே வேண்டாம்! துரோக சக்திகள் முரசொலியைத் தீர்த்துக் கட்டலாம் எனத் துடித்து நிற்கும் நிலைமையைப் பயன்படுத்திக் கொண்டு முரசொலிக்கு மூடுவிழா நடத்தி விடலாமா எனக் காங்கிரசார் கனவு காண்கின்றனர்.

காங்கிரசில் உள்ள எல்லோரையும் நான் சொல்ல மாட்டேன். இப்படி ஒரு ஏடு இருந்திடல் வேண்டும். இருள் கிழித்து ஒளியினை மக்களுக்குக் காட்டிட! என எண்ணிடும் நல்ல காங்கிரஸ் நண்பர்களும் உண்டு.

ஆனால் என்ன செய்வது பாபம்! அவர்கள் காங்கிரசில் இருந்து பழகி விட்டார்களே - அதனால் தங்களின் போக்கை மாற்றிக் கொள்ள இயலாது, எதிர் நீச்சல் போட முடியாமல் தண்ணீர் போகும் திசையிலேயே போய்க் கொண்டிருக்கின்றனர்.

மறைந்த நண்பர் கவியரசு கண்ணதாசன் தன்னைப் பற்றியும், தன்னைக் காங்கிரசில் இணைத்துக் கொண்டது பற்றியும், அதிலிருந்து வெளிவரத் தான் விரும்பாதது பற்றியும் அவரது தென்றல் பத்திரிகையில் எழுதியிருந்தார். ஒரு சிறுகதைபோல!

நீ பன்றியாகக் கடவாய் என்று ஓர் அரசன் சபிக்கப்பட்டான். சாபம் பெற்ற அரசன், தன் மகனை அழைத்து, மகனே! மன்னனாக வாழ்ந்த நான் பன்றியாக வாழ விரும்பவில்லை. ஆகவே நான் பன்றியாக மாறியதும், என்னை வெட்டிக் கொன்று விடு! என்று கேட்டுக் கொண்டான். மகனும் சம்மதித்து, தந்தை - பன்றியாகும் சமயத்தை எதிர்பார்த்திருந்தான். அரசன் பன்றியாகி விட்டான். மகன், பன்றியை வெட்ட வந்தான். பன்றி சொன்னது, மகனே! இந்த வாழ்க்கையும் எப்படி இருக்கிறது என்று பார்த்து விடுகிறேன்! அடுத்த ஆண்டு வந்து என்னைக் கொன்று விடு என்று! சரி என்று கூறி மகன் போய் விட்டான். ஓராண்டு முடிந்து தந்தைப் பன்றியைக் கொல்ல இளவரசன் வந்தான். எங்கும் தேடினான். கடைசியில் கண்டுபிடித்தான். தந்தைப் பன்றி, ஒரு பெண் பன்றியுடன் சில குட்டிகளுடனும், சகதியில் படுத்திருந்தது. தந்தைக்கு அளித்த வாக்கின்படி இளவரசன், பன்றித் தந்தையைக் கொல்லப் போனான். அதற்குள் பன்றித் தந்தை மகனைத் தடுத்து, அன்பு மகனே! எனக்கு இந்தப் பன்றி வாழ்க்கை பழகி விட்டது. அதனால் நான் இந்தச் சகதியிலேயே காலம் கழிக்கிறேன். என்னைக் கொல்லாதே. போய்விடு என்று கூறி விட்டது. அதுபோல, என் இனிய நண்பர்களே! காங்கிரஸ் கட்சியுடன் வாழும் வாழ்வு எனக்குப் பழகிவிட்டது.

இவ்வாறு கவிஞர் கண்ணதாசன், தன்னைப் பற்றி அன்று எழுதிக் கொண்ட சுய விமர்சனம், எத்துணைச் சுவையானது (?) பார்த்தாயா?

எனவே, உண்மைகள் வெளிவரக் கூடாது - எதிர்ப்புக் குரல் எந்தப் பக்கமிருந்தும் எழக் கூடாது - ஏன்? எப்படி? என்ற கேள்வி கிளம்பிடக் கூடாது - அப்படிக் கிளம்பிடின், அவை கிளம்பிய திசையையே தீ வைத்துப் பொசுக்க வேண்டும் என்பது காங்கிரசார் நீண்ட காலமாக நடத்திப் பழக்கப்பட்ட காட்டு தர்பார்! அந்தத் தர்பாரில் தடிதூக்க எட்டப்பர்களும் கிடைத்து விட்டால்! கிடைத்த வாய்ப்பை நழுவ விடுவார்களா?

அதனால்தான் ஜனநாயகத்தின் குரல்வளையை நெரிக்கத் துடிக்கிறார்கள்! முரசொலி ஏட்டினைக் கரத்தில் மட்டுமல்ல; உரம் பெற்ற நெஞ்சிலும் தாங்கி; அய்யாவின் துணிவை - அண்ணாவின் உறுதியை - கழகத்தின் மாண்பை உயிர் மூச்சாக, குருதியோட்டமாக, இதயத் துடிப்பாகக் கருதியுள்ள முன்னேற்றக் கழகத் தொண்டர்கள் மட்டுமல்ல! ஜனநாயகத்திற்கு விரோதமாக நடைபெறும் அட்டகாசங்களைத் தீரமாக எதிர்த்துக் குரல் கொடுக்கும், தேசிய முன்னணி இடதுசாரிக் கட்சிகளின் ஆற்றல் மிகு செயல்வீரர்களும் ஓரணியில் நிற்கிறார்கள் என்பதை ஆணவம் தலைக்கேறியோர் அறிந்து கொள்வது நல்லது!

அன்புடன்,

மு. க.

12-09-1991

1787. என் அன்பகமே! அறிவகம் காண, வா!

உடன்பிறப்பே!

கண்டாயா நமது அறிவகத்தின் கவின்மிகு புதியக் கட்டிடத்தை! வரும் 15-ஆம் நாள், அண்ணா பிறந்த நாளில் காலை 9 மணியளவில், பேராசிரியர் தலைமையில் நான் திறக்கவிருக்கும் திருமாளிகை இது! அறிவகம் இதன் பெயர்! நமது அண்ணன் 40 ஆண்டுகளுக்கு முன்பு 1951 டிசம்பர் திங்கள் 2-ஆம் நாள் மாலை 5 மணிக்கு, நாகர்கோயில் நண்பர் ஜான் தலைமையில் இந்தக் கட்டிடத்தைத் திறந்து வைத்த நிகழ்ச்சியில் அறிவகம் எனும் அழகு திருப்பெயர் சூட்டினார். 40 ஆண்டுகளுக்கு முன்பு இது ஒரு பழையகாலக் கட்டிடமாக வாங்கப்பட்டது. ஏறத்தாழ நாலு கிரவுண்டுக்குச் சற்றுக் குறைந்த அந்தப் பழைய கட்டிடத்தை 25000 ரூபாய்க்கு அன்றைக்குக் கழகம் வாங்கியது. அண்ணா எடுத்துக் கொண்ட பெரு முயற்சி காரணமாக! கே.இ. சம்பந்தம் எனும் பழம்பெரும் நண்பர். இன்றைக்கும் இருக்கிறார் இராயபுரம் பகுதியில் - அவர் முன்னின்று விலைபேசி முடித்தார். உண்டியல் ஏந்தியும், சிறப்புக் கூட்டங்கள் நடத்தியும் மனம் பொங்கும் மகிழ்ச்சியுடன் வாங்கப்பட்ட கட்டிடம்! வாங்கும் போதே பழைய கட்டிடம் என்பதால் நாற்பதாண்டுகளுக்குப்பிறகு, அதனைப் புதுக் கட்டிடமாக மாற்றிக் கட்டும் அவசியம் ஏற்பட்டது. அன்று இருபத்தி ஐயாயிரம் ரூபாய். அந்த மனையுட்படக் கட்டிடத்தின் விலை! இன்று கட்டி முடிக்கப்பட்டுள்ள புதிய பொலிவு நிறை அறிவகம் இருபத்தி ஐந்து லட்ச ரூபாய் செலவில் அமைந்துள்ளது என்பதை அறிய நீ பூரிப்பு கொள்வாய்! எல்லாம் உன் பணம்தான்! மன்னிக்கவும் உன் வியர்வைத் துளிகள்தான்!

கடந்த நாற்பதாண்டு காலத்தில் சுமார் முப்பத்தி ஐந்து ஆண்டுக் காலம் அறிவகத்தின் பழைய கட்டிடம், கழகத்தின் பாசறையாக எப்படியெல்லாம் விளங்கியது என்பதை அகக் கண் முன்னே கொண்டு வருகிறேன். விம்முகிறது இதயம். விழி

குளமாகிறது. காரணம் கடந்த கால நினைவில் எழும் களிப்பு! அதே நினைவு அலைகளில் உயர்ந்து எழும் கவலை!

பழைய அறிவகக் கட்டிடத்தின் மாடியின் முன் பகுதியில் ஒரு சாய்வு நாற்காலியில் அண்ணா அமர்ந்து வெற்றிலை பாக்குக் குழையக் குழைய எம்மிடம் உரையாடிக் கொண்டே, கழகத்திற்கான எதிர்கால ஆக்கப் பணிகளை வரிசைப்படுத்தி வழங்குவாரே! அதை எண்ணினால் கண்ணீர் பெருகாமல் இருக்குமா? கீழ்த் தளத்தில் நம்நாடு அலுவலகத்தில் அமர்ந்து ஆசிரியர் காஞ்சி கல்யாணசுந்தரம் கழகத் தோழர்களுடன் உற்சாகமாக உரையாடுவாரே - அதனை இந்த உள்ளம் மறக்க இயலுமோ? சுறுசுறுப்புக்கும், விறுவிறுப்புக்கும் பெயர் போன பொன்னம்பலனார் எனும் சுயமரியாதைச் சிங்கம் அறிவகம் அலுவலகத்தில் இருந்துதானே கழகப் பணிகள் ஆயிரம் நிறைவேற்றிக் கொண்டிருப்பார். எறும்புக்கும் உழைக்கும் திறனை வழங்கக் கூடிய பேருழைப்பாளி எமதருமை என்.வி.என். அந்த அறிவகத்திலிருந்துதானே நீலநாராயணன் துணையுடன் மாநில முழுதுமுள்ள கழக அமைப்புகளைக் கட்டிக் காத்திடும் தொண்டினைச் செம்மையுற நிறைவேற்றினார்!

மறைந்துவிட்ட நண்பர் மு. சண்முகம், நேரம் காலம் பாராமல் இயக்கமே இதயத் துடிப்பென ஓய்வின்றி உழைத்து, லட்சக்கணக்கான கழக உறுப்பினர்களின் கருவூலத்தைக் கட்டிக் காத்த இடமும் அந்த அறிவகம்தானே! சிவப்பிரகாச முதலியார் கணக்கு வழக்கு பார்க்கும் அழகும், பெரிய மீசை, அழுக்கு உடை, ஆஜானுபாகுவான உருவம் கொண்ட சின்னகண்ணு என்னும் சிவஞானம் தலைமை அச்சுக் கோப்பாளர் இராமலிங்கத்திடம் காட்டும் அவசரமும், கழகத் தொண்டில் காட்டும் ஆர்வமும் - தலைமைக் கழகத்தவர் அனைவரும் சிறையில் என்ற நிலையில் அறிவகம் பாசறையில் தலைமைக் கழகப் பொறுப்பாளராக அமர்ந்து ஏ. கோவிந்தசாமி அவர்கள் சிறப்புறச் செயலாற்றிய நிகழ்ச்சியும் - எம் போன்றோர், ஆம்! ஆரம்ப காலக் கழக வளர்ச்சியுடன் இணைந்து கிடந்தோர் இதயங்களில் என்றென்றும் பசுமை குலையாமல் இருப்பவைகள் அல்லவா?

அறிவகம் கண்டோம் - பின்னர் தென்சென்னையில் அன்பகம் பெற்றோம் - இதோ அண்ணா சாலையில் அண்ணா அறிவாலயம் உருவாக்கியுள்ளோம்!

ஆனால் உடன்பிறப்பே, 1949-ஆம் ஆண்டு கழகம் தொடங்கப்பட்ட போது, கோவிந்தப்ப நாயக்கன் தெருவில் டபிள்யூ கே. தேவராஜன் வீடுதான் கழகத்திற்கு ஆலோசனை மண்டபம்! அங்கிருந்து நகர்ந்து தங்கசாலைத் தெருவில் ஒரு இடம் வாடகைக்குப் பிடித்தோம். ராஜாஜிக்குக் கறுப்புக் கொடி காட்டிய போது போலீசாரால் அடித்து நொறுக்கப்பட்டு ரத்த வெள்ளத்தில் வீழ்ந்த கழகத்தினரையெல்லாம் அடுக்கி வைத்துக் காயங்களுக்கு மருந்து போட்டது அந்த வீட்டில்தான்!

அதன்பிறகு கிடைத்த இடம்; நமக்கென்று சொந்தமாகக் கிடைத்த இடம்தான் அந்தப் பழைய பாசறை; இன்று புதுக்கோலம் பூண்டுள்ள இதோ இந்த அறிவகம்!

மாடிக் கட்டிடம்தான்! மாளிகை எனக்கூறி மார்தட்டிக் கொள்வோம்; சாமான்யனுக்குப் பிறந்த குழந்தையை அவன் என் ராஜா! எனத் தூக்கிக் கொஞ்சுவதில்லையா; அதைப்போல!

முகப்பைப் பார் - முகிலைத் தொட முனையும் கட்டிடத்தின் உயரம் பார் - கூடத்தின் எழிலைப் பார் - அங்கு கூடிடும் மக்களின் புன்னகை வதனம் பார் - என்றெல்லாம் சொல்லிக் குதிக்கத் தோன்றுகிறது! என் செய்வது! வயது எச்சரிக்கிறது - எனினும், இதயமோ இளமை ஊஞ்சலாடுகிறதே - அடுக்கு மல்லிகை அழகுக் கூந்தலில் சூடி, காஞ்சிப் புடவையை கண்ணியமாக உடுத்தி, நெற்றியில் குங்குமம் தழைத்திட, குலவிளக்காம் கொடியிடையாள் எதிர் நின்றிடும்போது இளங்காளையாம் இல்லத்துக் காளை பூரித்து மகிழ்வது போல அல்லவா, அறிவகம் அமைந்துள்ள பாங்கு கண்டு அகம் துள்ளுகிறது! ஆனந்தம் அருவியாகப் பெருகுகிறது!

புதிய கட்டிடத்துக்கு அடித்தளம் அமைத்த போது நானும், தம்பி டி.ஆர். பாலுவும் சென்றிருந்தோம். அறிவாலயத்தில் ஒவ்வொரு கல்லையும் சோதித்துப் பார்த்துக் கட்டியது போல, நான் அறிவகப் பணியில் ஈடுபட இயலவில்லை. மாதமிருமுறை சென்று வந்தேன். ஆனால் அல்லும் பகலும் உடனிருந்து, அறிவகம் உருவாக உழைத்த தம்பி சிவபூஷணத்தை மறக்க இயலாது! வாழ்த்துகிறேன்!

மெல்ல, மெல்ல! ஆனால் உறுதியான வளர்ச்சி என்பதற்குச் சான்றாகத் திகழ்வது தி.மு.கழகம்! சிலர் கேட்டிடுவர் அல்லது எண்ணிடுவர், தேர்தலில் பெருந்தோல்வி பெற்று விட்டதே? என்று! ஆம்! உண்மை! ஆனால் ஒன்று - அடுத்த தலைமுறையைப்

பற்றிச் சிந்தித்து, அதன் வலிவுக்கும் பொலிவுக்கும் வழிகாணும் அமைப்பாக இந்த இயக்கம் கட்டிக் காக்கப்பட வேண்டுமென்பதில்தான் நமக்கு அதிக கவலை! சுவர் கெட்டியாக இருந்தால் சித்திரம் என்றைக்கு வேண்டுமானாலும் எழுதிக் கொள்ளலாம். ஆட்சியை நான் அழித்தெழுதும் ஓவியமாகக் கருதுகிறேன். இயக்கம், இரும்பினும் கெட்டியான கோட்டையாக இருந்திடல் வேண்டும். இவ்வாறு இருந்திட்டால்தான் திராவிட இயக்கத்தின் கொள்கை, கோட்பாடு, குறிக்கோள் இவற்றை வெற்றி முகட்டில் ஏற்றிட முடியும்.

தஞ்சைக் கோபுரத்தின் உச்சியில் உள்ள அந்தப் பெரிய கல்லை ஏற்றி வைப்பதற்கு, எட்டு கல் தொலைவுக்கு சாரம் கட்டினார்கள். அந்த இடத்துக்குப் பெயரே சாரப்பள்ளம் என்றாயிற்று. மெத்த சிரமப்பட்டுத்தான் அந்தக் கல் கோபுரத்தின் உச்சியில் ஏற்றப்பட்டிருக்க வேண்டும். நமது கொள்கை குறிக்கோளின் வெற்றியையும் கோபுர உச்சியில் ஏற்றி வைத்திட அப்படித்தான் அல்லல் பல ஏற்கவேண்டும். காற்றடிக்கும் வேகத்தில்; அதுவும் சுழன்று அடிக்கும் வேகத்தில் காய்ந்த சருகு, மேலே பறந்து கோபுர உச்சியில் தொத்திக் கொள்ளும். கல்லை ஏற்ற இவ்வளவு கஷ்டப்பட வேண்டியிருக்கிறது. சருகு சுலபத்தில் போய் உச்சியில் அமர்ந்துவிட்டதே என்று ஆதங்கப்படுவது அறிவுடைமையாகாது.

சாரம் பலமாக இருக்க வேண்டும். சாரத்தில் கல்லை ஏற்றிக் கோபுர உச்சிக்குக் கொண்டு செல்வோர் உரம் பெற்றவர்களாக இருக்க வேண்டும். கல்லை ஏற்றுவதில் நிரம்ப கவனம் வேண்டும். பராக்குப் பார்க்கும் புத்தி இருக்கக் கூடாது. நூறு பேர் கூடிக் கல்லை உருட்டிக் கொண்டு போகும்போது, நம் ஒருவன் கைக்கு ஓய்வு கொடுத்தால் என்ன என்று நினைத்தால், அப்படி நூறு பேரும் நினைத்தால் - கல், உச்சிக்குப் போய்ச் சேராதது மட்டுமல்ல - உருண்டு கீழே வந்துவிடும்.

வலிவான சாரம் போல கழக அமைப்புகளும் - உரம் பெற்ற உடன்பிறப்புகள் (உள்ள உரத்தையே குறிப்பிடுகிறேன்) இலட்சக்கணக்கானோரும் இந்த இயக்கத்தில் ஜனநாயக ரீதியில் செயல்படுவதினால்தான் தேர்தல் தோல்விகள் நம்மைச் சீர் குலைப்பதில்லை.

களத்தில் தோற்றோம் - யுத்தத்தில் தோற்கவில்லை! அந்த யுத்தம் தொடருகிறது! எனத் தோளுயர்த்திக் கொடி பிடித்து அணி வகுத்திடுவோர் பாசறைதான் தி.மு.க.!

அறிவகம்
அன்பகம்
அண்ணா அறிவாலயம்

இவை மட்டுமல்ல! எண்ணற்ற நகரங்களில், ஊர்களில் அளவில் இவை போல் இல்லாவிடினும், ஆங்காங்கு நமது கழகத்திற்கென கட்டிடங்கள் உள்ளன.

கட்டிட அமைப்பு போல கழகத்தின் ஜனநாயக அமைப்பு, குறிப்பிட்ட கால கட்டத்தில் தேர்வு மூலம் உருவாகிறது!

சில கட்சிகளைப் போல நியமனங்களால் நிறைவு செய்யப்படுவதில்லை.

மேல் மட்டத் தலைமையிலிருந்து, அடித்தளம் வரையில் ஜனநாயக மாண்பு போற்றப்படும் இயக்கம் தி.மு.கழகம்.

இந்தக் கழகம் நடத்துகிறது சென்னையில் முப்பெரும் விழா!

அந்த விழாவில் ஓர் இனிய நிகழ்ச்சிதான், அண்ணா கண்ட அறிவகம் புதிய கட்டிடத் திறப்பு விழா!

காலை 8 மணிக்கு வள்ளுவர் கோட்டம் அண்ணா சிலைக்கு மாலை அணிவிக்கிறோம்.

காலை 9 மணிக்கு எளிய நிகழ்ச்சியாக அறிவகமாம் எழிற்கூடத்தைத் திறந்து வைக்கிறோம்.

காலை 10 மணிக்கு அண்ணா அறிவாலயத்தில் திராவிட இயக்க வரலாறு நூல் வெளியிடுகிறோம்.

மாலையில் மாபெரும் அணிவகுப்பு ஊர்வலம்! அண்ணா சாலை காயிதே மில்லத் கல்லூரியிலிருந்து!

தொடர்ந்து தியாகராய நகர் பனகல் பூங்காவில் பெரியார், அண்ணா, கழகம் பிறந்த நாள் முப்பெரும் விழாப் பொதுக்கூட்டம்! உடன்பிறப்பே! உனை அழைக்கிறேன்-

என் அன்பகமே! அறிவகம் காண, வா!

அன்புடன்,

மு. க.

13-09-1991

1788. நம்பிக்கை நட்சத்திரம் - கலங்கரை விளக்கம்!

உடன்பிறப்பே!

சட்டப் பேரவை கழக உறுப்பினர் தம்பி பரிதி இளம்வழுதியை இந்தக் கூட்டத் தொடர் முடிய அவையிலிருந்து வெளியேற்றுவதாகத் தண்டனை வழங்கப்பட்டு, அவர்மீது தகாத வார்த்தைகளைக் காங்கிரஸ் உறுப்பினர்கள் சிலர் வீசியதாக அவர் தந்த உரிமைப்பிரச்சினை நிராகரிக்கப்பட்டு, அவருக்கு எதிராக காங்கிரஸ் உறுப்பினர்கள் தந்த உரிமைப்பிரச்சினை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள சூழ்நிலையில், அவையில் உள்ள எதிர்க்கட்சியினர் இளம்வழுதி மீதுள்ள தண்டனையை ரத்து செய்திட வேண்டும் அல்லது குறைக்க வேண்டுமென முறையீடு செய்துள்ளார்கள் அவையில்!

> நமது தளபதி வீரமணி அவர்களும், சட்டமன்ற நிகழ்ச்சி பற்றி விடுதலையில் விடுத்துள்ள அறிக்கையில் ஆளுங்கட்சிக்குள்ள பொறுப்பினைச் சுட்டிக்காட்டி - எதிர்க்கட்சிகளும் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு காத்து நடந்து கொள்வது அவசியம் எனக் கோடிட்டுக் காட்டியுள்ளார்.
>
> எதிர்க்கட்சிகளில் ஒன்றான தி.மு.கழகத்தின் உறுப்பினர் இளம்வழுதி, துடிப்பான இளைஞராயிற்றே - ஏதாவது அவரது, பட்ஜெட் விவாதப் பேச்சில் தாறுமாறாகக் குறிப்பிட்டிருப்பாரோ என்று நான்கூட சந்தேகப்பட்டேன்.

அதனால் அவரது முழுப்பேச்சையும் முரசொலியில் (செப்டம்பர் 13) படித்துப் பார்த்தேன்.

> **தென்னிந்திய நல உரிமைச் சங்கமாகத் தோன்றி, சமுதாய சீர்திருத்த இயக்கமாக உருவெடுத்து திராவிட இயக்கமாகப் பரிணமித்து, இந்த நாட்டில்**

தன்மான உணர்வை, தமிழ் உணர்வை கிளர்ந்தெழச் செய்த இயக்கத்தின் கடைசித் தொண்டன் என்ற முறையில், நான் இந்த அரசின் குறைகளைச் சுட்டிக் காட்டுகிற நேரத்தில், நிறைகளையும் வரவேற்கின்ற, பாராட்டுகின்ற பெருந்தன்மைமிக்க கழகத்தைச் சார்ந்தவன் என்பதையும் பெருமையுடன் கூறிக் கொள்கிறேன்.

இப்படித்தான் இளம்வழுதியின் உரை ஆரம்பமாகிறது. தொடர்ந்து மண்டல் கமிஷன் பரிந்துரையை வலியுறுத்தி அதற்காக மாநில அரசு எடுக்கும் நடவடிக்கைக்கு நாங்கள் துணை நிற்போம் என்று கூறுகிறார். நிதித்துறை நெருக்கடி பற்றி நாவலர் கூறியுள்ள கருத்துக்களை கழகமும் கவலையுடன் அணுகுகிறது எனக் குறிப்பிடுகிறார்.

காவிரிப் பிரச்சினையில் இந்த அரசு எடுக்கும் எந்த நியாயமான முடிவுக்கும், கட்சி மாறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு அரசுக்கு தி.மு.க. துணை நிற்கும் என்கிறார்.

எட்டாவது ஐந்தாண்டு திட்டம் தாமதமாவதால், நாட்டுக்கு ஏற்பட்டுள்ள வளர்ச்சிப் பணி பாதிப்பை நிதியமைச்சருடன் சேர்ந்து இளம்வழுதியும் சுட்டிக் காட்டுகிறார்.

இந்திய நாடு பெற்றுள்ள கடன் 1,20,000 கோடி ரூபாய் ஒவ்வொரு இந்தியக் குடிமகனையும் அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது என்பதை விளக்குகிறார்.

மின்வாரிய இழப்பு நாளுக்கு நாள் கூடிக் கொண்டே வருவதைக் கட்டுப்படுத்த வேண்டுமென வலியுறுத்துகிறார்.

விவசாயிகளுக்கு கழக ஆட்சி இலவச மின்சாரம் வழங்கியதில் 30 கோடி ரூபாய்தான் இழப்பு என்பது உண்மையாக இருக்க, நாவலர் படித்த பட்ஜெட் புத்தகத்தில் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்குவதால் 550 கோடி ரூபாய் இழப்பு என்று தவறாகக் குறிப்பிட்டிருப்பதை ஆதாரத்துடன் எடுத்துக் காட்டுகிறார்.

இவ்வளவையும் பேசிய தம்பி, உரையின் பிற்பகுதியில் தி.மு.க.அரசு மீது காங்கிரசார் பட்ஜெட் விவாதத்தில் பழி சுமத்தியதற்குப் பதில் கூற முனைந்திருக்கிறார். என்ன அது?

"தலைவர் அவர்களே! எங்கள் மீது அநியாயமாக இங்கே குறைகூறிப் பேசியிருக்கிறார்கள். அதற்கு வாய்ப்பு வரும் போது நான் பதில் சொல்லலாம் எனத் தாங்கள் கூறியிருக்கிறீர்கள். விடுதலைப் புலிகளை ஊக்குவித்து ராஜீவ் காந்தி கொலைக்கு தி.மு.க. அரசுதான் காரணம் எனப் பலர் பேசினார்கள். மனச்சாட்சி உள்ளவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்."

(இப்படி அவர் ஆரம்பித்தவுடனேயே குறுக்கீடுகள், எதிர்ப்புகள், அதன் தொடர்ச்சியாக அமளி - இளம்வழுதி வேட்டி அவிழ்க்கப்பட்ட நிலையில், ஜட்டியுடன் தூக்கிப் போடப்பட்டார் என்பதெல்லாம் ஏடுகளில் வந்த செய்திதான்.)

ராஜீவ் கொலைக்கு தி.மு.க. அரசு காரணமா? என்பதை மனச்சாட்சி உள்ளவர்கள் சிந்திக்க வேண்டும் என்று கூறுவதில் என்ன குற்றம்? மனச்சாட்சியிருந்தால் சிந்தித்திருக்கலாமே! அதை விடுத்து,

அவர் பேச்சை ஏன் தடுக்க வேண்டும்? அதில் ஆரம்பமானதுதானே அமளி!

குற்றச்சாட்டுக்கு பதில் சொன்னால், அந்த பதில் சரியில்லை எனில், சபாநாயகர், இளம்வழுதிக்கு ஏற்கெனவே அறிவுறுத்தியது போல அவரவர்களுக்கு வாய்ப்பு வரும்போது பதில் அளிக்கலாமே! அல்லது பலர் சேர்ந்து முழக்கமிடாமல் தனியொருவர் எழுந்து விளக்கம் கேட்கலாமே!

பாரதப் போர்க்களத்தில் அபிமன்யுவைச் சுற்றி வளைத்துக்கொண்டு தாக்கியது போல, இப்படியா ஒரு இளம் சட்டமன்ற உறுப்பினரை, அவையின் ஒரு மூலையில் தன்னந்தனியனாக அகப்பட்டுக் கொண்டார் என வளைத்துக் கொள்வது?

அந்த நிகழ்ச்சியை கழக ஏடு, கழக ஆதரவு ஏடு, நடுநிலை ஏடு, ஸ்டேட்ஸ்மென் போன்ற ஆங்கில ஏடுகள் மட்டுமன்றி ஆளுங்கட்சி ஆதரவு ஏடுகளான மாலைமலர், தினமலர் கூட வெளியிட்டிருந்தனவே! (எந்தெந்த ஏடுகள் மீது உரிமைப்பிரச்சினை வந்துள்ளது என்ற விபரம் எனக்குத் தெரியாது.)

குற்றச்சாட்டுக்கு அமைதியான முறையில் பதில் சொல்லத் தொடங்கியதில் எதிர்க்கட்சி கடைப்பிடிக்க வேண்டிய கடமை, கண்ணியம் என்ன குறைந்துவிட்டது?

விடுதலைப் புலிகளுக்கு இந்திரா காந்தி ஆட்சி, எம்.ஜி.ஆர். ஆட்சி, ராஜீவ் ஆட்சி - முகாம்கள் அமைத்துத் தரவில்லையா? ஆயுதம் வழங்கவில்லையா? கோடிக்கணக்கில் பணம் தரவில்லையா? எனப் பரிதி கேட்டது குற்றமா?

தி.மு.க. ஆட்சி மீது வீண்பழி சுமத்தும்போது, கடந்த கால உண்மைகளை ஒரு தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் பதிலாகச் சொன்னால், அது பெரிய பாபகரமான செயலா? பாராளுமன்றத்தில் பயன்படுத்தக் கூடாத வாதமா? சொல்லா?

இளம்வழுதியின் இந்தக் கேள்விகளை எதிர்த்தும் கூச்சல்! குழப்பம்! தாக்குதல்! அவர் ஒருவர்! அவரைச் சுற்றிப் பலர்!

உடன் நாவலர் எழுந்தார் - நாங்கள் விடுதலைப் புலிகளுக்கு உதவி செய்தது 1987-க்கு முன்புதான்! அவர்களுக்கும், இந்திய அரசுக்கும் உறவு இருந்த வரையில்தான்! பிறகு விடுதலைப் புலிகளை ஆதரிக்கவே இல்லை என்றார்.

நாவலர் சொன்ன இதே கருத்தைத்தான் எதிர்க்கட்சித் தலைவர் நண்பர் பாலசுப்பிரமணியமும் எதிரொலித்திருக்கிறார்.

இரண்டு பேரும் சொன்னது தவறு! உண்மைக்கு மாறானது! நான் நிதியமைச்சரும், எதிர்க்கட்சித் தலைவரும் பொய் சொன்னார்கள் என்று கூறமாட்டேன். ஆனால், அவர்கள் சொன்ன விளக்கம் என்னமோ பொய்யாகி விட்டது! எப்படி?

நிதி அமைச்சரும், எதிர்க்கட்சி தலைவரும் எல்லை வகுத்துக் காட்டிய அந்த 1987-க்குப் பிறகு - அதாவது இந்திய அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் மோதல் ஏற்பட்ட பிறகு 1988-ல், 1989-ல், 1990-ல், 1991 ஏப்ரலில் அ.தி.மு.க. தலைவி ஜெயலலிதா விடுதலைப் புலிகளை ஆதரித்தும், பிரபாகரனுக்கு ஒரு தீங்கு இழைத்தால் தமிழ்நாடு தாங்காது என எச்சரித்தும், இந்திய அரசு நூற்றுக்குநூறு விடுதலைப் புலிகளை ஆதரிக்க வேண்டுமென வலியுறுத்தியும், பங்களாதேஷ் உருவாக்க இந்திய அரசு படையெடுத்தது போல, தமிழ்ஈழம் உருவாக இந்திய அரசு இராணுவத்தை அனுப்புவது பற்றி யோசிக்க

வேண்டும் என அறிவுறுத்தியும், முக்கியமான பத்திரிகைகளுக்கு அளித்த பேட்டிகளைத் தேதி வாரியாக முரசொலி கடிதத்தில் வெளியிட்டிருந்தேனே! அதனை மறுக்க முடிந்ததா நாவலரால்? மறுக்க முடிந்ததா எதிர்க்கட்சித் தலைவரால்?

ஜெயலலிதாவின் இந்த அறிக்கைகளும், கருத்துகளும் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான செயல்பாடுகளும், விடுதலைப் புலிகளுடன் அவர் தொடர்பு கொண்டிருப்பதானச் செய்திகளும் அவராலேயே பத்திரிகை நிருபர்களுக்கு தெரிவிக்கப்பட்டதானது, இந்திய அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் மோதல் ஏற்பட்ட 1987-க்குப் பிறகுதான் என்பதையும், அத்தகைய அறிக்கைகள் 1991 ஏப்ரல் இறுதிவரையில் ஜெயலலிதாவினால் வெளியிடப்பட்டவை என்பதையும் ஆதாரபூர்வமாக எடுத்துக்காட்டிய பிறகு, நாவலருக்கும், எதிர்க்கட்சித் தலைவருக்கும் இன்னும் என்ன வாதம் மிச்சமிருக்கிறது?

உடன்பிறப்பே, இந்த ஆதாரம் மட்டுமல்ல - இந்திய அரசும், எம்.ஜி.ஆர். அரசும்கூட விடுதலைப் புலிகளுடன் மோதல் என்ற கால கட்டத்திற்குப் பிறகு என்ன செய்தன? என்பதற்கு பாராளுமன்றத்தில் நடைபெற்ற ஒரு முக்கியமான விவாதம் இன்னொரு சான்றாகும்.

விடுதலைப் புலிகளைக் காரணம் காட்டி, கழக ஆட்சி கலைக்கப்பட்டவுடன் பிப்ரவரி 26-ஆம் நாள் நாடாளுமன்றத்தில் முன்னாள் பிரதமரும், தேசிய முன்னணி அமைப்பாளருமான திரு. வி.பி.சிங் அவர்கள், சந்திரசேகர் அரசைக் கண்டித்து ஆற்றிய உரையில் சில பகுதிகளை உனக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

1988 பிப்ரவரி 4-ந்தேதி வெளிவந்த (ஃபார் ஈஸ்ட்டன் எக்கானமிக் ரெவ்யூ) என்ற ஏட்டில் எம்.ஜி.ஆர். அவர்கள் மரணமடையும் வரையில், புலிகளின் அதிவேகப் படகுகள், ஒவ்வொரு நாளும் இரவில் தமிழ் நாட்டுக்கும், யாழ்ப்பாணக் கடற்கரைக்குமாக எந்தத் தடங்கலுமின்றி போய் வந்தன. சுதந்திரமாக ஆயுதங்களை வாங்கவும், இறக்குமதி செய்து கொள்ளவும் விடுதலைப் புலிகளுக்கு தமிழ் நாட்டில் தனி அந்தஸ்து வழங்கப்பட்டிருந்தது.

திரு. வி.பி. சிங் அவர்கள் நாடாளுமன்றத்தில் சுட்டிக்காட்டிய அந்த ஏட்டின் செய்திப்படி, எம்.ஜி.ஆர். அவர்கள் காலமாகிற 1987 டிசம்பர் மாதம் முடிய விடுதலைப் புலிகளுக்கு தமிழ் நாட்டில் எல்லாச் சுதந்திரமும் வழங்கப்பட்டிருக்கிறது.

அதாவது, விடுதலைப் புலிகளுக்கும், இந்திய அரசுக்கும் மோதல் ஏற்பட்ட பிறகும் 1988-ஆம் ஆண்டு ஆரம்பம் வரையில் எம்.ஜி.ஆர். அரசு, புலிகளை சர்வ சுதந்திரத்துடன் தமிழகத்தில் நடமாட விட்டிருக்கிறது. இந்தக் கால கட்டம் பேரவையில் நாவலர் குறிப்பிட்ட 1986-87க்குப் பிறகுதான் என்பதை அவரே உணர்ந்து தெளிவு பெறுவாராக!

திரு. வி.பி.சிங் அவர்கள் தனது வாதத்தை அத்துடன் நிறுத்தவில்லை. தமிழக எம்.ஜி.ஆர். அரசு மட்டுமல்ல, மத்திய காங்கிரஸ் அரசான ராஜீவ் காந்தி அரசும்கூட - இந்திய அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் மோதல் ஏற்பட்ட பிறகு எப்படி நடந்து கொண்டது என்பதையும் ஆதாரத்துடன் சுட்டிக் காட்டினார். அது என்ன?

1988 ஆகஸ்டு 8-ஆம் நாள் சென்னையிலும், மதுரையிலும் 142 விடுதலைப் புலிகளின் அமைப்பினர் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின்படி கைது செய்யப்பட்டனர். பிறகு அதே ஆண்டு செப்டம்பர் 11-ந்தேதி மேலும் 15 பேர் அதே சட்டப்படி கைது செய்யப்பட்டனர். பிறகு ஆனால், இந்திய அமைதிப் படைகளுடன், விடுதலைப் புலிகளின் மோதல் ஆரம்பமான பிறகு, 1988 அக்டோபர் 9-ஆம் தேதி அந்த 157 விடுதலைப் புலிகளையும் விடுதலை செய்து, இந்திய விமானப்படை விமானத்தில் இலங்கைக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கே விடுவிக்கப்பட்டார்கள். ஆயுதம் வழங்கினீர்கள். முகாம் அமைத்துக் கொடுத்தீர்கள். பணம் தந்தீர்கள். இந்தியாவுடன் அவர்கள் மோதத் தொடங்கிய பிறகும் அவர்களைக் கைது செய்து, பின்னர் இலங்கைக்கே அழைத்துப் போய் விடுவித்து விட்டீர்கள். நீங்கள் போய் ஆயுதப் போராட்டம் தேசத்துக்கு எதிரானது என்கிறீர்களே!

இப்படி வி.பி.சிங் அவர்கள் கேள்விக்கணை தொடுத்தபோது, அன்று நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த திரு. ப. சிதம்பரம் அவர்கள் நடந்ததை நாங்கள் ஒப்புக் கொள்கிறோம். அதில் எந்த தவறும் இல்லை என்று சொன்னது அவைக் குறிப்பில் உள்ளது.

திரு. வி.பி.சிங் அவர்கள் தனது உரையை நிறைவு செய்யும் கட்டத்தில் பின்வருமாறு கூறினார்.

விடுதலைப் புலிகளுடன் பேசுமாறு பிரதமராக இருந்த ராஜீவ் காந்தியும், முதல்வர் கருணாநிதியிடம் கேட்டுக் கொண்டார். தேசிய முன்னணி அரசிலும் அவ்வாறு ஒரு முயற்சி மேற்கொண்டோம். பிரதமர் சந்திரசேகரும், திரு. கருணாநிதியை விடுதலைப் புலிகளுடன் தொடர்புகொண்டு பேசுமாறு கேட்டிருக்கிறார். தேசநலனுக்காக அப்படித் தொடர்பு கொள்ளச் சொல்லிவிட்டு இப்போது கருணாநிதிக்கும், விடுதலைப் புலிகளுக்கும் தொடர்பு இருக்கிறது எனக்கூறி ஆட்சியைக் கலைத்தது என்ன நியாயம்? விடுதலைப் புலிகளாயினும், வேறு எந்தக் குழுக்களாயினும் அவர்கள் வன்முறையில் ஈடுபட்டபோதும், தி.மு.க. அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றி தேதி வாரியான விபரம் இருக்கிறது.

என்று சுட்டிக்காட்டிய முன்னாள் பிரதமர் வி.பி.சிங் அவர்கள், விடுதலைப் புலிகளிடமிருந்தும் மற்ற குழுக்களிடமிருந்தும் கழக அரசு கைப்பற்றிய ஆயுதங்கள், வயர்லஸ்கள், வாகனங்களுக்கான பட்டியலையும் நாடாளுமன்றத்தில் படித்துக் காட்டினார். விடுதலைப் புலிகள் எத்தனைபேரை கழக அரசு, கட்டுப்பாட்டு தனி முகாமில் வைத்தது - எத்தனைபேரை தேசியப் பாதுகாப்பு சட்டத்தில் சிறையில் வைத்தது - என்ற விபரங்களையும் ஆதாரபூர்வமாக எடுத்துரைத்தார்.

இவ்வளவு உண்மைகளையும் மறைத்து விட்டு, தி.மு.க. மீதும், தி.மு.கழக அரசின் மீதும் பேரவையில் பட்ஜெட் விவாதத்தில் பேசியவர்களில் பலரும் வீண்பழி சுமத்திக் குற்றம் கூறும்போது, அதற்குப் பதில் அளிக்கும் உரிமைகூட கழகச் சட்டமன்ற உறுப்பினர் ஒருவருக்குக் கிடையாதா? அதிலும் அவர் என்ன பேசிவிட்டார்?

எங்கள் மீது அநியாயமாக இங்கே குறை கூறிப் பேசியிருக்கிறார்கள். அதற்கு வாய்ப்பு வரும்போது நான் பதில் சொல்லலாம் என சபாநாயகர் கூறியிருக்கிறார். விடுதலைப் புலிகளை ஊக்குவித்து ராஜீவ் காந்தி கொலைக்கு தி.மு.க. அரசுதான் காரணம் எனப் பலர் பேசினார்கள். மனச்சாட்சி உள்ளவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இளம்வழுதி, இந்த வாக்கியத்தை முடிப்பதற்குள்ளாக அமளி ஆரம்பமாகிறது என்றால் - இந்த வாசகத்தில் உள்ள தவறு என்ன? என்ன குறை கண்டார்கள்? குற்றம் யாது?

இந்த அமளியைத் தொடர்ந்துதானே இளம்வழுதியைப் பேசவே விடாமல் குறுக்கிட்டு, அமளி மேலும் பெருகி, அவர் வேட்டி பறிக்கப்பட்டு வெளியேற்றப் பட்டிருக்கிறார். தகாத வார்த்தைகளால் தாக்கப்பட்டிருக்கிறார்.

முன்பு பண்ருட்டி தாக்கப்பட்டபோது, தாக்கியவருக்கும், தாக்கப்பட்டவருக்கும் ஒரே தண்டனை! ஒரே மாதிரி அறிவுரை!

இப்போது ஒரு வித்தியாசம்! தாக்கியவர்களுக்கு, தண்டனை இல்லை! தாக்கப் பட்டவருக்குத் தண்டனை!

வெளியேற்றிய பிறகும் என்ன பேசுகிறார்கள்? ஒரு காங்கிரஸ் உறுப்பினர் பேசியிருக்கிறார்! இளம்வழுதி பேரவைக்கு வரும்போது வெடிகுண்டை மறைத்துக் கொண்டு வருவார் - எனவே அவரைச் சோதனை செய்து உள்ளே அனுமதிக்க வேண்டும். அதுமட்டுமல்ல அவரால் பரிந்துரை செய்யப்படும் பார்வையாளர்களைக் கூட சோதனை செய்ய வேண்டுமென்று பேசியிருக்கிறார். அந்தப் பேச்சு அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படவில்லை. ஏடுகளில் வெளியாகியிருக்கிறது.

உடன்பிறப்பே, இதுபோன்ற பேச்சுகளில் இருந்து என்ன புரிகிறது?

தி.மு.க.வை ஒரு வன்முறை இயக்கம் எனப் பழி சுமத்தி ஒரேயடியாகத் தீர்த்துக்கட்டத் திட்டம் தீட்டுகிறார்கள்! அவர்களுக்கு நான் அறிவிக்க விரும்புவது இதுதான்,

"தமிழ் மக்கள், தங்களின் நம்பிக்கை நட்சத்திரத்தை - கலங்கரை விளக்கத்தை - ஆம்! இந்தக் கழகத்தை ஊழிப் பெரு வெள்ளமே வந்து அழித்திட முனைந்தாலும், அதனை அனுமதிக்க மாட்டார்கள்!"

அன்புடன்,

மு. க.

14-09-1991

1789. என்னையே காணிக்கையாக்குகிறேன்!

உடன்பிறப்பே!

தலைநகர் சென்னைக்கே வந்து இந்த என் கடிதத்தைப் படித்துக் கொண்டிருப்பாய்! அல்லது வருகிற வழியில் எங்கேயோ ஓர் உணவு விடுதியில் - இல்லாவிட்டால் நீ வரும் வாகனத்தை நிறுத்திவிட்டு மரத்தடி நிழலில் இந்தக் கடிதம் படித்துக் கொண்டிருப்பாய். தனிப் பேருந்துகளில் நீயும் உடன்பிறப்புகளின் குடும்பங்களும் வர இயலாதபடி ஆங்காங்கு அதிகாரிகளைக் கொண்டு, நீ ஏற்கெனவே அச்சாரம் கொடுத்து ஏற்பாடு செய்த பேருந்துகளைக் கூடத் தடுத்து நிறுத்தி விட்டார்கள் என்று எனக்குப் பல்வேறு மாவட்டங்களில் இருந்து செய்திகள் வந்த வண்ணமிருக்கின்றன. என் செய்வது! சீப்பை ஒளித்து விட்டால் திருமணம் நின்றுவிடும் என எண்ணிச் செயல்படும் சிறுமதியினர் - சிடுமூஞ்சியினர் - இன்னமும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

எல்லா வாகனங்களுமே தடுக்கப்பட்டு விட்டால்தான் என்ன? திருச்செந்தூருக்கு மதுரையிலிருந்து இருநூறு கிலோ மீட்டர் தொலைவு, என்னுடன் எட்டு நாட்கள், நீதி கேட்டு நெடிய பயணம் வந்த உனது கால்கள், முப்பெரும் விழா காண சென்னைக்கு வர முடியாமல் முடங்கி விடுமா என்ன? எப்படியோ தலைநகருக்கு வந்து விட்டாய்! இந்தக் கழகத்தின் தலைமைத் தொண்டனை காண வந்து விட்டாய்! தமிழகத்திலும் அண்டை மாநிலங்களிலும் பரவியிருக்கும், என் பாசமும் நேசமும் கொண்ட உடன்பிறப்பே! உன் முகம் காணாமல் மூன்று மாதமாக ஏங்கிக் கொண்டிருக்கும் எனக்கு விழிகளில் புத்தொளி பிறக்கிறது! அதே சமயம் என் விழிப்பாவைகளோ தடாகத்தில் மிதக்கும் மலர்களாகின்றன! ஆம், நீர் தளும்புகிறது! நீ வந்து விட்டாய் என்ற செய்தி கேட்டு! செவிகளின் வழியே சிந்தனையில் தேன் பாய்கிறது! உன்னைப் பார்க்கிறேன் - கை அசைக்கிறேன் - பேசவில்லையே நீயும் நானும் என எண்ணுவதற்குள் ஆயிரம் செய்திகளைப் பேசி விடுகின்றன நமது கண்கள்!

சோர்வடையாதே! தலைவா! நாங்கள் இருக்கிறோம்! என்று உன் இதழ்கள் உச்சரிக்கின்றன! அவற்றை முந்திக் கொண்டு உன் விழிகள் பேசுகின்றன! உன் நெஞ்சமோ அனைத்தையும் முந்திக்கொண்டு என்னை அரவணைத்து ஆறுதல் கூறுகிறது!

உடன்பிறப்பே, நான் எதற்காக சோர்வடையப் போகிறேன்! கரையற்ற காட்டாறுகளாய் சோதனைகள்! நெருப்புப் புயல் நெஞ்சில்! அக்கினிக் குண்டங்களில் வீசியெறியும் அடக்குமுறைகள்! வெந்த புண்ணில் வேலாய்த் துளைத்திடும் துரோகங்கள்! ஆ! அவரா? அப்படியா? எனத் துணுக்குறும் வகையில் நன்றி மறந்து நாராச நடை அர்ச்சனை புரியும் மாஜி நண்பர் கூட்டம்! எதிர்பாராத இடங்களில் இருந்து எதிர்பாராத எரிகணைகள்! இத்தனையும் நான் தாங்க, எனக்குக் கவசமாக, கேடயமாக, நீயிருக்கும் போது, உனது உள்ளத்து உறுதியை மிசா காலத்திலிருந்தே நான் அனுபவத்தில் உணர்ந்துள்ள நிலையில் எதற்காகச் சோர்வடையப் போகிறேன்!

கண்மணி, நீயிருக்கும்போது! கழகம் காத்திடும் உறுதி! வைரம்போல் உன் உள்ளத்தில் உருக்கொண்டிருக்கும் போது, பாராள வந்தோர் பற்பல தவறுகள், ஊழல்கள், கொடுமைகள் புரிந்திடினும் அவற்றைக் கண்டு கொள்ளாது - போட்டி போட்டுக் கொண்டு பஜனை பாடிப் பாராட்டி ஆதரிக்கும் இரு கோஷ்டிகள், எதிர்க்கட்சி என்ற பெயரில் - சிபாரிசுச் சீட்டுகளுக்காக, தர்மதேவதே! தயாபரீ! தெய்வமே! தேசத்தின் நாயகியே! பரதேவதே! பராசத்தீ! என்று லட்சார்ச்சனை செய்வது மட்டுமல்ல! அதோடு என்னையும் காரசாரமாகக் கண்டித்தால்தான், அங்கே காரியம் நடக்கும் என்பதை உணர்ந்து என்னைப் பற்றியும் தரக்குறைவாகத் தாக்கிடும் செயல் கண்டு நான் எதற்காகக் கவலை கொள்ள வேண்டும்?

எனக்கு முன்பே அவர்களைப் பற்றி நீ அறிந்து கொள்வாயே, அவர்கள் சந்தர்ப்பவாதக் காக்கைகள் என்று! பணத்துக்காக பல் இளிக்கும் பச்சோந்திகள் என்று! பதவிக்காக பணிந்து வணங்கும் வெளவால்கள் என்று! என் செய்வது? விருந்து அருந்தி விட்டு எச்சில் கை காய்வதற்குள்ளாகவே விருந்தளித்தோனுக்கு விஷம் வைத்திட வேண்டுமெனத் துடிக்கும் விபரீத புத்தியாளர்கள்

உலவும் இந்த நாட்டில், நான் விதித்த கட்டுப்பாடுகளையும், அளித்த கஷ்டங்களையும் கூடப் பொருட்படுத்தாமல் - கழகத்தின் கண்ணியம் காக்கத்தானே - தலைவன், இவ்வளவு கண்டிப்பாக இருக்கிறான் என்று உனக்கு நீயே சமாதானம் செய்து கொண்டு - கழகத்தின் விரிவாக்கம் கடல் நிகர்த்தது என உலகுக்கே உணர்த்திட, என் உடன்பிறப்பே வங்கக் கடலோரம் வந்து குவிந்திருக்கிறாய்! வாழ்த்துகிறேன் உன்னை! இளைய வயது என்றால்!

வணங்குகிறேன் உன்னை! எனக்கு மூத்தோன் என்றால்!

முகில் அணைத்திடும் நிலவுபோல, உன் துணைமயில் உன்னுடன் அணைத்து வந்துள்ள மழலை அமுதுக்கு முத்தம் வழங்குகிறேன்!

கழகப் பெரியோர்க்கும், பெற்ற தாய்மார்க்கும் அவர்கள் என்னை வாழ்த்தவும், கழகத்தை வளர்க்கவும் வந்தமைக்காக அவர் தம் கால்களில் கோடி கோடி நன்றிகளைக் குவிக்கிறேன்!

செப்டம்பர் 15 - இன்றைய விழா நிகழ்ச்சி, ஒரு திங்களுக்கு முன்பே நமது கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டது!

என் அழைப்பை ஏற்று சென்னைக்கு வந்துள்ள உனக்கும், நீ பயன்படுத்தும் வாகனங்களுக்கும், யாரும் எந்தத் தடையும் விதிக்க முடியாது! அமைதி - அறவழி - எனும் நெறிமுறையைப் பின்பற்றி, அண்ணா, அய்யா, கழகம் பிறந்த முப்பெரும் விழா காண வந்துள்ள உனக்கு, காவல்துறையினர் எந்த இடையூறும் விளைத்திட மாட்டார்! இது என் நம்பிக்கை! விளைத்திடக்கூடாது! இது என் கோரிக்கை!

தலைமைக் கழகச் சார்பில், சென்னை மாவட்டக் கழகம் முன்னின்று நடத்தும் 15-ந் தேதி நிகழ்ச்சி நிரலை மீண்டும் கூறி விடுகிறேன். கவனமாகக் குறித்துக் கொள்!

காலை 8 மணி

வள்ளுவர் கோட்டம் அண்ணா சிலைக்கு நானும், பேராசிரியரும், சாதிக்கும், நாஞ்சிலாரும் - கழக முன்னணியினரும் மாலை அணிவிக்கிறோம். தொண்டர் அணியினர் அணிவகுப்புடன் நிகழ்ச்சி நிறைவுறுகிறது.

காலை 9 மணி

இராயபுரம் - அறிவகம் புதிய கட்டிடம் திறப்பு விழா! கட்டிடம் உருவாக உழைத்தோர்க்கு மரியாதை செய்வித்தல்! கட்டிடத்தைத் திறந்து வைத்தல் - சொற்பொழிவு எதுவுமில்லை.

காலை 10 மணி

அண்ணா சாலை அண்ணா அறிவாலயத்தில் முரசொலி மாறன் எழுதிய திராவிட இயக்க வரலாறு நூல் வெளியீட்டு விழா - சிறப்புரை உண்டு!

மாலை 4 மணி

காயிதே மில்லத் கல்லூரியிலிருந்து கழகப் பேரணி ஊர்வலம். பார்வையிடுகிறோம்.

மாலை 6 மணி

தியாகராய நகர் பனகல் பூங்காவில் பொதுக்கூட்டம் - விருது வழங்கு விழா - சொற்பொழிவுகள்!

உடன்பிறப்பே! தடைக் கற்கள் உண்டெனினும் தடந்தோள் உண்டெனச் சிரிப்போம்! எனும் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் வீரவரிகளுக்கு செயல்வடிவம் கொடுத்து சென்னை மாநகர் வந்துள்ள சிங்கமே!

கிளம்பிற்றுக் காண் தமிழச் சிங்கக் கூட்டம் என அந்தப் பாவேந்தர் எழுதிய கவிதைவரிக்கு எடுத்துக்காட்டாக, அண்ணா வழியில், அமைதி வழியில்

முப்பெரும் விழா கொண்டாடுவோம்!

இந்த உடன்பிறப்பின் அழைப்பை ஏற்று வந்துள்ள உன்னைக் கண்மலர் கொண்டு வாழ்த்தி, கைமலர் கொண்டு போற்றி, உன் கால் மலர்களுக்கு என்னையே காணிக்கையாக்குகிறேன்! ஏனெனில் நீதானே கழகம்! நீதானே தமிழகம்!

அன்புடன்,

மு. க.

15-09-1991

1790. உயிரனையோர் உணர்வை உரைத்திட வேண்டுமோ?

உடன்பிறப்பே!

தலைநகரில் செப்டம்பர் 15-ஆம் நாள் நடைபெற்ற முப்பெரும் விழா குறித்து இன்று கடிதம் எழுதிட இருந்தேன். அதற்கிடையே இந்தக் கடிதம் எழுதுவது அவசியமாகி விட்டது. முப்பெரும் விழா - திராவிட மறுமலர்ச்சி மாமன்றத் தொடக்க விழா இரண்டையும் குறித்து அடுத்த கடிதங்களில் எழுத இருக்கிறேன்.

பதினைந்து அல்லது இருபது ஆண்டுகளுக்கு முன்பு மழலைப் பருவத்தினராக - மிக்க இளம் பிராயத்தினராக இருந்தவர்கள் பலருக்கு நமது தி.மு.கழகம், அறிஞர் அண்ணா அவர்களின் குடும்பத்தினருக்கு எந்தவகை உதவியும் செய்திடவில்லையோ என்ற ஒரு சந்தேகம், அண்மைக் காலத்தில் வரும் செய்திகள், நடக்கும் நிகழ்ச்சிகளின் காரணமாக ஏற்பட்டுள்ளது. பல இளைஞர்கள், தம்பிமார்கள், தங்கைகள் அந்தச் சந்தேகம் பற்றி எனக்குக் கடிதம் எழுதிக் கேட்டுள்ளார்கள். அவர்களுடைய சந்தேகத்தைப் போக்கவே இக்கடிதம் எழுதுகிறேன். அண்ணா மறைவுக்குப் பிறகு எத்தனையோ நிகழ்ச்சிகளுக்கு இராணி அண்ணியார் அவர்களும், அண்ணா குடும்பத்தினரும் நமது குடும்ப நிகழ்ச்சிகளுக்கு அழைக்கப்பட்டு வந்து வாழ்த்தியுள்ளார்கள். அதுபோலவே நானும், குடும்பத்தினரும் அண்ணா குடும்பத்தையும் நமது குடும்பம் என்ற உணர்வுடனேயே எண்ணி பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டிருக்கிறோம். இவற்றையெல்லாம் பழைய செய்தித் தாள்களைப் பார்த்தால் தெரிந்து கொள்ளலாம். அண்ணா அறிவாலயம் திறப்பு விழாவிலும், அண்ணா சதுக்கத்தில் அண்ணா அருங்கலை காட்சியகம் திறப்பு விழாவிலும் அண்ணியாரை அழைத்து பொன்னாடை அணிவித்து சிறப்பு செய்துள்ளோம்.

இந்தக் கடிதத்துடன் இணைத்துள்ள புகைப்படம் 1975 நவம்பர் 6-ஆம் நாள் சென்னையில் தி.மு.கழகம் நடத்திய அண்ணா குடும்ப நிதியளிப்பு விழா நிகழ்ச்சியைக் குறிப்பிடும் படமாகும். திருமதி இராணி அண்ணியார் அவர்களின் கையில் மூன்று இலட்சத்து இருபத்தி ஐயாயிர ரூபாயை நான் வழங்குவதை, அன்றைய கழகப் பொருளாளரும், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சருமான பேராசிரியர் அறிவித்திட, அன்றையக் கழகப் பொதுச்செயலாளரும், கல்வி அமைச்சருமான நாவலர் அருகிலிருக்க, அருமை அண்ணியார் அவர்கள் பெற்றுக் கொள்வதைத்தான் இந்தப் புகைப்படத்தில் காணுகிறாய்! உடன்பிறப்பே, அந்த நிகழ்ச்சியில் நான் தெரிவித்த கருத்துகளையும், செய்திகளையும் அன்று மழலையாகவோ, மிகச் சிறுப்பிராயமாகவோ இருந்து - இன்று தெரிந்து கொள்ள விரும்பும் உடன்பிறப்புகளுக்காக, மீண்டும் ஒருமுறை சுருக்கமாக சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இதோ நான் அன்று பேசியதன் சுருக்கமான கருத்து! நெஞ்சுக்கு நீதி நூலிலே கூட இது இடம் பெற்றுள்ளது!

“1970 ஜூன் திங்கள் என்னுடைய பிறந்த நாள் விழா சென்னைக் கடற்கரையில் கொண்டாடப்பட்ட போது என்னிடம் பள்ளிக் கட்டிட நிதி வழங்கப்பட்டது. அதில் இருபத்தி ஐயாயிரம் ரூபாய் என் விருப்பம் போல் செலவழித்துக் கொள்ளலாம் என்று தெரிவித்தார்கள்.

அவர்கள் கூறியதைப்போலவே, என் விருப்பம்போல் செலவிட்டுக் கொள்ளலாம் என்று தந்த 25 ஆயிரம் ரூபாயைப் பற்றிக் குறிப்பிடும்போது என் இஷ்டப்படி செலவு செய்ய 25 ஆயிரம் ரூபாயைத் தந்துள்ளனர். நான் கடமைப்பட்டுள்ள குடும்பத்திற்கு - என்னை, கழகத்தை, லட்சோபலட்சம் தம்பிமார்களை உருவாக்கிய அண்ணாவின் குடும்பத்திற்கு - அண்ணியார் அவர்களுக்கு இந்த இருபத்தி ஐயாயிரம் ரூபாயை ஒப்படைக்கிறேன் என்று அறிவித்தேன்.

அண்ணா கவிதாஞ்சலி எனும் பெயரில் நான் அண்ணா அவர்களைப் பற்றி வானொலியில் பாடிய கவிதை வரிகள் கிராமபோன் ரிக்கார்டுகளாக ஏ.வி.எம். நிறுவனத்தினரால் வெளியிடப்பட்டிருந்தன. அவைகள்

விற்பனையான ராயல்டி தொகை பத்தாயிர ரூபாயை ஏ.வி. மெய்யப்ப செட்டியார் அவர்கள் எனக்கு அனுப்புவதாகத் தெரிவித்திருந்தார். ஆனால் நான் அந்த ராயல்டி தொகையும், அண்ணியார் அவர்களுக்கே சேரட்டுமென்று கூறி, அதனையும் அந்த விழாவிலேயே அறிவித்து அவ்வாறே அவர்களுக்கு வழங்குமாறு அறிவித்து விட்டேன்.

அண்ணா அவர்களின் குடும்பத்தாருக்காக அப்போது வழங்கப்பட்ட முப்பத்தி ஐயாயிரம் ரூபாய் மட்டுமின்றி 1973-74-ஆம் ஆண்டில் தலைமைக் கழகச் சார்பில் பத்தாயிர ரூபாய் நிதியும், அம்பாசிடர் கார் ஒன்றும் வழங்கப்பட்டது. எங்களையெல்லாம் ஆளாக்கி மகிழ்ந்த அந்தக் குடும்பம் மகிழ்வுடன் வாழ வேண்டுமென்பதற்காக, மாநில முழுவதும் கழகத்தின் சார்பில் நிதி வசூலித்து 1975 நவம்பர் ஆறாம் நாள் இன்று சென்னையில் நிதியளிப்பு விழா நடத்தி அருமை அண்ணியார் அவர்களின் கையில் மூன்று இலட்சத்து இருபத்தி ஐயாயிரம் ரூபாயை வழங்குகிறோம். கழக வரலாற்றுக் குறிப்பிலும், எனது தனிப்பட்ட வாழ்க்கைக் குறிப்பிலும், கடமைப்பட்ட ஒரு நற்காரியத்தை எங்களால் இயன்ற அளவு செய்து முடித்தோம் என்ற நிகழ்ச்சி இடம் பெறுவது எங்களுக்குக் கிடைத்த அரும்பேறு என்பதால் இதனை இங்கே குறிப்பிட வேண்டியதாயிற்று.

இஃதன்னியில் அண்ணா குடும்பத்துக்கு கழகம் செய்த உதவிகளை பொதுச்செயலாளர் நாவலர் அவர்கள் 19-4-73 அன்று நிருபர்கள் பேட்டியில் குறிப்பிட்டுள்ளார். அன்று நாவலர் அறிவித்தது பின்வருமாறு:-

சி.என்.ஏ. பரிமளத்தின் தம்பி கௌதமன் திருமணம் நடைபெற்றபோது 20-8-70 அன்று கழகத் தலைவர் கலைஞர் ரூ. பத்தாயிரம் திருமதி. ராணி அம்மையார் அவர்களிடம் வழங்கினார். பெற்றுக்கொண்டு ரசீதும் தரப்பட்டுள்ளது.

19-1-70 அன்று சி.என்.ஏ. பரிமளம் கலைஞர் அவர்களிடமிருந்து குடும்பச் செலவுகளுக்காக ரூ.20 ஆயிரம் பெற்றுக் கொண்டார். இதற்கும் ரசீது தரப்பட்டிருக்கிறது.

1971-ஆம் ஆண்டுத் துவக்கத்தில் குடும்பச் செலவினங்களுக்காகக் கழக நிதியிலிருந்து ரூ.பத்தாயிரம் கழகத் தலைவர் கலைஞர் திருமதி. ராணி அம்மையாரிடம் வழங்கினார்.

6-10-72 அன்று குடும்ப செலவினங்களுக்காக என்று சி.என்.ஏ. இளங்கோவனிடம் கலைஞர் அவர்கள் ரூ.முப்பதாயிரம் வழங்கினார். இராணியம்மாள் கையெழுத்திட்டு பெற்றுக் கொண்டிருக்கிறார். (இதற்கும் ரசீது தரப்பட்டது)

இவை பூராவும் குடும்பச் செலவுகளுக்கான உதவி! பதவி என்ற வகையில் அறிஞர் அண்ணா மறைவினால் ஏற்பட்ட மேலவைக் காலியிடத்துக்கே, அண்ணாவின் இடத்துக்கே, திருமதி இராணி அம்மையார் அவர்களை நியமித்தோம்.

பாபு என்ற சி.என்.ஏ. ராசேந்திரன் அவர்களுக்கு திரைப் படக் கல்லூரியில் சுமார் ரூ.400 மாதச் சம்பளத்தில் வேலை தரப்பட்டது.

இதல்லாமல் ரசீது இன்றி எவ்வளவோ உதவிகள் கலைஞர் அவர்கள் அவ்வப்போது செய்திருக்கிறார்!

இவைகளெல்லாம் அண்ணாவின் குடும்பத்தைக் கழகம் காப்பாற்றியது என்பதற்கு எடுத்துக்காட்டு.”

(இவைகள் 19-4-73 அன்று நாவலர் கூறியது)

உடன்பிறப்பே,

1975-ஆம் ஆண்டில் மூன்று லட்சத்து இருபத்தி ஐயாயிரம் ரூபாய் என்பது இன்றைய தினம் உள்ள ரூபாய் மதிப்பில் எவ்வளவு தொகை என்பதை நீயே எண்ணிப் பார்த்துக் கொள்ளலாம். இப்பொழுது ஒரு ரூபாய் என்பதற்கு அப்பொழுது எட்டு அல்லது பத்து ரூபாய் மதிப்பு என்பது அனைவருக்கும் தெரியும். அந்தத்

தொகையை அன்றைக்கு தமிழக முழுதுமுள்ள நமது கழக உடன்பிறப்புகள் சிறு சிறு தொகையாக வசூலித்து மாவட்ட ரீதியாக தலைமைக் கழகத்திற்கு வழங்கி, அதனைத் தலைமைக் கழகம் அண்ணா அவர்களின் குடும்பத்திற்கு வழங்கியதாகும்.

எனவே அந்தத் தொகையில், இந்தக் கழகத்தின் உயிரனைய உடன்பிறப்புகள் அனைவரின் அன்பும், பாசமும், உணர்வும் அடங்கியுள்ளது என்பதை உரைத்திடவும் வேண்டுமோ?

குறிப்பு:- காஞ்சியில் அண்ணா வாழ்ந்த வீடு (புதிய கட்டிடம்) எம்.ஜி.ஆர். அவர்களால் அரசு நினைவு இல்லமாக 2 லட்ச ரூபாய்க்கு வாங்கப்பட்டதும், காஞ்சியில் அண்ணா நடத்திய திராவிட நாடு இதழ் அலுவலகம் (பழைய பழுதான கட்டிடம்) தி.மு.க. சார்பில் 3 லட்ச ரூபாய்க்கு வாங்கப்பட்டதும் நினைவு கூரத்தக்கது.

அன்புடன்,

மு. க.

19-09-1991

1791. மகத்தான பரிசு; இந்த மாமன்றம்!

உடன்பிறப்பே!

கடந்த 17-ஆம் நாள் கலைவாணர் அரங்கில் அரசு சார்பில் நடைபெற்ற பெரியார் விழாவில் ஒரு பொய்வாய் அமைச்சர் எம்.ஜி.ஆர். புதுக்கட்சி ஆரம்பித்த பிறகு பெரியார் அவர்கள் தி.மு.க.வை ஆதரிக்கவில்லை என்று கூறியிருக்கிறார்.

1973 டிசம்பர் திங்கள் 19-ஆம் நாள் நினைவிருக்கிறதா உனக்கு? எப்படி மறந்து போகும் அந்த நாள்? தந்தை பெரியார் அவர்கள் சென்னைத் தியாகராய நகரில் கடைசியாக உரையாற்றிய நாள். அதுதானே! பெரியாருக்கே உரிய வீர முழக்கம் ஒலித்த நாள் அல்லவா அது?

> “எல்லாக் கட்சிக்காரனும் சேர்ந்து இன்றைக்கு இருக்கிற தி.மு.க. ஆட்சியை ஒழிக்க வேண்டுமென்கிறான். ஒழித்து விட்டுப் போகட்டும். அப்புறம் என்ன நடக்கும்? இன்றைக்குத் திருட்டுத் தனமாக, மறைவாகப் பேசுகிற பேச்சை வெளிப்படையாகப் பேசுவான். அப்படிப் பேசுகிறவனை பார்ப்பான் மாலை போட்டு வரவேற்பான். கல்லுதானே, அதை யார் வேண்டுமானாலும் பூஜை செய்யலாம், இப்படி இப்படி செய்ய வேண்டும் என்று நமது கலைஞர் கருணாநிதி அவர்கள் எல்லோருக்கும் அனுமதி கொடுத்தார். பார்ப்பான், சுப்ரீம் கோர்ட்டுக்குப் போயிட்டான்!”

சமுதாய இழிவை ஒழிப்பதற்காக தந்தை பெரியார் அவர்கள் உடல் நலிவு, அவரைத் துன்புறுத்திக் கொண்டிருந்த நிலையிலும் - அவர் மறைவதற்கு நாலைந்து தினங்களுக்கு முன்பு, சிம்மம் போல் கர்ச்சனை புரிந்தாரே! அந்த நாளில், தியாகராய நகரில் அவர் ஆற்றிய உரையின் இறுதிப் பகுதிதான் நான் குறிப்பிட்டுக் காட்டியிருப்பது.

அந்த வணங்காமுடி வேந்தன் பெரியாரை வணங்கவும் - அவர் கொள்கைகளை வாழ்த்திப் பின்பற்றவும், பெரியார் பிறந்த நாள் விழா!

அந்த பெரியாரின் கொள்கை கோட்பாடுகளைக் கட்டுரை வடிவில், கவினுறு இலக்கிய வடிவில், நாடக வடிவில், திரைப்பட வடிவில், எவரையும் கவர்ந்து எழுத்து - பேச்சு எனும் வடிவில் வழங்கி, இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற தமிழன் இவர் எனப் போற்றப்படும் பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாள் விழா!

அந்த அண்ணா உருவாக்கியதும், திராவிட இன உணர்வின் காவல் அரணாகத் திகழ்வதும் - சுயமரியாதைச் சுடரொளியை அணையாமல் காத்திடும் பாசறையாக விளங்குவதும் - வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும் என வீறுகொண்டு தியாக நெருப்பில் மெழுகுவர்த்திகளாகப் பயணம் நடத்தும் பட்டாளத்து வீரர்களைக் கொண்ட பாடி வீடாக உள்ளதுமான திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொடக்க விழா!

மூன்றும் இணைந்த முப்பெரும் விழாவுக்கு வருக என விடுத்த அழைப்பை ஏற்றுத் தலைநகருக்கு வந்திட்ட, உன்னை என்ன சொல்லி வாழ்த்துவதென்றே எனக்குப் புரியவில்லை!

ஏ, அப்பா! எத்தனை எத்தனை பட்டி தொட்டிகளில் இருந்து, பேரூர்களில் இருந்து, நகரங்களில் இருந்து, இல்லத்துப் பசுங்கிளிகளுடன் - அவர் தம் இடையில் பலாச்சுளை மழலைகளுடன் - சென்னைக்கு வந்து சென்றுள்ளார்கள் என் உடன்பிறப்புகள்!

அமைச்சர் பதவியிலிருந்தோர், நாடாளுமன்ற உறுப்பினர்களாயிருந்தோர், இருப்போர், சட்டமன்ற உறுப்பினர்களாயிருந்தோர், இருப்போர், தலைமைக் கழகப் பொறுப்பில் உள்ள செயலாளர்கள், மாவட்டக் கழகச் செயலாளர்கள், ஒன்றிய நகரக் கழகச் செயலாளர்கள் - நான் குறிப்பிட்ட இத்தனை பேரையும் உருவாக்கும் திறன் வாய்ந்த ஆற்றல்மிகு கழக அடலேறுகளாம் என் கண்ணின்மணியனைய செயல் வீரர்கள்! அடடா, அணிவகுத்துச் சென்ற காட்சியிருக்கிறதே - எவராவது வெளி நாட்டினர் அல்லது வெளி மாநிலத்தினர் கண்டிருப்பின், இந்த மூல பல சேனையா தேர்தலில் தோற்றுப் போனது? என வியப்பால் விழி திறந்த நிலையில் மூக்கின் மீது விரல் வைத்தேயிருப்பர்!

வீரனுக்கு வெற்றியும், தோல்வியும் ஒன்றே! தோல்வி, வெற்றிக்கான படிக்கற்கள்! தோற்றாலும் இராவணனைப் போல் - இந்திரஜித்தனைப் போல் - கட்டபொம்மன் ஊமைத்துரையைப் போல் - பூலித்தேவனைப் போல் - மருது பாண்டியரைப் போல் - பாயும் புலி பண்டாரக வன்னியனைப் போல் - வாளுக்கு வேலியைப் போல் - பொன்னர் சங்கரைப் போல் - போர்க்களத்துச் சாவில் புகழை நட்டுவிட்டே தோற்போம்! எமது படையினர் களத்தில்தான் தோற்றிருக்கின்றனர். யுத்தத்தில் அல்ல! அந்த யுத்தம், ஆம் - ஆதிக்கவாதிகளை எதிர்த்து நடத்தும் யுத்தம் - மூடநம்பிக்கைக் கூடாரங்களை, முதலாளித்துவ முகாம்களை, இந்தி மொழித் திணிப்புப் பாசறைகளை, இன உணர்வுக்கு எதிரானப் பாதுகாப்புக் கோட்டைகளை எதிர்த்து நடத்தும் யுத்தம் தொடர்ந்து நடந்து கொண்டேயிருக்கிறது! அந்த யுத்தத்தில் காணும் வெற்றியே - அடுத்த தேர்தலைப் பற்றியல்ல, அடுத்த தலைமுறையைப் பற்றிச் சந்திப்போரின் வெற்றியாகும்!

அந்த வெற்றிப் பாதைக்கு, இப்போது இருக்கின்ற சிப்பாய்களுடன் - மேலும் பல்லாயிரக்கணக்கான இளம் சிப்பாய்களைத் தயார்படுத்திப் பயிற்சி அளித்திடவே, தி.மு.க. அறக்கட்டளையின் அடிப்படைக் குறிக்கோள்களில் ஒன்று எனும் வகையில்,

திராவிட மறுமலர்ச்சி மாமன்றம்; (Academy of Dravidian Renaissance) முப் பெரும் விழாவினையொட்டி செப்டம்பர் 16-ஆம் நாள் காலையில் தொடங்கப்பட்டுள்ளது.

அண்ணா அறிவாலயத்தில் திராவிட மறுமலர்ச்சி மாமன்றத்தின் அஞ்சல் வழிக் கல்லூரிக்கான அலுவலகம் திறக்கப்பட்டு அக்கல்லூரியின் முதல்வர் டாக்டர் திரு. நன்னன் அவர்கள் பணிகளைத் தொடங்கி விட்டார்! செயல் இயக்குநராக தம்பி முரசொலி மாறன்!

இந்த மாமன்றத்தின் குறிக்கோளையும், அஞ்சல் வழிக் கல்லூரியின் முதலாண்டு பாட திட்டங்களையும் மீண்டும் ஒருமுறை உனக்கு நினைவூட்டுகிறேன்.

“நான் திராவிட மரபு வழியைச் சேர்ந்தவன். நான் என்னைத் திராவிடன் என்று சொல்லிக் கொள்வதில் பெருமையடைகிறேன்... திராவிடர்களிடம்

திண்ணமானதும், தனித்தன்மை பெற்றதும், வித்தியாசமானதுமான ஒன்று இந்த நாட்டிற்கு வழங்குவதற்கு இருக்கிறது என்பதுதான் நான் திராவிடன் என்று சொல்லிக் கொள்வதற்கான ஒரே காரணமாகும்.

-இவ்வாறு திராவிடக் கலாச்சாரத்தின் காவலராம் பேரறிஞர் அண்ணா அவர்கள் மாநிலங்கள் அவைப் பேச்சில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

நம் அண்ணன் குறிப்பிட்ட திராவிடர்களின் மாண்புகள் சீரழியாவண்ணம் பாதுகாத்து, அவற்றின் மறுமலர்ச்சிக்கும், மேம்பாட்டிற்கும் கர்த்தாவாக இருந்து அவை எக்காலத்திலும் நீடித்து மணம் வீசி இந்த நாட்டிற்கும், உலகிற்கும் ஆக்கம் தேடவேண்டும் என்பது தான் இந்த மாமன்றத்தின் முழுமுதற் குறிக்கோளாகும்.

- அந்தக் குறிக்கோளை அடையும் ஒரு முக்கிய கருவியாகத்தான் இந்த அஞ்சல் வழிக் கல்லூரி துவக்கப் படுகிறது.

"இனமான திராவிடர் பண்பின்
எழில்கான உணர்வு விளக்கேற்று!"

-என்கிற புரட்சிக் கவிஞர் பாரதிதாசனாரின் எழுச்சி வரிகளே இக்கல்லூரியின் நடைமுறைக் கோட்பாடாகும்.

இந்த உணர்வு விளக்கினை இந்தத் தலை முறையைச் சேர்ந்தவர்களுக்கும் - குறிப்பாக இளைய தலைமுறையைச் சேர்ந்தவர்களுக்கும் - ஏற்றி வைத்திடும் வகையில் கல்லூரியின் பாடத் திட்டங்கள் அமைக்கப்படும்.

திராவிட இயக்க வரலாறு:

இந்நூற்றாண்டின் துவக்கத்தில் பிராமணரல்லாதார் இயக்கம் தோன்றிய சூழ்நிலை - நீதிக் கட்சியின் தோற்றமும் பிராமணரல்லாதார் கண் விழிப்பும் - திராவிடர் கழகத் தோற்றம், தி.மு.க. தோற்றம் - இவை உள்ளிட்ட கழக வரலாறு விளக்கப்படும்.

சமூக நீதி:

சமூக நீதிக்கான அடிப்படை - அதற்கானப் போராட்டங்கள் - அரசியல் சட்டமும், சமூக நீதியும் - இவை விளக்கப்படும்.

20-ஆம் நூற்றாண்டில் மாநில சுயாட்சி:

மாநில சுயாட்சி ஏன்? அதன் அடிப்படைக் காரணங்கள் யாவை? உலக நாடுகளில் மாநில சுயாட்சி - சோவியத் நாட்டில் கூட்டாட்சி - 20-ஆம் நூற்றாண்டில் கூட்டாட்சி முறை, அதன் எதிர்காலம் எப்படி இருக்கும்? - இதுபற்றிய விவாதம் மேற்கொள்ளப்படும்.

சுயமரியாதை இயக்கமும், பகுத்தறிவுக் கோட்பாடும்:

கடவுள் பெயராலும், மதத்தின் பெயராலும் உருவாக்கப்பட்ட மூடநம்பிக்கைகள் - வைதீகத்தால் வந்த கேடுகள் - பகுத்தறிவுவாதம் என்பது என்ன? உலகெங்கிலும் உள்ள பகுத்தறிவாளர் கருத்து என்ன? - இவை பற்றிய விவாதம் மேற்கொள்ளப்படும்.

மொழிப் பிரச்சினை:

இந்தி இந்தியாவின் பொது மொழியாகும் தகுதி உண்டா? இந்தி எதிர்ப்பு - அன்றும், இன்றும்! நமது மொழிக் கொள்கை - இவை பற்றிய ஆய்வு நடத்தப்படும்.

திராவிட இனத்தின் தோற்றமும்! ஏற்றமும்!

திராவிட இனத்தின் தனித்தன்மைகள் யாவை? அதன் வரலாறு என்ன? - என்கிற ஆய்வு மேற் கொள்ளப்படும்.

மேடைப்பேச்சுக் கலை:

மேடைப்பேச்சு ஒரு கலையாக அல்ல, உயிராகவே ஆகிவிட்டது இந்த ஜனநாயகத்தில்! இதற்கு உங்களைத் தயாரித்துக் கொள்வது எப்படி? என்ற ஏழு வகையான பாடங்கள்.

இதில் சேருவதற்கான தகுதி:- 10-ஆம் வகுப்பும் அதற்கு மேலும் படித்த ஆண் - பெண் இருபாலரும் சேரத் தகுதியுடையோர்.

பத்தாம் வகுப்பு வரை படிக்காத, ஆனால் தமிழில் நன்கு எழுதப் படிக்கத் தெரிந்தோர் தங்கள் அனுபவத்தை எடுத்துக்கூறி விதிவிலக்குப் பெற்றுக் கல்விப் பயிற்சியில் சேர்ந்து கொள்ளலாம்."

குறிக்கோள் அடங்கிய கையேடும், அஞ்சல் வழிக் கல்லூரியில் சேருவதற்கான விபரக் குறிப்புகள் கொண்ட படிவங்களும் மாவட்டக் கழகச் செயலாளர்களிடம் வழங்கப்பட்டுள்ளன. அவர்களிடமோ அல்லது அண்ணா அறிவாலயத்தில் உள்ள அஞ்சல் வழிக் கல்லூரி - திராவிட மறுமலர்ச்சி மாமன்றம் எனும் முகவரியுடன் தொடர்பு கொண்டோ ஆண்டுக் கட்டணமாக ரூபாய் இருநூறு செலுத்தி அவற்றினைப் பெற்றுக் கொள்ளலாம்.

உடன்பிறப்பே, மகளிர் - மாணவர் - இளைஞர் - தொழிலாளர் - வழக்கறிஞர் -தொண்டர் - எனும் பல்வேறு அணியில் உள்ளோர் மட்டுமன்றி, எல்லோருமே, குறிப்பாக இளைய தலைமுறையினர் அனைவருமே, எழுபத்தி ஐந்து ஆண்டுகளுக்கு முன் மறுமலர்ச்சி பெற்று - மணம் பரப்பி - இன்று கருகிடும் நிலையில் இருக்கும் திராவிட உணர்வு மீண்டும் செழித்திடவும், இரண்டாயிரம் ஆண்டுக்கு முந்தைய நமது திராவிட இன வரலாறு, இலக்கியம், பண்பாடு இவை அழிந்திடாமல் காப்பாற்ற - அவற்றைத் தெளிவாக அறிந்து செயல்படவும்,

ஏற்றி வைக்கப்படும்

அணையாத விளக்கே

திராவிட மறுமலர்ச்சி மாமன்றம்!

தி.மு.க. முப்பெரும் விழாவுக்கு வந்து சிறப்பித்து, எங்கள் மனம் குளிர்வித்த உனக்கு, இந்த மாமன்றம் நாங்கள் வழங்கும் மகத்தான பரிசு!

அன்புடன்,

மு. க.

20-09-1991

1792. கலையுலக நன்மக்கள் கான!

உடன்பிறப்பே!

கோவை ஜூபிடர் பிக்சர்ஸ் நிறுவனத்தில் திரு.ஏ.எஸ்.ஏ.சாமி அவர்களின் டைரக்ஷனில் அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் 1945-ஆம் ஆண்டு கதாநாயகனாக முதன்முதலாக நடித்து வெளிவந்த ராஜகுமாரி திரைப்படத்துக்கு வசனம் எழுதுவதற்கு நான் சென்ற காலம் முதல் சுமார் நாற்பத்தி ஐந்து ஆண்டு காலத்திற்கு மேலாகத் திரையுலகின் பல்துறை மேதைகளுடன் பழகியும் - கலைஞர்களுடன் பழகியும் - அந்தத் துறையின் உழைக்கும் கரங்களான தொழிலாளத் தோழர்களுடன் பழகியும் - கலைத் துறையின் நுணுக்கங்கள், நீக்குப் போக்குகள், குணச்சித்திர மனிதர்கள், அவர்களின் குணத்திற்கேற்ற செயல்பாடுகள், அனைத்தையும் மிக நன்றாக அறிந்தவன் என்ற பின்னணியுடன்தான் இந்தக் கடிதத்தை எழுதுகிறேன்.

கலைத்துறை ஈடுபாடும் இருந்த காரணத்தினால் தான் அண்ணா அவர்களும் சரி! அண்ணா அவர்களுக்குப் பிறகு, ஆட்சிப் பொறுப்பேற்ற நானும் சரி! அந்தத் துறையினர் விடுத்த கோரிக்கைகளைப் புறக்கணிக்காமல் அரசின் சார்பில் இயன்றவரை நிறைவேற்றித் தந்துள்ளோம்.

1977-ல் திரு.எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகும், கலைத்துறையின் வளர்ச்சியில் தக்க கவனம் செலுத்தப்பட்டது என்பது வியப்புக்குரியதல்ல! இயல்பான ஒன்றேயாகும்!

அவரது ஆட்சியில் தொடங்கப்பட்டு இடையில் நிறுத்தப்பட்ட சில பணிகளையும், சிறப்புகளையும் கூட 1989-ல் கழகம் மீண்டும் ஆட்சிக்கு வந்ததும் தொடர்ந்து நடத்திட வேண்டுமென்ற திரையுலகினரின் முறையீடு ஏற்கப்பட்டதை அனைவரும் அறிவர்.

கழக ஆட்சி இரண்டாண்டு காலத்தில், ஜனநாயக விரோதமாக - வீண்பழி சுமத்திக் கலைக்கப்பட்டு இப்போது ஆட்சிப் பொறுப்பை

ஏற்றுள்ளவரும் கலைத்துறையில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர் என்பதால், அந்தத் துறைக்கான அறிவிப்புகள் பலவற்றைப் பேரவையில் கூறியுள்ளார்.

அவையில் அவரது அறிவிப்புகளைக் கேட்டு, தொலைக்காட்சியின் வர்ணனைப்படி இடியோசை போன்ற கரகோஷம்! மேஜைகளைத் தட்டி ஆரவாரம்!

அறிவிப்புகளைச் சுமந்து வந்த ஏடுகள் கண்டு திரைப்படத் துறையின் ஜாம்பவான்கள் புகழ் மலர்களை வாரிவாரி வீசியுள்ளனர்.

* இந்தியாவில் எந்த மாநில முதல்வரும் செய்யாத சாதனைகள்.
* நலிந்து கொண்டிருக்கும் திரையுலகிற்கு ஊக்கமும் உற்சாகமும் அளிக்கும் திட்டங்கள்.
* திரையுலகில் ஒரு வசந்தகாலமே உருவாகி விட்டது.
* தமிழ் சினிமா உலகின் எதிர்காலம் புகழ்மிக்கதாக அமையப் போகிறது.
* முதல்வர், கலைத்துறைக்கு ஒரு டாக்டராகவே இருந்து உயிர் கொடுத்துள்ளார்.
* அவருக்கு திரையுலகமே சிரம் தாழ்த்தி நன்றி கூறுகிறது.
* ஆகா! அற்புதம்! அபாரம்!

இப்படிப் பாராட்டுப் பாமாலை தொடுத்துள்ளனர். இவற்றைப் படித்து எனக்கொன்றும் யார் மீதும் ஆதங்கமில்லை. ஆனால் அவர்களில் சிலர், இந்த ஆட்சியையோ அல்லது இதன் முதல்வரையோ பாராட்டுவதுடன் நிறுத்தாமல், கடந்த இரண்டு ஆண்டுக் காலக் கழக ஆட்சியில், கலைத்துறை வளர்ச்சிக்கு எதுவுமே செய்யவில்லை என்பது போல அறிக்கைகள் விடுத்திருப்பதும் - கழக ஆட்சியைக் குறை கூறி கேலி செய்திருப்பதும்தான் உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு எனும் குறள்மொழியை அவர்கள் மறந்து போயினரே என்கிற ஐயப்பாட்டினை எனக்கு ஏற்படுத்துகிறது.

தரிசனத்திற்கே தவம் கிடந்தவர்கள், பிறகு பெரிய இடத்து பரிந்துரைகள் - ஆலய நிதி வாக்குறுதி - இன்ன பிறவற்றுக்கும் அசைந்து கொடுக்காத நிலையில் எப்பாடுபட்டோ, காணவும் பெற்று - கருணையும் பெற்று, இப்போது கலையுலகிற்கென சில சலுகை அறிவிப்புக் களையும் பெற்றுள்ள கதை முழுதும் எனக்குத் தெரியும்.

போட்டி போட்டுக்கொண்டு போற்றிக் கவிதை எழுதுவதற்கும் - ஒளி வெள்ளம் பாய்ச்சுவதற்கும் - எண்ணற்ற கோணங்களில் வண்ணப்படம் பிடித்துக் காட்டுவதற்கும் - அப்படியென்ன எங்குமில்லாத, இதுவரை யாரும் அறிவிக்காதத் திட்டங்களை இப்போது இந்த அரசு அறிவித்து விட்டது?

குறைந்த செலவில் தயாரிக்கப்படும் திரைப்படம் ஒவ்வொன்றுக்கும் ரூபாய் இரண்டு லட்சம் வீதம் நாற்பத்தி ஐந்து படங்களுக்கு ரூபாய் தொண்ணூறு லட்சம் மானியமாக வழங்கப்படும் என ஓர் அறிவிப்பு இப்போது!

இஃதென்ன முற்றிலும் புதுமையானதா? வேறு எவர் மூளையிலும் உதிக்காத சலுகையா? சாதனையா? சரித்திரப் புகழ் பெற்ற திட்டமா?

திரு.எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இந்த மானிய உதவி அளிக்கும் திட்டத்திற்குப் புத்துயிர் அளித்து, பெரிய அளவில் அதனை நடைமுறைப்படுத்தி; படத் தயாரிப்பாளர்களின் பாராட்டைப் பெற்றது கழக அரசு என்ற உண்மையை நினைத்துப் பார்க்க முடியாமல், அவர்களது நெஞ்சுக்குத் திரை போட்டது யார்? எப்படி?

1989-ஆம் ஆண்டு வெளிவந்த திரைப்படங்களில் குறைந்த செலவில் தயாரிக்கப்பட்டவைகளுக்கு மானியம் வழங்கப்படுமென அறிவித்தேன். இருபது பிரதிகள் வரையில் மட்டுமே எடுக்கப்பட்டு வெளியிடப்பட்ட படங்களுக்கு மூன்று லட்ச ரூபாய் என்றும், இருபதுக்கு மேல் முப்பது பிரதிகள் வரையில் எடுக்கப்பட்டு வெளியிடப்பட்ட படங்களுக்கு இரண்டு லட்ச ரூபாய் என்றும் குறிப்பிடப்பட்டு - தக்கோர் கொண்ட குழுவின் வாயிலாக, ஏழு படங்களுக்கு தலா மூன்று லட்ச ரூபாயும் - இருபது படங்களுக்கு தலா இரண்டு லட்ச ரூபாய் வீதம் நாற்பது லட்ச ரூபாயும் ஆக மொத்தம் அறுபத்தியொரு லட்ச ரூபாய் 8-2-1990 அன்று

அந்தத் தயாரிப்பாளர்களுக்குத் தலைமைச் செயலகத்திலே வழங்கப்பட்டது.

27 குறைந்த செலவுப் படங்களுக்கு 61 லட்சம் ரூபாய்! ஆனால், இப்போது 45 குறைந்த செலவு படங்களுக்கு 90 லட்ச ரூபாய்!

குறைந்த செலவு படங்கள் 27க்கு 61 லட்சம் என்ற கணக்குப்படிப் பார்த்தால் - 45 படங்களுக்கு சுமார் ஒரு கோடி ரூபாய் மானியம் தர வேண்டுமே!

அது மட்டுமல்ல! வந்த படங்களில் குறைந்த செலவு படங்கள் எத்தனை என்பதை முன்கூட்டியே எப்படி அறுதியிட்டுக் கூற முடியும்? 45க்குக் குறைவாகவும் இருக்கலாம்! 50 படங்களுக்கு அதிகமாகவும் போகலாம்.

குறைந்த செலவுப் படங்களுக்கு 3 லட்சம், 2 லட்சம் மானியம் என்று கழக அரசு அறிவித்தமைக்கே சட்டப்பேரவையில் எதிர்க்கட்சியினர் இவ்வளவு தொகை தேவையா? என முணுமுணுத்தனர், சற்றுக் குறைக்கலாமா என யோசித்துக் கொண்டிருந்தபோது கழக ஆட்சி கலைக்கப்பெற்று - கவர்னர் ஆட்சி வந்து,

அந்த ஆட்சியில் 9 படங்களுக்கு மொத்தம் பத்து லட்ச ரூபாய் மட்டுமே தரப்பட்டது! அதாவது, இருபது பிரதி வரை எடுத்த குறைந்த செலவுப் படங்கள் இரண்டு! முப்பது பிரதிகள் வரையில் எடுத்த குறைந்த செலவுப் படங்கள் ஏழு! எனவே பத்து லட்ச ரூபாய் மாத்திரமே வழங்கப்பட்டது.

ஆனால் இன்று, கால் மேலாகவும், தலை கீழாகவும் நின்று புகழுகிறவர்கள், கவர்னர் ஆட்சியில் நடந்ததை கண்டுகொள்ளாமல் - கழக ஆட்சியின் மீதல்லவா கல்லைத் தூக்கி வீசுகிறார்கள். சொன்னதைச் செய்வோம்! செய்வதைச் சொல்வோம்! என்ற ஆட்சி என ஏளனமல்லவா புரிகிறார்கள்! 61 லட்சம் ரூபாய் மானிய உதவி என்பது தி.மு.க. தேர்தல் அறிக்கையில் சொல்லாதது! எனவே, சொல்லாததையும் செய்த ஆட்சி கழக ஆட்சி என்பதை அவர்கள் உணர்ந்து கொள்ளும் உள்ளம் இல்லாமற் போய் விட்டதுதான் ஆச்சரியம்! என் செய்வது? சிலருக்கு உள்ளம் இருக்க வேண்டிய இடத்தில் ஒரு பள்ளம் அல்லவா இருக்கிறது!

அடுத்து, சிறந்த படங்களுக்கான பரிசுகள் வழங்கப்படுமென இந்த அரசு அறிவித்துள்ளது. போற்றி அகவல் பாடுகிறவர்களைக் கேட்கிறேன் - அத்துடன் என்னையும் தூற்றி அகவல் பாடுகிறீர்களே! ஏன்? எதற்காக?

கழக அரசில்தானே சிறந்த இயக்குநர் - நடிகர் - நடிகை - சிறப்பு நடிகர் - சிறப்பு நடிகை - கதாசிரியர் - வசன ஆசிரியர் - இசை அமைப்பாளர் - பாடலாசிரியர் - ஒளிப்பதிவாளர் - ஆகியோருக்கு ஒவ்வொருவருக்கும் ஐந்து பவுனில் தங்கப் பதக்கமும், சிறந்த பின்னணிப் பாடகர் - பின்னணிப் பாடகி - ஒலிப்பதிவாளர் - சண்டைப் பயிற்சியாளர் - நடனப் பயிற்சியாளர் - கலை இயக்குநர் - படத் தொகுப்பாளர் ஆகியோருக்கு ஒவ்வொருவருக்கும் மூன்று பவுனில் தங்கப் பதக்கமும் அளித்து அவர்களை ஊக்குவிக்கப்பட்டது! அந்தத் திட்டம் இப்போது உண்டா? இல்லையா? என்பதற்கு விளக்கமில்லை! தொடர்ந்தால் மகிழ்ச்சி!

எம்.ஜி.ஆர். காலத்தில் ராஜா சாண்டோ விருது என ஒன்று வழங்கப்பட்டு, அதுவும் இடையில் நின்றது.

ஆனால் கழக ஆட்சியில், ராஜா சாண்டோ விருது, கலைவாணர் விருது, எம்.ஜி.ஆர். விருது, மட்டுமல்ல, அறிஞர் அண்ணா பெயரால் ஒரு விருது, பாவேந்தர் பாரதிதாசன் பெயரால் ஒரு விருது - அனைத்தும் இரண்டிரண்டு விருதுகளாக பத்து கலைத்துறை வித்தகர்களுக்கு வழங்கப்பட்டு அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஐந்து பவுனில் தங்கப் பதக்கமும் அளித்துச் சிறப்பு செய்யப்பட்டது. இந்த விருதுகள், பரிசுகள் வழங்கும் விழா நிகழ்ச்சிகள் கழக ஆட்சியில் 15-11-89-லும் பிறகு 1-12-90-லும் நடைபெற்றன என்பதை கலையுலகம் அவ்வளவு விரைவாக மறந்துவிட்டு - கழக ஆட்சி மீது கடுமொழி வீசுவதுதான் வேடிக்கை!

1989-ல் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்ற நேரத்தில் திரைப்படத் தொழிலாளர்களுக்கும், தயாரிப்பாளர்களுக்கும் ஏற்பட்ட தகராறுகளால் - மனக் கசப்பினால் - இரு தரப்பினருமே பாதிக்கப்படக்கூடிய நிலையில் வேலை நிறுத்தம் ஏற்பட்டு, சுமார் நான்கு மாத காலம் படப்பிடிப்பே முடக்கப்பட்டு, படப்பிடிப்பு நிலையங்கள் எல்லாமே தூங்கி வழிந்து, பல்லாயிரக்கணக்கான திரைப்படத் தொழிலாளர்கள் குடும்பத்துடன் பட்டினி கிடந்து

துடித்த வேளையில், பல்லாண்டு காலமாக தீராத அந்தச் சிக்கல் தீர கழக அரசு நடவடிக்கை எடுத்ததை நன்றியுடையோர் மறப்பரோ? அல்லது மறுப்பரோ?

அந்தப் பிரச்சினை சம்பந்தமாக பேச அரசு தரப்பில் அன்றைய உள்துறை செயலாளர் நாகராஜன், அமைச்சர்கள் ஆற்காடு வீராசாமி, பொன்.முத்துராமலிங்கம், தொழிலாளர் ஆணையர் மலைச்சாமி ஆகியோரையும் -

தயாரிப்பாளர்கள் சார்பில் கே. பாலசந்தர், கோவை செழியன், பாரதிராஜா, அனுமந்த ராவ் ஆகியோரையும் -

தொழிலாளர் சார்பில் மோகன் காந்திராமன், தர்மலிங்கம், ஜார்ஜ் பிரசாத், அய்யூப் ஆகியோரையும் நியமித்துப் பேச்சுவார்த்தை நடத்தச் செய்து, அவ்வப்போது நானும் கலந்து கொண்டு ஆலோசனைகளையும் வழங்கினேன்.

அந்தக் கூட்டத்தினை 40 முறை கூட்டி, இறுதியில் ஒரு நல்ல முடிவுக்கு வரச் செய்து, ஒப்பந்தம் உருவாகவும் வழி செய்தது கழக ஆட்சியில் அல்லவா?

இந்தியாவிலேயே முதன் முதலாக திரைப்படத் தொழிலாளர்களுக்கும், தயாரிப்பாளர்களுக்கும் பாதகம் ஏற்படாத வகையில் ட்ரை பார்ட்டி ஒப்பந்தம் ஒன்று ஏற்பட அரசே வழிசெய்தது அதுதான் முதல் தடவையாகும்.

அதன் காரணமாக, திரைப்படத் துறையைச் சூழ்ந்திருந்த இருள் அகன்றது. பட உலகம் மாபெரும் அழிவிலிருந்து மீண்டது.

அதன் தொடர்பாக, திருவாளர்கள் ஜீவி, கேயார், ராம. நாராயணன், ஏ.எஸ்.பிரகாசம், டி. இராமானுஜம் - ஆகியோரைக் கொண்ட ஐவர் குழுவினையும் அமைத்து, அவ்வப்போது திரைப்பட உலகில் ஏற்படும் பிரச்சினைகளை அரசின் கவனத்திற்கு உடனடியாகக் கொண்டு வரச் செய்ததும் கழக ஆட்சிதான்!

இதோ, இப்போது மற்றுமொரு அறிவிப்பு! பெருத்த ஆரவாரத்திற்கிடையே, திரைப்படக் கல்லூரி வளாகத்தில் ஒரு திரைப்பட நகர் உருவாக்கப் போகிறேன் - என்று அறிவித்திருக்கிறார். அவையில்!

இது என்ன புதுத்திட்டமா?

இல்லவே இல்லை!

இதுவும் கழக அரசின் திட்டம்தான்!

இப்படி ஒரு திரைப்பட நகரை பல கோடி ரூபாய் செலவில் தொடங்கும் திட்டத்தை 1989-ஆம் ஆண்டு பதவிக்கு வந்த உடனேயே கழக அரசு உருவாக்கியது. அதனால்தான் 4-6-1990 அன்று திரைப்படக் கல்லூரி வளாகத்தில், பிரமாண்டமாக நடைபெற்ற கல்லூரியின் வெள்ளிவிழாவின் போது, அன்றைய மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு.பி. உபேந்திரா அவர்களால் அந்த திரைப்பட நகருக்கான அடிக்கல்லும் நாட்டப்பெற்றது.

உடனடியாக, அத்திட்டம் தொடங்கப்படாததற்குக் காரணம், சுமார் 65 ஏக்கர் பரப்பளவுள்ள அந்த வளாகத்தின் பெரும் பகுதி தூரம் காம்பவுண்ட் சுவர் இல்லை. அந்த நிலையில் திரைப்பட நகர் திட்டம் தொடங்குவது பாதுகாப்பானதல்ல என்ற காரணத்தால், உடனடியாக, முதல் கட்டமாக, காம்பவுண்ட் சுவர் கட்ட ரூபாய் 6.25 லட்சத்தை அன்றைய கழக அரசு வழங்கியது. அந்த நீண்ட சுவர் இப்போதுதான் கட்டி முடிக்கப்படுகிறது என்பதுதான் மறைக்கப்பட்ட உண்மை!

அடுத்தபடியாக!

இந்தியாவிலேயே முதல் சாதனையாக திரைப்படப் பல்கலைக் கழகம் அமைக்கப் போகிறேன் என்று அறிவித்திருக்கிறது இன்றைய அரசு!

ஆசியாவிலேயே முதல் சாதனையை அறிவித்து விட்டார்! என்று துதிகளும் பாடப்படுகின்றன.

இதுவும் என்ன புதிய திட்டமா?

இல்லவே இல்லை!

1990-ஆம் ஆண்டு துவக்கத்திலேயே கலைத் தொடர்பான அனைத்துக் கல்லூரிகளையும் (இசைக் கல்லூரி, ஓவியக் கல்லூரி, சிற்பக் கல்லூரி) போன்றவற்றை எல்லாம் ஒன்றாக இணைத்து, இப்படி ஒரு பல்கலைக் கழகம் அமைக்கும் முயற்சியை கழக அரசு மேற்கொண்டது.

அதற்காக, அரசுக்கு ஆலோசனைகள் வழங்கவும், திட்டங்களை உருவாக்கவும் மதுரை காமராசர் பல்கலைக் கழகத்

துணை வேந்தர் திரு.லட்சுமணன் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது.

அன்றைய செய்தித் துறை அமைச்சர் பொன்.முத்துராமலிங்கம், இளையராஜா, ஸ்ரீதர், கே.பாலசந்தர், செய்தித்துறைச் செயலர் திருமதி ஜெயந்தி, இயக்குநர் ராசமாணிக்கம், திரைப்படக் கல்லூரித் தலைவர் சொர்ணம் போன்றவர்களையும் குழு உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டது.

அந்தக் குழுவினர் இருமுறை கூடி, விவாதித்து, அந்தப் பல்கலைக் கழகத் திட்டத்திற்கான நகல் வடிவத்தை தயாரிக்கும் பொறுப்பினை துணை வேந்தர் திரு.லட்சுமணன் வசம் ஒப்புவித்தனர்.

இப்போது புரிகிறதா?

இன்று அறிவிக்கும் திட்டங்களுக்கு எல்லாம் காரணகர்த்தா கழக அரசுதான் என்பது!

உண்மை இப்படி இருக்க - அனைத்தையுமே இருட்டடிப்பு செய்துவிட்டு -

எல்லாமே நாம்தான் செய்கிறோம் - நாம்தான் அறிவிக்கிறோம் என்று அரசினர் மகிழ்வதும் -

எல்லாமே உங்களால்தான் முடியும் - என்று திரைப்படத் துறையினர் நன்றி கூறி - கூறி - கூறி - கூத்தாடுவதும் விசித்திரம்! மகா விசித்திரம்!

உடன்பிறப்பே, இவையனைத்துக்கும் மேலாக திரைப்பட உலகம், ஆழமான கடலில் மூழ்கிக் கொண்டிருந்த நிலையை மாற்றி காப்பாற்றிட கழக அரசு எடுத்த முயற்சி குறித்து, 1989 ஜூலை 25-ந்தேதி தமிழ்நாடு என்ட்டர்டெயின்மெண்ட் என்ற கலைத்துறை ஏட்டில் என் படத்துடனும், நண்பர் ஜி.உமாபதி படத்துடனும் வெளிவந்துள்ள செய்திக்குறிப்பை அப்படியே தருகிறேன்.

இதோ! அந்த செய்திக் குறிப்பு:-

1989 தேர்தலுக்கு முன்பு கடற்கரையில் திரையுலகிற்கு அளித்த வாக்குறுதியை செயல்படுத்தவும், நீண்ட நாட்களாக தீர்த்து வைக்கப்படாது

இருந்த கோரிக்கைகளுக்குத் தீர்வு காணவும் ஆங்காங்கே திரையரங்குகளை மூடுவதை தவிர்த்து உரிமையாளர்களை மட்டுமல்ல, ஆயிரக்கணக்கான தொழிலாளர்களையும் காப்பாற்றவும் தமிழக முதல்வர் கலைஞர் வினியோகஸ்தர்கள் - திரையரங்கு உரிமையாளர்கள் அடங்கிய கூட்டத்தைக் கூட்டி அரசு எந்த அளவுக்கு உதவினால் தொழில் செழிப்படையும் என மிகுந்த அக்கறையுடன், சகோதரப் பாசத்துடன் கேட்டார். அகம் மகிழ்ந்தனர் திரையுலகத்தினர். பெற்ற தாயிடம் உரிமையுடன் கேட்பது போல மனம் திறந்து கேட்டார் கலைஞர்.

விவாதத்திற்கு வந்திருந்த சாதனைச் செல்வர் ஜி.உமாபதி அவர்கள் சமீபத்தில் நஷ்டத்தில் நடந்து கொண்டிருக்கும் தனது திரையரங்குகளை மூடுவதற்கு உண்டான காரணங்களை விவரித்து கூறினார்.

நூறு ரூபாய் வசூலானால் அரசு பாதி ரூபாய்க்கு மேல் வரியாக எடுத்துக் கொள்கிறது! மீதி ரூபாயில் எத்தனை அணிகள் அந்த தொகையை பங்கு போட்டுக் கொள்ள முடியும். நாளுக்கு நாள் மின்சார செலவு, ஊழியர்களின் சம்பளம், நகராட்சி வரி ஏறிக்கொண்டே போகும் நிலையில் பல கோடி ரூபாயில் திரையரங்குகளை கட்டிவிட்டு அதில் எந்தவித லாபமும் இல்லாமல் மாதாமாதம் கையிலிருந்து பணத்தை செலவு செய்யும் இழிவான நிலைக்குத் தள்ளப்பட்டதால் திரையரங்குகளை மூடிவிட்டு நிம்மதியாக இருக்கலாம் எனக் கூறினார்! வரும் வசூலில் எத்தனை சதவீதம் அரசு எடுத்துக் கொண்டால் திரையரங்கு உரிமையாளர்களும், வினியோகஸ்தர்களும் மகிழ்ச்சியாகத் தொழிலை நடத்துவீர்கள் என கேட்டு அக்கறையுடன் வினவிய கலைஞர், அரசுக்கு முன்பு வந்து கொண்டிருந்த வரித் தொகை குறையாத அளவுக்கு நுழைவுக் கட்டணத்தை மற்ற மாநிலங்களிலுள்ள அளவுக்கு ஏற்றிக் கொள்ள அனுமதித்தது, கேளிக்கை வரியை 53 சதவீதத்திலிருந்து 40 சதவீதமாக குறைக்க தமிழக முதல்வர் இசைவு அளித்துக் குறைத்தார்.

கேட்டதைவிட அதிகமாகவே அளித்த கலைஞரை வாழ்த்தி மனதார மகிழ்ந்தார். சாதனைச் செல்வர்! கலைஞர் செய்த இந்த செயற்கரிய சாதனைச் சாதனை செல்வரையே வியக்க வைத்தது!

இவ்வாறு அந்தக் கலைத்துறை ஏடு எழுதியது!

உடன்பிறப்பே, கலைத் துறையினரிடம் நற்சான்றுகள் பெற வேண்டும் என்ற துடிப்பில் இவற்றையெல்லாம் நான் நினைவு படுத்தவில்லை. அவற்றை எதிர்பார்த்து கலைத்துறையில் மட்டுமல்ல, பொது வாழ்வுத் துறையிலும் நான் ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாகத் தொண்டாற்றிக் கொண்டிருக்கவில்லை.

மாநிலத்தில் உள்ள எத்தனையோ துறைகளைப் போலக் கலைத் துறையும் இருக்கும் போது, கருணாநிதி தலைமையிலான கழக அரசு, அந்தத் துறைக்கு எதுவுமே செய்யவில்லை - இப்போது வந்த அரசுதானே இந்தியாவிலேயே முதன்முதலாக கலைத் துறைக்கு இவ்வளவும் செய்கிறது என்று - கலையுலக ஈடுபாடு கொண்ட நன்மக்கள் யாராவது தவறாகக் கருதிவிடக் கூடாது அல்லவா? அதனால்தான் இத்தனை விபரங்களுடன், இந்தக் கடிதம்!

அன்புடன்,

மு. க.

22-09-1991

1793. திராவிட இயக்கப் பவளவிழா மாநாடு!

உடன்பிறப்பே!

திராவிட இயக்க வரலாறு எனும் நூலில் தம்பி முரசொலி மாறன் 1916-ஆம் ஆண்டின் சிறப்பு குறித்து எழுதும்போது, திராவிட இயக்கம் பற்றி ஆராய்ந்து எழுதியுள்ள டாக்டர் சரசுவதி அவர்களின் கூற்றை மேற்கோளாகக் காட்டியுள்ளார். அது என்ன?

"பிராமணர்களுடையதும், பிராமணமயமாக்கப் பட்டதுமான அரசியல் சமுதாய ஆதிக்கத்தினைக் குறைத்து, அதை அறவே ஒழிப்பதற்காகப் பிராமணரல்லாதார் தங்களுக்கென ஒரு அமைப்பை உருவாக்கிக் கொண்ட வரலாறு - என்று தற்போதைய அரசியல் வரலாற்றினைக் குறிப்பிடலாம். 1916-ஆம் ஆண்டு இந்த வரலாற்றில் ஒரு திருப்புமுனையாகும். அப்போது தான் பிராமணர்களின் ஆதிக்கத்திற்கு அறைகூவல் விடுக்கப்பட்டது. அப்போதுதான் அவர்களது சரிவும் ஆரம்பமாகியது."

டாக்டர் சரசுவதி கூறியுள்ள சரித்திரத் திருப்பம் எத்தகையது என்பதைத் திராவிட இயக்க வரலாறு வீறு கொண்டு வர்ணிக்கிறது.

ஆயிரமாயிரம் ஆண்டுகளாய் ஆமைகள் போல் முடங்கிக்கிடந்த சமுதாயம் முதல் முறையாக உரிமைக்குரல் கொடுத்தது அந்த ஆண்டில்தான்!

கண்மூடிக் கொள்கைகளால், கண்ணிருந்தும் குருடராய்க் காலமெல்லாம் வாழ்ந்தோருக்கு முதல்முறையாகக் கண்திறப்பு ஏற்பட்டது அந்த ஆண்டில்தான்!

மனிதரில் பேதம் செய்த மனுநீதி மாற்றிச் சமுதாய நீதி கேட்டுச் சண்டமாருதம் எழுந்தது அந்த ஆண்டில்தான்!

ஆண்ட இனத்தால் மீண்டும் முற்றுகை! மாண்டிடும் புழுவே! மகுடம் கழற்று! என்ற போர்க்குரல் எழுந்தது அந்த ஆண்டில்தான்!

உடன்பிறப்பே,

டாக்டர் நடேசனாரின் உணர்வுகளுக்கு உருவம் கிடைத்து, டாக்டர் டி.எம். நாயர், தியாகராயர் இருவரும் இணைந்து தொடங்கிய அரசியல் கட்சியாம் தென்னிந்திய நல உரிமைச் சங்கம் எனும் திராவிட இயக்கத் தோற்றம் நடைபெற்றது 1916 நவம்பர் திங்கள் 20-ஆம் நாள்!

அந்த 1916-ஆம் ஆண்டு குறித்து நமது அண்ணா அவர்கள் 1957 ஆகஸ்டு திங்கள் 11-ஆம் நாள் மதுரையில் பேசியபோது என்ன குறிப்பிட்டார் தெரியுமா?

“உண்மையிலேயே தமிழகத்தில் 1916-இல் ஒரு பெரிய புரட்சிக்கு முதல் கட்டம் நடத்தப்பட்டது. அது ஒரு பெரிய புரட்சி என்று நமக்கெல்லாம் தெரியாமல் போனதற்குக் காரணம் நம்மில் பலபேர் 1916-இல் அரசியல் அலுவல்களைக் கவனிக்கக் கூடிய பருவத்தில் இருந்தவர்கள் அல்ல. அதிலும் குறிப்பாக, தி.மு.கழகத்திலே இன்றைய தினம் ஈடுபாடு கொண்டவர்களிலே பல பேர் அந்த நாட்களில் தொட்டிலிலே படுத்துத் தூங்கிக் கொண்டிருந்த குழந்தைகளாக இருந்திருப்பார்கள். ஆனால் இன்றைய தினம், நம்மிடையே என்னென்ன மாதிரியான எழுச்சிகள் காணப்படுகின்றனவோ, இன்றைய தினம் எங்கெங்கு வாலிபத் தோழர்கள் உற்சாகமாக ஒரு கொள்கைக்காகத் தங்களைத் தாங்கள் ஒப்படைத்திருக்கிறார்களோ, அதைப்போல் 1916-இல் ஒரு மாபெரிய மன எழுச்சி நம்முடைய தமிழகத்திலே ஏற்பட்டது.

அது தொடர்ந்து நடைபெறாமல் போனதற்குக் காரணங்கள் பல இருக்கின்றன. அந்தப் புரட்சி, பிற்காலத்தில் ஒடுக்கப்பட்டதற்கானச்

சூழ்நிலைகள் நம்மாலே சரியான முறையில் இன்னும் கணிக்கப்படவில்லை.

1916-இல்தான் தமிழ் நாடு உண்மையிலேயே தன்னை உணரத் தலைப்பட்டது. தான் ஒரு தனி இனம் என்பதையும், தன்னுடைய இனம் தாழ்த்தப்பட்டு இருக்கிறதுஎன்பதையும், அந்த இனம் தாழ்த்தப்பட்டிருந்தாலும், அது மறுபடியும் தளைகளை உடைத்துக்கொண்டு முன்னேற முடியும் என்கிற தன்னம்பிக்கையையும் 1916-இலே பிறந்தது.

பார்ப்பனரல்லாதார் இயக்கம் சமநீதி காணும் நோக்குடன் அன்று துவக்கப்பட்டதே தவிர, அது பார்ப்பனர்களை தனிப்பட்ட முறையில் வெறுத்ததில்லை. பார்ப்பனர்களைத் தனிப்பட்ட முறையில் வெறுக்க வேண்டிய அவசியமில்லை என்றும், பார்ப்பனர்களுக்கு என்று இருக்கின்ற உரிய பங்கைத் தந்து, பார்ப்பனரல்லாதாருக்குக் கிடைக்க வேண்டுமென்ற நீதியை அடிப்படையாகக் கொண்டதால்தான் அந்தக் கட்சி நீதிக் கட்சி என்று அழைக்கப்பட்டது.”

பேரறிஞர் அண்ணா 1957-ஆம் ஆண்டு மதுரையில் பேசியது இது!

1916-ஆம் ஆண்டில் நமது மாநிலத்தில் தோன்றிய சமூக நீதிக்கான - சமநீதிக்கான புரட்சியைப் பற்றி பேசியிருக்கிறார்.

திராவிட இயக்கத்திற்கு அமைப்பு முறையில் வித்தூன்றப் பெற்ற நாள் தான் 1916 - நவம்பர் 20.

அந்த நாள் குறித்து அண்ணா பேசியது மதுரை மாநகரில்!

இந்த ஆண்டு திராவிட இயக்கத்திற்கு 75 ஆண்டு நிறைகிறது!

75-ஆம் ஆண்டு பவள விழா தொடக்கத்தை பெருஞ்சிறப்புடன் சென்னையில் நாம் சென்ற ஆண்டு கொண்டாடியதை மறந்திருக்க மாட்டாய்!

இந்த ஆண்டு நவம்பர் 20-ஆம் நாள் திராவிட இயக்கத்தின் பவள விழா நிறைவு ஆண்டு!

1916 பற்றி அண்ணன் முழங்கிய அதே மதுரையில் - நவம்பர் 20-ஆம் நாளன்று நமது இயக்கத்தின் பவளவிழா நிறைவு ஒரு

மாநாடு போல நடைபெறுவதற்கு ஏற்பாடுகள் இப்போதே தொடங்கப்படுகின்றன!

விழியுங்கள்! எழுங்கள்! இன்றேல் என்றும் நீவிர் வீழ்ந்து பட்டோராவீர்!

என்று திராவிட இயக்கத் தோன்றல்களில் ஒருவரான டி.எம். நாயர் அவர்கள் முழங்கியதை நினைவு கூர்ந்து,

திராவிட இயக்கப் பவள விழா நிறைவு

மாநாட்டினை

மதுரையில் எழுச்சியுடன் நடத்திட இன்றே ஆயத்தமாவோம்.

அன்புடன்,

மு. க.

23-09-1991

1794. அறிந்து கொள்ள விரும்புவதில் தவறில்லை!

உடன்பிறப்பே!

அ.தி.மு.க. அரசின் கொள்கை விளக்க உரையான ஆளுநர் உரையிலாகட்டும் அல்லது கொள்கை விளக்கங்களும், ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டங்களும் இடம் பெற வேண்டிய நிதிநிலை அறிக்கையிலாகட்டும், இந்தியாவிலும், குறிப்பாக நமது தமிழகத்திலும் சமூக நீதியின்பால் மிகுந்த அக்கறையும், ஆர்வமும் கொண்டுள்ளவர்கள் மன நிறைவு கொள்ளத் தக்க வகையில் மண்டல் கமிஷன் பரிந்துரை பற்றி எந்தக் குறிப்பும் இல்லை.

குறிப்பே இல்லை என்பதா? இதோ இருக்கிறதே என்று அ.தி.மு.க. ஆட்சியாளர்கள், ஆளுநர் உரையிலும், நிதிநிலை அறிக்கையிலும் சில வாக்கியங்களை எடுத்துக் காட்டக்கூடும். அதனால்தான் நான், குறிப்பே இல்லை என்று சொல்லாமல் மனநிறைவு அளிக்கத்தக்க வகையில் குறிப்பு இல்லை என்று கூறுகிறேன். என்ன குறிப்பு இருக்கிறது?

> “மண்டல் கமிஷன் பரிந்துரைகள் செயல்படுத்தப்படும் சமயத்தில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான இடஒதுக்கீடு 50 சதவிகிதம் என மத்திய அரசால் ஒரு கொள்கை முடிவாகச் செயல்படுத்தப்பட வேண்டும். இந்த இடஒதுக்கீடு எல்லாத் துறைகளிலும் உள்ள வேலை வாய்ப்புக்கும், கல்வி நிலையங்களில் சேருவதற்கும் பொருந்தச் செய்ய வேண்டும்.”

இதுதான் உடன்பிறப்பே, அந்தக் குறிப்பு! மண்டல் கமிஷன் பரிந்துரையை நிறைவேற்ற மத்திய அரசு உடனடியாக முன் வரவேண்டும் என்று இதயபூர்வமாக எந்தக் குறிப்பும் இல்லை. அதனால்தான் மண்டல் கமிஷன் பரிந்துரைகள் செயல்படுத்தப்படும் சமயத்தில் என்று கூறி நழுவிக் கொண்டார்கள்!

செயல்படுத்தும் சமயத்தை உடனே மத்திய அரசு உருவாக்க வேண்டும். மண்டல் கமிஷன் பரிந்துரைக்கான ஆதரவுக் கருத்தை உச்ச நீதி மன்றத்தில் எடுத்துரைக்க வேண்டும் என்று இந்த அரசு, மத்திய அரசை வலியுறுத்தாமைக்குக் காரணம் என்ன? மண்டல் பரிந்துரையை மத்திய அரசு உச்ச நீதிமன்றத்தில் வலியுறுத்த வேண்டுமென்றும், 27க்குப் பதிலாக 50 சதவீதம் இடஒதுக்கீடு பிற்படுத்தப்பட்டோருக்கு என வற்புறுத்த வேண்டுமென்றும் இந்த அரசு இதுவரையில், மத்திய அரசை நெருக்காதது ஏன்?

காவிரிப் பிரச்சினைக்கு நடுவர் மன்றம் தவிர வேறுவழியில்லை - இனிப் பேச்சு வார்த்தையால் பயனில்லை - என்று கழக அரசு, திட்டவட்டமாக, திரு.வி.பி.சிங் அரசுக்கு அறிவித்து - இந்த நிலையை உச்சநீதி மன்றத்தில் எடுத்துரைக்க வேண்டுமென்று வலியுறுத்தியதையும் - அதன் காரணமாக காவிரிப் பிரச்சினைக்காக நடுவர் மன்றம் அமைந்ததையும் ஞாபக மறதியில்லாதவர்கள் மறந்திருக்க மாட்டார்கள்!

அதேபோல காங்கிரசின் தோழமைக் கட்சியான அ.தி.மு.க. நடத்தும் இந்த அரசும், மண்டல் கமிஷன் பரிந்துரைகளை நிறைவேற்றுவதில் மத்திய அரசு, தனது ஆதரவுக் கருத்தை உச்சநீதி மன்றத்தில் திட்டவட்டமாகவும், தெளிவாகவும் அறிவிக்க வேண்டுமென்று இதுவரையில் ஏன் சொல்லவில்லை?

மத்திய காங்கிரஸ் அரசின் கருத்து என்ன என்பதை முதலில் கூறுங்கள். அப்போதுதான் கூட்டத்திற்கு வர முடியுமென எடுத்துரைத்து தி.மு.க. உள்ளிட்ட தேசிய முன்னணி, பிரதமர் கூட்டிய கூட்டத்தைப் புறக்கணித்துள்ளது.

ஆனால் அதே நேரத்தில், தோழமைக் கட்சியான அ.தி.மு.க. அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளவுமில்லை! 50 சதவீதம் என்பது பற்றியும் கவலைப்படவில்லை!

அ.தி.மு.க.வின் தலைவி, மண்டல் கமிஷன் பரிந்துரைகளை தேசிய முன்னணி அரசு நடைமுறைப்படுத்த முன்வந்தபோது - பத்திரிகைகளுக்கு அளித்த பேட்டியில் மறுப்புரைத்து பொருளாதார அடிப்படையில்தான் இட ஒதுக்கீடு இருக்க வேண்டுமென்று கூறியதும் - மண்டல் கமிஷனை முன்னிட்டே வி.பி.சிங் ஆட்சி கவிழ்க்கப்பட்ட போது; கவிழ்ப்பதற்கு ஆதரவாக அ.தி.மு.க. வாக்களித்ததும் - அழிந்துவிட்ட வரலாறு அல்ல!

திடீரெனப் பெரியார் பிறந்த நாள் விழாவில் - இந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே 50 சதவீதத்தை வலியுறுத்தியும், மண்டல் கமிஷன் பரிந்துரைகளை மத்திய அரசு ஆதரித்து நிறைவேற்ற வேண்டுமென வலியுறுத்தியும் தீர்மானம் கொண்டு வரப்போவதாக ஜெயலலிதா அறிவித்தார்.

அந்தத் தீர்மானத்தை அனைவருமே ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர்.

ஒருவேளை இந்தக் கடிதம் நான் எழுதிக் கொண்டிருக்கும்போதே அல்லது இது உன் கையில் கிடைக்கும் நேரத்தில், அவையில் அந்தத் தீர்மானம் வரலாம்!

ஏற்கெனவே கழக அரசு சட்டமன்றத்தில் மண்டல் கமிஷன் பரிந்துரைக்கான ஆதரவைத் தெரிவித்துள்ளது.

இப்போது வரவிருக்கும் தீர்மானத்தை மத்திய அரசு ஏற்றுக் கொள்ளாவிடில், அது குறித்து இந்த அரசு எடுக்கும் முடிவு எதுவாக இருக்கும்?

சமூக நீதிக்காக நீண்ட பல ஆண்டுகளாகப் பாடுபடும் இயக்கங்கள், இதனை அறிந்து கொள்ள ஆவலாக இருப்பதில் தவறில்லை அல்லவா?

அன்புடன்,

மு. க.

24-09-1991

1795. தடைக் கற்கள் உண்டென்றாலும்...!

உடன்பிறப்பே!

* முரசொலி தடை செய்யப்பட வேண்டும்.
* தி.மு.க. தடை செய்யப்பட வேண்டும்.
* திராவிட மறுமலர்ச்சி மாமன்றம் தடை செய்யப்பட வேண்டும்.
* கருணாநிதியைக் கைது செய்ய வேண்டும்.

இந்தக் குரல்கள் உன் காதுகளில் விழுந்திருக்கும்! உனக்கும் எனக்கும் ஏற்கெனவே அறிமுகமான குரல்கள்தான்! எந்த தி.மு.க. முத்திரையில் பெரும் பதவிகளில் அமர்கின்ற வாய்ப்பைப் பெற்றிருந்தார்களோ, எந்த முரசொலியால், தங்கள் முகவரிகள் ஊருக்கும் உலகத்திற்கும் தெரிகிற நிலையைப் பெற்றார்களோ, அவர்கள்தான் இன்றைக்கு அண்ணா அறிவாலயத்தில் அமைதியாக அமர்ந்துள்ள என்னைக் கைது செய்யுமாறு கோரிக்கை வைக்கிறார்கள்! அண்ணா அறிவாலயத்தில் ஓர் பகுதியில் அலுவலகம் கொண்டு இயங்குகிற தி.மு.க.வைத் தடை செய்யுமாறு முழங்குகிறார்கள்! அண்ணா அறிவாலயத்தில் தி.மு.க. அறக்கட்டளை சார்பில் தொடங்கப்பட்டுள்ள திராவிட மறுமலர்ச்சி மாமன்றம் (Academy of Dravidian Renaissance) அதன் அஞ்சல் வழிக் கல்லூரியும் தடை செய்யப்பட வேண்டுமென ஓங்கார ஒலி எழுப்புகிறார்கள்! எழுத்து சுதந்திரத்திற்குக் கைவிலங்கு பூட்டப்பட்டிருந்த எமர்ஜன்சி காலத்திலே கூட எரிமலையாய் - கனல் கக்கி, எதிர்ப்புகளைப் பொசுக்கி, தடை பல கடந்து, தடந்தோள் உயர்த்தி தன்மான முரசொலித்தது முரசொலி ஏடு என்பதை ஏனோ அவர்கள் மறந்து விட்டனர்!

முரசொலி தடுக்கப்படலாம் அல்லது தானாகவே கூட, தனது ஐம்பதாண்டு காலப் பொன்விழாவை நிறைவு செய்துகொண்டு

நிறுத்தப்பட்டு விடலாம்! 1942-இல் தொடங்கப்பட்ட ஏடாயிற்றே! தொடர்ந்து உழைக்கும் அதற்கும் ஓய்வு வேண்டாமா என்ன?

முரசொலி ஏடு தடுக்கப்படலாம் அல்லது நிறுத்தப்படலாம் - அதற்காக, அந்த ஏடு எந்தக் கொள்கைகளைப் பரப்பி வந்ததோ - எந்த இயக்கத்தின் இலட்சியங்களுக்காக ஒலித்து வந்ததோ - அந்தக் கொள்கைகளும், இலட்சியங்களும் அவைகளுக்காக வாழ்ந்த தலைவர்களின் தத்துவங்களும் வேறு ஏதோ ஒரு வழியில் மக்கள் இதய நாடிகளைப் போய்த் தடவிடத்தான் செய்யும்!

உடன்பிறப்பே, உனக்கு நினைவிருக்குமென்று கருதுகிறேன். நமது அண்ணா எழுதிய சொர்க்க வாசல் திரைப்படம்! அதில் மதிவாணன் எனும் ஒரு மக்கள் கவிஞன்! அவனை நாத்திகன் எனக் கூறி, அவன் பாடல்களைத் தடை செய்யுமாறு அரசுக்கு ஆணையிடுகிறார் அருமறையானந்தர் எனும் மடாதிபதி! அரசும் மதிவாணன் பாடல்களைத் தடை செய்கிறது. தடை மீறிப் பாடிய அவனைச் சிறையில் போடவும் உத்திரவிடுகிறது. விளைவு என்ன? அந்தப் புரட்சிப் பாடலை நாடு முழுதுமுள்ள மக்கள் பாடுகிறார்கள். மதிவாணனை நாடு கடத்தவும் ஆணை பிறக்கிறது.

> "நாத்திக மதிவாணனின் இரத்தம் இந்தப் பூமியில் படுவது பாபம்! எனவே அவனைக் கொல்லாது நாடு கடத்துகிறோம்!"

என்று வேந்தன் வெகுண்டு கூறுகிறான். அதனால் என்ன? எந்தப் பாடல் தடுக்கப்பட்டதோ அந்தப் பாடலை, பச்சிளங்குழந்தைகள் பாடினர் - பருவக் கிள்ளைகள் பாடினர் - பாட்டாளித் தோழர்கள் பாடினர் - பாட்டிகள், தாத்தாக்கள் பாடினர்! நாடே பாடியது, நாத்திகன் என்று நாடு கடத்தப்பட்டவனின் பாடலை!

இது அண்ணா எழுதிய கதை! படமாகவும் வந்திருக்கிறது. பூம்புகார் வெளியீடாக புத்தக வடிவிலும் இப்போதும் கிடைக்கிறது!

அண்மையில் முதல்வர் ஜெயலலிதா அறிவித்தவாறு, அண்ணாவின் நூல்கள் அனைத்தும் அரசுடைமையாகப் போகிறதே! அப்பட்டியலில் இடம் பெறும் நூல்களில் இந்த சொர்க்க வாசல் நூலும் ஒன்றாக இருக்கத்தான் போகிறது.

எனவேதான் நம்பிக்கையோடு சொல்கிறேன். அண்ணா எழுதிய சொர்க்க வாசல் ஓவியம் அளிக்கிடும் உறுதியோடு

சொல்கிறேன். முரசொலி தடுக்கப்பட்டால் அல்லது அதுவே நின்று போனால் - சென்னையில் ஓர் அலுவலகத்தில் இருந்து மட்டும் ஒலித்துக் கொண்டிருந்த அதன் கொள்கை முரசம், நாடு முழுதும் மூலை முடுக்குகளில் எல்லாம் ஒலிக்குமே தவிர ஒடுங்கி விடாது! இது அண்ணா படைத்த கதாபாத்திரம் மதிவாணனைப் போன்றது - மறந்து விடக்கூடாது, மாண்புகளாகி விட்டோர்!

தி.மு.கழகம் பெருந்தோல்விக்குப் பிறகு மூன்று இடங்களில் போட்டியிட்டு இரண்டு இடங்களில் வெற்றிபெற்றதும் - தலைநகரில் கழகம் நடத்திய முப்பெரும் விழாப் பேரணி மகத்தானதாக அமைந்ததும் - திராவிட இயக்க உணர்வுகளையும், வரலாற்றையும், பகுத்தறிவுக் கொள்கைகளையும், பெரியார், அண்ணா சிந்தனைகளையும் எதிர்கால இளைய தலைமுறை மறந்திடாமல் கடைப்பிடித்திட திராவிட மறுமலர்ச்சி மாமன்றம் உருவாக்கி, அஞ்சல் வழிக் கல்லூரி தொடங்கியதும் - எதிர் முகாமில் இருப்போருக்கு எரிச்சலை ஊட்டியிருக்கிறது!

பார்ப்பன எதிர்ப்பு என்பதற்கும் பார்ப்பனிய எதிர்ப்பு என்பதற்குமுள்ள வேறுபாட்டை உணர்த்திப் பேசியுள்ள அமைச்சர்கள், தி.மு.கழகம் ஏதோ தனிப்பட்ட பார்ப்பனர் மீது வெறுப்பு காட்டுவதாகக் கதையளந்துள்ளனர்.

திராவிட இயக்க வரலாறு - நூல் வெளியீட்டு விழாவில் நான் பேசிய போதும், மதுரையில் திராவிட இயக்க பவளவிழா மாநாடு நடக்கப்போவது குறித்து நான் எழுதியுள்ள கடிதத்திலும் - அறிஞர் அண்ணா அவர்கள் இந்தப் பிரச்சினையில் சுட்டிக் காட்டியுள்ள கருத்தைத்தான் கோடிட்டுக் காட்டியிருக்கிறேன்.

> “பார்ப்பனரல்லாதார் இயக்கம், சமநீதி காணும் நோக்குடன் அன்று துவக்கப்பட்டதே தவிர, அது பார்ப்பனர்களைத் தனிப்பட்ட முறையில் வெறுத்தது இல்லை. அப்படி வெறுக்க வேண்டிய அவசியமும் இல்லை. பார்ப்பனர்களுக்கு என்று இருக்கின்ற உரிய பங்கைத் தந்து, பார்ப்பனரல்லாதாருக்கு கிடைக்க வேண்டுமென்ற நீதியை அடிப்படையாகக் கொண்டதே இந்த இயக்கம்.”

அண்ணாவின் இந்தக் கருத்தின் அடிப்படையில் சமூகநீதி பிரச்சினையை அணுகும்போது தி.மு.கழகத்தில் தனிப்பட்ட பார்ப்பனர் எதிர்ப்பு என்பது எங்கே இருக்கிறது!

விரைவில் அரசுடைமையாகப் போகிற அண்ணாவின் நூல்களில் ஒன்றான ஆரிய மாயை என்ற நூலின் தலைப்புகூட ஆரியர் மாயை என்றில்லையே! ஆரிய மாயை என்றுதானே இருக்கிறது!

எனவே, பார்ப்பனிய எதிர்ப்புதான் அண்ணா தொடங்கிய தி.மு.க.வின் கொள்கை - அந்த அண்ணாவின் வழியைத்தான் அ.தி.மு.க. பின்பற்றுகிறது என்று அமைச்சர் அரங்கநாயகம் வாதம் செய்திருப்பதில் நமக்கு எவ்விதமான கருத்து முரண்பாடும் இல்லை. ஆனால், அ.தி.மு.க.வின் செயல்முறை வித்தியாசமானது என்பதை உண்மையான திராவிட இயக்கத்தார் உணர்வர்!

நாவலரும், அரங்கநாயகத்தின் வாதத்தையே வலியுறுத்தியிருக்கிறார். பார்ப்பனிய எதிர்ப்பே தவிர, பார்ப்பனர் எதிர்ப்பு அல்ல என்ற அவரது கருத்தைத்தான் நாமும் வலியுறுத்துகிறோம்.

திராவிடர் முன்னேற்றக் கழகம் என்று பெயர் வைக்காமல் திராவிட முன்னேற்றக் கழகமென அண்ணா பெயர் சூட்டியதற்கான காரணத்தை ஓர் அமைச்சர் விளம்பியுள்ளார்.

ஆம்! அந்த அண்ணாவைப் பின்பற்றித்தான், இப்போதுகூட திராவிட முன்னேற்றக் கழக அறக்கட்டளை சார்பில் திராவிட மறுமலர்ச்சி மாமன்றம் தொடங்கப்பட்டிருக்கிறதே தவிர, திராவிடர் மறுமலர்ச்சி மாமன்றம் எனத் தொடங்கப்படவில்லை!

இப்படியொரு மாமன்றம் தொடங்கியிருப்பதும் - அந்த மன்றம் (Academy) வாயிலாக அஞ்சல் வழிக்கல்லூரி துவக்கப்பட்டுள்ளதும் - ஆபத்தானது! அதனை உடனே தடை செய்ய வேண்டும் - கருணாநிதியைக் கைது செய்ய வேண்டும் - தி.மு.க.வை அழிக்க வேண்டும் - என்ற கருத்துப்பட அ.தி.மு.க.வினரும், காங்கிரசாரும் பேசுகிறார்களே. பாவம்! அவர்கள் அண்மையில் நடந்த பெரியார் பிறந்தநாள் அரசு விழாவை அறவே மறந்து விட்டார்களே!

அ.தி.மு.க. கட்சியின் சார்பாக அதன் தலைவி ஜெயலலிதா, பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனத்திற்கு என்று கூறி, அரசாங்க விழாவில் - ஐந்து லட்ச ரூபாயை வழங்கினாரே, அந்த நிறுவனம் எந்த அடிப்படையில் அஞ்சல் வழிக் கல்லூரி நடத்துகிறதோ, அதே அடிப்படையில்தான் திராவிட மறுமலர்ச்சி மாமன்றமும், அஞ்சல் வழிக் கல்லூரி நடத்திடத் தொடங்கியுள்ளது.

இதைக் கூடப் புரிந்து கொள்ளாமல் முன்னுக்குப் பின் முரணாகப் பேசுகிறவர்களைப் பற்றி என்ன நினைப்பது? அவ்வளவு வெறுப்பாம் நம்மீது! அவ்வளவு விசுவாசமாம் முதல்வரின் மீது! காட்டிக் கொள்கிறார்கள் அப்படி, ஏதாவது கிடைக்காதா என்று! அல்லது இருப்பது போகாமலிருக்க இப்படி ஒரு ஏற்பாடு!

மூதறிஞர் ராஜாஜி மறைந்தபோது பெரியார் அழுதார் - என்று ஒரு செய்தியை ஒரு அமைச்சர் சொல்லி விடுவதாலேயே, பெரியார் பார்ப்பனிய எதிர்ப்பாளரல்ல என்றோ - அல்லது பார்ப்பன எதிர்ப்பாளரல்ல என்றோ கூறிவிட முடியுமா?

இதோ! ஓர் எடுத்துக்காட்டு - தந்தை பெரியார் பொன் மொழிகள் என்ற ஒரு நூல்! விடுதலை வெளியீடு - காங்கிரஸ் ஆட்சியில் தடை செய்யப்பட்டிருந்தது - 1979 ஜூன் 15-ஆம் நாள் எம்.ஜி.ஆர். ஆட்சியில் பெரியார் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு அந்தத் தடை நீக்கப்பட்டது. அதற்காக அந்த நூலின் 5-ஆம் பதிப்பில் அ.தி.மு.க. அரசுக்கு நன்றி கூறி, அந்தப் பெரியார் பொன் மொழிகள் நூல் வெளியிடப்பட்டிருக்கிறது.

“நான் எனது 17-வது வயதிலேயே இந்தக் கடவுளர் களையும், பார்ப்பனர்களின் பித்தலாட்டங்களையும் எதிர்க்க ஆரம்பித்து விட்டேன். அதனால் எனக்கு இழிவு ஏற்பட்டு விட்டதா? இல்லையே! பிறகேன் நீங்கள் பகுத்தறிவு வழி நடக்க அஞ்சுகிறீர்கள்? அச்சம் விடுங்கள்! அறிவு பெற்றெழுங்கள்.”

இது அந்த நூலில் குறிப்பிடப்படும் தந்தை பெரியாரின் பொன்மொழிகளில் ஒன்று!

“பார்ப்பன ஜாதியில் பிறந்து விட்டதாலேயே, அவர்களை வெறுக்கும்படி நான் எப்போதும் பேசியதில்லை. நீங்கள் எங்களோடு ஒன்று படாவிட்டாலும் நாசமாய்ப் போங்கள். எங்களுக்குள்ளாவது ஒற்றுமை ஏற்படுவதை தடை செய்யாதீர்கள் என்றுதான் பார்ப்பனர்களைக் கேட்டுக் கொள்கிறேன். எதிர்த்துப் பேசவே ஆளின்றியே, இதுகாலம் வரையில் ஆரியம் இந்நாட்டில் தழைத்தோங்கி நம்மை மலத்திலும் கேவலமான மானிடப் பிண்டங்களாகப் பார்ப்பனர்களால் மதிக்கும்படியான நிலைக்குக் கொண்டு வந்துவிட்டது.”

இதுவும் அந்தப் பெரியார் பொன்மொழிகள் என்ற நூலில் இடம் பெற்றுள்ள தந்தை பெரியாரின் கருத்துகள்தான்.

ராஜாஜி அவர்கள் மறைந்தபோது, சுடுகாடு வரையில் வந்திருந்து கண்ணீர் விட்ட பெரியார், அங்கேயே தனது கருத்துகளையெல்லாம் சுட்டெரித்து விட்டாரா என்ன?

பெரியார் மறைவதற்கு ஐந்து நாட்களுக்கு முன்பு, 19-12-1973 சென்னைத் தியாகராய நகரில் அவர் நிகழ்த்தியப் பேருரை, தந்தை பெரியாரின் இறுதிப் பேருரை என்ற தலைப்பில் சிறிய நூலாக வெளிவந்துள்ளது. அதில் பெரியார் என்ன சொல்கிறார்?

"சுயமரியாதை இயக்கம் வராவிட்டால் நூற்றுக்கு பத்து பேர்கூட படித்திருக்க மாட்டான். சுயமரியாதை இயக்கத்தின் கொள்கை ஐந்து கொள்கை. 1. கடவுள் ஒழிய வேண்டும். 2. மதம் ஒழிய வேண்டும். 3. காங்கிரசு ஒழிய வேண்டும். 4. காந்தியம் ஒழிய வேண்டும். 5. பார்ப்பான் ஒழிய வேண்டும்.

இதில் காந்தி நமது கொள்கைப் பக்கம் திரும்பினார். காங்கிரசுக்கும் கடவுளுக்கும் ஒன்றும் சம்பந்தமில்லை என்று சொன்னார். உடனே காந்தியைக் கொன்று போட்டான் சொன்ன முப்பது நாளிலே! இவரும் ஈ.வெ. ராமசாமி ஆகிவிட்டார். இவரை விட்டு வைக்கக் கூடாது என்று கொன்று போட்டான்."

அடுத்தாற்போல் ஒழிய வேண்டியது காங்கிரசு - அது ஒழிந்து விட்டது. இனிமேல் தேறாது! எவன் ஆதரிப்பான் காங்கிரசை, மானங்கெட்டவனைத் தவிர!

அந்தக் கடைசிக் கூட்டத்தில் இவ்வாறு பேசிய பெரியார்தான் அப்போது இருந்த கழக ஆட்சியைப் பற்றிக் குறிப்பிடும்போது;

"எல்லா கட்சிக்காரனும் ஒன்று சேர்ந்து இன்றைக்கு இருக்கிற ஆட்சியை ஒழிக்க வேண்டுமென்கிறான். ஒழித்தால் ஒழித்துவிட்டுப் போகட்டும். அப்புறம் என்ன? இன்றைக்கு திருட்டுத்தனமாக மறைவாகப் பேசுகிற பேச்சை வெளிப்படையாகப் பேசுவான். பேசுகிறவனைப் பார்ப்பான் மாலை போட்டு வரவேற்பான்."

உடன்பிறப்பே,

பெரியார் எவ்வளவு தீர்க்க தரிசனமாகப் பேசியிருக்கிறார் பார்! அவர் சொன்னபடி தானே, அவர் மறைந்து பதினெட்டு ஆண்டுகளுக்குப் பிறகும் நடக்கிறது.

தந்தை பெரியாரின் இறுதிப் பேருரையை வெளியிட்டிருப்பது பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனம் என்பதை நினைவூட்டுகிறேன்.

அந்த நிறுவனத்திற்கான நிதியென்றுதான் அரசு விழாவில் அ.தி.மு.க. சார்பாக அந்தக் கட்சியின் தலைவி, ஐந்து லட்ச ரூபாயை வழங்கியுள்ளார் என்பதைக்கூட,

தி.மு.க.வை, திராவிட மறுமலர்ச்சி மாமன்றத்தை, முரசொலியைத் தடை செய்திட வேண்டுமென்றும், என்னைக் கைது செய்ய வேண்டுமென்றும் கருத்தலை எழுப்புகிறவர்கள் நினைத்துப் பார்க்காததற்குக் காரணம், நெருப்பு போன்ற வெறுப்பு அவர்தம் நெஞ்சில் கனன்று கொண்டிருப்பதாகக் கூட நான் கருதவில்லை. யார் இதயத்தையோ குளிரவைக்க வேண்டுமென்பதற்காக, நடந்தவைகளை மறந்ததுபோல் நன்றாக நடிக்கிறார்கள் என்றுதான், நான் கருதுகிறேன்.

“தடைக்கற்கள் உண்டென்றாலும்
தடந்தோள் உண்டெனச் சிரிப்போம்”

– (புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்)

அன்புடன்,

மு. க.

25-09-1991

1796. காவல்துறை மானியமும் காட்சியாகும் உண்மைகளும்!

உடன்பிறப்பே!

தமிழகச் சட்டமன்றத்தில் விவாதிக்கப்பட்ட காவல்துறை மானியம் பற்றி சில கருத்துகளைத் துண்டு துணுக்குகள் போல இந்தக் கடிதத்தில் எழுதுகிறேன்.

காவல்துறை மானியக் கோரிக்கைக்காக அவையில் வைக்கப்பட்ட புத்தகத்தின் மேலட்டையிலேயே (1990-91) எனக் குறிப்பிடப்பட்டு கடந்த காலச் சாதனைகள் - வருங்காலத் திட்டங்கள் பற்றிய குறிப்பு என்ற வாசகம் எழுதப்பட்டுள்ளது.

உனக்குத் தெரியும்! முதன்முதலாக 1971-ஆம் ஆண்டு கழக அரசில்தான் போலீசார் நலன், போலீஸ்துறை மேம்பாடு இவைகள் பற்றி ஆய்வு செய்திட திரு.ஆர்.கோபால்சாமி அவர்கள் தலைமையில் போலீஸ் கமிஷன் ஒன்று அமைக்கப்பட்டு - எண்பது ரூபாய் அளவில் இருந்த காவலர்கள் ஊதியத்தை மூன்று மடங்கு அளவுக்கு உயர்த்தவும், போலீசார் நலன்கள், துறையின் செம்மைப்பாடு இவைகளை வளர்க்கவும், அந்தக் கமிஷனின் பரிந்துரையின்படி செயல்கள் மேற்கொள்ளப்பட்டன.

அடுத்து இருபது ஆண்டுகளுக்குப் பிறகு, இரண்டாவது போலீஸ் கமிஷன் திரு. சபாநாயகம் அவர்கள் தலைமையில் - (1989-90) கழக ஆட்சியில் அமைக்கப்பட்டு, அந்தக் கமிஷன் போலீஸ் துறை குறித்தும் - போலீசார் நலன்கள் குறித்தும் ஆய்ந்து தெளிந்த அறிக்கை 1990-ஆம் ஆண்டில் கழக அரசிடம் தரப்பட்டது. அறிக்கையில் காணப்படும் பரிந்துரைகளைப் பரிசீலித்து 1991 பிப்ரவரி 2-ஆம் நாள் பட்ஜெட் கூட்டத் தொடரில் அறிவிப்பதற்கு முன்பே கழக அரசு கலைக்கப்பட்டு விட்டது.

ஆனால் இந்த (1990-91) காவல்துறை மானியக் கோரிக்கை புத்தகத்தில் சபாநாயகம் தலைமையிலான போலீஸ் கமிஷன்

அறிக்கை குறித்த விபரங்களோ, அந்தப் பரிந்துரை குறித்து அரசு எடுக்கும் முடிவுகளுக்கான சமிக்ஞைகளோ எந்த இடத்திலும் விபரமாகக் குறிப்பிடப்படவில்லை.

முதல் போலீஸ் கமிஷன் அமைத்து - அதன் பரிந்துரைகளின்படி காரியமாற்றியதும் 1971-ல் கழக அரசுதான்! இரண்டாவது போலீஸ் கமிஷன் அமைத்து 1990-ல் அதன் அறிக்கையைப் பெற்றதும் கழக அரசுதான்!

ஆளவந்தார்க்கு அதிருப்தி வரக்கூடாது என்பதற்காக, அந்த விபரங்கள் இருட்டடிப்பு செய்யப்பட்டு விட்டன.

அந்த மானியக் கோரிக்கை ஏட்டில் இன்னொன்றையும் கவனித்தேன்.

இந்த அரசு பதவி ஏற்றபிறகு காவல்துறை பணியாளர்களிடம் ஒப்படைக்கப் பட்டுள்ள பணிகளைத் திறமையாகவும் - தொழில் முறையில் சிறப்பாகவும் செய்து முடிக்க, அவர்களுக்குத் தெளிவான நெறிமுறைகள் கொடுக்கப்பட்டுள்ளன.

இப்படி ஒரு வாசகம், அந்தப் புத்தகத்தில் காணப்படுகிறது!

ஓகோ! அந்தத் தெளிவான நெறிமுறைகளின்படிதான், ஐ.ஏ.எஸ். அதிகாரி நாகராசன் மீது கொலை வழக்கு தொடரப்பட்டுள்ளது போலும்! தராசு அலுவலகத்தில் நுழைந்த குண்டர்கள் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள்! அந்தக் கலவரக் கும்பலுக்கு தலைமை வகித்தவர் ஒரு பாக்சர்! அவர், ஜூன் மாதம் நடந்த தேர்தலில் அ.தி.மு.க.வுக்கு பணியாற்றியவர்! அமைச்சரானவர்களுடன் அதிகத் தொடர்பு உடையவர்! அ.தி.மு.க. கொடிக் கம்பங்களின் அடிக்கற்களில் - அ.தி.மு.க. பொதுக்கூட்ட சுவரொட்டிகளில் - அ.தி.மு.க. தலைவியின் கட்அவுட்டின் காலடியில் அந்தப் பாக்சரின் பெயர்கள் பொறிக்கப்பட்டிருப்பதற்கான ஆதாரங்கள் நீதிமன்றத்திலேயே காட்டப்பட்டுள்ளன. ஆனால் ஏதோ புகாரின் அடிப்படையில், அந்தக் கொலை வழக்கில் ஐ.ஏ.எஸ். அதிகாரி நாகராசன் சேர்க்கப்பட்டு, சிறையிலும் அடைக்கப்பட்டு தற்போது ஜாமீனில் வெளிவந்துள்ளார்.

அடடே! காவல்துறைக்கு எவ்வளவு தெளிவான நெறிமுறைகள் வழங்கப்பட்டுள்ளன! பார்த்தாயா?

பொதுத் தேர்தல் நடந்த நாளன்று, துப்பாக்கியால் சுட்டு மூன்று நான்கு பேரைக் காயப்படுத்தி, கொல்ல முயற்சித்தார் என்று கே.கே.எஸ்.எஸ்.ஆர். கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். திருநாவுக்கரசு அணியில் இருவராக வெற்றி பெற்று வந்தவர்களில் ஒருவரான அவர், முதற்கட்டமாக ஆளுங்கட்சியில் தன்னை இணைத்துக் கொண்டார்! அதற்குப் பிறகு அவர்மீது தொடரப்பட்ட வழக்கு வாபசாகி விட்டதாக தெரிகிறது! வாபஸ் பெற்றது உண்மை என்றால், காவல்துறைக்கு எவ்வளவு தெளிவான நெறிமுறைகள் வகுத்துத் தரப்பட்டுள்ளன என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

1987-ல் எம்.ஜி.ஆர். அவர்களின் உடல் வைக்கப்பட்டிருந்த ராணுவ வண்டியில் ஜெயலலிதா செருப்புக் காலுடன் ஏறினார் என்றும், அதைத் தடுத்து அவரைக் கீழே இறக்கி விடுமாறு நாவலர் ஆணையிட்டார் என்றும் ஆர்.எம்.வீரப்பன் அப்போதே கூறியது அண்ணா பத்திரிகையில் வந்துள்ளது. நாவலர், வீரப்பன் போன்றோர் ஆணையை ஏற்று அ.தி.மு.க. எம்.எல்.ஏ. கே.பி. இராமலிங்கம் ஜெயலலிதாவை கீழே இறங்கச் சொன்னது தொடர்பாக இராமலிங்கத்தின் மீதும், தீபன் மீதும் கொடுக்கப்பட்ட புகார், ஜானகி ராமச்சந்திரன் ஆட்சியிலும் கவனிக்கப்படாமல் - ஆளுநர் அலெக்சாண்டரின் ஓராண்டு கால ஆட்சியிலும் கவனிக்கப்படாமல் - தி.மு.க. ஆட்சியில் அந்தப் புகார் காலாவதியாகி, இப்போது அந்த இருவர் மீதும் காலாவதியான புகார் வழக்கைப் போட்டு - இராமலிங்கத்தைக் கைது செய்து சிறையில் பிடித்து வைத்தார்களே! இதுகூட காவல்துறைக்கு வழங்கப்பட்ட தெளிவான நெறிமுறைகளில் ஒன்றாகத்தானே இருக்க முடியும்.

இலங்கைப் போராளிகள், தீவிரவாதிகளைப் பொறுத்தவரை உறுதியாகச் செயல்பட, காவல்துறைக்கு முழுமையான சுதந்திரம் அளிக்கப்பட்டிருப்பதால் - இலங்கைப் போராளிகள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளனர் என்றும், இந்த அரசு வந்த பிறகு எத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும் முதல்வர் பெயரால் வெளிவந்துள்ள அந்த மானியக் கோரிக்கை புத்தகத்தில் விபரங்கள் தரப்பட்டுள்ளன.

1990-91 மானியக் கோரிக்கை என அச்சியற்றி அவைக்கு தந்துவிட்டு, அதில் இலங்கைப் போராளிகள் விஷயத்தில் தி.மு.க. ஆட்சி 1990-ல் எடுத்த நடவடிக்கைகளைக் குறிப்பிடாமல் விட்டு விடுவதற்குப் பெயர்தான் இந்த ஆட்சி கடைப்பிடிக்கும் தெளிவான நெறிமுறையோ?

போராளிகள் ஏ.கே.47 துப்பாக்கிகளைப் பயன்படுத்துகிறார்கள் என்பதற்காக, மத்திய அரசிடமிருந்து பயிற்சியாளர்களை அழைத்து, இங்குள்ள காவலர் இருநூறு பேருக்கு ஏ.கே.47 துப்பாக்கி பயன்படுத்தும் பயிற்சி தந்ததும், அதற்கானத் துப்பாக்கிகளை கழக அரசு உச்சிப்புளி என்னுமிடத்தில் தோண்டியெடுத்த ஐந்து கோடி ரூபாய் ஆயுதங்களிலிருந்து எடுத்து பயன்படுத்திக் கொண்டதும் மறுக்கக்கூடிய செய்திகளா?

1990-ல் கழக ஆட்சியில், விடுதலைப் புலிகள் தேசியப் பாதுகாப்புச் சட்டப்படி முப்பதுக்கு மேற்பட்டவர்கள் கைது செய்யப்படவில்லையா? அவர்களையன்னியில், திருச்சியில் பத்து விடுதலைப் புலிகளை 1990-ல் கைது செய்யவில்லையா? தஞ்சையில் போஜன் என்ற விடுதலைப் புலியைக் கைது செய்தபோது அந்தப் புலி சயனைடு விஷம் அருந்தி இறந்து விடவில்லையா? விழுப்புரத்தில் சுரேஷ் என்ற புலியை ஒரு மாருதி ஜீப்பில் கைது செய்யவில்லையா? தஞ்சை மாவட்டம் குத்தாலத்தில் இரண்டு விடுதலைப் புலிகளைக் கைது செய்யவில்லையா? தஞ்சை மாவட்டம் சேதுபாவாசத்திரத்தில் ஒரு மாருதி வேனுடன் ஐந்து விடுதலைப் புலிகள் கைது செய்யப்பட்டு, அவர்களிடமிருந்த ஆயுதங்கள், வயர்லஸ் கருவிகள் பறிமுதல் செய்யப்படவில்லையா? திருச்செங்கோட்டில் பரமசிவம் என்பவர் விடுதலைப் புலிகளுடன் தொடர்புள்ளவர் என்று கைது செய்யப்படவில்லையா? டெலோ - பிளாட் - ஈ.பி.ஆர்.எல்.எப். - எல்.டி.டி.இ - முதலிய போராளிக் குழுக்களை ஒன்றோடொன்று மோதவிடாமல் இருக்க - தனித்தனி முகாம்களை அமைத்து கடுமையான கட்டுப்பாட்டுக்குள் வைக்கவில்லையா? அத்தகைய முகாம்களில் ஒன்றான வேலூர் முகாமில் எல்.டி.டி.இ. போராளிகள் வன்முறையில் ஈடுபட்டதால் அவர்களில் 162 புலிகளைக் கைது செய்து வேலூர் சிறையில் அடைக்கவில்லையா? அவர்களில் 31 பேர்களை தேசியப் பாதுகாப்புச் சட்டத்தில் சிறை வைக்கவில்லையா? கழக ஆட்சி கலைக்கப்படுவதற்கு

மூன்று நாட்களுக்கு முன்புகூட, புதுக்கோட்டை மாவட்டம் ஏம்பல் என்னுமிடத்தில் ஐந்து விடுதலைப் புலிகள் கைது செய்யப்படவில்லையா? அவர்களிடமிருந்த வாகனம், பெட்ரோல், டீசல் அனைத்தும் பறிமுதல் செய்யப்படவில்லையா? புதுக்கோட்டை கோபாலபட்டினத்தில் ஒரு விடுதலைப் புலியும், அவருக்கு ஆதரவான ஒரு உள்ளூர்க்காரரும் கைது செய்யப்படவில்லையா? ஈரோட்டில் இரண்டு விடுதலைப் புலிகள் கைது செய்யப்படவில்லையா?

இவைகள் அனைத்தையும் மறைத்துவிட்டு, (1990-91) ஆண்டுக்கான காவல்துறையின் கடந்த காலச் சாதனை - வருங்காலத் திட்டம் என்று மானியக் கோரிக்கையின் முகப்பில் பொறிப்பதுதான் தெளிவான நெறிமுறை என்று ஜெயலலிதாவின் அகராதியில் பொருள் கூறப்படுகிறதோ?

(இப்படிக் கழக அரசு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருந்த கால கட்டத்தில்தான் அ.தி.மு.க. தலைவி ஜெயலலிதா, விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகவும் - பிரபாகரனுக்கு ஒரு தீங்கு என்றால் தமிழ்நாடு தாங்காது என்றும் - முதல்வர் கருணாநிதி விடுதலைப் புலிகளுக்கு போதிய உதவிகள் செய்யவில்லை என்றும் பத்திரிகைகளுக்கு பேட்டி கொடுத்துக் கொண்டிருந்தார். தேதி வாரியாக நான் பலமுறை ஆதாரத்துடன் சுட்டிக் காட்டிய இந்தப் பேட்டிகள் பற்றி, முதல்வர் ஜெயலலிதாவோ, அவை முன்னவர் நாவலரோ, எதிர்க்கட்சித் தலைவரோ - இதுவரை பதில் அளிக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.)

ஆளுங்கட்சியின் மாய்மாலங்கள் போதாது என்று - துணைக்கு எதிர்க்கட்சியான காங்கிரஸ் வேறு!

சிவராசன் ஏற்கெனவே விமான நிலையத்தில் ஒரு கடத்தல் விவகாரத்தில் சுங்கத் துறையினரிடம் சிக்கியதாகவும், சுட்டுவிட்டு ஓடியதாகவும், சுங்க இலாகா அதிகாரிகள் மடக்கிப் பிடித்து போலீசில் ஒப்படைத்ததாகவும், சிவராசன் ஜாமீனில் வெளிவந்ததாகவும், அப்படி வெளி வருவதற்கு தி.மு.க. பெரும்புள்ளிகள் உதவி செய்ததாகவும், அந்த வழக்கை தி.மு.க. அரசு திரும்பப் பெற்று விட்டதாகவும் - அப்படி திரும்பப்பெற உள்துறை செயலாளராக இருந்தவர்

(நாகராசன்) தான் காரணமென்றும் - அதன்மீது ஜெயலலிதா அரசு விசாரணை நடத்த வேண்டுமென்றும் எதிர்க்கட்சித் தலைவர் முழங்கி, அந்த முழக்கம் கொட்டை எழுத்துகளில் எல்லா ஏடுகளிலும் வந்தது.

ஆனால் அவரது அந்தக் குற்றச்சாட்டு, வெறும் புஸ்வாணம் என்ற நிலைக்கு உள்ளாகி விட்டது.

சுங்க இலாகா - மத்திய அரசின் இலாகா - அது தொடர்ந்த வழக்கை, மாநில அரசு எப்படி திரும்ப பெறமுடியும்?

விஷயம் என்னவென்றால், போலீஸ் துறைக்கும் அமைச்சரான ஜெயலலிதாவே, எதிர்க்கட்சித் தலைவரின் குற்றச்சாட்டை சுங்க இலாகாவே மறுக்கிறது என்று அவையில் கூறிவிட்டார்! எதிர்க்கட்சித் தலைவர் கூறியவாறு எந்த நிகழ்ச்சியும் நடக்கவில்லை என்று சுங்க இலாகாவே கூறி விட்டதாக ஜெயலலிதா - முதலமைச்சர் என்ற முறையில் பதில் அளித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரின் இன்னொரு குற்றச்சாட்டு - பத்மநாபா கொலை வழக்கில் சந்தேகப்பட்டு கைது செய்யப்பட்ட விடுதலைப் புலிகளை ஜாமீனில் நீதிமன்றம் விடுவித்தபோது அவர்களுக்கு ஜாமீன் கொடுத்தவர்கள், தி.மு.க. அமைச்சர்கள் சிலரின் ஊழியர்கள் என்பதாகும்!

அதை ஆம் என்று ஒத்துக்கொண்ட முதலமைச்சர் ஜெயலலிதா; அப்படி ஜாமீன் கொடுத்த அந்த நபர்களை உடனடியாக வேலை நீக்கம் செய்து கழக அரசில் உத்தரவிடப்பட்டதையும், அவர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டதையும் வெளியிடாமல் மௌனம் சாதித்து விட்டார்.

காவல்துறை மானிய விவாதத்தில் முக்கிய அம்சம்:

"ஜெயலலிதா தன்னை ஒரு பாப்பாத்தி என்று, ஒரு முறைக்குப் பலமுறை கூறி, தன்னை யாரும் அசைக்க முடியாது எனச் சவால்விட்டு - அவரைப் பாப்பாத்தி என்று தி.மு.க.தான் அற்பத்தனமாகக் கூறுகிறது என்று - குரல் எழுப்பியுள்ளாரே, அதுதான்!"

ஜெயலலிதாவை பிராமணப் பெண் என்றோ, பாப்பாத்தி என்றோ தி.மு.க. கூறவேண்டியதில்லையே!

இப்போது ஜெயலலிதா கொடுத்துள்ள இதே ஒப்புதல் வாக்குமூலத்தை,

தமிழ்நாடு பிராமண சங்கத் தலைவர் பாலசுப்பிரமணியம் அவர்கள் ஒரு பகிரங்க அறிக்கை மூலம் இப்போது நடப்பது நம்மவா ஆட்சி! நீண்ட இடைவெளிக்குப் பிறகு வந்துள்ள பிராமணாள் ஆட்சி என்று பல நாட்களுக்கு முன்பே தெரிவித்திருக்கிறாரே!

இப்போது அம்மையாரும் அதனை ஸ்திரப்படுத்துகிற அளவுக்கு ஓர் அறிவிப்பு விடுத்திட, காவல்துறை மானிய விவாதம் பயன்பட்டுள்ளது என்பதிலே மகிழ்ச்சிதான்!

என் செய்வது! சகிப்புத்தன்மையின் சத்திய வடிவங்களாக ஏழு பேர் அமைச்சர்களாக இன்னமும் இருக்கிறார்களே!

எப்படியும், உறங்கும் உண்மைகள் எழுந்துதானே ஆகவேண்டும்! உலகம் உணர்ந்துதானே தீரவேண்டும்!

அன்புடன்,

மு. க.

26-09-1991

1797. முல்லை இருக்க முள்ளைச் சூடுவதோ?

உடன்பிறப்பே!

டெல்லியில் நாடாளுமன்றத்திலோ, அல்லது டெல்லி மாநிலங்களவையிலோ - தி.மு.கழக உறுப்பினர்கள் இருபத்தி ஐந்து பேர் இருந்த காலத்திலும், இருவர் அல்லது ஒருவர் இருந்த காலத்திலும், மாநிலங்களவையில் மட்டுமே தி.மு.க. உறுப்பினர்கள் இடம் பெற்றுள்ள இன்றைய காலகட்டத்திலும், அந்த மன்றங்களில் எழுகிற பிரச்சினைகளில் கழகத்தின் கருத்து என்ன என்பதை எடுத்துச் சொல்வது மட்டுமல்ல. அதற்காக வலுவான வாதங்களையும் செய்த, செய்து வருகிற வரலாறு உனக்கு தெரியும். நாட்டுக்கும் தெரியும். தமிழ் நாட்டு வாக்காளப் பெருமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், தமிழ்நாட்டின் பிரதிநிதிகளாக மாநிலங்களவையில் வீற்றிருப்பவர்கள் - தி.மு.கழகத்தினர் என்கிறபோது அவர்கள் இந்த மாநில உரிமைகளுக்காக எவ்வாறெல்லாம் குரல் கொடுத்தனர் என்ற உண்மையை எவரும் சரித்திரப் பள்ளத்தாக்குகளில் வீசி எறிந்து விட முடியாது! இந்த மாநிலம் மட்டுமல்லாது, நாட்டு வரலாற்றிலேயே பாராளுமன்றப் பணி எனும் மலை முகட்டில் வைத்துப் போற்றப்பட வேண்டிய அளவுக்கு உரிமை முழக்கம் செய்துள்ளனர் நமது கழக உறுப்பினர்கள். இந்த மாநிலத்தின் தேவைகளைப் புள்ளிவிவரங்களுடன் உணர்த்துவதிலும் - அதற்காகத் தொடர்ந்து வாதாடுவதிலும் - மாநில உரிமைகள், அதிகாரங்கள் மத்திய அரசினால் பறிக்கப்படக்கூடாது என அழுத்தம் திருத்தமாக உரைப்பதிலும் - வெளிநாட்டுப் பிரச்சினைகளில் மத்திய அரசின் அணுகுமுறைகள் குறித்து விமர்சிப்பதிலும் - குறிப்பாக ஈழத் தமிழ் மக்கள் வாழ்வில் அமைதி நிலைபெற இந்திய அரசு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை வலியுறுத்துவதிலும் - இந்தித் திணிப்பு எனும் ஆதிக்கத்தை முனைப்பாக எதிர்த்து நிற்பதிலும் - மண்டல் கமிஷன் பரிந்துரைகளை நிறைவேற்ற வேண்டுமென்று முழக்கமிடுவதிலும்

- மதச்சார்பற்ற நிலை என்பது ஆளுவோரின் உதட்டளவுப் பேச்சாக இராமல் செயல் அளவில் இருந்திட வேண்டுமென்று சுட்டிக் காட்டுவதிலும் - நமது கழக உறுப்பினர்கள் என்றைக்குமே சோடை போனதில்லை.

ஆனால், உண்மையான பக்தனைத்தான் ஆண்டவன் சோதிப்பான் என்று புராணீகர்கள் கூறுவார்களே - அதுபோல, தேர்ந்தெடுத்த மக்களுக்கும் - எந்த மாநிலத்தின் பிரதிநிதிகளாக அமர்ந்திருக்கிறார்களோ, அந்த மாநில மக்களுக்கும், ஏன் - இந்த இந்திய நாடு முழுமைக்கும் - தங்கள் குரலை எழுப்பியவர்களான, எழுப்பிக் கொண்டிருப்பவர்களான தி.மு.கழகத்தினரைத் தமிழக வாக்காளர்கள் சோதிக்கத் தவறுவதில்லை.

1989, 1991 ஆண்டுகளில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் கழக உறுப்பினர்களை தமிழக வாக்காளர்கள் நாடாளுமன்றத்திற்கு அனுப்பவில்லை. மாநிலங்களவையில் மட்டுமே நமது உறுப்பினர்கள் இருந்திடும் நிலை.

அந்த நிலையிலேகூட வி.பி.சிங் அவர்களின் தலைமையிலான தேசிய முன்னணி அரசுடன், தமிழ் நாட்டுக்குரிய திட்டங்களுக்காக வாதாடினர். இங்கிருந்த கழக அரசின் கரத்தை மேலும் வலுப்படுத்தும் முறையில், காவிரிப் பிரச்சினைக்கு நடுவர் மன்றம் அமைத்திட உறுதியோடு செயல்பட்டு வெற்றியும் கண்டோம்! மண்டல் கமிஷன் பரிந்துரையை ஆதரித்து, அதனை நடைமுறைப்படுத்த முன்வந்த திரு.வி.பி.சிங் அவர்களுக்கு உறுதுணையாகச் செயல்பட்டனர்.

அதே சமயம், மண்டல் பரிந்துரையைக் காரணமாக வைத்து, அதனை நிறைவேற்ற முன்வந்த வி.பி.சிங் ஆட்சியைக் கவிழ்க்க முனைந்த ஆதிக்கச் சக்திகளுக்கு ஆதரவாக - நாடாளுமன்றத்திலே செயல்பட்டவர்கள், இந்த மாநில வாக்காளப் பெருமக்களால் பெருமளவு தேர்ந்தெடுக்கப்பட்ட இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்களும், அ.தி.மு.க. உறுப்பினர்களும் என்பதை மறந்துவிட முடியுமா?

இப்போதும் ஜனதா தளம், தி.மு.க., தெலுங்கு தேசம், காங்கிரஸ் (எஸ்) போன்ற கட்சிகள் அங்கம் வகிக்கும் தேசிய முன்னணியினர் எழுப்பும் போர் முழக்கத்தின் காரணமாகத்தானே

மத்திய காங்கிரஸ் அரசு - ஓரளவாவது மண்டல் கமிஷன் பரிந்துரைக்கு இணக்கம் காட்டிட முன்வந்திருக்கிறது!

உடன்பிறப்பே, நாடாளுமன்றம் மற்றும் மாநிலங்களவையில் நமது பணியின் சிறப்பு பற்றி நாம் பெருமைப்பட்டுக் கொள்ளும் அதே நேரத்தில், மக்களின் வாக்குகளை அமோகமாகப் பெற்று நாடாளுமன்றத்தில் அமர்ந்துள்ள அ.தி.மு.க. உறுப்பினர்கள் ஆற்றிடும் பணி என்ன என்பது குறித்து தினமணி - சென்னை செப்.26-ஆம் நாள் பதிப்பில் ஒரு பெரிய செய்தியே வெளியிடப்பட்டுள்ளது.

செய்திக்குத் தலைப்பே மக்களவையில் மௌனம் காத்த அ.தி.மு.க. எம்.பி.க்கள் என்பதாகும்.

* பதினோரு பேர் அ.தி.மு.க. எம்.பி.க்கள் இருந்தும் காவிரிப் பிரச்சினை ஒன்று தவிர, வேறு எந்தப் பிரச்சினையிலும் விவாதத்தில் பங்குகொள்ள அவர்கள் ஆர்வம் காட்டவில்லை.

* சோவியத்தில் நடைபெற்ற மாற்றங்கள் குறித்து அவையில் பிரச்சினை வந்தது. அ.தி.மு.க. வாய் திறக்கவில்லை.

* முன்னாள் இராணுவத்தினர் ஓய்வூதியம் பற்றிய பிரச்சினை வந்தது. அ.தி.மு.க. சார்பில் எம்.பி.க்கள் யாரும் அதில் பேசவே இல்லை.

* அசாமிற்கு இராணுவம் அனுப்புவது பற்றிய விவாதத்தில் எல்லாக் கட்சிகளும் கலந்து கொண்டன. அ.தி.மு.க. கலந்து கொள்ளவில்லை.

* ப. சிதம்பரம் தமிழ்நாட்டில் தாக்கப்பட்டது பற்றிய கூச்சல் குழப்பத்தில் மட்டுமே அவர்கள் கலந்து கொண்டனர்.

* தேசிய, சர்வதேசிய பிரச்சினைகள் எதிலும் அ.தி.மு.க. எம்.பி.க்கள் ஆர்வம் காட்டுவதில்லை.

* பேசுவதற்கு பெயர் கொடுத்த ஓரிரு அ.தி.மு.க. எம்.பி.க்கள் பேச அழைக்கப்பட்டபோது அவையிலே இல்லை.

* நாடாளுமன்ற இந்தக் கூட்டத் தொடர் 49 நாட்கள் நடைபெற்றது. 346 மணி 20 நிமிடம் நடைபெற்றது. இதில் அ.தி.மு.க. எம்.பி.க்கள் பயன்படுத்திக் கொண்ட நேரம் 4 மணி 50 நிமிடங்கள் மட்டும்தான்.

* நட்சத்திர குறியிட்ட கேள்விகள் என்றால் அமைச்சர்கள் அவையில் பதில் அளித்தாக வேண்டும். அப்படி வந்த கேள்விகள் மொத்தம் 792. அதில் 11 நாடாளுமன்ற அ.தி.மு.க. உறுப்பினர்களும் சேர்ந்து அளித்த கேள்வி 36தான்.

* தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சி போன்ற முக்கிய பிரச்சினைகளை அவர்கள் எழுப்பவில்லை.

* அ.தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்களின் மௌனத்தால் மற்ற அரசியல் கட்சிகளின் பிரமுகர்களும், தமிழக வாக்காளர்களும் தவறாகப் புரிந்து கொள்ளும் வாய்ப்பு உருவாகியுள்ளது.

உடன்பிறப்பே, நான் குறிப்பிட்டுக் காட்டியுள்ள பதினோரு விஷயங்களும் நானாகச் சொல்வதில்லை.

தினமணியின் தில்லி நிருபர் செய்தியாக தினமணியில் வெளியிடப்பட்டுள்ளதாகும்.

அ.தி.மு.க.வின் மீது கோபம் கொண்டு அவர் எழுதியுள்ள செய்தியல்ல! அனுதாபத்துடன் எழுதப்பட்ட செய்தியாகும்!

அதனால்தான் அவர், அந்த செய்திக் கட்டுரையை முடிக்கும்போது -

இப்போது நிலவும் நிலைமை வருத்தமளிப்பதுதான்!

- என்று மிகுந்த சோகத்துடன் முடிக்கிறார்!

உடன்பிறப்பே, மக்கள் பிரச்சினைக்காக - மாநில பிரச்சினைக்காக - நாட்டுப் பிரச்சினைக்காக - எந்தவொரு பொறுப்பில் இருந்தாலும் அயராது பணியாற்றுகிற அண்ணா வழிவந்த தி.மு.கழகத்தைப் புறக்கணித்து விட்டு,

"முல்லை இருக்க; அதைவிடுத்து
முள்ளை எடுத்து முடியில்
சொருகிக் கொண்ட நிலைபோல"

தமிழ்நாட்டு வாக்காளப் பெருமக்கள், அவர்கள் அளித்த தீர்ப்புக்கு இவைகளை எல்லாம் அனுபவித்துதானே தீரவேண்டும்!

அன்புடன்,

மு. க.

27-09-1991

1798. கருகவிடச் சம்மதமோ? சொல்!

உடன்பிறப்பே!

தமிழ்நாட்டில் அ.தி.மு.க. தலைவி, ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்தபிறகு - பார்ப்பனியம் குளிர்விட்டுப் போய் குதித்துக் கும்மாளமடிக்கத் தொடங்கிவிட்டது. இல்லாவிட்டால் தமிழ்நாடு பிராமண சங்கத் தலைவர் தமது சங்கச் சார்பில் இப்போது நடப்பது பிராமணர் ஆட்சிதான். இதில் பிராமண இனத்துக்கு தேவையான சலுகைகளை மிகுந்த தந்திரமாகச் சாதித்துக்கொள்ள வேண்டுமென்று அறிக்கை வெளியிட்டிருப்பாரா?

நான் பாப்பாத்திதான்! என்னை யாரும் அசைக்க முடியாது! என்று ஜெயலலிதா சட்டப் பேரவையிலே அறைகூவல் விடுத்துள்ளதற்குப் பொருள் என்ன?

இது சூத்திர ஆட்சி - அதனால்தான் இதனை இழிவுபடுத்தவும் - அவதூறு கூறவும் துணிகிறார்கள் என்று நான் சொன்னபோது அந்த வாசகத்தில் அடக்க உணர்வு இருந்தது. பேரவையில் இருந்த உறுப்பினர்கள் பலரின் விழிகளில் நீர் துளிர்த்தது.

ஆனால் இப்போது அம்மையார் ஆற்றியது வீர உரையல்லவா? பாப்பாத்தி நான் பாராள வந்திருக்கிறேன்! என்னை யார் என்ன செய்ய முடியும்? என்ற விதத்தில் அமைந்த உரையல்லவா?

அதற்கேற்பத்தானே இப்போது காரியங்கள் நடைபெறுகின்றன!

கட்டாயத் தமிழ் - மண்டல் கமிஷன் - காவேரிப் பிரச்சினை - கச்சத் தீவு - போன்றவைகளில் தீவிரம் காட்டுவதாகப் பாவலா செய்து, அந்த சல்லாத் துணியைப் போட்டு மூடியவாறே - திராவிட இயக்க உணர்வுகளைக் கொஞ்சம் கொஞ்சமாக அரிக்கும் புற்றுநோய் பரவிக் கொண்டிருக்கிறது என்பதற்கு,

இப்போது அறிவிக்கப்பட்டுள்ள வேத ஆகம சாஸ்திரக் கல்லூரி என்ற சான்று ஒன்று போதாதா? நிதி உபரியாக உள்ள

ஆலயங்களில் இருந்து, சுமார் ஒரு கோடி ரூபாய் வைப்பு நிதி திரட்டப்படுமாம். இந்து சமயத்தின் ஆணிவேர்களாகக் கருதப்படும் வேத ஆகமம், சாஸ்திரங்கள் ஆகியவற்றில் முழுமையான தேர்ச்சி பெற்றவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் வேத, ஆகம சாஸ்திரங்களைப் பாதுகாத்து வளர்க்கவும், வேத ஆகம சாஸ்திரக் கல்லூரி நிறுவப்படும் என்பது முதல்வர் ஜெயலலிதாவின் அறிக்கை!

அது மட்டுமா? கையில் மிட்டாயைக் கொடுத்து குழந்தையின் கழுத்துச் சங்கிலியை அறுத்துக்கொண்டு ஓடுவது போல், பெரியார் பெயர் உச்சரிப்பு! அண்ணா பெயர் உச்சரிப்பு! அவர்களுக்கு விழா! அவற்றில் சில ஸ்டண்டுகள்! குழந்தை ரொம்ப சமர்த்தா காரியம் செய்யுது என்று குலத்தினர் குதூகலித்திட....

அதே நேரம் சந்தர்ப்பத்தை நழுவவிடாமல் ஆலயநிதி என்ற பெயரால் அதிபர்கள் முதல் அரசு ஊழியர்கள் வரையில் வசூல்!

இந்துமத ஆலயங்கள் சீரமைப்பு - பராமரிப்பு என்ற பெயரால் இந்திய அரசியல் சட்டத்தில் கூறப்பட்டுள்ளதும், ஆளவந்தார் பதவி உறுதிமொழி எடுத்துக் கொள்ளும்போது உச்சரித்து ஏற்றுக் கொள்வதுமான மதச்சார்பின்மை என்ற நிலையை அடியோடு தகர்ப்பதை எவ்வளவு பிரதான அலுவலாக ஜெயலலிதா மேற்கொண்டிருக்கிறார் என்பதை இந்த நிதி திரட்டும் செயல் வாயிலாகவே புரிந்துகொள்ள முடியும்.

மதச்சார்பற்ற நிலையில் தெளிவாக இருந்திட வேண்டும் என்பதற்காகவே அண்ணா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன், அரசுச் செயலகங்களில் ஆக்ரமித்துக் கொண்டிருந்த மதக்கடவுளர்களின் உருவப்படங்களை அகற்றுமாறு ஆணை பிறப்பித்தார். அந்த அண்ணாவின் பெயரைப் பயன்படுத்திக் கொண்டே, அவரது கோட்பாட்டுக்கு முரணாக, இந்துக் கோயில் ஜீரணோத்தாரணத்துக்கு வசூல் செய்கிறேன் என்றால் - பதுங்கிக் கிடக்கும் உண்மை என்ன?

இது மதச் சார்பற்ற அரசு என்று உறுதிமொழி எடுத்துக் கொண்டாலும்கூட, இந்து மதத்தை வளர்ப்பது என்ற பெயரால், பார்ப்பனியத்துக்குப் புதுவாழ்வு கொடுப்பது என்ற சூதுவலை பின்னப்படுகிறது!

நான் படைத்திட்ட நடமாடும் கோயில்களாம் ஏழைகளுக்கு குந்திப் பேச ஒரு குச்சில்லை - அந்த நடைபாதைப் பிண்டங்களுக்கு உறைவிடம் இல்லாது போனால் போகட்டும். எனக்கு இருக்கின்ற கோயில்கள் போதாது. எனவே அரசின் சார்பில், இன்னும் ஆயிரம் கோயில்கள் கட்டுக என்று ஆண்டவன் என்னமோ அம்மையாரின் கனவில் வந்து சொன்னது போல் அல்லவா அவசர அவசரமாக ஆட்சிக்கு வந்ததும் வராததுமாக (அண்ணா எழுதிய சிவாஜி கண்ட இந்து சாம்ராஜ்யம் நாடகத்தில் வரும் காகபட்டரே மராட்டிய மண்டலாதிபதியானால் எப்படியிருக்குமோ, அப்படி) ஆர்ய வம்சம் செழித்திட ஆவன செய்யத் தொடங்கி விட்டார்!

ஆலயங்களை அரசுச் சார்பில் நிதி வசூலித்து அதிகமாக்குவது எதற்கு?

இப்போது அறிவித்துள்ளார்களே! வேத ஆகம சாஸ்திரக் கல்லூரி - அந்தக் கல்லூரியில் பயிலுவோர்க்கு வேலை வாய்ப்பு, மற்றும் வசதிகளைத் தேடித் தருவதற்கு! அதற்கு ஆலயங்கள் பெருக வேண்டுமல்லவா? ஆஸ்தி அதிகமுடையோர் ஆஸ்திகராயிருப்பின் அவர்கள் அமைக்கட்டும் ஆலயங்கள்! ஆனால் ஓர் அரசாங்கமே - கிடப்பதெல்லாம் கிடக்கட்டும் கிழவியைத் தூக்கி மணையில் வை என்பது போல இந்தச் செயலில் இறங்குகிறது என்றால் திராவிட இயக்க உணர்வுகளை வெட்டிச் சாய்க்க, வேட்டையாடி மகிழ, வேருடன் மாய்க்க - பாடி வீடு கட்டப்படுகிறது என்றுதானே பொருள்!

வரிச்சுமை தாங்கவில்லை என்றால் தலை வழுக்கையை மறைக்கும் விக்குக்கும், டோபாவுக்கும் வரியில்லை எனக் கூறுவது!

பாமாயில் இல்லையென்றால், தீபாவளிக்கு வரும் என்பது!

விலைவாசி ஏறுகிறதே என்றால், விடுதலைப் புலிகளை அடக்கிவிட்டேன் பார் என்பது!

இப்படிப் பல நூறு பிரச்சினைகள்! மக்கள் பிரச்சினைகளைப் பற்றி அக்கறை கொள்ளாமல் ஆலயங்களுக்கும் - வேத ஆகம சாஸ்திரக் கல்லூரிக்கும் என்ன திடீரென அவசர அவசியம் வந்தது?

உடன்பிறப்பே, ஆலயங்களாயிற்று - வேத ஆகம சாஸ்திரக் கல்லூரி ஆயிற்று! அடுத்து மற்றொரு சமிக்ஞையும் திராவிட இயக்கத்துக்கு எதிராகக் காட்டப்பட்டாகி விட்டது.

உனக்கும், உன்போன்ற உடன்பிறப்புகளுக்கும் ஒன்றை இடையே நினைவூட்டி விட்டு, பிறகு கடிதத்தைத் தொடருகிறேன்.

(1989 பொதுத் தேர்தலுக்கு முன்பு ஒரு முக்கியமானவர் - பார்ப்பன சமுதாயப் பிரமுகர் - பத்திரிகைகளில் - தொடர்புடையவர் - பழுத்த வைதிக மனப்பான்மை படைத்த நடுத்தர வயதினர், அவர் என்னை வீட்டுக்கு வந்து சந்தித்தார். தேர்தலில் கழகத்தை ஆதரிப்பதற்கு அவரது சமுதாயத்தின் சார்பாக ஒரு கோரிக்கை வைத்தார். என்ன கோரிக்கை? அரசு நிர்வகிக்கும் அறநிலையத் துறையைக் கலைத்துவிட்டு, ஆலய சம்பந்தமான விஷயங்களுக்கு சுயேச்சையான முறையில் செயல்படும் வாரியம் ஒன்று அமைப்பதாக தி.மு.க. சார்பில் உறுதி அளிக்க வேண்டும் என்றார். அவரது கருத்தை நான் முழுமையாக மறுத்து விட்டேன்.)

இந்த நிகழ்ச்சியை இடையில் நான் குறிப்பிட்டிருப்பதற்கு இந்நேரம் உனக்குக் காரணம் புரிந்திருக்கும்.

அன்று அந்த நண்பர் என் முன் வைத்து, என்னால் மறுக்கப்பட்ட அந்தக் கோரிக்கைதான் இப்போது ஆலய நிர்வாக வாரியம் என்ற பெயரால் தலை நீட்டத் தொடங்கியிருக்கிறது.

இந்த வாரியம் தொடங்கப்பட்டால் மெல்ல மெல்ல அறநிலையத் துறை என்ற அமைப்பு, இளைக்க வைக்கப்பட்டு, களைக்க வைக்கப்பட்டு, கடைசியில் அது இருந்த இடம் புல் முளைத்துப் போய்விட்டது என்று கதையை முடிக்கத் தோதாக இருக்குமென்றுதான் இந்த யுக்தி மூளையில் முளை விட்டிருக்கிறது!

அற நிலையங்களான கோயில்கள், மடாலயங்கள் இவற்றைச் செம்மைப்படுத்தி, நிர்வாக ஒழுங்கு செய்து, பாதுகாத்திட, இந்து அறநிலையப் பாதுகாப்புச் சட்டம் எனும் ஒரு புரட்சிகரமான சட்டத்தைக் கொண்டு வந்தது நீதிக் கட்சி எனும் திராவிட இயக்க ஆட்சி!

எப்போது தெரியுமா? 1924-ஆம் ஆண்டு! ஆம்! அன்று சென்னை மாகாண முதல்வராக இருந்த நீதிக்கட்சிக் காவலர்

பனகல் அரசர்தான் அந்தப் புரட்சிகரமானச் சட்டத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றியவர்.

(1936-ல் நான் ஆரூரில் ஐந்தாம் வகுப்பில் சேர்ந்தபோது பனகல் அரசரைப் பற்றிய தனிப் பாடம், (நான்டிடெயில்) சுமார் முப்பது பக்கமுள்ள சிறிய நூல் - அதனை மனப்பாடம் செய்து வகுப்பில் ஒப்புவிப்பேன் - அந்த நூலிலே 1924-ல் இந்து அறநிலையத்துறைப் பாதுகாப்புச் சட்டத்தைப் பனகல் அரசர் கொண்டுவந்து நிறைவேற்றிய குறிப்பு இருக்கிறது.)

அந்தச் சட்டத்தை மிக மூர்க்கமாக சட்டசபையில் எதிர்த்துப் பார்ப்பன சமூக உறுப்பினர்கள் பேசினார்கள்! திரு. சத்தியமூர்த்தி அவர்கள் அந்த சட்டத்தை ஆங்கில மொழியில் எதிர்த்துப் பேசினால் போதாது என்று சமஸ்கிருதத்திலும் பேசினாராம் - பாடினாராம் - கத்தினாராம்!

புதிய கோயில்களைக் கட்ட நிதிதிரட்ட அல்ல, புராதனச் சின்னங்களாக விளங்கும் கோயில்களின் நிர்வாகத்தை ஒழுங்குபடுத்தவும் - கோயில் சொத்துக்கள் கோயில் பெருச்சாளி களால் கொள்ளை கொண்டு போகப்படாமல் இருக்கவும் இந்து அறநிலையத்துறைப் பாதுகாப்புச் சட்டம் கொண்டு வரப்பட்டது.

தனி ஸ்தாபனங்கள் கோயில்களை நிர்வகிக்கும் பொறுப்பில், மலையளவு ஊழல்கள் குவிந்த வண்ணமிருந்த காரணத்தினால்தான், அன்றைக்கு நீதிக்கட்சியினர் அந்தச் சட்டத்தை இயற்றினர்.

பார்ப்பன சமுதாயத்துப் பிரமுகர்களின் தூண்டுதலின் பேரில் அறங்காவலர்களும், மடாதிபதிகளும் அந்தச் சட்டம் தவறு என எதிர்ப்புக் குரல் கொடுத்தனர்.

அந்தக் கால கட்டத்தில் பெரியார் அவர்கள் காங்கிரஸ் இயக்கத் தலைவர்களில் ஒருவராக விளங்குகிறார்.

காங்கிரசில் இருந்து கொண்டே பெரியார் சொன்னார்! இந்தச் சட்டத்தினால் அற நிலையங்களுக்கு ஆபத்தில்லை. அற நிலையங்களில் உள்ள கொள்ளையடிப்பவர்களுக்குத்தான் ஆபத்து என்று!

உடன்பிறப்பே, கோயில் கொள்ளையடிப்பவர்களின் கூடாரமாக இருக்கக்கூடாது என்ற பராசக்தி பட வசனம் நினைவுக்கு வருகிறதா?

1924 - ஆம்! அறநிலையத்துறைப் பாதுகாப்புச் சட்டம் வந்த ஆண்டு! நீதிக்கட்சியாம் திராவிட இயக்கம் வலியுறுத்திய வகுப்புவாரி பிரதிநிதித்துவ இடஒதுக்கீடு முறையை காங்கிரஸ் கட்சி கடுமையாக எதிர்த்துக் கொண்டிருந்த காலம்!

அந்தக் காலத்தில்தான் பெரியார் அவர்கள் வகுப்புவாரி இடஒதுக்கீட்டு கொள்கையை காங்கிரசும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று காங்கிரசில் இருந்து கொண்டே போராடிக் கொண்டிருந்தார்.

அவர் கருத்தை ஏற்காததால்தான் 1925-ல் காஞ்சிபுரம் மாநாட்டில் காங்கிரசிலிருந்து வெளியேறினார்.

ஒரு ஒற்றுமை பார்த்தாயா? இடஒதுக்கீட்டுக்கான போர்க்குரல் கேட்ட நேரமும் - இந்து அறநிலையத்துறைச் சட்டம் நிறைவேறிய நேரமும் ஒரே கால கட்டம்! 1924-ஆம் ஆண்டு!

(1924 - நான் பிறந்த ஆண்டு என நினைக்கும் போது நெஞ்சம் எப்படி இனிக்கிறது)

இப்போது உடன்பிறப்பே! அதே ஒற்றுமை - ஆனால் தலைகீழ் மாற்றமாக!

மண்டல் கமிஷன் பரிந்துரைப்படி இடஒதுக்கீட்டுக்கான போர்க்குரல் ஒருபுறம்! அறுபத்தியேழு ஆண்டுகளுக்கு முன்பு திராவிட இயக்க ஆட்சி நிறைவேற்றிய இந்து அறநிலையத்துறைப் பாதுகாப்புச் சட்டத்திற்கு ஆபத்து ஆரம்பமாகிறது என்பதற்கு அடையாளமாக, புதிதாக ஆலய நிர்வாக வாரியம் முளைக்கப் போகிறது என்ற அறிவிப்பு மற்றொருபுறம்!

திராவிட இயக்கத்தின் பரிணாம வளர்ச்சி எப்படிப் பின்னோக்கிப் போய்க் கொண்டிருக்கிறது பார்த்தாயா? ஆனால், நாம் அதனைப் பின்னோக்கிச் சென்றிட விடமாட்டோம்!

பதுங்குவது பாய்ச்சலுக்குத்தான் என்பது போல, திராவிட இயக்க உணர்வுகளை யார் எத்துணைச் சாகசம் செய்து, பழத்தில் பாஷாணத்தை வைத்துத் தரும் செயல் மூலம் அழிக்க எண்ணினாலும், பின்னோக்கிச் சென்றிடும் உணர்வுகளை முன்னோக்கி முடுக்கிட ஆர்த்தெழுவோம்!

இல்லையேல், ஆயிரங்காலத்துப் பயிராம் திராவிட இயக்கத்தைக் கருகவிட்ட குற்றத்துக்கு இந்தத் தலைமுறை ஆளாகி விடும்! கருகவிடச் சம்மதமோ? கழகக் கண்மணியே! சொல்!

அன்புடன்,

மு. க.

28-09-1991

1799. அண்ணாவின் கேள்விக்கு என்ன பதில்?

உடன்பிறப்பே!

“பேராசைப் பெருந்தகையே போற்றி!
பேச நா இரண்டுடையாய் போற்றி!
தந்திர மூர்த்தி போற்றி!
தாசர் தம் தலைவா போற்றி!
வஞ்சக அரசே போற்றி!
வன் கண நாதா போற்றி!
கொடுமைக் குணாளா போற்றி!
கோழையே போற்றி! போற்றி!
சிண்டு முடிந்திடுவாய் போற்றி!
சிரித்திடு நரியே போற்றி!
ஒட்டு வித்தை கற்றோய் போற்றி!
உயர் அநீதி உணர்வோய் போற்றி!
எம்இனம் கெடுத்தாய் போற்றி!
ஈடில்லாக் கேடே போற்றி!”

அறிஞர் அண்ணா எழுதிய ஆரிய மாயை நூல் இப்படித்தான் போற்றிக் கவிதையுடன் ஆரம்பமாகிறது! இந்த நூல் திராவிடப் பண்ணையால் வெளியிடப்பட்டபோது அன்றைக்கிருந்த காங்கிரஸ் அரசு தடை செய்தது! தடுத்தது மட்டுமல்ல! பெரியார் பொன்மொழிகள் என்ற நூலை வெளியிட்டமைக்காக தந்தை பெரியாரையும் - ஆரிய மாயை நூலுக்காக அறிஞர் அண்ணாவையும் திருச்சி சிறையில் பக்கத்துப் பக்கக் கொட்டடிகளில் அடைத்தும் வைத்தது. ஆரிய மாயை நூலுக்கு விதிக்கப்பட்ட தடையாணையை எதிர்த்து, சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டு, உயர்நீதி மன்ற நீதிபதிகள் - ஆரிய மாயை நூல் வகுப்புத்துவேஷம் மூட்டக்கூடியதல்ல! என்ற தீர்ப்பு வழங்கிட - அதன் பின்னர் அந்த நூல் தமிழகத்தில் பவனி வரத் தொடங்கியது.

ஏதோ, இன்றைக்கு இந்தக் கவிதை வரிகளை அண்ணாவின் ஆரிய மாயை நூலில் இருந்து எடுத்து எழுதியிருக்கிறேன் என்று எண்ணிடாதே!

1976க்கு முன்பு கழக ஆட்சியில் முதலமைச்சராக இருந்தபோதே, சட்டப் பேரவையில் ஆரிய மாயை புத்தகத்தைக் கையில் வைத்துக் கொண்டு - இந்தப் போற்றிப் பாடலைப் படித்துக் காட்டியவன் நான்!

இன்று, மீண்டும் அந்தப் பாடலை அண்ணாவின் நூலில் இருந்து எடுத்து எழுதுவதற்குக் காரணமில்லாமல் போகவில்லை.

யாரையும் புண்படுத்தாமல், நமதியக்கக் கொள்கைகளை - பகுத்தறிவுச் சிந்தனைகளை - முற்போக்கு எண்ணங்களை - மூட நம்பிக்கையெனும் முடை நாற்றத்திலிருந்து விடுபடும் மார்க்கங்களை - மதபேத சாதிபேதக் கொடுமைகளை அழித்திடும் வழிகளை, எல்லோரின் இதயங்களையும் பண்படுத்தும் முறையில் பதிய வைத்திடும் பணியினை ஆற்றிட வேண்டும் என்பதில் தி.மு.கழகத்திற்கு உறுதியான கருத்து உண்டு. எனினும், இந்தத் திராவிட இயக்கத்தை வளர்ப்பதற்கு எழுபத்தி ஐந்து ஆண்டு காலத்திற்கு மேலாக இன்னல்கள் ஏற்ற தியாக சீலர்கள் - அதன்பிறகு அவர் வழியொட்டி இயக்கத்தைக் கட்டிக்காத்திட எண்ணற்ற கொடுமைகளை, சோதனைகளை, அடக்குமுறைகளை, ஏற்றுக் கொண்ட தலைவர்கள், தளபதிகள், செயல்வீரர்கள் இன்னமும் உயிருடன் இருக்கும் பொழுதே, அவர்களின் கண் எதிரிலேயே திராவிட இயக்க உணர்வுகளைச் சுட்டுச் சாம்பலாக்கும் முயற்சிக்குத் தீப்பந்தங்கள் தயாராகிறதென்றால், அனல் தகித்தாலும் பரவாயில்லையென்று - தாவிக் குதித்து அந்தத் தழலை அணைத்து வீழ்த்திட வீறுகொண்டெழத்தான் வேண்டியிருக்கிறது.

உடம்பெல்லாம் மூளையென்று உலகம் புகழ்ந்துரைத்த மூதறிஞர் ராஜாஜி அவர்களே, குலக் கல்வித் திட்டம் கொண்டு வந்து, அதனைத் திரும்பப் பெற மாட்டேன் என்று கொக்கரித்த போது தமிழ்நாடே கொதித்தெழுந்தது!

பெரியார் போர்க்குரல் கொடுத்தார் - அண்ணா தலைமையில் கழகம் அணிவகுத்துக் கிளம்பியது - ஏன், கட்சிச்சார்பற்ற முறையில் காங்கிரசிலேயுள்ள பார்ப்பனரல்லாதார் உட்பட, அந்தத் திட்டத்தை

எதிர்த்துத் திசைகள் அதிர முரசு கொட்டினர்! தீய திட்டம் ஓடி ஒளிந்தது! கொஞ்சிக் குலவியவாறு பார்ப்பனரல்லாதாரின் குரல் வளையை முறித்துப் போட கொண்டு வரப்பட்ட அந்த சூழ்ச்சியின் மறுபதிப்பாகத்தான், ஆனால் கவர்ச்சிப் பதிப்பாக, இதோ இந்த ஆட்சியில், ஆலயநிதி - அறநிலையத்துக்கு வாரியம் - வேதஆகமக் கல்லூரி - எனும் ஆபத்துகள் படமெடுத்தாடத் தொடங்கியிருக்கின்றன.

உடன்பிறப்பே, அண்ணாவின் ஆரிய மாயை நூலில் காங்கிரஸ் தலைவராக இருந்த திரு.டி.ஏ. இராமலிங்கனார் அவர்களின் உரையிலிருந்து, ஒரு மேற்கோள்:-

> “தென்னிந்தியாவில் சமஸ்கிருதத்தைப் புகுத்தச் செய்ய முயற்சிகள் எல்லாம் பிரிட்டிஷ் ஆட்சி இங்கே நிலைக்கும் வரையில் வெற்றி பெறவில்லை. பிரிட்டிஷ் ஆட்சி இந்நாட்டில் வேரூன்ற ஆரம்பித்த பிறகுதான் சமஸ்கிருத மொழியாளர்கள் (ஆரியர்கள்) நிர்வாகிகளாகவும், வழக்கறிஞர்களாகவும், நீதிபதிகளாகவும் வர முடிந்தது. அவர்களால் தங்கள் ஸ்மிருதியில் கண்டதே சட்டமாயிற்று.”

இந்த உண்மையை விளக்கிடவும் - மெல்ல மெல்ல ஆனால் உறுதியாக, இந்த அநீதியைத் திராவிடச் சமுதாயத்திலிருந்து விரட்டிடவும் - ஒரு பெரும் புரட்சியாக வெடித்துக் கிளம்பியதே திராவிட இயக்கம் என்பதை எண்ணிப் பார்க்கும் அதே நேரத்தில், அந்த இயக்கத்தின் பெயரை மாத்திரம் பயன்படுத்திக் கொண்டு, அதன் உயிரையே உறிஞ்சிவிடுகிற காரியமல்லவா? இப்போது நடைபெறுகிறது!

வேத ஆகம சாஸ்திரக் கல்லூரி என்பது திராவிட இயக்கத்தால் விரட்டப்பட்ட ஒரு கலாச்சாரத்திற்கு புத்துயிர் அளிக்கப் போடப்படும் திட்டம்! பசுமலைத் தமிழன் நாவலர் சோமசுந்தர பாரதியார் சொல்வாரே! ஜஞ்சுகிரதம் என்ற சனியன் என்று! அந்தச் சனியனை அரியாசன மேற்றி - தமிழகத்தை ஆரியாவர்த்தம் என ஆக்கும் அபாயக் கட்டம்!

இதோ பார் உடன்பிறப்பே! நேற்றுக் கடிதத்தில்தான் எழுதியிருந்தேன் - நமது கலாச்சாரத்தை வீழ்த்திடவும், மாய்த்திடவும், சூத்திரன் எனப் பெயர் சூட்டப்பட்ட தமிழன்

தலையெடுக்காமல் போகவும், ஆலய நிதி, அறநிலைய வாரியம், வேத ஆகமக் கல்லூரி எனும் சமிக்ஞைகள் காட்டப்பட்டு விட்டன என்று!

அதை ஆம் என்று அபார மகிழ்ச்சியுடன் ஒப்புக் கொள்வது போல தினமணி தலையங்கம் தீட்டி விட்டதே!

தமிழ்நாட்டில் வேத ஆகம சாஸ்திரக் கல்லூரி நிறுவப்படுமென முதல்வர் அறிவித்திருக்கிறார். ..... சமஸ்கிருத மொழியில் உள்ள வேத ஆகம சாஸ்திரங்களை தமிழில் மொழி பெயர்க்கத் தேவையில்லை. சமஸ்கிருத மொழியிலேயே சொல்லிக் கொடுப்பதுதான் பொருத்தமானதாகும்.

தினமணியாரின் துடிப்பைப் பார்த்தாயா? விஷத்தை பாலில் கலந்து கொடுக்க வேண்டாம். நேரடியாகவே கொடுத்து விட வேண்டும் எனும் உபதேசம் புரிய ஆரம்பித்து விட்ட அவலத்தைப் பார்த்தாயா?

வேத ஆகம சாஸ்திரக் கல்லூரி

சமஸ்கிருத மொழியிலே பாடம்

"தமிழனே இது கேளாய்!
உன்பால் சாற்ற நினைத்தேன் பலநாளாய்!"

எனத் தொடங்கி முழங்கும் புரட்சிக் கவிஞரின் பாடலில்,

"நமையெல்லாம் வடமொழி, தூக்கிடும் தாம்பு
நம் உரிமைதனைக் கடித்தது அப்பாம்பு"

எனும் வரிகளை நானும், நீயும் மறந்துவிட்டோம் என்று மனப்பால் குடிப்போரின் மமதையன்றோ -

வேத ஆகம சாஸ்திரக் கல்லூரி

சமஸ்கிருத ஆதிக்கம்

என்ற நிலைகளாக வெளிப்படுகின்றன?

"தந்திர மூர்த்தி போற்றி!
தாசர்தம் தலைவா போற்றி!"

என அண்ணா அவர்கள் அடுக்குச் சொல்லுக்காகவா எழுதினார்!

இல்லை! உண்மையைத்தான் எழுதினார்!

ஆம்! உணர்ந்து எழுதினார்!

தமிழ் மக்களுக்குத் தொண்டு செய்யும் சாதி எனத் தந்திர வாசகம்!

தயவுக்குக் காத்துக் கிடக்கும் தாசர்களுக்குத் தலைமை வகிக்கிறோம் - என்பதால் உருவாகியிருக்கிற துணிவு!

இவற்றால் இந்த இன உணர்வும், உரிமையும் பாழ்படும் என்பதற்காகவும், பாழ்பட விடக்கூடாது என்பதற்காகவும் அண்ணா தந்த எச்சரிக்கையே,

இந்தப் போற்றிப் பாடல்!

எனவே உடன்பிறப்பே, திராவிட இயக்கம் கட்டிக் காத்த உணர்வுகளுக்கு விடப்பட்டுள்ள அறைகூவலைச் சந்திக்க

“எதுவரினும் ஏற்போம்!
எந்தத் தியாகத்துக்கும்
எந்தச் சோதனைக்கும்
எந்த வேதனைக்கும்
தலை தாழாது நடைபோடுவோம்!
கலாச்சாரப் படைபெடுப்பை முறியடிக்க,
நாமும் களம் அமைப்போம்!”

எமை நத்துவாயென எதிரிகள் கோடி இட்டழைத்தாலும் தொடேன் என்கின்ற உணர்ச்சியும், உறுதியும், சுயநலத்தைப் பற்றித் துளி நினைப்பும் இல்லாத மனப்பான்மையும், சபலத்திற்கு இடம் கொடுக்காத தன்மையும், வீரமும் இருப்பின் கோடி ஈட்டிகள் தமிழரின் மார்புக்கு நேரே நீட்டப்பட்டாலும் எதிரி வெல்ல முடியாதே! எங்கே காண்கிறோம் அந்த உறுதியை?

என்று அண்ணா உருகுகிறார்! ஆரிய மாயை நூலிலே!

உண்மைதானே! அந்த அண்ணாவின் தம்பிகள் சில பேரை அருகே வைத்துக் கொண்டுதானே, ஆரியம், தனது காரியத்தைச் சாதித்துக்கொள்ள முனைகிறது!

உடன்பிறப்பே, அண்ணாவின் உருக்கமான கேள்விக்கு என்ன பதில்?

அன்புடன்,

மு. க.

29-09-1991

1800. தினமணி சித்திரம் தொரிவிக்கும் உண்மை!

உடன்பிறப்பே!

ஏடுகளில் என்னைப் பற்றியும், கழகத்தைப் பற்றியும் கலையுணர்வுடனும் - அரசியல் நெறிமுறையுடனும் எவ்வளவு கடுமையான விமர்சனங்கள் வரினும், கேலிச் சித்திரங்கள் வரையப்படினும் அவற்றை ரசித்து மகிழ்பவன் நான்! அத்தகைய கேலிச் சித்திரங்கள், பதில் உரைகளில் உள்ள கலைத் தத்துவத்தை, நண்பர்களிடம் கூடப் பாராட்டிப் பேசும் குணமும் பழக்கமும் எனக்கு உண்டு.

அந்த அடிப்படையில்தான் இந்தக் கடிதம் எழுதுகிறேன். முரசொலியில் இரண்டு கடிதங்கள் - திராவிட மறுமலர்ச்சி மாமன்றம் தொடக்கம்! - அதற்குள்ளாகவே தினமணியாருக்கு, இதழின் முதல் பக்கத்திலேயே ஒரு கேலிச் சித்திரம் வெளியிட வேண்டுமென்ற எண்ணம் பீறிட்டுக் கிளம்பி விட்டது.

1) நான் பெரியார் அவர்களைப் போல தாடி கட்டிக் கொள்வதற்காக நிலைக்கண்ணாடி முன் நிற்பதாக அமைந்துள்ளது அந்த சித்திரம்!

2) பெரியார் பயன்படுத்தும் வலுவான தடிக் கம்பு சுவரில் சாய்த்து வைக்கப்பட்டுள்ளது அந்தப் படத்தில்!

3) போராட்டத்தைத் தேடிப் போகமாட்டோம், வந்த போராட்டத்தை விட மாட்டோம் என்று அண்ணா சொல்லி வைத்த அந்த அரிய வாசகம் எழுதப்பட்ட தட்டியொன்று, தரையில் கிடப்பது போலவும் அந்தப் படம் விளக்குகிறது.

இந்த மூன்றைப் பற்றியும் முதலில் ஓரிரு வரிகளில் சொல்லி விடுகிறேன்.

(1) தாடி கட்டிக்கொண்டு நான் பெரியார் வேடம் போட்டுத் திரிய வேண்டிய அவசியமில்லை. தாடியில்லாமலே என் நாடி நரம்பெல்லாம் எனது பதினான்காவது வயது முதல் பெரியார் ஊட்டிய உணர்வு பொங்கிப் பிரவாகித்துக் கொண்டுதான் இருக்கிறது. என் குருதியோட்டத்தில் கலந்துள்ள அந்த திராவிட இயக்கச் சுயமரியாதை உணர்வுதான், எனக்குக் குற்றாலத்து அருவி! கோடைக்கானலின் குளிர்ச்சி! அருவியும், மலையுச்சியும் அனல் உமிழும் என்றால், அதனை என் போன்ற சுயமரியாதை ரத்தத்தின் சூடு தணியாமல் வாழ்கின்றவர்களிடம்தான் காண முடியும் என்பதிலே எனக்கு ஒரு கர்வமே உண்டு! எனவே உயிரோடு, மூச்சோடு, இதயத்துடிப்போடு இளமைப் பருவம் முதல் கலந்துவிட்ட பெரியாரின் அடிப்படைக் கொள்கை வழியுடையேன் நான் என்பதைக் காட்டிக் கொள்ளவும், அந்தக் கொள்கைகளுக்கு ஆபத்து வருங்கால் - அதனைத் தடுத்து நிறுத்திட ஆயிரம் சிங்கங்களின் பலத்துடன் பாய்ந்திடவும், என்றைக்கும் நான் தயங்கியதில்லை.

அதனால்தான் 1971-ல் அண்டே எனும் சட்டமன்ற உறுப்பினர் தி.மு.க. அரசு மூன்றாம் தர அரசு என இழித்துரைத்து அவையில் பேசியபோது - எழுந்த அமளியை அடக்கி அமைதிப்படுத்திவிட்டுச் சொன்னேன். அண்டே அவர்கள் சொன்னது தவறு! அதில் ஒரு திருத்தம்! இது மூன்றாம் தர அரசு கூட இல்லை! நாலாந்தர அரசு! பிராமண, க்ஷத்திரிய, வைசிய, சூத்திர எனப்படும் வரிசையில் இது நாலாந்தர சூத்திர அரசு என்று!

இப்படி நான் அவையில் பதில் அளித்ததைக் கேட்டு, பெரியார் பூரித்தார் - புளகாங்கிதமுற்றார் - என்பதை அறிந்து - பிறவியெடுத்த பயனை அடைந்ததாக மகிழ்ச்சியில் திளைத்துப்போனவன்தான் நான்!

எனவே, கருஞ்சட்டையும், தாடியும் அணிந்து கொண்டால்தான் பெரியார் எனத் தினமணி போன்ற ஏடுகளும் - அவற்றைச் சார்ந்தோரும் கருதக்கூடாது? மிட்டாய்களைக் காட்டிக் கொண்டு குழந்தைகளின் கழுத்தை முறிக்கும் செயல்போல, திராவிட இயக்க உணர்வுகளுக்குக் கேடு சூழும் சூது நிறைந்த சமிக்ஞைகள் காட்டப்படும்போது அவற்றை சகித்துக் கொண்டு சும்மா இருக்க முடியாது! சந்தித்து வென்றிடாவிடில், இனி என்றுமே இந்த இனம் தலை தூக்க முடியாது!

நாம் யார்? நமது இனத்தின் வரலாறு என்ன? நமது கலை, இலக்கியம், பண்பாடு இவற்றின் அருமை என்ன? இவற்றையெல்லாம் கட்டிக் காத்திட உருவான பகுத்தறிவு இயக்கமாம் தன்மான இயக்கத்தின் முழு வடிவமென்ன? அதனை மூளியாக்க நடைபெறும் முயற்சிகள் யாவை? இவற்றையெல்லாம் துல்லியமாக எடுத்துக்காட்டி, நம்மைத் துள்ளி எழச் செய்திடத்தான் தினமணி கார்ட்டூன் படத்தில் நிலைக் கண்ணாடி வரையப்பட்டுள்ளது என நம்புகிறேன். திரும்பிப் பார்! முன்னேறு! திராவிட இனமே! என முழங்கும் வாசகமே அந்தக் கார்ட்டூன் படத்தில் எழுதப்பட்டுள்ள திராவிட மறுமலர்ச்சி மாமன்றம் என்பதாகும்! இதுவே என் கணிப்பு! நம்மனைவரின் கணிப்பாகவும் இருந்திடல் வேண்டும்.

(2) பெரியார் பயன்படுத்துவது போன்ற தடியொன்று சுவரில் சார்த்தப்பட்டுள்ளது. தினமணி சித்திரத்தில்! தாடியைக் கட்டிக் கொண்டு, தடியையும் எடுத்துக்கொண்டால் போராட்டத்துக்குத் தயார் என்று பொருள் என்பதாகச் சித்தரிக்கிறார் சித்திரக்காரர்! தடியெடுப்பது - போராடுவது - என்ற சொற்றொடர்களைப் பயன்படுத்துவதாலேயே வன்முறைக்குத் தூபமிடுவது - தூண்டிவிடுவது என்று பொருள் அல்ல! தந்தை பெரியாரும் - அறிஞர் அண்ணாவும், இந்த இயக்கத்தின் போராட்டங்களை, தன்னைத்தானே தியாகத்திற்கு அர்ப்பணித்துக் கொள்ளும் வகையிலே தான் அறிவித்தார்கள், நடத்தினார்கள் என்பதையும் அறவழிப்போர் - அமைதி வழிப்போர் - என்ற நிலையில்தான் அமைத்திட்டார்கள் என்பதும் வரலாறு! இதோ பெரியார் பேசுகிறார்!

என்னை ஒரு பார்ப்பன துவேஷி என்று பார்ப்பனப் பத்திரிகைகள் பிரச்சாரம் செய்து வருகின்றன. நான் எந்தப் பார்ப்பனனுக்கும் விரோதியல்ல. பார்ப்பனியத்துக்குத்தான் விரோதி. பார்ப்பனியம் ஒழிய வேண்டுமென்றுதான் கூறி வருகிறவன். பார்ப்பனியத்தின் கடைசி மூச்சு ஒழியும் வரையில் திராவிடர் இயக்கம் மட்டும் இருந்தே தீரும். அதுவரையில் எப்பேர்ப்பட்ட கொடுமை, அடக்குமுறை, சூழ்ச்சி, வஞ்சகம் ஆகியவைகளை அதன் எதிரிகளோ அரசியலாரோ கையாண்டாலும் சரி, இறுதியில் இயக்கக் கொள்கை வெற்றியுற்றே தீரும்.

தந்தை பெரியார் பொன்மொழிகள் - தடை நீக்கப்பட்டது என்ற குறிப்புடன் திராவிடன் அச்சகத்தில் அச்சியற்றப்பெற்று, விடுதலை

வெளியீடாக வந்துள்ள நூலில் உள்ள பொன்மொழியைத்தான் சுட்டிக் காட்டியுள்ளேன்.

பார்ப்பனர், தம் புராணங்களைக் கொண்டு நம்மைச் சூத்திரர் ஆக்கினர். அவர்கள் மதத்திற்கு ஆட்பட்டுக் கோயில்கட்டி, குளம் வெட்டி, சொத்து அளித்ததெல்லாம் நாம்! அதனால் சுக வாழ்வு அனுபவிப்பது அவர்கள்!

இந்தப் பொன்மொழியும் அதே பெரியார் பொன்மொழிகள் எனும் நூலில் இருப்பதுதான்.

பெரியாரின் இப்பொன்மொழிக்கு ஒப்பத்தானே, இந்த ஆட்சியில் வேத ஆகம சாஸ்திரக் கல்லூரி அமைத்திட ஒரு கோடி ரூபாய் செலவிடத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இச் செயலுக்குப் பெரியார் அன்றைக்கே விடுத்த கண்டனம்தானே, இந்தப் பொன்மொழி! அந்தக் கண்டனம்தான் பெரியாரின் கைத்தடியாக உருவகப்படுத்தப்பட்டுள்ளது தினமணியில் என்றால் - அதனை நாம் பெருமிதத்துடன் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். சமஸ்கிருதத்திற்கு, சாஸ்திரத்துக்கு, வேதத்துக்கு, ஆகமத்துக்கு ஆதிக்கம் தேடும் ஒரு ஆட்சியின் முயற்சிகளை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்துவிட்டு - நான் பெரியாரின் பள்ளியில் பயின்றவன் என வெட்கமில்லாமல் எப்படிச் சொல்லிக் கொள்ள முடியும்?

(3) அண்ணாவின் வாசகம், போராட்டத்தைத் தேடிப் போக மாட்டோம்! வந்த போராட்டத்தை விடமாட்டோம்! என்பது ஒன்றும் கேலிக்குரியதல்ல! திராவிட இயக்கச் சரித்திரத்தைத் தெளிவாக உணர்ந்தவர்களுக்கு தெரியக்கூடிய உண்மைதான்!

* கல்லக்குடி போராட்டம்
* குலக்கல்வி திட்ட எதிர்ப்புப் போராட்டம்
* நான்சென்ஸ் கண்டனப் போராட்டம்
* இந்தி எதிர்ப்புப் போராட்டம்
* விலைவாசி உயர்வு கண்டனப் போராட்டம்
* சமூக நீதிக்கானப் போராட்டம்
* இலங்கைத் தமிழர் நல்வாழ்வுக்கானப் போராட்டம்
* ஜனநாயகப் பாதுகாப்புப் போராட்டம்

இப்படி அண்ணா காலத்திலும் சரி! அவருக்குப் பிறகு நமது காலத்திலும் சரி! போராட்டங்களைத் தேடிக்கொண்டு போனதில்லை! ஆனால் வேத ஆகம சாஸ்திரக் கல்லூரிகள் போன்ற ஆபத்துக்கள்! இந்த இயக்கத்தின் உணர்வுகளைச் சீண்ட ஆரம்பித்தால்! பெரியாரும், அண்ணாவும் வலியுறுத்திய சமூக நீதிக்கு உலை வைத்திடும் திரைமறைவுச் சதிகள் நடைபெறுமானால் - வந்த போராட்டத்தை விட மாட்டோம் என்ற அண்ணாவின் வாசகம், நமது சூளுரையாக மாறியே தீரும்.

இந்தக் கருத்தினைத் தெளிவுபடுத்துவதற்குத் தினமணி கார்ட்டூன் பயன்பட்டதற்கு, நன்றி!

அன்புடன்,

மு. க.

30-09-1991

1801. இராவணன் என் பாட்டன்!

உடன்பிறப்பே!

திருச்சியில் 1990-ஆம் ஆண்டு பிப்ரவரி 9-10-11 ஆகிய நாட்களில் நடைபெற்ற தி.மு.க. 6-வது மாநில மாநாட்டை திருச்சி திருப்புமுனை என்ற தலைப்பிட்டே நான் குறிப்பிட்டதை மறந்திருக்க மாட்டாய்! முதல் நாள் மாபெரும் அணிவகுப்புப் பேரணியும், மறுநாள் இளைஞர் அணி சமதர்ம சமுதாய மாநாடும், மூன்றாம் நாள் அரசியல் மாநாடும் நடைபெற்றபோது சென்னையிலிருந்து பிப்ரவரி 17-ந் தேதி வெளியான இந்தியன் எக்ஸ்பிரஸ் ஏட்டில் பின்வருமாறு ஒரு செய்தி மிகுந்த முக்கியத்துவத்துடன் வெளியிடப்பட்டிருந்தது.

> "Several AIADMK Leaders on Friday depored the alleged Anti-Brahmin feelings of the D.M.K. which came to the fore during the Trichy conference."
>
> அதாவது, திருச்சி தி.மு.க. மாநாட்டில் பிராமண எதிர்ப்பு உணர்வு முன்னிலைப்படுத்தப்பட்டதாக பல அ.தி.மு.க. தலைவர்கள் வெள்ளிக்கிழமையன்று வன்மையாகக் கண்டித்தார்கள்.
>
> என்பதே அந்தச் செய்தியாகும்.

1990-ல் மட்டுமல்ல. இப்போதும் அ.தி.மு.க.வினர் அதைத்தான் நமது கழகத்தின் மீது பெரும் குற்றமாகச் சுமத்துகிறார்கள். சட்டப்பேரவையிலேகூட அப்படியொரு குற்றத்தை நம்மீது சுமத்தி அமைச்சர்களேகூட, பார்ப்பனியத்தைப் பாதுகாக்கும் படைத்தளபதிகளாக வீறு கொண்டு எழுந்தார்கள். அ.தி.மு.க., காங்கிரஸ் உறுப்பினர்கள் சிலர், தி.மு.க.வையே தடை செய்ய வேண்டுமென ஆர்ப்பரித்திருக்கிறார்கள்.

இன்று எப்படி நம்மீது சீறிப்பாய்கிறார்களோ, அப்படித்தான் திருச்சி தி.மு.க. மாநாட்டின் போதும் நம்மீது சீறிப்பாய்ந்திருக்கிறார்கள்.

இன்னும் சொல்லப்போனால், அப்போது தி.மு.க. ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. அந்தக்கால கட்டத்தில்தான் 1990-இல் திருச்சியில் மாநில மாநாடு!

ஏதோ, இன்றைக்குப் பெருந்தோல்வியுற்று விட்டோம் - அதனால் பார்ப்பனியம், பார்ப்பனர் எனப் பேசுகிறோம் என நம்மைப் பழிப்போர், இழித்துரைப்போர், நாம் 1990-ல் ஆளுங்கட்சியாக இருந்தபோதே திராவிட இயக்க அடிப்படை உணர்வுகளை அசைத்துப் பார்த்திட முற்பட்ட ஆரிய உணர்வை அடையாளங்காட்டி, நமது பாதையையும், பயணத்தையும் செம்மைப்படுத்திக் கொள்ளத்தான் திருச்சி திருப்புமுனை எனும் பெயரால் தி.மு.க. 6-வது மாநில மாநாட்டை நடத்தினோம் என்பதை - அந்த மாநாட்டு நிகழ்ச்சிகளையும், மாநாட்டில் பேசப்பட்ட கருத்துகளையும், மாநாட்டில் நடைபெற்ற அண்ணா எழுதிய சந்திரமோகன் - நான் எழுதிய மணிமகுடம் நாடகங்களையும் அறிந்தோர் புரிந்துகொள்ளவே செய்வர்.

அந்த மாநாட்டில் நான் உரையாற்றியபோது, சொன்னேன்!

நாம் யாருக்கோ விரோதிகள் என்றும், சாதி உணர்வைத் தூண்டுகிறோம் என்றும் சிலபேர் கூறுகிறார்களே? இதோ என் கையிலிருப்பது 1989-ஆம் ஆண்டு சட்ட மன்றப் பொதுத் தேர்தலை யொட்டி, தினமலர் பத்திரிகையில் வெளிவந்த விளம்பர அறிக்கை. அந்த அறிக்கையில் கையொப்பமிட்டிருப்பவர்கள் என். காசிராமன், வி.எஸ். ராமசுப்ரமணியம், ஜெ.என். சங்கரநாராயணன், புலவர் கீரன், நெப்பத்தூர் பாலு அய்யர், டெல்லி கணேஷ், ஜெய்சங்கர், கல்லுப்பட்டி சீனிவாசன், தஞ்சை ஜி. ராமச்சந்திர அய்யர், மதுரை ஜி. பரமேஸ்வரன் எனும் பார்ப்பனர்கள்! பிராமண சமூகத்தின் பெயரால் வாக்காளர்களுக்கு விடுத்த வேண்டுகோள் இது! இடஒதுக்கீடு என்ற பெயரால் முதலில் ஆட்சியிலிருந்தபோது கருணாநிதி நமது பிராமண சந்ததியினரின் எதிர்காலத்தைப் பாழடித்து, இதை நான்தான் செய்தேன் என்று பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக மார்தட்டிக் கொண்டார். பிறகு வந்த மற்றொரு முதல்வர் (எம்.ஜி.ஆர்.) முன்னேறிய சமூகத்திற்கு இருந்த 50 சதவீதத்தை 32 ஆகக் குறைக்கும்

கைங்கர்யத்தை செய்தார். இது போதாது என்று மண்டல்குழு பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துமாறு மத்திய அரசை தி.மு.கழகத்தார் வற்புறுத்தி நம்மை ஒழித்துக்கட்ட முனைந்து வருகிறார்கள். திராவிட இயக்கங்களுக்கு, குறிப்பாக, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வாக்களிக்காமல் - தேசிய நீரோட்டத்தில் இணைந்திட, தர்மநியாயத்தின் பெயரால் காங்கிரஸ் கட்சிக்கே வாக்களிக்குமாறு பிராமண சமூகத்தினரைக் கேட்டுக் கொள்கிறோம் - என்று அறிக்கை விடுத்தார்கள். நம்மைப் பார்த்து சாதி உணர்வைத் தூண்டுகிறோம் என்பது எந்த வகை நியாயம்? -

இவ்வாறு 1990 திருச்சி மாநாட்டில், நான் பேசினேன். ஆம்! ஆட்சியில் இருக்கும் போதுதான் பேசினேன். தோல்வியுற்றதால் பேசுகிறோம் என்கிறார்களே! அவர்கள் உணர்வதற்காகக் குறிப்பிடுகிறேன் - ஆட்சியில் இருக்கும்போதே ஆர்த்த முரசம்தான் திருச்சி திருப்புமுனை முரசம்!

பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, பழங்குடி மக்களின் இடஒதுக்கீடுகளை அகற்றிட - மண்டல் பரிந்துரை தலையெடுக்காமல் தடுத்து நிறுத்திட - காங்கிரசுக்கு வாக்களியுங்கள் என்று 1989 சட்டமன்றத் தேர்தலில் பார்ப்பன சமூக மக்களுக்கு வேண்டுகோள் விடுத்த அந்தப் பார்ப்பன பிரமுகர்கள் - 1991 தேர்தலில் காங்கிரசுடன் உறவு ஏற்படுத்திக்கொண்ட அ.தி.மு.க. கூட்டணி அமைத்துக் கொண்டது மட்டுமல்லாமல் - மண்டல் கமிஷன் பரிந்துரையை நிறைவேற்ற முன்வந்த திரு.வி.பி. சிங்கை கண்டித்ததோடு, பொருளாதார அடிப்படையிலான இடஒதுக்கீட்டுக்கே பெரிதும் முக்கியத்துவம் கொடுத்து, திராவிட இயக்கமும், பெரியாரும், அண்ணாவும் எதற்காகப் போராடிப் பாடுபட்டார்களோ, அந்தச் சமூக அடிப்படை கல்வி அடிப்படையிலான இட ஒதுக்கீட்டுக்கு எதிரான கருத்துகளைப் பேட்டிகள் வாயிலாக அறிவித்துக் கொண்டிருந்த காரணத்தால் - ஆகா! இதுதான் ஆரிய முறை காத்திடும் ஆபத் பாந்தவன் என்று முடிவு செய்து - அந்தக் கட்சி ஆட்சிக்கு வரப்பாடுபட்டனர்.

முன்பெல்லாம் மறைமுகமாக இருந்து, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு எதிராக வாக்களித்த பார்ப்பன வாக்காளர்கள், இந்தத்

தேர்தலில் வாக்கு சேகரிக்கும் பணியில் நேரடியாகவே ஈடுபட்டு நம்மவா ஆட்சிக்கு வர நடைபாவாடை விரிப்போம்! எனச் சூளுரைத்து - சூழ்ச்சி மாயங்கள் புரிந்து, நினைத்ததைச் சாதித்து முடித்து விட்டனர்.

இந்த உண்மையை நாம் மட்டுமா கண்டறிந்து சொல்கிறோம்?

தமிழ்நாடு பிராமணர் சங்கச் சார்பில், அதன் அதிகாரபூர்வமான தாம்பிராஸ் என்ற ஏட்டில் பிராமணர் சங்கத் தலைவர் எஸ். பாலசுப்பிரமணியம் அவர்கள், விடுத்துள்ள வெளிப்படையான அறிக்கையில் இந்த உண்மை விசுவரூபமெடுத்து நிற்கிறதே!

> நாமெல்லாம் வெகு ஆவலுடன் எதிர்பார்த்த ஆட்சி மாற்றம், ஒரு மவுனப் புரட்சியாகவே நடந்து விட்டது! இதை நாம் எவ்வளவு சாதகமாக நமது சமூகத்திற்குப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமோ, அப்படிப் பயன்படுத்திக் கொள்ள கடமைப்பட்டுள்ளோம். பிறர் சொன்னாலும், சொல்லாவிட்டாலும் இப்போது பிராமணர் ஆட்சிதான் நடைபெறுகிறது.
>
> கடந்த மாதம் வெளிவந்த பிராமணர் சங்க அறிக்கை இது!

உண்மைதானே உடன்பிறப்பே! வந்ததும் வராததுமான ஆலய நிதி வசூல் - அற நிலையத் துறையை மெல்லச் சாகவிட, ஆலய வாரியம் - திராவிட மக்களைச் சூத்திரராக்கிய வேதங்களுக்கும், சாஸ்திரங்களுக்கும் புத்துயிர் அளிக்க, வேதாகம சாஸ்திரக் கல்லூரி - இந்த அறிவிப்புகள் எல்லாம், நடப்பது பிராமணர் ஆட்சிதான் என்ற பிராமணர் சங்க அறிக்கைக்கு ஒப்புதல் அளிக்கும் காரியங்கள்தானே!

மண்டல் கமிஷன் பரிந்துரையில் 50 சதவீதம் கேட்டு பேரவையில் தீர்மானம் போடுவது என்பதும் ஒரு மாய்மாலம்தானே!

இங்கே ஒரு விசித்திரம் பார்த்தாயா? மண்டல் கமிஷன் பரிந்துரைப்படி 27 சதவீதம் பிற்படுத்தப்பட்டோருக்குக் கேட்ட நம்மை, ஆதரிக்கக் கூடாதென்று 1989-ல் அறிக்கை விட்ட பிராமண சமூகப் பிரமுகர்கள், இன்று ஜெயலலிதா மண்டல் கமிஷனில் பிற்படுத்தப்பட்டோருக்கு 50 சதவீதம் கேட்டு தீர்மானம் கொண்டு வருவதாகச் சொல்லும்போது அவரை எதிர்க்காமல் நம்பளவா ஆட்சி என்று மகிழ்வதற்கு என்ன காரணம்?

இனப்பற்றா? அல்லது ஜெயலலிதா, 50 சதவீதமெனச் சொல்லி ஊரை ஏமாற்றுகிறாரே தவிர, அது நடக்கப் போவதில்லை என்று அவருக்கும் தெரியும், அவாளுக்கும் தெரியும் என்பதாலா?

மத்திய அரசுக்குச் எடுத்துச் சொல்ல வேண்டிய நேரத்தில் எல்லாம் சொல்லாமல் மௌனமாக இருந்துவிட்டு, மத்திய அரசு ஒரு முடிவு எடுத்து உச்சநீதி மன்றத்தில் வாக்குமூலம் வழங்கும் வரையில் கண்டு கொள்ளாமல் இருந்துவிட்டு - இப்போது ஏதோ, நான் அடிக்கிற மாதிரி அடிக்கிறேன்! நீ அழுவுற மாதிரி அழு! என்பது போல - ஒப்புக்கு ஒரு தீர்மானம் கொண்டு வரும்போது, பிராமணர் சங்கம் புரிந்து கொள்கிறதல்லவா - இந்தத் தீர்மானம் வெறும் கண்துடைப்பு. நாம் கவலைப்படத் தேவையில்லை. நம்ம குழந்தை ரொம்ப சமத்து - வளைக்க வேண்டியதை வளைச்சு, விளைக்க வேண்டியதை விளைத்திடும்! என்ற நம்பிக்கையுடனல்லவா பார்ப்பனியம் இன்றைக்குப் பரவசப்பட்டுக் கொண்டிருக்கிறது!

அதனால்தானே அண்ணா சந்திர மோகன் நாடகத்தில் காகபட்டர் பாத்திரத்திலே - அழகாகச் சொல்லுவார்! ஆரியம், விதைக்காது விளையும் கழனி! என்று!

அதனை மறந்துவிடாத காரணத்தால்தான் கழக ஆட்சிக்கு சூத்திர ஆட்சி என்ற பெயரை நாமே சூட்டிக் கொண்டு, அதனைப் பேரவையிலேயே அறிவித்தோம்!

நாம் ஆண்டவன் பெயரால், மதத்தின் பெயரால், சாதியின் பெயரால், சாஸ்திரத்தின் பெயரால், அடக்கப்பட்டோர்! அதனால் அடக்கத்துடன் சூத்திரன் எனக் கூறிக் கொண்டோம்!

அவர்களோ, ஆண்டவன் பெயரால், மதத்தின் பெயரால், சாதியின் பெயரால், சாஸ்திரத்தின் பெயரால் ஆதிக்க புரியில் இருப்போர்! எனவே ஆணவத்துடன் நான் பாப்பாத்தி! என்னை அசைக்க முடியாது! என அறைகூவல் விடுகின்றனர்!

“அடங்கிக் கிடப்பவன் ஆமை!
ஒடுங்கிக் கிடப்பவன் ஊமை!”

என்ற நிலைக்கு இந்த இனத்தான் ஆளாகப் போகிறானா?

அல்லது;

நான் பெரியாரின் பிள்ளை

அண்ணாவின் தம்பி

இன்னும் சொல்லப் போனால்

இராவணன் என் பாட்டன்

எனக் கூறி வீறு கொண்டெழப் போகிறானா?

அன்புடன்,

மு. க.

(01-10-1991)

1802. பொய், நிலாச் சோறு சாப்பிடுகிறது!

உடன்பிறப்பே!

உச்சநீதி மன்றத்தில் ஒரு வழக்கு - தஞ்சை விவசாயிகள் தொடர்ந்த வழக்கு - காவிரி பிரச்சினையில் நியாயம் கிடைத்திட நடுவர் மன்றம் அமைக்க வேண்டும் எனும் முறையீட்டை மையமாக வைத்து நடைபெற்ற வழக்கு - மீண்டும் 1989-ல் ஆட்சிக்கு வந்த கழக அரசு, அந்த வழக்கில் விவசாயிகள் சார்பாக பிரபல வழக்கறிஞர்களை வாதாடச் செய்து, தானும் இணைந்து கொள்ளும் நிலையை முனைப்பாக மேற்கொள்கிறது.

வழக்கில் தீர்ப்பு வழங்கப் போகும் மிக முக்கியமான கட்டம். இனியும் பேச்சு வார்த்தைக்கு வாய்ப்பு இருக்கிறது. எனவே நடுவர் மன்றம் தேவையில்லை என்ற வாதத்தை கர்நாடக அரசு முதன்மையாக வைக்கிறது. வழக்கில் மத்திய அரசும் தனது கருத்தைச் சொல்ல வேண்டிய நேரம் நெருங்குகிறது.

தமிழக, கர்நாடக மாநில முதல்வர்களுடன் மீண்டும் ஒருமுறை பேச்சு வார்த்தை நடத்திட மத்திய அரசு முயற்சி எடுக்கும் என மத்திய அரசின் சார்பில் உச்சநீதி மன்றத்தில் வாக்குறுதி அளிக்கப்பட்டு விட்டால் உச்சநீதி மன்றம் அதை மனத்திற்கொண்டு, நடுவர் மன்றம் அமைத்திடும் கோரிக்கையை ஏற்காமல் போய் விடக் கூடும் என்று சட்டத்துறை வல்லுநர்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

தமிழக அரசு, இருபத்தேழு தடவை பேச்சு வார்த்தை நடத்தியாகி விட்டது. இருபதாண்டு காலத்துக்கு மேலாக இப்பிரச்சினை இழுத்து அடிக்கப்படுகிறது. இனியும் பேச்சு வார்த்தைக்கு இடமில்லை. நடுவர் மன்றமே தேவை என்ற கருத்தைத் திட்டவட்டமாக, மத்திய அரசுக்கு அறிவித்துத் தீரவேண்டிய கட்டத்தில் தமிழகச் சட்டமன்றத்தில் ஒரு தீர்மானம் கொண்டு வரப்படுகிறது.

தீர்மான வாசகம் எப்படியிருக்க வேண்டும்? காவிரிப் பாசனத்தில் உள்ள தமிழ்நாட்டு ஆயக்கட்டுதாரர்களுக்கு இத்தனை ஆயிரம் கோடி கன அடி தண்ணீர் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்று கன அடி தண்ணீர் அளவைக் குறிப்பிட்டு மட்டும் தீர்மானம் நிறைவேற்றினால் மட்டும் போதுமா?

உடனடி அவசரமும், அவசியமும் என்ன என்பதை ஆலோசித்து, அதற்கேற்ப தீர்மானத்தை வடிவமைத்திட வேண்டாமா?

அப்போது அவசியமாக இருந்த தீர்மானத்தின் வாசகமென்ன?

இனிப்பேச்சு வார்த்தைக்கு பயனில்லை. எனவே நடுவர் மன்றமே தேவை.

இப்படித் தீர்மான வாசகம் அமைந்தால்தானே, மத்திய அரசும் அதே நிலை எடுக்க வேண்டுமென வற்புறுத்த முடியும். உச்சநீதி மன்றமும் நமது கோரிக்கையை ஏற்க வழி ஏற்பட முடியும்.

அதனால்தான் கழக அரசு சட்டமன்றத்தில் உடனடியாக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி, அன்றைக்கே சில மணி நேரங்களில் மத்திய அரசுக்குக் கிடைத்திடும் வண்ணம் அனுப்பி வைத்தது.

என்ன தீர்மானம்?
எத்தனை கோடி கன அடி தண்ணீர்
தமிழக ஆயக்கட்டுக்கு
தேவை என்ற தீர்மானமா?
அல்ல! அல்ல!
உச்சநீதி மன்றத்தில் இருந்த
வழக்கிற்கு தேவையான தீர்மானம்!
இனியும் பேச்சு வார்த்தையால்
பயனில்லை. நடுவர் மன்றமே
தேவை எனும் கருத்தமைந்த
தீர்மானம்,
அவையில் தீர்மானம்
நிறைவேறியவுடன் – அதனை
வலியுறுத்தி மத்திய அரசுக்குத்
தெரிவிக்கப்படுகிறது.

உச்சநீதி மன்றத்தில் மத்திய அரசு,
ஆம்! தேசிய முன்னணி அரசு
தெரிவித்து விடுகிறது -
தமிழ்நாடு அரசு இனியும் பேச்சு
வார்த்தைக்குத் தயாராக இல்லை
என்பதை!
பின்னர் கிடைத்த தீர்ப்புத்தான்
நடுவர் மன்றம் அமைப்பு!

இந்த நிகழ்ச்சியை நான் நினைவூட்டுவதற்கு உனக்குக் காரணம் புரியுமென்று நினைக்கிறேன்.

காவிரிப் பிரச்சினையில் உச்ச நீதிமன்றத்தில் ஒரு வழக்கு இருந்ததுபோலத்தான் இப்போதும் மண்டல் கமிஷன் பிரச்சினையில் உச்சநீதி மன்றத்தில் ஒரு வழக்கு - சமூக அடிப்படையிலும், கல்வி அடிப்படையிலும் பிற்படுத்தப்பட்டோருக்கு இடஒதுக்கீடு என அரசியல் சட்டத்தில் உள்ளவாறு இருபத்தி ஏழு சதவீதம் மத்திய அரசு வேலை வாய்ப்புகளில் இடஒதுக்கீடு செய்திட மண்டல் கமிஷன் செய்த பரிந்துரையை (மத்திய காங்கிரஸ் ஆட்சி பத்து ஆண்டுக் காலம் கிடப்பில் போட்டதை எடுத்து) செயலாக்கம் தர முன் வந்த தேசிய முன்னணி அரசின் நல்ல நோக்கத்தை எதிர்த்து ஒரு சிலர் தொடர்ந்த வழக்கு - அந்த வழக்கில் அக்டோபர் முதல் தேதி தீர்ப்பு கூறப்படும் என அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் - மத்திய காங்கிரஸ் அரசு, அந்த இருபத்தேழு சதவீதத்தில் சமூக அடிப்படை, கல்வி அடிப்படை என்பதுடன் பொருளாதார அடிப்படையும் நுழைத்து - (முன்பு தமிழகத்தில் எம்.ஜி.ஆர். கொண்டு வந்த ஒன்பதாயிர ரூபாய் வருமான வரம்பு போல) ஒரு வாக்குமூலத்தை தயார் செய்கிறது. இப்படி ஒரு முடிவை மத்திய அரசு எடுக்கப் போகிறது என்ற செய்தி ஏடுகளில் வெளிவந்த வண்ணமிருக்கிறது. அப்போதுதான் செப்டம்பர் 17ல் பெரியார் விழாவில் முதல்வர் ஜெயலலிதா, சட்டப் பேரவையில் மண்டல் கமிஷன் தீர்மானம் வரும் என அறிவிக்கிறார். தீர்மானம் உடனடியாக வரவில்லை.

உச்சநீதி மன்றத் தீர்ப்பு அக்டோபர் முதல் நாள் என்றால் அதற்கு முதல் நாள் செப்டம்பர் 30-ந்தேதிதான் தீர்மானம் வருகிறது.

அவ்வளவு தாமதமாக - வேண்டா வெறுப்பாக வந்த தீர்மானம் என்ன?

சமூக அடிப்படையிலும், கல்வி அடிப்படையிலும் ஐம்பது சதவீதம் பிற்படுத்தப்பட்டோருக்கு வேலை வாய்ப்பிலும், கல்வியிலும் இடஒதுக்கீடு வேண்டுமென மத்திய அரசைக் கோருகிற தீர்மானம்.

இருபத்தேழு சதவீதத்திற்கே ஆபத்து எனும் கட்டத்தில் - அந்த 27க்குள்ளும் பொருளாதார அடிப்படையை மத்திய காங்கிரஸ் அரசு நுழைக்கிறது என்ற சூழ்நிலையில் - அதைப் பற்றியே அந்தத் தீர்மானத்தில் கண்டு கொள்ளாமல் 50 சதவீதம் வேண்டுமென வாசகம் அமைத்தது எப்படி இருக்கிறது?

நடுவர் மன்றம் வேண்டுமா? வேண்டாமா? பேச்சு வார்த்தை மீண்டும் தொடரலாமா? என்ற கேள்வி எழுந்திடும் சமயத்தில், எங்கள் ஆயக்கட்டுகளுக்கு இத்தனை கோடி கன அடி தண்ணீர் வேண்டும் என்று மட்டும் உச்சநீதி மன்றத்தையும் - மத்திய அரசையும் கழக அரசு தீர்மான மூலம் வலியுறுத்தியிருக்குமேயானால், அது எவ்வளவு குறையுடையதாகவும் - பொறுப்பு இல்லாததாகவும் போயிருக்கும் என்பதைச் சற்று எண்ணிப் பார்!

சமூக அடிப்படை - கல்வி அடிப்படை என்பது மட்டுமே 27 சதவீதம் என்ற மண்டல் கமிஷன் பரிந்துரைக்கே வேட்டு வைக்கும் வகையில், அந்த 27க்குள் பொருளாதார அடிப்படையை மத்திய அரசு நுழைப்பது கூடாது, என்பதைச் சுட்டிக் காட்டாத அ.தி.மு.க. அரசின் இந்தத் தீர்மானம் - குறையுடைய தீர்மானமாக, பொறுப்பு இல்லாத தீர்மானமாக - இன்னும் சொல்லப் போனால் இந்த நோரத்துக்குப் பயன்படாத தீர்மானமாக ஆகி விட்டிருக்கிறதா இல்லையா?

பெரியார் பிறந்த நாள் விழா செப்டம்பர் பதினேழு - சட்டப் பேரவையில் தீர்மானம் வந்ததோ, செப்டம்பர் முப்பதில்! இடையே இருந்த பதின்மூன்று நாட்களில் ஒருநாள் இந்தத் தீர்மானத்திற்காக ஒதுக்கியிருக்கலாம். தீர்மானத்தை செப்.30இல் கொண்டு வந்தாலும், அதற்கு முன்பே முதல்வர் ஜெயலலிதா பிரதமர் நரசிம்மராவுக்கு, கடித மூலமோ - தந்தி மூலமோ - டெலக்ஸ் மூலமோ - 27 சதவீதத்துக்குள் பொருளாதார அடிப்படையில்

வருமான வரம்பை நுழைக்காதீர்கள் - அது முற்றிலும் சமூக, கல்வி அடிப்படைகளில்தான் இருக்க வேண்டும் என்று வலியுறுத்தித் தெரிவித்து, அந்தச் செய்தியை சட்ட மன்றத்தின் முன்பும் வைத்திருக்கலாம்.

அத்தகைய அக்கறை எதனையும் முதல்வர் ஜெயலலிதா எடுத்துக் கொள்ளாமைக்கு மிக முக்கியமான காரணம் உண்டு.

என்ன அது? அவர் அ.தி.மு.க. தலைவியாக மட்டுமே இருந்தபோது 1990 அக்டோபரில் மண்டல் கமிஷன் பரிந்துரையைப் பற்றிய தனது கருத்தை எக்ஸ்பிரஸ் பத்திரிகைப் பேட்டியில் தெளிவாகக் கூறியுள்ளார்.

> "Even among the so-called backward castes, there are many people who are well off. well placed in life, society. It makes a mockery of Reservation if they are going to be cornering the benefits. So it should be made clear that is is the economically weaker sections in the backward castes who will be given these concessions. Only then can we call it Social Justice. That is what M.G.R. had tried to point out earlier. That was misinterpreted several others. What M.G.R. actually meant was the benefit of Reservation should be availed of by economically weaker sections among the backward castes. We stand by that. That should be the policy."

அதாவது, பிற்படுத்தப்பட்டோர் எனக் கூறப்படுவோரிலும், பெரும்பாலானவர்கள் சமுதாயத்திலும், வாழ்க்கையிலும் நல்ல இடமும் வசதியும் பெற்று இருக்கிறார்கள் - அவர்கள் இடஒதுக்கீட்டின் பயனை அடைவது என்பது கேலிக்குரிய ஒன்றாகும். எனவே, பிற்படுத்தப்பட்டோரில் பொருளாதாரத்தில் பலவீனமாயிருப்பவருக்கே இடஒதுக்கீடு என்பது தெளிவாக்கப்பட வேண்டும். அதற்குப் பெயர்தான் சமூகநீதி என்று இருக்க முடியும். இதைத்தான் எம்.ஜி.ஆர். முன்பு அவரது ஆட்சியில் செயல்படுத்த முயற்சித்தார். பலர் அதைத் தவறாக வியாக்யானம் செய்தார்கள். பிற்படுத்தப்பட்டவரில் பொருளாதார அடிப்படையில், இடஒதுக்கீடு வேண்டுமென்பதே எம்.ஜி.ஆரின் கருத்தாகும். நாங்கள் (அ.தி.மு.க.) அதே நிலையைத்தான் ஏற்கிறோம். அந்த

நிலையே கொள்கையாக இருக்க வேண்டும் என்பதாகத் தனது மனத்தைத் திறந்து ஜெயலலிதா அறிவித்தது அக்டோபரில் - ஆம்! 1990 அக்டோபரில் - மண்டல் கமிஷன் பரிந்துரையை, திரு.வி.பி.சிங் ஆட்சி நடைமுறைப்படுத்த முன்வந்த காலகட்டத்தில் என்பதை எந்த ஒரு நிலையிலும் மறக்காமல் இருந்தால் -

இப்போது கொண்டு வரப்பட்டுள்ள
50 சதவீத தீர்மானம் என்பது
கண்துடைப்பு மட்டுமல்ல! ஒரு ஏமாற்று
வித்தை - கபட நாடகம் என்பதும்
நன்றாகப் புரிந்து விடும்.

ஒன்பதாயிர ரூபாய் ஆண்டு வருமானமுள்ள, பிற்படுத்தப்பட்ட மக்கள் வீட்டுப் பிள்ளைகளுக்கு மட்டுமே இடஒதுக்கீடு என அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் பொருளாதார அடிப்படையில் இடஒதுக்கீடு ஆணை பிறப்பித்தபோது - தி.மு.க., தி.க.,முஸ்லிம் லீக், பார்வார்டு பிளாக் ஆகிய கட்சிகள் அமைப்பு ரீதியாக ஒரே மேடையில் எதிர்ப்புக் குரல் கொடுத்தன. போர் முழக்கம் செய்தன. மற்றும் காங்கிரஸ் கட்சியிலே உள்ள பிற்படுத்தப்பட்ட வகுப்புத் தலைவர்கள் சிலர், இந்திய கம்யூனிஸ்டு கட்சியில் இருந்த பிற்படுத்தப்பட்ட வகுப்புத் தலைவர்கள் சிலர் அந்த மேடைகளில் நின்று எம்.ஜி.ஆர். மாற்றியமைத்த அந்த வருமான வரம்பு இடஒதுக்கீடு திரும்பப் பெறப்பட வேண்டுமென, திராவிட இயக்கங்களுடன் இணைந்து ஒரே குரலில் கோரிக்கை வைத்தனர்.

தி.மு.கழகம் மாநிலம் தழுவிய மறியல் போராட்டத்திற்கு நாள் குறித்து அறிக்கை வெளியிட்டது.

1980 நாடாளுமன்றத் தேர்தலில் எம்.ஜி.ஆர். அவர்களின் தலைமையிலான அ.தி.மு.க. இரண்டே இரண்டு இடங்களை மட்டும் பெற்று தோல்வி அடைந்த நிலையில் - உடனடியாக எம்.ஜி.ஆர். அவர்கள், இடஒதுக்கீட்டில் வருமான வரம்பு ஆணையை திரும்பப்பெற்று - தி.மு.க. ஆட்சியில் 31 சதவீதமாக உயர்த்தப்பட்டிருந்த பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீட்டை, 50 சதவீதமாக ஆக்கி ஆணை பிறப்பித்தார்.

(அந்த 50இல்தான் 30 சதவீதம் பிற்பட்டோருக்கெனவும், 20 சதவீதம் மிகவும் பிற்பட்டோருக்கெனவும் கழக ஆட்சியில் 1989-ல் ஒதுக்கி ஆணை பிறப்பிக்கப்பட்டது என்பதை இன்றுள்ள அரசு, அவையில் மறைக்க முயன்றாலும், அந்தப் பின்தங்கிய மக்களுக்காக எம்.ஜி.ஆர். ஆட்சியிலும், கவர்னர் ஆட்சியிலும் போராடித் தியாகம் செய்தவர்கள் மறந்துவிட மாட்டார்கள். எப்படி முற்றாக இந்த அரசு மறைத்துவிட இயலும்? இந்த ஆண்டு மருத்துவக் கல்லூரிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் 957 பேரில் பொதுத் தொகுப்பில் 297 பேர் - பின்தங்கிய வகுப்பில் 287 பேர் - மிகவும் பின்தங்கிய வகுப்பில் 192 பேர் - தாழ்த்தப்பட்டவர் 172 பேர் - பழங்குடியினர் 9 பேர் - என்று ஒரு புள்ளி விபரத்தை அமைச்சர் நாவலர் அவையில் வெளியிட்டுள்ளாரே! ஏற்கனவே 1989-க்கு முன்பு மிகவும் பின்தங்கிய மாணவர்கள் எண்ணிக்கை 80க்கும் குறைவாக இருந்தது. இப்போது 192 என உயர்ந்துள்ளது யாரால்? எந்த ஆட்சியால்? 20 சதவீத தனி ஒதுக்கீட்டால் அல்லவா? கழக ஆட்சியில் கடந்த ஆண்டு பழங்குடியினர்க்கு ஒரு சதவீதம் எனத் தனியாக ஒதுக்கியதால் அல்லவா 9 பேர் பயன்பெற்றுள்ளனர்! இவைகளை, வஞ்சகத்தினர் இன்று மறைக்கலாம் - வரலாறு மறைத்து விடுமா?)

உடன்பிறப்பே, எம்.ஜி.ஆர். எடுத்த பொருளாதார அடிப்படை நிலையே சரியானது. அதுவே எங்கள் நிலை. அதுவே கொள்கையாக வேண்டும் என அக்டோபரில் பேட்டி கொடுத்த அ.தி.மு.க. தலைவி, இன்றைக்கு ஆட்சிப் பொறுப்பேற்றதும் - 50 சதவீதம் சமூக, கல்வி அடிப்படையில் வேண்டும் எனத் தீர்மானம் கொண்டு வருவது, நல்ல மாற்றம்தான்! அதாவது வெளிப்படையாக! ஆனால் உள்ளார்த்தமாக அவரது உணர்வு, பெரியார் அவர்களும், அண்ணா அவர்களும், இப்போது நாமும் எந்த சமூக நீதிக்காக போராடும் நிலை ஏற்பட்டதோ, அந்த திராவிட இயக்க உணர்வுக்கு முற்றிலும் மாறுபட்ட உணர்வாகும் என்பதை அக்டோபரில் அவர் அளித்த பேட்டி தோலுரித்துக் காட்டிவிடுகிறது.

பொருளாதாரத்தில் பலவீனமாக இருக்கிற மக்களுக்கு இடஒதுக்கீடு என்பதை நாம் மறுக்கவில்லை. ஏற்கனவே செய்கிறோம். அதற்காக பத்து சதவீதமோ, அல்லது அதற்கும்

அதிகமாகவோ ஒதுக்கும்போது - அந்த இடஒதுக்கீட்டில் எல்லா சமூகத்திலுமுள்ள ஏழைகள் பயனடைய வேண்டும்.

பொதுத் தொகுப்பு இடஒதுக்கீடு அன்னியில், சமூக அடிப்படையிலும், கல்வி அடிப்படையிலும் மட்டும் பிற்படுத்தப்பட்ட மக்களாயினும், தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்களாயினும் கல்வி, வேலை வாய்ப்புகளில் இடஒதுக்கீடு - பொருளாதார அடிப்படையில் ஒதுக்கப்படும் சதவீதத்தில் எல்லா சமூகத்தில் உள்ள ஏழைகளுக்கும் இடஒதுக்கீடு - இந்த திராவிட இயக்கக் கொள்கை, மண்டல் கமிஷன் குறித்து மத்திய காங்கிரஸ் அரசு எடுத்துள்ள முடிவினால் மறுக்கப்படுகிறது.

அ.தி.மு.க. அரசின் தீர்மானத்தில் அந்த ஆபத்தைப் பற்றி மூச்சுக்கூட விடாமல், மத்திய காங்கிரஸ் அரசு, தனது முடிவை மாற்றிக் கொள்ள வேண்டுமென்று தீர்மானத்தில் ஒரு வாசகத்தை சேர்க்காமல், அதற்கான முயற்சிகளில் முதலமைச்சர் தீவிரமாக ஈடுபடாமல் 50 சதவீதம் என்றால் என்ன? நூறு சதவீதம் என்றால் என்ன? எந்தப் பயனுமில்லை!

27 சதவீதத்திற்கே எதிர்ப்புக் கிளர்ச்சி! இதில் 50 சதவீதம் என்ற கோரிக்கைக்கு என்ன மதிப்பு? வேடிக்கையாகி விடாதா?

50 சதவீதம் என்பது குறிக்கோளாக இருக்கலாம்! நாமும் வரவேற்கிறோம்!

ஆனால் அதற்கு முன்பு, 27 சதவீதத்திலேயே பொருளாதார அடிப்படையைப் புகுத்தி, முன்னேறிய சமூகத்துக்கு மட்டுமே 10 சதவீதம் என்றும் கூறி - சமூகநீதிக் கொள்கையையே சவக்காட்டுக்கு அனுப்பும் மத்திய காங்கிரஸ் அரசின் முடிவை மாற்றிக் கொள்ளவேண்டும் என்று தீர்மானத்தில் திட்டவட்டமாக குறிப்பிடாததற்குக் காரணம் என்ன?

உயிர்ப் பிரச்சினையைத் தீர்மானத்தில் கோடிட்டுக் காட்ட மறுத்துவிட்டு, அல்லது மறந்துவிட்டு, சதவீத எண்ணிக்கை எவ்வளவு என்பதில் மட்டும் கவனம் செலுத்தியது ஏன்?

தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்காக, அவர்தம் சமூக நீதி உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கும் இயக்கங்கள் அத்தனையும் இந்த உயிர்ப்பிரச்சினையை உரத்த குரலெழுப்பி - எழுதியும், பேசியும், அறிக்கைகள் விடுத்தும், வலியுறுத்திக் கொண்டிருக்கும் போது -

"மொட்டைத் தாதன் குட்டையில்
விழுந்தான் என்பது போல;
ஒரு தீர்மானம்!
அதுவும், குதிரை, காணாமல் போன
பிறகு, இலாயத்தை இழுத்துப்
பூட்டு என்று சொன்ன கதைபோல!"

மத்திய காங்கிரஸ் அரசு, தனது வாக்குமூலத்தை உச்சநீதி மன்றத்திற்கு அனுப்பிய பிறகு!

என் செய்வது உடன்பிறப்பே! உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுவோர் செயலால், உண்மை உபவாசமிருக்கிறது! பொய் நிலாச் சோறு சாப்பிடுகிறது!

அன்புடன்,

மு. க.

(04-10-1991)

1803. துரோகமும் பாபமும் செய்தது யார்?

உடன்பிறப்பே!

சட்டப்பேரவையில் ஆளுநர் உரை மீது நடந்த விவாத நாட்களாயினும் சரி! நிதிநிலை அறிக்கைப் பொது விவாதமாயினும் சரி! மானியக் கோரிக்கைகள், தீர்மானங்கள் மீது நடந்த விவாதங்களாயினும் சரி - கலந்துகொண்டு பேசியவர்களில் பெரும்பாலான ஆளுங்கட்சி உறுப்பினர்களும், அமைச்சர்களும், எதிர்க்கட்சி என்று கருதப்படுகிற (மன்னிக்கவும், அழைக்கப்படுகிற) காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களும் தி.மு.க. ஆட்சியைப் பற்றியும் - குறிப்பாக என்னைப் பற்றியும் நேரடியாகவும், மறைமுகமாகவும், ஜாடையாகவும் தவறான தகவல்களைத் தரக்குறைவான முறையில் தந்தும் பேசியுள்ளதை ஏடுகளில் நீயும் படித்திருப்பாய். நானும் படித்தேன். அவைக்குத் தவறான தகவல்களைத் தருவது - ஆதாரமில்லாமல் குற்றச்சாட்டு கூறுவது - போன்றவை அவையின் உரிமை மீறல் பிரச்சினைக்கு உட்பட்டதாகும். இதனை உணர்ந்து அமைச்சர்களோ அல்லது முதல் அமைச்சரோ, ஆளுங்கட்சி, எதிர்க்கட்சியில் பேசிய பல உறுப்பினர்களோ நடந்து கொண்டதாகத் தெரியவில்லை. இதற்குப் பல எடுத்துக்காட்டுகள் உள்ளன என்றாலும், இந்தக் கடிதத்தில் முதல்வர் ஜெயலலிதா, கச்சத் தீவு தீர்மானத்தின்போது ஆற்றிய உரையில் (மன்னிக்கவும், படித்த உரையில்) என்னைப் பற்றிக் கூறிய வார்த்தைகள் எவ்வளவு அநாகரிகமானவை - எத்தகைய தவறான தகவல் - என்பது குறித்து மட்டுமே எழுதுகிறேன்.

அவர் முதல்வர் என்ற பதவி, முரட்டுத்தனமான வார்த்தைகளைப் பயன்படுத்த தனக்கு உரிமை வழங்கியுள்ள பதவி என எண்ணிச் செயல்படுகிறார். பிரதமர் பதவியிலிருந்தவர்கள் அப்படிப் பயன்படுத்திய வார்த்தைகளுக்காக - பின்னர் அவர்களே எவ்வளவு வருந்த வேண்டியிருந்தது என்பதை பண்டித நேரு, அன்னை இந்திரா காந்தி போன்ற பண்பான

அரசியல்வாதிகளின் வாழ்க்கையேகூட நமக்கு படம் பிடித்துக் காட்டிக் கொண்டிருக்கிறது.

காந்தியடிகள் பிறந்த நாள்! ஆண்டுதோறும் கிண்டி காந்தி மண்டபத்தில் விழா நடப்பது வாடிக்கை! நான்கூடப் பலமுறை கலந்து கொண்டு உரையாற்றியிருக்கிறேன். மல்லிகைப் பூப்போன்ற மென்மையான இதயம் படைத்த காந்தியடிகளின் புகழ்பாடும் அந்த நாளில், அந்த உத்தமரது சொற்பொழிவில் உதிரும் வாசகங்கள் எல்லாம் வசந்த காலப் பூக்கள் போல இருக்குமே என்பதைக் கூட நினைத்துப் பார்க்காமல், ஜெயலலிதா வீசியிருக்கும் முரட்டுச் சொற்களை ஏடுகள் வெளியிட்டிருப்பது கண்டு வியந்து போனேன்.

> "வெறி நாய்களையும், ஓநாய்களையும் வீழ்த்தி விட்டுத்தான் - இந்த ஆசனத்தில் வந்து அமர்ந்திருக்கிறேன்."

என்பது வெற்றிச் சங்க நாதமா? ஆணவத்தின் எக்காள முழக்கமா? அந்தத் தடிப்பான தமிழ் வசனத்தை, ஆளுநருக்கு மொழி பெயர்த்துச் சொல்லப்பட்டதா? அவர் அந்த வாசகத்தை ரசித்தாரா? அல்லது அகத்தின் அழகை முகத்தில் காட்டாமல் சமாளித்துக் கொண்டாரா?

அது போகட்டும்! கச்சத்தீவு தீர்மானத்தில் ஜெயலலிதா பேசியபோது எடுத்தாண்டுள்ள வாசகம், என் மீது தொடுத்துள்ள குற்றச்சாட்டு - இவைகளைப் பற்றிய விளக்கங்களுக்கு வருவோம்.

> முன்னாள் முதல்வர் கருணாநிதி இரண்டு ஜீவாதாரப் பிரச்சினைகளில் தமிழகத்திற்குத் துரோகம் செய்துவிட்டார். ஒன்று காவிரிப் பிரச்சினை - மற்றொன்று கச்சத் தீவுப் பிரச்சினை
>
> இது ஜெயலலிதா அவையில் கூறிய குற்றச்சாட்டின் ஆரம்ப வாசகம்! ஆம் அவர் பாடிய பல்லவி!
>
> துரோகம் செய்து விட்டேனாம் நான்!
>
> ஜெயலலிதா சொல்லுகிறார்!

உடன்பிறப்பே, என்னை உணர்ந்த நீ, என் வாழ்க்கையை உன்னிப்பாக கவனித்து வருகிற நீ - எனக்குத் துரோகம் செய்தவர்களைத்தான் அறிந்து, அதற்காக என் மீது ஆதங்கப்பட்டு

- ஏன் இப்படிப்பட்டவர்களுக்கெல்லாம் துணை போகிறாய்? அவர்களுடன் உனக்கு என்ன நட்பு? ஏன் தோழமை? என்று கேட்டிருக்கிறாயே தவிர - துரோகம் என்பது என் ரத்தத்தில் துளியும் தலைகாட்டியதில்லை என்பதை நன்றாகவே புரிந்து கொண்டிருக்கிறாய்!

காவிரியிலும் கச்சத் தீவிலும்
கருணாநிதி செய்த பாபத்திற்கு
ஜெயலலிதாதான் பரிகாரம் செய்ய
வேண்டியுள்ளதாம்!

துரோகம், பாபம் - இவற்றைத் துணிந்து செய்பவர்கள் யார் என்பதையும்; துணிந்து செய்தவர்கள் யார் என்பதையும் இப்போது பட்டிமன்றம் வைத்து நடத்தி விளக்கிட விரும்பவில்லை! தேவையுமில்லை!

காவிரிப் பிரச்சினையில்
1976-க்குமுன்பு கழக ஆட்சியில்
உச்ச நீதிமன்றத்தில்
தொடர்ந்த வழக்கை வாபஸ்
வாங்கியது துரோகமாம் - பாபமாம்!

இந்தக் குற்றச்சாட்டுக்கு பேரவையிலேயே பலமுறை பதில் கூறியுள்ளேன். வழக்கு இருக்கும் போது பிரச்சினையை இந்திரா காந்தி தலையிட்டுப் பேச இடையூறாக இருக்கிறது. எனவே, வழக்கை வாபஸ் வாங்கிக் கொள்ளுமாறு பிரதமர் இந்திரா விடுத்த வேண்டுகோளை, அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் வைத்து முடிவெடுத்து அதற்குப் பின்னர்தான் வழக்கு வாபஸ் பெறப்பட்டது. அதுவும் மீண்டும், எந்த நேரத்திலும் அந்த வழக்கைத் திரும்பப் போடலாம் என்ற நிபந்தனையுடன்! அதற்குப் பிறகு பத்தாண்டு காலம் ஆட்சி நடத்திய திரு.எம்.ஜி.ஆர். அவர்கள் அந்த வழக்கைத் தொடர்ந்திருக்கலாமே? ஏன் தொடரவில்லை? அதுமட்டுமல்ல, மீண்டும் 1989-ல் தி.மு.க. ஆட்சிக்கு வரும் வரையில், வந்த பிறகும் கர்நாடக அரசுடன் தமிழக அரசு பேச்சு வார்த்தை நடத்தித்தான் பார்த்தது. 1968 முதல் 27 தடவைகள் பேச்சு வார்த்தை. இவ்வளவுக்கும் பிறகு தி.மு.க. ஆட்சியில்தான், மத்தியில் இருந்த தேசிய முன்னணி ஆட்சிக் காலத்தில் காவிரிப் பிரச்சினைக்கு நடுவர் மன்றம் அமைக்கப்பட்டது என்பதை மலையை மணல் வீடு கட்டி மறைத்திடமுயலுவது போல,

ஜெயலலிதா மறைக்க முயலுவது மட்டுமல்ல. நம்மீதும் மண்வாரித் தூற்றுவதுதான் காலத்தின் கோலம்!

நான் செய்ததாக முதல்வர் ஜெயலலிதா கூறும் அடுத்த துரோகம் - அவர் பரிகாரம் காண வேண்டிய அளவுக்கு நான் செய்த பாவம்! என்னவாம்?

கச்சத் தீவை இலங்கைக்குக் கொடுக்கக் கூடாது என்று இந்திரா காந்தியிடம் நான் உறுதியாகச் சொல்லவில்லையாம்.

உடன்பிறப்பே, (செப்டம்பர் 28 அக்டோபர் 11 - 1991) என்ற தேதியிட்டு வெளிவந்துள்ள ப்ரண்ட் லைன் (Front Line) என்ற ஆங்கில இதழில், கச்சத் தீவு பற்றி ஒரு கட்டுரை இருக்கிறது. அதில் சில பகுதிகளை மட்டும் உன் கவனத்திற்கும், மற்றவர்கள் கவனத்திற்கும் - என்னைத் துரோகியென்றும், பாவி என்றும் தூற்றியுள்ள தூய்மையாளரின் கவனத்திற்கும் கொண்டு வருகிறேன்.

> "The D.M.K. Which Ruled Tamil Nadu then, had opposed the agreement even before it was signed. Karunanidhi wrote to Indra Gandhi that SriLanka's claims over Kachativu should be repudiated. Soon after the agreement was signed, he convened an all - party meeting to express his opposition to it."

> "இந்திய அரசு, இலங்கை அரசுடன் கச்சத் தீவுக்கான ஒப்பந்தம் செய்து கொள்வதற்கு முன்பே, தமிழகத்தில் இருந்த தி.மு.க. ஆட்சி, அந்த ஒப்பந்தத்தை எதிர்த்தது. கருணாநிதி, இந்திரா காந்திக்கு எழுதிய கடிதத்தில், இலங்கை அரசு கச்சத் தீவு மீது உரிமை கொண்டாடுவதை இந்திய அரசு ஏற்கக் கூடாது, மறுத்திடவேண்டும் எனக் குறிப்பிட்டார். ஒப்பந்தம் நடைபெற்ற உடனேயே, அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி, தமிழகத்தின் எதிர்ப்பையும் தெரிவித்துக் கொண்டார்.

> "A.B. Vajpayee described the ceding of the island as another "bhoodan" and an assault on India's territorial integrity"

> "மற்றொரு பூதானம் போல" - இந்தியாவின் எல்லைப் பாதுகாப்புக்கு ஊனம் ஏற்படும் வகையில் இந்த தீவு ஒப்பந்தம் ஆகிவிடும்.

என்று அன்றைய ஜனசங்கத் தலைவர் வாஜ்பேயி கண்டனம் தெரிவித்தார்.

பார்வர்டு பிளாக் கட்சித் தலைவர் மூக்கையா தேவர், ராமநாதபுரம் ராஜா ஆகியோர் கச்சத் தீவு இந்தியாவுக்கே சொந்தமெனக் கடுமையாகக் குரல் எழுப்பினர்.

ப்ரண்ட் லைன் குறிப்பிட்டுள்ள இத்தனை எதிர்ப்புகளையும் புறக்கணித்து விட்டுத்தான் மத்திய இந்திரா அரசு, கச்சத் தீவை இலங்கை அரசுக்குத் தாரை வார்த்தது. இந்த ஒப்பந்தம் நடந்த 1974-ஆம் ஆண்டு முதலமைச்சர் என்ற முறையிலும், கழகத் தலைவன் என்ற முறையிலும் நான் எடுத்த கடுமையான முயற்சிகள் குறித்து எத்தனையோ ஆதாரங்களை என்னால் தர முடியும்.

இதோ நான் கச்சத்தீவு ஒப்பந்தம் குறித்து மதுரையில் பேசியது 7-7-74 கழகக்குரல் ஏட்டில் வந்துள்ளது.

கச்சத் தீவு இலங்கைக்குச் சொந்தமானது - என்று மட்டுமே இலங்கை அரசு வெளியிட்ட வரைவு (சர்வே)ப் படத்தில் கூறப் பட்டிருக்கிறது; அப்படத்திலேகூட - இலங்கையின் நிலப் படத்திலேகூட - கச்சத் தீவு காணப்படவில்லை!

கச்சத் தீவு தமிழ் நாட்டிற்குச் சொந்தமானது என்று பல்வேறு ஆதாரங்களை வரை படங்களை - ஆணைப் பத்திரங்களை அள்ளித் தந்து, பாருங்கள் என்று கூறினோம். ஆனால் நிலைமை என்ன ஆயிற்று? - கச்சத் தீவு இலங்கைக்கு வழங்கப்பட்டாகி விட்டது என்ற செய்தியைத்தான் கேள்விப்படுகிறோம் - ஏன் இந்த நிலை?

மாநில சுயாட்சி உரிமை நமக்கு இல்லாத காரணத்தால்தான், மத்திய அரசினர் - தாங்களாகப் பார்த்து இந்தப் பிரச்சினையில் ஒரு முடிவினை எடுத்திருக்கின்றனர்!

கச்சத் தீவு - தமிழ்நாட்டுடன் சேர்ந்த ஒரு பகுதி என்று நாம் வாதிட்டுக் கொண்டிருக்கும் போதே - நம்மைக் கேட்காமல் - நம்மிடம் சொல்லாமல் அந்தத் தீவை அவர்களிடம் கொடுத்தது என்ன நியாயம்?

தமிழ்நாட்டுடன் இணைந்திருக்கின்ற ஒரு பகுதியை எடுத்து இன்னொரு நாட்டிற்குத் தானம் ஆக வழங்குகின்ற நேரத்தில் - சமரச உடன்பாட்டின் கீழ் இப்படி ஒரு பிரச்சினையைத் தீர்க்கின்ற நேரத்தில் - செய்யலாமா, வேண்டாமா என்று தமிழ்நாட்டு முதலமைச்சரைக் கூப்பிட்டுக் கேட்க வேண்டாமா? அல்லது, இந்தியாவிலுள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களையும் கூட்டி - அவர்களுடைய கருத்தையாவது கேட்டிருக்கக் கூடாதா?

தமிழ்நாடு அரசை அந்த அளவில் அலட்சியப்படுத்துவதற்கு அவசியம் என்ன?

மாநில அரசு, இதனைத் தடுப்பதற்குத் தவறியதா - இல்லையே! ஒவ்வொரு கட்டத்திலும் இதனைத் தமிழக அரசு தடுத்திருக்கிறது!

டில்லிக்குச் சென்றிருந்தபோது, நானும் - அமைச்சர் மாதவனும் தலைமையமைச்சரிடம்,

கச்சத் தீவு தமிழக மக்களின் உணர்வோடு ஒன்றாகக் கலந்த பிரச்சினை. இதிலே அவசரப்பட்டு எந்த முடிவையும் எடுத்து விடாதீர்கள் என்று எச்சரித்தோம் - தமிழர்களின் உள்ளத்தைப் பிரதிபலித்தோம்!

இதற்குப் பிரதம தலைமை அமைச்சர் இந்திரா காந்தி, இதுபற்றி விரைவில் முடிவு செய்ய வேண்டும் என்று எனக்குக் கடிதம் எழுதினார்கள். உடனே நான், அது பற்றிய ஆதாரங்களையெல்லாம் தொகுத்து, கச்சத் தீவு தமிழ்நாட்டுக்குச் சொந்தம் - இந்தியாவிற்குச் சொந்தம் என்ற தகவல்களைத் தந்தேன்!

ஆனால் திடீரென்று யாரையும் அழைத்துப் பேசாமல் - தமிழ் நாட்டு அரசை ஒரு வார்த்தைக் கூடக் கேட்காமல் - ஒப்பந்தம் செய்யப்படும் என்றார்கள். ஒப்பந்தம் கையெழுத்தாகும் நேரத்திலாவது, நம்மைக் கூப்பிட்டுக் கேட்டிருக்கலாம். அதைக் கூடச் செய்யாமல் அலட்சியப்படுத்தி விட்டு, எவ்வளவோ தடுத்தும் கேளாமல் - இன்று கச்சத்தீவை, இந்திரா காந்தியின் அரசு இலங்கைக்கு வழங்கியிருக்கிறது!

அரசியல் அமைப்புச் சட்டம், அவர்களுக்கு அந்த அதிகாரத்தை வழங்கியிருக்கிறது!

இன்றைக்கு இருக்கின்ற அரசியல் அமைப்புச் சட்டத்தின் கீழ், எதை வேண்டுமானாலும் அவர்கள் தாராளமாகச் செய்யலாம்! இன்று கச்சத் தீவு - நாளை இராமேஸ்வரம் - நாளை மறுநாள் தனுஷ்கோடி - அதன் பிறகு மதுரை - என்றுகூடத் தானம் ஆக வழங்கலாம்!

இராமாயண காலத்திலே, தண்டகாரண்யப் பகுதிகளெல்லாம் இராவணனுக்குச் சொந்தமாக இருந்தன. ஆகவே, தென்னகப் பகுதி முழுவதும் இலங்கைக்கே சொந்தமானதாகும்.

என்று கேட்டால், ஆமாம்! அப்படித்தான் புராணம் கூறுகிறது என்று தமிழ்நாட்டையே அவர்களிடம் கொடுத்துவிடக்கூடிய அளவில் தான் இன்றைய அரசியல் சட்டம் இருக்கிறது.

இது நான் மதுரையில் 1974ல் பேசியது - பிரதமர் இந்திராவுக்கு - கச்சத் தீவு ஒப்பந்தம் கையெழுத்தாவதற்கு முன்பே நான் முதல்வர் என்ற நிலையில் எழுதிய கடிதம் பற்றிய விபரத்தையும் இத்துடன் இணைத்துள்ளேன்.

கச்சத் தீவு பிரச்சினை தொடர்பாகத் தலைமையமைச்சர் இந்திரா காந்தி எழுதிய கடிதத்திற்குப் பதில் தெரிவித்து, 6-1-74ம் நாளன்று, முதலமைச்சர் என்ற முறையில் நான் எழுதிய கடிதம் வருமாறு:-

கச்சத் தீவு எப்போதுமே இந்தியாவின் ஒரு பகுதியாகவே இருந்து வந்திருக்கிறது என்பதற்கான ஆதாரங்கள் திரட்டப்பட்டன.

இந்த ஆதாரங்களின் மூலம் கச்சத் தீவு மீது இலங்கைக்கு எந்த நாளும் - எந்த விதத்திலும் சுய ஆதிபத்திய உரிமை இருந்தது இல்லை என்பதை என்னால் மகிழ்ச்சியுடனும், தெளிவுடனும் தெரிவித்துக் கொள்ள முடியும்.

இந்த ஆதாரங்கள் வெளிவிவகார இலாகாவுக்கு அனுப்பப்பட்டு உள்ளன. நெதர்லாந்து மன்னருக்கும், - கண்டி (இலங்கை) மன்னருக்கும் இடையே 14-2-1766 அன்று ஏற்பட்ட ஒப்பந்தம் - சோழ மண்டலக் கரையை பிரிட்டிஷ் அரசுக்கு உரிமை மாற்றம் செய்த 1-6-1825ந் தேதிய டச்சு ஒப்பந்தம் 17-3-1762ந் தேதியிட்ட ஜான்சூடர் என்பவரின் குறிப்புகள் - டச்சு போர்ச்சுக்கீசிய காலங்களில் இலங்கையில் வெளியிடப்பட்ட வரைவுப் படங்கள் - ஆகியவை, கச்சத் தீவு இலங்கைக்குச் சொந்தமில்லை என்பதை மிகத் தெளிவாக உறுதிப்படுத்துகின்றன.

1954ல் வெளியிடப்பட்ட இலங்கை வரை படத்தில், கச்சத் தீவு இலங்கையின் ஒரு பகுதியாகக் காட்டப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

தமிழகக் கடற்கரையில் முத்து - சங்கு எடுக்கும் பகுதிகள், பன்னெடுங்காலமாக இராமநாதபுரம் இராஜாவுக்குச் சொந்தமானவை என்பதற்குச் சரித்திரச் சான்றுகள் உள்ளன.

கச்சத் தீவின் மேற்கு கடலோரங்களிலும், கச்சத் தீவு பகுதியிலும் சங்கு எடுப்பதற்கான உரிமைகளை இராமநாதபுரம் இராஜா பெற்றிருந்தார் என்பதற்குச் சான்று உள்ளன.

இதற்காக அவர், இலங்கை அரசுக்கு எந்தக் குத்தகையோ, கப்பமோ கட்டவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

கச்சத் தீவு இந்தியாவின் ஒரு பகுதி என்பதற்குத் தகுந்த ஆதாரங்கள் உள்ளன என்பதை, சென்னை சட்டக் கல்லூரி ஆராய்ச்சிப் பிரிவு ஒன்றும் கருத்துத் தெரிவித்து உள்ளது என்பது பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன்.

இந்த ஆதாரங்களைக் கொண்டு இந்தியா, எந்த சர்வதேச அரங்கிலும், கச்சத் தீவு இந்தியாவுக்கே சொந்தம் என்று எடுத்துச் சொல்ல முடியும்.

உடன்பிறப்பே,

இவ்வளவு கடுமையாக வாதிட்டும் - கடிதம் எழுதியும் - நேரிலேயே முறையிட்டும் - எல்லா வகையான முயற்சிகளை

மேற்கொண்ட பிறகும் தான் 1974ல் அந்த ஒப்பந்தத்தில் இந்திரா காந்தி அரசு கையெழுத்திட்டு விட்டது. நாம் எழுப்பிய எதிர்ப்பின் காரணமாக, கச்சத் தீவு பகுதியில் மீன்பிடிக்கும் உரிமை, யாத்ரீகர் செல்லும் உரிமை, கப்பல் போக்குவரத்து உரிமை - ஆகியவை 1974 ஒப்பந்தத்தில் இந்தியாவுக்கு இருக்குமாறு செய்யப்பட்டது.

ஆனால் 1976 ஜனவரியில் கழக ஆட்சி கலைக்கப்பட்டு, கவர்னர் ஆட்சி வந்தவுடன் அந்த ஒப்பந்தத்தில் கிடைத்த உரிமைகளையும் இந்தியா இழந்துவிடக் கூடிய அளவுக்கு மற்றொரு ஒப்பந்தம் இலங்கைக்கும், இந்தியாவுக்குமிடையே நடைபெற்றது. அப்போது கழகம் ஆட்சிப் பொறுப்பில் இல்லை.

இந்த வரலாறுகளையெல்லாம் அதிகாரிகளிடம் கூடக் கேட்டுத் தெரிந்து கொள்ளாமல், ஜெயலலிதா, பேரவையில் என்னை தமிழ்நாட்டுத் துரோகி என்றும், பாபம் செய்து விட்டவன் என்றும் தூற்றியுள்ளார்.

என் தலைமையிலும், எம்.ஜி.ஆர். தலைமையிலும் அமைச்சராக இருந்து, இப்போது ஜெயலலிதா தலைமையிலும் அமைச்சராக இருக்கிற நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் கூடவா இந்த உண்மைகளை முதல்வர் ஜெயலலிதாவுக்கு கூறியிருக்கக்கூடாது?

கூறியிருந்தால்தான் என்ன? திட்டமிட்டுப் பழி கூறவும் - வேண்டுமென்றே தவறான தகவல்களைப் பேரவைக்குத் தரவும் - பழி வாங்கும் நோக்கத்துடன் ஆட்சி நடத்தும் ஜெயலலிதா, நாவலர் என்ன! எனக்குப் பிறகும் கச்சத் தீவு பிரச்சினைக்காக மத்திய காங்கிரஸ் அரசுடன் வாதாடிய, எம்.ஜி.ஆரே திரும்பி வந்து, நடந்த உண்மைகளைச் சொன்னால்கூட காதில்போட்டுக் கொள்ளவா போகிறார்!

தமிழ்நாட்டு மக்கள், தமிழ்நாட்டு கட்சிகளின் தலைவர்கள் இந்திய தலைவர்கள், தமிழ்நாட்டு தி.மு.க. அரசினர், இத்தனைபேர் எடுத்துக் கூறியும் தடுத்தும் கேளாமல் கச்சத் தீவை 1974ல் இலங்கைக்குத் தூக்கிக் கொடுத்துவிட்டு - பிறகு 1976ல் அந்தத் தீவு மீது இந்தியா பெற்றிருந்த சில உரிமைகளையும் மற்றொரு ஒப்பந்தம் காரணமாக இழந்துவிட்ட இந்திய அரசையோ, இந்திரா காந்தியையோ அல்லது எதிரே அமர்ந்திருந்த இந்திரா காங்கிரஸ்

கட்சியினரையோ துரோகம் செய்தனர் - பாபம் புரிந்தனர் என்று கூறத் திராணியற்ற நிலையில் என்மீது பாய்ந்திருப்பதுதான் வேடிக்கையான விஷயம்.

அவருடைய ஆசை, என்னைத் துரோகி என்றும், பாபி என்றும் அர்ச்சிக்க வேண்டும் என்பது!

அதை நிறைவேற்றிக்கொள்ள அவர் விருப்பப்படி சட்டப்பேரவை வளைந்து கொடுத்திருக்கிறது.

இன்றில்லாவிடினும் துரோகம் - பாபம் என்பவைகளின் மொத்த உருவம் யார்? எவர்? என்பதை என்றாவது ஒருநாள் இந்த சமுதாயம் உணரத்தானே போகிறது!

அன்புடன்,

மு. க.

(05-10-1991)

1804. சிலைப் பிரச்சினையும், சிக்கலாவதா?

உடன்பிறப்பே!

வள்ளுவன் தன்னை உலகினுக்கேதந்து வான்புகழ் கொண்ட தமிழ் நாடு - என மகாகவி பாரதியும் - வள்ளுவர் செய் திருக்குறளை வழுவற உணர்ந்தோர் உள்ளுவரோ மனுவாதி ஒரு குலத்துக்கொரு நீதி? என மனோன்மணியம் சுந்தரனாரும், மகிழ்ச்சியும் எழுச்சியும் மலர்ந்து குலுங்கிடப் பாடினார்களே - அந்தப் பேரறிவாளப் பெருமகன் திருவள்ளுவர், நமது காலத்தில் - நாமெல்லாம் விழித்திருக்கும் போதே - நமது உணர்வுகள் முற்றாகப் பட்டுப்போய்விடாமலிருக்கும் போதே - இழிவுபடுத்தப்பட்டிருக்கிறார் பக்கத்து மாநிலமான கர்நாடகத்தில்!

அறம், பொருள், இன்பமென வாழ்வுக்கு இலக்கணம் வகுத்தளித்து உலகப் பொதுமறை வழங்கிய உயர்ந்தோன் வள்ளுவன் என்பதால் - மதம், மொழி இவற்றையெல்லாம் கடந்து அனைத்து நாட்டு அறிஞர் பெருமக்கள், அவன் யாத்த குறளைப் பல்வேறு கோணங்களில் ஆய்வு செய்து வியப்புறுகின்றனர். பல மொழிகளில் திருக்குறள் வெளியிடப்பட்டு, உலகின் தலை சிறந்த நூலகங்களில் கலசங்களாக ஒளிவிட்டுக் கொண்டிருக்கின்றன.

முப்பாலுரைத்த அந்த முதுபெரும் அறிஞன், ஆம்! அறிஞர்க்கெல்லாம் அறிஞன் - இடுக்கண் வருங்கால் நகுக! எனப் பெருமிதமுடன் நம்பிக்கை ஒளியினை ஏற்றிவைத்த மாமனிதன் - உலைவின்றித் தாழாது முயற்சியில் ஈடுபடுவோர், ஊழையும் உப்பக்கம் காண்பர் என்று உறுதிபடக் கூறிய வைர நெஞ்சன் - நூல் வடிவில், ஓவிய வடிவில், சிலை வடிவில் உலகின் பல திசைகளிலும் இருக்கின்றான்.

அவனுக்கெனக் கோட்டமொன்றே கண்டோம். கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது தமிழகத்தில்!

ஆனால், அந்த உலக ஞானிக்கு கர்நாடக மாநிலத்தில் மட்டும் இடம் கிடையாதாம்! மறுக்கின்றனர் சிலர்! அவர்தம் எதிர்ப்புக்கு

அந்த மாநில அரசு தலைவணங்குகிறது! பதைக்கிறது மனம் நமக்கு!

இந்தியா ஒரே நாடு - பல்வேறு தேசிய இனங்கள், பல்வேறு மொழிக்குரியோர் - ஒருவரையொருவர் ஆதிக்கம் செலுத்தாமல் ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் காத்திட வேண்டுமெனக் காலமெல்லாம் சொல்லி வருகிறோம். வானொலியில், தொலைக்காட்சியில் தேசியப் புனிதம் பற்றி ஒலிபரப்பு! ஒளி விளக்கம்! காதுக்கினிய கீதங்களுடன் - கண்கொள்ளாக் காட்சிகளுடன் - கம்பீரமாக!

ஆனால் கர்நாடகத்தில்? திருவள்ளுவர் சிலைக்கு எதிர்ப்பு!

தமிழகத்தில் அறிஞர் பெருமக்கள், கவிஞர்கள், தங்கள் மனக் கொதிப்பைக் காட்டிக் கொள்ள அமைதியான முறையில் ஆர்ப்பாட்டக் கிளர்ச்சிகளை நடத்தி வருகின்றனர். அதுமட்டும் போதுமா? அவர்களுக்கு மட்டுமே அக்கறையென்று விட்டு விட்டு வேடிக்கை பார்க்க முடியுமா?

இது எல்லோருக்குமுரிய பிரச்சினை! எனவேதான் இளைஞர் அணியினர் எழுந்துள்ளனர் - அக்டோபர் 12-ஆம் நாள் தமிழகம் மற்றும் புதுவை மாநிலங்களில் நகரங்களில் பேரூர், சிற்றூர்களில் இளைஞர் அணி ஊர்வலங்கள் - விளக்கக் கூட்டங்கள் நடைபெற இருக்கின்றன!

வள்ளுவர் சிலைக்குக் கர்நாடக மாநிலத்தில் ஏற்படுத்தப் பட்டுள்ள தடை நீக்கப்பட வேண்டும் - அதற்கு கர்நாடக மாநில அரசு வழிகாண வேண்டும் - என்று வலியுறுத்திக் கோரும் தீர்மானங்களை அந்த நிகழ்ச்சிகளில் நிறைவேற்றி - அதனை கர்நாடக மாநில அரசுக்கு உடனடியாக அனுப்பி வைக்க வேண்டும்.

நூற்றுக்கணக்கான தீர்மானங்கள், தமிழ் நிலத்தின் எல்லாத் திசைகளிலுமிருந்தும் கர்நாடக மாநில அரசின் அலுவலகம் நோக்கிச் சென்றிட வேண்டும்.

மாநிலங்கள், தமக்குரிய உரிமைகளைப் பெற்று - மத்திய கூட்டாட்சி எனும் மாலையில் மணிகளாகத் திகழ வேண்டுமெனக் கொள்கை முழக்கிடும் நமது கழகம், இந்த சிலைப் பிரச்சினையால் மாநிலங்களுக்கிடையே மோதுதல் என்ற சிக்கலை உருவாக்க என்றுமே விரும்பாது!

அதே நேரம் இந்தச் சிக்கலைத் தீர்த்துத் தமிழ் மக்களின் நெஞ்சில் செந்தேனைப் பாய்ச்ச வேண்டுமென்ற கடமை உணர்வு, கர்நாடக மாநில அரசுக்கும் - தேவையில்லாமல் இந்த சிலைப் பிரச்சினையைப் பெரும் பிரச்சினையாக மாற்றிவிட்ட கர்நாடக மாநிலத்தில் உள்ள சில குழுவினர்களுக்கும் - உண்டு என்பதை எடுத்துக் காட்டவே, இளைஞர் அணியினர் அக்டோபர் 12-ல் அணி திரளுகின்றனர்!

அவர்களின் முயற்சி வென்றிட வாழ்த்துகிறேன்!

அவர்களின் ஆர்வம், வாகை சூடிட விழைகிறேன்!

பரந்த மனப்பான்மைக்குச் சொந்தக்காரன் தமிழன்! அந்தக் குணமே அவனுக்குப் பெருமையும் அளிக்கிறது. சில நேரங்களில் சிறுமையும் ஏற்படுத்துகிறது!

இருந்தாலும், கனியிருப்பக் காய் கவர்தல் கூடாது எனும் வள்ளுவர் வாக்குக்கு ஏற்ப - பெருமைக்குரிய செயலில் மட்டுமே அவன் நாட்டம் செலுத்துவான்! செலுத்திட வேண்டும்!

இதனையும் நெஞ்சில் நிறுத்தி - இளைஞர் அணியினர், திருவள்ளுவர் சிலைக்குக் கர்நாடகத்தில் எழுந்துள்ள எதிர்ப்பினை அறவழியில் வென்று காட்டிட வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

அன்புடன்,

மு. க.

(07-10-1991)

1805. காலத்தை முன்னோக்கிச் செலுத்தும் முயற்சி!

உடன்பிறப்பே!

என்னைப் பற்றியும், நமது கழகத்தைப் பற்றியும் பார்ப்பன ஏடுகள் சிலவற்றிலும் - பார்ப்பனரல்லாதார் ஏடுகள் சிலவற்றிலும் கண்டனங்கள், விமர்சனங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

இவை முன்போல இல்லாமல், வேறு வகையில் வடிவெடுத்துள்ளன.

முன்பெல்லாம், பிரிவினை உணர்வுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளிப்பவன் - தேசிய ஒற்றுமைக்கு விரோதமாகச் செயல்படும் தேசவிரோதி - தீயசக்தி - தமிழ் ஈழ விடுதலைப் போராளிகளுக்கு தமிழகத்தில் வன்முறைக் களம் அமைத்துக் கொடுத்தவன் - இப்படியும் அர்ச்சனை நடைபெறும்.

இஃதன்னியில் கேரக்டர் அசாசினேஷன் என ஆங்கிலத்திலும் - நன்மதிப்பைக் குலைக்கும் பிரச்சாரம் எனத் தமிழிலும் - கூறுவார்களே! அந்த ஆயுதத்தை என்மீதும், என் குடும்பத்தினர் மீதும் பிரயோகித்து அதன் மூலமாக, கழகத்தின் வலுவைச் சிதைக்கும் முயற்சியில் ஈடுபட்ட வரலாறும் உண்டு!

அந்த இழிசெயல், இன்னமும்கூட நடைபெற்றுக் கொண்டிருக்கிறது! எதுவும் என்னுடைய உறுதியையோ - கழகத்தின் திண்மையையோ ஊசிமுனையளவுகூட எமர்ஜன்சி காலம் உட்பட, எந்தக் காலத்திலும் சிதைத்ததில்லை!

சாகத்துணிந்தவனுக்கு சமுத்திரம் முழங்கால் மட்டும்தான் எனக் கூறிக்கொண்டு, பொது வாழ்க்கைக்கு வந்த ஒருவன் - சங்கடங்களைப் போக்கிக் கொள்ளவோ, சலுகைகளைப் பெற்றிடவோ, எவரிடமும் எந்த நிலையிலும் சரணடைய மாட்டான் என்பதும், அவன்தான் சரித்திரமாகிறான் என்பதும் நான் படித்து மறந்துவிட்ட செய்திகள் அல்ல! இதயத்தில் பதித்து வைத்திருக்கும் உரமான உண்மைகள்!

அந்த ஒரு பெருமிதத்துடன்தான் எரிச்சல் கணைகளைத் தாங்கும் கேடயமாகவும், கவசமாகவும் என்னுள்ளத்தை ஆக்கிக்கொண்டு மாற்றாரின் பழையபாணி வசைமாரிகளையும் தாங்கிக் கொண்டிருக்கிறேன்.

நடந்தவைகளுக்குத் திரைபோட்டு மறைத்து விட்டு, நடக்காதவைகளுக்குப் பொய்த்தேர் ஜோடித்து ஊர்வலம் விடுகிறவர்கள், அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் என்ற பழமொழியை நம்பிச் செயல்படுகிறார்கள்.

"பொய் நெல்லைக் குத்தி பொங்க நினைத்தவன்
கை நெல்லும் விட்டானடி."

என்று தத்துவக் கவிஞன் மாயவநாதன் பூம்புகார் படத்திற்கு எழுதிய பாடலை கவுந்தியடிகளாகக் கொடுமுடிக் கோகிலம் சுந்தராம்பாள் பாடியது தான் என் சிந்தையைக் கிளறுகிறது! மாற்றார் சிலரை மனக்கண்முன் நிறுத்தி சிரிப்பையும் வரவழைக்கிறது!

மூன்று மாத மவுனத்தைக் கலைத்திருக்கும் கருணாநிதி,
தமிழக அரசியலை - சாதி சச்சரவாக மாற்றும் வழியில்
செல்ல முற்படுகிறார்.

எனப் பீடிகை போடும் விளம்பரத்துடன் இந்தியா டுடே என்ற ஏடு, எனது பேட்டியை அரைகுறையாக வெளியிட்டிருக்கிறது. எனது பேட்டியைவிட அந்தப் பேட்டியை ஒட்டி, அந்த ஏடு எழுதியுள்ள விமர்சனம்தான் நீளமானது!

விமர்சனத்துடன் என் குடும்பத்தைப் பற்றி ஒரு விஷமத்தனமான பெட்டிச் செய்தியும்கூட! அசல் ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனிய பாணி!

நானோ அல்லது தி.மு.கழகமோ தமிழக அரசியலைச் சாதி சச்சரவாக மாற்றும் வழியில் செல்லுகிறோம் என்ற அர்த்தமற்ற குற்றச்சாட்டு! அப்பட்டமான அவதூறு!

ஆயிரம் ஆயிரம் ஆண்டுக்காலமாக அறிவுச் சூன்யங்களாகவும் - சமுதாயத்தில் அந்தஸ்தோ, பாதுகாப்போ அற்ற நிலையில் ஆதிக்கபுரியினர் காலடிபட்டு நசுங்கும் எறும்புக் கூட்டமாகவும் ஒடிந்துபோய்க் கொண்டிருக்கிற பெரும்பான்மையான பார்ப்பனரல்லாத மக்கள் - அவர்களிலும் குறிப்பாகப் பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர், பழங்குடி மக்கள் மாநில அளவில் 1922 தொடங்கி திராவிட இயக்கத்தின் வீறுகொண்ட

தொண்டின் காரணமாக, சமூக நீதியைப் படிப்படியாகப் பெற்று மெல்லத் தலையெடுக்கும் நிலையில், மத்திய அரசு அளவிலும் இந்த சமூக நீதியைப் பெறவேண்டுமென்று வாதாடுகிறோம் என்ற காரணத்திற்காக தி.மு.கழகத்திற்கு பிராமண சமூகத்தினர் வாக்களிக்கக் கூடாது என பிராமண பிரமுகர்கள் கையெழுத்திட்டு 1989 சட்டமன்றத் தேர்தலின்போது விளம்பரம் செய்தார்களே! அது சாதிச் சச்சரவை வளர்ப்பதா? அல்லது தி.மு.க.வின் வழி, சாதிச் சச்சரவை வளர்ப்பதா? பதில் சொல்லாமல் திரும்பத் திரும்பத் தமது பழைய பொய்ப் பல்லவியையே பாடிக் கொண்டிருக்கக் கூடாது! திட்டவட்டமாகப் பதில் அளிக்க வேண்டும்.

இப்போது நடந்து முடிந்த தேர்தலிலும்கூட தமிழ்நாடு பிராமணர் சங்கம், ஜெயலலிதா முதலமைச்சராக வரவேண்டுமென் பதற்காக அறிக்கை விடவில்லையா? கூட்டம் நடத்தவில்லையா? பிரச்சாரம் செய்யவில்லையா? பணியாற்றவில்லையா?

தேர்தல் முடிந்து ஜெயலலிதா ஆட்சி அமைந்தவுடன், இது பிராமணாள் ஆட்சி என்று பிராமணர் சங்கம் பகிரங்கப் பிரகடனம் செய்து, அந்தச் சமூகத்தினர் இந்த ஆட்சியை நன்கு பயன்படுத்திக்கொள்ள வழிமுறைகளை அறிக்கை வாயிலாக வெளிப்படுத்தவில்லையா?

1982-ல் ஜெயலலிதா அரசியலில் இறங்கிய நாள் தொட்டே அவரைத் தி.மு.கழகம் பாப்பாத்தி என்று வர்ணித்து வருகிறது என்று அந்த ஏடு மற்றொரு பொய்யைச் சொல்லி, தனது வாதத்திற்கு வலுதேடப் பார்க்கிறது!

1982-ல் ஜெயலலிதாவை அ.தி.மு.க.வில் சேர்த்தபோது - அந்த நிகழ்ச்சியை தி.மு.க. எதிர்க்கவுமில்லை! ஆதரிக்கவுமில்லை! ஒருவேளை, தி.மு.க. சொற்பொழிவாளர்கள் ஒருவர், இருவர் ஜெயலலிதாவை அப்போது விமர்சித்து இருந்தாலும் - அந்த விமர்சனம் எதுவும், ஜெயலலிதா பற்றி அ.தி.மு.க.வுக்குள் நடத்தப்பட்ட விமர்சனங்களை மிஞ்சக் கூடியது அல்ல!

வசந்தசேனை என்றும், வட்டமிடும் கழுகு என்றும் வர்ணித்தது யார்? அ.தி.மு.க. தளபதிகள் தான்! பூலான்தேவி என்றும், கேடு கெட்ட பெண் என்றும் இன்னும் இங்கே எழுத இயலாத வார்த்தைகளால் ஏசிப் பேசியது யார்? அ.தி.மு.க.வின் கர்த்தாக்கள் தான்! எல்.கே.ஜி. யு.கே.ஜி. சண்டையும் வாக்குவாதமும் வீதிவரைக்கும் நடைபெற்றதே. அது அ.தி.மு.க.வுக்குள்ளே

தானே! ஜெயலலிதா நம்பத்தகுந்தவர் அல்ல என்று எம்.ஜி.ஆர். அவர்களே அறிக்கைவிட்டதும், எம்.ஜி.ஆருக்கு என் வளர்ச்சி கண்டு பொறாமை என ஜெயலலிதா தனது கைப்படக் கடிதம் எழுதி, அது பத்திரிகைகளில் வெளிவந்ததும் - அ.தி.மு.க. கூடாரத்துக்குள் நடைபெற்ற அற்புத நிகழ்வுகளே தவிர, அதற்கும் தி.மு.க.வுக்கும் துளியும் சம்பந்தமில்லை என்பது நாட்டுக்குத் தெரியும் - என்னைப் பேட்டி கண்ட ஏட்டுக்கும் தெரியும்!

நீ பாலில் விஷம் கலந்து கொடுத்து எம்.ஜி.ஆரைக் கொன்றாய் என்று ஒருவரும் - நீதான் மோரில் விஷம் கலந்து கொடுத்து எம்.ஜி.ஆரைக் கொன்றாய் என்று மற்றொருவரும் சக்களத்தி சண்டை போட்டுக்கொண்டு, அது சந்தி சிரித்ததே - அதற்குக்கூட தி.மு.கழகமா காரணம்?

எடுத்தேன் கவிழ்த்தேன் என்று பேசுவது - என்ன பேசுகிறோம் என்று தெரியாமல் பேசுவது - எவரையும் துச்சமாகக் கருதிப்பேசுவது - உயர்ந்த குலம் என்ற உணர்வு உதிரத்துடன் கலந்திருப்பதால் யாரானாலும் உதாசீனம் செய்து பேசுவது - ஜெயலலிதாவுக்கு இயல்பு என்பதால் - நான் பாப்பாத்திதான்! என்னை யாராலும் அசைக்க முடியாது! எனும் ஆணவ உரையினை அவையிலேயே முழங்கினார்!

இதை வசதிப்படி மறந்துவிட்டு அல்லது மறைத்துவிட்டு - தி.மு.க. தலைவர் ஜெயலலிதாவை பாப்பாத்தி என்றார் என்று சாதிக்க முனைகிறவர்களை எந்தப் பெயர்கொண்டு அழைப்பது?

திராவிட இயக்கத்தின் பரிணாம வளர்ச்சியின் தோற்றம் நானேதான் என அவர் பேரவையில் எக்காளக் குரலில் ஒலித்ததையும் - பாப்பாத்திதான் நான் - என்னை அசைக்க முடியாது என அறைகூவல் விடுத்ததையும் - திராவிட இயக்கத்தோடு சேர்ந்து வளர்ந்தவர்கள், பெரியாரின் தொண்டனாக - அண்ணாவின் தம்பியாக இருந்தவர்கள் - இருப்பவர்கள் கண்டுகொள்ளாமலோ கண்டிக்காமலோ இருக்க முடியுமா? இருந்தால் அவர்கள் திராவிட இயக்கத்திற்குத் துரோகம் செய்தவர்கள் ஆக மாட்டார்களா?

திராவிட இயக்கப் பரிணாம வளர்ச்சியின் தோற்றம் எனக்கூறி திராவிட இயக்கத்தையும் ஏமாற்ற முனைந்து - பாப்பாத்தி எனப் பகன்று திராவிட இயக்கம் கட்டிக் காத்த உணர்வுகளையும் படிப்படியாக அழித்து - மீண்டும் திராவிட மக்களைப்

பார்ப்பனியத்தின் பாதந்தாங்கிகளாக ஆக்கிடும் சூழ்ச்சியைச் சுயமரியாதையுள்ளோர் எவ்வாறு சகித்துக்கொண்டு லாலி பாட முடியும்?

எல்லாப் பக்கமிருந்தும் எதிர்ப்பு கிளம்பியும் கூட, ஆலயநிதி வசூல் நிறுத்தப்படவில்லையே! கட்டாய வசூல் கிடையாது என்பது வாயளவில் தானே தவிர, செயலளவில் நடக்கும் கட்டாயத்தை ஆங்காங்கே உள்ளோர் அறிந்திடத் தானே செய்கின்றனர்!

வேத ஆகம சாஸ்திரக் கல்லூரி அமைக்க ஒரு கோடி ஒதுக்குவது ஏன்?

1924-ஆம் ஆண்டு சட்டசபையில் சத்தியமூர்த்தி அவர்கள் சமஸ்கிருதத்தில் பாடியும் - ஆங்கிலத்தில் உரக்கச் சப்தமிட்டும் எதிர்த்தும் கூட, அதனையும் தாண்டி நீதிக்கட்சி முதல்வர் பனகல் அரசர் அவர்களால் நிறைவேற்றப்பட்டதும், நெடுங்காலமாக நடைமுறையில் இருப்பதுமான இந்து சமய அறநிலையத்துறை சட்டத்தை மெல்ல சாகடிக்க வேண்டுமென்ற பார்ப்பனிய உணர்வுடையோரின் கோரிக்கையை ஏற்று ஆலய வாரியம் அமைக்கப் பட்டிருக்கிறதே அவசர அவசரமாக - இது சாதிச் சச்சரவையும், மதபேத உணர்வுகளையும் கிளப்புகின்ற காரியம் அல்லவா?

> மதச்சார்பற்ற நிலைக்கு எதிரான பேச்சுக்கள், செயல்கள் - மத்தியில் காங்கிரஸ் ஆட்சியில் கொஞ்சம் கொஞ்சமாகப் பெருகிவிட்ட காரணத்தினால்தான், பாபர் மசூதி இராமர் கோயில் விவகாரம் இந்த அளவுக்கு முற்றி அதனைத் தூண்டிவிட்டுத் தூபம் போடும் இந்து முன்னணி கூட்டத்தார் செல்வாக்கு பெறுகிற நிலைமை வடக்கே சில மாநிலங்களில் வேர்விட்டு வளர்ந்திருக்கிறது. ஜெயலலிதாவின் ஆட்சியிலும், அதற்கான விதை ஊன்றப்படுவதாகவே நிச்சயப்படுத்த வேண்டியுள்ளது. இது பிராமணர் ஆட்சி - இதைப் பாதுகாக்க வேண்டுமென்று பகிரங்கமாக அறிக்கை விடுகிறவர்கள், திராவிட ஆட்சிபோல காட்டிக்கொண்டு திராவிட இயக்க உணர்வுகளை - தேனில் நஞ்சு கலந்து அழித்துவிட வேண்டுமென்று இந்த ஆட்சியாளர்களுக்கு அறிவுரை கூறி - அந்தக் கொடுஞ்செயல் கொலுவேறும் போது - அதனை அம்பலப்படுத்துவது சாதிச் சச்சரவை வளர்ப்பது

என்ற குற்றச்சாட்டுக்கு எப்படி உள்ளாக முடியும்?

திராவிட இயக்க வரலாறு நூல் வெளியீட்டு விழாவில் நான் பேசும்போது - இந்த நூல் வேறொரு நூலை வெளியேற்றுவதற்குப் பயன்படட்டும் என்று குறிப்பிட்டதாக மற்றொரு தாக்குதல்! ஆம்! இந்தியா டுடேயில்!

நான் விழாவில் குறிப்பிட்ட அந்த நூல் சாதி வேற்றுமையை அடையாளம் காட்டும் சின்னம் அல்லவா? ஆண்டவன் படைப்பில் அனைவரும் சமம் என்று கூறிவிட்டு - நான் உயர்ந்த சாதி எனக் காட்டிக் கொள்ள, உடலின் குறுக்கே ஒரு நூல் தேவைதானா? வெளிநாட்டில் சென்று படித்துப் பட்டம் பெற்று வந்தாலும் அணிந்திருக்கும் கோட்டுக்குள்ளே சாதி உயர்வைக் காட்டும் அந்த நூல் இன்னமும் நெளிந்து கொண்டிருப்பது நியாயந்தானா?

பார்ப்பானை அய்யரென்ற காலமும் போச்சே என்ற வரியை, ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே என்ற பாரதியார் பாடலில் இன்னமும் காண்கிறோமே -

சூத்திரர்க்கொரு நீதி - தண்டச் சோறுண்ணும் பார்ப்புக்கு வேறொரு நீதி? என்று பாரதியார் கனல் பறக்கக் கேட்டதை மறந்து விடுவதா?

அதே கேள்வியை திராவிட இயக்கத்தார் எழுப்பினால் மட்டும் அது வகுப்புவாதம்! சாதிச் சச்சரவு! என்றால் விசித்திரமாக இல்லையா?

தி.மு.க. சாதிப் பிரச்சினையைத் தொடுவது அதன்பால் அனுதாபம் கொண்ட பிராமண சமூகத்தினரிடம்கூட வருத்தத்தை ஏற்படுத்தியுள்ளது. இது ஒரு தவறான நடவடிக்கை. காலத்தைப் பின் நோக்கிச் செல்லச் செய்யும் முயற்சி என்று இல்லஸ்ட்ரேட் வீக்லியின் முன்னாள் ஆசிரியர் எனது அன்புக்குரிய நண்பர் ஏ.எஸ். இராமன் கூறியதாக இந்த ஏடு குறிப்பிடுகிறது.

> பார்ப்பனர்களாயினும் - பார்ப்பனரல்லாதாராயினும் ஒருவருக் கொருவர் தனிப்பட்ட முறையில் பகை கொள்ளத் தேவையில்லை! பார்ப்பனரல்லாதார்க்குக் கிடைத்திருக்க வேண்டிய பங்கையும் சேர்த்து, பார்ப்பனர்கள் அனுபவித்து வருவதும், அதுவே தொடர்ந்து இருந்திட வேண்டுமென்பதும் - நீதியாகாது - முறையாகாது - எனவே அவரவர்களுக்குரிய பங்கினை

அவரவர் பெற்றிடுவதற்கான வழிவகை காண்போம். அதுவே சமூக நீதி!

அதேபோல் நீண்ட நெடிய வரலாற்றுக்கும் - கலாச்சாரத்துக்கும் - மொழிக்கும் உரிய ஓர் இனமான திராவிட இனம், இவையனைத்தையும் மறந்து, மயங்கிக் கிடப்பது கண்டு மனம் பதறி, விழித்தெழச் செய்து வீறுகொள்ளுமாறு பணியாற்றுவோம்.

இதற்காகப் பார்ப்பனப் பிரமுகர்களும், அவர்கள் நடத்தும் சில ஏடுகளும் நம்மைக் காலம் காலமாக வெறுப்பு உணர்வுடன் பார்ப்பதும் - நமது செய்திகளைத் திரிப்பதும், மறைப்பதும், திசை திருப்புவதும்தான் நம்மால் கண்டிக்கப்படுகின்றன.

கழக ஆட்சி நடைபெற்ற போது, கடுகளவுப் பிரச்சினையெனினும் அதனை மலையளவுப் பிரச்சினையாக்கிப் பிரச்சாரம் செய்த ஏடுகள் சில, இன்று மலையளவுப் பிரச்சினைகளைக் கூட மறைத்திட முயலுவது ஏன்?

நடப்பது நம்மவா ஆட்சி என்று பிராமணர் சங்கம் அறிக்கை விட்டிருப்பதற்கும், இதற்கும் தொடர்பு இருப்பதை ஒளிக்க இயலுமா?

நான் என் விஷப் பற்களால் உன்னைக் கடிக்காமலிருக்க மாட்டேன் - நீ என்னை வெறுத்து விரட்டக் கூடாது என்றால், அதனை அறிவுரையாக ஏற்றுக் கொள்ள முடியுமா? கடிபட்டுச் சாகும் அடிமைத்தனமும், கடித்துக் கொண்டேயிருக்கும் ஆணவக் குணமும் அனுமதிக்கப்படக் கூடியவை அல்ல - அகற்றப்பட வேண்டியவை என்பதை விளக்குவது, காலத்தைப் பின்னோக்கிச் செலுத்தும் முயற்சி அல்ல! இந்தக் காலத்திற்கும் தேவைப்படுகிற - தவிர்க்க முடியாத ஒரு முயற்சியேயாகும்!

இதனைத் தவிர்க்க வேண்டிய கடமையும் பொறுப்பும் இதுவரையில் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருப்போர்க்கு இருக்கிறதே தவிர - அடிமைகளாக இருக்க நேரிட்ட திராவிட இனத்துக்கு அல்ல!

ஆனால் அந்தக் கடமையையும், பொறுப்பையும் ஆதிக்கவாதிகள் தட்டிக் கழிப்பது மட்டுமல்ல. மேலும் மேலும் தலையில் குட்டிக்கொண்டேயிருப்பதால்தான், இந்த இனம், கடவுள், மதம், சாஸ்திரங்களின் பெயரால் சமுதாயத்தில்,

அரசியலில் பூட்டப்பட்டுள்ள தளையிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள தியாகராயர், நாயர், நடேசனார் காலத்தில் விழிப்புற்று - பெரியார், அண்ணா வீறுகொண்டு கிளர்ந்து எழுந்து - இன்று ஏற்பட்டுள்ள தொய்வு நிலையைச் சரி செய்து கொண்டு தனது உரிமைப் போராட்டத்தை தொடர்ந்து நடத்திடும் பிரகடனத்தைச் செய்துள்ளது.

எனவே, இது காலத்தைப் பின்னோக்கிச் செலுத்தும் முயற்சியல்ல!

எல்லோரையும் சமத்துவ, சமதர்மக் குறிக்கோளை நோக்கியும், சமூக நீதியைப் பெறும் குறிக்கோளை நோக்கியும், பகுத்தறிவு சமுதாயம் காண்பதில் முழு வெற்றி பெறும் குறிக்கோளை நோக்கியும் - அழைத்துச் செல்கிற, காலத்தை முன்னோக்கிச் செலுத்தும் முயற்சிதான் நமது முயற்சி!

அன்புடன்,

மு. க.

(08-10-1991)

1806. இந்திய அரசு வேடிக்கை பார்ப்பதா?

உடன்பிறப்பே!

பாண்டி என்பது அந்த வாலிபனின் பெயர் - படகில் சென்று கடலில் மீன் பிடிக்கும் தொழில். கடலில் நீந்தத் தெரியாத காளை! ஆனால், காதல் நீச்சலில் சாந்தா என்னும் சற்குணவதியைக் கரம் பிடித்தான்! அன்பின் சின்னங்களாக இரு குழந்தைகள்! உற்றார் உறவினர் ஏற்றுக்கொள்ளவில்லை அவர்களின் காதலை! காதல் நெருப்பால் கடலுன்பால் தாவிடுவேன் என்றான் - கடைசியில் கடலிலேயே தாவி அழியுமாறு செய்து விட்டனர் இதயமில்லாதவர்கள்!

காலமெல்லாம் காதலனுடன் களித்திருக்க எண்ணிக் கனவு கண்டவள் கற்கண்டுக் கட்டிகளாம் மழலைகளைக் கட்டியணைத்தவாறு கதறியழுகிறாள். அவனைக் கடல் அலைக்குப் பலி கொடுத்துவிட்டு!

35 வயதுடைய அவனுடன் 30 வயதுடைய கருப்பசாமியும், 33 வயதுடைய கோவிந்தராசனும் கடலில் சென்றனர். மீன்பிடி படகுகளில்!

மூவருமே கடலில் மூழ்கினர்! இல்லை ... இல்லை ... மூழ்கடிக்கப்பட்டு பிணமாயினர் - மூவருக்கும் வாழ்க்கைத் துணைவியர் உண்டு - வாழைக் குருத்துப் போல் பிள்ளைகள் உண்டு!

அந்த மூவரின் இல்லங்களிலும் கண்ணீர் - சோகம் - கரை காண முடியாத துக்கம்!

படகில் போன அப்பா எங்கேயம்மா? என்று பச்சிளம் குழந்தைகள், அழுது கொண்டிருக்கும் அன்னையரின் வீங்கிப்போன கன்னங்களைப் பிஞ்சுக் கரங்களால் தடவிக் கொண்டே கேட்டுக் கொண்டிருக்கின்றன. என்ன பதில் சொல்ல முடியும் அந்த இளம்தாய்களால்?

ஏன் இப்படியொரு நிலை? என்ன நேர்ந்தது அந்த மூவருக்கும்?

கடந்த செப்டம்பர் திங்கள் 19-ஆம் நாள், ஐந்து படகுகளில் இராமேஸ்வரத்தைச் சேர்ந்த இருபத்தி நான்கு மீனவர்கள் கடலில் மீன்பிடிக்கக் கிளம்பினார்கள். அவர்தம் குடும்பத்தினர் அவர்களை வழக்கம்போல் வழி அனுப்பி வைத்தனர். அந்த இருபத்தி நான்கு மீனவர்களில்தான் பாண்டி, கருப்பசாமி, கோவிந்தராசு என்ற மீனவர்களும் இருந்தனர்.

மீன்களை துடிக்கத்துடிக்க அவர்கள் பிடித்து படகுகளில் சேர்த்தபோது, தங்கள் மூவரின் உயிர், துடிக்கத் துடிக்க அந்தக் கடலில் போகப் போகிறது என்று தெரியாது!

கடலுக்கடியில் அழுந்திச் சுழன்று கொண்டிருந்த புயல் அழுத்தம், திடீரென வெளிப்பட்டுச் சூறாவளியாக மாறி, அந்தப் படகுகளைக் கவிழ்த்துவிட்டதா? அந்தக் கொடுமையில் மூன்று மீனவ வாலிபர்களும் நீரில் மூழ்கிப் பிணமாக மிதந்தார்களா?

இல்லை! இயற்கைகூட அப்படி எந்த மரண விளையாட்டையும் நடத்தி, அவர்களைத் தன் மடியில் தூக்கிப் போட்டுக் கொள்ளவில்லை!

பிறகு என்னதான் நடந்தது? இருபத்தி நான்கு மீனவர்களில் மூவர் போக, எஞ்சிய இருபத்தியோரு மீனவர்கள் - சுமார் பதினெட்டு நாட்களுக்குப் பிறகு இராமேஸ்வரம் வந்து, தங்கள் பெண்டு பிள்ளைகளைக்கண்டு ஆனந்தக் கண்ணீர் பெருக்கியிருக்கிறார்கள். அந்த மகிழ்ச்சியும் அவர்களுக்கும், மீனவ குடும்பங்களுக்கும் முழுமையானதல்ல! தம்முடன் அழைத்துச் சென்ற மூன்று கட்டிளங்காளைகளை இழந்து விட்டன்றோ திரும்பியுள்ளனர்!

அந்தப் பதினெட்டு நாள் கதையை பாதிக்கப்பட்ட மீனவர்களில் ஒருவரான இராமு என்பவர் சொல்கிறார் - அவர் சொன்னது அப்படியே சில ஏடுகளில் வெளி வந்துள்ளது.

அவர் கூறியதை, கூட்டவோ குறைக்கவோ செய்யாமல் அப்படியே இந்தக் கடிதத்தில் குறிப்பிடுகிறேன்.

நாங்கள் கச்சத் தீவு பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்தோம். அப்போது இலங்கைக் கடற்படைக்

கப்பல் அந்தப் பக்கம் வந்தது. எங்களை நோக்கி சக்தி வாய்ந்த விளக்கை அடித்தது. நாங்கள் உடனே எங்கள் படகுகளை நிறுத்தினோம். படகுகளில் என்ஜின் ஓடிக் கொண்டிருந்தது. படகுகளில் இருந்த எங்கள் 24 பேரையும் அடித்து, தங்கள் கப்பலில் ஏற்றிக்கொண்டிருந்தார்கள். நாங்கள் இருந்த இடத்தின் அருகே சற்று தூரத்தில் இந்தியக் கப்பல் படை கப்பல் ஒன்று நின்று கொண்டிருந்தது. அதுவும் சக்திவாய்ந்த ஒளி வீசும் விளக்கை அடித்துக் கொண்டு இருந்தது. ஆனால், எங்களை மீட்க அந்தக் கப்பல் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அருகே இந்தியக் கப்பலும் நின்று கொண்டு இருந்ததால், இலங்கை கடற்படையினர் தங்கள் கப்பலை இலங்கை நோக்கி ஓட்டிச்சென்றனர்.

இலங்கைக் கப்பலில் பீரங்கி இருந்தது. அதை சாக்குகளால் மூடி இருந்தார்கள். திடீர் என்று அந்தச் சாக்குகளை அப்புறப்படுத்தி, எங்களை பீரங்கி முன் வரிசையாக நிற்க வைத்தார்கள். இதனால் நாங்கள் பெரும் பீதி அடைந்தோம். எங்களைச் சுட்டுக் கொன்று விடுவார்கள் என்று அஞ்சினோம். எங்களைக் கொன்று விடாதீர்கள்... கொன்று விடாதீர்கள் என்று கூச்சல் போட்டோம்.

அந்தக் கப்பலில் தமிழ் தெரிந்த ஒரு அதிகாரி இருந்தார். அவருக்கு எங்கள் மீது பரிதாபம் ஏற்பட்டது. எங்களைப் பார்த்து பயப்படாதீர்கள் என்று கூறிவிட்டு, பெரிய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு பேசினார்.

எங்களைக் கடலில் தூக்கி வீச பெரிய அதிகாரி உத்தரவு பிறப்பித்து இருப்பார் போலும். கப்பற்படையினர் எங்களைப் பார்த்து, கடலுக்குள் குதியுங்கள் என்று கூறினர். எங்களில் சிலருக்கு நீச்சல் தெரியாது. குறிப்பாக பாண்டி, கோவிந்தராசு, கருப்பசாமி ஆகியோருக்கு நீச்சல் அறவே தெரியாது.

எனவே அவர்கள், எங்களுக்கு நீச்சல் தெரியாது என்று கதறத் தொடங்கினார்கள். ஆனால், ஈவு இரக்கமற்ற சிங்களக் கடற்படையினர், அவர்கள் மூவரையுமே தனித் தனியாகத் தூக்கி கடலில் வீசினார்கள். ஒருவர் காலைப் பிடித்துக் கொள்ள, மற்றொருவர் தலையைப் பிடித்துக்

கொள்ள தாலாட்டுவது போல் அந்தப் பக்கமும் இந்தப் பக்கமும் ஆட்டி கடலில் வீசி கொக்கரித்தார்கள்.

இப்படியாக எங்கள் அனைவரையுமே கடலில் தூக்கி எறிந்து விட்டுப்போய் விட்டார்கள்.

என்னைக் கடலில் தூக்கி வீசியபோது, என் அருகே தில்லை முத்து என்பவரையும் வீசி இருந்தார்கள். நாங்கள் இருவரும் மெல்ல மெல்ல நீந்தி வந்தோம். இலங்கை அருகே உள்ள நெடுந்துறை என்ற தீவில் ஒதுங்கினோம். அங்கு ஒரு மீனவர் இருந்தார். மேலும் எங்களுடன் கடலில் வீசப்பட்ட வேறு சில மீனவர்களும் அங்கு ஒதுங்கினார்கள். நாங்கள் அனைவருமாகச் சேர்ந்து மற்ற மீனவர்களையும் தேடினோம். ஒவ்வொருவராக மீட்டு கரை சேர்ந்தோம்.

இறுதியில் எண்ணிப் பார்த்தபோது 21 பேர்களே இருந்தோம். 3 பேரைக் காணவில்லை. காணாமல் போனவர்கள் யார் என்று பார்க்கும்போது, பாண்டி, கோவிந்தராஜ், கருப்பசாமி என்று தெரிய வந்தது.

நாங்கள் நெடுந்துறையில் கரை ஒதுங்கியதை அறிந்ததும், விடுதலைப் புலிகளும் அங்கு வந்தார்கள். அவர்களும் காணாமல் போன மீனவர்களைத் தேடும் முயற்சியில் இறங்கினார்கள். ஆனால், எந்தப் பயனும் இல்லை. பிறகு எங்களையும் குங்கிடி தீவுக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கிருந்து பின்னர் யாழ்ப்பாணத்திற்கு அழைத்துச் சென்றார்கள்.

இலங்கைக் கடற்படை எங்களை வெறும் ஜட்டியுடன் கடலில் தூக்கி வீசியது. எங்களுக்கு விடுதலைப் புலிகள் எல்லா உதவிகளும் செய்தார்கள். எங்களை மிகுந்த அன்போடு நடத்தினார்கள். ஒவ்வொருவருக்கும் 3 ஜோடி செருப்பு, 3 ஜோடி சட்டை, 3 ஜோடி கைலி வாங்கிக் கொடுத்தார்கள்.

யாழ்ப்பாணத்தில் இப்போது மிகவும் நெருக்கடியான நேரம். ஒரு சோப்பு வாங்க வேண்டும் என்றால்கூட 80 ரூபாய். அரிசியே கிடைக்கவில்லை. இவ்வளவு கஷ்டத்திலும் எங்களை மிகவும் கருணை உள்ளத்தோடு

நடத்தினார்கள். யாழ்ப்பாணத்தில் ஒரு ஓட்டலில் தங்க வைத்தார்கள். நல்ல முறையில் சாப்பாடு வழங்கினார்கள். பிறகு செஞ்சிலுவைச் சங்கத்திற்குத் தகவல் கொடுத்தார்கள். அவர்கள் மூலம் கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்தை அடைந்தோம். அங்கிருந்து எங்களை விமானத்தில் திருச்சிக்கு அனுப்பினார்கள்.

இலங்கையில் உள்ளவர்கள் எங்களை கண்ணியமாக, மரியாதையுடன் பரிவோடு நடத்தினார்கள். ஆனால், திருச்சியிலோ நம்முடைய அதிகாரிகள் எங்களை ஆடு, மாடுகளைப் போல் நடத்தினார்கள். நீ யார்? உன் அப்பன் பெயர் என்ன? என்றெல்லாம் மரியாதைக் குறைவாக விசாரித்தார்கள்.

இவ்வாறு இராமு என்ற மீனவர் கூறினார்.

உடன்பிறப்பே, கவனித்தாயா? இலங்கைக் கப்பற் படையினர் நமது மீனவர்களைத் தூக்கி ஊஞ்சலாட்டிக் கடலில் வீசியபோது அருகே இந்தியக் கப்பற்படை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்ததாம்! இலங்கைத் தமிழர்களின் வேதனையை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது போலவே, இந்திய மீனவர்களின் வேதனையையும் இந்தியக் கப்பற்படை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்திருக்கிறது!

விரைந்து வந்து தலையிட்டிருக்கக்கூடாதா? நமது மீனவர்கள் செய்தது ஒருவேளை தவறே என்றாலுங்கூட - அவர்களை வழிமறித்து, திரும்பிச் செல்லுங்கள் என்று இலங்கைக் கப்பற்படையினர் ஆணையிட்டிருக்கலாம்! அதற்கும் ஒருபடி மேலே சென்று அவர்களைக் கைது செய்துகூட, பின்னர் இந்தியாவுக்குத் தகவல் அனுப்பியிருக்கலாம்! இந்த நடவடிக்கைகளையெல்லாம் புறக்கணித்துவிட்டு - நமது மீனவர்களை ஆட்டிப் படைத்துள்ளனர்! அலை கடலில் தூக்கி வீசி ஆர்ப்பாட்டச் சிரிப்பு சிரித்துள்ளனர்! மூவரைப் பிணமாக்கியுள்ளனர்!

இத்தனைக்கும் - அருகே பிரகாசமாக வெளிச்சம் போட்டுக் கொண்டு நின்றிருந்த இந்தியக் கப்பல் வேறெதுவும் செய்ய வேண்டாம். அதே இடத்திலிருந்து முன்னோக்கிச் சிறிது

நகர்ந்திருந்தால் கூட - இலங்கைக் கடற்படையின் வன்னெஞ்சர்கள் அந்தக் கொடுமையைத் தொடராமல் அஞ்சி நடுங்கியிருப்பர்!

நமது இந்தியக் கப்பற்படையினர் ஏன் அப்படி நடந்து கொண்டனர் என்பதற்கு விளக்கமில்லை! நமக்கு வியப்பாக இருக்கிறது!

என் செய்வது! 1974-ஆம் ஆண்டு கச்சத் தீவை இலங்கைக்குத் தாரை வார்த்தலாகாது என தி.மு.க. அரசின் சார்பிலும், தி.மு.க. சார்பிலும், தமிழக அரசியல் கட்சித் தலைவர்கள் சார்பிலும் எடுத்துரைக்கப்பட்ட கருத்துகளை அன்றைய மத்திய காங்கிரஸ் அரசு புறக்கணித்து விட்டது. மீனவர்கள் அந்தப் பகுதியில் மீன் பிடிக்கும் உரிமை - கச்சத் தீவுக்கு யாத்ரீகர்கள் செல்லும் உரிமை - இந்திய கப்பல் போக்குவரத்து உரிமை - இவைகள் 1974-ஆம் ஆண்டு ஒப்பந்தத்தில் இடம்பெற்றன; தமிழக மக்களின் உணர்வை ஓரளவு மதித்த காரணத்தால்!

1976-ல் இங்கே கவர்னர் ஆட்சி நடந்தபோது, மீண்டும் ஏற்பட்ட ஒரு ஒப்பந்தத்தால் அந்த உரிமைகளும் தள்ளாடுகின்றன! ஏன், தள்ளப்பட்டேவிட்டன! அதனால்தான், நமது மீனவர்கள், சிங்கள இராணுவத்தினரால் சீறும் கடலில் தள்ளப்படுகின்றனர்!

தொடர்ந்து நமது மீனவர்கள் அனுபவித்து வரும் இந்தத் தொல்லைகள், இப்போது உச்ச கட்டத்திற்கே போய்க் கொண்டிருக்கிறது!

இனியும், இந்திய அரசு, வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்கப் போகிறதா? இலங்கைக் கடற்படைக் கொடுமையை இந்தியக் கடற்படையினர் வேடிக்கை பார்த்ததைப்போல?

அன்புடன்,

மு. க.

(10-10-1991)



1924 - 2018

நூல் கிடைக்குமிடம் :

கௌரா புத்தக மையம்
9, செ. ஜான் சர்ச் வணிக வளாகம்,
ராக்கின்ஸ் சாலை, திருச்சி - 1.
gowraputhagamaiyam@gmail.com

கௌரா ஏஜென்ஸீஸ்
1, சாமி தெரு, திருவல்லிக்கேணி,
சென்னை - 5. gowra09@gmail.com.
www.facebook.com/gowrabookcentre

கௌரா
பதிப்பகக் குழுமம்

அட்டை : ஜே.ஜே டிசைன்ஸ்

GO 2300
ரூ.300

டிசம்பர் 2022